வெளியீடு: 22-8-2022 Issued: 22-8-2022

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

(SIXTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 7, 2021—தொகுதி 18—எண் 1

Tuesday, the 7th September 2021—Volume 18—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ.3.00] **[Price Rs.3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7–9–2021

உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் vii-xii

Governor and Council of Ministers xiii-xvii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள் xix-xxii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxiii-xxxii

1. விதி 110-ன்கீழ் அறிக்கை—

அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 1-1-2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்துதல், சத்துணவு சமையலர்கள் மற்றும் உதவியாளர்கள் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்துதல், ஓய்வுபெறும் நாளில் அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்படுவதைத் தவிர்த்தல் உள்ளிட்ட அரசுப் பணியாளர்கள் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்த மனித வள மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 1-5

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 2-5

2. மனித வள மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— 5-20

திரு. தி. வேல்முருகன் 5-6

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் 6-7

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 7-8

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் 8-9

திரு. ட்டி. இராமச்சந்திரன் 9-10

பக்கங்கள்

2. மனித வள மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— தொடர்ச்சி

*திரு. வி.பி. நாகைமாலி 10-11

*திரு. ம. சிந்தனை செல்வன் 11-12

*திரு. எம்.ஆர். காந்தி 12

*திரு. ஜி.கே. மணி 12-14

திரு. கு. செல்வபெருந்தகை 14-16

*மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி 16-17

மாண்புமிகு திரு. துரைமுருகன் 17-19

3. சிறப்புக் கவன ஈர்ப்பு— 20-24

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மேம்பால அணுகுசாலை மற்றும் வழிச்சாலைப் பணிகள் 4 20-22

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 20-21

மாண்புமிகு திரு. எ.வ. வேலு 21-22

(ஆ) திருக்கோயில்கள், மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை 22-24

திரு. A.P. நந்தகுமார் 22

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு 23-24

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— 24-26

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 2021 24-25

*மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி 24-25

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 25-26

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி 25-26

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2021-2022, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28 - செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 30 - எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 17 - கைத்தறி மற்றும் துணிநூல் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(ஈ) கோரிக்கை எண் 18 - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(உ) கோரிக்கை எண் 10 - வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஊ) கோரிக்கை எண் 11 - முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

தொடர்ச்சி 26-50, 55-59

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் 27-49

மாண்புமிகு திரு. துரைமுருகன் 49-50

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2021-2022, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(எ) கோரிக்கை எண் 3 - நீதி நிருவாகம்

(ஏ) கோரிக்கை எண் 24 - சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஐ) கோரிக்கை எண் 33 - சட்டத் துறை — 62-284

(ஒ) கோரிக்கை எண் 14 - எரிசக்தித் துறை

(ஓ) கோரிக்கை எண் 37 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

*மாண்புமிகு திரு எஸ். ரகுபதி — 62, 70-71, 78, 99-100, 122, 261-280

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி — 84, 94, 100, 114-117, 180, 194-257

*திரு. பி. தங்கமணி — 85, 101-113, 115-122, 178-180

*மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் — 122

திரு. சபா. இராசேந்திரன் — 123-134

*திரு. கா. அண்ணாதுரை — 134-142

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2021-2022, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*திரு. JMH. அசன் மௌலானா — 65, 74, 81, 93, 142-152

*திரு. க. தேவராஜி — 153-159

*திரு. இ. பரந்தாமன் — 160-178

திரு. எடப்பாடி K. பழனிசாமி — 170-171, 190-191, 193-194

திரு. ந. தளவாய் சுந்தரம் — 181-193, 258, 260

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் — 187-190

மாண்புமிகு திரு. துரைமுருகன் — 257-259, 261, 266

*மாண்புமிகு முனைவர் க. பொன்முடி — 259

திரு. எஸ்.பி. வேலுமணி — 260-261

6. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் 6-9-2021 அன்று பயன்படுத்திய வார்த்தையை நீக்கக் கோருதல்— — 50-55

*திரு. ஓ.எஸ். மணியன் — 50-51

திரு. எடப்பாடி K. பழனிசாமி — 51-53

மாண்புமிகு திரு. துரைமுருகன் — 52-54

*மாண்புமிகு திரு. ஆர். காந்தி — 54-55

7. விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் நடத்த அனுமதி வழங்குதல்— — 59-61

திரு. நயினார் நாகேந்திரன் — 59-60

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் — 60-61

பக்கங்கள்

8. மண்பாண்டத் தொழிலாளர்களுக்குக் கூடுதல் நிவாரணத்தொகை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பு— 61-62

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 61-62

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— 284-288

(அ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2021 284-286

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி 284-286

(ஆ) தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021 286-288

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் 287-288

10. அறிவிப்பு—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிவழிப் பயிற்சி 7-9-2021 மற்றும் 9-9-2021 ஆகிய நாட்களில் நடைபெறுதல் மற்றும் சிம் கார்டு வழங்குதல் 288-289

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 289-292

12. இணைப்புகள் 293-489

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் – மாண்புமிகு திரு. பன்வாரிலால் புரோகித்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், சிறப்புத் திட்ட செயலாக்கம், மாற்றுத் திறனாளிகள் நலன்

2. நீர்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

3. நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்

4. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

5. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

6.	பொதுப் பணித் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. எ.வ. வேலு: பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்
7.	வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு
8.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை
9.	தொழில் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்
10.	சட்டத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்
11.	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

12. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், குடிசை மாற்று வாரியம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்

15. சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

16.	மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு
17.	போக்குவரத்துத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்
18.	வனத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: வனம்
19.	உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி: உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு
20.	மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு
21.	கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. ஆர். காந்தி: கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்
22.	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	.. மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

23.	**வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
24.	**பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்*
25.	**இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்*
26.	**நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள்*
27.	**பால்வளத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
28.	**சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*
29.	**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*

30.	**சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை*
31.	**தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
32.	**தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பத் துறை*
33.	**சுற்றுலாத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
34.	**ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்**	.. **மாண்புமிகு திருமதி நா. கயல்விழி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – HON'BLE THIRU BANWARILAL PUROHIT

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Thiru M.K. Stalin:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives, Special Programme Implementation, Welfare of the Differently abled persons

2. **Minister for Water Resources** .. **The Hon. Thiru Duraimurugan:**

   Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines

3. **Minister for Municipal Administration** .. **The Hon. Thiru K.N. Nehru:**

   Municipal Administration, Urban and Water Supply

4. **Minister for Co-operation** .. **The Hon. Thiru I. Periyasamy:**

   Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

5. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudy:**

   Higher Education including Technical Education, Electronics, Science and Technology

6.	**Minister for Public Works**	..	**The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports
7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	..	**The Hon. Thiru K.K.S.S.R Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Law**	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
11.	**Minister for Housing and Urban Development**	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning projects and Housing Development, Accommodation Control, Urban Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

12.	**Minister for Rural Development**	..	**The Hon. Thiru K.R. Periakaruppan:** Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness
13.	**Minister for Rural Industries**	..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Slum Clearance Board
14.	**Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
15.	**Minister for Social Welfare & Women Empowerment**	..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
16.	**Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
17.	**Minister for Transport**	..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act

18.	**Minister for Forests**	..	**The Hon. Thiru K. Ramachandran:** Forests
19.	**Minister for Food and Civil Supplies**	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
20.	**Minister for Electricity, Prohibition & Excise**	..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
21.	**Minister for Handlooms and Textiles**	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
22.	**Minister for Health and Family Welfare**	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
23.	**Minister for Commercial Taxes and Registration**	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
24.	**Minister for Backward Classes Welfare**	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare and Denotified Communities Welfare
25.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments

26.	**Minister for Finance and Human Resources Management**	..	**The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits
27.	**Minister for Milk & Dairy Development**	..	**The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
28.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	..	**The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
29.	**Minister for School Education**	..	**The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
30.	**Minister for Environment - Climate Change and Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control, Youth Welfare and Sports Development
31.	**Minister for Labour Welfare and Skill Development**	..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
32.	**Minister for Information Technology**	..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology
33.	**Minister for Tourism**	..	**The Hon. Dr. M. Mathiventhan:** Tourism and Tourism Development Corporation
34.	**Minister for Adi Dravidar Welfare**	..	**The Hon. Tmt. N. Kayalvizhi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள். செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

 # 16-8-2021 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ. .. சிறப்புச் செயலாளர்

திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். .. கூடுதல் செயலாளர்

திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்., .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர்

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல். .. இணைச் செயலாளர்

திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. இணைச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. இணைச் செயலாளர்

திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். .. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., .. துணைச் செயலாளர்
பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., .. துணைச் செயலாளர்
பி.ஜி.எல்.

திரு. மு. கருணாகரன், எம்.காம்., .. துணைச் செயலாளர்
பி.எல்.

திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., .. துணைச் செயலாளர்
பி.எட்., பி.ஜி.எல்.

திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., .. துணைச் செயலாளர்
பி.எல்.

திரு. க.லோ. சிவகுமரன், .. துணைச் செயலாளர்
பி.எஸ்சி., பி.ஜி.எல்.

திருமதி பெர்லின் ரூப்குமார், .. துணைச் செயலாளர்
எம்.ஏ.,பி.எல்.

திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., .. துணைச் செயலாளர்
பி.எல்.

திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., .. துணைச் செயலாளர்
பி.எல்.

திருமதி சி. சாந்தா, எம்.காம்., .. துணைச் செயலாளர்
பி.ஜி.எல். (பதிப்பாளர்)

திரு. த. ரகுபதி, எம்.காம்., .. மாண்புமிகு முதலமைச்சர்
பி.ஜி.எல். அவர்களின் துணைச்
செயலாளர்

திருமதி சீ. உஷா, பி.காம்., .. குழு அலுவலர் (பொதுக்
பி.ஜி.எல். கணக்குக் குழு)

திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., .. குழு அலுவலர் (துணைச்
பி.எல். செயலாளர் நிலை)

திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி. .. குழு அலுவலர் (பொது
நிறுவனங்கள் குழு)

திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., .. தலைமை நிருபர்
பி.எட்., எல்.எல்.பி.

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., .. சார்புச் செயலாளர்
பி.ஜி.எல்.

திரு. அ.சு. கேளுடை நம்பி, .. சார்புச் செயலாளர்
எம்.எஸ்சி., பி.ஜி.எல்.

திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., .. சார்புச் செயலாளர்
பி.எட்., பி.ஜி.எல்.

திரு. இரா. இராஜேந்திரன், .. சார்புச் செயலாளர்
பி.ஏ.,பி.ஜி.எல்.

திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., .. சார்புச் செயலாளர்
பி.ஜி.எல்.

திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திருமதி வி. சுமதி, பி.காம்., .. சார்புச் செயலாளர்
பி.ஜி.எல்.

திருமதி பு. சங்கீதா, பி.காம்., .. தலைமை நிருபர்
பி.ஜி.எல்.

திருமதி சு.சீ. அலமேலு, .. தலைமை நிருபர்
எம்.காம்., பி.ஜி.எல்.

திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., .. தலைமை நிருபர்
பி.ஜி.எல்.

திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ. .. தலைமை நிருபர்

திரு. அ. பாஸ்கரன், பி.காம்., .. சார்புச் செயலாளர்
பி.ஜி.எல்.

திரு. ஜெ. பாலசீனிவாசன், .. சார்புச் செயலாளர்
எம்.காம்.,எம்.ஃபில்., பி.ஜி.எல்.

திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி. .. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்
(அகர வரிசைப்படி)
பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	.. போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	.. வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	.. சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	.. கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	.. பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	.. பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	.. மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	.. பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	.. ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	.. குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	.. வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	.. வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	.. கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	.. உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	.. சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	.. கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	.. புவனகிரி
18.	அருள், திரு. இரா.	.. சேலம் (மேற்கு)
19.	அர்ஜுனன், திரு. பொ.	.. திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	.. திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	.. ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	.. கும்பகோணம்

23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, திரு.	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி
28.	இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30.	இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31.	இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33.	இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34.	இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35.	இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36.	இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
37.	ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
38.	ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
39.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
40.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
41.	உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
42.	ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
43.	எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
44.	எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
45.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்

46. எழிலன், டாக்டர் நா. .. ஆயிரம் விளக்கு
47. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. .. இராயபுரம்
48. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
49. கடம்பூர் ராஜூ, திரு. .. கோவில்பட்டி
50. கணபதி, திரு. க. .. மதுரவாயல்
51. கணேசன், திரு. சி.வெ. .. திட்டக்குடி (தனி)
52. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்
53. கண்ணன், திரு. க.சொ.க. .. ஜெயங்கொண்டம்
54. கதிரவன், திரு. சீ. .. மண்ணச்சநல்லூர்
55. கந்தசாமி, திரு. V.P. .. சூலூர்
56. கயல்விழி, திருமதி நா. .. தாராபுரம் (தனி)
57. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
58. கருணாநிதி, திரு. ஜெ. .. தியாகராய நகர்
59. கருப்பணன், திரு. K.C. .. பவானி
60. கருமாணிக்கம், திரு. இராம. .. திருவாடனை
61. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு. .. இராமநாதபுரம்
62. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை
63. காந்தி, திரு. எம்.ஆர். .. நாகர்கோவில்
64. காந்திராஜன், திரு. எஸ். .. வேடசந்தூர்
65. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
66. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்
67. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்
68. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (தனி)
69. கிருஷ்ணசாமி, திரு. ஆ. .. பூந்தமல்லி (தனி)
70. கிருஷ்ணமுரளி, திரு. செ. .. கடையநல்லூர்
71. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

72. கோவிந்தசாமி, திரு. ஆ. .. பாப்பிரெட்டிப்பட்டி
73. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ. .. கும்மிடிப்பூண்டி
74. சக்கரபாணி, திரு. அர. .. ஓட்டன்சத்திரம்
75. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (தனி)
76. சங்கர், திரு. கே.பி. .. திருவொற்றியூர்
77. சண்முகையா, திரு. எம்.சி. .. ஓட்டப்பிடாரம் (தனி)
78. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (தனி)
79. சதாசிவம், திரு. S. .. மேட்டூர்
80. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
81. சந்திரசேகர், திரு. துரை. .. பொன்னேரி (தனி)
82. சந்திரன், திரு. S. .. திருத்தணி
83. சம்பத்குமார், திரு. வே. .. அரூர் (தனி)
84. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)
85. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
86. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
87. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
88. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
89. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார்-கோவில் (தனி)
90. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
91. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
92. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
93. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
94. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
95. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்

96. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
97. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
98. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
99. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
100. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
102. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
103. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
104. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
105. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
106. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
107. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
108. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
109. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
110. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
111. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
112. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
113. சேகர், திரு. S. .. பரமத்தி-வேலூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
115. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. .. ஆரணி
116. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
117. தங்கப்பாண்டியன், திரு. எஸ். .. ராஜபாளையம்
118. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
119. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
120. தமிழரசி, திருமதி ஆ. .. மானாமதுரை (தனி)
121. தமிழ்செல்வம், திரு. T.M. .. ஊத்தங்கரை (தனி)

122. தளபதி, திரு. கோ. .. மதுரை (வடக்கு)
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. அவினாசி (தனி)
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
127. தியாகராஜன், திரு. ந. .. முசிறி
128. திருமகன் ஈவெரா, திரு. இ. .. ஈரோடு (கிழக்கு)
129. துரைமுருகன், திரு. .. காட்பாடி
130. தேவராஜி, திரு. க. .. ஜோலார்பேட்டை
131. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (தனி)
132. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
133. நந்தகுமார், திரு. A.P. .. அணைக்கட்டு
134. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
135. நல்லதம்பி, திரு. அ. .. கெங்கவல்லி (தனி)
136. நல்லதம்பி, திரு. A. .. திருப்பத்தூர்
137. நாகைமாலி, திரு. வி.பி. .. கீழ்வேளூர் (தனி)
138. நாசர், திரு. சா.மு. .. ஆவடி
139. நிவேதா எம். முருகன், திரு. .. பூம்புகார்
140. நீலமேகம், திரு. டி.கே.ஜி. .. தஞ்சாவூர்
141. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
142. பண்ணாரி, திரு. அ. .. பவானிசாகர் (தனி)
143. பரந்தாமன், திரு. இ. .. எழும்பூர் (தனி)
144. பழனி நாடார், திரு. S. .. தென்காசி
145. பழனியாண்டி, திரு. மொ. .. ஸ்ரீரங்கம்
146. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை (மத்தி)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
149. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (தனி)
150. பாண்டியன், திரு. K.A. .. சிதம்பரம்
151. பாபு, திரு. மு. .. செய்யூர் (தனி)
152. பாலசுப்ரமணியன், திரு. ஈ. .. சேலம் (தெற்கு)
153. பாலாஜி, திரு. S.S. .. திருப்போரூர்
154. பால் மனோஜ் பாண்டியன், திரு. .. ஆலங்குளம்
155. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
156. பிரகாஷ், திரு. ஓய். .. ஓசூர்
157. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி. .. விருகம்பாக்கம்
158. பிரபாகரன், திரு. ம. .. பெரம்பலூர் (தனி)
159. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
160. புகழேந்தி, திரு. நா. .. விக்கிரவாண்டி
161. பூண்டி கே. கலைவாணன், திரு. .. திருவாரூர்
162. பூமிநாதன், திரு. மு. .. மதுரை (தெற்கு)
163. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
164. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
165. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
166. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
167. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
168. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வ.)
169. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி
170. மகேந்திரன், திரு. சி. .. மடத்துக்குளம்
171. மணி, திரு. ரா. .. ஓமலூர்

172. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்

173. மணிக்கண்ணன், திரு. A.J. .. உளுந்தூர்பேட்டை

174. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்

175. மதியழகன், திரு. தே. .. பர்கூர்

176. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)

177. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)

178. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்

179. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி

180. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை

181. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)

182. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்

183. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)

184. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்

185. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)

186. முத்துராஜா, திரு. வை. .. புதுக்கோட்டை

187. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)

188. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

189. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி

190. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)

191. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி

192. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்

193. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்

194. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்

195. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)

196. ராதாகிருஷ்ணன், திரு. K. .. உடுமலைப்பேட்டை

197. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்

198. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
199. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
200. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
201. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
202. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
203. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
204. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
205. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
206. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி
207. ராஜூ, திரு. கே. .. மதுரை (மேற்கு)
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்
209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி

224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்

226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்திணான் குப்பம் (தனி)

227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை

228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)

229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)

230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்

231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்

232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 22, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 செப்டம்பர் 7, செவ்வாய்க்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவென்று வேந்தன் தொழில்"

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. விதி 110–ன்கீழ் அறிக்கை

அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 1–1–2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்துதல், சத்துணவு சமையலர்கள் மற்றும் உதவியாளர்கள் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்துதல், ஓய்வுபெறும் நாளில் அரசுப் பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்படுவதைத் தவிர்த்தல் உள்ளிட்ட அரசுப் பணியாளர்கள் சங்கங்களின் கோரிக்கைகள் குறித்த மனித வள மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

[*2021 செப்டம்பர் 7*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களின் உற்ற நண்பனாக, அவர்களுக்கு உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கும் தோழனாக என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற அரசுகள் அறிவித்து செயல்படுத்திய, அரசு ஊழியர்களுக்கான நலத் திட்டங்கள் எண்ணற்றவை; இந்த நாட்டிற்கே வழிகாட்டுபவை. அந்த வகையில், அண்மையில், பல்வேறு அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்களைச் சார்ந்த சங்கப் பிரதிநிதிகள் அரசிடம் வைத்த கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, பின்வரும் முக்கிய அறிவிப்புகளை 110 விதியின்கீழ் வெளியிட விரும்புகிறேன்:-

(1) அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்வு குறித்து, நிதிநிலை அறிக்கையில், 1–4–2022 முதல் அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து வரப்பெற்ற அரசு ஊழியர்கள் சங்கங்களின் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, இந்த அரசுக்குக் கடும் நெருக்கடியான நிதிச் சூழல் இருப்பினும், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அறிவிக்கப்பட்ட நாளுக்கு மூன்று மாத காலத்திற்கு முன்னதாகவே, அதாவது, 1–1–2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 16 இலட்சம் அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இவ்வாறு அறிவிக்கப்பட்ட காலத்திற்கு முன்னரே, அகவிலைப்படி உயர்வினை அமல்படுத்துவதால், மூன்று மாத காலத்திற்குக் கூடுதலாக ஆயிரத்து 620 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 6 ஆயிரத்து 480 கோடி ரூபாய் செலவாகும்.

(2) சத்துணவு மையங்களில் பணிபுரியும் சத்துணவு சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் ஆகியோரின் ஓய்வுபெறும் வயது 58-லிருந்து 60 ஆக உயர்த்தப்படும். இதன்மூலம் தற்போது பணியிலிருக்கும் 29 ஆயிரத்து 137 சமையலர்களும், 24 ஆயிரத்து 576 சமையல் உதவியாளர்களும் பயன்பெறுவார்கள்.

2021 செப்டம்பர் 7] [திரு. மு.க. ஸ்டாலின்]

(3) அரசுப் பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்தில் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதிகளுக்கான ஊக்க ஊதிய உயர்வு 2020 ஆம் ஆண்டு இரத்து செய்யப்பட்டது. அரசுப் பணியாளர்கள் பெற்றிடும் கூடுதல் கல்வித் தகுதியின்மூலம் அவர்களுடைய பணித்திறன் மற்றும் அவர்களது செயல்பாடுகள் மேம்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, உயர் கல்வித் தகுதிகளுக்கான ஊக்கத் தொகை, ஒன்றிய அரசால் அண்மையில் அறிவித்துள்ள வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் விரைவில் அறிவிக்கப்படும்.

(4) அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள், தேவைக்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) ஓய்வுபெறும் நாளில் அரசுப் பணியாளர்களைத் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கும் நடைமுறை தவிர்க்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்கள் தொடர்பாக, பல்வேறு சங்கங்கள், தங்கள் வேலைநிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலத்தினைப் பணிக் காலமாக முறைப்படுத்த வேண்டுமெனக் கோரிக்கை வைத்திருக்கின்றன. இதனைப் பரிவுடன் பரிசீலித்து, பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலம் ஆகியவை பணிக் காலமாக முறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, அதே இடத்தில் மீண்டும் பணியமர்த்தும்வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) கலந்தாய்வின்போது அவர்களுக்கான உரிய முன்னுரிமை வழங்கப்படும். மேலும், போராட்டக் காலத்தில் அவர்கள்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 செப்டம்பர் 7

கைவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாக பதவி உயர்வு ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தால், அவையும் சரிசெய்யப்படும்.

முற்பகல் 10-0.5

(8) பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் அரசுப் பணி பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை நீக்கும் வகையிலும், கருணை அடிப்படையிலான நியமனங்கள் குறித்து தற்போது நடைமுறையில் உள்ள தெளிவின்மையினைச் சரிசெய்யும் வகையிலும், உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(9) அரசுப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரை அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல், இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசு ஊழியர்கள் இத்திட்டத்தின்கீழ் இடர்பாடுகள் எதுவுமின்றி பயன்பெற ஏதுவாக, அவர்களுக்கு உதவிடும் வகையில் ஒருங்கிணைந்த தனி தொலைபேசி உதவி மையம் (Help Desk) ஒன்று அமைக்கப்படும்.

(10) மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர் சங்கங்களால் கொரோனாவுக்கான சிகிச்சைகளை உயர்சிகிச்சைப் பிரிவில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது. கொரோனா சிகிச்சைகளைப் பொறுத்தவரையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள சிகிச்சை தொகையான 10 இலட்சம் ரூபாயைவிடவும் கூடுதலாக, கொரோனா சிகிச்சைக்கான செலவுத் தொகை அரசு நிதி உதவியின்கீழ் அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(11) கணக்கு மற்றும் கருவூலத் துறையின் (IFHRMS) பணிகளை எளிதாக மேற்கொள்ளும்பொருட்டு, அவற்றைத் துரிதமாகவும், எளிதாகவும் செயல்படுத்தக்கூடிய

2021 செப்டம்பர் 7] [திரு. மு.க. ஸ்டாலின்]

வகையில், மாவட்டந்தோறும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

(12) புதியதாக அரசுப் பணியில் சேரும் அரசுப் பணியாளர்கள் மற்றும் பதவி உயர்வு பெறும் பணியாளர்களுக்கு, பணி தொடர்பான பயிற்சியினை அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் பவானிசாகர் சென்று பயிற்சி பெறும் நிலை தவிர்க்கப்பட்டு, தாமதமின்றி அரசு ஊழியர்கள் உரிய காலத்தில் தங்களுக்குரிய தகுதிகாண் பருவம் முடித்தல் மற்றும் பதவி உயர்வு பெறுதல் உறுதி செய்யப்படும்.

(13) அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதால், ஆசிரியர்—மாணவர் விகிதாச்சார தேவைக்கேற்ப, ஆசிரியர் பணி நியமனம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களாட்சித் தத்துவத்தின் நான்கு தூண்களில் ஒன்றான நிருவாகத்தின் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். அவர்களது நலனில் எப்போதுமே அக்கறை கொண்டு, அவர்களது நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றும் என்று தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மனிதவள மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் மற்றும் ஊழியர் சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று, மூன்று மாதகாலத்திற்கு 1,620 கோடி ரூபாயும், ஆண்டுக்கு 6,480 கோடி ரூபாய் அளவிலும் அவர்களுக்கான 1-1-2022 முன்தேதியிட்ட அகவிலைப் படி உயர்வு, சத்துணவு சமையலர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் ஓய்வுபெறும் வயது உயர்வு, உயர் கல்வித் தகுதிக்கான ஊக்கத் தொகை, அரசுப் பள்ளிகளில் காலிப் பணியிடங்கள் நிரப்புதல், அரசு ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்களால்

[திரு. தி. வேல்முருகன்] [2021 செப்டம்பர் 7

அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களைச் சரிசெய்தல், ஒழுங்கு நடவடிக்கைகள் கைவிடப்படுதல், ஆசிரியர்–மாணவர் விகிதாச்சார அடிப்படையில், ஆசிரியர்கள் பணி நியமனம் உள்ளிட்ட 12–க்கும் மேற்பட்ட மகத்தான அறிவிப்புகளை வெளியிட்டு, ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் இருக்கிற இலட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், அலுவலர் பெருமக்கள் மற்றும் ஆசிரியர்கள் நெஞ்சங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பால்வார்த்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) போராடாமல், வேலை நிறுத்தம் செய்யாமல், கோட்டையின் முன் முற்றுகையிடாமல், அவர்கள் கோரிக்கைகளை வைத்தவுடனேயே பரிசீலித்து, இவ்வளவு நிதி நெருக்கடியிலும் நிதியை வாரி வழங்கி, அவர்கள் மனங்களைக் குளிரச் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பாகத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுடைய பிரச்சினைகளை அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, ஒரே நாள் அறிவிப்பின் மூலமாக, மிகச் சிறப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு இன்றைக்கு அத்தனைக்கும் தீர்வு கண்டிருக்கின்றார்கள். நிதிநிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கஷ்டப்படக் கூடாது என்பதை மனதில் வைத்துக்கொண்டு இவற்றை அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–10

ஒவ்வொரு அறிவிப்பையும் வெளியிடுகின்றபோதெல்லாம் நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் முகத்தைப் பார்க்கின்றேன்; அவருடைய முகம் கொஞ்சம், கொஞ்சமாக இறுகிக் கொண்டேயிருக்கிறது. (சிரிப்பு) ஏனென்றால், ஒவ்வொரு அறிவிப்பும் நிதி சார்ந்தது; அதற்கெல்லாம் நிதியை உருவாக்க வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கிறது. அதையெல்லாம் கருத்தில் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மிகப் பெரிய மகத்தான அறிவிப்புகளை இங்கே அறிவித்திருக்கின்றார்கள். போராட்டத்திலே ஈடுபட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள்

மீது போடப்பட்ட வழக்குகள் மட்டுமல்ல, அதனால் அவர்கள் அடைந்திருக்கிற பாதிப்பு எதுவாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதிலே ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருந்தாலும், அதுவும் நிவர்த்தி செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, அரசு அதிகாரிகள் இன்றைக்கு பயந்துகொண்டே வேலை பார்க்கிறார்கள். Retirement–க்கு முந்தைய கடைசி இரண்டு ஆண்டுகள் நெருங்க, நெருங்க, அவர்கள் அதிகம் tension ஆகி விடுகிறார்கள். கடைசி வருடத்தில் அவர்கள் எதையும் செய்ய மாட்டேன் என்கிறார்கள். எதையாவது தவறாகச் செய்து, கடைசி நாளில் suspend செய்து விடுவார்களோ, தற்காலிகமாக பணி நீக்கம் செய்து விடுவார்களோ என்ற பயத்தில், கடைசி வருடம் அவர்கள் வேலை செய்யவே கஷ்டப்படுகிறார்கள். அதைப் புரிந்துகொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஊழியர்களுக்கான அத்தனை தேவைகளையும் மனதில்கொண்டு இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக இந்த அறிவிப்புகளை இந்த நேரத்தில் வரவேற்று அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவையிலே, விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பலதரப்பட்ட அரசு ஊழியர்களுக்குப் பயன்தரக்கூடிய முத்தான 13 அறிவிப்புகளைச் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக 16 இலட்சம் அரசு ஊழியர்களும், ஓய்வூதியதாரர்களும் பயனடையக்கூடிய வகையிலே, அடுத்த புத்தாண்டு, ஜனவரி 1 ஆம் தேதி முதல் அகவிலைப்படி உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும், ஏறத்தாழ 50,000 சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயதை உயர்த்தியதும் பாராட்டுக்குரியது. குறிப்பாக, கடந்த காலங்களிலே அரசாங்கத்திடம் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடிய அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும்; அவர்கள் இடம் மாற்றம் செய்யப்பட்டிருந்தால், மீண்டும் அவர்கள் பழைய இடத்திற்கே செல்ல கலந்தாய்வின்போது உரிய முன்னுரிமை

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2021 செப்டம்பர் 7 வழங்கப்படும்; ஒழுங்கு நடவடிக்கைகள் இரத்து செய்யப்படும் என்கிற அறிவிப்புகளெல்லாம் நிச்சயமாக இந்த அரசு, அரசு ஊழியர்களை இமைபோல் காக்கக்கூடிய ஓர் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, இந்த ஆட்சியில் மாணவர்கள் அரசுப் பள்ளியை நாடி வருகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழலில், அந்த மாணவர்களும் சிறப்பான முறையிலே, சிறந்த கல்வியைப் பெற வேண்டுமென்பதற்காக, அரசுப் பள்ளிக்கூடங்களில் கூடுதலாக ஆசிரியர் நியமனம் செய்யப்படுவது என்பது, இந்த ஆட்சி எதிர்கால சமுதாயத்தினர் சிறப்பாக உருவாக வேண்டும் என்பதற்காக மிகுந்த அக்கறையுள்ள, கருணையுள்ள, அரவணைக்கக்கூடிய ஆட்சி என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. தலைசிறந்த நிருவாகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருகிறார்கள். அந்த நிருவாகம் சிறப்பான முறையில் செயல்பட வேண்டுமென்றால், அரசு ஊழியர்களின் ஒத்துழைப்பு முழுமையாகத் தேவை. அவர்களை motivate செய்யக்கூடிய வகையில், அவர்கள் செயல் ஊக்கம் பெறக்கூடிய வகையில் செய்யப்பட்டிருக்கின்ற இந்த 13 அறிவிப்புகளையும் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்று அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள் மிகவும் தித்திப்பானவை. இதனால் அரசு ஊழியர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற அரசு இது என்று கருதப்படுகின்றது. அவர்களுடைய பணியின் கடைசிக்காலத்தில், அவர்கள் retire ஆகப்போகும் கடைசி நாளில் அவர்களை suspend செய்வது என்பது வருத்தமளிப்பதாகும். இதனால் சந்தோஷமாக வீட்டிற்குச் செல்ல வேண்டிய ஓர் அரசு ஊழியர் கண்ணீரும், கவலையுமாகச் செல்கின்றார். அதேநேரத்தில், அவர்கள் சிலவற்றை திட்டமிட்டிருப்பார்கள், கடைசியாக, ஓய்வுபெறும்போது வரும் ஓய்வூதிய பலன்கள் மற்றும் ஓய்வூதியத்தை வைத்து, தன் குழந்தைகளுக்குத் திருமணம் செய்ய வேண்டுமென்ற கனவோடு இருக்கின்ற அந்த அரசு ஊழியருக்கு, அது மிகப் பெரிய மலைப்பாகப் போய் விடுகின்றது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு

2021 செப்டம்பர் 7][டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

முதல்வர் அவர்கள் அந்த நடைமுறை தவிர்க்கப்படும் என்று அறிவித்த இந்த அறிவிப்பு, அவர்களுக்கு அப்படியொரு நிலை ஏற்படாமல் செய்திருக்கிற மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பாகவும், பாராட்டக்கூடிய அறிவிப்பாகவும் இருக்கின்றது. அரசு ஊழியர்களுக்கு, அவர்கள் கேட்காமலே அகவிலைப்படி உயர்த்தி, தகுந்த நேரத்தில் அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் அகவிலைப்படி அளிக்கப்படும் என்ற அறிவிப்பு உள்ளிட்ட எல்லா அறிவிப்புகளும் சிறந்த அறிவிப்புகளாக, பாராட்டக்கூடிய அறிவிப்புகளாக இருக்கின்றன. மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நானும், எனது நன்றியை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதுதான் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. அந்த வகையில் 16 இலட்சம் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், அகவிலைப்படி முன்தேதியிட்டு 1–1–2022 முதல் அமல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு, இன்றைக்கு அரசு பணியாளர்களிடமும், ஓய்வூதியர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

அதேபோல, சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் ஆகியோர் ஓய்வுபெறும் வயதை 58–லிருந்து 60 ஆக உயர்த்தியிருப்பது, அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள பணியிடங்கள் தேர்வாணையம் மூலமாக நிரப்பப்படும் என்று அறிவித்திருப்பது, போராட்டங்களில் ஈடுபட்ட அரசு ஊழியர்களின் பணி நீக்கம், ஒழுங்கு நடவடிக்கைகள் கைவிடப்படும்; கருணை அடிப்படையில் மீண்டும் பணி நியமனங்கள் வழங்கப்படும் உள்ளிட்ட அறிவிப்புகள் வரவேற்கக்கூடிய அறிவிப்புகள்.

மேலும், அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2021 செப்டம்பர் 7

என்ற அறிவிப்பையும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிறதோ, அந்த காலம்தான் அரசு ஊழியர்களுக்கு வசந்தகாலம் என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலங்களில், இதற்கு முன்பிருந்த ஆட்சியில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராடியபோது, அவர்களை அந்த அரசு நடத்தியவிதத்தையும், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்பையும் நான் பார்க்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எப்படி வாழ்த்துவது; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை என்ன சொல்லி வாழ்த்துவது என்கின்ற தடுமாற்றத்தில் நான் இருக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ், பல்வேறு அறிவிப்புகளைச் செய்து அரசு ஊழியர்களின் வாழ்க்கையில் பால்வார்த்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் நலன் சம்பந்தமான இந்த 13 அறிவிப்புகளையும் விளக்கிச் சொன்னால், கால நேரம் போதாது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அனுமதிக்க மாட்டார்கள் என்கின்ற முறையில் அரசு ஊழியர்களின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சமீபத்தில் சில இடங்களுக்குச் சென்றபோது, அரசு ஊழியர் சங்கத் தலைவர்களெல்லாம் என்னைப் பார்த்து, 'நம்முடைய அரசு எப்போது எங்களுக்கு அகவிலைப்படி, சலுகைகளையெல்லாம் வழங்கும்' என்று கேட்டபோது, 'கவலைப்படாதீர்கள், விரைவில் உங்களுடைய நெஞ்சங்களிலும் பால்வார்ப்பார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுடைய நெஞ்சங்களிலும் பால்வார்க்கக்கூடிய அளவில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு இருக்கும்' என்று உறுதி சொல்லிவிட்டு வந்தேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. வி.பி. நாகைமாலி]

இரண்டு தினங்களுக்குப் பிறகு நான் ஊருக்குச் செல்கின்றபோது, கம்பீரமாக அரசு ஊழியர்களைச் சந்திப்பேன் என்பதை இந்த அவையில் பதிவு செய்து, இந்த 13 அறிவிப்புகளையும் செய்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் உளம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பணிவான வணக்கம். இன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்ற 13 அறிவிப்புகள், அரசு ஊழியர்களின் பல்வேறு நிலைகளிலான கோரிக்கைகளை மிகக் கவனமாக ஆய்வு செய்து அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளாக இருக்கின்றன. அரசு ஊழியர்கள் பதவியிலே நுழைந்து, அவர்கள் பயிற்சி பெறுவதில் தொடங்கி தங்களது கோரிக்கைகளுக்காகப் போராட்டங்கள் நடத்துவதிலே, ஏற்படுகிற இடர்பாடுகள், பணி ஓய்வு பெறுகிற காலத்தில் ஏற்படுகிற நெருக்கடிகள் என அவர்களின் அனைத்து மட்டத்திலான பிரச்சினைகளையும் உள் வாங்கிய பல்வேறு அறிவிப்புகளாக இவை இருக்கின்றன. இவையனைத்தையும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாக வரவேற்கிறோம். மிகக் குறிப்பாக, சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்களின் ஓய்வுபெறும் வயதை உயர்த்தியிருப்பது என்பது அரசு ஊழியர்களின் அடிமட்டத்திலே இருப்பவர்களின் பிரச்சினைகளையும் கணக்கில் கொள்வதாக இருக்கிறது. அதைப்போலவே, ஓய்வு பெறுகிறபோது ஒழுங்கு நடவடிக்கை என்பது முதல்நிலை அரசு ஊழியர்களின் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, அடிமட்டத்திலிருந்து முதல்நிலை அரசு ஊழியர்கள் வரையிலான அனைத்துப் பிரச்சினைகளையும் கணக்கில் எடுத்து, வெறும் வாக்கு வங்கி அரசியல் பார்வையில் மட்டுமல்லாமல், ஒரு கருத்தியல் பார்வையிலே இந்த அறிவிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக நெஞ்சார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2021 செப்டம்பர் 7

ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, அரசு ஊழியர்கள் நடத்துகிற அறம் சார்ந்த போராட்டங்கள், ஏதோ அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் என்கிற மனோநிலையில் அல்லாமல், அந்த அறம் சார்ந்த போராட்டங்களும் ஜனநாயக நடைமுறையின் ஓர் அங்கம்தான் என்கிற அடிப்படையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்புகளையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். 13–வது அறிவிப்பாக இருக்கிற மாணவர்கள், ஆசிரியர்களுடைய விகிதாச்சாரத்தின் அடிப்படையிலே, ஆசிரியர்களுக்கான பணி நியமனங்கள் உடனடியாகச் செய்யப்படும் என்கிற அறிவிப்பு இன்றைய காலத்தின் தேவைக்கான மிக முக்கியமான அறிவிப்பு. மணிமேகலையின் அட்சய பாத்திரம் காலியாகத்தான் இருந்தது. ஆனால், அள்ளி அள்ளிக் கொடுக்கிறபோது அது வற்றாமல் இருந்ததென்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு அவர்களது இதயத்திலிருந்த அன்பும், அறனும்தான் காரணம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களின் கையிலிருக்கிற அட்சய பாத்திரம் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக இருக்கிறது. அவரது அன்புக்கும், அறம் சார்ந்த பண்புக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

***திரு. எம்.ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி எண் 110–ன்கீழ், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் 13 நல்ல அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். அதனை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், வாழ்த்துகளையும் சொல்லி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்களைப் போன்று பேசுங்கள்.

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காந்தி அல்ல. இன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ், தமிழ்நாட்டில் இருக்கிற ஒட்டுமொத்த ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கோரிக்கைகளையெல்லாம்

ஒன்றாக இணைத்து, அவர்கள் நெஞ்சமெல்லாம் குளிரக்கூடிய வகையில், நல்ல அறிவிப்புகளை, வரவேற்கிற அறிவிப்புகளை அறிவித்திருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், பாட்டாளி தொழிற்சங்கத்தின் சார்பில், ஒட்டுமொத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சார்பில் வரவேற்கிறேன். நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் நிதியாதாரங்களையெல்லாம் மக்களிடத்திலே கொண்டு சேர்க்கக்கூடியவர்கள்; சுருங்கச் சொன்னால், அரசு இயந்திரங்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அரசு அலுவலர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள். ஆகவே, அந்த அடிப்படையில் அவர்களது பணிக்காலங்களிலே ஏற்படக்கூடிய கோரிக்கைகள், உரிமைகளுக்கெல்லாம் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கின்ற காலங்களில் போராடுவது வழக்கம். இப்போது கொரோனா பெருந்தொற்று காலம் இதற்கு முன்பிருந்த காலத்தில் தினமும் போராட்டங்கள் நடக்கும். போராட்டங்கள் நடைபெறுவதும், கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதும், சற்று காலந்தாழ்த்தி நிறைவேற்றப்படுவதும் உண்டு. ஆனால், இன்று போராடாமலேயே, நீண்ட நாள் கோரிக்கைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகத் தொகுத்து, குறிப்பாக, அடிமட்டத்திலே இருக்கிற சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் பணியாற்றக் கூடியவர்களின் கோரிக்கைகளெல்லாம் இங்கே நிறைவேற்றப்பட்டிருப்பதாகவே பார்க்கிறோம்.

முற்பகல் 10–25

குறிப்பாக, கருணை அடிப்படையில் பணி நியமனம்; அதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் தேவையான அளவிற்கு நியமனம்; காப்பீட்டுத் தொகை வரையில் இங்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. 13 அறிவிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன. ஏறக்குறைய 13 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று கருதுகிறேன். 13 இலட்சம் பேர்களுக்கும் 13 அம்சங்களாக 13 நல்ல அறிவிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. அதிலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருவது, போராட்டக் காலங்களில், போராட்டத்தில் ஈடுபட்டோர்களுடைய தற்காலிகப் பணி நீக்கம் போன்றவற்றையெல்லாம் நீக்கி, நல்ல அறிவிப்பை வெளியிட்டிருக்கிறீர்கள்; வரவேற்கிறோம். அதேநேரத்தில்,

[திரு. ஜி.கே. மணி] [2021 செப்டம்பர் 7

அகவிலைப் படி உயர்வைப் பொறுத்தவரையில், நீங்கள் முதலில் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த நேரத்தில், சற்று எதிர்பார்த்தது நடக்கவில்லையே என்று ஏமாந்தார்கள்; ஏக்கம் உற்றார்கள். அந்தக் கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதையும் வரவேற்கிறோம். அதேநேரத்தில் இன்று எல்லாத் துறைகளிலும் குறிப்பாக, அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்டோர் தற்காலிக பணியாளர்களாகக் குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்குக் காலமுறை ஊதியம் வழங்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எல்லாம் செய்து கொடுத்துவிட்டீர்கள். ஆனால், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் ஒட்டுமொத்தக் கோரிக்கை, ஜாக்டோ–ஜியோ கூட்டமைப்பினுடைய கோரிக்கை பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதாகும். அந்த ஒன்றையும் செய்துவிட்டீர்களென்றால், ஒட்டுமொத்த ஆசிரியர்கள், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள். விதி 110–கீழ் அறிவித்த அறிவிப்புகளுக்கு நன்றி சொல்லுங்கள். பின்னர், விவாதத்தை வைத்துக்கொள்ளலாம். வருகின்ற திங்கட்கிழமை அன்று சொல்லுங்கள். இப்போது விவாதம் இல்லை.

திரு. ஜி.கே. மணி: அரசு ஊழியர்கள் மனநிறைவு அடைவார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கையாக வைத்து, விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்புகளை நெஞ்சார வரவேற்கிறேன். ஒட்டுமொத்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சார்பிலே வரவேற்று, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி–110ன்கீழ் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த இந்த அறிவிப்புகளை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக உளமார வரவேற்கிறோம்; நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்த சில நாட்களாக அரசு ஊழியர்கள்மீது உளவியல் ரீதியாக ஒரு மிகப் பெரிய தாக்குதல் நடந்தது. என்ன தாக்குதல் நடந்தது என்றால், 'தேர்தல் வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை' என்று அடுக்கடுக்காகக் கோப்புகளைக் கொடுத்தார்கள். நேற்றிரவு

2021 செப்டம்பர் 7] [திரு. கு. செல்வபெருந்தகை]

என்னைச் சந்தித்த ஆசிரியர் பெருமக்களின் சங்கத்தைச் சார்ந்த நிருவாகிகளிடம்கூட இந்த அரசு, இந்த ஆட்சி செய்யவில்லை என்றால், எந்த அரசும், எந்த ஆட்சியும் உங்களுக்கு செய்ய முடியாது என்று நான் சொன்னேன். (மேசையைத் தட்டு ஒலி) அதுமட்டுமல்லாமல், உண்மையையும் சொன்னேன். வெள்ளை அறிக்கையைப் படித்துப் பாருங்கள். இந்த ஆண்டு வாய்ப்பே கிடையாது. அடுத்த ஆண்டு கண்டிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்கள். நாங்களெல்லாம் பேசவிருக்கிறோம் என்று நான் அவர்களை சமாதானப்படுத்தினேன். ஆனால், அதற்கு வாய்ப்பில்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று விதி 110–ன்கீழ் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். மீண்டும் ஒரு முறை மனதார அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறள் எண் 385–ஐ நீங்கள் படித்திருப்பீர்கள். பொருள் வரும் வழிகளை உருவாக்குவது, வந்த பொருள்களைத் தொகுப்பது, தொகுப்பவற்றைப் பிறழாமல் காப்பது, காத்தவற்றை அறம், பொருள், இன்பம் நோக்கிச் செலவிடுவது என இவற்றில் திறமை மிக்கதே அரசு என்று அந்தக் குறள் சொல்கிறது. அய்யன் திருவள்ளுவர் எதை நினைத்துச் சொன்னாரோ தெரியவில்லை. ஆனால், இங்கே நாங்கள் கண்ணுக்கு எட்டுகிற தூரம் வரை பார்க்கிறோம், எப்பொழுது பொருள் வரும் என்று தெரியவில்லை. பொருள் இருக்கிறது என்று சொல்கிறார்கள். வெள்ளை அறிக்கையைப் படித்து பார்த்தால் கஜானாவில் பொருள் இல்லை. ஆகவே, இதையெல்லாம் கடந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைத் துணிச்சலாக அறிவித்ததை பார்க்கும்போது மகான் புத்தர் சொன்னதுதான் நினைவிற்கு வருகிறது. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும், ஒவ்வொரு மனிதனுக்கும் முதுமை வரும், நோய் வரும், மரணம் வரும். ஆனால், இந்தக் காலக்கட்டத்திலே ஓர் அரசு என்ன செய்கிறதோ, ஆட்சியாளர்கள் என்ன செய்கிறார்களோ அவர்கள்தான் புனிதமான ஆட்சியாளர்கள் என்று மகான் புத்தர் சொல்லியிருக்கிறார். Edmund Burke ஓரிடத்தில் சொல்கிறார், நேற்று இறந்தவனுக்கும், இன்று இருப்பவனுக்கும், நாளை பிறப்பவனுக்குமான ஒப்பம்தான் உண்மையான ஆட்சியாளர் என்று சொல்கிறார். அப்படிப்பட்ட உலக மகா கவிஞர்கள், உலகம் போற்றுகின்ற அறிவார்ந்த பேரறிஞர்கள் சொல்லியவற்றையெல்லாம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்திலே, விதி 110 அறிவிப்பிலே

[திரு. கு. செல்வபெருந்தகை] [*2021 செப்டம்பர் 7*

நாம் பார்க்கிறோம். நான், மீண்டும் ஒரு முறை சொல்கிறேன். முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியைப் பார்த்து இருக்கிறோம். மயிலுக்கு போர்வை கொடுத்த பேகனை பார்த்திருக்கிறோம். முதல் முறையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த அறிவிப்புகள் மூலமாக பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய வெற்றி பயணம் தொடர வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மனமார வாழ்த்தி, இந்த அறிவிப்புகள் என்பது 'ஓவியம் பேசாத கவிதை, கவிதை பேசுகின்ற ஓவியம்' என்றுகூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ball six அடிக்கலாம்; இரண்டு ball தொடர்ந்து six அடிக்கலாம். ஆனால், தொடர்ந்து விதி 110–ன்கீழ் அறிவிக்கின்ற அறிவிப்புகளையெல்லாம் sixer ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடித்துக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக விதி 110–ன்கீழ் அறிவிக்கின்ற அறிவிப்புகளை நாம் இதுவரை எப்படிப் பார்த்திருக்கிறோம் என்றால், 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று' என்ற மனநிலையில்தான் பார்த்திருந்தோம். ஆனால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன்கீழ் அறிவிப்பை அறிவிக்கப் போகிறார் என்று சொல்லும்போதே, எங்களுக்கெல்லாம் ஒரு பூரிப்பு, ஒரு பெருமை. நாங்களெல்லாம் குஷியாக இருந்தோம். இன்றைக்கு ஏதோ ஒரு பெரிய அறிவிப்பு வரப்போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று நாங்கள் உணர்ச்சிவசப்பட்டோம். ஆக, அந்த அளவுக்கு இன்றைக்கு இப்படிப்பட்ட நல்ல அறிவிப்புகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அரசு என்னும் தேரின் சக்கரங்கள் அரசு ஊழியர்கள் என்று சொன்னால், சமுதாயம் என்னும் தேரின் புரவிகள் ஆசிரியர்கள் என்ற முத்தமிழறிஞர் அவர்களின் கூற்றிற்கேற்ப, எங்களைப் பொறுத்தவரைக்கும் அந்தத் தேரை ஓட்டுகின்ற சாரதியாக உங்களைப் பார்ப்பதைக் காட்டிலும், தமிழனால், தமிழினத்திற்காக, தமிழகத்தை ஐந்து முறை ஆண்ட, நமது கோபாலபுரத்து ஆண்டவருடைய, அவர் மூலவர் என்று சொன்னால், அந்தத் தேரில் பவனி வருகின்ற உற்சவராக உங்களைப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியர்

2021 செப்டம்பர் 7] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] பெருமக்களின் சார்பாக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு விதி 110–ன்கீழ் படித்த அறிக்கை அரசு ஊழியர்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பைப் பெறும் என்பதில் கொஞ்சம்கூட ஐயம் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம், எங்கள் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்தபொழுதும், அரசு ஊழியர்களுக்கு உரிய மரியாதையைத் தருவதற்குத் தவறியதே இல்லை. மத்திய சர்க்காரிலே பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கும், மாநில சர்க்காரிலே பணியாற்றுகிற அரசு ஊழியர்களுக்கும் சம்பளத்திலே வித்தியாசம் இருந்தது. மத்திய அரசு ஊழியர்கள் உயர்ந்தவர்களைப் போலவும், மாநில அரசு ஊழியர்கள் தாழ்ந்தவர்களைப் போலவும் இருந்த ஒரு காலக்கட்டம் இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1969 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபொழுது, மத்திய சர்க்காருக்கு இணையான சம்பளத்தை மாநில அரசு ஊழியர்களுக்கும் தரவேண்டுமென்ற அற்புதமான சட்டத்தை அன்றைக்கு நிறைவேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று தலைவர் அவர்கள் இன்றைக்கு 17(e) விதியை நீக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். அதேபோன்று உங்களில் பலபேருக்குத் தெரியாது; வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்காலத்தில் இரகசியக் குறிப்பேடு என்று இருந்தது. ஒரு Head Clerk இருக்கிறார் என்றால், அவருக்கு மேல்நிலையில் Manager இருப்பார். Head Clerk ஆக இருப்பவர் Manager–ன் தயவில்தான் வாழவேண்டும். ஒரு வரியில் 'He is unfit for promotion' என்று Manager எழுதிவிட்டால், அவன் தொலைந்தான். அதுதான் இரகசியக் குறிப்பேடு. அந்த முறை வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் இருந்தது; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தது. அந்த முறையைத் தூக்கி எறிந்தவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தூக்கி எறிந்துவிட்டாலும், அதனுடைய அடுத்த கட்டமாக, விதி 17 (e) charge என்று

[திரு. துரைமுருகன்] [2021 செப்டம்பர் 7

ஒன்று உண்டு. அது என்னவென்று கேட்டால், ஏற்கெனவே அமைச்சர்களாக இருந்தவர்களுக்கும், எங்களுக்கும் தெரியும். நாளைக்கு ஓர் அரசு ஊழியர் retire ஆகப் போகிறாரென்றால், இன்றைக்கு அவரை விதி 17 (e) charge போட்டு suspend செய்யவேண்டும் என்று file வரும். இங்குகூட யாரோ சொன்னார்கள். அவர் அன்றைக்கு retire ஆகி வீட்டுக்குப் போகும்போது, 'அப்பா இன்றைக்கு sweet எல்லாம் வாங்கி வருவார் என்று குழந்தைகள் எல்லாம் எதிர்பார்த்து காத்திருப்பார்கள். அவர் அழுதுகொண்டே போய் நின்றவுடன், 'என்ன ஆனது?' என்று கேட்பார்கள். 'அப்பாவுக்கு என்ன ஆனது, அம்மா?' என்று குழந்தைகள் கேட்கும். 'Suspend செய்துவிட்டார்கள்' என்று சொன்னால், அந்தக் குடும்பத்திற்கு இடி விழுந்ததுபோல் இருக்கும். 'எந்தப் பாவி செய்தானோ, அவன் பிள்ளை குட்டி நன்றாக இருக்குமா என்று சொல்வார்கள். நான் விதி 17(e) charge–க்கு கையெழுத்துப் போடுவதில்லை. 'ஏன், இந்தக் கோப்பை ஒரு மாதத்திற்கு முன்பே அனுப்பவில்லை' என்று கேட்டு, திருப்பி அனுப்பிவிடுவேன். நாளைக்கு retirement என்றால், அதற்கு முந்தைய நாள் விதி 17(e) charge–க்கு நான் கையெழுத்துப் போடமாட்டேன்; 'நீங்களே கையெழுத்துப் போட்டுக்கொள்ளுங்கள்' என்று நான் சொல்லிவிடுவேன். 17(e) கோப்புகளில் நான் அதிகமாகக் கையெழுத்து போட்டதே கிடையாது. தவிர்க்க முடியாத காரணங்களால் ஒன்றிரண்டு கோப்புகளில்தான் கையெழுத்து போட்டிருக்கிறேன். Correct ஆக காரணம் காட்டியிருந்தார்கள். அரசு ஊழியர்களை அப்படி பயமுறுத்துவார்கள். பணியின் கடைசிநாள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருப்பார்கள். அதை இன்றைக்கு எங்கள் தலைவர் ஒழித்திருக்கிறார். இது ஒரு மகத்தான அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஊழியர்களுக்கு நடைமுறையில் இருந்த இரகசியக் குறிப்பேடு முறையை கலைஞர் நீக்கிவிட்டார். அடுத்து, விதி 17(e)–ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தூக்கி எறிந்திருக்கிறார்கள்.

இந்த அறிவிப்பில் நான் ஒன்றைப் பார்த்தேன்; எல்லா அரசு ஊழியர்களையும்; பெரிய சம்பளம் வாங்குகிறவர்களையும் மட்டும் நினைக்கவில்லை; சத்துணவு ஆயாக்களையும் நினைத்திருக்கிறார் பாருங்கள்! அவர்களை யாரும் நினைக்க மாட்டார்கள். அந்த சத்துணவு ஆயாக்களுக்கும், அவர்களிடம் வேலை செய்கின்ற Assistant அவர்களையும் நினைத்திருக்கிறீர்களே, அதைத்தான் நான் நினைத்துப் பார்க்கிறேன். உள்ளபடியே மக்களுக்கு

2021 செப்டம்பர் 7] [திரு. துரைமுருகன்]

எப்படி அதிர்ச்சியாக இருக்கிறது என்பது தெரியவில்லை. எனக்கு ரொம்ப அதிர்ச்சியாக இருக்கிறது. எப்படி இவ்வளவு திட்டங்களை அடுக்கி வைத்திருந்தார், என்ன சமாச்சாரம் என்பது எனக்கே தெரியவில்லை. 'என்னப்பா! இன்றைக்கு எதாவது அறிவிப்பு உண்டா?' என்று நான் தினமும் கேட்பேன். ஒன்றும் சொல்லவேமாட்டார். இங்கே வந்த பிறகுதான் சொல்வார். கடைசி நிமிடம்தான் சொல்வார். நான், அவர் வீட்டுக்குப் போயிருந்தேன் அங்கேகூட ஒன்றும் சொல்லவில்லை. இப்பொழுது இங்கேதான் சொன்னார். ஆகையினால், இவ்வளவுக்கும் காரணம், அவர், எங்கள் கலைஞருடைய மகன். அதுதான் அவருக்கு இருக்கின்ற மகத்தான சக்தி. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கருணை அடிப்படையில் வேலை வழங்குவதில் மிகப் பெரிய பிரச்சினை. நான் சமீபத்தில் 'உங்கள் தொகுதியில் முதல்வர்' நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேலூர் சென்றிருந்தேன். 13 வருடங்களுக்கு முன்னர், நான்கு பேர் இராணுவத்தில் பணியாற்றி இறந்துவிட்டார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்குப் போன மாதம்தான் வேலை கொடுத்தோம். இராணுவத்தில் காஷ்மீர் லடாக் பகுதியில் இறந்தவர்களுக்கு, அவர்களது வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலை கேட்டு, கேட்டு, கேட்டு 13 வருடங்களாக வழங்கப்படவில்லை. எனக்கு அப்படியே கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. 13 வருடங்களுக்குப் பிறகுதான் வேலை கிடைத்தது. ஆனால், அதற்குரிய அந்த சிக்கல்களையெல்லாம் நீக்கி, அதைக் கொடுத்ததற்கு உள்ளபடியே பாராட்டுகிறேன்.

முற்பகல் 10–35

அதேபோன்று நிறைய வேலைவாய்ப்புகளை இப்போது கொடுத்திருக்கிறார். தலைவரும் அதைத்தான் செய்தார். மக்கள் நலப் பணியாளர்களைப் பணியமர்த்தினார்; சாலைப் பணியாளர்களைப் பணியமர்த்தினார்; பல்வேறு துறைகளில் பணியிடங்களை நிரப்பினார்; Pump operator பணியிடங்களை நிரப்பினார். Pump Operator பணியிடங்களைக்கூட அன்றைக்கு தலைவர் கலைஞர் நிரப்பாமல் விடவில்லை. அதேமாதிரிதான் இன்றைக்கும் முதலமைச்சர் செய்திருக்கிறார். எனவே, ஒவ்வொரு நாளும் சமுதாயத்திற்கான அறிவிப்பு செய்கிறார். அறிவிப்பு என்றால், இதுதான் அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பல அறிவிப்புகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இது மக்களுக்கான அறிவிப்பு. முதலமைச்சருடைய தொண்டு உள்ளத்தை, தூய உள்ளத்தை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நன்றி, வணக்கம்.

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய பாராட்டோடு, பேரவைத் தலைவருடைய பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மேம்பால அணுகுசாலை மற்றும் 4 வழிச் சாலைப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மேம்பாலத்தின் அணுகுசாலை மிகவும் குறுகியதாக இருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேரவை விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலை அடுத்து முக்கிய நகரங்களில் மார்த்தாண்டம் ஒரு முக்கிய நகரமாகும். மார்த்தாண்டம் நகரில் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ரூ.210 கோடியில் ஒரு மேம்பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மேம்பாலம் ஆரம்பிக்கும் பகுதியிலும், முடிகிற பகுதியிலும் இருக்கக்கூடிய இணைப்புச் சாலைகள், அணுகுச் சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. லாரி போக முடியாது; பஸ் போக முடியாது; எந்த வசதியுமே கிடையாது. 10,000–க்கும் அதிகமான வர்த்தகர்கள் அங்கு இருக்கிறார்கள். அங்கு மருத்துவமனைகள் இருக்கின்றன; பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன; கல்லூரிகள் இருக்கின்றன; மத வழிபாட்டுத்தலங்கள் இருக்கின்றன. ஆனால், 5,000 வியாபாரிகள்கூட வியாபாரம் செய்ய முடியாத மோசமான நிலை அங்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வந்துவிடுங்கள், கேள்வியைக் கேளுங்கள்.

2021 செப்டம்பர் 7]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இன்னும் ஒரே ஒரு கேள்வி இருக்கிறது. இதுபோலத்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில், 4 வழிச்சாலை அமைக்கும் பணி 2,700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2014–ல் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தார்கள். களியக்காவிளை–கன்னியாகுமரி சாலை சுமார் 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தச் சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் 75 சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. வேலை முடியாததற்கான காரணத்தையும் நான் சொல்கிறேன். நில ஆர்ஜிதம் செய்யும்போது, நிலத்திற்கான தகுந்த இழப்பீட்டுத் தொகையைக் கொடுக்கவில்லை. வேண்டுமென்றே பணியை இழுத்துக்கொண்டே செல்கிறார்கள். எனவே, கன்னியாகுமரி மாவட்ட மக்கள் ஒட்டுமொத்தமாக போக்குவரத்து நெரிசலில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை விரைவாக தீர்த்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை வருடாந்திர திட்டம் 2015–2016–ன் மூலமாக மார்த்தாண்டம் பகுதியிலே 2.70 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாலம் கட்டி முடிக்கப்பட்டு, 1–3–2019 முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மார்த்தாண்டம் மேம்பாலத்தின் ஒடுதளமானது 10 மீட்டர் அகலம் கொண்டதாகும். சந்தை சாலை (Market road) ஒடுதளமானது 6.50 மீட்டர் அகலம் கொண்டதாக இருக்கிறது. மேம்பாலத்தின் சேவை சாலை பம்பம் பகுதி நீங்கலாக மீதமுள்ள இரு பக்கமும் சாலையின் அகலம் 5.50 மீட்டர் கொண்டதாகவும், மேம்பாலம் முடிவடையும்போது பம்பம் பகுதியின் இடதுபுற சேவை சாலையின் அகலம் 2.50 மீட்டராகவும் இருக்கிறது. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்து சேவை சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு, 4 மீட்டர் அகலத்திற்கு பம்பம் பகுதியின் சேவை சாலை அமைக்கப்பட்டு, 6–10–2020 முதல் பயன்பாட்டிலே உள்ளது. இருபுறமும் சேவை சாலைகளிலும் வாகனப் போக்குவரத்து எவ்வித இடையூறும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அப்பகுதியில் சாலையின் இரு பக்கங்கள் முழுவதும் வர்த்தகப் பகுதியாக இருந்து வருவதால் சேவை சாலையை அகலப்படுத்த கூடுதலாக நில எடுப்பு எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படும் என்று அந்தப் பகுதியினர் குறிப்பிடுகிறார்கள். எனவே, திருவனந்தபுரம் மற்றும் நாகர்கோவில்

[திரு. எ.வ. வேலு] [2021 செப்டம்பர் 7

நோக்கிச் செல்லும் அனைத்து இலகு ரக வாகனங்கள், கன ரக வாகனங்கள், மேம்பாலத்தின் சேவை சாலையைப் பயன்படுத்துகிற வாகனங்களின் எண்ணிக்கை தற்போது மிகவும் குறைவாகவே இருக்கிறது. எனவே, சேவை சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவையில்லை என்பது அரசினுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 4 வழிச்சாலையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, அந்தப் பணிகளை இன்னும் விரைந்து செய்வதற்கு, அதற்கு முன்னுரிமை அளித்து, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) திருக்கோயில்கள், மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருக்கோயில்களில் மொட்டையடிக்கும் தொழிலாளர்களின் நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா அவர்களும், திரு. A.P. நந்தகுமார் அவர்களும் பேரவை விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்து ஒருவர் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மொட்டைக்கு இனி இல்லை கட்டணம்' என்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அற்புதமான திட்டம், பக்தகோடிகள் மற்றும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. ஏற்கெனவே, திருக்கோயில்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மொட்டையடிக்கும் பணியாளர்களின் வாழ்வாதாரம் அதிகளவு பாதிக்கப்படுவதாக ஊடகங்களிலேயும், மொட்டையடிக்கும் பணியாளர்களிடையேயும் பேசப்படுகிறது. இலவசம் என்பதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது உண்மையா? அப்படி பாதிக்கப்படுபவர்களுக்கு தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்களின் அரசு உரிய நிவாரணம் வழங்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மொட்டைக்கு இனி இல்லை, கட்டணம்' என்ற அறிவிப்பைத் தொடர்ந்து இன்றைக்கு பக்தகோடிகளின் உள்ளமெல்லாம், நெஞ்சமெல்லாம் பூத்துக் குலுங்குவதை யாரும் அறியாமல் இருக்க மாட்டார்கள். ஆனால், மொட்டை அடிப்பதைக்கூட ஒரு சில அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்வதையும் ஊடகங்களில் பார்த்திருக்கின்றோம். இறையன்பு கொண்ட நெஞ்சங்களுக்கு, மொட்டையடிப்பதற்கு பல இடங்களில் ரூ.500/–, ரூ.1,000/– என்று கேட்கின்ற நிலையிருக்கிறது. பக்தர்கள் தங்களுடைய வேண்டுதல் நிறைவேறிய பிறகு, ஆண்டவனுக்குத் தங்களுடைய உயிரைக் கொடுப்பதுபோல, தாங்கள் பிரியப்பட்டு வளர்த்த முடியைக் காணிக்கையாகச் செலுத்துவது வழக்கம். இப்படி, ஏழையெளியோர்கூட அதிகளவு வேண்டுதலை, பிரார்த்தனையை நிறைவேற்றுகின்ற சூழலை நாம் அனைவரும் நன்றாக அறிந்திருப்போம் இதையறிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட துறையின் ஆய்வுக் கூட்டத்தில், 'இனி மொட்டைக்கு இல்லை, கட்டணம்' என்ற அறிவிப்பை வெளியிடச் செய்தார்கள். அதோடு மட்டுமல்லாமல், மொட்டையடிப்பவர்களுக்குப் பணி நிரந்தரம் என்பது எதுவுமில்லை. அவர்களுக்குத் திருக்கோயிலின் சார்பிலே எந்தவிதமான ஊதியமும் வழங்கப்படுவதில்லை. மொட்டையடிப்பவர்களுக்கு 5 ரூபாய் முதல் 25 ரூபாய் வரையில் ரசீதுபோல் தந்து, அதைத் திருக்கோயில்களில் அவர்களுக்குப் பணமாக வழங்குவது வழக்கம். பல திருக்கோயில்களில் அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லையென்பதால், 5 ரூபாயிலிருந்து 25 ரூபாய் என்பதை மாற்றி, யார் மொட்டையடித்தாலும் அதற்குண்டான கட்டணமாக 30 ரூபாயை திருக்கோயிலின் சார்பிலே செலுத்தச் சொன்னார்கள். நேற்றைக்கு முன்தினத்திலிருந்து திருக்கோயிலின் சார்பிலே 30 ரூபாயும் செலுத்தப்பட்டு வருகின்றது. அதுவும் எங்களுக்குப் போதவில்லை, ஏற்கெனவே நாங்கள் இனாமாக 5 ரூபாய், 10 ரூபாய் என்று வாங்கிக் கொண்டிருந்தோம். இப்பொழுது அதுவும் தடைப்பட்டுவிட்டது என்பதை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், நாங்களும் இன்றைக்கு இந்தக் கேள்வி வருவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலே, முதலமைச்சர் அவர்களோடு

[திரு. பி.கே. சேகர்பாபு] [2021 செப்டம்பர் 7

இதுகுறித்து கலந்து ஆலோசித்தோம். 'கேளாமல் கொடுக்கின்ற மனது, கேட்டதெல்லாம் தருகின்ற குணம்' கொண்டவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மக்கள் பணி என்பது, இறை பணியில் உள்ள பக்தர்களுக்கு மாத்திரமல்ல, மகேசன் சேவையில் மகுடம் பதித்திருக்கின்றவர் எங்கள் முதலமைச்சர் அவர்கள். 1,749 மொட்டையடிப்பவர்கள் அந்தந்தக் கோயில்களின் அடையாள அட்டையைப் பெற்று மொட்டையடிக்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாராள மனதுடன் மாதம் 5,000 ரூபாயை ஊக்கத் தொகையாக அறிவித்திருக்கின்ற முதலமைச்சர், எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கெல்லாம் அபயக் குரல் கேட்கின்றதோ, அங்கெல்லாம் தன்னுடைய ஆதரவு கரம் நீட்டி, அந்த அபயக் குரலுக்கு விடை காணுகின்ற முதலமைச்சரைப் பெற்றிருக்கின்ற தமிழ்நாடும், இந்து சமய அறநிலையத் துறையும் பெருமைகொள்கிறது. நன்றி.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2021 செப்டம்பர் 7] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10–45

5. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 30 – எழுது பொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 17 – கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(ஈ) கோரிக்கை எண் 18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன்,துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(உ) கோரிக்கை எண் 10 – வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஊ) கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டுக்கான*

2021 செப்டம்பர் 7]

மானியக் கோரிக்கைகள்மீது, விவாதமும், வாக்கெடுப்பும். 6–9–2021 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தங்களுக்கும் எனக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இம்மாமன்றத்தில் தாங்கள் எப்பொழுதெல்லாம் உறுப்பினராகத் தேர்வாகி வந்திருக்கிறீர்களோ, அப்பொழுதெல்லாம் இந்த அடியேனும் இம்மாமன்றத்தில் இடம்பெற்றிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.*

சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும், தமிழ்மொழி காக்க பாடுபட்ட மொழிக் காவலர்களையும், நமது உரிமைகளை நிலைநாட்டப் பாடுபட்ட நீதிக் கட்சித் தலைவர்களையும் வணங்குகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும், 'என்னுயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே', என்ற ஒற்றைச் சொல்லில் கழகத் தோழர்களைக் கட்டிப்போட்ட, நினைவில் வாழும் ஐயா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி), பேராசிரியர் பெருந்தகை அவர்களையும் வணங்குகிறேன்.

முகக் கவசம் நம்மைக் காக்கும்; மு.க. வம்சம் தமிழ்நாட்டைக் காக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மெய்ப்பிக்கும் வகையில், ஆட்சி செலுத்திவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

சமூக நீதியைக் காப்பதில் தந்தை பெரியாராய், 'ஒன்றிய அரசு' என்று சொன்ன சொல்மூலம் மாநில சுயாட்சியில் பேரறிஞர் அண்ணாவாய், நிருவாகத் திறமையில் முத்தமிழறிஞர் ஐயா கலைஞராய், கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் பெருந்தலைவர் காமராஜராய், மத நல்லிணக்கம் பேணுவதில் மகாத்மா காந்தியாய், ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காக முழங்குவதில் அண்ணல் அம்பேத்கராய், சிறுபான்மையினரின் நலன் காக்கப் போராடுவதில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தாய், தமிழுக்காகச் சிந்திப்பதில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாய், 'ஒன்றிணைவோம் வா' என்ற திட்டத்தின்மூலம் அன்னை தெரசாவாய், 'உங்கள் தொகுதியில் முதல்வர்' என்ற திட்டத்தின்மூலம் மனுநீதிச் சோழனாய், விவசாயிகளின்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

மேம்பாட்டுக்காக உழைப்பதில் நம்மாழ்வாராய், ஊருக்கு உழைக்கும் உத்தமராய், இந்தச் சபையின் மாண்பைக் காப்பதில் பண்பாளராய், அனைத்துக் கட்சிகளின் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவதிலே, அனைத்துக் கட்சித் தலைவராய் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இந்த நேரத்தில் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில் வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள், ஏன், வாக்குரிமை இல்லாத இலங்கைத் தமிழர்களுக்கும் சேர்த்து நன்மை செய்யும் முதல்வராகக் காட்சியளித்துக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புராணங்களில் 10 அவதாரம் எடுப்பார்கள்; 28 அவதாரம் எடுப்பார்கள்; 43 அவதாரம் எடுப்பார்கள் என்று படித்திருக்கிறோம். இன்றுதான் முதலமைச்சர் வடிவில் பார்க்கிறோம். முதலமைச்சர் என்ற ஒற்றை மனிதருக்குள் எத்தனை அவதாரங்கள் என்று இன்று தமிழ்நாடே ஆச்சரியப்பட்டு நிற்கிறது.

நம்மை ஆளும் முதலமைச்சர் அவர்கள், நித்தம் ஓர் அவதாரம் எடுத்து, அனைத்துத் தரப்பு மக்களையும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் அவரை உலகமே பாராட்டுகிறது. கழகத்தின் பொதுச் செயலாளர், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன், திரு. துரைமுருகன் அவர்களுக்கும் வணக்கம்.

செய்தித் துறை என்றாலே, பத்திரிகை, ஊடகம், திரைப்படம் ஆகிய மூன்றும் இணைந்ததுதான். இந்த மூன்றிலும் கொடிகட்டிப் பறப்பவர்தான் எங்களின் இளைஞரணிச் செயலாளர். (மேசையைத் தட்டும் ஒலி) இளைய கலைஞராய் இன்றைக்கு நுழைந்து, நாளைய தளபதியாய் வளர்ந்து, கலைஞரையும், தளபதியாரையும் சேர்த்து செய்த கலவையாகக் கோலோச்சப்போகும் திராவிட இயக்கத்தின் எதிர்காலம், இளைஞர்களின் உயிர்த் துடிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது உடன்பிறப்பு, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு திரு. உதயநிதி அவர்களுக்கு வணக்கம்.

எனது வெற்றிக்கு வாக்களித்த காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்காகப் பாடுபட்ட மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி செயல்வீரர்களுக்கும், நிருவாகிகளுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும்

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தாயையும், தந்தையையும், குடும்ப முன்னோர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம்.

நான் செய்தித் துறை அமைச்சர் என்பதால், ஊடகங்களில் வந்த சில தகவல்களை இம்மாமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாட்டின் தலைப்புச் செய்தியாக மட்டுமல்ல; இந்தியப் பத்திரிகைகளிலும், உலகப் பத்திரிகைகளிலும், தலைப்புச் செய்தியாக முதலமைச்சர் அவர்கள் உயர்ந்துள்ளார்கள். America, German, Russia போன்ற நாடுகளின் பத்திரிகைகளெல்லாம் பாராட்டுகின்றன. 'அமைதியான சாதனையாளர்' என்று அமெரிக்காவிலிருந்து வெளியாகும் The Economist பாராட்டுகிறது. 'சமூக சீர்திருத்த முயற்சிகளைச் செய்கிறார் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர்' என்று ஜெர்மன் பத்திரிகை Frankfurter Allegemeine Zeitung எழுதுகிறது. 'கவனத்தை ஈர்க்கிறார்' என்று ரஷ்ய பத்திரிகை எழுதுகிறது. 'பிரதமர் செய்யாததை முதல்வர் செய்கிறார்' என்று பாராட்டுகிறது British–The Telegraph. 'இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர்' என்று India Today survey வெளிடுகிறது. 'சமூக நலத் திட்டங்களுக்கு அதிமுக்கியத்துவம் தருகிற அரசாக இருக்கிறது' என்று National Political Mirror, New Delhi எழுதுகிறது. 'ஒரு நீண்ட innings ஆட்டத்திற்கு ஒரு நல்ல தொடக்கம்' என்று Deccan Chronicle போற்றுகிறது. 'மற்ற மாநிலங்களுக்கு உணர்வூட்டக்கூடிய முன்மாதிரித் திட்டங்களைத் தமிழக அரசு முன்னெடுக்கிறது' என்று கணித்துள்ளது The Hindu நாளிதழ். 'Rock Star ஆகத் திகழ்கிறார்' என்று The Times of India நாளிதழ் போற்றுகிறது.

முற்பகல் 10–50

'கோவிட் அலையைத் தனது திறமையான நடவடிக்கைகளால் கட்டுப்படுத்திவிட்டார் முதலமைச்சர்' என்று கேரள பத்திரிகையான Mathrubhumi மனப்பூர்வமாகப் பாராட்டியிருக்கிறது. 10TV என்கிற ஆந்திர மாநிலத் தொலைக்காட்சி, 'Ultimate CM' என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை வர்ணிக்கிறது. 'மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து ஆந்திர மாநிலம் வியக்கிறது' என்று ஆந்திர ஜோதி ஆசிரியர் திரு. கே. சீனிவாஸ் பேட்டியளித்துள்ளார். பிற்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்ததற்காக, Indian Twitter Board வாழ்த்துகிறது.

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பேராசிரியர், திரு. நாகேஸ்வர ராவ் "அர்த்தசாஸ்திரத்தில் சொன்னபடி, சீரிய தலைமையில் பண்புடன் ஆட்சியை வழிநடத்திச் செல்கிறார்" என்று ஒரு தெலுங்கு தொலைக்காட்சியில், மாண்புமிகு முதலமைச்சரைப் பாராட்டிப் பேட்டியளித்துள்ளார். எங்களுக்கு அர்த்தசாஸ்திரம் எல்லாம் தெரியாது. எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் 'தளபதி சாஸ்திரம்' மட்டும்தான். தளபதியின் சாஸ்திரம்தான் இனி தமிழ்நாட்டின் அஸ்திரம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இந்தியாவின் சரித்திரம். இப்படி அனைத்துப் பத்திரிகைகளிலும் நீங்கள் செய்தியாகாத நாளே இல்லை. உங்களைப் பற்றி எழுதாத செய்தித்தாளே இல்லை. உங்களைப் பற்றி எழுதவில்லையென்றால், செய்தித்தாளே இல்லையென்று மக்கள் நினைக்கும் அளவிற்கு உயர்ந்துவிட்டீர்கள். எனவே, நீங்கள் வாழும் காலத்தில் நானும் வாழ்கிறேன் என்பது எனக்குப் பெருமை. நீங்கள் ஆளும் காலத்தில் அமைச்சராக இருக்கும் பேறு பெற்றேன் என்பது அதைவிடப் பெருமை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காலத்தில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்து பணியாற்றியிருக்கின்றேன். இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்தித் துறையில் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்துள்ளீர்கள். ஒரு துறையின் சாதனை மட்டுமல்ல; அனைத்துத் துறைகளின் சாதனைகளையும் உலகிற்கு எடுத்துச் சொல்லும் இடத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை வைத்துள்ளார்கள். எப்பொழுதும் உங்களது இதயத்தில், எனக்கும் ஓர் இடத்தை ஒதுக்கிவைத்துள்ளீர்கள், தலைவர் அவர்களே! மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களை மீண்டும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலே, எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும்தான். எழுதி எழுதியே, பேசிப் பேசியே வளர்ந்த இயக்கம் இது. நாடக மேடையில் ஒலித்த குரலும், திரையுலகில் ஒலித்த குரலும்தான், வீதியில் பேசிக்கொண்டிருந்தவர்களைக் கோட்டைக்குள் நுழையவைக்கக் காரணமாக அமைந்தது. 1967 ஆம் ஆண்டு, கழகம் முதன்முதலாக ஆட்சி அமைத்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்களது அமைச்சரவையில், 8 அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அண்ணா உட்பட 9 பேர் இடம்பெற்றிருந்தனர். 9 பேர்களில் 5 பேர் பத்திரிகையாளர்கள்.

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

'திராவிட நாடு' என்ற பத்திரிகை நடத்தினார் பேரறிஞர் அண்ணா. 'முரசொலி' நாளிதழை நடத்தினார் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள். 'மன்றம்' என்ற இதழை நடத்தினார் நாவலர் அவர்கள். 'தென்னகம்' என்ற இதழை நடத்தினார் திரு. ஏ.எம். மதியழகன் அவர்கள். 'அன்னை' என்ற பத்திரிகையை நடத்தினார் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள். இப்படி தி.மு.க. ஆட்சி என்பது, செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆட்சியாகத்தான் தொடங்கியது. அனைத்துத் துறைகளையும் வழிநடத்தியவர்கள், பத்திரிகையாளர்களாக இருந்தார்கள். ஏன்? மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஒரு பத்திரிகையாளர். ஆகவே, செய்தித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்குப், பதிலளிப்பதில் நான் பெருமையடைகிறேன்.

கடந்த 1984 ஆம் ஆண்டு, எனது வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்திய ஆண்டு. கோவையில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு கார் நிறுவனத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது பச்சை நிற ambassador car–க்கு seat cover பொருத்தும் பணியைப் பார்த்துக்கொண்டிருந்தார் ஒருவர். இவர் யாரென்று அந்த நிறுவன உரிமையாளரைக் கேட்டபோது, ஐயா கலைஞர் அவர்களுடைய மகன் என்று தளபதியை அவர் சுட்டிக்காட்டினார். அப்போதுதான் அவரை நான் பார்த்தேன். அதற்குப் பிறகு, கல்லூரி வாழ்க்கையை முடித்துவிட்டு, மாபெரும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தில், 1986 ஆம் ஆண்டில், என்னை இணைத்துக்கொண்டேன். முதன்முதலாக நான் கலந்துகொண்ட போராட்டம், மொழிப் போராட்டம். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து கோவை மத்திய சிறையில் ஏறத்தாழ, 45 நாட்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்தேன். இன்று, மொழிக் காவலர்களின் பெருமைகளைக்கூறும், இந்தத் துறைக்குப் பொறுப்பு வகிப்பதில் நான் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்ல, எப்பொழுதும் எங்கள் தளபதி அவர்கள் எங்கள்மீது பாசம் கொண்டிருப்பார் என்பதற்கு, இன்னொரு அடையாளமாக 1989 ஆம் ஆண்டு, இதே நாளில் என்னுடைய திருமணத்தைத் தலைமையேற்று நடத்தித் தந்தார் என்பதை இந்த நேரத்தில் பெருமையாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அது மட்டுமல்ல, இயக்கத்தில் பல்வேறு பொறுப்புகள். ஒன்றிய துணைக் கழக அமைப்பாளர் பதவி தொடங்கி இளைஞரணிச் செயலாளர் வரையிலும், 3 முறை மாவட்டத்தின் கழகச் செயலாளராகவும், 6 முறை சட்டமன்றத்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

தேர்தலில் போட்டியிடுகின்ற வாய்ப்பையும் வழங்கி, அவற்றில் 4 முறை இந்த மன்றத்திற்கு வருவதற்குத் தேர்வு செய்யப்பட்டு, அவற்றில் 2 முறை அமைச்சராக பொறுப்பையும் தந்தவர் என்பதை மீண்டும் இங்கு நான் பகிர்ந்துகொள்கிறேன்.

ஜனநாயகத்திற்கு 4 தூண்கள். சட்டமன்றம், நீதிமன்றம், நிருவாகம், பத்திரிகை. எனவே, ஜனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகைக்குத் தொடர்புடைய துறைக்கு அமைச்சராகப் பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். செய்தித் துறை அமைச்சர் என்கிறவகையில் மானியக் கோரிக்கைகளின்மீது பதிலளிக்க வருகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு தளபதி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் முன்பே, 4–5–2021 அன்று, பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்தார். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரையின்படி, சென்னையில் 14–6–2021 மற்றும் 25–6–2021 ஆகிய நாட்களில், பல பத்திரிகையாளர்களின் சங்க நிருவாகிகளைச் சந்தித்து உரையாடி, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்திருக்கிறோம். மேலும், திரைப்படத் தயாரிப்பாளர் சங்க நிருவாகிகள் மற்றும் தியேட்டர் உரிமையாளர்கள் சங்க நிருவாகிகள் ஆகியோருடன் கலந்து பேசி, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்திருக்கிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் கொரோனா நிவாரண நிதியை ரூ.3,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்தார்கள். அந்தவகையிலே, பத்திரிகையாளர்களுக்கு ஏறத்தாழ ரூ.2,52,00,000/– நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், பல நபர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் விரைவில் நிவாரணம் வழங்கப்படும். கொரோனா தொற்று நோயால் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்த ரூ.5,00,000/– நிதியை, ரூ.10,00,000/– ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதுவும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல கடந்த 6–7–2021 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தாருக்குத் தடுப்பூசி போடும் முகாமை நடத்தச் சொல்லி

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

ஆணையிட்டார்கள். அதுவும் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் பத்திரிகையாளர்களைப் பழிவாங்கும் நோக்கிலே போடப்பட்டிருந்த 90 அவதூறு வழக்குகளைத் திரும்பப் பெற கடந்த 29–7–2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதுவும் பத்திரிகையாளர்களால் பாராட்டப்பட்டது. சமூக ஊடகங்கள் என்கிறவகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள், திட்டங்கள், சாதனைகள் மற்றும் அரசின் விழிப்புணர்வு செய்திகளைப் பொது மக்கள் எளிதில் அறிந்து, பயன்பெறுகின்ற வகையில், 7–5–2021–ல் சமூக ஊடகங்களான Twitter, முகநூல் ஆகியவற்றிலும், 24–6–2021 முதல் Instagram–லும், 30–6–2021 முதல் YouTube–லும் வெளியிடப்பட்டு வருகின்றன. பல்வேறு நிகழ்வுகளை இந்தத் துறை இன்றைக்கு செய்து வருகிறது. மேலும், கடந்த காலங்களிலிருந்து செய்திப் பிரிவு என்கின்ற வகையிலே பல்வேறு திட்டங்கள் குறித்த விவரங்களை மக்களுக்கு எடுத்துச் செல்கின்ற வகையிலும், புகைப்பட பிரிவு என்கிற வகையிலும், மேற்கோள் பிரிவு என்கிற வகையிலும், அனைத்து நாளிதழ்களிலும் பல்வேறு செய்திகளை வெளியிட்டு வருகிறோம்.

அதேபோல நினைவகங்கள். ஏறத்தாழ 74 நினைவகங்கள், 4 அரங்குகள், 6 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுச் சின்னம் என அவையெல்லாம் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அரசு விழாக்கள் நடைபெற்றால், செய்தித் துறையினுடைய அலுவலர்கள் இல்லாமல் இன்றைக்கு இல்லை என்கிற வகையிலே, அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விழாக்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல அரசினுடைய திட்டங்களை கள விளம்பரங்கள் என்கிற வகையிலே, மக்களுக்கு எடுத்துச் சொல்கிற அலுவலர்களாக செய்தித் துறையினுடைய அலுவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதேபோல செய்திகளை விளம்பரங்களாகவும் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு: தமிழ்நாடு திரைப்படப் பிரிவு 1968 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அரசின் நலத் திட்ட உதவிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லும் சிறந்ததொரு பாலமாகச் செயல்பட்டு வருகிறது. அதேபோல பொருட்காட்சி என்கிற வகையிலே, அரசினுடைய திட்டங்களை ஆங்காங்கே ஒன்றிய அளவிலே, மாவட்ட அளவிலே மக்களுக்கு எடுத்துச் சொல்கிற அமைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

[திரு. மு.பெ. சாமிநாதன்] [*2021 செப்டம்பர் 7*

சென்னை, மாநில செய்தி நிலையம்: கலைவாணர் அரங்கம் என்று சொல்கிறபோதுதான் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. தற்போதைய கலைவாணர் அரங்கத்திற்கு முன்பாக, பழைய கலைவாணர் அரங்கத்தை நம்முடைய ஐயா, கலைஞர் அவர்கள்தான் புதுப்பித்து, அதற்குப் பெயரிட்டு, அதைத் திறந்து வைத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவூட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தலைவர், ஐயா கலைஞர் அவர்கள் கட்டினார்கள் என்பதற்காகச் சட்டமன்றத்தை மாற்றினார்கள். ஆனால், காலச் சக்கரத்தில் மீண்டும் ஐயா கலைஞர் அவர்களால் பெயரிட்டு வழங்கப்பட்ட கலைவாணர் அரங்கிலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழரசு என்கிற பத்திரிகை அரசின் சார்பில் மாதம் ஒருமுறை வெளிவந்து கொண்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. அதேபோல தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம். இந்நிறுவனம் திரைப்படம் தயாரிப்பது, தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்கள் மற்றும் கலையுணர்வுகளைப் பயிற்றுவிக்கும் முதன்மை நிறுவனமாக விளங்கி வருகிறது. பலதரப்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பத் தொழில் பாடங்களை மாணவர்களுக்கு கற்றுத் தருவதே இந்நிறுவனத்தின் முக்கிய இலக்காக அமைந்துள்ளது.

திரைப்பட video மற்றும் கம்பிவட தொலைக்காட்சி இணைப்பு: தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்று. மேலும், இந்தியாவில் அதிக அளவிலே திரைப்படங்களை உருவாக்கும் மாநிலங்களில் தமிழ்நாட்டில் உள்ள திரைப்படத் துறையும் ஒன்றாகும். அரசுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற துறைகளில் ஒன்றாகத் திரைப்படத் தொழில் விளங்கி வருகிறது. திரையரங்குகளில் படம் பார்ப்பது, பெரும்பான்மையான மக்களின் முக்கியமானதொரு பொழுதுபோக்கு அம்சமாக நமது மாநிலத்தில் இருந்து வருகிறது. எனவே, திரைப்படத் துறையின் பல்வேறுவிதமான வளர்ச்சியை ஊக்குவிக்கும்வகையில், அரசு பல்வேறு சலுகைகள் மற்றும் மானியம் வழங்கி வருகிறது.

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

திரைப்படத் துறையின் நல வாரியம். அகில இந்திய திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில், முன்னாள் முதல்வர் நம்முடைய ஐயா, கலைஞர் அவர்கள் 9–10–2009 அன்று உரையாற்றியபொழுது, "தொழிலாளர் சமூகத்தின் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் அரசின் சார்பில், பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்கள்மூலம் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன" என்று சொன்னதை இந்த நேரத்திலே நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, தமிழ் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலைகளில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலை உலகத்தினரின் நலன்களுக்காக தனி நல வாரியம் அமைத்திட வேண்டுமென்று தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும், தமிழ் திரையுலகத்தினரின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாடு அரசு சின்னத் திரையினருக்கும் சேர்த்து திரைப்படத் துறையினருக்கான நல வாரியம் ஒன்று புதிதாக உருவாக்கப்படும் என்று அறிவித்தது. அதுவும் செயல்பட்டு வருகின்றது.

முற்பகல் 11–00

திரைப்பட விருதுகள். தமிழ்நாடு அரசாங்கத்தால் 1968 ஆம் ஆண்டு முதல், சமுதாயச் சிந்தனைகள் மற்றும் மனித நல்லுறவுகளைப் பிரதிபலிக்கும் சிறந்த கலைப் படைப்புகளுடன்கூடிய தரமான திரைப்படங்களைத் தயாரிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசு திரைப்பட மானியம். சமூகப் பொறுப்பும், சமுதாய விழிப்புணர்வும் மிக்க கருத்துகளைத் தேர்வு செய்து, சிறிய முதலீடுகளில் தமிழ் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாகக் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும், இந்தத் திட்டத்தின் வாயிலாக 7 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

சின்னத் திரை விருதுகள். தமிழ்நாடு அரசின் சார்பில் மக்களின் தினசரி வாழ்க்கையில் மிகப் பெரும் பங்கு வகித்து வரும், சின்னத் திரையில் ஒளிபரப்பாகி வரும் நெடுந்தொடர்கள் மற்றும் குறுந்தொடர்களில் பங்கேற்று நடித்து வரும் நடிகர், நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு சின்னத் திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோல் எழுதுபொருள், அச்சுத் துறை 1831 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அதாவது சுமார் 189 ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்டதுதான் இந்த அச்சுத் துறை. 8 அரசு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு மைய அச்சகம் சென்னையிலும், கிளை அச்சகங்கள் சென்னையில் ஒன்றும், விருத்தாசலம், சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய கிளை வளாகத்தில், மதுரை கோட்டூர்புதூரில், கோபுதூரில் செயல்பட்டு வருகின்றன. மொத்த பணியிடங்கள்— இதில் பணிபுரியக்கூடிய ஊழியர்கள் 4,870. தற்போது பணிபுரியும் மொத்தப் பணியாளர்கள் 1,630; காலி பணியிடங்கள் 3,240, இதில் மாற்றுத் திறனாளிகள் 244 பேர். இதில் அரசினுடைய ஒதுக்கீடு 4 சதவிகிதம்தான். ஆனால், இந்தத் துறையில் ஏறத்தாழ 15 சதவிகிதம் மாற்றுத் திறனாளிகள் பணிபுரிந்து வருகிறார்கள். 2006 ஆம் ஆண்டு 333 புதிய இடங்களைத் தோற்றுவித்தது அன்றைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. 2008–ல் அரசு அச்சகம் நவீனமயமாக்குதல் தொடங்கப்பட்டது.

நவீன இயந்திரங்கள்மூலம் விரைவான சேவை. மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலகம், நீதிமன்றங்கள், தமிழ்நாடு லோக் ஆயுக்தா, அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாநில தேர்தல் ஆணையம் உள்ளிட்ட மாநிலம் முழுவதுமுள்ள 3,954 அரசு அலுவலகங்களுக்குத் தேவையான காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவம் மற்றும் குடும்ப நலப் பணிகள் துறை உள்ளிட்ட 67 அலுவலகங்களுக்குக் கட்டணத்தின் அடிப்படையில் எழுதுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மனித வாழ்வில் கருவறை முதல் கல்லறை வரையிலான நிகழ்வுகளுக்குப் பிறப்பு, இறப்பு சம்பந்தமான படிவங்கள், சாதிச் சான்றிதழ்கள், மருத்துவமனையின் புற நோயாளிகளின் சீட்டுகள், காவல் நிலையங்களின் முதல் தகவல் அறிக்கை படிவங்கள், நாடாளுமன்றத்

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

தேர்தல்கள், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் ஆகியவற்றுக்குத் தேவையான படிவங்கள், வாக்கு சாவடிகளுக்குத் தேவையான எழுதுபொருட்கள் ஆகியவை கொள்முதல் செய்து, வழங்கப்பட்டு வருகின்றன. இப்படி பல்வேறு வகைகளில் இத்துறை இன்றைக்குச் சாதனை படைத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றைக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அவையெல்லாம், நிச்சயமாக, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும். அதேநேரத்தில் நான் இங்கே தரக்கூடிய அறிவிப்புகள் மூலமாக அவர்கள் ஓரளவு அதில் திருப்தி அடைவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதேபோல வெட்டுத் தீர்மானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்து பார்த்து அவற்றைக் கவனத்தில் வைத்திருக்கிறோம். முடிந்த அளவு இங்கே அறிவிப்புகளாக இடம் பெறப்போகின்றன. அந்த வகையில், இன்றைக்குத் துறையின் சார்பில் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகிகள், மொழிப்போர்த் தியாகிகள், தலைசிறந்த இலக்கியப் படைப்பாளிகள், சமூக நீதிக்காகப் போராடியவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர், திராவிட இயக்க முன்னோடிகள் ஆகியோரைப் போற்றும் வகையில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் திருவுருவச் சிலைகள் நிறுவப்படும்

1. தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்குச் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் பொது மக்கள், இளைஞர்கள், மாணவர்கள் என அனைவரும் அவர் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ளும் வண்ணம் ஒலி–ஒளி காட்சிகள், light and sound show ஏற்படுத்தப்படும்.

2. தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய் போரிட்ட சிவகங்கைச்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்குச் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குக் கடலூரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

4. மொழிப்போரில் தேக்குமரத் தேகத்தைத் தீக்கிரையாக்கிக் கொண்ட, இந்தித் திணிப்பினை எதிர்த்து முதன் முதலில் உயிர்த்தியாகம் செய்த மொழிப்போர்த் தியாகி கீழபழுவூர் சின்னசாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டம், கீழபழுவூரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

5. இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

முற்பகல் 11–05

6. இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் பிறந்த நாள் ஏழு ஐந்து என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதே ஏழு ஐந்தில்தான் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அவர் இயற்றிய நாட்டுப்பண் பாடலோடு முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்டார் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு சென்னை இராணி மேரி கல்லூரியில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

7. திராவிட இயக்கத் தளகர்த்தர்களில் முன்னோடியாகவும், தலைசிறந்த இலக்கியவாதியும், முன்னாள் நிதியமைச்சருமான நடமாடும் பல்கலைக்கழகம், மறைந்த நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குச் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

8. எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்க மற்றும் திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி, பெண் சமூகச் சீர்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

9. இந்தியாவின் முதல் பெண் சட்டப் பேரவை உறுப்பினர், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர், தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குப் புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பல்வேறு இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், புதினங்கள் மற்றும் சிறுகதைகள் ஆகியவற்றைத் தமிழில் படைத்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய பன்முக ஆற்றல்கொண்ட தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கு ராணிப்பேட்டை மாவட்டத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும்.

மேற்சொன்ன தலைவர்களுக்குத் திருவுருவச் சிலைகள் நிறுவ ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. இந்தியத் திருநாட்டின் 75–வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்கள் மேம்படுத்துதல்

*75–*வது சுதந்திர தின விழாவையொட்டி பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் ஒலி, ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூரும் வகையில் நினைவு மண்டபங்களைப் புதுப்பிக்கவும் பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக் கண்காட்சி மற்றும் ஒலி, ஒளிக் காட்சி போன்றவை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

3. சென்னை காந்தி மண்டப வளாகத்தில் உள்ள தியாகச்சீலர்களின் நினைவு மண்டபங்கள் மேம்படுத்தப்படும்

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தியாகச்சீலர்களை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபம்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

மற்றும் அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவு மண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவு மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி எட்டு இலட்சத்து எழுபதாயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலையும், அரங்கமும் அமைக்கப்படும்

வீரபாண்டிய கட்டபொம்மனை நயவஞ்சகமாகத் தூக்கிலிட்ட ஆங்கிலேயருக்குப் பாடம் புகட்டும் வகையில் தஞ்சையிலிருந்து திருப்பூர் மாவட்டம், தளிக்கு அனுப்பப்பட்ட தூதுவர்களின் தலைவர் ஆண்ட்ரூ கேதிஷ் என்ற ஆங்கிலேயரைத் தூக்கிலிட்ட சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்ப நாயக்கர் அவர்களது நினைவைப்போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையிலும் திருப்பூர் மாவட்டத்தில் அன்னாருக்குத் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. பொள்ளாச்சியில் உள்ள நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் அவர்களின் நினைவாக "சி. சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்படும்

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம் உருவாக முக்கியக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஆழியாறு அணையின் பூங்காவில் நினைவு மண்டபம் மற்றும் மார்பளவுச் சிலை அமைக்கும் பணிகள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இது பி.ஏ.பி. திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவு மண்டபமாக மாற்றி அமைக்கப்படும்.

மேலும், பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய அரசின் மறைந்த முன்னாள் அமைச்சர் அவர்களின் நினைவாக "சி. சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்படும்.

இவ்வளாகத்தில், விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக, ரூபாய் நான்கு கோடி மதிப்பீட்டில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கு கட்டப்படும். இவ்வரங்கத்திற்கு "வி.கே. பழனிசாமி அரங்கம்" எனப் பெயர் சூட்டப்படும்.

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

இம்மண்டபத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டப் பணிகள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்படும். மேல்தளத்தில் அமைக்கப்படும் அரங்கத்திற்கு "பொள்ளாச்சி நா. மகாலிங்கம்" அவர்களின் பெயர் சூட்டப்படும்.

இவ்வளாகத்தில், 1) வி.கே. பழனிசாமி கவுண்டர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், 2) முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், 3) தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரைப் பெருமைப்படுத்துகின்ற வகையில் அன்னார்களது முழுத் திருவுருவச் சிலைகள் அமைக்க ரூபாய் முப்பது இலட்சம் என ஆக மொத்தம் ரூபாய் நான்கு கோடியே முப்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இன்றைய இளைய தலைமுறையினர் நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணரும்பொருட்டு, பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் துவக்கிவைத்த நாளான 7–10–1961 ஆம் நாளை "பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்ட தினம்" என அறிவித்து, ஆண்டுதோறும் இந்நாளில் அன்னார்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனி தலைப்புச் செய்திகளை மட்டும் படித்தால் போதும். அதுதானே முறை.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: 6. சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்குச் சென்னையில் முழுத் திருவுருவச் சிலையும், நாமக்கல் நகரில் அரங்கமும் அமைக்கப்படும்

தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்குச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்குச் சென்னையில் முழுத் திருவுருவச் சிலை அமைக்க ரூபாய் பத்து இலட்சம் மற்றும் நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கம் அமைக்க ரூபாய் இரண்டு

[திரு. மு.பெ. சாமிநாதன்] [*2021 செப்டம்பர் 7*

கோடியே ஐம்பது இலட்சம் என ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

முற்பகல் 11–10

7. கீழ்பவானி பாசனத் திட்டம் உருவாகக் காரணமாக இருந்த உத்தமத் தியாகி திரு. ஈஸ்வரன் அவர்களுக்குத் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்படும்

கொங்கு மண்டலத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் பாசனம்பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் அமைய முக்கியக் காரணகர்த்தாவாக இருந்து, ஈரோடு தொகுதியில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சுமார் பதினோறு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த உத்தமத் தியாகி ஐயா, திரு. ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினரும் அவர் செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையிலும், ஈரோடு மாவட்டத்தில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. முன்னாள் அமைச்சர், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தலைவர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் அரங்கம் அமைக்கப்படும்

முன்னாள் அமைச்சரும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றியவருமான திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டத்தில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைப்பதற்கு ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. பத்திரிகையாளர்கள் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்

தமிழ்நாட்டில் முதன்முறையாக, உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக

2021 செப்டம்பர் 7] *[திரு. மு.பெ. சாமிநாதன்]*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துப் பெருமை சேர்த்துள்ளார்கள். அதனடிப்படையில், உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு, நல வாரிய உதவிதொகைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் 'பத்திரிகையாளர்கள் நல வாரியம்' அமைக்கப்படும்.

10. பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி உயர்த்தப்படும்

பத்திரிகைத் துறையில் பணியாற்றும் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழைதிருத்துவோர், பணிக்காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தற்பொழுது குடும்ப உதவி நிதியாக அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கேற்ப ரூபாய் மூன்று இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குடும்ப உதவி நிதி, ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு, இனிமேல் தலைப்பு செய்தியாக வாசித்தால் நல்லது. இன்றைக்கு இரண்டு துறைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: அறிவிப்புகள் குறைவாக இருக்கின்றன. சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைப்பை மட்டும் படியுங்கள். நம்பரையும் சொல்லி, தலைப்பையும் சொல்லுங்கள், போதும். எல்லோரும் understand செய்துவிடுவார்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: 11. பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சிகள்

பத்திரிகையாளர்கள் தங்களின் துறை சார்ந்த தொழிற் தகுதியை மேம்படுத்திக்கொள்வதற்கும் திறன்மேம்பாட்டை அதிகரிக்கவும், மொழித்திறன் மற்றும் நவீனத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கவும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும்.

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

12. இளம் பத்திரிகையாளர்கள் உயர் கல்வி படிக்க அரசு நிதியுதவி

இளம் பத்திரிகையாளர்கள் ஊடகத் துறையில் சிறந்து விளங்கவும், அதன் நுணுக்கங்களை முழுமையாக அறிந்து கொள்ளவும், அவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த இளம் பத்திரிகையாளர்களைத் தெரிவுசெய்து, இந்திய அளவில் புகழ்மிக்க இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மாஸ் கம்யூனிகேஷன்ஸ் (IIMC), ஏசியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிசம் (ACJ) போன்ற பத்திரிகை சார்ந்த கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி படிக்கவும், பயிற்சி பெறவும் நிதியுதவி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Good.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: 13 இது முக்கியமான அறிவிப்பு. முக்கியத்திலும் முக்கியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை முழுவதுமாகப் படித்துவிடுங்கள், அவ்வளவுதானே!

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: 13. சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது"

சாலை வாரவிழாவின் பத்தாவது ஆண்டுவிழாவில் பேசிய கலைஞர், 'என் செங்கோலை வேண்டுமென்றால் பறித்துக்கொள்ள முடியும். ஆனால், ஒருபோதும் என் எழுதுகோலை பறித்துக்கொள்ள முடியாது' என்று குறிப்பிட்டார். ஐயா கலைஞர் அவர்கள் இந்தியத் திருநாட்டின் அரை நூற்றாண்டின் அரசியலை தன் பேனா முனையில் வைத்திருந்தவர். கலைஞரின் எழுதுகோல் தமிழர் மனங்களின் உழுதுகோல். தமிழரின் கண்ணீர் கண்டு அழுத கோல். தமிழரின் நெஞ்சில் தொழுத கோல். எனவே, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழியலாளருக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் எழுதுகோல் விருது' மற்றும் ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14. அரசு நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்களை டிஜிட்டல் முறையில் பாதுகாக்கவும், தற்பொழுது எடுக்கப்படும் புகைப்படங்களை ஆவணப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்

தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் எடுக்கப்பட்டு, புகைப்படப் பிரிவில்

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

பாதுகாக்கப்பட்டுவரும் கறுப்பு வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்பட நெகடிவ் சுருள்களை டிஜிட்டல் முறையில் மாற்றியமைத்திட ரூபாய் இருபத்தைந்து இலட்சமும், மேலும், தற்போது எடுக்கப்படும் புகைப்படங்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து ஆவணப்படுத்துவதற்காகக் கணினி சர்வர் மற்றும் அதற்கான துணை உபகரணங்கள் வாங்குவதற்கும் தேவையான பராமரிப்புப் பணிகளை ஒப்பந்த முறையில் எடுத்துக்கொள்வதற்கும் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் என மொத்தம் ரூபாய் ஐம்பது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

15. அரசின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களைப் பொதுமக்கள் அறிந்து பயன்பெற்றிடும் வகையில் சமூக ஊடகப் பிரிவு என்ற தனிப் பிரிவு உருவாக்கப்படும். அரசின் விளம்பரங்களுக்கு மின் சுவர்கள் உருவாக்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றைக் கீச்சகம் (Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (You Tube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, சமூக ஊடகப் பணிகளை மேற்கொள்வதற்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையில் சமூக ஊடகப் பிரிவு என்ற தனிப் பிரிவு புதியதாக உருவாக்கப்படும்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையக்கூடிய வகையில், பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவற்றில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்.

16. அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தையும் இணையம் வழியாக மேற்கொள்ள மென்பொருள் உருவாக்கவும், பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்

அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வரைகலை விளம்பரங்களை வெளியிட செய்தித் துறைக்கு இணையம் வாயிலாகப் பதிவேற்றம் செய்தல், வெளியிடுதல், ஊடகங்களுக்கு அனுப்பும் பணிகள், கட்டணம்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

நேர்செய்யும் பணிகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இணையம் வாயிலாக மேற்கொள்ளும் வகையில், மென்பொருள் (Software) உருவாக்க, பராமரிக்க, உபகரணங்கள் வாங்க, தொழில்நுட்ப அலுவலருக்கான ஊதியம் வழங்க ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

17. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் அமைத்தல், பராமரிப்புப் பணிகள், பழுதடைந்த கட்டடங்கள் மற்றும் மின்கலன்கள் சீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கூட்ட அரங்கம் அமைத்தல், பயிற்சிப் பிரிவுகளில் பராமரிப்புப் பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல், பெயர்ப்பலகை அமைத்தல் பழமையான, பழுதடைந்த கட்டடங்களைச் சீரமைத்தல், மின்கலன்கள் சீரமைத்தல் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் போன்ற உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி எட்டு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அச்சுத் துறை

1. அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகக் கட்டடங்கள் புனரமைக்கப்படும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பழுதடைந்துள்ள சேலம் அரசு கிளை அச்சகக் கட்டடம், அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சகக் கட்டடம், மதுரை அரசு கிளை அச்சகக் கட்டடம் மற்றும் விருத்தாசலம் அரசு கிளை அச்சகக் கட்டடம் ஆகியவை ரூ.4.55 கோடி மதிப்பில் புனரமைக்கப்படும்.

2. சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு சுமையூர்தி ஒன்று கொள்முதல் செய்யப்படும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை, அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றை

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கும்பொருட்டு ரூ.25.80 இலட்சம் மதிப்பில் சுமையூர்தி ஒன்று கொள்முதல் செய்யப்படும்.

3. சென்னை அரசு மைய அச்சகத்திற்கு காகிதம் சிப்பம் கட்டும் இயந்திரம் (Paper Baling Machine) ஒன்று கொள்முதல் செய்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு மைய அச்சகத்தில் அச்சுப் பணிகளின்போது ஏற்படும் காகிதக் கழிவுகளை ஒழுங்குபடுத்த சிப்பம் கட்டும் இயந்திரம் ஒன்று ரூ.5.00 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

முற்பகல் 11–15

இதுபோன்ற அறிவிப்புகள் இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும் பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. எங்களுடைய காங்கேயம் தொகுதி, 2 சுதந்திர போராட்ட வீரர்கள் பிறந்த தொகுதி. காங்கேயம் தொகுதியில் மேலப்பாளையம் என்ற ஊர்தான் நம்முடைய தியாகி தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த ஊர். அதேபோல் சென்னிமலை, தியாகி கொடி காத்த குமரன் பிறந்த ஊர். இவர்களுக்கெல்லாம் நினைவு மண்டபங்களும், சிலைகளும் அமைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல் நம்முடைய அண்ணன் முத்துசாமி அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதேபோல் சகோதரி திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய வாளுக்கு வேலி அம்பலம் என்கிற சுதந்திரப் போராட்ட வீரருக்கு அங்கே சிலை அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறப்பு மிகுந்த அறிவிப்புகள், இன்றோடு 8 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். இந்த 8 அறிவிப்புகளில், 5 அறிவிப்புகள் செய்தித் துறையினுடைய அறிவிப்புகள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2021 செப்டம்பர் 7

அவர்களே, தினம்தினம் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அறிவிப்புகள் வரும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதேவேளையில், நேற்றைக்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்களும், நம்முடைய ராயபுரம் சட்டமன்ற உறுப்பினரும் தியேட்டர்களுக்கு விதிக்கப்படுகின்ற வரிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி அவையெல்லாம் நிச்சயமாக எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும். பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும்கூட, மறைந்த தீரர் கோபால்சாமி நாயுடு அவர்களுக்கு தபால் தலை வெளியிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் மாண்புமிகு முதல்வர் இன்று காலையில் அனுமதி கொடுத்து, ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு அறிவிப்புகளை இந்தத் துறையின்மூலம் அறிவிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாராளமாக நிதியொதுக்கி ஊக்கப்படுத்தியிருக்கிறார். நெஞ்சம் நிறைந்த நன்றிகளை அவருக்கு நான் உரித்தாக்கிக்கொள்கிறேன். இன்று அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளைப் பார்த்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரளவுக்குத் திருப்தியடைந்திருப்பார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, வெட்டும் இல்லாமல், cut–ம் இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) வெட்டும் இல்லாமல், cut–ம் இல்லாமல் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைமைச் செயலாளர் திரு. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வரின் செயலாளர்கள் திரு. உதயசந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு. உமாநாத், இ.ஆ.ப., அவர்களுக்கும், திரு சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், திருமதி அனு ஜார்ஜ், இ.ஆ.ப., அவர்களுக்கும், நிதித் துறை செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், துறைச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்களுக்கும், இயக்குநர் திரு. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்களுக்கும், ஆணையர் திருமதி சுகந்தி, இ.ஆ.ப., அவர்களுக்கும், கூடுதல் இயக்குநர்

2021 செப்டம்பர் 7] [திரு. மு.பெ. சாமிநாதன்]

திரு. அம்பலவாணன் அவர்களுக்கும், துறைசார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஒரு சிறிய நிறைவுரை செய்தியை தெரிவித்து அமர்கிறேன். தமிழ்நாடு அரசுக்கும், தமிழக மக்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து நாட்டு மக்களிடையே ஒற்றுமையும், நல்லிணக்கமும் ஓங்கி வளர்ந்திடவும், ஏழையெளியோரின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு, சமூக மேம்பாடு கண்டிடவும் செய்தி மக்கள் தொடர்புத் துறை புத்தாக்கத்துடனும், எழுச்சியுடனும் செயல்பட்டு, தமிழகம் தலைநிமிர உழைப்போம், உழைப்போம், உழைப்போம் என உறுதிபூண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மேலும் உறுதுணையாக செய்தி மற்றும் அச்சுத் துறை தொடர்ந்து செயலாற்றும் எனச் சொல்லி, நன்றிகூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தில் ஆதி முதல் பேரறிஞர் அண்ணாவுக்கு அடுத்தபடியாக இருந்தவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். அண்ணாமலை பல்கலைக்கழகத்திலிருந்து அண்ணாவால் கண்டெடுக்கப்பட்டவர். அவருடைய சொற்பொழிவு நடக்காத ஊர் கிடையாது. அவர் பேசாத ஊர் இல்லையென்ற அளவுக்கு இயக்கத்தை ஓங்கி வளர்த்தவர். இன்னும் சொல்லப்போனால், அவருடைய பேச்சைக் கேட்ட பிறகுதான் நானே திமுக–விற்கு வந்தேன். அந்தளவிற்கு எனக்கு பாதிப்பு அதிகம். எனவே, அப்படிப்பட்ட மாபெரும் தலைவர், அண்ணா அவர்களால் 'நடமாடும் பல்கலைக்கழகம்' என அழைக்கப்பட்டவர். அவர் எங்களுடைய கட்சியிலிருந்து பிரிந்து போனாலும், அவருடைய தியாகம், தொண்டு இவை மறக்கக்கூடியவை அல்ல. அதனால்தான் அவர் நூற்றாண்டு விழா வந்தபோது, இன்றைய எதிர்க்கட்சி அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்தபோது, அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுமா, அவருக்கு சிலை அமைக்கப்படுமா என்ற கேள்வியைக் கேளுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே பணித்தார்கள். நானும் எழுந்து, இவ்வளவு பெரிய தியாகி, ஓர் இயக்கத்தினுடைய

[திரு. துரைமுருகன்] [2021 செப்டம்பர் 7

அடுத்த நிலையில் இருந்தவர், அவருடைய நூற்றாண்டு வருகிறது; இந்த நூற்றாண்டில் அவருக்கு சிலை வைக்கப்படுமா என்று கேட்டேன். நடவடிக்கை எடுக்கப்படும் என்றுதான் அன்றைக்கு துணை முதலமைச்சரும், முன்னவருமாக இருந்தவர் சொன்னார். ஆனால், அவர்கள் இருந்தவரையில் எடுக்கவில்லை. ஆனால், அதையும் ஞாபகம் வைத்து, இன்றைக்கு நாவலர் அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குப் பிரியமான சேப்பாக்கம் தொகுதியிலேயே ஓர் இடத்தில் இன்றைக்கு சிலை வைப்பதற்கு அனுமதி கொடுத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாவலரிடத்திலே தனிப்பட்ட பாசம் வைத்திருக்கிற எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 28. (குறுக்கீடு)

6. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் 6–9–2021 அன்று பயன்படுத்திய வார்த்தையை நீக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.

***திரு. ஓ.எஸ். மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் பேசுகிறார்.

திரு. ஓ.எஸ். மணியன்: கோ–ஆப்டெக்ஸ்–ல் ** துணிகளை வாங்கி வைத்து நஷ்டப்படுத்திவிட்டார்களென்று குற்றம் சுமத்தினார். தணிக்கை செய்யப்பட்டிருக்கிற 9 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில், (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அதேபோன்று நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 செப்டம்பர் 7]

திரு. ஓ.எஸ். மணியன்: *ரூ.14.82 கோடி ரூபாய் இலாபம்தானே தவிர, நஷ்டமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் (குறுக்கீடு) உட்காருங்கள். ஓர் உறுப்பினர் பேசுகிறார் அல்லவா? திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள் பேசினார்கள். நேற்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் பதிலுரையில் சொல்லும்போது ** துணியை வாங்கினார்கள் என்ற ஒரு கருத்தைப் பதிவு செய்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை மாற்றி, 'தரமில்லாத துணியை வாங்கினார்கள்' என்று பதிவு செய்துகொள்கிறோம். அதோடு இதை முடித்துக்கொள்வோம். (மேசையைத் தட்டும் ஒலி) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 28, (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் திரு. காந்தி அவர்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அந்தப் பண்பு, நீண்ட அனுபவம் உள்ள உங்களுக்குத் தெரியும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, உட்காருங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அவர் பதிலுரையில் குறிப்பிடுகின்றபோது கோ–ஆப்டெக்ஸில் வாங்குகின்ற துணி ** இருப்பதாகச் சொன்னார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆமாம், ** என்று அந்த வார்த்தை வருகிறது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *** என்றார். இந்த கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வாங்குகின்ற அந்த துணிகளெல்லாம் கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கப்படுகின்ற*

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2021 செப்டம்பர் 7

துணிகள்தான். சங்க உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட துணிகளேயொழிய, மற்றவர்களிடத்தில் வாங்கப்படவில்லை. ஆகவே, அப்படி உறுப்பினர்களிடத்தில் வாங்குகின்ற அந்தத் துணியைக் கொச்சைப்படுத்தி பேசுவது சரியல்ல. ஏனென்றால், அது நெசவாளர்களைக் குற்றம் சுமத்துவதுபோல் தெரிகிறது. ஆகவே, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஒரு சிறந்த நிறுவனம். இப்படிப் பேசுகின்றபோது, மக்களிடத்தில் ஓர் அச்ச உணர்வு ஏற்படும். அங்கே துணி வாங்குகின்றவர்களுக்கு, சேலை வாங்குகின்றவர்களுக்கு இதில் ஏதோ தவறு இருப்பதாக எண்ணுகின்ற நிலை ஏற்படும். ஆகவே, இதைத் திருத்திக் கொள்ள வேண்டும். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் சிறப்பாகச் செயல்படுவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் கொள்முதல் செய்கின்ற எல்லா துணிகளும், கைத்தறி கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களிடமிருந்துதான் பெறப்பட்டன என்பதைத் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நல்ல நிறுவனம்தான். ஆனால், அதில் வாங்கிய துணி தரம் குறைந்த துணி என்றுதான் நம்முடைய மாண்புமிகு திரு. காந்தி அவர்கள் சொன்னார். அதனால், அந்தத் துணி விற்கவில்லை. அவை விற்பனையாகாததால் என்ன செய்தார்கள் என்று தெரியுமா? Advertisement கொடுத்திருக்கிறார்கள். அதற்குமட்டும் எவ்வளவு செலவாகியது என்று சொன்னால், 4 கோடி ரூபாய். அதைத்தான் அவர் சொன்னார். வாங்குகிறபோது யாரிடமிருந்து வாங்குகிறார்கள், என்பதல்ல பிரச்சினை. தரமில்லாத துணிகளை வாங்கிவிட்டார்கள்; வாங்கியவை விற்பனையாகவில்லை, விற்பனையாகாததால், 'வாங்குங்கள்' என்று advertisement

2021 செப்டம்பர் 7] [திரு. துரைமுருகன்]

கொடுத்தார்கள். அதற்கு 4 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். ஆகையால், இதில் ஒன்றும் தவறு இருப்பதுபோன்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், அதை சமாளித்துப் பேசுகிறார்; அது உண்மையல்ல. இவை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட துணிகள். ஆகவே, இவற்றில் நீங்கள் ஒரு தவறான எண்ணத்தைக் கற்பித்தால், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்து துணிகளை வாங்குவதற்கு பொது மக்கள் அச்சப்படுவார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் அவர்கள் நெய்த துணிகளெல்லாம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாகப் பெறப்படுகிறது. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையில்தான் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமே நிறுவப்பட்டது. ஆகவே, தவறுதலாக நீங்கள் இங்கே பேசும்போது, அது வெளியிலே பத்திரிகைகளில் செய்திகளாக வெளியாகும். ஆகவே, இன்றைக்கு நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட அந்தத் துணியை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம்தான் வாங்கி விற்பனை செய்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதுமட்டுமல்ல, கொரோனா வைரஸ் தொற்று காலக்கட்டத்தில் நெசவாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் 340 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இவையெல்லாம் நெசவாளர்களுக்குச் செய்யப்படுகின்ற நன்மை. ஆகவே, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் என்பது ஒரு முக்கிய நிறுவனம். நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் தேங்காமல் விற்பனை செய்வதற்காகத் தொடங்கப்பட்ட நிறுவனம். ஆகவே, இதில் மேலும் மேலும் குற்றம் சுமத்துகின்றபோது, அது பத்திரிகைகளிலே வேறு செய்தியாக வெளிவரும் என்பதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

[2021 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நல்ல நிறுவனம்தான். ஆனால் 'பேரு பெத்த பேரு, தாக நீலு லேது' என்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போன்று, (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றுமில்லை, தவறான இடத்தில் வாங்கியிருக்கிறீர்கள் என்று சொன்னதில் என்ன தவறு? கோ–ஆப்டெக்ஸில், கூட்டுறவு நிறுவனத்திலிருந்து வாங்கினாலே, அது தரமானதாகத்தான் இருக்குமென்றால், அதில் தரம் குறைந்தவை இருக்காதா? ஒரு challenge செய்கிறேன், உங்கள் ஆட்சியைவிட எங்கள் ஆட்சியில் கோ–ஆப்டெக்ஸ் வளமான இலாபத்தை ஈட்டிக் காட்டும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு, மானியக் கோரிக்கை எண் (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறையாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், Co–optex–க்கு Society–ல் இருந்துதான் வாங்குகிறோம் என்று சொல்கிறார். பொதுவாக, இந்தத் துறையின் முன்னாள் அமைச்சர் அவர்களும் இங்கு இருக்கிறார். அங்கு என்ன நடக்கின்றது என்பது முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பது தெரியவில்லை. Co–optex–க்கு Society–ல் இருந்து மட்டும் நாம் வாங்குவதில்லை. வெளியிலிருந்து வாங்கினாலும், அந்த Society பெயரில் போட்டு, வாங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் அதைப் புரிந்துகொள்ளுங்கள். Practical ஆக யாரும் பார்ப்பதில்லை. இதுதான் உண்மையான நிலை. எதற்கு நான் சொல்கிறேனென்றால், 2016–2017–க்கு முன்னர் இலாபம்தான் வந்தது. 2016–2017–ல் 7 கோடி ரூபாய் loss. அதேபோன்று, 2017–2018–ல் 6 கோடி ரூபாய் loss. மொத்தத்தில் 13 கோடி ரூபாய் loss. Audit Report என் கையில் இருக்கிறது. இது Audit Reportதான். அதற்காகத்தான் நான் இப்பொழுது ஒரு team போட்டிருக்கிறேன். Team போட்டு அதை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். அதில்

2021 செப்டம்பர் 7] [திரு. ஆர். காந்தி]

என்ன உண்மை வெளிவருகிறது என்பதை நீங்கள் பாருங்கள். இன்றைக்கு Co–optex–ல் இரண்டு மாதங்களுக்குள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்ல விளக்கம் கொடுத்திருக்கிறீர்கள், போதும்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: அதனால் நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. Co–optex–ஐ நல்ல முறையில் கொண்டு வருவதற்காகத்தான் செய்கிறோம்.

5. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). 6–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.150,87,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 7

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). 6–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.148,72,70,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). 6–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

2021 செப்டம்பர் 7] [*பேரவைத் தலைவர்*]

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,220,11,23,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

(ஈ) கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 18–கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). 6–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(*வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.*)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 7

ரூ.223,95,20,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

(உ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). 6–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.493,91,72,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.28,88,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 7] [பேரவைத் தலைவர்]

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

(ஊ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). 6–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.345,73,71,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

7. விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் நடத்த அனுமதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், இனி யார் நினைத்தாலும் சிலைகள் வைக்க முடியாத அளவிற்கு, நமது முன்னோர்களுடைய ஏராளமான

[திரு. நயினார் நாகேந்திரன்] [2021 செப்டம்பர் 7

சிலைகளை வைப்பதற்கான அறிவிப்புகளை இன்றைக்கு வெளியிட்டு பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், வருகிற 10 ஆம் தேதி, விநாயகர் சதுர்த்தி வரவிருக்கிறது. இந்துக்களின் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானுடைய சிலையை வணங்க வேண்டும்; ஊர்வலங்கள் நடத்துவதற்கு அரசு அனுமதி தர வேண்டும். பாண்டிச்சேரி, மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் இதற்கு அனுமதித்திருக்கிறார்கள். ஆகவே, இந்துக்களின் புனிதப் பண்டிகையாக இருக்கக்கூடிய விநாயகர் சதுர்த்தியின்போது விநாயகப் பெருமானின் சிலையை வழிபாடு செய்வதற்கும், ஊர்வலங்கள் நடத்துவதற்கும் அரசு அனுமதி தர வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், விநாயகர் சதுர்த்தியையொட்டி, அதற்கு அனுமதி தர வேண்டுமென்று ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார். நான் ஒரு விளக்கத்தை அவருக்கு மட்டுமல்ல; இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய அனைவருக்கும்–ஏன், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த, அதிகளவில் மக்கள் கூடுவதைத் தவிர்க்கத் தேவையான கட்டுப்பாடுகளை 30–9–2021 வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்த, ஒன்றிய அரசின் உள் துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றமும் அதைத்தான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

கேரள மாநிலத்திலே, ஓணம் மற்றும் பக்ரீத் பண்டிகை கொண்டாட்டங்களுக்கு, அதிக அளவில் மக்கள் கூடுவதற்கு அனுமதி அளித்த காரணத்தினால்தான், அங்கே கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. தமிழ்நாட்டிலும் இன்றுவரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை முழுமையாகத்

2021 செப்டம்பர் 7] [திரு. மு.க. ஸ்டாலின்]

தடுக்கப்படவில்லை; அங்குமிங்கும் கொஞ்சம் இருக்கிறது. அந்த எண்ணிக்கை ஒரு நாளைக்கு 50 ஏறுகிறது; 50 குறைகிறது. இப்படி ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவேதான், பொது மக்களுடைய பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்திலேகொண்டு, 15–9–2021 வரை அனைத்து சமய விழாக்களைக் கொண்டாட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது விநாயகர் சதுர்த்தி விழாவிற்கும் பொருந்தும்.

பொது இடங்களில் விநாயகர் சதுர்த்தி உள்ளிட்ட சமய விழாக் கொண்டாட்டங்களுக்கு மட்டுமே கட்டுப்பாடுகளே தவிர, தனி நபர்களைப் பொறுத்துவரையில், கொரோனா பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, தங்கள் இல்லங்களில் கொண்டாடலாம் என்று அரசு சார்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் மனதிலே கொண்டுதான் தடை விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, யாரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்.

முற்பகல் 11–35

8. மண்பாண்டத் தொழிலாளர்களுக்குக் கூடுதல் நிவாரணத் தொகை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பு

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு அறிவிப்பையும் நான் இங்கே வெளியிட விரும்புகிறேன். நமது மாநிலத்தில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வரக்கூடிய சுமார் 12 ஆயிரம் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு, மழைக் காலங்களில் தொழில் செய்ய இயலாத நிலையிலே, அவர்களுக்கு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபாய் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுள், சுமார் 3 ஆயிரம் தொழிலாளர்கள் திருவிழாக் காலங்களில் விநாயகர் சிலைகளைச் செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக, பொது இடங்களில் விழாக்களைக் கொண்டாட தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தங்களது தொழிலை மேற்கொள்ள இயலாத நிலையில், அவர்களது வாழ்வாதாரம்கூட பாதிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2021 செப்டம்பர் 7*

இதனையெல்லாம் கருத்திலேகொண்டு, இந்த *3* ஆயிரம் தொழிலாளர்களுக்கு மழைக் கால பாதிப்பு நிவாரணத் தொகைபோக, கூடுதலாக மேலும் *5* ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையாக அளிக்கப்பட்டு, மொத்தம் *10* ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(எ) கோரிக்கை எண் 3– நீதி நிருவாகம்

(ஏ) கோரிக்கை எண் 24– சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஐ) கோரிக்கை எண் 33– சட்டத் துறை

(ஒ) கோரிக்கை எண் 14– எரிசக்தித் துறை

(ஓ) கோரிக்கை எண் 37– மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(எ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *3*–நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.*1,089,50,38,000*/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1049, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2956, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3894, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3999, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜி.கே. மணி] [2021 செப்டம்பர் 7

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1760, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2262, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2851, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2876, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

2021 செப்டம்பர் 7]

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3853, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

***திரு. JMH. அசன் மௌலானா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4267, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4467, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2151, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2182, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2939, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3716, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1432, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.*

2021 செப்டம்பர் 7]

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட சோளிங்கர் நகரில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தை விரைந்து திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2197, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தவர்கோட்டை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2238, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் புதிதாகக் குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2298, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

[*2021 செப்டம்பர் 7*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து ஏழை மக்களும் பயன்பெறும் வகையில் இலவச சட்ட முகாம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2370, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தில் பெண்களுக்கெனத் தனியாகக் கழிப்பறை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2816, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதி, சேத்துப்பட்டு பேரூராட்சியில் புதிய நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2999, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

2021 செப்டம்பர் 7]

திரு. V.P. சுந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூரில் உள்ள நீதிமன்ற வளாகத்தினை அரசு இடத்தில் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3205, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3260, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்து, நீதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4235, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் புதிதாக சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. K. மாரிமுத்து] [2021 செப்டம்பர் 7

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4245, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் மாவட்டம், பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி நீதிமன்றத்துக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4582, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் தொகுதியில் உள்ள ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றத்தின் உள்கட்டமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,089,50,38,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஏ) கோரிக்கை எண் 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,81,57,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1052, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2558, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2955, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

[*2021 செப்டம்பர் 7*

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2124, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2787, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2155, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2913, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

2021 செப்டம்பர் 7]

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2263, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2849, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2878, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.*

[*2021 செப்டம்பர் 7*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3854, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4360, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4513, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

2021 செப்டம்பர் 7] [திரு. செ. ராஜேஷ் குமார்]

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3717*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *1920*, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2239*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரியில் புதிய கிளை சிறைச்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2289*, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

[*2021 செப்டம்பர் 7*

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் இருக்கும் கிளை சிறைச்சாலையைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2337, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சிறைக் கைதிகளுக்கு யோகா வகுப்புகள் மற்றும் உளவியல் வகுப்புகள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2385, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி கிளைச் சிறைச்சாலையை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2660, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணியில் இருந்த கிளைச் சிறைச்சாலையை மீண்டும் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3192, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டியில் புதிய சிறைச்சாலைக் கட்டடம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3234, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் கிளைச் சிறைக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3408, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளை கண்காணிக்க கண்காணிப்புக் கேமரா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.385,40,72,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,81,57,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஐ) கோரிக்கை எண் 33–சட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 33– சட்டத் துறை, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1075, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2954, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3938, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2123, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2154, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2912, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

[*2021 செப்டம்பர் 7*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2264, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2850, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2877, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3855, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4388, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4530, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3718, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2021 செப்டம்பர் 7

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதி, நன்னிலத்தில் இயங்கிவரும் அரசு கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்டப் படிப்பு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1413, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதியில் புதிய சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2189, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2021 செப்டம்பர் 7] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2240, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் புதிய சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2661, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2815, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி] [2021 செப்டம்பர் 7

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3152, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4581, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் தொகுதியில் அரசு சட்டக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஒ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்,

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,266,03,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 977, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

***திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2147, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2288, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1038, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2621, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2953, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1157, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.*

2021 செப்டம்பர் 7]

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2864, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2900, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4323, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஆர். கணேஷ்] [2021 செப்டம்பர் 7

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4496, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2178, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3719, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

2021 செப்டம்பர் 7]

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரி டெல்டா பாசனப் பகுதிகளில் விவசாய மின் இணைப்புப் பெறுவதற்குத் தூர விதிகளில் திருத்தம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 732, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி அன்னவாசல் மின் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 983, மாண்புமிகு உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் தொடர்ந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1007, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் செட்ராப்பட்டி ஊராட்சியில் 230 KV துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1447, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.*

திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதி, செங்கல்நத்தம் பகுதி, குப்பக்கல் என்ற இடத்தில் 230 KV மின் பகிர்மான நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1840, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2233, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின்மாற்றி பழுதானால் அதனை உடனடியாகப் பழுதுநீக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

2021 செப்டம்பர் 7] [திரு. ஆ. அருண்மொழிதேவன்]

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2326, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி, சூளகிரி ஒன்றியங்களில் மின்னழுத்தம் குறைவாகக் காணப்படும் பகுதிகளில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2656, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.*

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணியை தலைமையிடமாகக் கொண்டு திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தை பிரித்து ஒரு புதிய மின் பகிர்மான வட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2680, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

[*2021 செப்டம்பர் 7*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில், கூடுதலாகத் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3235, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி, கம்பூர், சேக்கிபட்டி, கருங்காலக்குடி, தொந்திலிங்கபுரம், கேசம்பட்டி ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3346, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்வதை அரசு ஏற்று நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

2021 செப்டம்பர் 7] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3795, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதி முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைக்கான மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3836, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளச்சேரி தொகுதியில் புதியதாக இரண்டு துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4583, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் அருகில் புதிதாகத் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்] [2021 செப்டம்பர் 7

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4625, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில், அரசு நிலங்களில் வசிக்கும் ஏழை மக்களின் வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,266,03,04,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஓ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 37– மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.163,54,56,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1071, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

2021 செப்டம்பர் 7]

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2556, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2962, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1158, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2863, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2899, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3112, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 4393, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2177, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2285, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2777, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3720, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2234, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது மக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3001, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மதுக்கடைகளில் அரசு நிர்ணயித்த விலைக்கு விற்பனை செய்யவும், அனுமதியின்றி பார்கள் நடத்துவதைத் தவிர்க்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3482, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4236, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "டாஸ்மாக் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4644, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை அப்பழக்கத்திலிருந்து மீட்டெடுக்க வட்டந்தோறும் குடிநோயாளிகள் மறுவாழ்வு மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.163,54,56,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் சட்டத் துறை ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள்*

[திரு. எஸ். ரகுபதி] [*2021 செப்டம்பர் 7*

தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று ஐந்து மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் ஐந்து மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி*

@ 293 முதல் 386 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 387 முதல் 489 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் IV மற்றும் V ஆக அச்சிடப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 7] [பேரவைத் தலைவர்]

வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள். இன்று 7 மாமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசயிருக்கின்றார்கள். முதல் மூன்று உறுப்பினர்களுக்கு 15 நிமிடங்கள் வீதமும், மீதமிருக்கின்ற 4 உறுப்பினர்களுக்கு 10 நிமிடங்கள் வீதமும் நேரம் ஒதுக்கப்படுகின்றது. தயவுசெய்து உறுப்பினர்கள் எல்லோரும் குறித்த நேரத்தில் உங்களுடைய உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இப்போது மணி 11–45 ஆகிவிட்டது. ஆகவே, 1–00 மணிக்குள் இந்த விவாதத்தை முடித்து, நம்முடைய இரண்டு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு நேரம் கொடுக்க ஒத்துழைப்புத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான்காவது முறையாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பை வழங்கிய எங்கள் இதய தெய்வம், குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை இந்த நேரத்தில் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய எதிர்க்கட்சித் தலைவராக, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது மக்களின் முதல்வராக, சாமானிய முதல்வராக இருந்து, சாமானியர்களின் கஷ்டங்களையறிந்து 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) சாமானியரும் பாமர மக்களும் மருத்துவக் கல்லூரியிலே சேரலாம்; மருத்துவம் படிக்கலாம், மருத்துவர் ஆகலாம் என்கின்ற கனவை நனவாக்கிக் கொடுத்தவர்; அதேபோல, தானும் விவசாயி என்ற காரணத்தினால், தஞ்சை மண்டலத்தைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்று அறிவித்து, அங்கே வரவிருக்கின்ற மீத்தேன் போன்ற திட்டங்களையெல்லாம் நிறுத்துவதற்காக விவசாயிகளுடைய கஷ்டத்தை அறிந்து செயலாற்றியிருக்கின்றவர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக வன்னியர்களுக்கு 10.5 சதவிகித இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்த மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அருமை

[திரு. பி. தங்கமணி] [*2021 செப்டம்பர் 7*

அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு நாயகன், கிட்டத்தட்ட இந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனைபேரும் 'புன்னகை மன்னன்' என்று அழைக்கக்கூடிய அண்ணன் திரு. O.P.S. அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை மிகவும் முக்கியமான துறை. விவசாயமாக இருக்கட்டும், தொழிலாக இருக்கட்டும், மக்களுடைய அன்றாட வாழ்க்கையாக இருக்கட்டும், இவை அனைத்திற்கும் மிக முக்கியமானது என்று சொன்னால், அது மின்சாரம்தான். தொழில் வளர்ச்சியாக இருந்தாலும் சரி, விவசாயமாக இருந்தாலும் சரி, வீடுகளுக்குத் தேவையான மின்சாரமாக இருந்தாலும் சரி, இவை அனைத்திற்கும் தடையில்லா மின்சாரத்தை வழங்கினால்தான் அந்த மாநிலம், சிறந்த மாநிலமாக விளங்கும் என்பதற்குக் கடந்த காலம் உதாரணமாக இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது *40* சதவிகித மின்வெட்டும், peak hours–ல் *90* சதவிகித மின்வெட்டும் இருந்தது. *2015* ஆம் ஆண்டு ஜூன் திங்கள் *6* ஆம் நாளன்று, இனி தமிழகத்தில் மின்வெட்டே இல்லை; மின் மிகை மாநிலம் என்ற நிலைமையை உருவாக்கிக் கொடுத்தவர், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மிகை மாநிலம் என்ற அந்த நிலை இன்றையதினம் இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; நீண்டகால கொள்முதலில் நாங்கள் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கிவிட்டதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு மாநிலமும் தன்னுடைய சுய உற்பத்தியில் மாநிலத்தின் மின் தேவையை நிச்சயமாகப் பூர்த்தி செய்ய முடியாது. உங்கள் ஆட்சிக் காலத்திலும் மின்சாரம் வாங்கப்பட்டிருக்கின்றது; எங்கள் ஆட்சிக் காலத்திலும் வாங்கப்பட்டிருக்கின்றது. நான் அதைத் தவறாகச் சொல்லவில்லை.

கடந்த காலத்திலே, *3,330* மெகா வாட் மின்சாரத்தை வாங்குவதற்காக நீண்டகால கொள்முதல் ஒப்பந்தம் போட்டபோது

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

அன்றைக்கு இருந்த நிலைமையை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமிழகத்தில் கிட்டத்தட்ட 10 மணிநேரம், 12 மணிநேரம் என்றிருந்த மின்வெட்டை, எப்படியாவது குறைத்து, தமிழகத்தினுடைய தொழில்கள் வளர வேண்டும்; கிராம மக்களினுடைய பொருளாதாரமாக இருக்கின்ற விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காக நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தத்தில் 2014 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் கையெழுத்திட்டார்கள். அப்படிக் கொண்டு வருகின்றபொழுது, நீண்டகாலக் கொள்முதல் ஒப்பந்தம் இருந்தால் மட்டும்தான் மின் பாதையில் மின்சாரத்தைக் கொண்டு வர மத்திய அரசு முன்னுரிமை கொடுக்கும். அப்படி முன்னுரிமை பெறுவதற்காகவும், நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் அன்றையதினம் அம்மா அவர்கள் நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தம் செய்தார்கள். அண்டை மாநிலமான கேரளாவில் இருந்த காங்கிரஸ் அரசு, தமிழ்நாட்டிற்கு இதை முழுமையாகக் கொடுக்கக் கூடாது என்று வழக்குத் தொடுத்தது. வழக்கு இரண்டாண்டுக் காலம் நடைபெற்று முடிந்து, 2016 ஆம் ஆண்டுதான் முழுமையான மின்சாரம் நமக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. நமக்கு மின்சாரம் வரக்கூடாது என்று அண்டை மாநிலங்களெல்லாம் எவ்வளவு சிரமத்தைக் கொடுத்தன என்பது எல்லோருக்கும் தெரியும். உங்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, எங்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, அவ்வாறு நடைபெற்றிருக்கிறது. நான் யாரையும் தவறாகச் சொல்லவில்லை. ஆக, அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் கஷ்டப்பட்டுத்தான் அதை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட கடந்த பத்தாண்டுக் காலத்தில் 701 துணை மின் நிலையங்களை நாங்கள் அமைத்திருக்கின்றோம். நான்காண்டுக் காலத்தில் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, கிட்டத்தட்ட 60,000 மின்மாற்றிகளை மாற்றியிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரம் மட்டுமல்ல, தேவையான உபகரணங்களையும் வாங்கிக் கொடுத்து, தடையில்லா மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களும் சரி, மரியாதைக்குரிய அண்ணன் அவர்களும் சரி சிறப்பாகப் பணியாற்றினார்கள். அந்த வகையிலே, இப்பொழுது நீங்களும் தொடர் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7 முற்பகல் 11–50

தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் 100 யூனிட் மின்சாரத்தை விலையில்லாமல் கொடுக்க வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்று கிட்டத்தட்ட 2 கோடியே 27 இலட்சம் குடும்பங்கள் பயன் பெறுகின்றன. அதிலும், கிட்டத்தட்ட 77 இலட்சம் பயனாளிகளுக்கு மின் கட்டணமே இல்லை என்ற நிலைமையை உருவாக்கிக் கொடுத்த அரசு அம்மா அவர்களின் அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக் இணைப்பு கொடுங்கள். (குறுக்கீடு) இப்படித்தான் சில நேரங்களில் technical problem வரும். நீங்கள் அடுத்த மைக்கில் பேசுங்கள். (குறுக்கீடு) என் மைக் மட்டும் வேலை செய்கிறது. (சிரிப்பு) இணைப்பு வந்திருக்கும், பாருங்கள். வந்துவிட்டது என்று நினைக்கின்றேன். (குறுக்கீடு) டைம், நீங்கள் கேட்காமலேயே உங்களுக்குக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றோம். மைக் இணைப்பு வந்துவிட்டதா என்று பாருங்கள். (குறுக்கீடு) எலக்ட்ரானிக்ஸ் பொருட்களில் சில நேரங்களில் பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும். மைக் இணைப்பு வந்துவிட்டது, பேசுங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் வேலை செய்யாத இந்த நிமிடத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பி. தங்கமணி: இல்லை, இரண்டு நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக, பொதுமக்கள் புகார் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக, 1912 என்ற அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, பொதுமக்கள் முழுமையாக அந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயனடைந்தார்கள். இன்றையதினம், அதை நீங்கள் மின்னகம் என்று மாற்றியிருக்கிறீர்கள். பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; இல்லையென்று சொல்லவில்லை. அம்மா அவர்கள் அதைக் கொண்டு வந்தார்கள்.

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

அதேபோல, ஒருநாள் மின் இணைப்புத் திட்டம்; கம்பம் போடாமல், அருகாமையில் இருக்கின்ற மின் கம்பத்திலிருந்து வீட்டிற்கு மின் இணைப்பு 24 மணி நேரத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 12–7–2017 அன்று அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) இதுகாறும், கிட்டத்தட்ட 10 இலட்சம் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, LT என்று சொல்லக்கூடிய 112 கி.வா. line என்பதை 7 நாட்களுக்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மின் இணைப்புகள் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களால் ஆணையிடப்பட்டு, அவையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, குறு, சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுத்தார்கள். அதற்குப் பின்னால், நீங்கள் முழுமையாக அனைத்து விவசாயிகளுக்கும் கொடுத்தீர்கள். கடந்த காலத்திலே டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேரம் என்றும், மற்ற மாவட்டங்களில் 9 மணி நேரம் என்றும் மின்சாரம் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒரு விவசாயியாக இருக்கின்ற காரணத்தால், அனைத்து விவசாயிகளுக்கும் மும்முனை மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதற்காக, 1–4–2021 அன்றிலிருந்து அனைத்து விவசாயிகளுக்கும் 24X7 மும்முனை மின்சாரம் கொடுத்த ஆட்சி அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சி என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக நாங்கள் மின்மிகை மாநிலம் என்று சொல்கின்றபோது, எதிர் தரப்பிலிருந்து இது மின் மிகை மாநிலம் இல்லை, பற்றாக்குறை மாநிலம் என்று சொல்கிறார்கள். நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மிகை மாநிலம் என்றால், சொந்தமாக உற்பத்தி செய்து, அந்த உற்பத்தியின் வாயிலாக மின்சாரத்தை அதிகமாகத் தயாரிக்கின்ற சூழ்நிலை எந்த மாநிலத்திலுமே கிடையாது. மின்சாரத்தைத் தயாரிப்பதற்காக ஒரு மின் நிலையம் அமைக்கிறார்கள் என்றால், அவர்கள் நம்மோடு ஒப்பந்தம் போடுகிறார்கள். அவர்களிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதற்காகத்தான் ஒப்பந்தம் போடுகிறோம்.

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7

அதை வைத்துத்தான் அவர்கள் வங்கியில் கடன் பெற்று, அந்த ஆலையையே துவக்குகிறார்கள். அதுபோன்றுதான் நாமும் வாங்கி கொண்டிருக்கின்றோம். அந்தவகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசும்போதுகூட, மின் மிகை மாநிலம் என்று சொன்னால், மின் இணைப்பு கோரி, இன்னும் 4 இலட்சம் விவசாயிகள் காத்திருக்கிறார்கள், அவர்களுக்கு ஏன் மின் இணைப்பு கொடுக்கவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொதுவாக விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், மின் இணைப்பு கொடுப்பதிலே என்ன சிரமம் இருக்கிறது என்று சொன்னால், ஒரு விவசாயிக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு 10 கம்பங்கள் போட வேண்டியிருக்கும்; 20 கம்பங்கள் போட வேண்டியிருக்கும். நிதிநிலைமைக்கு ஏற்பத்தான் கொடுக்க முடியுமே தவிர, மின்சாரம் இல்லாத காரணத்தால், விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, அண்ணன் எடப்பாடியார் அவர்கள், தட்கல் முறையில் மின் இணைப்பு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை. இத்திட்டம் தொடருமா, இல்லையா என்பது பற்றியும் தெரியவில்லை. தட்கல் திட்டம் கொண்டுவந்த காரணத்தினால், அந்தத் திட்டத்தின்மூலம் விண்ணப்பிக்கின்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்க வேண்டும். ஏற்கெனவே காத்திருப்பவர்களின் பட்டியலில், இவர்கள் முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்பு பெறுகிறார்கள். தற்போது, 2021 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர் மின் இணைப்பு பெற வேண்டி நிலுவையில் இருக்கிறார்கள். ஆக, அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்பதற்காகதான் தட்கல் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அது விவசாயிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. எங்காவது ஓரிடத்தில் அந்த தட்கல் திட்டத்திற்கு எதிர்ப்பு இருந்ததா என்பதைத் தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

முற்பகல் 11–55

பணியாட்களைப் பொறுத்தவரையில், 'linemen, gangmen' பணியிடங்கள் குறைவாக இருக்கின்றன. அதற்கான பணிக்கு ஆட்கள் எடுக்க வேண்டுமென்று அண்ணன் அவர்களிடத்திலே நாங்கள் சொன்னவுடன், 'நீங்கள் எடுங்கள்' என்று சொன்னார்கள். ஏற்கெனவே ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கின்றவர்களை எடுக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் வந்தன. ஆனால், நம்முடைய மின்சாரத் துறையில் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அதற்குக் கணக்குக் கிடையாது. நாம் வேலையைத் தனியாருக்குக் கொடுத்துவிடுகின்றோம். அவர்களிடத்திலே அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி பணியாற்றிக் கொண்டிருக்கின்றபோது, அதில் யார் இருப்பார்கள் என்பது நமக்குத் தெரியாத காரணத்தினால், அவர்களுக்காக நாங்கள் exam வைத்தோம். அதேபோல் practical test எல்லாம் நடத்தினோம். Practical test–ல் 92,000 பேர் கலந்துகொண்டார்கள். அவ்வளவு பேருக்கும் test நடத்தப்பட்டது, video coverage எடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் ஒருசில சங்கங்கள் 'நீங்கள் இதுபோன்று test நடத்தக்கூடாது; எங்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும்' என்று போராட்டங்கள் நடத்தின; நீதிமன்றத்திற்குச் சென்றன. கிட்டத்தட்ட 50 video–க்களைப் பார்த்துவிட்டு, நீதிமன்றம் 'தேர்வு நேர்மையாக நடந்திருக்கிறது' என்று சொல்லி, நீங்கள் 'நியமித்துக்கொள்ளுங்கள்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டு, அண்ணன் அவர்களால் 9,700 பேருக்கு அன்றையதினம் ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. இது அரசியலுக்கு அப்பாற்பட்டு, நேர்மையாக நடந்திருக்கிறது. நீங்கள் விசாரித்துக்கொள்ளுங்கள். இன்னும் 5,000 பேர் பணி நியமனம் பெற்றிட ready ஆக இருக்கின்றார்கள். அன்றையதினம் தேர்தல் அறிவிக்கப்பட்ட காரணத்தினால், நாங்கள் இன்னும் 5,000 பேருக்கு வேலை கொடுக்க முடியாமல் போய்விட்டது. அந்த 5,000 பேருக்கு நீங்கள் உடனடியாக வேலை கொடுத்தீர்கள் என்று சொன்னால், இன்னும் பணிகள் வேகமாக நடப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மின்சாரக் கட்டணத்தை Mobile App, online மூலம் செலுத்துதல் திட்டங்களெல்லாம் அனைத்துப் பகுதி மக்களுக்கும்

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7

சென்றடைய வேண்டும் என்று அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆணையிட்டு, அந்தப் பணிகளும் நடந்திருக்கின்றன. வாகனப் பெருக்கத்தின் காரணமாக, மின்சார வாகனக் கொள்கை என்ற ஒரு கொள்கையை அண்ணன் அவர்கள் 2019 ஆம் ஆண்டு வெளியிட்டார்கள். எதிர்காலத்தில் மின்சாரத்தில் இயங்கும் வாகனத்தைத்தான் நாம் பயன்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை வரவிருக்கின்ற காரணத்தினால், அதிக இடங்களிலே வாகனங்களை charge செய்கின்ற ஏற்பாட்டை நீங்கள் செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, யாருக்குமே மின்சாரம் இல்லாமல் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அன்றையதினம், கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் பேசுகின்றபோதுகூட, எங்கள் பகுதியிலே வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். இதற்கு முன்னாலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கூட கடந்த காலத்தில் அந்தக் கோரிக்கையை வைத்தார். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில், பார்க்கின்றபோது, உச்ச நீதிமன்றத்தில் ஒரு தடையாணை இருக்கின்றது. அங்கே sub–station போடமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனால்தான் சூரிய ஒளி மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களும், அண்ணன் எடப்பாடியார் அவர்களும் ஆணையிட்டு, யார் யாருக்குத் தேவையோ, அவர்களுக்கெல்லாம் வனத் துறையினுடைய அனுமதியோடு நாங்கள் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

அதேபோல, மின்சாரத்தைப் பொறுத்தவரையில், 'மின் மிகை மாநிலமாவதற்கு நீங்கள் ஒரு மெகா வாட் யூனிட் மின்சாரத்தைக்கூட உற்பத்தி செய்யவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். இது தொடர் நடவடிக்கை. நாங்கள் இருந்தாலும் சரி; நீங்கள் இருந்தாலும் சரி; நாங்கள் கொண்டுவந்த திட்டம், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் நிறைவேறும். நீங்கள் கொண்டுவந்த திட்டம், எங்கள் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்படும்.

கூடங்குளத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். கூடங்குளம் திட்டத்திற்கு 1988 ஆம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் கழித்துதான் அதற்கான பணியே ஆரம்பிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில், அந்தப் பணிகள் கிட்டத்தட்ட முடிகின்ற தருவாயில், மாண்புமிகு

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் அங்கே பெரிய போராட்டங்கள் நடைபெற்றன. போராட்டம் நடைபெற்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்பதற்காக அன்றையதினம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால், சந்திப்பதற்கு நேரம் கிடைக்காத காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக Cabinet–ஐக்கூட்டி மக்களுடைய அச்சம் தீர்கின்ற வரையில் கூடங்குளம் மின் நிலையத்தை இயக்கக் கூடாது என்று ஆணையிட்டு, அதற்குப் பின்னால் அந்தத் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி, அதனை நிறுத்தி வைத்திருந்தார்கள். அதற்குப் பின்னால் ஒரு committee–ஐ அமைத்து, அந்தக் committee–யினுடைய அறிக்கையைப் பெற்று, அதற்குப் பின்னால் போராடியவர்களையெல்லாம் அழைத்து, கிட்டத்தட்ட 3, 4 ஆண்டுகள் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியில்தான் கூடங்குளம் இருக்கின்றது. அவர்களுக்கும் இதுகுறித்து நன்றாகத் தெரியும் என்று நினைக்கின்றேன். அங்கே, உதயகுமார் அவர்கள் கடலிலே இறங்கி, எவ்வளவு பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்றன என்பதெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றாக நினைவிருக்கும் என்று நினைக்கின்றேன். மாவட்ட ஆட்சியரும், காவல் துறைக் கண்காணிப்பாளரும், ஒரு நூலிழையில் தப்பி வந்தார்கள். அந்தளவுக்குக் கடலிலே இறங்கி பெரிய போராட்டம் நடைபெற்றது.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என் தொகுதி குறித்துக் கூறுவதால், ஒரு வார்த்தை சொல்லிக்கொள்கிறேன். அது மத்திய அரசின் திட்டம். அங்கே யாரும் வன்முறையில் ஈடுபடவில்லை, நீங்கள் சொன்னீர்கள், 'பல்லாயிரம்பேர் நூலிழையில் உயிர் தப்பினார்கள்' என்று. அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை. அப்படிப்பட்ட வழக்கு தேசத் துரோக வழக்குவரையில் போடப்பட்டது. தற்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து வழக்குகளையும் இரத்து செய்துவிட்டார்கள். அதனையும் உங்கள் கவனத்திற்காகச் சொல்கிறேன்.

[*2021 செப்டம்பர் 7*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. அதுபோன்ற சூழ்நிலை இருந்தது என்றுதான் சொன்னேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நானும் தகவலுக்காகத்தான் சொன்னேன்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. அன்றைக்கு இருந்த சூழ்நிலையைச் சொல்கிறேன். அவர்கள் அனைவரும் போராடி, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், மேம்பாட்டுத் திட்டத்தில் 500 கோடி ரூபாய் நிதியை அவர்களுடைய அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஒதுக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு தகவல். அது மத்திய அரசு நிதியைப் பெற்று, கூடங்குளம் அணு உலை நிருவாகத்தின்மூலம் வந்த தொகையே தவிர, மாநில அரசு ஒதுக்கிய நிதி அல்ல.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது சரி, ஆனால் முதலில் வழங்கியது மாநில அரசு. அதற்குப் பிறகு அங்கிருந்து வாங்கிக்கொண்டார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், 10–8–2016 அன்று மாண்புமிகு மரியாதைக்குரிய ரஷ்ய ஜனாதிபதி அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆகியோர் இருந்து அதைத் துவக்கிவைத்தார்கள். அப்பொழுது கடிதம் ஒன்று எழுதினார்கள், அதைத்தான் நான் சொல்ல வருகின்றேன், இந்த அணு மின் நிலையத்தை மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துக் கொண்டிருக்கின்றன. ஆகையால், அணு மின் நிலையத்திற்கு எதிராகப் போராடிய மக்களை நாங்கள் சமாதானம் செய்து, அவர்களுக்குத் தேவையான திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கின்றோம். ஆகையால், இதில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தைத் தமிழகத்திற்குத் தர வேண்டும். மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கக் கூடாது என்று கோரிக்கை வைத்தோம். மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரடியாகச் சந்திக்கின்றபோது, அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். என்னையும் அங்கு அனுப்பி அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆக,*

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

மற்ற மாநிலங்கள் அணு மின் நிலையம் வரக்கூடாது என்று சொல்கின்றன. ஆனால், அதன் மின்சாரம் மட்டும் வேண்டும் என்று கேட்கின்றன. கூடங்குளம் அணு மின் நிலையத்தின் 3–வது 4–வது அலகைத் தற்போது கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அங்கு உற்பத்தியாகின்ற மின்சாரத்தை முழுமையாகத் தமிழகத்திற்கு நாம் பெற்றுத் தந்தோமானால், எதிர்காலத்தில் நம்முடைய தேவை முழுமையாகப் பூர்த்தியாகும். மற்ற மாநிலங்கள் அணு மின் நிலையம் வேண்டாம் என்று சொல்கின்றபோது, இரண்டு ஆட்சிக் காலத்திலும் நாம் மக்களிடத்தில் பேசியிருக்கிறோம். பேசி சமாதானம் செய்து, இந்தத் திட்டத்தைக் கொண்டுவருகின்றபோது, முழுமையான மின்சாரத்தையும் நாம் பெறுவது நமக்குச் சிறப்பாக இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் கேட்டுக்கொள்கிறேன். முதல் மற்றும் இரண்டாவது அலகுகளை மாண்புமிகு அம்மா அவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டுவந்த காரணத்தினால், அதிலிருந்து ஒரு 100 மெகா வாட் மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்காமல் வைத்திருந்தார்கள். அதையும் அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள். இன்றையதினம் கிட்டத்தட்ட, 1,020 மெகா வாட் அளவிற்கு மின்சாரம் கூடங்குளம் அணு மின் நிலையத்திலிருந்து நமக்கு வருகிறது. இதுபோன்ற திட்டங்களெல்லாம் வந்த காரணத்தினால்தான் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தை நம்மால் வழங்க முடிந்தது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நஷ்டத்தைப் பொறுத்தவரையில், CAG அறிக்கையைப் பற்றியெல்லாம், கடந்த காலங்களில் பல விவாதங்களில் வெளியே பேசியிருக்கின்றோம். CAG அறிக்கை பாராட்டினால்தான் ஆச்சரியப்பட வேண்டும். அது உங்கள் ஆட்சிக்காலமாக இருந்தாலும் சரி, எங்கள் ஆட்சிக்காலமாக இருந்தாலும் சரி. அவர்கள் ஒரு அனுமானத்திலேயே சொல்வார்கள். இது இப்படி நடந்திருந்தால், இப்படி இலாபம் வந்திருக்கும் என்று சொல்வார்கள். உதாரணத்திற்கு, கூடங்குளம் அணு உலை திட்டத்திற்கு 1988–ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, 2016 ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது. அதுபோன்று, அணு மின் நிலையம் என்றால் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்களும்கூட, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் சொல்லியிருக்கின்றீர்கள், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் பேசித் தீர்த்து, பணிகளை முடிப்பதற்குக் காலதாமதம் ஆகிவிடுகின்றது. அதனால், அதன்

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7

cost–ம் அதிகமாகிவிடுகின்றது. இதுபோன்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால்தான், நஷ்டம் வருகிறது. இது ஒரு சேவைத் துறை; இது வணிகத் துறை கிடையாது. நாம் மக்களுக்குச் சேவை செய்கின்றோம். கிட்டத்தட்ட 3 கோடி இணைப்புகள் இருக்கின்றன. மக்களுக்குச் சேவை செய்கின்றபோது, போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, மின்சாரத் துறையாக இருந்தாலும் சரி, சேவை மனப்பான்மையோடுதான் நாம் பணியாற்றுகிறோமே தவிர, வணிக மனப்பான்மையோடு நாம் பணியாற்ற முடியாது. அந்தவகையில்தான், இந்தத் துறையும் இயங்குகின்றது. உங்கள் காலத்திலும் நஷ்டம் ஏற்பட்டது; எங்கள் காலத்திலும் நஷ்டம் இருந்தது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மின் கட்டணத்தைப் பற்றி, கடந்த நிதிநிலை அறிக்கையில்கூடப் பேசினார்கள். நான் ஒரே ஒரு சின்ன விஷயத்தை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். Covid நோய்த் தொற்று வரும் என்று யாருக்கும் தெரியாது, உலக நாடுகளில் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வந்தது. நமது தமிழகத்தில் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வந்தது. மார்ச் மாதம் தமிழகத்தில் வந்தவுடன், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள், அன்றையதினம் பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தினார்கள். மின்சாரக் கட்டணம் கட்டமுடியாத காரணத்தினால், அதற்கு முந்தைய மாதக் கட்டணமான, ஜனவரி மாதம் என்ன மின் கட்டணம் இருந்ததோ, அதைக் கட்டலாம் என்று இன்றையதினம் நீங்கள் சொல்வதைப்போல், அன்றையதினம் நாங்களும் சொல்லியிருந்தோம். அவ்வாறு கட்டுவதில்கூட, நீங்களே Meter Reading–ஐ குறித்து சொல்லுங்கள், இல்லையென்றால், mobile–ல் போட்டோ எடுத்து அனுப்புங்கள் என்றெல்லாம் சொல்லியிருந்தோம். 2,27,00,000 மின் இணைப்புகள் இருந்தபோது, சிறு, சிறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன, உங்கள் ஆட்சியிலும் நடைபெற்றிருக்கின்றது, எங்கள் ஆட்சியிலும் நடைபெற்றிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. சிறு, சிறு தவறுகள் நடப்பது இயல்பு. ஆனால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால், 2019 மே மாதம் என்ன கட்டணம் இருந்ததோ, அதைக் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். 2019 மே மாதம் கொரோனா கிடையாது. கோடைக்காலம். மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தியிருப்பார்கள். அதிகமான பயன்பாட்டின்மூலம் அதிக

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

மின் கட்டணம் செலுத்தும் நிலை இருந்தது. நீங்களேகூட கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில், 'கிட்டத்தட்ட நாங்கள் 14 இலட்சம் பேருக்கு தீர்வுக் கண்டிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கின்றீர்கள். நான் அதை குறையாகச் சொல்லவில்லை. ஆனால், இன்னும் அதிகமாகப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதுபோன்ற ஆதாரங்கள் எங்களிடத்தில் அதிக அளவில் இருக்கின்றன. இன்னும் அதிக அளவில் இதுபோன்ற தீர்வுகள் காணப்பட வேண்டியிருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். சேலத்தில் ஒரு காரியத்திற்காக, பெரியவர் ஒருவரின் வீட்டிற்கு நான் சென்றிருந்தபோது, பெரியவருடைய இளவயதுடைய பேரன் இறந்துவிட்டார். அங்கு அனைவரும் அழுதுகொண்டிருந்தார்கள். அந்தப் பெரியவர் என்னைப் பார்த்தவுடன் அழுததோடு மட்டுமல்லாமல், என் கையை பிடித்துக்கொண்டு 'எனக்கு 5 ஆண்டுக் காலமாக, மின் கட்டணமே வந்ததில்லை; இந்த மாதம் மின் கட்டணம் வந்துவிட்டது' என்று அந்தக் கஷ்டநிலையிலும்கூட அவர் என்னிடம் சென்னார். நான் அரசைத் தவறாகச் சொல்லவில்லை, நடந்ததைச் சொன்னேன். Meter Reading எடுப்பதில் mistake இருந்திருக்கலாம். 'அதிகாரிகளிடத்தில் சொல்கிறேன், அதைச் சரிசெய்து தருகிறேன்' என்று நான் அவரிடத்தில் சொன்னேன். இதுபோன்று பல்வேறு நிகழ்வுகள் இருக்கின்றன.

பிற்பகல் 12–05

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோதுகூட, கரூரிலே நடந்த நிகழ்வுகளையெல்லாம் எடுத்துக்காட்டினார்கள். அதேபோல இப்பொழுதும் கரூரிலே நடந்த நிகழ்வுகள் என்னிடம் இருக்கின்றன. சேலம், ஈரோட்டிலே நடைபெற்ற நிகழ்வுகளெல்லாம் இருக்கின்றன. அந்தக் குறைகளையெல்லாம் களைய வேண்டும் என்றுதான் உங்களிடத்திலே கோரிக்கையாக வைக்கின்றேனேயொழிய வேறு ஒன்றும் இல்லை. அதேபோல விவசாயத்தைப் பொறுத்தவரையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாகத்தான் பதில் சொல்லலாம் என்றிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின் கட்டணத்தைப் பற்றிச் சொன்னதனால் பேசுகிறேன். COVID காலத்தில், முந்தைய மாத மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏற்கெனவே இருந்த ஆட்சியில் அனுமதி அளிக்கப்பட்டது என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள், இந்த COVID காலத்தில் மின் கட்டணம் செலுத்துவதற்கு மூன்று விதமான வாய்ப்புகளைக் கொடுத்தார்கள். ஒன்று, 2019 மே மாத கட்டணம், இதில் திருப்திபடாதவர்களுக்கு முந்தைய மாதக் கட்டணம், அதிலும் திருப்திபடாதவர்களுக்கு cellphone–ல் meter reading–ஐ photo எடுத்து அதற்கான கட்டணம் செலுத்துவது. இந்த மூன்று வாய்ப்புகளையும் பயன்படுத்தி, தங்களுடைய மின்சார கட்டணத்தைத் செலுத்தியவர்கள், 14 இலட்சத்து 69 ஆயிரம் பேர்.

இதில் ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 2020 ஜூலை மாதம் 3,023 million unit பயன்படுத்தியிருக்கிறார்கள். அதனுடைய கட்டணம் 789 கோடி ரூபாய். 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மின் நுகர்வு 4,494 million unit. எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்றால், 1,471 million unit உயர்ந்திருக்கிறது. அதாவது, 2020 ஆம் ஆண்டைவிட 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 48 சதவிகிதம் நுகர்வு அதிகமாக இருக்கிறது. ஆனால், கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணம் எவ்வளவு என்றால், வெறும் 80 கோடி ரூபாய் மட்டும்தான். 869 கோடி ரூபாய் மட்டும்தான் வசூலிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது, கூடுதல் கட்டணம் என்று சொன்னால், 10 சதவிகிதம் மட்டும்தான். நுகர்வு 48 சதவிகிதம் அதிகம். வசூல் 10 சதவிகிதம்தான் கூடுதல். அதேபோல, 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 3,025 million unit பயன்படுத்தியிருக்கிறார்கள். கட்டணம் 751 கோடி ரூபாய். 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 4,012 million unit பயன்படுத்தியிருக்கிறார்கள். கட்டணம் 789 கோடி ரூபாய். 2020 ஆம் ஆண்டைவிட 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 987 million unit கூடுதலாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அதாவது 32 சதவிகிதம் கூடுதலாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், கூடுதல் கட்டணம் 38 கோடி ரூபாய் மட்டும்தான். இதில் 3 சதவிகிதம் அளவிற்குத்தான் கூடுதல் கட்டணம் உயர்ந்திருக்கிறது. இதில் இன்னொன்று சொல்ல வேண்டுமென்றால், COVID காலத்தில் additional deposit–கூடுதல் வைப்புத் தொகையை வருடத்திற்கு

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

மாற்றி அமைப்பது இயற்கை. ஆனால், இந்த ஆண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் ஏழை, எளிய மக்கள்மீது அக்கறைகொண்டு "இந்த ஆண்டு கூடுதல் வைப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டாம்" என்று உத்தரவிட்டு, ஏழை மக்களிடமிருந்து கூடுதல் வைப்புத் தொகை 419 கோடி ரூபாய் அளவிற்கு வசூலிக்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு நிமிடங்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். 15 நிமிடங்களில் அதையும் சேர்த்துக்கொள்ளுங்கள். உரையை சீக்கிரம் 15 நிமிடங்களில் முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாகத் தவறு நடந்தது என்று நான் சொல்லவில்லை. ஒரு சில இடங்களில் இதுபோன்று தவறு நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை முடித்தாகிவிட்டது. அடுத்த பொருள் பற்றிப் பேசுங்கள்.

திரு. பி. தங்கமணி: உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்தமுறை பேசுகின்றபோது, 'சமூக வலைதளங்களில் தவறாகப் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்' என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். இயக்குநர் தங்கர்பச்சான் அவர்கள், தவறாக செய்தி வெளியிட்டிருக்கின்றார் என்றும், எங்களுடைய அதிகாரிகள் நேரடியாகச் சென்றார்கள் என்றும், நேரடியாகச் சென்று, அவரிடத்திலே விளக்குகின்றபோது, அவர் மன்னிப்புக் கேட்டார் என்றும் சொன்னார். அடுத்த நாளே, அவர் அறிக்கை விட்டிருக்கின்றார். நான் இதைச் சொல்லக் கூடாது என்றிருந்தேன். அமைச்சர் சொன்னதனால் நான் சொல்ல வேண்டிய சூழ்நிலை. இயக்குநர் தங்கர்பச்சான் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். "என்னிடத்திலே வந்தார்கள். மாதம் ஒரு முறை மின் கட்டணத்தைக் கணக்கு எடுத்தால், இதுபோன்ற பிரச்சினை வராது என்றுதான் அவர்களிடத்திலே சொன்னேன். சென்றுவிட்டு அடுத்த நாள் வந்து, ஒரு paper–ஐக் கொடுத்து photo எடுத்துக் கொண்டு, அமைச்சரிடத்திலே தவறான தகவலைச் சொல்லிவிட்டார்கள்.

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7

நான் மன்னிப்பு கேட்டதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைச் சபையிலே சொல்லியிருக்கின்றார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்" என்று சட்டமன்ற வரலாற்றிலே, சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ஒருவர் வெளியிலிருந்து சொல்கிறார் என்றால், எப்படி தவறான தகவலை கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணத்திற்காக நான் சொல்கின்றேனே தவிர, தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பணியாற்றிய அதிகாரிகள்தான் இப்பொழுதும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திரு. தங்கர்பச்சான் அவர்கள் தன்னுடைய பதிவில், "மின்சார கட்டணக் கொள்ளை" என்று பதிவிட்டிருந்தார்கள். இந்த அரசு பொதுமக்களிடமிருந்து கட்டணக் கொள்ளை செய்வதுபோல சித்தரித்து, பதிவிட்டிருந்தார்கள். உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவருடைய இல்லத்திற்கு அனுப்பி வைத்தோம். அவர்களும் அங்கே போய், ஏறத்தாழ ஒரு மணி நேரத்திற்கும் மேலாகக் காத்திருந்து பார்த்தால், ஒரு வீட்டிற்கு 2 மின் இணைப்புகள் இருக்கின்றன. ஒரே வீட்டிற்கு இரண்டு மின் இணைப்புகள் இருக்கின்றன. அதையும் சரிபார்த்து, கட்டணம் சரியாகத்தான் கணக்கிடப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்த பதிவுகளில் ஏறத்தாழ 250 பதிவுகள் இருக்கிறதென்று சொன்னால், 50 பேர் மின் இணைப்பு எண்ணுடன் பதிவிட்டிருந்தார்கள். அவையும் ஆய்வு செய்யப்பட்டன. மின் இணைப்பு எண் பதிவிடாதவர்களிடம் அவற்றைக் கேட்டுப்பெற்று, மீண்டும் ஆய்வு செய்யப்பட்டதில், ஒரே ஓர் இடத்தில் மட்டும்தான் மீட்டர் பழுதாகியிருந்தது. மற்ற எந்த இடத்திலும் எடுக்கப்பட்ட கணக்கீட்டிற்கும், கணக்கிடப்பட்ட தொகைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எனவே, மின் இணைப்பு எண்ணைக் குறிப்பிட்டு கடிதம் மூலமாகக் கொடுத்தாலும் சரி, அல்லது துறையின் அதிகாரிகளிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தாலும் சரி, உடனடியாக மாண்புமிகு தளபதி அவர்களுடைய அரசு நிச்சயம் அதனைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு, மொத்தத்தில் *26* நிமிடங்கள் ஆகிவிட்டன. அதில் *2* நிமிடங்கள் mike இல்லை. *2* நிமிடங்கள் பதில், இப்போது *2* நிமிடங்கள் பதில். நீங்கள் பேசியது *20* நிமிடங்கள். எனவே நீங்கள், நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் இந்த அரசு பதவியேற்றவுடன், பல இடங்களில் மின் வெட்டு வந்தபோது, கடந்த *9* மாதகாலமாக பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சொன்னார்கள். நான் அமைச்சராக *31–1–2021* வரை இருந்தபோது என்னென்ன பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டன என்பதை அதே அதிகாரிகள்தான் பட்டியலைத் தயாரித்து எங்களிடத்திலும் கொடுத்திருக்கின்றார்கள். நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை. நீங்கள் *19–6–2021* முதல் *28–6–2021* வரை சிறப்பு முகாம்கள் நடத்தி, கிட்டத்தட்ட *2* இலட்சத்து *72* ஆயிரம் மரக்கிளைகளை வெட்டினோம்; மின் கம்பங்களை மாற்றினோம் என்றெல்லாம் சொன்னீர்கள், நான் இல்லையென்று சொல்லவில்லை. இது தொடர் நடவடிக்கை. ஏதோ பத்து நாட்களில் இப்பணிகளை முடித்துவிட்டதுபோலவும், இனிமேல் மின்வெட்டே இல்லை, இனிமேல் விபத்தே நடக்காது என்பதுபோலவும் நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள்.

இரண்டே இரண்டு உதாரணங்களை மட்டும் நான் சொல்கின்றேன். நாகப்பட்டினத்தில் பல இடங்களில் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்கின்றன. அன்றையதினம் லாரி ஒன்று சென்றபோது, மின் கம்பியில் உரசிய காரணத்தினால், அந்தக் கம்பி அறுந்து மின்சாரம் பாய்ந்து இரண்டு பேர் இறந்திருக்கின்றார்கள். இதில் உங்களை நான் குறை சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், *8* இலட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்கு line இருக்கிறது. *8* இலட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்கான மின் கம்பிகளை பத்து நாட்களில் மாற்றுவது என்பது, யாராலும் முடியாத காரியம். மரங்களுக்கிடையே இவை செல்கின்றன. உடனடியாக மாற்றுவது முடியாத காரியம் என்பது உங்களுக்குத் தெரியும்.

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7

வர்தா புயலின் தாக்கத்தால் சென்னை மாநகரத்தில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்திற்கும் மேல் மரங்கள் விழுந்தன. அவற்றை அகற்றி, கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்குள் அரசு மருத்துவமனைகளுக்கும், தலைமைச் செயலகத்திற்கும் மின்சாரம் கொடுத்தோம். விசாகப்பட்டினத்தில் இதுபோன்று ஒரு புயல் தாக்கியபோது, அந்த நகரத்திற்கு மின்சாரம் கொடுக்க கிட்டத்தட்ட 8 நாட்கள் ஆனது. மின்சார வாரிய ஊழியர்கள்தான் வேலை செய்தார்கள். நாம் கூடஇருந்தாலும், பணியாற்றியது அவர்கள்தான். இங்கு இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அன்றையதினம் பேசும்போது, சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சொன்னதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாகப்பட்டினத்தில் கஜா புயல் தாக்கத்தின்போது FCI godown இடிந்து விழுந்தது. ஆனால், அதற்கு பக்கத்தில் இருந்த ஒரு செடிக்குக்கூட ஒன்றும் ஆகவில்லை என்று சொன்னார்கள். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். சட்டமன்ற உறுப்பினர் அன்றையதினம் அங்கே இருந்தாரா, இல்லை, சென்னையில் இருந்தாரா அல்லது தமிழ்நாட்டில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற உறுப்பினர்களைப் பற்றி பேசத் தேவையில்லை. மற்ற உறுப்பினர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. 27 நிமிடங்கள் ஆகிவிட்டன. தயவுசெய்து, நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

திரு. பி. தங்கமணி: இதோ முடித்துவிடுகிறேன். இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. காற்றாலை மின்சாரத்தைப் பொறுத்தவரையில், காற்றாலை மின்சாரம் என்பது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.

திரு. பி. தங்கமணி: மரபு சாரா எரிசக்தியின்மூலம் கிடைக்கின்ற மின்சாரத்தைப் பொறுத்தவரையில், திடீரென்று இயற்கைச் சீற்றத்தின் காரணமாக மின்சார உற்பத்தி நின்று விட்டது என்று சொன்னால், அது அணு மின் நிலையமாக இருந்தாலும் சரி, மற்றவையாக இருந்தாலும் சரி, நாம் மின்சாரத்தை வாங்கித்தான் பயன்படுத்த வேண்டும். எங்கள் ஆட்சியில், நாங்கள் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கியதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். நீங்களும் வாங்கியிருக்கின்றீர்கள்; நான் தவறாகச் சொல்லவில்லை.

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

காலத்திற்கேற்ப, அதன் சூழ்நிலைக்கேற்ப வாங்கித்தான் ஆக வேண்டும். விலை அதிகமாக இருந்தாலும்கூட, உங்கள் காலத்திலும் வாங்கப்பட்டது; எங்கள் காலத்திலும் வாங்கப்பட்டிருக்கின்றது. ஆக, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமேயொழிய, அதற்காக நாங்கள் அதிக விலை கொடுத்து வாங்கிவிட்டோம் என்று சொல்வது சரியாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) 28 நிமிடங்கள் ஆகிவிட்டன. அடுத்த விஷயத்திற்குப் போக முடியாது, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அடுத்ததற்கு போய்விடுகிறேன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். நிலக்கரியைப் பொறுத்தவரையில் தமிழகம்தான் முதல் மாநிலமாக,* e–tender cum reverse auction *முறை என்ற ஒரு திட்டத்தையே முதன்முதலாக 2016 ஆம் ஆண்டு கொண்டு வந்தது. நான் ஆதாரத்தோடு சொல்கின்றேன். அந்தத் திட்டத்தின் வாயிலாக இந்த ஐந்தாண்டுக் காலத்தில், கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் அளவிற்கு* savings *செய்திருக்கின்றோம். மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள்கூட நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டிருந்தார்கள். அதற்கு நாங்கள் பதில் அனுப்பிய பிறகு, அந்தப் பதிலைப் பார்த்துவிட்டு, மத்திய அரசு அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கு வந்து, 'எப்படி* reverse auction *கொண்டு வந்தீர்கள்? மற்ற மாநிலங்களைவிட நீங்கள் குறைவாக வாங்கியுள்ளீர்கள்' என்று கேட்டறிந்து சென்றார்கள். அதற்குப் பிறகு, மின் துறை அமைச்சர்கள் மாநாட்டில், மத்திய மின் துறை அமைச்சர் அவர்களே, 'தமிழ்நாட்டைபோல மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும்' என்று சொல்லியிருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்த அளவில்தான் நாங்கள் செயலாற்றியிருக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரைமணி நேரம் ஆகிவிட்டது. நீங்கள் எல்லா விஷயங்களையும், நிலக்கரி வரைக்கும் பேசி, பதிவு செய்தாகி விட்டது. நன்றி சொல்லி, உங்கள் உரையை முடித்து விடுங்கள்.*

[*2021 செப்டம்பர் 7*

பிற்பகல் 12–15

திரு. பி. தங்கமணி: *இதோ முடித்துவிடுகிறேன். ஆக, இப்போது நிலக்கரியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'தங்கமணி வசமாக மாட்டிக்கொண்டார்' என்று ஒரு வாரப் பத்திரிகையில் பேட்டிக் கொடுத்திருக்கின்றார். நான் திறந்தமனதோடு, மனசாட்சியோடு சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரை, நிலக்கரி கப்பல் மூலமாகவும், இரயில் மூலமாகவும் வருகின்றது; துறைமுகத்தில் இருப்பவர்கள் இதனை* entry *செய்கிறார்கள். இரயிலில் வருவதையும்* entry *செய்கிறார்கள். அதனால், நிலக்கரி காணாமல் போவதற்கு ஒன்றும் வாய்ப்பு கிடையாது. நீங்கள் விசாரியுங்கள்; விசாரித்து, உண்மை என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. வருடத்தில் ஒன்றரைக் கோடி டன் அளவிற்கு நிலக்கரியைக் கையாளுகின்றோம். காலங்காலமாக எந்த ஆண்டுமே* nil stock *வந்ததில்லை. நான் முதன்முதலாக அங்கே சென்று பார்த்தபோது,* book*–கிற்கும் கையிருப்பிற்கும்* variation *இருந்ததைக் கண்டறிந்துதான், இரண்டு* I.A.S. *அதிகாரிகளை முதலில் அனுப்பினேன். அதற்குப் பின், ஒரு குழுவை அமைத்தேன். அதை விசாரித்துக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முடித்துவிடுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *முடித்துவிடுகிறேன். மதுவிலக்கைப் பொறுத்தவரை நீங்கள் கடையைத் திறந்ததை நாங்கள் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கவர்னர் உரைமீதான விவாதத்தில் உரையாற்றியபோது, 'நாங்கள் திறந்தபோது நீங்கள் சொன்னீர்களே!'* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *31 நிமிடங்கள் தந்துள்ளேன். நீங்கள் உரையை முடித்துவிடுங்கள். நன்றி சொல்லி. உரையை முடியுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *என்னவென்று சொல்லிவிடுகிறேன். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இப்போது நாங்கள் அதை சொல்லவில்லை.* Online *வியாபாரம் பரிசீலிக்கப்படும் என்று தற்போது டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் அவர்கள் சொன்னதாக செய்தியில் நான் பார்த்தேன். அப்படி நீங்கள் செய்தீர்கள் என்று சொன்னால், வீட்டில் உள்ள ஆண்மகன்*

2021 செப்டம்பர் 7] [திரு. பி. தங்கமணி]

online–ல் order செய்துவிட்டு வெளியே சென்றுவிடும் நேர்வில், அதனை வீட்டிலுள்ள பெண்மணி வாங்கினார் என்று சொன்னால், அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் தவறாக நினைப்பார்கள். சமூகத்தில் இது ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி வெட்கப்படுபவர்கள் வாங்காமல் இருக்க வேண்டியதுதான். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: முடித்துவிடுகிறேன். நான் கோரிக்கையைத் தான் சொல்லியிருக்கிறேன். இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டாஸ்மாக் கடையைப் பொறுத்தவரை நீங்கள் படிப்படியாகக் குறைப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்கும்போது, 500 கடைகளைக் குறைத்தார்கள். அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 500 கடைகளைக் குறைத்தார்கள். நகராட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட ஒரு பேட்டியில், "மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தாள் பொன் குடமா" என்று சொன்னார்கள். அப்போது யார் மாமியார்? யார் மருமகள்; இப்போது யார் மாமியார்? யார் மருமகள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும். எதுகை மோனையோடு நன்றாகப் பேசிவிட்டீர்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள் (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுங்கள். பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்பு பேசுகையில், புதிய சட்டக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று சொன்னார். மரியாதைக்குரிய அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் நாமக்கல்லில் சட்டக் கல்லூரியினை அறிவித்து, ரூ.80 கோடி நிதியினை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள். 33 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. பி. தங்கமணி: தமிழகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் மின்மிகை மாநிலமாக வைத்திருந்தார்கள். இன்றைக்கு

[திரு. பி. தங்கமணி] [2021 செப்டம்பர் 7

** இருக்கின்ற மாநிலமாக இருக்கின்றதால் அதனை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் ஏற்கெனவே சட்டக் கல்லூரி அறிவிக்கப்பட்டு, இடம் தேர்வு செய்கின்ற பணிகள்தான் நடந்திருக்கின்றன. அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அறிவிக்கப்பட்ட எதையுமே நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு நிறுத்துகின்ற பழக்கம் நிச்சயமாகக் கிடையாது. இது சொன்னபடி நடக்கும் ஆட்சி. எனவே, நாமக்கல்லில் நிச்சயமாக சட்டக் கல்லூரி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் நேரமின்மை காரணமாக பதில் சொல்லும்போது சேர்த்துச் சொல்லுங்கள். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தங்கமணி அவர்கள் மூத்த உறுப்பினர், ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். அவர்கள் சொல்லி பதிவு செய்த கருத்தில் மட்டும் ஒரு திருத்தம் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். சேவை மனப்பான்மையில் நடத்தும் நிறுவனங்களை எல்லாம் நஷ்டத்தில் நடத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதுதான் administrative skill. அதாவது சேவை மனப்பான்மையில் நாம் போக்குவரத்துத் துறை, மின்சாரத் துறை போன்று எத்தனையோ துறைகளை நடத்துகிறோம். அதனால், அவை பாதாளம் அளவிற்கான கடனில் நடைபெற வேண்டும் என்பது தேவையில்லை. ஆகையால் எந்த administrative skill–ஐ வைத்து இதனைச் சரி செய்கிறோம் என்பதை வெள்ளை அறிக்கையில் கொடுத்திருக்கிறோம். அதனால், சேவையில் நடத்தும்போதுகூட சீர்திருத்தி நடத்த முடியும் என்பதை இங்கே பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். இது 16–வது சட்டமன்றம். 13 சட்டமன்றப் பேரவைகளில் உறுப்பினராக, அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, முதலமைச்சராகப் பணியாற்றி, எங்களுக்கெல்லாம் பாடமாக இருந்து, இன்று இந்த அவையிலே படமாக இருந்துகொண்டு எங்களை ஆசீர்வதித்துக்கொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்குமான முதலமைச்சராக, இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற முதலமைச்சராக, இந்த நாட்டில் ஒருவர் முதலமைச்சராக வருவதற்கு முன்பாகவே, மக்கள் அவர்மீது நம்பிக்கை வைத்து, மக்களிடமிருந்து மனுக்களை வாங்கிய பிறகு, முதலமைச்சரான முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுமக்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது அந்த நம்பிக்கையை வைத்த காரணத்தினால்தான், கடலூர் (மேற்கு) மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளையும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கூட்டணிக் கட்சிக்கும் கொடுத்து மகிழ்ந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

பிற்பகல் 12–20

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒற்றைச் செங்கல்லைக் காட்டி, ஒட்டுமொத்த இந்தியாவையும் தன்பக்கம் திருப்பிய எங்கள் கழக இளைஞரணிச் செயலாளர், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வெற்றி பெறச் செய்வதற்காகப் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றி பெறச் செய்த சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், அருமை அண்ணன் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

[திரு. சபா. இராசேந்திரன்] [2021 செப்டம்பர் 7

அவர்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

என்னுடைய வெற்றிக்கு உழைத்திட்ட கடலூர் (மேற்கு) மாவட்டச் செயலாளர், அருமை அண்ணன் மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளுக்கும் மற்றும் என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான், 3–வது முறையாக இந்த மாமன்றத்தில் பணியாற்றுவதற்குக் காரணமாக இருந்து, எனக்கு வெற்றி வாய்ப்பைத் தந்திருக்கின்ற நெய்வேலி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். என்னுடைய தந்தையை வணங்கி, தாய்க்கு நன்றி தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பங்குபெற விரும்புகின்றேன்.

இன்று நடைபெறுகின்ற சட்டம், நீதி நிர்வாகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள், எரிசக்தி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்ற வாய்ப்புத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டுக்கு மட்டுமல்லாது, அண்டை மாநிலங்களுக்கெல்லாம் மின்சாரத்தை வழங்கிக்கொண்டிருக்கின்ற நெய்வேலி நிலக்கரி நிறுவனம், என்னுடைய நெய்வேலி தொகுதியில்தான் இருக்கின்றது. அங்கே மொத்தமாக 4,190 மெகா வாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அதில் தமிழ்நாட்டின் பங்காக நாம் 2,031 மெகா வாட்டை பெற்றுக்கொண்டிருக்கின்றோம்.

மின்சாரம் என்பது இன்றைக்கு நம் அனைவருக்குமே இன்றியமையாத, தவிர்க்கமுடியாத ஒரு விஷயமாக இருந்துகொண்டிருக்கின்றது. விவசாயமாக இருந்தாலும், தனிநபர் பயன்பாடாக இருந்தாலும், தொழிற்சாலைகளாக இருந்தாலும் மின்சாரம் அவசியம் தேவைப்படுகிறது.

2021 செப்டம்பர் 7] [திரு. சபா. இராசேந்திரன்]

சமீப காலங்களில் தொழிற்சாலைகளுக்கும், விவசாயத்திற்கும் அதிகளவில் தேவைப்படுகின்ற மின்சாரத்தைக் கணக்கில் கொண்டுதான் "அடுத்த 10 ஆண்டுகளில் சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் வாயிலாக மாநிலத்தில் 17,980 மெகா வாட் மொத்த மின் உற்பத்தித் திறன் கூடுதலாகச் சேர்க்கப்படும்" என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பக்கம் 42, பத்தி 97–ல் அறிவித்துள்ளார்கள்.

எங்கள் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நாட்டை, நாட்டு மக்களை முன்னேற்றப் பாதையில் எப்படிக் கொண்டு செல்ல வேண்டுமென்று மிகப் பெரிய கனவில் இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொருளாதார வல்லுநர்கள் குழுவுடனான முதல் கூட்டத்தில் பேசுகின்றபோது, "My Government needs to transform Tamil Nadu into the most favoured industrial investment destination in South Eastern Asia" என்று சொல்லியுள்ளார்கள். ஏன் இதைச் சொல்கின்றேன் என்றால், கனவோடு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு துறையிலும் திட்டங்களைத் தீட்டுகின்றபோது, சிறந்த சிந்தனையாளராகச் சிந்தித்து, ஒவ்வொரு திட்டத்தையும் தீட்டுகின்றார்.

மின்சாரத் துறையில் திட்டங்களைத் தீட்டுகின்றபோது மின் நுகர்வோராக, இலவச மின்சாரம் பெறுகின்ற ஏழை விவசாயியாக, தொழிற்சங்க நிர்வாகியாக, தொழில் முனைவோராக, தொழில் அதிபராகச் சிந்தனை செய்து, ஒவ்வொரு திட்டத்தையும் தீட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த 9 மாதங்களில் மின்சாரத் துறையில், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்காக, 234 தொகுதிகளிலும், இப்போது பராமரிப்புப் பணிகள் செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவை ஒரே நேரத்தில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு கிடையாது. நான் இங்கே துறையின் சார்பில் மேசையின்மீது வைக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கின்றபோது, அதிலே, ஒரே நேரத்தில் 234 தொகுதிகளிலும், எடப்பாடியில் ஆரம்பித்து பெண்ணாகரம், திருநெல்வேலி வரை அனைத்துத் தொகுதிகளிலும்

[திரு. சபா. இராசேந்திரன்] [2021 செப்டம்பர் 7

இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பெறுகின்ற வகையிலே, அனைவருமே பயன்பெறுகின்ற வகையிலே, அந்த மின் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12–25

இங்கே முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, 'மின்மிகை மாநிலம் என்று நாங்கள் சொன்னபோது, எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் அதற்கு ஆட்சேபணைத் தெரிவித்தார்கள்' என்று சொன்னார்கள். உண்மையிலேயே இங்கே இந்த மாநிலத்தினுடைய உச்சபட்சத் தேவை 16,846 மெகா வாட் என்று சொன்னால், உற்பத்தி 14,351 மெகா வாட் ஆக இருக்கிறது. பற்றாக்குறை 2,495 மெகா வாட் ஆக இருக்கின்றபோது, எப்படி மின்மிகை மாநிலமென்று சொல்ல முடியும்? இதுதான் நாங்கள் கேட்கிற கேள்வி. அதையேதான் நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர்கூட, அவ்வப்போது இந்த அவையிலே பேசுகின்றபோது பல முறை கேட்டிருக்கிறார். 4½ இலட்சம் விவசாயிகள் மின் இணைப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு மின் இணைப்பைக் கொடுத்து விட்டீர்களா என்று ஒவ்வொரு முறையும் அவர் கேட்டுக் கொண்டேயிருப்பார்.

இதிலே இன்னும் ஒரு தகவல் என்னவென்று சொன்னால், 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்திலே மின்சாரத் துறையை சரியாகக் கையாளாததுபோல எங்கள்மீது மிகப் பெரிய குற்றம் சாட்டப்பட்டது. அது உண்மை அல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 10 ஆண்டுக் காலத்திலே எப்போது பார்த்தாலும் இந்தக் குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஆனால், அதற்குப் பதில் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்பே கொடுக்கவில்லை. இந்தச் சட்டமன்றத்திலே மீண்டும், மீண்டும், "மின் மிகை மாநிலமாக நாங்கள் மாற்றியிருக்கிறோம். ஆனால், கடந்த காலத்திலே மின்வெட்டு மாநிலமாக இருந்தது" என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 2001 முதல் 2006 வரையிலான அவர்கள் ஆட்சிக் காலத்திலே எந்த ஒரு புதிய மின் திட்டமும் கொண்டு வரப்படவில்லை. 300 மெகா வாட் Gas–எரிவாயு மின்சாரத் திட்டத்தை மட்டுமே அவர்களால் கொண்டுவர முடிந்தது. அதிலே, 120 மெகா வாட் மின் உற்பத்தியைக் கொண்டு வந்தார்கள். எனவே, இப்படி அவர்கள் செய்த தவறின் காரணமாகத்தான், 2006 முதல் 2011 வரையிலான எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது என்பதை இந்த நேரத்திலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. சபா. இராசேந்திரன்]

2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பல்வேறு மின் திட்டங்களைக் கொண்டுவந்தார்கள். அதாவது, வட சென்னை அனல் மின் நிலையம் 1,000 மெகா வாட்; மேட்டூர் அனல் மின் நிலையம் 600 மெகா வாட்; NTPL– தூத்துக்குடி 1,000 மெகா வாட்; NTECL வல்லூர் 1,500 மெகா வாட் ஆகிய மின் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இவை மொத்தம் சேர்த்து 4,100 மெகா வாட் ஆகும். அந்த ஒவ்வொரு அனல் மின் நிலையமும் உற்பத்தியைத் துவக்குவதற்கு ஒப்பந்தப்படி குறைந்தபட்சம் 42 மாதங்களாகும்; அதாவது 3½ வருடங்களாகும். ஆனால், practical–ஆகப் பார்த்தோமென்று சொன்னால், 6 வருடங்களிலிருந்து 7 வருடங்கள் கழித்துதான் அவை உற்பத்தியைத் துவங்கும். இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட திட்டங்கள்தான் 2013–2014–ல் உங்களுக்கு உற்பத்தியைக் கொடுத்தன. அதை நீங்கள் பெற்றுக்கொண்டு, மின் மிகை மாநிலம், மின் மிகை மாநிலம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மை அல்ல என்பதற்காகச் சொல்கின்றேன். 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்திலே, நீங்கள் செய்த தவறுகளினால் நாங்கள் பாதிக்கப்பட்டோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகின்ற வகையில் அதைச் சித்தரித்து நீங்கள் சொன்னீர்கள். எனவே, உங்களுடைய அந்த நிலைப்பாடு எடுபடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் கொண்டு வந்த திட்டங்களின்மூலம் கிடைத்த மின்சாரத்தை வைத்துத்தான் 5–6–2015–ல் மின் கட்டுப்பாட்டுக் காலம் உங்களால் விலக்கிக்கொள்ளப்பட்டது. அதேநேரத்திலே, 3,300 மெகா வாட் மின்சாரத்தை வெளிச்சந்தையிலே கொள்முதல் செய்தீர்கள். வெளிச்சந்தையிலே கொள்முதலும் செய்துகொண்டு, இங்கே பற்றாக்குறையும் இருக்கும்போது எப்படி ஒரு மாநிலத்தை மின் மிகை மாநிலம் என்று சொல்ல முடியும்! உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது உண்மைக்குப் புறம்பான மின் மிகை மாநிலம்; உண்மையான மின் மிகை மாநிலம் என்பது இப்போது தலைவர் தளபதி அவர்களுடைய ஆட்சியிலேதான் வரப் போகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சபா. இராசேந்திரன்] [2021 செப்டம்பர் 7 பிற்பகல் 12–30

இன்னும்கூட CAG Report பற்றிச் சொன்னார்கள். நிலக்கரியைப்பற்றி பேசுகின்றபோது, 20–8–2021 அன்று வடசென்னை அனல் மின் நிலையத்திற்குச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அவருடைய குழுவும் ஆய்வு செய்தபோது, 2 இலட்சத்து 38 ஆயிரத்து 437 டன் நிலக்கரி அங்கே குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இங்கே மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் அதுகுறித்து பதில் சொல்கின்றபோது, அதற்கு நேரடியான பதிலை அவர் சொல்லவே இல்லை. 'அங்கே ஒன்றரை கோடி டன் அளவுக்கு நாங்கள் நிலக்கரியைக் கையாள்வோம்; நிலக்கரி இரயிலில் வருகிறது, கப்பலில் வருகிறது' என்று சொன்னாரேயொழிய, அதற்கு நேரடியான பதிலை மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவே இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இங்கே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையைக் கொடுத்த உடனேயே, 'இப்போது இருக்கின்ற அமைச்சர் புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை, முன்பே நான் கண்டுபிடித்துவிட்டேன்' என்று முன்னாள் அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். ஆனால், என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதைப்பற்றி அப்போதும் சொல்லவில்லை; இப்போதும் சொல்லவில்லை. அந்த நடவடிக்கைகளில் யாரைப் பொறுப்பாளி ஆக்கினீர்கள்; யார்மீது responsibility fix செய்தீர்கள்; யார்மீது நடவடிக்கை எடுத்தீர்கள் என்ற தகவலைத் தெரிவிக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். CAG Report 2017–2018, 9–வது ஆண்டறிக்கை பக்கம் 57–லே, 'coal shortage to be written–off' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 203 கோடி ரூபாயை அந்த ஆண்டிலே write off செய்திருக்கிறீர்கள் என்று சொன்னால், ஒவ்வோர் ஆண்டும் இப்படித்தான் write off செய்து கொண்டிருந்திருக்கிறீர்கள். அது உங்களுக்குத் தெரிந்துதானே நடந்திருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் உங்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

கடனைப் பற்றிச் சொல்கின்றபோது, 2011–ல் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியின் முடிவிலே, 23 ஆயிரத்து 422 கோடி ரூபாய்தான் கடனாக இருந்தது. ஆனால், 2021–ல் ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 688 கோடி ரூபாய் மொத்தக் கடனாக இருக்கிறது. அதாவது, புதிய கடன் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து

2021 செப்டம்பர் 7] [திரு. சபா. இராசேந்திரன்]

266 கோடி ரூபாய். ஒரு துறையில் கடனை வாங்குகின்றபோது, அந்தக் கடனை நூறு சதவிகிதம், முழுவதுமாக நீங்கள் பயன்படுத்த வேண்டும் என்று எப்போதுமே எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் சொல்வார்கள். கடந்த காலங்களில், நான் இங்கே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி இருக்கின்றேன். அப்போது முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசுவதைக் கேட்டிருக்கின்றேன். அப்போதுகூட அவர், ரூ.77,000 கோடிதான் நாங்கள் முதலீடு செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பார். எனவே, அதுவும் சரியல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே 'மின்னகம்' என்ற ஓர் அற்புதமான திட்டத்தை நமது தலைவர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதன்மூலம், தமிழகத்தில் இருக்கிற 3 இலட்சத்து 10 ஆயிரம் மின்னிணைப்பாளர்களும் பயன்பெறுகின்ற வகையிலே, திட்டத்தை அவர்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். மின் கட்டணம் தொடர்பான சந்தேகங்கள், புதிய மின் இணைப்புகள் தொடர்பான தகவல்கள், உடைந்த மின் கம்பங்கள், தாழ்வாகச் செல்லும் மின் கம்பிகள், பழுதடைந்த மின் பெட்டிகள், ஆபத்தான நிலையிலுள்ள மின்மாற்றிகள், மின்தடை குறித்த தகவல், குறைந்த மின்னழுத்தம், உயர் மின்னழுத்தம் போன்ற மின் துறை சார்ந்த தகவல்களை, புகார்களை ஒரே இடத்தில் தெரிவிக்க 20–6–2021 அன்று அண்ணா சாலையிலுள்ள, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'மின்னகம்' என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் திறந்து வைத்தார்கள். அதற்கென '9498794987' என்ற பிரத்யேகமான கைபேசி எண்ணையும் அறிமுகப்படுத்தினார்கள். இந்தச் சேவை மையம் 24 மணி நேரமும் செயல்படுகின்றது. இதுவரை, இதில் 3 இலட்சத்து 28 ஆயிரம் புகார் மனுக்கள் பெறப்பட்டு, 93 சதவிகிதம் வரையிலான புகார்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன. உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகள் படிப்பதற்காக இருந்தால், அதைக் கொடுத்தால் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறோம்.

[*2021 செப்டம்பர் 7*

பிற்பகல் 12–35

திரு. சபா. இராசேந்திரன்: நானும் ஒரு விவசாயி என்று சொல்லிக்கொள்கின்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், 2003 ஆம் ஆண்டிலிருந்து காத்திருக்கின்ற நான்கரை இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் கொடுப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுக்காதது வருத்தத்தைத் தரக்கூடிய விஷயம். அதேசமயத்திலே, 2006 முதல் 2011 வரையிலான 5 ஆண்டுகளில் 2,50,000 விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில், உங்கள் ஆட்சிக் காலத்தில் நீங்கள் 1,70,000 பேருக்குத்தான் மின் இணைப்பு வழங்கியிருக்கிறீர்கள். எனவே, விவசாயிகளின் நண்பனாக இருக்கின்ற நமது முதலமைச்சர் அவர்கள், இப்பொழுதுகூட வேளாண் நிதிநிலை அறிக்கையில் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 2021–2022 ஆம் நிதியாண்டில் 10 குதிரைத்திறன் வரையிலான 5,000 பம்புசெட்டுகள் 70 சதவிகித மானியத்தில் நிறுவப்படும் என அறிவித்திருப்பது வரவேற்புக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) மின் துறையின்மூலம் இந்த எண்ணிக்கையை மேலும் கூட்ட முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்று, 6–9–2021 அன்றுகூட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கும், இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்திற்குமிடையே மரபுசாரா எரிசக்திமூலம் 25,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 1,32,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலே கையெழுத்தாகி இருக்கிறது. இந்தத் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வரும்போது, இந்தியாவிலேயே மரபுசாரா எரிசக்தித் துறையிலே தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக இருக்கும். தமிழகத்திலே 22,19,000 விவசாய மின் இணைப்புகள் இருக்கின்றன. இவற்றிற்கு 15,00,000 மில்லியன் யூனிட் மின்சாரம் கொடுக்கப்படுகின்றன. அதற்கு வருடத்திற்கு 11,170 கோடி ரூபாய் செலவாகிறது. இந்த செலவைச் சரிகட்டுகின்ற வகையிலே, எதிர்காலத்தில் சூரிய சக்திமூலம் மின் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்குப் பெரிய திட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த 22,19,000 மின் இணைப்புகளையும் சோலார் மின் இணைப்புகளாக மாற்றிக் கொடுக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். 16 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

திரு. சபா. இராசேந்திரன்: அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு முக்கியமான கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முன்னாள் முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பார்த்துப் பார்த்துக் கட்டிய தலைமைச் செயலகக் கட்டடத்தை, மீண்டும் தலைமைச் செயலகமாக அறிவித்து, செயல்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே கோரிக்கையை பல்வேறு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களான, வாசுதேவநல்லூர் தொகுதியைச் சேர்ந்த ம.தி.மு.க. உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்களும், மயிலாடுதுறை தொகுதி உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்களும், நமது சட்டமன்ற உறுப்பினர் மயிலை திரு. த. வேலு அவர்களும் வைத்திருக்கிறார்கள். இன்று காலையில் பேசிய செய்தித் துறை அமைச்சர் அவர்களும்கூட மிக வருத்தத்தோடு இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எனவே, இதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி தொகுதி சார்ந்த கோரிக்கைகள்: நெய்வேலி தொகுதி, பண்ருட்டி வட்டத்திலுள்ள சுமார் 50 கிராமங்கள் பயன்பெறும் வகையிலே கீழ்க்குப்பம் கிராமத்தில் 230 கிலோ வாட் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். NLC India Limited நிறுவனத்திற்கு வீடு, நிலம் கொடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு, Apprenticeship training முடித்தவர்களுக்குத் தகுதி அடிப்படையில் நிரந்தர வேலையும், society தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடக்குத்து ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் விரைந்து அமைக்க வேண்டும்.

காடாம்புலியூர் சிட்கோ தொழில் வளாகம் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீதியிருக்கின்ற 30 கோரிக்கைகளை நான் இந்த மன்றத்தில் பேசியதாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

[திரு. சபா. இராசேந்திரன்] [2021 செப்டம்பர் 7

மனத்தால்கூடப் பொய்யை நினைக்காமல் வாழ்பவர்கள், மக்கள் மனத்தில் நிலையான இடத்தைப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ற குறளுக்கேற்ப வாழ்ந்துகொண்டிருக்கிற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, வாழ்த்தி, பாராட்டி, நன்றி தெரிவித்து, விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

NLCIL நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழிலாளர் பணிகள் உட்பட அனைத்து வேலைகளும் வடமாநிலத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதைத் தவிர்த்து, மண்ணின் மைந்தர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்.

NLCIL நிறுவன சுரங்க உபரிநீரைக் குழாய்மூலம் கீழூர் சோழன் ஏரிக்குத் திருப்பி விட வேண்டும்

NLCIL நிறுவன சுரங்கத்தால் நிலத்தடி நீர் குறைந்து வருவதை ஈடு செய்ய காங்கேயங்குப்பம் காப்புக் காட்டில் 300 ஏக்கரில் ஒரு பெரிய ஏரி அமைத்து, நிலத்தடி நீர்மட்டத்தைப் பாதுகாக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, முத்தாண்டிக்குப்பம் காலனி, வானதிராயபுரம் ஊராட்சி, கல்லுக்குழி காலனி, பனிக்கங்குப்பம் ஊராட்சி, V. ஆண்டிக்குப்பம் ஆகிய ஊர்களில் குடிசை வீடுகளுக்கு மேல் செல்லும் மின்சாரக் கம்பிகளைக் கட்டணமில்லாமல் மாற்றியமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, முடப்புள்ளியில் முந்திரி சிறப்பு மையம் அமைக்கப்படும் என்று அரசாணை வெளியிட்ட நிலையில், அதனை விரைந்து துவங்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, எலந்தம்பட்டு–கருக்கை சாலை, கெடிலம் ஆற்றின் குறுக்கே மேம்பாலத்துடன் 8 கிலோ மீட்டர் இணைப்பு தார்ச் சாலை அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, NLCIL நிறுவனத்திற்கு வீடு, நிலம் கொடுத்து பாதிக்கப்பட்டு, இந்திரா நகர், பெருமாத்தூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள மாற்றுக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும்.

2021 செப்டம்பர் 7] [திரு. சபா. இராசேந்திரன்]

நெய்வேலி தொகுதி, இந்திரா நகர், பெருமாத்தூர் ஆகிய ஊராட்சிகளுக்கு வருவாய் கிராம கணக்கு உருவாக்கி, கிராம நிர்வாக அலுவலர்களை நியமிக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் முக்கனிகளில் ஒன்றான பலா மதிப்புக் கூட்டுத் தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் உள்ள மா, பலா, வாழை மற்றும் காய்கறி விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில், தொகுதி முழுவதும் பத்து இடங்களில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும்.

NLCIL நிறுவன சுரங்க உபரிநீரைத் தேக்குகின்ற வகையில், கன்னிக்கோவில் ஓடையில் கண்ணுத்தோப்பு பாலம் அருகே மேல் பகுதியில் ஒரு பெரிய நீர்த்தேக்க ஏரி அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் உள்ள சிறுவத்தூர் ஊராட்சி, ஏரிப்பாளையம் கிராமத்தை தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டும்.

அரசு வேளாண்மைத் துறையில் அறிவித்துள்ள பலா பயிருக்கான சிறப்பு மையத்தை, நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றிய கிராமப் பகுதியில் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் ஏற்றுமதி தொழில் பயிற்சி மையம் அமைக்க வேண்டும்.

அரசு நடத்தும் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் மாணவர்களைத் தயார்படுத்துகின்ற வகையில், ஒரு திறன் மேம்பாட்டுப் போட்டித் தேர்வு பயிற்சி மையம் துவங்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, இந்திரா நகர், வடக்குத்து நகரப் பகுதியில் அரசு அறிவித்துள்ள உழவர் சந்தையைத் துவங்க வேண்டும்.

முத்தாண்டிக்குப்பத்தில் முந்திரி ஏற்றுமதி முனையம் அமைக்க வேண்டும்.

கோ. சத்திரம், திருவாமூர் குடியிருப்பு, புலியூர் ஆதி திராவிட உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும்.

[திரு. சபா. இராசேந்திரன்] [2021 செப்டம்பர் 7

தமிழ்நாட்டில் உள்ள முந்திரி உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு ஒரு நல வாரியம் அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் மாளிகம்பட்டு ஊராட்சி, பிள்ளையார்குப்பம் SS–4, பேர்பெரியாங்குப்பம் ஊராட்சி, முத்தாண்டிக்குப்பம் SS 5 மற்றும் செம்மேடு ஊராட்சி, அரசு பள்ளி திடல் ஆகிய இடங்களிலுள்ள டிரான்ஸ்ஃபார்மர்களை இடமாற்றம் செய்ய வேண்டும்.

நெய்வேலி தொகுதியில் காட்டுக்கூடலூர் ஊராட்சி, முடப்புள்ளி, கீழ்மாம்பட்டு ஊராட்சி, வெள்ளபுள்ள காலனி மற்றும் அரசடிக்குப்பம் ஊராட்சி, சிறுதொண்டமாதேவி கிராமத்தில் உள்ள ஏரி ஆகிய இடங்களிலுள்ள மின் பாதைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, நெய்வேலி நகரத்திலிருந்து சொரத்தூர், முத்தாண்டிக்குப்பம், எலவத்தடி, சேந்தநாடு வழியாக உளுந்தூர்பேட்டைக்கு அரசுப் பேருந்து இயக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, நெய்வேலி நகரத்திலிருந்து வடக்குமேலூர், கீழூர், கோ.சத்திரம், புலியூர், சமட்டிக்குப்பம் வழியாக கடலூருக்கு அரசுப் பேருந்து இயக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.

பிற்பகல் 12–40

***திரு. கா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூறாண்டு வரலாறு கண்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க 16–வது சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று உரையாற்றுகின்ற ஒரு வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற தங்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, தந்தை பெரியார் காண விரும்பிய சுயமரியாதைச் சமூகமாகவும், உரிமை பெற்ற மக்களாகவும், எல்லா வளமும் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாட்டை மாற்றுவதற்கு இந்த அரசு உறுதியேற்றுள்ளது என்ற உறுதியேற்பு ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்ற இந்தச் சூழலில், திராவிட சித்தாந்த உணர்வுகளும், தமிழ் இன

2021 செப்டம்பர் 7] [திரு. கா. அண்ணாதுரை]

சிந்தனைகளும் மிக அழுத்தமாக முன் எப்போதும் இல்லாத அளவிற்கு எடுத்து வைக்கப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில், இந்த அவையில் உறுப்பினராகப் பணியாற்றுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். திராவிட இயக்கத்தின் மகத்தான தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, இமைப்பொழுதும் நம் நெஞ்சைவிட்டு அகலாத தலைவர் கலைஞர் ஆகியோரின் இலட்சிய உணர்வுகளை நெஞ்சிலே ஏற்று என் உரையைத் தொடங்குகிறேன்.

தந்தை பெரியார் பிறந்த தினமான செப்டம்பர் 17 ஆம் தேதி, சமூக நீதி நாளாகக் கொண்டாடப்படும் என்ற மகத்தான ஓர் அறிவிப்பை நம்முடைய முதல்வர் அவர்கள் நேற்றையதினம் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பை ஏற்று, திராவிடர் கழகத்தினுடைய தலைவரும், நம்முடைய முதுபெரும் அரசியல் தலைவருமான ஆசிரியர் அவர்கள், 'சமூக நீதிக்கான சரித்திர நாயகர்' என்கிற ஓர் அடைமொழியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். சமூக நீதியை இந்த அரசு தொடர்ந்து காப்பாற்றும் என்பதைத் தெளிவுபட எடுத்து வைத்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் உரையாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது.

1980 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கழகத்தின் இளைஞரணியில் 1982–83–ல் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் இளைஞரணி அமைப்பாளராக, இன்றைய நம்முடைய மாண்புமிகு முதல்வர், அன்றைய இளைஞரணிச் செயலாளர் தளபதி அவர்களால் நியமிக்கப்பட்டேன். பின்னர், 1989–ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. உதயசூரியன் அவர்கள் ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது குறிப்பிட்டதைப்போல, தலைவர் தளபதி அவர்களால் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டு, நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களால் பட்டுக்கோட்டை அண்ணாதுரை எனத் தொடங்கி, சின்னசேலம் உதயசூரியன் என 108 வேட்பாளர்களின் முதல் பட்டியலில் இடம் பெற்றோம். அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, இரண்டு ஆண்டுகளில் ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தேன். 1996–ல் நடைபெற்ற தேர்தலில் எனக்குப் பதிலாக வாய்ப்பு மாற்றித் தரப்பட்டு, கழகம் வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து, தோழமைக் கட்சிக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டதால், கழகத்திற்குப் போட்டியிடுகின்ற வாய்ப்பு

[திரு. கா. அண்ணாதுரை] [2021 செப்டம்பர் 7

கிடைக்காமலே போய்விட்டது. இந்தத் தேர்தலில் எப்படியும் பட்டுக்கோட்டையில் கழகம் போட்டியிட வேண்டும் என்ற உணர்வு கழகத் தொண்டர்கள் மத்தியில் மிகப் பெரிய எழுச்சியாக உருவெடுத்தது. தேர்தலுக்கு முன்பு, ஏறத்தாழ ஓராண்டிற்கு முன்பே இந்தக் கருத்து தலைவர் அவர்களிடம் பல கட்டங்களில் எடுத்து வைக்கப்பட்டது. அதேபோன்று, தேர்தல் தேதி அறிவிப்பிற்கு முன்பாக, பட்டுக்கோட்டையில் விவசாயிகள் சந்திப்பு என்கிற எழுச்சிமிகுந்த வரவேற்பில் கலந்துகொண்ட இளம் தலைவர், தம்பி உதயாவிடம் தொகுதியின் நிலையைப் பல்வேறு தரப்பினரும் எடுத்து வைத்தனர். அதனடிப்படையில் இந்தத் தேர்தலில் கழகத்தின் சார்பில் நான் நிறுத்தப்பட்டு, வெற்றி பெற்று இந்த அவைக்கு வந்துள்ளேன். கழகத்தைப் பொறுத்தளவில், 20 ஆண்டுகளுக்கு பிறகு பட்டுக்கோட்டையில் போட்டியிட்டிருக்கின்றது. என்னைப் பொறுத்தளவில், 30 ஆண்டுகளுக்குப் பிறகு கழக வேட்பாளராகப் போட்டியிடுகின்ற வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இது கனவில் நடந்ததைப் போன்ற ஓர் உணர்வைத் தருகிறது. தமிழக சட்டமன்ற வரலாற்றில் இவ்வளவு பெரிய கால இடைவெளியில் வேட்பாளர் வாய்ப்பு தரப்பட்டு, வெற்றி பெற்று வந்தது நானாகத்தான் இருப்பேன் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட வாய்ப்பை வழங்கி, என்னை வெற்றி பெற வைத்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தம்பி உதயா அவர்களுக்கும், நான் வெற்றி பெற உழைத்த கழக தோழமைக் கட்சி முன்னோடிகளுக்கும், பட்டுக்கோட்டை தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பாக, முடிவடைந்த மானியக் கோரிக்கைகளில் பட்டுக்கோட்டை தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட சில அறிவிப்புகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னை வளர்ச்சி வாரியத்தின் கிளை பட்டுக்கோட்டையில் அமைவதற்கும், அதிராம்பட்டினம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்தியதற்கும், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவிற்குக் கட்டடம், உபகரணங்கள் வாங்குவதற்கு ஏறத்தாழ ரூ.1 கோடிக்கும் அதிகமான நிதி ஒதுக்கியதற்கும், பட்டுக்கோட்டை வட்டம், தாமரங்கோட்டை

2021 செப்டம்பர் 7] [திரு. கா. அண்ணாதுரை]

அருள்மிகு கண்டேஸ்வரசுவாமி திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூ.$2^{1}/_{4}$ கோடி நிதி ஒதுக்கியதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது பேரவையில் எடுத்துக்கொள்ளப்படும் நீதி நிருவாகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள், சட்டத் துறை, எரிசக்தித் துறை, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது ஒரு சில கருத்துகளை இந்த அவையில் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

என்பார் வள்ளுவர். 'நீதி நெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்' என்று பொருள் கூறுவார் நம்முடைய தலைவர் கலைஞர். நீதி நெறியுடன் நடக்கக்கூடிய ஓர் அரசு இன்றைக்கு முதல்வர் தளபதி தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தமிழகத்தில் மாத்திரமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலக அளவிலான பத்திரிகையாளர்கள், அரசியல் வல்லுநர்கள், பொது நிலையில் உள்ளவர்கள் பாராட்டுவதை நாம் காண்கிறோம். 'சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு' என்றார் பேரறிஞர் அண்ணா.

இன்றைக்கு தமிழகத்தில், Rule of Law–சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்று சொன்னால். அது மிகையாகாது. அந்தவகையில் ஜனநாயகத்தின் 3 தூண்களில் முக்கியமாகக் கருதப்படும் நீதித் துறை சுதந்திரமாகச் செயல்படுவதற்கும், அதற்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கும், நமது அரசு உறுதிபூண்டுள்ளது. தமிழ்நாட்டில் செயல்படும் 1,280 நீதிமன்றங்களில், 1,099 நீதிமன்றங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் செயல்படுகின்றன என்றும், அடுத்த 5 ஆண்டுகளில் மீதமுள்ள நீதிமன்றங்களும் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.351.87 கோடி உட்பட, நீதித் துறை நிர்வாகத்திற்கென 1,713.30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[திரு. கா. அண்ணாதுரை] [2021 செப்டம்பர் 7

மக்கள், அரசியலைப்பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம்; பொருளாதாரத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம்; மருத்துவத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம். விஞ்ஞானத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம். அது தவறல்ல, ஆனால், இந்த நாட்டில் இருக்கின்ற சாதாரண, சாமானிய, ஏழை விவசாயத் தொழிலாளர்கள் யாராக இருந்தாலும், சட்டத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். காரணம், 'Ignorance of law is no excuse' என்பார்கள். எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அந்தத் துறைக்கென தனியாக சட்டமோ, விதிகளோ இல்லாமல் அந்தத் துறை இயங்க முடியாது. அந்த வகையில், இந்த மாமன்றத்தில் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான சில சட்டங்களைத் தற்போது இந்த அவையிலே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். 1967 முதல் 1969 வரையிலான பேரறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் பெறப்பட்டது. 1971 முதல் 1976 வரையிலான காலத்தில் நில உச்சவரம்புச் சட்டம், 1989 முதல் 1991 வரையிலான காலத்தில் இந்து வாரிசு உரிமைச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்து, பெண்களுக்கு சொத்திலே சம உரிமை தரப்பட்டது. 2006–ல் கிறிஸ்துவ, இஸ்லாமிய சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீட்டில் தனி ஒதுக்கீடு சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டங்கள் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு முக்கியக் கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகிறேன். பட்டுக்கோட்டையை பற்றி நன்கு தெரிந்தவர் நம்முடைய அமைச்சர் அவர்கள். தற்போது பட்டுக்கோட்டை சிறைச்சாலை பழுதடைந்துள்ளதால் பயன்பாட்டில் இல்லை. பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அருகில் இந்தக் கிளைச் சிறைச்சாலை தற்போது உள்ளது. மருத்துவமனைக்குப் போதுமான இடம் இல்லை. அதனுடைய விரிவாக்கத்திற்கும் போதுமானதாக இடமும் இல்லை. எனவே, இந்தக் கிளைச் சிறைச்சாலை இடத்தை மருத்துவமனை விரிவாக்கத்திற்குத் தருவதோடு, வழக்கமாக எல்லா இடங்களிலும் இருப்பதுபோல கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் போதுமான இடம் உள்ளதால் அங்கே புதிதாக ஒரு கிளைச் சிறைச்சாலையைக் கட்டுவதற்குரிய நிதியை வழங்கிடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. கா. அண்ணாதுரை]

அதேபோன்று, பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் ஏறத்தாழ 200–க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கெனத் தனியாக chamber அங்கே இல்லை. எனவே, அவர்களுக்குத் தனியாக chamber ஒன்று கட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–50

அடுத்து, எரிசக்தித் துறையைப் பொறுத்தளவில், எரிசக்தி, மாநிலத்தின் பொருளாதாரக் கட்டமைப்பின் மிக முக்கியமான அங்கமாகும். மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் பாதுகாப்பானது மட்டுமல்ல, நம்பத் தகுந்த துறை எரிசக்தித் துறை ஆகும்.

வேளாண்மைக்கான இலவச மின்சாரம் மற்றும் வீட்டிற்கான மின்சாரம் வழங்குவதற்கான மானியங்களுக்காகவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்புகளுக்கு நிதி வழங்கவும் 19,872.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் வாயிலாக மாநிலத்தில் 17,980 மெகா வாட் மொத்த மின் உற்பத்தித் திறன் கூடுதலாகச் சேர்க்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியும் இன்றைக்கு நம்முடைய அரசின் சார்பிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தித் துறையின் சார்பில் பட்டுக்கோட்டை தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிராம்பட்டிணத்தில் 110 KV துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி ஒப்பந்தம், ஒப்பந்த அளவில் உள்ளது எனத் தெரிகிறது. அதிராம்பட்டிணம் பகுதியிலே மிகக் குறைந்த மின்னழுத்தம் என்பது மிகப் பெரிய அளவிற்கு தற்போது இருக்கிறது. தினம் தினம், அதுகுறித்த புகார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே, விரைந்து அந்தப் பணிகளை நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மதுக்கூர், சிரமேல்குடி, நாட்டுச்சாலை போன்ற கிராமங்களில் 33/11 KV துணை மின் நிலையம் அமைவதற்கான

[திரு. கா. அண்ணாதுரை] [2021 செப்டம்பர் 7

முன்மொழிவுகள் துறைக்கு வந்துள்ளது. இடம் தேர்வு செய்யப்படாமல் உள்ளது. இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் அதற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதிலே, சட்டச் சிக்கல்கள் இருப்பதென்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். விரைவிலே அதனை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து, அந்த துணை மின் நிலையங்களை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய தஞ்சை டெல்டா மாவட்டங்களிலே மும்முனை மின்சார இணைப்புக் கேட்டு ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கிறார்கள். டெல்டா மாவட்டங்களிலே சிறப்பு முன்னுரிமையின் அடிப்படையிலே மும்முனை மின்சாரம் வழங்குவதற்குத் தாங்கள் ஆவன செய்திட வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் முறையாக இந்த அவையிலே உரையாற்றுவதனால், பட்டுக்கோட்டை தொகுதியின் சார்பிலே இந்த மானியத்தில் தொடர்பில்லாத கோரிக்கைகள் சிலவற்றைத் தங்கள் மூலமாகப் பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்: பட்டுக்கோட்டை நகரைச் சுற்றி இரண்டாம் கட்ட புறவழிச் சாலை அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். இந்தத் திட்டம் 2008 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம்.

பட்டுக்கோட்டை நகருக்கு புறவழிச் சாலையையொட்டி ஒரு புறநகர்ப் பேருந்து நிலையம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அதிராம்பட்டிணம் பேரூராட்சி தற்போது நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, பேரூராட்சியிலும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. கா. அண்ணாதுரை]

அதிராம்பட்டிணம், மதுக்கூர் பேரூராட்சிகளில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்துத் தர கேட்டுக்கொள்கிறேன். இந்த வட்டத்தில் சுமார் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். நிருவாக வசதியைக் கருத்தில் கொண்டு, அதிராம்பட்டிணத்திற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், முக்கியமான கோரிக்கைகளைப் படித்துவிட்டு, மீதமுள்ள கோரிக்கைகளைக் கொடுத்தால் படித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ளப்படும்.

திரு. கா. அண்ணாதுரை: ஒன்றே ஒன்று. அதிராம்பட்டிணத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டம் பிரித்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அதிராம்பட்டிணம், மதுக்கூர் பேரூராட்சிகளில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே பயணியர் விடுதி அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில் ஓடக்கூடிய நசுவினி ஆறு, பாட்டுவானாச்சி ஆறு, கண்ணனாறு ஆகிய காட்டாறுகளை ஆய்வு செய்து, வாய்ப்புள்ள இடங்களில் தடுப்பணைகள் கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பானாடு–பெருகவாழ்ந்தான் செல்லக்கூடிய சாலையில் இரண்டு மாவட்டங்களை இணைக்கக்கூடிய கண்ணனாற்றுப் பாலம் கட்ட வேண்டும். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இந்த உயர்மட்டப் பாலம் கட்டித் தருவதற்கு நிருவாக ஒப்புதலுக்காகத் துறைக்கு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில் அரசின் சார்பிலோ அல்லது அறநிலையத் துறையின் சார்பிலோ ஒரு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி பேராசிரியர் திரு. செல்வராஜ் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை, ஒரு செய்தியை மட்டும் பதிவு செய்து, நான் விடைபெற

[திரு. கா. அண்ணாதுரை] [2021 செப்டம்பர் 7

விரும்புகிறேன். "நூறு நாட்கள் என்ன, பல நூறு நூறு நாட்கள் இங்கு வீறு பெற ஆண்டிடுவாய், வீறு பெற ஆண்டிடுவாய், வெற்றிகளைக் குவித்திடுவாய், வாழ்க, வாழ்க" எனக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள். உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

பிற்பகல் 12–55

***திரு. JMH. அசன் மௌலானா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (உறுப்பினர் இந்தி மொழியில் பேசினார்) "India is an old country, but a young nation, We are impatient. I am impatient; And I too have a dream of an India–strong, independent, self–reliant.."–Rajiv Gandhi. அன்னை இந்திரா காந்தி, தலைவர் ராஜீவ் காந்தி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, சமூக நீதி காத்த கலைஞர் ஆகியோரை வணங்கி, எனது அறிமுக பேச்சை பெரியோர்கள் வீற்றிருக்கும் இந்த அவையில் பதிவு செய்கிறேன். 7 கோடி தமிழர்களின் எதிர்காலத்தை முடிவெடுக்கும் இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூறாண்டு பெருமை கொண்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வேளச்சேரி தொகுதியின் சார்பாக எனக்குப் பேசுவதற்கு நல்வாய்ப்பினை வழங்கிய அன்னை சோனியா காந்தி, இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. கே.எஸ். அழகிரி, எங்களுடைய பொறுப்பாளர் திரு. தினேஷ் குண்டுராவ் ஆகியோரை வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தந்தை, திரு. J.M. ஆரூண் அவர்கள், இந்த அவையில் 1996–ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்; கலைஞரின் மிகப் பெரிய ஆதரவாளர். இந்த அவைக்கு நான் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து, எனக்கு நம்பிக்கையூட்டிய என் தந்தை திரு. J.M. ஆரூண் அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் தந்தை எப்போதும் கலைஞர் அவர்கள்மீது நம்பிக்கை கொண்டவர். ஒருமுறை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக கலைஞர் அவர்களை

2021 செப்டம்பர் 7] [திரு. JMH. அசன் மௌலானா]

எதிர்த்து, என் தந்தையை களம் காண இருந்தார்கள். அதையறிந்த என் தந்தை உடனடியாக, 'கலைஞர் அவர்களை எதிர்த்து மனு தாக்கல் செய்ய மாட்டேன். எனக்கு சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கூட தேவையில்லை' என்று கூறி, அந்த வாய்ப்பை நழுவவிட்டார். அதன்பிறகு ஐந்தாண்டுக் காலம் அவருடைய நம்பிக்கையில் இருந்தார். அப்பொழுது த.மா.கா.–ல் என் தந்தை இருந்தபொழுது, அன்றிருந்த தலைவரிடம், கலைஞர் அவர்கள், 'வில்லிவாக்கத்திலிருந்து போட்டியிட ஆரூணுக்கு வாய்ப்பு கொடுங்கள்' என்றார். அதனடிப்படையில்தான் என் தந்தைக்கு வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி கிடைத்தது. கலைஞர் அவர்களின் நம்பிக்கைக்கிணங்க அவரும் நடந்து கொண்டார். வரலாற்றில் இடம்பெறும் அளவிற்கு என் தந்தை 1,48,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினரானார். கலைஞரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான என் தந்தை எப்பொழுதுமே கலைஞர் அவர்களின் குடும்பத்திற்கு மிகப் பெரிய விசுவாசியாக இருந்தார்.

2004 பாராளுமன்றத் தேர்தலில் 40/40 இடங்களை ஜெயிக்க வேண்டுமென்பது கலைஞர் அவர்களின் யுக்தி. 2004 ஆம் ஆண்டு பெரியகுளத்தில் காங்கிரஸ் பேரியக்கம் போட்டியிடுவதாக முடிவெடுத்தது. பெரியகுளத்தில் யாரை களம் காண்பது என்று தெரியவில்லை. அப்பொழுது அன்னை சோனியா காந்தி அவர்களும் யாரை களம் காண்பது என்று யோசித்துக்கொண்டிருந்தார்கள். அ.தி.மு.க.–வின் மிகப் பெரிய கோட்டை பெரியகுளம். அன்றைய முதலமைச்சர் அங்கு சட்டமன்ற உறுப்பினர். தேனி மாவட்டத்தின் 4, 5 சட்டமன்ற உறுப்பினர்கள் அ.தி.மு.க.–வைச் சார்ந்தவர்கள். அன்னை சோனியா காந்தியிடம், 'பெரியகுளத்தில் நீந்துவதற்கு ஒரு பெரிய திமிங்கலம் தேவை. அந்தத் திமிங்கலத்தின் பெயர் J.M. ஆரூண். அவரை களம் காணுங்கள்' என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன் பிரதிபலிப்பு, பெரியகுளம் என்கின்ற அ.தி.மு.க.–வின் கோட்டையை தகர்த்தெறிந்தார்; 40–க்கு 40–ஐயும் வென்றெடுத்தார் கலைஞர் அவர்கள்.

இன்று நம்முடைய இராமகிருஷ்ணன் ஐயா, பெரியகுளம் M.L.A., ஆண்டிப்பட்டி M.L.A., உசிலம்பட்டி M.L.A. ஆகியோர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் இங்கு பார்க்கும்பொழுது, போடியை தவிர்த்து மீண்டும் தி.மு.க.–வின் கோட்டையாக தேனி மாவட்டம் மாறியிருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

[திரு. JMH. அசன் மௌலானா] [*2021 செப்டம்பர் 7 பிற்பகல் 1–00*

கலைஞர் அவர்கள் வானளாவிய பயணம் சென்று விட்டார். அவரது பூத உடல் மட்டும் கோபாலபுரத்தில் இருந்தது. என் தந்தைக்கும் கலைஞர் அவர்களுக்கும் இடையே எத்தனையோ உறவுகள் இருந்தன. எனது மற்றும் என்னுடைய இரண்டு தங்கைகளின் திருமணங்களுக்கும் கலைஞர் அவர்கள் வந்திருந்தார்கள். என் தம்பியின் திருமணத்திற்கு கலைஞர் அவர்களை அழைத்து வருவதற்கு என் தந்தை என்னை அனுப்பி வைத்திருந்தார். கலைஞரை அழைத்து வருவதற்கு நான் கோபாலபுரம் இல்லம் சென்றிருந்தேன். முதுமை காரணமாக அப்போது கலைஞர் தயாராகி சக்கர நாற்காலியில் வெளியே உட்கார்ந்திருந்தார்கள். 'ஐயா, என் தம்பியின் திருமணத்திற்கு நீங்கள் வர வேண்டும், எங்கள் இல்லத்தின் மூன்று திருமணங்களுக்கு வந்துவிட்டீர்கள். இது நான்காவது திருமணம். இதற்கும் நீங்கள் வரவேண்டும்' என்று சொன்னேன். அதற்கு, 'கலைஞர் தயாராக இருக்கின்றேன். கலைஞரின் உடல்நிலை தயாராக இல்லையப்பா!' என்று அவர் சொன்னார். அங்கிருந்தே என் தந்தையை தொலைபேசியில் அழைத்து, 'ஐயா, உங்களிடம் பேச வேண்டும்' என்று சொல்கிறார் என்று சொன்னேன். அப்போது ஒரு வார்த்தை சொன்னார்; 'முதல் முறையாக என்னால் வரமுடியவில்லை; எனக்கு உடல்நிலை சரியில்லை' என்று அன்றுதான் கலைஞர் சொன்னார்.

அத்தகைய உறவுகொண்ட கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம்விட்டுப் பிரிந்த அன்று, மாலை நேரம், என் தந்தை என்னைத் தொலைபேசியில் அழைத்து, 'நீ கோபாலபுரம் இல்லம் அருகிலேயே இரு' என்று சொன்னார். அங்கே நிறைய கூட்டம் இருந்தது, நாங்கள் எல்லோரும் அங்கேயே நின்று கொண்டிருந்தோம். அவரது பூத உடலைப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பும் கிடைத்தது. அது முடிந்து நாங்கள் வெளியே வந்து நின்றிருந்தோம். அப்போது என் தந்தை காவேரி மருத்துவமனையில் நோயாளியாக admit ஆகியிருந்தார். அடிக்கடி தொடர்பு கொண்டு, 'அங்கேதானே நிற்கின்றாய், தளபதி உன்னைப் பார்த்தாரா? உதயநிதி அண்ணன் உன்னைப் பார்த்தாரா?' என்று கேட்டார், நானும், 'ஆம்! இருவரும் என்னைப் பார்த்தார்கள்' என்று சொல்லி, அங்கேயே அந்த சுற்றுவட்டாரத்திலேயே சுற்றி, சுற்றி, நின்றிருந்தேன். என் தந்தை காவேரி மருத்துவமனையில் admit ஆகியிருந்ததால் அவரால் வர இயலாத சூழ்நிலை. இரவு

2021 செப்டம்பர் 7] [திரு. JMH. *அசன் மௌலானா*]

12–30 மணி இருக்கும், காவேரி மருத்துவமனையிலிருந்து என் தந்தை புறப்பட்டு வந்தார். கலைஞர் அவர்களின் பூத உடலைப் பார்க்க வந்துவிட்டார். அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. 'கலைஞர் எனக்கு என்ன செய்திருக்கிறார் என்று உனக்குத் தெரியாது' என்று திரும்பத் திரும்பச் சொன்னார். மீண்டும், என் தந்தை, நோயாளியாக மருத்துவமனைக்குச் சென்றுவிட்டார். இதுதான் நம் குடும்பத்திற்கும், தலைவர் கலைஞர் அவர்களின் குடும்பத்திற்கும் உள்ள உறவு என்று என் தந்தை எப்போதும் சொல்வார்.

அத்தகைய சூழ்நிலையில், வேளச்சேரி தொகுதியை காங்கிரசுக்கு ஒதுக்கித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் பேரியக்கம் என்னை களம் கண்டது. காலை 6 மணிக்கு என் தந்தையிடம், 'நான் என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டபோது, 'முதலில் சென்று, உன் மாவட்டச் செயலாளர் அவர்களிடம் ஆசி பெற்றுக்கொள்' என்றார். எங்கள் மாவட்டச் செயலாளர் அவர்களின் பெயர், திரு. மா. சுப்பிரமணியன். அவரிடம் ஆசீர்வாதம் பெற காலை 6 மணிக்குச் சென்றால், எனக்கு முன்பே அவர் தயாராக இருந்தார். எந்தளவுக்கு சொல்ல வேண்டுமென்றால், 'A sportsman is a positive man, he is optimistic' என்று சொல்வார்களே, அந்தளவுக்கு, அவரைப் பார்த்தவுடனே, 'நீ ஜெயித்துவிட்டாய், நீ கவலைப்பட வேண்டாம்' என்று நான் எண்ணிக்கொண்டேன். நான் அவரிடம், 'ஐயா, என்னை எப்படியாவது நீங்கள்தான் வெற்றி பெற வைக்க வேண்டும்' என்று சொன்னேன். அவர், 'என் தலைவர் CM ஆக வேண்டும், அதற்காக, நீ ஜெயிப்பாய்!' என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் win–win strategy என்பார்கள். திரு. மா. சுப்பிரமணியன் ஐயாவைப் பார்த்தவுடனே, அந்த optimism கிடைத்தது. அதே புத்துணர்ச்சியுடன் நான் வேளச்சேரி சென்றபோது, எல்லாமே வித்தியாசமாக இருந்தது. தி.மு.க. சட்டமன்ற வேட்பாளர் இருந்த இடத்தில், காங்கிரஸ் கட்சி வேட்பாளருக்கு வாய்ப்பு கொடுக்கிறார்கள். களம் இறங்கும்போது, ஐயா, திரு. மா.சு. அவர்கள், அனைவரிடமும் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு, 'ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டும், அவர் வெற்றி பெற வேண்டும்' என்று கூறினார். அதன்பிறகு, அவரே தொகுதிக்கு நேரடியாக வந்து, எனக்காகப் பலமுறை பிரச்சாரம் மேற்கொண்டார். ஆரம்பத்தில், கொஞ்சம் trailing–ல்தான் இருந்தது.

[திரு. JMH. அசன் மௌலானா] [2021 செப்டம்பர் 7

ஏனென்றால், என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர், வேளச்சேரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

என் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்கள், 'நான் பிரச்சாரம் செய்ய ஒரேயொரு இடத்திற்குதான் வருவேன், அதுவும் ஒரேயொரு தொகுதிக்குதான் வருவேன், அது வேளச்சேரி தொகுதி' என்று தேர்தல் பிரச்சாரத்தின்போது சொல்லி, முதலில் என்னுடைய தொகுதிக்கு வாக்கு சேகரிக்க வந்தார். அதுதான் முதல் சிக்சர். இன்னும் சில நாட்கள் கடந்தன. தளபதி அவர்கள் வேளச்சேரிக்கு வருகிறார் என்றார்கள். எனக்காக தெற்கு மாட வீதியில் தளபதி அவர்கள் வந்து பேசினார்கள். வாரிசு அரசியல் என்றெல்லாம் பேசுவார்கள் இல்லையா! தளபதி அங்கே வந்து சொன்னார்; 'உங்களிடம் வாக்குக் கேட்க கலைஞரின் மகன் மு.க. ஸ்டாலின் வந்திருக்கின்றேன்' என்றார். அதுதான் கலைஞருக்குக் கொடுத்த மரியாதை.

பிற்பகல் 1–05

பகுதிச் செயலாளர், திரு. துரை கபிலன் ஒரு கல் மாதிரி இருப்பார். அந்த இடத்தில் ஓர் உருக்கமான நிகழ்வு நடந்தது. அவர் சந்தோஷமாக இருக்கிறாரா, கோபமாக இருக்கிறாரா என்று அவருடைய முகத்தைப் பார்த்து நம்மால் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு தோற்றத்தில் இருப்பார். திரு. துரை கபிலன் அவர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார். அப்பொழுது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் ஐயா அவர்கள், ஒரு பழைய history–ஐச் சொன்னார். 'நாங்கள் இளைஞரணியில் இருந்தபொழுது, இங்கே ஒரு சிலையை நிறுவினோம். அதில் நான் மற்றும் திரு. துரை சண்முகம் பங்கேற்றோம்' என்று திரு. துரை கபிலன் அவர்களுடைய தந்தையின் பெயரைக் கூறியபொழுது, துரை கபிலனே ஒரு நிமிடம் ஆடிப்போய்விட்டார். அவருடைய கண்களில் கண்ணீர் வந்தது. (குறுக்கீடு) ஐயா, சற்று time கொடுங்கள். அனைத்து உறுப்பினர்களுக்கும் 26 நிமிடங்கள் கொடுத்தீர்கள். எனக்கும் கொடுங்கள். அந்தளவிற்கு ஓர் இணக்கத்தை நம்முடைய முதலமைச்சர், ஸ்டாலின் ஐயா கொண்டு வந்தார்கள். அது இரண்டாவது sixer.

தேர்தல் நாள் வந்தது. எல்லோரும் வாக்களிக்கச் சென்று கொண்டிருந்தபோது, நான் காலையில் கிளம்பினேன். எனக்கு Rayiys என்ற மகன் இருக்கிறான். நான் வீட்டை விட்டுக் கிளம்பியபோது

2021 செப்டம்பர் 7] [திரு. JMH. அசன் மௌலானா]

காலை 6–00 மணி இருக்கும். அவன், 'ஸ்டாலின்தான் வாராரு', என்று பாடிக்கொண்டு வந்தான். அப்பொழுதே 'நாம் ஜெயித்துவிட்டோம்' என்று நினைத்துவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) 5 வயது பையனுடைய humming 'ஸ்டாலின்தான் வாராரு' என்றிருந்தது. அதுதான் அந்த period–ல் தமிழ்நாட்டினுடைய BGM ஆனது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவுக்கு தேர்தல் உத்தி கையாளப்பட்டது. என்னை இந்த அவைக்குக் கொண்டு வந்ததற்கு உங்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் பேச விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இப்பொழுது எல்லாம் தடுமாறுகிறதே! பேப்பரைக் காணவில்லையே! (மேசையைத் தட்டும் ஒலி) சற்றுப் பொறுங்கள், பேப்பரை எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை. சரி, வேளச்சேரி தொகுதி தொடர்பான கோரிக்கைகளை முன் வைக்கிறேன்.

வேளச்சேரி தொகுதியைப் பற்றிப் பேசும்பொழுது, 'கொல்லன் தெருவில் ஊசி விற்பதைப்போல'. ஏனென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வீடு அங்கேதான் இருந்தது. அந்த இடத்திற்கு நான் இப்போது MLA. வேளச்சேரி ஏரி பரிதாப நிலையில் இருக்கிறது. அது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரியா அல்லது மாநகராட்சி பராமரிக்கக்கூடிய ஏரியா என்று தெரியாத அளவிற்கு பரிதாப நிலையில் இருக்கிறது.

சேத்துப்பட்டு ஏரியைச் சீர்செய்து படகு சவாரி விட்டார்கள்; அது failure ஆகிவிட்டது. ஆனால், வேளச்சேரி ஏரியில் 365 நாட்களும் தண்ணீர் நிற்கும். அந்த ஏரியைத் தூர் வாரி, அதனுடைய சுற்றுப் பகுதியைச் செப்பனிட்டு, படகு சவாரி வசதி ஏற்படுத்தும் அளவிற்கு, அந்த ஏரியைப் பாதுகாக்க வேண்டிய கடமைக்கு நாம் ஆளாகியிருக்கின்றோம். மழைக் காலம் ஆரம்பித்துவிட்டது. ஏரியில் உள்ள ஆகாயத் தாமரை இதுவரையில் நீக்கப்படவில்லை. அதேமாதிரி, 200 அடி அகலம் இருந்த B Canal 60 அடியாகச் சுருக்கப்பட்டுவிட்டது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என் நேரு ஐயா அவர்கள் அங்கே வந்து பார்வையிட்டார்கள். அதிலும் ஆகாயத் தாமரை படர்ந்துவிட்டது. அதுவும் இன்னும்

[திரு. JMH. அசன் மௌலானா] [2021 செப்டம்பர் 7

அகற்றப்படவில்லை. சரியாக ஜூன் 6 ஆம் தேதி பருவ மழை தொடங்கிவிட்டது. அதிக அளவிலான மழையை நாம் எதிர்நோக்கியிருக்கின்றோம். கண்டிப்பாக வேளச்சேரி ஏரியைத் தூர் வார வேண்டும். ஆகாயத் தாமரைகளை அகற்றவேண்டும். 5, 6 இடங்களில் கழிவுநீரை ஏரியில் கலக்கவிடுகிறார்கள். அதனை உடனடியாக நிறுத்தவேண்டும். இது முதல் கோரிக்கை. தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

IIT–யினுடைய Krishna Gate; தீண்டாமை தடுப்புச் சுவர் போன்றது. அதனைக் கண்டிப்பாகத் திறக்க வேண்டும். அங்கிருக்கக்கூடிய மக்களுக்கு மிகப் பெரிய மன அழுத்தம் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. அதனைக் கண்டிப்பாகத் திறக்க வேண்டும். இது தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல், ராஜீவ் காந்தி சாலை, TNRDC Road, special projects நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் ராஜீவ் காந்தி அவர்களுக்கு மிகப் பெரிய ஒரு சிலையை, (சுறுக்கீடு) ஐயா, ஒரேயொரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளைப் படித்ததாகக் கருதி, நான் பதிவு செய்துகொள்கிறேன்.

திரு. JMH. அசன் மௌலானா: அந்தப் பகுதியில் ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஓர் அருமையான சிலையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பள்ளிக்கரணை சதுப்பு நிலம். இந்தப் பகுதி வேளச்சேரியைவிட உயர்ந்த நிலையில் இருக்கிறது. அந்த சதுப்பு நிலப் பகுதியில் நீர் செல்லும் பாதையைக் கண்டிப்பாக அமைத்துக் கொடுத்தால் மட்டுமே, வேளச்சேரி, வெள்ளச்சேரியாகாமல் இருக்கும். அதற்காகக் கண்டிப்பாக பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் ஒரு மாற்றுப் பாதையை இந்த அரசு அமைத்துத் தரவேண்டும். இல்லையென்றால், வருகின்ற மழைக் காலத்திலும் வேளச்சேரியில் சுமார் ஓர் ஆள் உயரத்திற்கு தண்ணீர் நிற்கும். அதனால், நீங்கள்தான் வேளச்சேரியை பாதுகாத்துத் தரவேண்டும்.

சைதாப்பேட்டை அடையாறு வழியாகக் கடலுக்குச் சென்று கலக்கும் கூவம் ஆற்றைக் கண்டிப்பாகத் தூர் வார வேண்டும். இந்த நேரத்தில் தூர் வாராமல் விட்டால், அதனுடைய கரைகளைப் பலப்படுத்தாமல் விட்டால், இந்த மழைக் காலத்தில் மிகப் பெரிய அளவிலான வெள்ளச் சேதம் ஏற்படும். உடனடியாக அதைச் செய்து தர வேண்டும். அங்கு B canal route–ல் ஒரு turn வருகிறது. B canal வழியாகத்தான் தண்ணீர் கடலுக்குள் செல்லும். அந்த B canal மிகக் குறுகிய அளவில் உள்ளது. நெடுஞ்சாலைத் துறையும், பொதுப் பணித் துறையும் இணைந்து அந்தப் பகுதியை விரிவாக்கம் செய்து கொடுத்தால்தான் நீர் போகும் பாதை கிடைக்கும். அது ஒன்று.

அதேபோல் TNRDC, CSIR road, Ascendas இருக்கிற சாலையில் பாலம் கட்டுகிறார்கள். பாலம் கட்டுகின்ற இடத்தில் மின்சார கேபிள் கீழே செல்கிறது. மின்சார கேபிள் செல்லும் பாதையின் மேலேயே பாலம் அமைக்கிறார்கள். எதிர்காலத்தில், ஒருவேளை, பராமரிப்புப் பணி மேற்கொள்ள வேண்டுமானாலும் பாலத்தின் basement–ஐ தகர்த்துப் பார்க்கும் நிலை இருக்கிறது. அதை உடனடியாகச் சரிசெய்து தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். குடிசை மாற்று வாரியம்; இத்துறையைப் பொறுத்தவரையில் சுமார் 1.50 இலட்சம் ரூபாய்க்கு 15, 20 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியவர்களுக்கு இன்னும் Sale Deed தரப்படவில்லை. Sale Deed தராமலேயே, 20 வருடங்கள் கழிந்துவிட்டன. அதன் மதிப்பை, தங்கத்தின் மதிப்பிற்கு ஈடாக வைத்தால் இன்றைக்கு 15 இலட்சம், 16 இலட்சம் ஆகிவிட்டது. அவர்களுக்கு இன்னும் EWS–Economically Weaker Section–ல்தான் வீடு கட்டித் தருவேன் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், தயவுகூர்ந்து, அதனை LIG–Low Income Group–ல் flat ஆக கட்டித்தர வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள்.

இவையெல்லாம் போக, நமக்கு இலாபம் மிக்க இரண்டு துறைகள் இருக்கின்றன. ஒன்று, TASMAC; மற்றொன்று TANGEDCO.

[திரு. JMH. அசன் மௌலானா] [2021 செப்டம்பர் 7

இந்த TANGEDCO–வை பொதுத் துறை நிறுவனமாக–Public Limited Company ஆக ஆக்கினால் அரசுக்கு மிகப் பெரிய வருமானம் கிடைக்கும். தற்போது ஓர் அறிக்கையில் என்ன சொல்கிறார்கள் என்றால், நம்மால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், wheeling–க்கு வரும்போது, கிட்டத்தட்ட நமக்கு 30 to 40% loss வருகிறது. அதேபோன்று நமது அணுமின் நிலையங்கள் அனைத்தும் பழைய மோட்டார்கள், பழைய machinery கொண்டவையாக பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் புதுப்பித்தால் மட்டுமே, நம்மால் 20,000 மெகாவாட் plant–ஐ கொண்டுவர முடியும். 1000 மெகாவாட் plant என்றால் அதிலிருந்து 1000 மெகாவாட் production capacity கிடைக்க வேண்டும். புதிய machineries கொண்டு வருவதற்கான வாய்ப்பு இருந்தால் மட்டுமே, இதைச் சீர்செய்ய முடியும். இவையெல்லாம் செய்ய வேண்டுமென்றால், இந்த நிறுவனங்களை public sector–க்கு எடுத்துப்போக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்கின்றேன். அதேபோல். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: இன்னும் ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். தளபதி அவர்கள் பதவி ஏற்ற அன்று, அந்த மேடையில் ஏறி நின்று, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்று சொன்னபோது–பாகுபலி படத்தில் பதவி ஏற்றபோது அமரேந்தர் பாகுபலி எனும் நான் என்று சொல்லும்போது ஒரு மனிதனுக்கு என்ன வீரியம் ஏற்படுமோ, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வீரியம் எனக்கே ஏற்பட்டது. அந்த அளவிற்கு ஓர் அற்புதமான வெற்றியைக் கொடுத்த தமிழக மக்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம், Jai Hind.

தொகுதிக் கோரிக்கைகள்

வேளச்சேரி ஏரியை ஆழப்படுத்தி, கரையைப் பலப்படுத்தி, அகலப்படுத்தி, படகு குழாமாகவும் சுற்றுலாத் தலமாகவும் மாற்றியமைக்க வேண்டும்.

கிராம நத்தம்/நத்தம் புறம்போக்குப் பகுதிகளில் பலகாலமாக வாழ்ந்துவரும் ஏழை மக்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும்.

வார்டு எண் 179–காந்தி சாலை மற்றும் அதனை ஒட்டியுள்ள சர்வே எண்கள் 125, 126, 127, 128, 133, 134, 135, 136, 137, 138, 139,

2021 செப்டம்பர் 7] [திரு. JMH. அசன் மௌலானா]

142, 143, 144, 145, 148 (125 முதல் 148 வரை) மற்றும் வார்டு எண் 179–அம்பேத்கர் காலனி–சேஷாத்ரிபுரம்–செல்லியம்மன் நகர் பகுதிகளில் குடிசை மாற்று வாரிய வீடுகள் ஒதுக்கீடு செய்து பல ஆண்டுகளாக வசித்துவரும் மக்களுக்கும், நேரு நகர், பாரதி தெரு (வார்டு எண் 177) சோனி நகர் (வார்டு எண் 179) பகுதியில் வசித்து வருபவர்களுக்கும் கிரய பத்திரம் வழங்க வேண்டும்.

குடிசை மாற்று வாரிய இடங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு இதுவரை ஒதுக்கீடு ஆணை வழங்கப்படாதவர்களுக்கு உடனடியாக அவற்றை வழங்க வேண்டும்.

வார்டு எண் 175, அடையாறு, இந்திரா நகர் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான சமூக நலக்கூடத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். இப்பகுதியிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை தனியார் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுத் தர வேண்டும்.

வார்டு எண் 175, கோட்டூர், கேனல் பாங்க் ரோடு, கோவிந்தராஜபுரம் அறங்கண்ணல் சாலை, மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

வார்டு எண் 176, அடையாறு, அருணாசலபுரம், ராமசாமி கார்டன், பொன்னியம்மன் கோயில் பெசன்ட் அவென்யு, திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் பட்டா வழங்கப்படாத ஏழை மக்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

வார்டு எண் 177, வேளச்சேரி–அம்பேத்கார் நகர் மற்றும் சாஸ்திரி நகர் பகுதிகளில் ஏரிக்கரை ஓரத்தில் தடுப்புச் சுவர் கட்டித் தரவேண்டும்.

வார்டு எண் 177, வேளச்சேரி–பயன்பாட்டில் இல்லாத யோகநரசிம்மர் கோயில் இடத்தில் ஒரு கல்யாண மண்டபமும், வணிக வளாகமும் கட்டித் தர வேண்டும்.

வார்டு எண் 178, வேளச்சேரி–திரௌபதி அம்மன் கோயில் தெருவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியின் வகுப்பறைகளை அதிகரிக்க வேண்டும். பள்ளியின் விளையாட்டு வசதிக்கு, பள்ளியின் அருகில் தண்டீஸ்வரர் கோயில் காலி இடத்தை ஒதுக்கித் தர வேண்டும்.

[திரு. JMH. அசன் மௌலானா] [2021 செப்டம்பர் 7

வார்டு எண் 179, வேளச்சேரி–பாலகிருஷ்ண நகரில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

வார்டு எண் 179, வேளச்சேரி–தண்டீஸ்வரம், 3–வது மெயின் ரோடு, கோயில் நிலத்தை சிறந்த விளையாட்டுத் திடலாக மாற்றியமைக்க வேண்டும்.

வார்டு எண் 179, வேளச்சேரி–காந்தி சாலை, சேவா நகர் மகப்பேறு மருத்துவமனையை மீண்டும் அதே இடத்தில் கொண்டு வர வேண்டும்.

வார்டு எண் 180, தரமணி, கானகம் மயானத்தைச் சீர்செய்து, மயானப் புகைபோக்கிக் குழாயைப் பழுதுநீக்க வேண்டும்.

வார்டு எண் 180, வேளச்சேரி–தரமணி மற்றும் பல்வேறு நகரில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவரும் ஏழை மக்களுக்கு அடிமனைப் பட்டாவும், புதிய மின்னிணைப்பும் வழங்க வேண்டும். இவர்களுக்கு, ஒருமுனை மின்னிணைப்பை மும்முனை இணைப்பாக அமைத்துக்கொடுக்க வேண்டும்.

வார்டு எண் 182, திருவான்மியூர், சர்வே எண் 191, 192–ல் கிராம நத்தத்தில் வசிக்கும் 70 குடும்பங்களுக்குப் பட்டா வழங்க வேண்டும்.

திருவான்மியூர் பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு, புதிய பேருந்து நிலையமாக அமைத்து, சுற்றுச்சுவர் அமைத்துத் தரவேண்டும்.

மருந்தீஸ்வரர் தெப்பக்குளம் அருகே உள்ள பிள்ளையார்கோயில் தெருவில் 300 சதுர அடி காலிமனையில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

திருவான்மியூர் ECR–ல் அமைந்துள்ள அருள்மிகு மருந்தீஸ்வரர் திருமண மண்டபம் வாடகையை 50% குறைத்து பெற வேண்டும்.

வேளச்சேரியில் இஸ்லாமியர்களுக்கு ஒரு மயான பூமி ஏற்படுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. க. தேவராஜி அவர்கள்.

2021 செப்டம்பர் 7]

***திரு. க. தேவராஜி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். சட்டமன்ற சன்னிதானத்தில் உரையாற்ற, உயர்ந்த சந்தர்ப்பத்தை வழங்கிய, ஈரோடு போராளி தந்தை பெரியார், வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று உலகிற்கு சொன்ன அண்ணா அவர்கள், கதறும் நீலக் கடலின் மடியிலும் கண் உறங்குகின்ற முத்தமிழ் வித்தகர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஒப்பற்ற, தளபதி, கழகத்தின் தலைவர், என் நெஞ்சமெலாம் நிறைந்த மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

ஜோலார்பேட்டையின் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட என்னைத் தேர்ந்தெடுத்த எங்கள் மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், கழகத்தின் பொதுச் செயலாளர், சட்டமன்ற பொன்விழா கண்ட நாயகர், மாண்புமிகு அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. தனது அயராத கொள்கை பிரச்சாரம்மூலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்துவதற்கு பிரச்சாரம் மேற்கொண்ட ஆற்றல்மிக்க, ஆயிரங்கால் மண்டபம், மாண்புமிகு மாநில இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், திரு. உதயநிதி ஸ்டாலின் அண்ணன் அவர்களுக்கு, என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

மாண்புமிகு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கழகத்தினுடைய வேட்பாளராக்கி, உதயசூரியனை சுமந்துசெல்ல ஒரு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கும், அவருடைய மேலான வேண்டுகோளை ஏற்று, வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், ஒன்றியச் செயலாளர்கள், நகர செயலாளர்கள், தோழமைக் கட்சி நண்பர்கள், கழக முன்னோடிகள் ஆகியோர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி நிறைந்த பூக்களை காணிக்கையாக்குகிறேன்.

[திரு. க. தேவராஜி] [2021 செப்டம்பர் 7

திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், கொத்தக்கோட்டை ஊராட்சியில் 1984 ஆம் ஆண்டு கிளைக் கழகச் செயலாளராகவும், 3 முறை மாவட்ட பிரதிநிதியாகவும், 6 முறை ஒன்றிய கழகச் செயலாளராகவும், 1 முறை மாவட்ட கவுன்சிலராகவும், 2 முறை ஒன்றியக் குழு தலைவராகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் இரண்டு முறையும், வாணியம்பாடி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் ஒரு முறையும், பணியாற்றி, மாவட்டக் கழக பொறுப்பாளராகச் செயல்பட்டு வருகிறேன். தொடர்ந்து கழக பணியாற்றிட வாய்ப்பு கொடுத்துவரும் கழகத்தினுடைய தலைவருக்கு நான் என் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு" என்றார் பேரறிஞர் அண்ணா. தந்தை பெரியார் கனவுகள் எழுந்து, நடமாட, கடந்த கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைவேற்றாத, இட ஒதுக்கீடு என்ற கொள்கைக்குக் குரல் கொடுத்து, தலைமைத் தாங்கி, சட்டப் போராட்டத்தை நடத்தி இந்திய துணைக் கண்டத்திலேயே மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 27 சதவிகிதம் பெற்றுத்தந்து சட்டத்தின் மாட்சியை உலகிற்கு உரத்த குரலில் சொன்ன ஒரே முதல்வர், எங்கள் தளபதி, தங்கத் தளபதி. தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், தளபதி அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் கட்டியவர்கள், கோயிலுக்குள்ளே செல்லக் கூடாது, கோபுரத்தை மட்டும் தரிசிக்க வேண்டும், பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது, தோளுக்கு மேல் துண்டை அணியக் கூடாது, காலில் செருப்பை போடக் கூடாது, முழங்காலுக்குக் கீழே வேட்டி அணியக் கூடாது என்று வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு இன்று கோயிலில் அர்ச்சனை செய்யும் உரிமைகளை சட்டத்தின் மூலமாக பெறுவதற்கு சட்டம் நிறைவேற்றி வரலாற்றுச் சாதனை நிகழ்த்திய கழகத்தினுடைய ஆட்சிதனைத் தந்த தலைவர், கழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தமிழகத்தினுடைய மக்கள் இதயத்திலே வைத்து நன்றியுடன் வணங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போராளிகள் புதைக்கப்படுவதில்லை மாறாக விதைக்கப்படுகிறார்கள் என்பதற்கேற்ப, மண்ணுக்குள் போனாலும்,

2021 செப்டம்பர் 7] [திரு. க. தேவராஜி]

மக்களின் கண்ணுக்குள் நிற்கும் கலைஞரினுடைய உடல் அடக்கம்கூட சட்டப் போராட்டத்தால் மட்டுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் சாத்தியமானது. இதை உலகமே வியந்து பாராட்டியது. "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்று சொல்கிறார்கள். ஆனால், இந்தப் பெருமை, கழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், தளபதி அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் மரபுசாரா மின்சாரமான சூரிய ஒளி மின்சாரம் தயாரிப்பதற்கு 90 சதவிகிதமாக இருந்த மானியத்தை கடந்த ஆட்சியில் 70 சதவிகிதமாகக் குறைத்ததால், விவசாயிகள் 30 சதவிகித பங்களிப்பை செலுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆட்சியில் செய்த இந்தத் தவறைச் சரி செய்து, 90 சதவிகித மானியத்தை வழங்கினால், விவசாயிகள் அதிக அளவில் பயனடைவார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

கழக அரசால் துவங்கப்பட்ட மின் உற்பத்தி திட்டங்களிலிருந்துதான், கடந்த காலத்தில் மின்சாரம் வழங்கப்பட்டது. டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம்தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் என்ற வகையில் வழங்கப்பட்டது. கடந்த கால அண்ணா தி.மு.க. ஆட்சியில் தமிழகம் மின்மிகை மாநிலமாக இருந்தது என்று எல்லோரும் தவறான செய்திகளைப் பரப்பியதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களின் செயல்பாடு, மக்களின் தேவைகளை அறிந்து பல சாதனைகளைப் புரிந்தது தி.மு.க. அரசு. கலைஞர் ஆட்சிக் காலத்தில், அரசை நீதிமன்றங்கள் பல்வேறு காலகட்டங்களில் பாராட்டியுள்ளன. சமச்சீர் கல்வித் திட்டம் உட்பட பல உதாரணங்களைச் சொல்லலாம்.

சிறைத் துறை என்பது தண்டனை வழங்குகிற கூடமாக மட்டுமல்லாமல், மறுவாழ்வு மையமாக, சீர்திருத்த நிலையமாக மாற வேண்டும் என்று விரும்புகிற தலைவர், நம் தலைவர். அவர்களின் கல்வித் தகுதி, தொழிற்கல்வி தகுதிக்கேற்ப சுய

[திரு. க. தேவராஜி] [2021 செப்டம்பர் 7

தொழில்புரிய பயிற்சி மையங்கள் உருவாக்கிய ஆட்சி கலைஞர் ஆட்சி. அதை மீண்டும், மீண்டும் தொடர வேண்டுமென்று விரும்புகிற முதல்வர்தான், நமது தமிழகத்தின் முதல்வர் தளபதி அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தொகுதிக் கோரிக்கைகள் இருந்தால் கொடுத்து விடுங்கள், அவற்றைப் படித்ததாக ஏற்று பதிவு செய்து கொள்ளலாம்.

திரு. க. தேவராஜி: இளம் வயது கைதிகளெல்லாம் பள்ளி மாணவர்களைப்போல் படித்து பட்டம் பெற கல்விக்கூடம், தொழில்கூடம் உருவாக்கித் தந்தவர் தங்கத் தலைவர் கலைஞர் அவர்கள். அதேபோல் நமது முதல்வர் அவர்களும் சீர்திருத்தப் பள்ளிகளில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையின் ஊட்டி என்று அழைக்கப்படுகிற ஏலகிரி மலை, தேசிய நெடுஞ்சாலையின் அருகில் உள்ள மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. இந்த ஏலகிரி மலையில்தான் சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுக் காலத்திற்குப் பின்னரும் மின்சாரத்தைப் பார்க்காத கீழ்காடு, கெட்காடு கிராமங்கள் இருந்தன. அந்தக் கிராமங்களுக்கு தளபதி ஆட்சி அமைந்ததும், 100 நாட்களுக்குள் சட்டமன்ற உறுப்பினரான என் முயற்சியால் 47 மின் கம்பங்கள்மூலம் சுமார் 50 குடும்பங்களுக்கு மின்சார வசதி செய்துதரப்பட்டது. மேலும், சாலை வசதி, குடிநீர் வசதி போன்றவற்றையும் தமிழகத்தின் முதல்வர் அவர்களின் ஆசியோடு செய்து கொடுப்பேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில், ஏலகிரியில் தாவரவியல் பூங்கா சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் அரசு புறம்போக்கு தரிசு நிலங்களில் அமைக்க ஆணை பிறப்பித்து, நிதி ஒதுக்கீடு செய்த நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் பணி நடைபெறாமல் முடங்கிப் போய்விட்டது. எனவே, அந்தப் பூங்காவின் பணி தொடர தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, சுற்றுலாத்தலமாக்க உதவிடுமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. க. தேவராஜி]

பிற்பகல் 1–25

மேலும், பரந்து விரிந்த வேலூர் மாவட்டம், மூன்றாகப் பிரிக்கப்பட்டதில் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு என்று மருத்துவக் கல்லூரி ஏதும் இல்லை. எனவே, ஏலகிரி மலையடிவாரத்தில் சுமார் 150 ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த இடத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைத்துக் கொடுக்க ஆணை பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

எனது ஜோலார்பேட்டை தொகுதி, நாட்றாம்பள்ளி வட்டத்தில் சுமார் 200 ஏக்கர் தரிசு நிலம் உள்ளது. அந்த நிலத்தினை அடையாளம் கண்டு, பின்தங்கிய தொகுதியான ஜோலார்பேட்டையில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், இங்கிருந்து அண்டை மாநிலத்திற்கு வேலைக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஏதுவாக இருக்கும் என்பதால், அதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதியின் தலைமையிடமான ஜோலார்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமாக ஒரு பேருந்து நிலையம் இல்லை. எனவே, ஒரு பேருந்து நிலையம் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் மகளிர் அரசுக் கல்லூரி இல்லை. எனவே, ஜோலார்பேட்டை தொகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத்தர ஆணை பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

ஜோலார்பேட்டை நகரத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித்தர ஆணை பிறப்பிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீதிக் கோரிக்கைகளை என்னிடத்தில் கொடுங்கள். அவை படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. க. தேவராஜி: புதிய உறுப்பினர்; இரண்டு நிமிடங்கள் கொடுங்கள் தலைவரே. ஜோலார்பேட்டை தொகுதியில் டாக்டர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டமான உழவர் சந்தையை ஏழை விவசாயிகளின் பயன்பாட்டுக்கு அமைத்திட ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

[திரு. க. தேவராஜி] [2021 செப்டம்பர் 7

திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும், அனைத்துத் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவாக்கம் செய்துதரக் கோருகிறேன். ஜோலார்பேட்டை தொகுதியில் 61 கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்து, மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. க. தேவராஜி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களின் துணிவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கனிவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் கடமை உணர்வும் ஒருங்கே பெற்ற ஒரே சாட்சி, தமிழகத்தின் முதல்வர் தளபதி அவர்கள். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் நிராகரிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டெடுத்து, மக்களின் வறுமையை நீக்குவதற்கும், சமதர்ம சமத்துவ சிந்தனை, உன்னதமான திட்டங்கள் இவற்றால் ஏழைகளின் வாழ்வில் நம்பிக்கை விளக்கை ஏற்றி வைக்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கு என்றும் என் நெஞ்சார்ந்த நன்றி. என் எஞ்சிய ஆயுளையும் எடுத்துக்கொண்டு கலைஞருடைய நல்லாட்சி என்றும் நீடிக்க வேண்டுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டி, கால்வாய்மூலம் திருப்பத்தூர் தொகுதியிலுள்ள காக்கங்கரை ஏரி, ஜோலார்பேட்டை தொகுதியிலுள்ள சந்திரபுரம் ஏரி வழியாக வாணியம்பாடி தொகுதி வரையிலும் அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் கொண்டுவந்தால் இந்த மாவட்டத்தில் விவசாயம் செழிப்படையும், குடிநீர் பிரச்சினை தீரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய விளைபொருட்களைப் பாதுகாக்க குளிர்சாதன கிடங்கு வசதி ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதி, வெலக்கநத்தம், செட்டேரி அணையின் உபரிநீர் செல்லும் கால்வாய் குனிச்சியூர் முதல்

2021 செப்டம்பர் 7] [திரு. க. தேவராஜி]

அச்சமங்கலம் வரை சுமார் 18 கி.மீ. நீளக் கால்வாய் கடந்த ஆட்சியில் தூர்வாரப்படவில்லை. இந்தக் கால்வாயினைத் தூர்வாரினால் அனைத்து ஏரி, குளங்களும் நிரம்பி விவசாயம் பெரியளவில் செழிக்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜோலார்பேட்டை தொகுதியில் கே.பந்தாரப்பள்ளி அருகில் ஓடும் சரஸ்வதி பிரதான ஆற்றின் ஜெயந்திபுரம் தடுப்பணை முதல் பெரியமோட்டூர் வரை சுமார் 15 கி.மீ. நீளக் கால்வாயைத் தூர்வாரி, அகலப்படுத்தி, கரையைப் பலப்படுத்திட வேண்டும்.

தகரகுப்பம் எல்லையில் ஆரம்பமாகும் கல்லாற்றினை, நெக்குந்தி கிராமம் வரை சுமார் 17 கி.மீ. தூர்வாரி, அகலப்படுத்தி, தடுப்பணைகளை ஆங்காங்கே கட்டினால் விவசாயம் பெரியளவில் செழிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வாணியம்பாடி நகரத்தில் இரயில்வே சுரங்கப்பாதை அமைப்பதற்கு வேலை துவங்கப்பட்டு, சில காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால், மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயாளிகள், உழவர் சந்தைக்குப் போகும் விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் நான்கு கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகள் என அனைவரும் மிகவும் சிரமப்படுகிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து, இந்தப் பணி தொடர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் ஒன்றியத்தில் நெக்கனாமலை பகுதியில் சுமார் 600 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத நிலையில், மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால் மலைப்பாதை வழியாக டோலிகட்டி தூக்கிக்கொண்டுதான் வருகிறார்கள். விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒன்றிய அரசின் அனுமதி பெற்று, சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

ஆலங்காயம் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி அரசு மருத்துவமனையாக மாற்றிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன்.

[*2021 செப்டம்பர் 7*

***திரு. இ. பரந்தாமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆணாக இருந்தாலும் அவையில் முதலில் பேசுவதால் என் பேச்சு கன்னிப் பேச்சு என்றே காது கொடுப்பீர்கள்; காதலையும் கொடுப்பீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாய் நீங்கள் எதைக் கொடுத்தாலும், அதை முத்தமாய் வாங்கிக்கொள்ளும் முனைப்பு எனக்குண்டு. தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் கடந்த ஒரு நூற்றாண்டு என்பது திராவிட இயக்கத்தின் தாக்கம் நிறைந்த நூற்றாண்டு. மாண்புமிக்க இந்தச் சட்டமன்றமும் ஒரு நூற்றாண்டு பெருமை கொண்ட மன்றமாகத் திகழ்கிறது. பெருமைமிக்க இந்தச் சட்டமன்றத்தில் திருவுருவப் படங்களாக பல தலைவர்கள் நிலைபெற்றிருக்கிறார்கள்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா) தலைமை]

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்கள். ஆனால், அவரோ ஊரையே கோயிலுக்குள் கொண்டுபோக நினைத்தவர். அவர்தான் நம் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகத்தான மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தலைமகன். நாம் கக்கத்தில் இடுக்கிய கைத்தறித் துண்டை, நாம் கக்கத்தில் இடுக்கிய கைத்தறித் துண்டை, பொன்னாடையாக்கிய போர் வீரன். அவர் மட்டும் காஞ்சி மாநகரில் கண் விழிக்காது போயிருந்தால் என்றைக்கோ காமகோடிகள் எம்மை காணாபிணமாக்கி காரியத்தை முடித்திருப்பர். நமக்கு மொழி, இன உணர்வை ஊட்டியவர் பேரறிஞர் அண்ணா.

பிற்பகல் 1–30

மாநில சுயாட்சியின் உரத்த குரலாக, சமூக நீதியின் தலைமகனாகத் திகழ்ந்த அவரோ காரல்மார்க்சின் கார்பன் காப்பி. ஆனாலும் ஓர் அதிசயம். அவரை எப்போது பிரதி எடுத்தாலும் அது அத்தனையும் கருப்பு, சிகப்பாகவே தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர், இரு குவளை ஏன்? என்று கேள்வி கேட்ட திருக்குவளை தேரோட்டம். சக்கர நாற்காலியில் அமர்ந்துகொண்டே அசோக சக்கரத்தை சுழல வைத்த அரசியல் அச்சாணி. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் நம் இதயங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற முத்தமிழறிஞர் நம் கலைஞர். இம்மூவரின் திருவுருவப் படங்கள் நமக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்கி, உத்வேகத்துடன் உழைத்திட

2021 செப்டம்பர் 7] [திரு. இ. பரந்தாமன்]

ஊக்கம் தந்துகொண்டிருக்கின்றன. இனமான பேராசிரியரை வணங்குகின்றேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் நம்மிடையே இல்லை என்கின்ற எண்ணம் சிறிதும் ஏற்படாதவண்ணம் உழைப்பின் முழுவடிவமாக, பொறுமையின் உயர்சிகரமாக, தலைமைப் பண்புக்கு முதன்மை எடுத்துக்காட்டாக, தொண்டுள்ளத்தால் கடைகோடி மக்களுக்கும் துணைநின்று நம்பிக்கைத் தருகிறவராக, இந்தியாவின் முதல்வர்களில் முதல்வர் என நாடும், ஏடும் போற்றும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி வழங்கிவரும் நம் கழகத் தலைவர், பெரியாரின் கடமை, அண்ணாவின் கண்ணியம், கலைஞரின் கட்டுப்பாடு மூன்றும் சேர்ந்த முத்திரை வாசகம், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பகைவனுக்கு அருள்கின்ற பாசத்தில் வள்ளலார், அக இருளை அழித்தொழிக்கும் அயோத்திதாசர், பாராயண பம்மாத்துக்களை பஸ்பம் ஆக்குகின்ற நவீன நாராயண குரு, எழுதிய சட்டங்களைப் போற்றவும், மாற்றவும் எழுந்து நிற்கின்ற இரண்டாவது அம்பேத்கர், புகழ்மொழிக்கு மயங்காத புத்திமான். நம் முதல்வர், புகழ்மொழிக்கு மயங்காத புத்திமான். தழும்பூரில் தவித்திருந்த என்னை எழும்பூரில் எழவைத்த சக்திமான். (மேசையைத் தட்டும் ஒலி) தழும்பூரில் தவித்திருந்த என்னை எழும்பூரில் எழவைத்த சக்திமான். என் முகமும் நீயே! என் அரசியல் முகவரியும் நீயே! கழகத் தலைவரே, மாண்புமிகு தமிழக முதல்வரே, உனக்கு கோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தியாகத்தால் ஒளிரும் திராவிடச் சுடரொளி, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வெளிச்சம் தரும் அழகுமதி, உதயநிதி. கல்லில் என்ன இருக்கிறது என்று காலந்தோறும் தந்தை பெரியார் கேட்டார். கல்லில் என்ன இருக்கிறது என்று காலந்தோறும் தந்தை பெரியார் கேட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஒரே கல்லில்தான் இந்திய அரசியல் இருக்கிறது என்று பெருமைமிகு கல்லாக்கிய பேரழகன் தோழர் உதயநிதி, பெரியாரின் பேரன் தோழர் உதயநிதி! எளிய மக்களுடன் நீ இணைந்து ஆற்றும் செயல்கள், விடியலின் விவரணைகள், பூப்பாக்கம் ஆகிவரும் சேப்பாக்கத்தின் செல்லமே, நீ ஒருபுறத்தில் கல், மற்றொருபுறத்தில் கண்ணாடி, மோதினால் கல்லாகிறாய், முகம் காட்டினால் கண்ணாடியாகிறாய். (மேசையைத் தட்டும் ஒலி) உன் அன்பின் கொப்பரையில் மண்மீனான நானுமே விண்மீனாகும் விசித்திரம் காண்கின்றேன். அன்புள்ளம் கொண்ட

[திரு. இ. பரந்தாமன்] [*2021 செப்டம்பர் 7*

தோழரே, நீ இல்லையென்றால், நான் இந்த அவையில் இல்லை; வணங்குகின்றேன் உன்னை. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பேரவையில் பொன்விழா காணும் அவை முன்னவரே, கழகத்தின் பொதுச் செயலாளரே, என் வளர்ச்சியில் அக்கறை கொண்டவரே, வணக்கம். கழகத்தின் முதன்மைச் செயலாளர், கழகத்தின் துணை பொதுச் செயலாளர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துணை சபாநாயகர், அரசு தலைமைக் கொறடா உள்ளிட்ட அனைவருக்கும் என் வணக்கம்.

பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியல் கடலில் வீசியடித்த சூறாவளியில் நான் சிக்கித் தவித்தபோது எனக்கு கலங்கரைவிளக்கமாக இருந்தார் என் தலைவர் முதல்வர் என்றால், என்னைப் பத்திரமாகக் கரை சேர்த்த மாலுமி மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளருமான, என் அன்பிற்கினிய அண்ணன், திரு. சேகர்பாபு அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தேர்தலின்போது ஒருமுறையல்ல, இருமுறையல்ல, 6 முறை என் தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு, என் வெற்றியை தலைவரிடம் பத்திரமாக கொண்டுசேர்த்த அவரது உழைப்பிற்கு நான் தலைவணங்குகின்றேன். வேறு வார்த்தை அறியாது தவிக்கின்றேன்.

நான் வெற்றி பெறுவதற்காக பிரச்சாரம் மேற்கொண்ட மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், எனக்கு பரப்புரை மேற்கொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் முனைவர் தொல் திருமாவளவன் அவர்களுக்கும், திரு. நாஞ்சில் சம்பத் அவர்களுக்கும், திரு. சுப. வீரபாண்டியன் அவர்களுக்கும், தோழர் திரு. முத்தரசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொண்டுள்ளம் கொண்டு தூய நோக்கோடு, தி.மு.கழகம் ஆட்சிக்கு வர வேண்டுமென்கின்ற ஒரே உன்னத நோக்கத்தோடு உழைத்திட்ட தோழமைக்கட்சித் தோழர்களுக்கும், எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து இரவு பகல் பாராது பணியாற்றிய எழும்பூர் பகுதி கழகச் செயலாளர்கள், திரு. விஜயகுமார், திரு. வேலு மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. இ. பரந்தாமன்]

என்னை 38,768 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த என் எழும்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு கோடானுகோடி நன்றியை நான் உரித்தாக்குகின்றேன்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலன் அவர்கள் பேசும்போது, இது பெருமைக்குரிய பாட்டனார்களின் பேரன்கள் இருக்கும், இடம்பெற்றிருக்கும் அவை என்று குறிப்பிட்டார். உண்மைதான் அத்தோடு, இது என்னைப்போன்ற சாதாரண புதிய தலைமுறையினர் இடம் பெற்றிருக்கும் அவை. எல்லாம் திராவிட சபை என்பதில் நான் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் எழும்பூரிலிருந்து வரவில்லை; எழுமூரிலிருந்து வந்திருக்கிறேன். சோழர் காலத்தில் 'எழுமூர்' என்று அழைக்கப்பட்ட இடம்தான் இப்போது 'எழும்பூர்' என்றும், 'Egmore' என்றும் அறியப்படுகிறது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டில் ஒரு நிர்வாகப் பிரிவுக்காக தலைநகரமாக எழுமூர் நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1267–ல் பொறிக்கப்பட்ட நெல்லூர் சோழர் கல்வெட்டில் எழுமூர் துடர்முடிநாடு என்ற கிராமம் புழல் கோட்டத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயநகர காலத்தில் ஸ்ரீரங்காத யாதவராய கல்வெட்டில் திருவொற்றியூர் இருந்த மடத்திற்கு எழுமூர் துடர்முடிநாட்டின் இன்றைய சேத்துப்பட்டு பகுதியில் வசித்து வந்தவர்கள் மானியம் கட்டியதாக செய்திகள் உள்ளன. இவை மூன்றுமே எழுமூரையே குறிக்கும். பின்னர், இந்த 'எழுமூர்', மக்கள் பேச்சில் திரிந்து 'எழும்பூர்' ஆனது. 'ழ'–கரத்தை உச்சரிக்க இயலாத ஆங்கிலேயர்கள் தங்கள் ஆவணங்களில் 'எழும்பூர்' என்பதை 'Egmore' என்று குறித்தனர். 'Egmore' என்பது தமிழ்ச்சொல் அல்ல. 'எழும்பூர்' என்பதும் தமிழ் இலக்கணத்தின்படி வைக்கப்பட்ட பெயரும் அல்ல. எனவே, 900 ஆண்டுகளுக்கு முந்தைய பெருமை தொடர 'எழும்பூர்' என்னும் பெயரை 'எழுமூர்' எனத் திருத்தம் செய்து ஆங்கிலத்தில் 'EZHUMOOR' எனக் குறிப்பிட்டு அரசாணை வெளியிட வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. இ. பரந்தாமன்] [*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையெல்லாம் நான் உங்களிடம் எழுத்துமூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றை பேசியதாகக் கருதி, நீங்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதைத்தாண்டி முக்கியமான ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் நான் இந்த அவையிலே வைக்கிறேன். சென்னை என்றால் எழும்பூர். இப்போது நான் சொன்னதுபோல 'எழுமூர்'. அந்தச் சென்னை 'எழுமூர்' இரயில் நிலையத்திற்குத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயர் நம்முடைய அரசால் சூட்டப்பட வேண்டுமென்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய இந்த பணிவான வேண்டுகோளை நான் தங்கள் வாயிலாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பணிவன்போடு வைக்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சுதந்திர இந்தியாவில் ஒரு முதலமைச்சரை, ஊழலுக்கு குற்றம் சாட்டி சிறைக்குத் தள்ளும்வகையில் வழக்கு நடத்திய வல்லமை படைத்த திராவிட முன்னேற்றக் கழக சட்டத் துறையின் இணைச் செயலாளராக, வழக்குறிஞராக, இந்தச் சட்டத் துறை மானியத்தில் பேச அனுமதி அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு திட்டங்களை மட்டும் தீட்டவில்லை; நல்ல சட்டங்களையும் தீட்டியுள்ளது. பொது நுழைவுத் தேர்வு இரத்து; சிறுபான்மையினருக்கு 3.5 சதவிகித தனி இட ஒதுக்கீடு; அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டம்; அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு; ஏன், இந்தக் கூட்டத் தொடரிலேகூட, பத்திரப் பதிவுத்துறையில் மிகச் சிறப்பான இரண்டு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால், ஆடு வெட்டுவதையோ, கோழி வெட்டுவதையோ தடை செய்வதற்கும், ESMA, TESMA போன்ற மக்கள் விரோதச் சட்டங்களையும் இயற்றிய அரசு நம்முடைய அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு எப்போதும் பயன்படுகிற சட்டங்களை இயற்றிய வரலாறு மட்டும்தான் உண்டு.

அண்மையில் மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்த நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்மொழியை நம் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதேவேளையில், உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தியமைக்கு என் நெஞ்சார்ந்த

2021 செப்டம்பர் 7] [திரு. இ. பரந்தாமன்]

நன்றியை நான் தெரிவித்துக்கொள்வதோடு, மிக விரைவில் இது நடைமுறைக்கு வரும் வகையில், அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு வங்கம், மகாராஷ்டிரம், கேரளம், மிசோரம், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், பஞ்சாப், சட்டீஸ்கர் உள்ளிட்ட 8 மாநிலங்கள், மத்தியக் குற்றப் புலனாய்வு அமைப்பு (CBI) மாநில அரசின் அனுமதியுடன்தான் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்னும் முடிவை எடுத்துள்ளன. அதேபோல், தமிழக அரசும் General consent என்னும் முறையை இரத்து செய்து, மத்தியக் குற்றப் புலனாய்வு அமைப்பு இனி தமிழக அரசின் அனுமதியோடுதான் விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்கின்ற தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் கொண்டு வர நான் வேண்டுகிறேன்.

உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை தமிழகத்தில் அமைத்திட நடவடிக்கை எடுக்க நான் வேண்டுகிறேன்.

முதன்முதலில் 1990–ல்தான் தலைவர் கலைஞர் அவர்களால் வழக்கறிஞர்களுடைய சேம நல நிதி அறிமுகப்படுத்தப்பட்டது. அது இன்றைக்கு 7 இலட்சமாகத் தரப்பட்டு வருகிறது. அதனை 10 இலட்சமாக உயர்த்தித்தர நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வழக்கறிஞர்கள் பயிற்சிபெற, திறம்பட வழக்குகளை நடத்திட Judicial Academy போன்று Law Academy ஒன்றை தமிழ்நாட்டில் நிறுவிட நான் வேண்டுகிறேன். இதுபோன்ற ஒரு Academy கோவா மாநிலத்தில் இருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1–40

ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் பல மாவட்டங்களில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன என்றாலும்கூட, சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ளதுபோல வழக்கறிஞர்கள் அறை (Law chambers) அந்நீதிமன்றங்களில் இல்லை. எனவே, மாவட்ட, சார்பு மற்றும் கீழமை நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் அறை கட்டித்தரப்பட வேண்டுமென வேண்டுகிறேன்.

எல்லா மாவட்ட நீதிமன்றங்களிலும் முதலுதவி மையம், மருத்துவ உதவிக்கென Medical dispensary ஆகியவற்றை அமைக்க வேண்டுகிறேன்.

[திரு. இ. பரந்தாமன்] [*2021 செப்டம்பர் 7*

வழக்கறிஞர்களுக்கு வீடு கிடைப்பதில்லை. அதற்கு நானே ஓர் உதாரணம். எனவே, affordable price*–ல் வீடு வழங்கும் திட்டம் ஒன்றை அரசு வகுக்க நான் வேண்டுகிறேன்.*

All India Judicial Service System *என்கின்ற ஒரு* system*–ஐ ஒன்றிய அரசு கொண்டுவர முற்படுகிறது. அதனை நமது அரசு கடுமையாக எதிர்க்க வேண்டும்.* All India Judicial Service System *என்பது* NEET *சட்டத்தைப் போன்ற மிகப் பெரிய, கொடுமையான ஒரு சட்டம்.* All India Judicial Service System *மூலமாக என்ன பாதிப்பு ஏற்படும் என்று சொன்னால், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கீழமை நீதிமன்றங்களில் எங்கெல்லாம்* vacancies *இருக்கிறதோ, அவற்றிற்கெல்லாம் இந்திய அளவில் ஒரு தேர்வு நடத்தி, பீகாரில் இருக்கிறவர் தேர்வு எழுதி, இங்கிருக்கக்கூடிய பெரியகுளம்* Magistrate *ஆக வரக்கூடிய ஓர் அபாய நிலை இருக்கிறது. எனவே, அதனை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை நாம் தடுக்க வேண்டும். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த. . .*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *மாண்புமிகு உறுப்பினர், கொஞ்சம் சீக்கிரமாக உரையை முடியுங்கள். ஏற்கெனவே 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

திரு. இ. பரந்தாமன்: *நான் கன்னிப் பேச்சு பேசுகிறேன் ஐயா. கொஞ்சம்* time *கொடுங்கள்,* please.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *இருந்தாலும், இன்னும் உறுப்பினர்கள் பேசி, இரண்டு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டியிருக்கிறது. கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. இ. பரந்தாமன்: *சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): *நீங்கள் உட்காருங்கள். அடுத்து, நீங்கள் பேசும்போது பதில் சொல்லிக்கொள்ளலாம்.*

2021 செப்டம்பர் 7]

திரு. இ. பரந்தாமன்: உயர் நீதிமன்றத்திற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே ஒரு தேசிய ஆணையத்தை அமைப்பதற்காக ஒன்றிய அரசு முற்படுகிறது. இதனைத் தமிழக அரசு ஒருமனதாக எதிர்க்க வேண்டும். காரணம், இதனால் வழக்கினுடைய காலம் நீட்டிக்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சி சட்டங்களில், 205–வது பிரிவைப் பயன்படுத்தி, தவறு செய்த ஊராட்சி மன்றத் தலைவர்கள்மீது நாம் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால், சுதந்திர இந்தியாவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சிலர், தீண்டாமை பழக்கத்தின் காரணமாக தேசியக் கொடியைக்கூட ஏற்ற முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை பத்திரிகைகளிலே செய்திகளாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இவற்றையெல்லாம் தடுக்க வேண்டுமென்றால், ஊராட்சி சட்டத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிற மக்கள் பிரதிநிதிகள் தங்கள் பதவியை இழப்பார்கள் என்ற ஒரு ஷரத்தைக் கொண்டு வந்தால், இத்தகைய குற்றங்கள் நடப்பதைத் தடுக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

வழக்கறிஞர்களுக்கு மருத்துவக் குழுக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த நான் வேண்டுகிறேன்.

உயர் நீதிமன்றத்தின் அருகிலேயே Staff Guest House ஏற்படுத்த வேண்டும். இதை நான் கேட்பதற்கான காரணம், பிற மாவட்டங்களிலிருந்து கீழ்நிலை அரசு ஊழியர்கள் எல்லாம் சென்னையில் Government Pleader–ஐ, Public Prosecutor–ஐ பார்த்து instructions கொடுப்பதற்காக, நீதிமன்றத்திலே வழக்குகளை நடத்துவதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் தங்குவதற்கு இடமில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய TA, DA–ஐ வைத்துக்கொண்டு, அவர்கள் ஒருநாள் தங்கி வழக்குகளை நடத்த முடியவில்லை. எனவே, உயர் நீதிமன்ற வளாகத்திலே ஒரு Guest House இருந்தது என்று சொன்னால், அவர்கள் தங்கி, அரசு வழக்கறிஞர்களைச் சந்தித்து Counter Affidavit, Affidavit–களை vet செய்து கொண்டு, பணிகளை விரைவாக முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 7 சட்டக் கல்லூரிகள். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றியது போதும்; நிறைய நல்ல points ஆக கொடுத்துவிட்டீர்கள். நீங்கள் கொஞ்சம் சீக்கிரமாக முடியுங்கள். ஏனென்றால் மாண்புமிகு அமைச்சர்கள் இரண்டு பேர் பதிலுரையாற்ற வேண்டும். கடைசி point ஆக சொல்லிவிடுங்கள்.

[*2021 செப்டம்பர் 7*

திரு. இ. பரந்தாமன்: *கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அரசு 7 சட்டக் கல்லூரிகள் மிகுந்த அவசரகதியில், அக்கல்லூரிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் எதையும் உருவாக்காமல்,* Indian Bar Council *இணைப்பும், அனுமதியும் பெறாமல்,* Affiliation *பெறாமல் தொடங்கப்பட்டன. இதனால், இக்கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாவது மட்டுமல்லாமல், போதிய* infrastructure *இல்லாமல்,* Principals *நியமிக்கப்படாமல், தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல், முதுநிலை வகுப்பை எடுப்பதற்கு தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாமல், இக்கல்லூரிகள் அனைத்தும் ஊருக்கு வெளியே இருப்பதனால், போதிய* connectivity *இல்லாமல், அடிப்படை வசதிகளான* computer, library *போன்றவை இல்லாமல் இருக்கின்றன.*

இறுதியாக, முக்கியமான ஒன்றேயொன்றுமட்டும் நான் சொல்லிவிட்டு அமைய விரும்புகிறேன். சட்டத் துறையின் சார்பில் சட்டச் சொல் அகராதி ஒன்று வெளியிடப்பட வேண்டும். Justice *மகாராஜன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சிமொழி ஆணையம் அமைக்கப்பட்டபோது, சட்டச் சொல் அகராதி ஒன்று வெளிவந்துள்ளது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தாலும் சட்டச் சொல் அகராதி ஒன்று வெளியிடப்பட்டு வருகிறது. இவை இரண்டும் முக்கியமானவை என்றபோதும், முழுமையானவை அல்ல. புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தின் சட்டத் துறையின் சார்பில் சட்டம் மற்றும் நிருவாகச் சொற்களஞ்சியம் ஏறக்குறைய 1,400 பக்கங்களைக் கொண்டதாக வெளியிடப்பட்டுள்ளது. அதை முன்மாதிரியாகக் கொண்டு விரிவான சட்டச் சொல் அகராதி ஒன்றை தமிழ்நாடு சட்டத் துறை வெளியிட வேண்டும்.*

பிற்பகல் 1–45

முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் ஆட்சிக் காலத்தில், அவரால் வெளியிடப்பட வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்மூலம் சட்டப் பாடங்களுக்கான தமிழ் பாடநூல்கள் அவசர அவசரமாக அரைகுறையாகவும், ஏகப்பட்ட அச்சுப் பிழைகளுடனும் வெளியிடப்பட்டன. அவற்றிலுள்ள குறைகளை நீக்கி, திருத்தியப் பதிப்புகளை வெளியிட முயற்சிக்க வேண்டும்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): Right, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. இ. பரந்தாமன்: கடைசி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் அனைத்து துறை சார்ந்த நூல்களும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டு வருகின்றன. அக்கழகத்தின் சார்பில் சட்டத் துறை சார்ந்த முக்கியமான ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டுமென்று நான் விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அதனால்தான் சொல்கிறேன்.

திரு. இ. பரந்தாமன்: நன்றி சொல்லி முடிக்கிறேன். இன்று சட்டத் துறையும், மின்சாரத் துறையும் இருக்கின்றன. (குறுக்கீடு) நான் பேசவில்லை. மின்சாரத் துறையில் நான் பேசவில்லை. ஒன்றேயொன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை குறித்து அதிகமாகப் பேசுவதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்றேயொன்று. மாண்புமிகு முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். அதாவது, திட்டங்கள் கொண்டுவருவதை எப்பொழுது C.A.G. report பாராட்டியிருக்கிறது என்று கேட்டிருக்கிறார். C.A.G. report பாராட்டவேண்டிய அவசியமில்லை. ஆனால், அதானிக்கு 7 ரூபாய்க்கு ஏன் ஒப்பந்தத்தைக் கொடுத்தீர்கள் என்ற கேள்விதான் நாட்டு மக்கள் முன்னால் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மகாராஷ்டிராவில் 5 ரூபாய்க்குக் கொடுத்தார்கள். நீங்கள் ஏன் 7 ரூபாய்க்குக் கொடுத்தீர்கள்? (குறுக்கீடு)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆட்சேபணை தெரிவித்தனர்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. இ. பரந்தாமன்: ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) முடிக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (முனைவர் T.R.B. ராஜா): அடுத்ததாக உங்கள் உறுப்பினர் பேசுவதற்கான நேரம். அப்பொழுது பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்ததும் வாய்ப்புக் கொடுக்கிறேன்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் என்பது தங்கமும், மணியுமாக மின்னவேண்டிய வாரியம். ஈயமும் பித்தளையுமாக மாறிப்போனதற்கு யார் காரணம்? (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேரிச்சம் பழம் கடைக்கு போனதற்கு யார் காரணம்? கடந்த ஆட்சியாளர்களுடைய பேர் இச்சைதான் காரணம். அந்த பேர் இச்சையினால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. இ. பரந்தாமன்: இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய கடனில் 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதம் அளவுக்கு மின்சார வாரியத்தின்மூலம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், இதற்கு கடந்த ஆட்சியாளர்கள்தான் பொறுப்பு. இன்றைக்கு அதிகப்படியான விலையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, match fixing கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், இவர்கள் purchase fixing செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். யார் தவறு செய்திருந்தாலும். . . (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் உறுப்பினர்

2021 செப்டம்பர் 7] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், அதற்கு ஆதாரத்தைக் காண்பித்துவிட்டு, குற்றச்சாட்டு சொல்லவேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர், முன்னாள் அமைச்சர் தகுந்த விளக்கத்தைக் கொடுத்துவிட்டார். வேண்டுமென்றே குற்றம் சுமத்துவதற்காக உறுப்பினர் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் அமைச்சராக இருக்கின்றபோதே, அதற்கு ஓர் ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுவிட்டது. அங்கே ஆய்வு செய்துகொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் இங்கே தெரிவித்திருக்கின்றார். வேண்டுமென்றே குற்றம் சொல்வதற்காகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு உறுப்பினர்களும் பேசியதற்கான பதிவுகள் இருக்கின்றன. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பரந்தாமன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றி சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

திரு. இ. பரந்தாமன்: ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கிறார். *2013–2018* CAG report *பக்கம் 34–ஐ எடுத்து பார்க்கச் சொல்லுங்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். *2013* முதல் *2018* ஆம் ஆண்டு வரையிலான CAG report, 'திட்டமிட்டு மின்சாரத்தை வாங்க வேண்டுமென்கிற நோக்கத்திற்காக, ஒரு unit கூட தயார் செய்வதற்கு கடந்த அரசு முன்வரவில்லை' என்று குற்றம் சாட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் CAG report–ஐ எடுத்து படிக்க வேண்டும். வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

எழும்பூர் தொகுதியில் உள்ள டிமலஸ் ரோடு, குமாரசாமி ராஜாபுரம் முதல் தெருவில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த

[திரு. இ. பரந்தாமன்] [2021 செப்டம்பர் 7

70 குடும்பங்கள் 1950 ஆம் ஆண்டு முதல் கடந்த எழுபத்தொரு ஆண்டுகளாக வீடு கட்டி வசித்து வருகின்றனர். அவர்கள் வசித்து வரும் இடம் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமானது. இக்குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு இசைவு தெரிவித்திருக்கும் அடிப்படையில், விரைந்து பட்டா வழங்கிட ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சுந்தர் ராவ் நாயுடு தெரு, டாக்டர் நடேசன் தெரு, ரங்கசாமி தெரு ஆகிய மூன்று தெருக்களிலும் 65 குடும்பங்கள் 1926 ஆம் ஆண்டு முதல் வசித்து வருகின்றன. இக்குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஆவன செய்யுமாறு கோருகிறேன்.

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சதாசிவம் தெரு, சாலைமா நகரில் வசித்துவரும் குடியிருப்புவாசிகள் தங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குமாறு நீண்டநாட்களாகத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் கோரி வருகின்றனர். அவர்களுக்குக் கிரையப் பத்திரமும், வீட்டுமனைப் பட்டாவும் விரைந்து வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதியில் உள்ள சூளை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி மற்றும் காசி விசுவநாதசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 250–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொண்டு மூன்று தலைமுறையாக வசித்து வருகின்றனர். இக்குடும்பங்களுக்கு இலவசமாகப் பட்டா வழங்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 104–வது வட்டத்தில் அமைந்துள்ள புல்லாபுரம் பகுதியில் வசித்துவரும் ஏறத்தாழ 350 குடும்பங்களுக்கு Assignment patta வழங்கப்பட்டுள்ளது. இக்குடும்பங்களுக்கு Regular patta வழங்க நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 104–வது வட்டத்தில் அமைந்துள்ள சாஸ்திரி நகரில் வசித்துவரும் 600 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி 104–வது வட்டம் புதிய பூபதி நகரில் வசித்துவரும் குடும்பங்களில், 200 குடும்பங்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுகிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. இ. பரந்தாமன்]

எழும்பூர் தொகுதி, 77–வது வட்டம், புளியந்தோப்பு, போகிபாளையம், கார்ப்பரேஷன் லைன் பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருந்துவரும் 338 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 77–வது வட்டம், புளியந்தோப்பு 1 முதல் 5 தெருக்களில் வசித்துவரும் 400 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதியில், 1. ஸ்ட்ரிங்கர்ஸ் சாலை குடிசைப் பகுதி, 2. நேவல் ஆஸ்பிடல் சாலை 2–வது தெரு, குடிசைப் பகுதி, 3. வீவீகோவில் தெரு குடிசைப் பகுதி, 4. பட்நூரஸ் சந்துஜா தெரு, 5. முத்துக்கிராமின் தெரு, 6. கற்பூர முதலி தெரு, 7. அல்லிகுளம் மூர்மார்கெட் குடிசைப் பகுதி, 8. சைடனம்ஸ் சாலை (ராஜா முத்தையா சாலை), 9. Home for Homeless குடியிருப்பு, 10. பேக்கர் தெரு, 11. ஜெ.ஜெ. நகர் (கண்ணப்பர் திடல்), 12. குருசாமி நகர், 13. கனகராயத் தோட்டம், 14. ராஜா தோட்டம் (ஆத்தூரம்), 15. சிவராஜபுரம் 3–வது தெரு, 16. கே.பி. பார்க் குடிசைப் பகுதி, 17. காத்தூர்–நல்லமுத்து தெரு, 18. சூளை மார்க்கெட், 19. சச்சிதானந்தன் தெரு (குடிசைப் பகுதி), 20. வீராசாமி தெரு, 21. திடீர் நகர் (கண்ணப்பர் திடல்), 22. பேரக்ஸ் ரோடு ஆகிய தெருக்களில் சாலையோரம் பாதுகாப்பற்றும், சுகாதார வசதிகள் இன்றியும் வசித்துவரும் குடும்பங்களுக்கு கே.பி. பார்க் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்பில் வீடு ஒதுக்கித் தரவோ அல்லது அக்குடியிருப்பில் வீடுகள் இல்லையெனில், மேற்சொன்ன தெருக்களில் வசிப்போருக்குப் புதிதாக வீடு கட்டித் தரும் திட்டத்தை அரசு வகுக்கவோ ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, பிரிக்ளின் சாலையில் அமைந்துள்ள திடீர் நகர் பகுதியில் வசிக்கும் மக்கள் சுகாதாரமான முறையில் வசிப்பதற்கு ஏற்றவாறு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அவர்கள் வசிக்கும் பகுதியிலேயே புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்பினைக் கட்டித் தரும் திட்டத்தை அரசு மேற்கொள்ள ஆவன செய்யுமாறு அன்புடன் கோருகிறேன்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண் 61–ல் இயங்கிவரும் டாக்டர் அம்பேத்கர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் அரசினால் அனுமதிக்கப்பட்ட அலுவலக உதவியாளர், இரவுக் காவலர்,

[திரு. இ. பரந்தாமன்] [2021 செப்டம்பர் 7

ஆய்வக உதவியாளர் பணியிடங்களை நிரப்பவும், புதிதாக இரண்டு தூய்மைப் பணியாளர் இடங்களை உருவாக்கித் தரவும் ஆவன செய்யுமாறு கோருகிறேன்.

எழும்பூர் தொகுதி, மோதிலால் தெரு பகுதி பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில், அங்கு புதிதாக நூலகம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண் 61–ல் இயங்கிவரும் டாக்டர் அம்பேத்கர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் பாதுகாப்பாக வந்து திரும்புவதற்கு ஏதுவாக ரமடா ஹோட்டலுக்கு அருகே ஒரு பேருந்து நிறுத்தமும், அதற்கு எதிரில் மாநகராட்சிப் பூங்காவையொட்டி ஒரு பேருந்து நிறுத்தத்தையும் அமைத்து, அப்பேருந்து நிறுத்தங்களில் 17E, 28, 27B, 17D ஆகிய வழித்தடப் பேருந்துகள் நின்று செல்லவும் ஆவன செய்து தரும்படி வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, போகிபாளையம், புளியந்தோப்பில் செயல்பட்டு வரும் சென்னை உருது பெண்கள் தொடக்கப் பள்ளியின் கட்டடம் சிதிலமடைந்து இருப்பதைச் சீர்செய்து வர்ணம் அடித்துத் தரவும், அப்பள்ளியின் விளையாட்டுத் திடலைச் செப்பனிட்டுத் தரவும், மாணவிகள் பயன்படுத்தும் கழிவறைக்கு வடிகால் இணைப்பு ஏற்படுத்தித் தரவும், இப்பள்ளியில் போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிக்கவும் ஆவன செய்யக் கோருகிறேன்.

எழும்பூர், வரதராஜபுரம் பகுதியில் செயல்பட்டுவரும் சென்னை உருது தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, வீராசாமி தெருவிலுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக்கு வைஃபை இணைப்பு (wifi connection), திறன்சார் வகுப்பறை (smart classroom), செயல்வழிக் கற்றல் வகுப்பறை ஆகிய கட்டமைப்பு வசதிகள் மற்றும் கணினி ஆசிரியர், பேச்சு வழக்கு ஆங்கில ஆசிரியர் பணியிடங்கள் ஆகியவற்றை உருவாக்கித் தரவும்; 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இப்பள்ளிக் கட்டடம் பழுதடைந்துவிட்டதால், புதிதாக ஆறு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தரவும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. இ. பரந்தாமன்]

எழும்பூர் தொகுதி, சுந்தரம் தெருவிலுள்ள சென்னை நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான இருக்கைகள் மற்றும் மேஜைகள்; நூலகப் புத்தக அலமாரி, அலுவலக அலமாரி, மாணவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள், மைக் செட் ஆகிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவும், பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசித் தரவும் ஆவன செய்யக் கோருகிறேன்.

எழும்பூர் தொகுதி, குருசாமி நகர், புளியந்தோப்பில் அமைந்துள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான மேசை, நாற்காலிகள், நூலகத்திற்குத் தேவையான அலமாரி வாங்கித் தரவும்; பள்ளிக் கட்டடத்தின் உடைந்து போன ஜன்னல்கள், கதவுகளை மாற்றித் தரவும்; பழுதுபட்டுப்போன நீர் இறைப்பு மோட்டாரைப் பழுது நீக்கித் தரவும்; பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசி, சுற்றுச்சுவர்களில் சித்திரம் வரைந்து தரவும் வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, காளத்தியப்பா தெரு, சூளையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சிக் கட்டடத்தின் முதல் தளத்தில் வேப்பேரி அஞ்சலகம் செயல்பட்டு வருகிறது. பருவமழைக் காலத்தின்போது இக்கட்டடத்தின் முதல் தளத்தில் பல பகுதிகளில் மழைநீர்க் கசிவு ஏற்படுவதால், அஞ்சலகம் இயங்குவதற்கு இடையூறு ஏற்படுவதோடு, அஞ்சலக ஊழியர்களுக்கும், அஞ்சலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கும் பாதுகாப்பானதாக இல்லை. எனவே, இக்கட்டடத்தினைப் புதுப்பித்துத் தர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, வீராசாமி நகரிலுள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தைச் சீர்செய்து, மின் விளக்குகள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு, கால்பந்தாட்டப் பயிற்சிக்குத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன்.

சூளை, தட்டான்குளம் பகுதியிலுள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலைச் சீரமைத்து, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக்கான சாதனங்களை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, மேயர் இராமநாதன் சாலையில் உள்ள குழந்தைகள் பூங்கா, விளையாட்டு மைதானம், உடற்பயிற்சிக்

[திரு. இ. பரந்தாமன்] [*2021 செப்டம்பர் 7*

கூடத்தில் புதிதாக உடற்பயிற்சிக் கூடம் அமைக்கவும், திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடத்தை உரிய உபகரணங்களோடு அமைக்கவும், சுற்றுச்சுவர் மற்றும் மைதானத்தில் மழைநீர் வடிவதற்கான கட்டமைப்பை உருவாக்கவும், குழந்தைகள் விளையாடுவதற்குத் தேவையான உபகரணங்கள், விளையாட்டுச் சாதனங்களை அமைக்கவும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, கோட்டம் 61, புதுப்பேட்டை–டிரைவர் தெருவில் அமைந்துள்ள சாலையோரப் பூங்காவின் சுற்றுச்சுவர், உட்புற மற்றும் வெளிப்புற நடைபாதை ஆகியவற்றைச் சீர்செய்வதற்கு ஏற்ப, திட்ட மதிப்பீடு தயார் செய்து நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, சந்தோஷ் நகர் பகுதியில் புதிதாகக் கால்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கு ஏற்ப, திட்ட மதிப்பீடு தயார் செய்து நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 6, கோட்டம் 77 மற்றும் 78–ஐ சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட தெருக்களில் பழைய மின் கம்பங்களை அகற்றிவிட்டுப் புதிய மின் கம்பங்களை அமைப்பதற்கும், இக்கோட்டங்களில் புதிதாக உருவாகியிருக்கும் குடியிருப்புப் பகுதிகளில் புதிதாக மின் கம்பங்களை அமைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டிலுள்ள காய்கறி, மீன் அங்காடிக் கட்டடம் மிகவும் பழுதடைந்து அபாயம் ஏற்படுத்தும் நிலையில் இருப்பதால், அதனை இடித்துவிட்டுப் புதிதாக அங்காடிக் கட்டடம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எழும்பூர், சேத்துப்பட்டிலுள்ள டோபிகானா பகுதியில் உள்ள சலவைத் தொழிலாளர்களின் ஓய்வறைக் கட்டடம் மிகவும் சிதிலமடைந்து, மேல்தளக் கூரை உதிர்ந்து விழுந்து வருவதால், அங்கு புதிதாக ஓய்வறைக் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

எழும்பூர், சேத்துப்பட்டு டோபிகானாவில் சலவைத் தொழில் மேற்கொள்பவர்களின் பயன்பாட்டிற்குப் பொருத்தப்பட்ட பொது மின்சாரப் பெட்டியின் காரணமாக, மின் கட்டணத்தைச் செலுத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருந்து வருகின்றன. இவற்றைக் களைவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு, அவரவர்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு

2021 செப்டம்பர் 7] [திரு. இ. பரந்தாமன்]

மின் கட்டணம் செலுத்துவதற்கு ஏதுவாகத் தனித்தனியே மின் பயன்பாட்டு அளவைக் கருவிகளை அமைத்துத் தரக் கோருகிறேன்.

எழும்பூர், சேத்துப்பட்டு டோபிகானா சலவைக்கூடத்தை முறையாகச் சீர்செய்து, நவீனமயமாக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு சலவைத் தொழிலை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாகப் புதிய திட்டம் தீட்டிட வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 61–வது வட்டம், எழும்பூர் சார்பு நீதிமன்றங்கள் அமைந்துள்ள பகுதியில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கான வாகன நிறுத்துமிடம் தற்போது இல்லை. இதனால், நீதிமன்றத்திற்கு வருவோர் தங்கள் வாகனங்களைத் தெருவில் நிறுத்த வேண்டியுள்ளது. இதனால், அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு அப்பகுதியில் அமைந்துள்ள நரியங்காடு குடிநீர் நீரேற்று நிலையத்தில் உபரியாக உள்ள நிலத்தில் சென்னை மாநகராட்சியின் சார்பாக நவீன வாகன நிறுத்துமிடத்தை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 58–வது வட்டம், பெரியமேடு, வீராசாமி தெருவில் அமைந்துள்ள எல்லையம்மன் கோயிலுக்குச் சொந்தமான காய்கறி மார்க்கெட் கட்டடம் சிதிலமடைந்துவிட்டதால், அதனை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 58–வது வட்டம், நேவல் ஹாஸ்பிடல் சாலையில் அமைந்துள்ள சமூக நலக் கூடத்தை இடித்துவிட்டு நவீன வசதிகளுடன்கூடிய பலநோக்குக் கலையரங்கம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, மண்டலம் 8, புல்லாபுரத்தில் செயல்பட்டு வரும் அமுதம் சில்லறை அங்காடியிலிருந்து புதிய பூபதி நகர், ஓசான்குளம், வி.பி. சிங் நகர், காவலர் குடியிருப்பு, தாஸ்புரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்ப அட்டைகளைப் பிரித்து, மண்டலம்–8, பகுதி–23, வார்டு எண் 104–ல் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி சாஸ்திரி நகர் சமுதாய நலக் கூடத்தில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கான உள்நுழைவு அனுமதியை வழங்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

[திரு. இ. பரந்தாமன்] [2021 செப்டம்பர் 7

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட தாஸ்புரம், ஓசான்குளம் ஹவுஸிங் போர்டு மற்றும் புதிய பூபதி நகர் மக்களின் கோரிக்கைக்கேற்ப, புதிய பூபதி நகர் பகுதியிலுள்ள உடற்பயிற்சிக் கூடத்தில் நியாய விலைக் கடை அமைப்பதற்கு அக்கட்டடத்தினைக் குடிமைப் பொருள் வழங்கல் துறையிடம் ஒப்படைக்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதியிலுள்ள புளியந்தோப்பு, ராஜாதோட்டம் மற்றும் குருசாமி நகர் பகுதிகளில் வாழும் மக்களின் கோரிக்கைக்கேற்ப, எழும்பூர் தொகுதி, வார்டு 77, புளியந்தோப்பு டிமலஸ் சாலையில் அமைந்துள்ள நியாய விலைக் கடையை ஆசீர்வாதம் 1–வது தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்ற கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூர் தொகுதி, 58–வது வட்டம், தாக்கர் தெருவில் மீண்டும் நியாய விலைக் கடை அமைக்க வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, சேத்துப்பட்டு 107–வது வட்டம், மனோகரன் தெருவில் உள்ள மதுபானக் கடையை அகற்றிட வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, 58, 61, 77, 78, 104 மற்றும் 107–வது கோட்டங்களில் 10 கூடுதல் களப் பணியாளர்கள் நியமிக்க வேண்டுகிறேன்.

எழும்பூர் தொகுதி, கழிவுநீர் அடைப்புகளை அகற்ற சிறிய இரக ரோபோ தூர்வாரும் இயந்திரங்களை வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள். ஒரு வரியில் பேசி முடியுங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மின்சாரம் அதிக விலைக் கொடுத்து வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். நான் பேசுகின்றபோது, நேரமில்லாததால் அதுகுறித்துக் குறிப்பிடவில்லை. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு யூனிட் மின்சாரம் 9 ரூபாய்க்குப் பதிலாக 13 ரூபாய்க்கு வாங்கப்பட்ட நிகழ்வுகளெல்லாம் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) யார் ஆட்சியிலே, யார் அதிகமான விலை கொடுத்து வாங்கினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லுங்கள்.*

திரு. பி. தங்கமணி: *ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது அல்லவா! (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஆட்சேபம் தெரிவித்தனர்.)

அதாவது, உட்காருங்கள் சொல்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். Time தருகிறேன். வாய்ப்பு கொடுத்துக் கொண்டுதானே இருக்கிறேன். உட்காருங்கள் சொல்கிறேன். அதாவது, மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'ஆதாரம் இருக்கிறதா' என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர், CAG report–ல் எந்தப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார். விவாதம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள், 'நீங்கள் வாங்கியபோதும் அதிக விலைக்கு வாங்கியிருக்கிறீர்கள்' என்கின்ற விஷயத்தைச் சொல்லிவிட்டார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல விரும்புகிறார்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1–50

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், CAG report பற்றி சொன்னார்கள். 2010 ஆம் ஆண்டு CAG report–ல், mismanagement–ன் காரணமாக 10,500 கோடி ரூபாய் loss என்று சொல்லப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். உங்கள் ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு CAG reports குறித்து தெரிவித்தது பதிவிலே இருக்கிறது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

[*2021 செப்டம்பர் 7*

திரு. பி. தங்கமணி: CAG report–ல் கூறியதை அவர் ஒப்புக்கொள்கிறாரா? (குறுக்கீடு) கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள்.

திரு. பி. தங்கமணி: 2010 ஆம் ஆண்டு CAG report–ல் mismanagement என்று கூறப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு report பற்றிய கருத்தும் பதிவாகியுள்ளது. 2010 ஆம் ஆண்டு CAG report பற்றியும் சொல்லப்பட்டுவிட்டது. 2013–2018 ஆம் ஆண்டு CAG report பற்றியும் சொல்லப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேளுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை ஏற்படுகின்றபொழுது, வெளிச்சந்தையில் கொள்முதல் செய்வது என்பது வாடிக்கையான நடைமுறையாகும். ஆனால், அது எந்த முறையில் கொள்முதல் செய்யப்படுகிறது? எத்தனை ஆண்டுகளுக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது? என்ன விலை நிர்ணயிக்கப்படுகிறது என்பதுதான் முக்கியம். அதிக விலையில், நீண்ட கால ஒப்பந்தத்தில் கொள்முதல் செய்கின்றபோது, மின்வாரியத்திற்கு ஒட்டுமொத்தமாக இழப்பு ஏற்படுகிறது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நீங்கள் சொன்னது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், குறுகிய கால ஒப்பந்தத்தில் அவசரத் தேவைக்காகக் கொள்முதல் செய்தது குறித்து. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில், 15 ஆண்டுகள், 25 ஆண்டுகள் என நீண்ட கால ஒப்பந்தத்தில் அதிக விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற ஆண்டுகளில், சந்தையில் ஒரு யூனிட் மின்சார உற்பத்தியின் செலவு குறையும் என்பது தெரிந்தே, நீண்டகால ஒப்பந்தத்தில் கொள்முதல் செய்வதற்கு டெண்டர் விடப்பட்டு, ஒப்பந்தம் போடப்பட்டு, கொள்முதல் செய்யப்பட்டதால் மின் வாரியம் இழப்பைச் சந்தித்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடித்த பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமே கொடுங்கள், அவர்கள் பேசுவார்கள். நல்ல வழக்கறிஞர், திறமையாகப் பேசுவார்கள். அவர்களிடமே கொடுத்துவிடுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே நீங்கள் அவையில் கூறியதுபோல், நாங்கள் எவ்வளவு பொறுமையாக இருக்க வேண்டுமோ அவ்வளவு பொறுமையாக இருந்து கொண்டிருக்கிறோம். நமது மாமன்ற உறுப்பினர் அவர்கள் பேசிய ஒரு கருத்து அவைக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, 'மத்திய அரசின் National Judicial Academy மூலமாக தேர்வு நடத்தக் கூடாது' என்று சொல்வதற்குப் பதிலாக, 'இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தாங்கள் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறந்தோர் அனைவரும் சிறந்தோர் ஆவதில்லை; சிறந்தோர் அனைவரும் மக்கள் மனதில் நிறைந்தோர் ஆவதில்லை; நிறைந்தோர் எல்லோரும் மனித நெஞ்சங்களிலே நிரந்தரம் ஆவதில்லை. பிறந்து, சிறந்து, நிறைந்து, நிரந்தரமாய் மக்கள் மனங்களிலே நிறைந்த இதய தெய்வம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றும் எங்கள் மனங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவை வணங்கி, அரசியலிலே புயலாகவும், தமிழுக்குத் தென்றலாகவும், பகுத்தறிவுப் பாசறைக்கு படைத் தலைவியாகவும், தரணிவாழ் தமிழரெல்லாம் தலைநிமிர திராவிட பாரம்பரியத்திற்குத் திசை காட்டும் தீபச் சுடராய் விளங்கும் திராவிடத்தின் திருவிளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆலயத்தினுடைய பிதாமகளே! தமிழ் சிறக்க, தரணி சிறக்க, மண் சிறக்க, மக்கள் சிறக்க, நாடு சிறக்க, நல்லாட்சி நடத்திய, நாடு போற்றும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒப்பற்றத் தலைவியின் பொற்பாதங்களுக்கு விசுவாசம் என்ற மலரைச் சமர்ப்பித்து பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2021 செப்டம்பர் 7

அவர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பாரதத்தினுடைய பிரதமர் மாண்புமிகு திரு. மோடிஜி அவர்களுக்கும், தேர்தல் பரப்புரையின்போது நேரடியாக வந்து பரப்புரை செய்த மத்திய உள் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அமித் ஷா அவர்களுக்கும், பாரதிய ஜனதா கட்சியின் நிருவாகிகள், அருமை சகோதரர் திரு. நயினார் நாகேந்திரன், திரு. எம்.ஆர். காந்தி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், இதற்கெல்லாம் மேலாக என்னுடன் பணியாற்றிய அத்தனை நண்பர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளான பாட்டாளி மக்கள் கட்சி, புரட்சி பாரதம் கட்சி ஆகிய கட்சிகளின் நிருவாகிகளுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தல் என்பது கடந்த காலங்களில் எப்படியெல்லாம் நடந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் தேர்தலைச் சந்தித்தபோது, என்னை எதிர்த்து தினந்தோறும் போராட்டம், ஆர்ப்பாட்டம் நடக்கும். நான்கூட தேர்தலில் இப்படியெல்லாம் நடக்குமா என்று ஆச்சரியப்பட்டேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தேர்தல் பரப்புரையின்போது மக்கள் மத்தியில், 'இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த மாவட்டத்திற்குப் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறேன். இந்த மாவட்டத்திற்கு எப்பொழுதும், எந்தக் காலத்திலும் இந்த அரசு துணையாக இருக்கும்' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதையும் மீறி, அவர் சென்ற அடுத்தநாள்கூட அல்ல, அன்றையதினம் மாலைப் பொழுதிலே, என்னை எதிர்த்த வேட்பாளர் சுமார் 5,000 பேரைத் திரட்டி, போராட்டம் நடத்தினார். அதுதான் நான் வெற்றிவாகை சூடியதற்குக் காரணம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டம், நீதி நிருவாகம், எரிசக்தித் துறை ஆகிய மானியக்

2021 செப்டம்பர் 7] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

கோரிக்கைகள்மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சட்டத் துறையைப் பொறுத்தளவிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நமது தமிழ்நாட்டிலே 14 சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என்ற பல்கலைக்கழகம் இருக்கிறது. திருச்சியிலே ரூ.100 கோடி செலவிலே, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தலைசிறந்த கல்லூரியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து, இந்த ஆட்சியில், இந்த 7 கல்லூரிகளும் சிறந்த முறையிலே நடைபெறுமென்ற ஓர் உத்தரவாதத்தை நமது அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை சட்டக் கல்லூரி 1891–ல் தொடங்கப்பட்டது. இந்தக் கல்லூரியினுடைய வரலாறு இங்கே இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும். நேற்றையதினம்கூட நமது அவை முன்னவர் அவர்கள், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 15 குறித்து தெளிவான ஒரு கருத்தைச் சொன்னார்கள். நானே அதை யோசித்துப் பார்த்தேன். இந்தக் கல்லூரியினுடைய வரலாறு என்னவென்றால், இந்தக் கல்லூரியிலிருந்து முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சட்டக் கல்வி பயின்று சென்றிருக்கிறார்கள்; மாண்புமிகு அவை முன்னவரும் இந்தக் கல்லூரியிலிருந்துதான் படித்து வந்திருப்பீர்கள்; அதற்கு மேலாக ஜஸ்டிஸ் சதாசிவம் அவர்கள் படித்துச் சென்றிருக்கிறார்கள்; அதற்குப் பின்னர் திரு. பி.பி. சுப்பாராவ் அவர்கள் படித்துச் சென்றிருக்கிறார்கள்; அதற்கு முன்பு, வசந்தி ராஜ் அவர்கள் படித்துச் சென்றிருக்கிறார்கள். அப்படி ஒரு வரலாறு படைத்த கல்லூரி, சென்னை சட்டக் கல்லூரி. அந்தக் கல்லூரியிலே பயின்று, அந்தக் கல்லூரியிலே வளர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் கையிலே சட்டக் கல்லூரியில் சேருவதற்கான அனுமதியைப் பெற்று, இன்று உங்கள் மத்தியிலே உரையாற்றுகிறேன் என்றால் அதற்கு முழுக்க முழுக்கக் காரணம் மாண்புமிகு புரட்சித் தலைவர் என்பதை நான் என் வாழ்நாளிலே மறக்க மாட்டேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, சட்டக் கல்லூரிகளில் படித்தவர்களில் பலர் சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக,

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2021 செப்டம்பர் 7

அமைச்சர்களாக வந்திருக்கிறார்கள். இங்கே சட்டம்–மன்றம்; இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்டது, சட்டத்தை இயற்றக் கொடுக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 395 Articles இருக்கின்றன. நேற்றையதினம்கூட அச்சட்டத்தின் Article 15–ஐப்பற்றி அழகாகச் சொன்னார்கள். அது ஒரு வரலாறு. இந்திய அரசியல் வரலாற்றிலே முதல்முதலாக அரசமைப்பு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது தமிழ்நாடு. அந்தப் பெருமை குறித்து நேற்றையதினம் சொல்லப்பட்டது. இங்குள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இது கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும். இது ஒரு வரலாறு. இந்தியாவிலே வேறெந்த மாநிலமும் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது கிடையாது; முதன்முதலாகக் கொண்டு வந்த மாநிலம் தமிழ்நாடு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அடுத்தாற்போல், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 162 குறித்தது. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரி சேர்க்கையிலே 7.5 சதவிகித ஒதுக்கீடு வழங்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கலையரசன் அவர்கள் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரையின்பேரில், தேசியத் தகுதி மற்றும் நுழைவுத் தேர்விலே தகுதியான மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவம், இளநிலைப் படிப்புகள் சேர்க்கையிலே 7.5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டம் 34/2020 இயற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அதன்மீது உடனே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சிறப்புமிக்க ஓர் ஆணையை வெளியிட்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் இந்தச் சட்டமன்றத்தினுடைய வரலாறு. இதுவரையில் எந்த முதலமைச்சரும் செய்யாத சாதனையை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நான் மிகவும் பெருமையுடன் இந்த மாமன்றத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பல்வேறு சூழ்நிலைகளில், பல காலக்கட்டங்களிலே, பல வீரத் தியாகிகளுக்கெல்லாம் நாம் வணக்கம் செலுத்தியிருக்கிறோம்; மரியாதை செலுத்தியிருக்கிறோம். அந்தவகையிலே, வ.உ.சி. அவர்களுடைய 150–வது பிறந்தநாளை முன்னிட்டு, நமது முதலமைச்சர் அவர்கள் 14 அறிவிப்புகளை

2021 செப்டம்பர் 7] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு முன்னால், 19–10–1986–லே புரட்சித் தலைவர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்று அந்த மாவட்டத்திற்கு வ.உ.சி. மாவட்டம் என்ற பெயரையும், அரசு விழாவையும் எடுத்திருக்கிறார்கள். அதற்கு அடுத்தாற்போல் வ.உ.சி. அவர்களுக்கு 23–6–2005–ல் நெல்லையில் மணிமண்டபம் கட்டப்பட்டது.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ந. தளவாய் சுந்தரம்: பேச ஆரம்பித்து 2 நிமிடங்கள்கூட ஆகவில்லையே என்று பார்த்தேன். அன்றையதினம், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், நெல்லையிலே வ.உ.சி.–க்கு மணிமண்டபம் வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள். நான் அன்றையதினம் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்களே வந்து அதைத் திறக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அப்போது சுயேட்சை M.L.A. ஆக இருந்தேன். நானே கோரிக்கை வைத்தேன். அதற்குத்தான் அவர்கள் பதில் சொன்னார்கள். அதையும் சேர்த்துப் பதிவு செய்துவிடுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது உங்கள் seat–க்கு வருகிறேன். உங்கள் seat–ன் அருமை, வரலாற்றுப் பெருமை கொண்டது. இப்போது நான் subject–க்கு வருகிறேன். நீங்கள் எப்படிப்பட்ட மனிதர் என்பது எங்களுக்குத் தெரியும். இந்த சபையிலே சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக, நீங்களும் அன்று கோரிக்கை வைத்தீர்கள். நீங்கள் அன்று சட்டமன்ற உறுப்பினராக இருந்தீர்கள். அன்றையதினம் நெல்லையிலே அளவில்லாத கூட்டம் கூடியது என்பது உங்களுக்குத் தெரியும். திரு. நயினார் நாகேந்திரன் அவர்களால் கூட்டம் சிறப்பாக நடத்தப்பட்டு, அன்று மணிமண்டபம் திறக்கப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னாள் முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றத்திலே 23–2–2021 அன்று வ.உ.சி.–யுடைய

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2021 செப்டம்பர் 7 திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். நான், இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு வழக்கறிஞர், தலைசிறந்த வழக்கறிஞர் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி, தன்னுடைய அனைத்துச் சொத்துக்களையும் விற்று, வழக்கறிஞர் பதவியைத் துறந்து கப்பலோட்டிய தமிழனாக, கடைசியில் மண்ணெண்ணெய் வியாபாரத்திற்குச் சென்றுவிட்டார். அந்தத் தியாக உணர்வைப் பாராட்டும்வகையிலே, வழக்கறிஞர் என்ற முறையிலே, இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்ட 14 அறிவிப்புகளுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாமன்றத்திலே மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், sensitive subject ஆன 'NEET'–ஐ பற்றி கேள்வி கேட்டால், அவர் எப்போதுமே பதில் சொல்வார். எனக்கு அதில் வருத்தம் கிடையாது. ஏனென்றால், court–ல் அந்த case–ஐ ஆரம்பத்திலிருந்தே நாங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றோம். அவர் எப்போதுமே மூன்று கருத்துகளைச் சொல்வார். அம்மா ஆட்சியில் வரவில்லை; முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் வரவில்லை; எடப்பாடியார் ஆட்சியில் வந்துவிட்டது என்று சொல்வார். 'NEET'–தேர்வு கொண்டு வருவதற்கு எடப்பாடியார் அண்ணன் கையெழுத்துப் போட்டாரா என்று எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கும். இது முழுக்க முழுக்க Court சம்பந்தமான பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமென்றால் அந்த ordinance–ஐ காண்பிக்கிறேன்; தெளிவாகப் படியுங்கள். அந்த ordinance–ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எப்போது 'NEET' தேர்வு கொண்டு வரப்பட்டது? எந்த judgement–ல் அது quote பண்ணப்பட்டது. (குறுக்கீடு) இருங்கள், நான் முடித்துவிடுகிறேன். நான் முடித்த பிறகு பதில் சொல்லுங்கள். நான், இதையெல்லாம் படித்துக் காண்பித்த பிறகு, நீங்கள் பதில் சொல்லுங்கள். படித்துவிடுகிறேன். ஒரே ஒரு line–ல் படித்துவிடுகிறேன். நீங்கள் கையைத் தூக்கிவிட்டீர்கள். நான் படித்துவிடுகிறேன். In its Order dated 28th April 2016 and 9th May 2016, in W.P. No.261/2016, filed against Union of India, Honourable Supreme Court has further directed that NEET shall come into effect immediately. It is the order from the Honourable Supreme Court. இது, ஆகஸ்ட் 4 ஆம் தேதி, 2016–ல் போட்ட amendment.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் இருங்கள். (குறுக்கீடு) பொறுமையாகக் கேட்டுக்கொள்ளுங்கள். பதிலைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், 'NEET' சம்பந்தமான விவாதத்தைத் தனியாக ஒரு நாள் வைத்துக் கொண்டால் நானும் விவாதிக்கத் தயாராகவே இருக்கிறேன். நீங்கள் சொல்கின்ற அல்லது நீங்கள் காட்டுகின்ற எந்த ஆவணத்தையும் நானும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறேன். இதே மன்றத்திலிருந்து நிறைவேற்றி அனுப்பப்பட்ட தீர்மானங்கள், ஒன்றிய அரசின் உள் துறை அமைச்சகத்தால் திருப்பி அனுப்பப்பட்டன. அதுகுறித்து எப்போதாவது இந்த அவைக்குத் தெரிவிக்கப்பட்டதா? இது ஒன்று. இரண்டாவது, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், அதை மறுத்து எழுதி அனுப்பினாரே, அந்தத் தகவலாவது இங்கே மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதா? (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று, குடியரசுத் தலைவரின் உத்தரவுக்கு நாம் எந்தவித விளக்கமும் கேட்க முடியாது என்பது வழக்கறிஞரான தங்களுக்கும் நன்றாகவே தெரியும். அப்படியிருக்கின்றபோது, குடியரசுத் தலைவர் அவர்கள் திருப்பி அனுப்பியதற்குப் பிறகு, சட்டத் துறையின் சார்பில் மாண்புமிகு அன்றைய முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலை ஏற்று, கடிதம் ஒன்று ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகிறது. அதில், என்ன எழுதுகிறார்கள் என்றால், "The Government of India has not communicated any reason for the withholding of the assent of the President for the said Bill." இது சட்டத் துறையின் சார்பில் முதல்வர் அவர்களின் ஆலோசனையினைப் பெற்று, உங்களுடைய சட்டத் துறை எழுதி அனுப்புகிறது. "The Government of India has not communicated any reason for the withholding of the assent of the President for the said Bill."

குடியரசுத் தலைவருடைய எந்த உத்தரவுக்கும் நீங்கள் விளக்கம் கேட்க முடியாது என்கின்ற விஷயம் தெரிந்த பிறகும்கூட, குடியரசுத்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2021 செப்டம்பர் 7

தலைவர் இதனை நிறுத்தி வைப்பதற்கான காரணத்தை நாங்கள் அறிய விரும்புகிறோம் என்கின்ற ஒரு கடிதத்தை எழுதி, தொடர்ந்து காலம் கடத்தியது நீங்கள் இல்லையா? இதை நீங்கள் உறுதிப்படுத்தி சொல்லிவிடுங்கள். என்னிடத்தில் இருக்கிற ஆவணங்களை நான் கொண்டுவந்து காட்டுகிறேன். உங்களிடமிருக்கும் ஆவணங்களை நீங்கள் கொண்டு வந்து காட்டுங்கள். தனியாக, நாளையே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வைத்து, விவாதம் நடத்த நாங்களும் தயாராக இருக்கிறோம்.

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு 201–ன்கீழ் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி முதலாவது Assent; அடுத்து Withheld; அதற்கடுத்து Withheld with reasons தான் கொடுக்க முடியும். அவர் கொடுத்தது என்னவென்று தெரியுமா உங்களுக்கு? குடியரசுத் தலைவரிடம் இருக்கக்கூடியது it is purely Parliamentary practice; பாராளுமன்ற நடைமுறை. இது குறித்து நாம் கடிதம் எழுத முடியும். இங்கிருந்து யாரெல்லாம் கடிதம் எழுதினார்கள்? கம்யூனிஸ்ட் M.P. திரு. ரெங்கராஜன் கடிதம் எழுதியிருக்கிறார். அதற்கு என்ன பதில் வந்தது? There is no such type of file in the President's office. அதற்கடுத்து parents வழக்கு தொடுக்கிறார்கள். நான் இப்போது சொன்னேன்; நம்முடைய முதல்வர் அவர்கள் Article 162–ஐப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இது Article 254; மாநில அரசால் ஒரு சட்டம் இயற்றப்படும்பொழுது,–மத்திய அரசு ஒரு சட்டம் இயற்றுகிறது. மாநில அரசினுடைய சட்டம் மத்திய அரசுக்கு எதிராக இருந்தால், குடியரசுத் தலைவர் அதை withheldதான் செய்வார். இப்போதும் வேறொன்றுமே இல்லை. நீங்களும் அதையேதான் செய்யப்போகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: நான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அதற்குப் பதில் வாங்கிவிடுங்கள்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், withheld செய்ததற்குப் பிறகு, இந்த சட்டத்தைத் தாங்கள் தெரிந்துகொண்டு, இதற்கான காரணத்தைக் கேட்டு இன்னொரு கடிதம் எழுதி அனுப்பியது, காலம் கடத்துவதற்கான செயலா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இரண்டு நிமிடங்கள் மட்டும் கொடுங்கள். President's order–க்கு பிறகு எந்த court–க்கும் போக முடியாது. இது order–ரே கிடையாது. இதுவொரு Proceedings. வேறு ஒன்றுமே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் ஒன்று சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? திரும்ப ஏன் நீங்கள் கடிதம் எழுதினீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். (குறுக்கீடு) அதற்கு நீங்கள் ஒரு பதிலைச் சொல்லிவிட்டு, (குறுக்கீடு) E.B.–க்கு வாருங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: President. . . (குறுக்கீடு) அப்போது, நீங்கள் வந்து பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. (குறுக்கீடு)

திரு. ந. தளவாய் சுந்தரம்: அப்போது நீங்கள் வந்து பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம், பேசுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: நான் பேசிய பிறகு, நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது sensitive subject. நாங்கள் முழுக்க, முழுக்க உங்களுக்கு ஆதரவுதான் தெரிவித்தோம். நாங்கள் ஒன்றும் எதிர்ப்பை தெரிவிக்கவே இல்லை.

[*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: NEET–தேர்வு இரத்துக்கு ஆதரவு தருகிறீர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: நாங்கள் இல்லையென்று சொல்லவே இல்லையே. இதில் என்ன difficulty இருக்கிறது? இதில் என்ன கஷ்டம் இருக்கிறது? நான் ஒரே ஒரு கேள்வி கேட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு முறையும் reply கொடுக்கும்போது, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களின் period–ல் வரவில்லை; முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் period–ல் வரவில்லை; திரு. எடப்பாடி அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்று கூறுகிறார்கள். எடப்பாடியார் அவர்களா கொண்டு வந்தார்கள்? நாங்கள் எத்தனை கோர்ட்டுக்கு அலைந்தோம். நீங்கள் எந்த கோர்ட்டுக்காவது வந்திருக்கிறீர்களா? ஒரே ஒரு judge–ஐ கையில் வைத்துக் கொண்டு, ஆரம்பித்து கிட்டத்தட்ட 2010–லிருந்து காங்கிரஸ் ஆட்சியில் கொண்டு வந்த Notification. அதே காங்கிரஸ் ஆட்சி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சுருக்கமாகப் பதில் சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டத்தை இயற்றி மேதகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டு, உங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது உங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் என யாரையாவது அழைத்துக் கொண்டு போய் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களைச் சந்தித்து அழுத்தம் தருகின்ற வகையில் அல்லது வலியுறுத்துகிற வகையில் எப்போதாவது, ஒருமுறையாவது கேட்டதுண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறையாவது நீட் தேர்வு குறித்து மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக்

2021 செப்டம்பர் 7] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

கொண்டு சென்றதுண்டா என்று கேட்கின்றார். நான் 3 முறை பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றேன். தமிழ்நாட்டில் நீட் தேர்வு அறவே இருக்கக் கூடாது என்று ஒட்டுமொத்த மக்களும் எண்ணுகின்றார்கள். ஒட்டுமொத்த கட்சியினரும் எண்ணுகின்றார்கள். அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று 3 முறை நான் மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதைப் பற்றி ஊடகத்திற்கும் நான் தகவல் தெரிவித்திருக்கிறேன்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாங்களும் பத்திரிகையில் பார்த்தோம். அவர் கேட்பது, 'ஜனாதிபதியிடம் ஏன் கேட்கவில்லை?' என்கிறார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீட் பற்றி இந்த அவையில் நிறைய விவாதித்துவிட்டோம். தயவுசெய்து நீங்கள் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைக்கு வாருங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *இப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *இல்லை, நான் நீட் சப்ஜெக்ட்டுக்குள் போகவில்லை.* Backward Classes Commission *சப்ஜெக்ட்டுக்குதான் வருகிறேன். இது வேறோர் விஷயம். அதாவது, சட்டமன்றத்தில் சட்டம் இயற்றுவது நாம். அந்த சட்டமுன்வடிவை, நாம் குடியரசுத் தலைவர், கவர்னருக்கு அனுப்பலாம். கவர்னர் இசைவு தரவில்லையென்றால்கூட, திருப்பி அனுப்பலாம். அதற்கு நம்மால் ஒரு* reminder *கொடுக்க முடியும். ஏனென்றால், நாளைக்கு திரும்பவும் இதே கேள்வியைக் கேட்பீர்கள். ஒரு முறை* return *வந்துவிட்டது இல்லையா? இதுகுறித்து ஏன் கேட்கவில்லை என்று இதையே ஓர் அமைச்சர் கேட்பார். இது* technical subject.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். நீங்கள் கரண்ட்டுக்கு வாருங்கள்.*

[*2021 செப்டம்பர் 7*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *கரண்ட் வேண்டாம். இதை முடித்துவிட்டு கரண்ட்டுக்கு போவோம். கரண்ட் ஏற்கெனவே* shock*–ல்தான் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *11–8–2018 அன்று மத்திய அரசாங்கம் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 102–ல் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. அது என்னவென்றால்,* Backward Classes Commission/ National Backward Classes Commission *என்பது* statutory body. *அதை* constitutional body *ஆக மாற்ற வேண்டுமென்று, ஒரு* amendment *கொண்டு வந்தது. அது* technical flaw *ஆகிவிட்டது. இந்திய அரசமைப்பு சட்டப் பிரிவு 32–ன்கீழ் ஒருவர் வழக்கு போடுகிறார். உடனே, 5–5–2011–ல் இரண்டு நீதிபதிகள் 68 வருடங்களாக இந்த* Backward Classes Commission *பட்டியலை தயார் செய்யும் உரிமை மாநில அரசிடம்தான் இருக்கிறது என்றார்கள். மூன்றாவது நீதிபதி என்ன சொல்கிறாரென்றால், இல்லை, இல்லை* Backward Classes Commission *பட்டியலை தயார் செய்யும் உரிமை மத்திய அரசுக்குப் போய்விட்டது என்கிறார்கள். அதற்குப் பிறகு, இப்போது மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய மத்திய அரசாங்கம், 5–8–2021–ல் ஒரு* amendment *கொண்டுவந்து,* Backward Classes Commission *பட்டியலை தயார் செய்ய மாநில அரசுக்குத்தான் அதிகாரம் உள்ளது என்று ஓர் ஆணை போட்டிருக்கிறது. நீங்கள் சட்டமுன்வடிவை கொண்டுவரப் போகிறீர்கள். நாங்கள் ஏகமனதாக ஆதரவு தருகிறோம். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள், நாங்கள் செய்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மொத்தமாக நான் பேசவில்லையே!,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொண்டு வாருங்கள் ஆதரவு தெரிவிப்போம் என்று சொன்னபிறகு, மொத்தமாக நான் நன்றியை சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

2021 செப்டம்பர் 7]

திரு. ந. தளவாய் சுந்தரம்: பிரிட்டிஷ் காலத்தில் சட்டம், சட்டமன்றங்கள், நாடாளுமன்றம் இவற்றையெல்லாம் ஏற்படுத்திவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்போது நீங்கள் அமர்ந்திருக்கக்கூடிய Chair போன்று நான்கே இடங்களில்தான் இருக்கின்றது. President's House, Lok Sabha, Rajya Sabha அடுத்து இந்தச் சட்டமன்றம். இந்த Chair–ல் நீங்கள் அமர்ந்திருப்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி. தென் மாவட்டத்திலிருந்து நீங்கள் இந்த chair–க்கு வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிகவும் சந்தோஷம்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: முன்னாள் பேரவைத் தலைவர்கள் திரு. சி.த. செல்லப்பாண்டியன், திரு. பி.எச். பாண்டியன், திரு. ஆவுடையப்பன் அதற்கு அடுத்து இப்போது நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், ஒரு நாளும் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் இந்த Chair அருகில் வர மாட்டோம், touch பண்ண மாட்டோம், ** நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒப்புக்கொண்டு, ADMK உறுப்பினர்கள் சார்பாக யாரும் வரமாட்டோம் என்று சொன்னதற்காக, வரவேற்று நன்றி சொல்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, நீண்டகால ஒப்பந்தங்கள் அடிப்படையிலே, நீங்கள் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கியிருக்கிறீர்கள் என்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் நீண்டகால ஒப்பந்தங்களின் அடிப்படையிலே அதிகமான விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டிருக்கிறது. GMR Power Corporation Limited–உடன் 12–9–1996–ல் ஒப்பந்தம் போட்டு, 1999–லிருந்து commission பண்ணியிருக்கிறார்கள். 15

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2021 செப்டம்பர் 7

வருடங்களுக்கு அக்ரிமெண்ட் போட்டார்கள். அதன் விலை யூனிட் ஒன்றிற்கு 7 ரூபாய் 71 பைசா. அதேபோல, PPN Power Generating Company Private Limited–உடன், 30 வருடங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒப்பந்தம் போடப்பட்டு, பின்னர் அது 15 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. ஒப்பந்தம் போடப்பட்ட நாள் 21–4–2001. யூனிட் ஒன்றிற்கு 8 ரூபாய் 3 பைசா விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். ஆகவே, நீண்டகால ஒப்பந்தங்கள் உங்கள் ஆட்சியிலும் போடப்பட்டிருக்கின்றன. ஆக, அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, ஒப்பந்தங்கள் போடப்பட்டு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டீர்கள் நன்றி. அமைச்சர் பதில் சொல்லட்டும். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு ஆண்ட நற்றமிழ், திகட்டாத தீந்தமிழ், நாடு போற்றிய நறுந்தமிழ், திராவிடம் காத்த முத்தமிழ், அஞ்சுகத் தாய் ஈன்றெடுத்த அரசியல் சகாப்தம், எங்கள் குளித்தலையில் அரசியல் கணக்கைத் தொடங்கி, தோல்வியே காணாத சரித்திரம், நங்கவரம் உழவர் பிரச்சினைகளைக் கன்னிப் பேச்சில் எடுத்துரைத்து, உழவருக்கு இலவச மின்சாரம் தந்து, ஊர்தோறும் அவர்களுக்கு உழவர் சந்தை அமைத்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் தொடாத சிகரம் இல்லை; சீர்திருத்தாத துறைகள் இல்லை; நவீன தமிழகத்தின் சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அழியாப் புகழை வணங்குகிறேன்.

பிற்பகல் 2–15

நேர்மையின் உருவமே, எங்களின் நெஞ்சுரமே, 8 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கையே, நங்கூரமே, தமிழர் நலன்காக்கும் திராவிட சிங்கமே, தமிழ் பெற்றெடுத்த தங்கமே, எங்களைப் போன்ற துரும்பையும் இரும்பாக்கும் நான்கெழுத்து மந்திரமே, எந்நேரமும் மக்கள் பணிக்காக இயங்கிடும் உற்சாக இயந்திரமே, சிறு முள்ளையும் பெரும் வில்லாக்குவது உங்களின் திறமை. கண்கொண்டு காணவைக்கும் உங்கள் எளிமை. கண்டவுடன்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

கைதொழத் தூண்டும் உங்களின் பொறுமை. எங்களின் கனவினை நனவாக்க தளபதியிருக்கிறார் என்பதே தமிழ் மக்களின் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் பயணம் முழுக்க ஆயிரமாயிரம் தடைகள் வந்தன. அறிஞர் அண்ணாவின் அருகினில் ஓய்வறியா சூரியனின் இறுதி உறக்கத்திற்குக்கூட தொல்லைகள் வந்தன. எத்தனை எத்தனை தடைகள் வந்தாலும், அத்தனையையும் உடைத்து, ஜெயிக்கும் வரலாற்றுச் சிறப்பு நீங்கள். தோல்விகளிலும் தளராத உங்கள் மனம்; பெரும் வெற்றிகளிலும் மாறாத உங்கள் குணம்; அதனால்தான் தலைமகனாய் உங்களை அரியணையில் ஏற்றியது தமிழ் இனம்.

பெருந்தன்மையில் வானம் நீங்கள். பெருங்கடல் ஞானம் நீங்கள். களைப்பே காணாத உங்களின் கடும் உழைப்பைக்கொண்டு, நூறே நாட்களில் தமிழகம் நிமிர்ந்தது இன்று. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இழுத்துச் செல்லும் தங்கத் தேர் நீங்கள். தந்தையின் சிந்தையைச் சிந்தாமல் பெற்ற திராவிட ஆணிவேர் நீங்கள். பேரறிஞர் பற்ற வைத்த விளக்கை, கலைஞர் கட்டிக்காத்த நெருப்பை, அணையாது காக்கும் தலைவரே, தளபதியே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, தங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

> "மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
> என்நோற்றான் கொல்லெனும் சொல்"

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியின் ஒவ்வொரு இல்லத்திலும் இருப்பவர்களின் உள்ளத்தில் குடியிருக்கும் சேப்பாக்கத்துச் செல்ல மகன்; திருவல்லிக்கேணியின் தங்க மகன்; எங்களுக்கு முன்னுதாரணமாய் மிகச் சிறப்பாக செயலாற்றி வருபவர் அண்ணன் உதயநிதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் *1957* ஆம் ஆண்டு தன் கன்னிப் பேச்சில் விவசாயிகளின் பிரச்சினைகளைப் பேசினார். மாண்புமிகு தளபதி அவர்களோ, *1989* ஆம் ஆண்டில் தன் கன்னிப் பேச்சில் இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் பற்றிப் பேசினார்.

பிரச்சார களத்தில் புதுமுகமாய் வந்து, கழகத்தின் பொது முகமாய் மாறி, சரித்திரம் படைத்த தீரன்; அறிவாயுதம் ஏந்திய வீரன்; திறன்மிகு திட்டங்களால் தமிழகத்தைக் கட்டியாண்ட கலைஞரின் பேரன், மாண்புமிகு உதயநிதி அவர்கள், (மேசையைத்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7 தட்டும் ஒலி) 2021 ஆம் ஆண்டில் தன் கன்னிப் பேச்சில் NEET தேர்வு பிரச்சினை பற்றிப் பேசியிருக்கிறார். அண்ணன் உதயநிதி அவர்கள் பற்ற வைத்த நெருப்பு நாடெங்கும் பரவி, நியாயத்தை நிலைநிறுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் மனதில் மன்னவரே, எங்கள் சின்னவரே, பார்வையில் கனிமை, பழகுவதில் இனிமை, காட்சிக்கு எளிமை, அவரின் பிரச்சார உத்திகள் எல்லாம் புதுமையிலும், புதுமை. அதனால்தான் தேடி வந்தது வெற்றி என்னும் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) உவகையான பேச்சில் முத்தமிழறிஞர் கலைஞரையும், உன்னதமான உழைப்பில் நமது தலைவரையும் கண் முன்னால் கொண்டுவரும் மாண்புமிகு அண்ணன் உதயநிதி அவர்களுக்கு என் வணக்கங்களும், நன்றிகளும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியின் அதிகார பலம் ஒருபக்கம், பண பலம் ஒரு பக்கம். அரவக்குறிச்சி இடைத்தேர்தலில் போட்டியிட வேட்பாளராக என்னை அறிவித்து, மாண்புமிகு தளபதி அவர்கள் உற்சாகமூட்டி அரவக்குறிச்சி தொகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். அதுமட்டுமல்லாது, 3 ஒன்றியக் கழகச் செயலாளர்கள், 5 பேரூர் கழகச் செயலாளர்கள், 54 ஊராட்சிக் கழகச் செயலாளர்கள் என அனைவரிடத்திலும் மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களே தொலைபேசியிலே பேசினார். இந்தச் சம்பவம் நடைபெற்றபோது, ஓர் ஊராட்சிக் கழகத்தினுடைய செயலாளர் தன்னுடைய தோட்டத்தில் பால் கறந்து கொண்டிருந்திருக்கின்றார். அவர் cell phone மணி ஒலிக்கிறது; அதை அவர் எடுக்கிறார். மறுமுனையில் 'நான் மு.க. ஸ்டாலின் பேசுகிறேன்' என்று சொன்னதைக் கேட்டவுடன் தான் பால் கறந்து கொண்டிருந்த சொம்பைத் தூக்கியெறிந்துவிட்டு, என்னிடத்தில் படபடப்போடு அவர் பேசினார். 'தலைவர் பேசிவிட்டார். இனி நான் களத்திலே வேகமாகப் படையெடுப்பேன்; மக்களைச் சந்திப்பேன். வாக்குகளைப் பெறுவேன். உதயசூரியனை வெற்றிபெறச் செய்வேன்' என்றார். அந்தளவிற்குக் கட்சியினுடைய தலைவராகவும், தொண்டர்களையெல்லாம் வழிநடத்தக்கூடிய தலைவராகவும் இருந்து எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

பிற்பகல் 2–20

குறிப்பாக, கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, 2019 நாடாளுமன்றத் தேர்தலில் 39 இடங்களில் 38–ல் வெற்றி, ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பெருமளவில் வெற்றி, அடுத்து வந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றி என்று கழகத்தை வெற்றிப் பாதையில் நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தலைவர் அவர்களின் வெற்றிக்குக் காரணம் இதுதான். தலைவரும் அவர்தான்; எங்களை வழிநடத்தும் மாண்புமிகு முதல்வரும் அவர்தான். எள்ளி நகையாடினார்கள், ஏளனம் பேசினார்கள், வீழ்த்த நினைத்தார்கள். ஆனால், 2021 சட்டமன்றத் தேர்தலில், என்மீதான நம்பிக்கை எள்ளளவும் குறையாமல், கரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட தலைவர் அவர்கள் வாய்ப்பளித்தார்கள். கரூர் மட்டுமன்றி, மாவட்டத்தின் 4 தொகுதிகளிலும், தி.மு.க. வென்றது. தலைவரே நின்றதாக மக்கள் வாக்களித்தார்கள். தலைவரின் பெயரைச் சொல்லி நாங்கள் வென்றோம். அவர்மீது மக்கள் கொண்ட நம்பிக்கையால் கழகம் வென்றது. தலைவரை நம்பியவர்கள் கைவிடப்பட்டதில்லை என்பதற்கு நானே உதாரணமாக நின்றுகொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி என்பது வெறும் வார்த்தை அல்ல. அதைத் தவிர, என்னிடம் சொல்ல வேறு வார்த்தையும் இல்லை. எப்பொழுதும் உடன் நிற்கும் கரூர் மாவட்ட மக்களுக்கும், என் தொகுதி மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, கரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், கரூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைப் பணிவன்போடு பாதமலர்களில் சமர்ப்பிக்கின்றேன்.

எண் என்பது கணிதத்திற்கு அவசியம். மின் என்பது மனிதத்திற்கு அவசியம். உலகெனும் உடல் இயங்க, ஓடும் நரம்புகளே மின்கம்பிகள். குடிசையோ, கோபுரமோ, பல்லடுக்குக் குடியிருப்போ, ஒவ்வோர் அறையிலும் நுழையக்கூடியது காற்றும், கரண்ட்டும் மட்டும்தான். எவராலும் கைதொட முடியாததும், எந்நாளும் கைவிட முடியாததும், அன்று செய்வதற்கு அரிதான செயலாய் இருந்தவற்றை இன்று எளிதான செயலாக்கியதும், மின்சாரம்தான். நீரின்மூலம் நீரேற்று புனல் மின்சாரம், காற்றைக் கொண்டு காற்றாலை மின்சாரம், நெருப்பின் சிறப்பாய் அனல் மின் சக்தி, ஆகாயத்தின்வழியாக சூரிய மின் ஆற்றல் என இவை அனைத்தும் நிலத்தில் வாழும் நமக்கு மின்சாரம் என்றானது.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

எழுமின், விழுமின், இத்துறையைச் செம்மையாய்ச் சீர்படுத்தி மேம்படுத்திட, நில்லாது உழைமின் என ஊக்கம் அளித்து, என்மீது நம்பிக்கை வைத்து, சிறப்புவாய்ந்த மின் துறைப் பொறுப்பை அளித்து, சிறப்பாகப் பணியாற்ற நித்தமும் ஊக்கம் அளிக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களை பாதம் பணிந்து வணங்கி, நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

வளர்ச்சி என்பது பூமியின் வளங்களைச் சிதைக்காமல், சூழலைச் சீரழிக்காமல், அடுத்துவரும் நம் சந்ததியினருக்கு நிலம், நீர், காற்று, ஆகாயம் ஆகியவற்றை மாசில்லாமல் ஒப்படைப்பதாக இருக்க வேண்டும் என்பது நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதியான நிலைப்பாடு. அவரது வழிகாட்டுதலின்படி, மரபுசாரா எரிசக்திகளுக்கான வழிமுறையைக் கண்டறிய வேண்டும் என்பதில் தமிழ்நாடு எரிசக்தித் துறை பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. எவையெல்லாம் மீண்டும் புதுப்பிக்கக்கூடிய சக்திகளோ அவற்றைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதை உலக நாடுகளும், வல்லுநர்களும் வலியுறுத்தி வருகிறார்கள். புவியின் சூழலைக் கெடுக்காத ஆற்றலை பசுமை எரிசக்தி என்கிறார்கள். அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில், அதில் பயன்படுத்தப்படும் நிலக்கரியானது புதுப்பிக்கத்தக்க வளமாக இல்லை. ஒரு முறை எரித்தால் சாம்பல் மட்டுமே மிஞ்சுகிறது. மேலும், அனல் மின் நிலையத்தினால், வளிமண்டலத்தில் சேரக்கூடிய புகை, தூசி போன்ற மாசுகளும் அதிகம். அதனால் நிலமும், காற்றும் பெருமளவில் மாசுபடுகிறது. எனவேதான், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மற்றும் செயல்படும் திட்டங்களைத் தவிர புதிய அனல் மின் நிலையங்கள் எதற்கும் முன்னுரிமை அளிக்கப்படவில்லை. மாறாக, சூரியசக்தியில் தயாரிக்கப்படும் மின்சாரத்தினால் சூழலும் பாதிப்படைவதில்லை; மாசும் ஏற்படுவதில்லை. எனவே, மாண்புமிகு தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சூரியசக்தி உள்ளிட்ட மரபுசாரா எரிசக்திக்கான திட்டங்களை மேம்படுத்துவதற்காக நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்துடன் 1,32,500 கோடி ரூபாய்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டிருக்கிறது. 20,000 மெகா வாட் சூரிய ஒளி மின்சாரம், 3,000 மெகா வாட் நீரேற்று புனல் மின்சாரம், 2,000 மெகா வாட் எரிவாயு மின்சாரம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் இதில்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

அடங்கும். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும், இந்த அளவிற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்பட்டதில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தமாக, இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக, ஆட்சிப் பொறுப்பேற்ற 4 மாதங்களில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழகத்தை மின்மிகை மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்துவதற்கு, இத்தகைய சிறப்புத் திட்டங்களைத் தந்து, எங்களை வழிநடத்தச் சொல்லி உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 3 கோடியே 16 இலட்சம் மின் இணைப்புகள் உள்ளன. அதில் விவசாய மின் இணைப்புகள் என்ற வகையில் ஏறத்தாழ 22 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்று வருகின்றார்கள். 2006 முதல் 2011 வரையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சார இணைப்புகள் 2 இலட்சத்து 9 ஆயிரம். 2011 முதல் 2016 வரையிலான 5 ஆண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பு 82 ஆயிரம். 2016 முதல் 2021 வரையிலான 5 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளுடைய எண்ணிக்கை 1 இலட்சத்து 38 ஆயிரம். இதுதான் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற மின்சார இணைப்புகள். குறிப்பாக, 2016 முதல் 2021 வரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கையை நாம் பார்க்கின்றபொழுது, இலவச மின் இணைப்பிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 2 இலட்சத்து 9 ஆயிரத்து 114. ஆனால், வழங்கப்பட்ட இணைப்புகள், 40,935. 10 ஆயிரம் சுய நிதித் திட்டத்தில் இலக்கு 1,971, வழங்கியது 920; 25 ஆயிரம் சுயநிதித் திட்டத்தில் இலக்கு 10,337, வழங்கியது 4,069; 50 ஆயிரம் சுயநிதித் திட்டத்தில் இலக்கு 18,809, வழங்கியது 6,397; TAHDCO திட்டத்தில் இலக்கு 24,728, வழங்கியது 5,365; Jeevandhara திட்டத்தில் இலக்கு 24, வழங்கியது 9; Jeevandhara தாழ்த்தப்பட்டோர் பிரிவினருக்கான மின் இணைப்பு இலக்கு 17, வழங்கியது 9. இப்படி 2 இலட்சத்து 10 ஆயிரம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 5 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு 1,38,000 மட்டுமே.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

இன்னும் ஒரு கருத்தையும் இந்த நேரத்திலே பதிவு செய்ய வேண்டியது என்னுடைய கடமையாகும். நிர்ணயிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் விவரம்:–

2011–2012 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விவசாய மின் இணைப்பு 40,000; வழங்கியது 31,520; 2012–2013 ஆம் ஆண்டு இலக்கு 40,000, வழங்கியது 18,065; 2013–2014 ஆம் ஆண்டு இலக்கு 40,000, வழங்கியது 11,343; 2014–2015 ஆம் ஆண்டு இலக்கு 40,000, வழங்கியது 8,495; 2015–2016 ஆம் ஆண்டு இலக்கு 40,000, வழங்கியது 13,564; 2016–2017 ஆம் ஆண்டு இலக்கு 40,000, வழங்கியது 12,585. ஒவ்வோர் ஆண்டும் இலக்கு 40 ஆயிரம், வழங்கிய இணைப்புகள் 8 ஆயிரம், 10 ஆயிரம், 11 ஆயிரம், 12 ஆயிரம். அதைத்தான் எங்களுடைய உறுப்பினர்கள் இந்தப் பேரவையிலே சுட்டிக்காட்டினார்கள். 'மின்மிகை மாநிலம்' என்று சொன்னால், ஓர் ஆண்டிற்கு 40,000 விவசாயிகளுக்கு இணைப்புக் கொடுப்பதாக நிர்ணயித்துவிட்டு, சட்டசபையிலே அறிவித்துவிட்டு, அரசாணையை வெளியிட்டுவிட்டு, ஏன் இந்த இணைப்புகள் கொடுக்கப்படவில்லை? 'மின்மிகை மாநிலம்' என்று சொல்கின்றபொழுது 'விவசாயிகளுடைய அரசு' என்று சொல்லிக்கொண்டு விவசாயிகளுக்கு ஏன் இந்த மின் இணைப்பைக் கொடுக்கவில்லை! (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கருத்தைத்தான் இந்த நேரத்திலே தெரிவிக்க வேண்டும். சர்க்கரை என்று சீட்டில் எழுதி நாக்கில் வைத்தால் இனிக்காது, அது உண்மையில் சர்க்கரையாக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தளபதி அவர்கள் விவசாயிகளுடைய நலன் காக்கக்கூடிய அரசாக, நம்முடைய ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார். விவசாய மின் இணைப்புகள் குறித்து இன்றைய துறையின் அறிவிப்புகளிலே இடம்பெற இருக்கின்றது. நம்முடைய அதிகபட்ச மின் நுகர்வு, 10–4–2021 அன்று 16,418 மெகா வாட். உற்பத்தி என்பது 1–4–2011 அன்று மின் வாரியத்தினுடைய சொந்த நிறுவுதிறன் 2,970 மெகா வாட். அதற்குப் பிறகு, 3 அனல் மின் நிலையங்கள் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன. இவை 2008 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து வழங்கிய திட்டங்கள். அந்தத் திட்டங்கள் மூலமாக 1,800 மெகா வாட் கூடுதல் மின் உற்பத்தியைப் பெருக்கியிருக்கின்றன. இதனையும் சேர்த்து,

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

நம்முடைய சொந்த உற்பத்தி 4,770 மெகா வாட். இதில் எண்ணூர் அனல் மின் நிலையம் 420 மெகாவாட், மற்ற இரண்டிலும் 30 மெகா வாட் என குறைக்கப்பட்டதில் நம்முடைய அனல் மின் நிலையங்களின் மொத்த நிறுவுதிறன் 4,320.

2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட 3 புதிய திட்டங்களின் உற்பத்தியைத் தொடங்கியதைத் தவிர, 10 ஆண்டுகளில் வாரியத்திற்குச் சொந்தமான எந்தவித அனல் மின் திட்டங்களும் பணிகளை முடித்து, வாரியத்தினுடைய பயன்பாட்டிற்கு, மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படவில்லை. அதைத்தான் இந்த நேரத்தில் நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோம். அப்படிக் கொண்டுவரப்படவில்லை என்பது ஒரு பக்கம். அறிவிக்கப்பட்ட திட்டங்கள், செயல்பாட்டிலிருந்த திட்டங்கள் நம்முடைய உற்பத்தியை வெகுவாகக் குறைத்திருக்கின்றன. 2006 முதல் 2011 வரையிலான 5 ஆண்டுகளில் வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்கள் சராசரியாக உற்பத்தி செய்தது 85 விழுக்காடு PLF. ஆனால், 2011 முதல் 2016 வரையிலான காலத்தில் அது 78 விழுக்காடு ஆனது. 2016 முதல் 2021 வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் அது 58 விழுக்காடாக தனது நிறுவுத் திறனில் உற்பத்தியை செய்திருக்கிறது. எதற்காக இந்த உற்பத்தி குறைக்கப்பட்டது?

பிற்பகல் 2–30

குறிப்பாக, இன்னும் சொல்லப்போனால், 2008 ஆம் ஆண்டில் போடப்பட்ட திட்டங்கள், 2013–2014, 2014–2015–ல் உற்பத்தியைத் தொடங்கி, புதிய அனல் மின் நிலையங்கள்கூட, இறுதியாண்டான 2020–2021–ல் ஏறத்தாழ 43 சதவிகிதத்திற்கு உற்பத்தியைச் செய்திருக்கின்றன. மீதி உற்பத்தி ஏன் செய்யப்படவில்லை. எதனால் இது நிறுத்தப்பட்டது? இதைத்தான் நாங்கள் இந்த நேரத்தில் வினாவாக எழுப்புகின்றோம். இதன் நோக்கம், தனியாரிடமிருந்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்காகவா என இந்த நேரத்தில் ஐயப்பாடு எழுகிறது. நான் குற்றச்சாட்டிற்காக இதைச் சொல்லவில்லை. மற்ற மாநிலங்களில், தனியார் அனல் மின் நிலையத்தார்கள் 85 முதல் 90 விழுக்காடு வரை தங்களுடைய அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், நம்மால் ஏன் முடியாது? நிச்சயம் முடியும். மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களுடைய ஆட்சியில், வரக்கூடிய ஆண்டுகளில், 58 விழுக்காடு என்றிருக்கும் சராசரி PLF–ஐ அடுத்து வரக்கூடிய ஆண்டுகளில் அதிகரித்துக் காட்டுவோம். அதுதான்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

எங்களுடைய இலக்கு என்பதை இந்த நேரத்தில் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எரிவாயு மின் உற்பத்தி நிறுவுதிறன் 1–4–2011–ல் 516 மெகா வாட். 1–4–2021–ல் நிறுவுதிறன் மீண்டும் அதே 516 மெகா வாட். குறிப்பாக, புனல் மின் நிலையங்களில், 1–4–2011–ல் நிறுவுதிறன் 2,191 மெகா வாட். 1–4–2021–ல் நிறுவுதிறன் 2,322 மெகா வாட், கூடுதலாக 131 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. 2006 முதல் 2011 வரையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்ட திட்டங்கள்மூலம் கிடைத்தது, 78 மெகா வாட். 2011 முதல் 2021 வரையிலான கடந்த ஆட்சியில் போடப்பட்ட திட்டங்கள்மூலம் வெறும் 53 மெகா வாட் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் கடந்த கால ஆட்சியினுடைய நிலை.

அதேபோல், வாரியத்தின் மொத்த உற்பத்தியைப் பொறுத்தவரையில் நிறுவுதிறன் 1–4–2011–ல் 5,694 மெகா வாட்டாக இருந்தது. 1–4–2021–ல் 7,175 மெகா வாட் மட்டுமே. இந்த பத்தாண்டுகளில் கூடுதலாக 1,481 மெகா வாட். ஒட்டுமொத்தமாக, கடந்த பத்தாண்டுக்கால ஆட்சியில் கூடுதலாக 53 மெகா வாட் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பேரவைக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

இணைமின் நிலையங்களின் உற்பத்தியைப் பொறுத்தவரையில், 2008 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கொண்டுவரப்பட்ட 133 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட திட்டங்களின்மூலம் 81 மெகாவாட் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 1,200 கோடி ரூபாய் மதிப்பில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் 10 ஆண்டுகளாக முடிக்கப்பெறாமல் இன்னும் நிலுவையில் இருக்கின்றன. இதுதான் கடந்த ஆட்சியினுடைய நிலை.

அதேபோல் ஒன்றிய அரசினுடைய பங்குகள். அந்தப் பங்குகளைக் கொண்டும், வெளியிலே, சந்தையில் வாங்கக்கூடிய மின்சாரத்தைக் கொண்டும் கடந்த காலங்களில் மின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலைகளை நாம் மாற்ற வேண்டும். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள்கூட எப்படியெல்லாம் செலவினங்களைக் குறைக்கலாம் என்று ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். ஒவ்வொருவரும் தங்களுடைய ஆலோசனைகளைச் சொல்கின்றார்கள்.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

சூரிய மின் சக்தியைப் பொறுத்தவரையில், 1–4–2021 அன்று மொத்த உற்பத்தி 4,541 மெகா வாட். வாரியத்தின் கொள்முதல் 3,496 மெகா வாட் ஆக இருக்கின்றது. இந்த இடங்களில்தான் கூடுதல் விலை யூனிட் ஒன்றிற்கு 7 ரூபாய் 1 பைசா என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எதனால் இந்தக் கூடுதல் விலை என்றுதான் நாம் கேட்கிறோம். எதற்காக 25 ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் போடப்பட்டது? இந்த 25 ஆண்டுகளில் நம்மால் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாதா? அதை நம்மால் பூர்த்தி செய்ய முடியாதா? இன்னுமொரு கருத்தை இங்கே நான் பதிவிட வேண்டும். துறை ரீதியாக ஆய்வு செய்தபோது, இந்த ஒப்பந்தங்கள் போடப்பட்ட காலத்தில் சூரிய மின் சக்தி உற்பத்திக் கழகம், 6 ரூபாய் 32 பைசாவிற்கு ஒரு யூனிட் மின்சாரத்தை வழங்குவதற்கு தயாராக இருந்திருக்கிறது. அப்படித் தயாராக இருந்த நேரத்திலும்கூட, 7 ரூபாய் 1 பைசாவிற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. தற்சமயம் ஒரு சிறப்பு வாய்ந்த முன்னேற்றத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள், வாரியத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். கடந்த காலங்களில் 7 ரூபாய் 1 பைசா என்ற விலைக்கு வாங்கப்பட்ட சூரிய மின்சக்தி கொள்முதல் ஒப்பந்தத்திற்குப் பதிலாக இன்றைய நிலையில் சூரிய மின்சக்தி உற்பத்திக் கழகத்திடமிருந்து யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 61 பைசா வீதம் 1,000 மெகா வாட் மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் வாங்கப்பட்டது 7 ரூபாய் 1 பைசா. ஆனால், இப்போது மாண்புமிகு முதலமைச்சருடைய சீரிய நடவடிக்கையால், அவருடைய வழிகாட்டுதலின்படி, 1,000 மெகா வாட் மின்சாரம் யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 61 பைசா என்ற விலையில் கொள்முதல் செய்வதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–35

குறிப்பாக, தனியாரிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகின்ற மின்சாரத்தினுடைய சராசரி விலை Fixed cost, variable cost எல்லாவற்றையும் சேர்த்து, 15 வருட காலத்திற்கு 4 ரூபாய் 91 பைசா. ஆனால், குறைந்தபட்சம் 4 ரூபாய் 57 பைசாவில் தொடங்கி 9 ரூபாய் 20 பைசா வரை விலை கொடுக்கப்படுகிறது.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

இவை 2013 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தங்கள். ஆனால், அந்தத் திட்டங்களே மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன. அந்த மூன்று ஆண்டுகளில் சந்தையிலே மின்சாரத்தினுடைய விலை குறைந்திருக்கின்றது. ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. இன்னும் ஒரு கருத்தை நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் திரு. நாகல்சாமி என்பவர் இயக்குநராக இருந்தார். இயக்குநராக இருந்த அவர், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடாது என்று பதிவு செய்திருக்கிறார். அவர் ஓய்வுபெறும் வரை அந்தத் திட்டத்தினை அப்படியே நிலுவையில் வைத்திருந்து, அவர் ஓய்வுபெற்ற பிறகு, அந்தத் திட்டத்தினைத் தூசித் தட்டி எடுத்து, ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதனால்தான் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாங்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அதைத்தான் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவாக ஒவ்வொரு முறையும் சுட்டிக்காட்டுகின்றார்கள். இது சேவைத் துறைதான்; மறுக்கவில்லை. சேவைத் துறை என்பதற்காக நாம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தினைக் கொள்முதல் செய்ய வேண்டிய அவசியமில்லை. அப்படி அதிக விலை கொடுத்து வாங்குகின்றபோது குறைந்தகால கொள்முதல் ஒப்பந்தத்திற்கு நாம் செல்கின்றபோது, நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். எஞ்சியிருக்கின்ற காலங்களில், நம்முடைய உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய முயற்சிகளை நாம் முன்னெடுக்கலாம். அந்தவகையில் Power Trading Corporation எந்த மாநிலத்திற்கும் ஒதுக்கப்படாமல் உள்ள மின் சக்தியிலிருந்து நடுத்தரக் கால கொள்முதல் ஒப்பந்தம் மூலமாக யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் 26 பைசா வீதம் ஏறத்தாழ 1,500 மெகா வாட் கொள்முதல் செய்து, நம் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், வழிகாட்டுதலின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்படி எந்தெந்த வகையில் நம்முடைய செலவினங்களை நாம் குறைக்க முடியும் என ஆலோசித்து வருகிறோம்.

ஏற்கெனவே வட்டி விகிதத்தினைப் பற்றி நான் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தேன். நம்முடைய வாரியத்தின் மொத்த கடன் ரூ.1,59,000 கோடி. தற்போது தமிழக அரசின் கடனில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு, மின் வாரியத்தின் கடனாக இருக்கின்றது. இதற்காக ஆண்டிற்கு ரூ.15,000 கோடி முதல் ரூ.16,000 கோடி வரை

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

வட்டி செலுத்தப்படுகின்றது. வட்டி விகிதம் ஒன்பதரை சதவிகிதம் தொடங்கி பதின்மூன்றரை சதவிகிதம் வரை உள்ளது. இந்த வட்டி விகிதத்தினைக் குறைக்க வேண்டும். இது சேவைத் துறைதான். அதற்காக அதிக வட்டி கொடுத்து நாம் கடனைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. வட்டி விகிதத்தினைக் குறைத்து, நமக்கு ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைக்கும்போது, மக்களிடமிருந்து வரக்கூடிய வருவாயைக் கொண்டு வருங்காலங்களில் மின் வாரியத்தை முன்னெடுக்க முடியும், மின் வாரியத்தை மேம்படுத்த முடியும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2020–2021 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில், 2011–க்குப் பிறகு 2021 வரை தொடங்கப்பட்ட திட்டங்கள், இணைக்கப்பட்ட உற்பத்தி விவரங்களைப் பற்றி ஒரு பட்டியலைப் போட்டிருந்தார்கள். அந்தப் பட்டியலை எடுத்துப் பார்க்கும்போது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் 19. அந்தப் பட்டியலில் 19 திட்டங்கள் மூலமாக செய்யப்பட்டிருக்கின்ற உற்பத்தி மின் நிறுவுதிறனில் இணைக்கப்பட்டிருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, இன்னும் ஒரு கருத்தினைப் பதிவு செய்ய வேண்டும். நிறுத்தப்பட்ட திட்டங்கள், துவக்கப்படாத திட்டங்கள், கட்டுமானப் பணிகள் தொடங்கி நிறுத்தப்பட்ட திட்டங்கள், இப்படி 15 திட்டங்கள் தற்போது நிலுவையில் இருக்கின்றன. தொடங்கப்படாத திட்டங்கள் ஐந்து. நிறுத்தப்பட்ட திட்டங்கள் மூன்று. பணிகளைத் தொடங்கி நிறுத்தப்பட்ட அல்லது முடிக்கப்படாத திட்டங்கள் ஏழு. இதில் தொடங்கப்படாத திட்டங்களைக் குறித்து பார்க்கும்போது, ஒரே திட்டம் பல்வேறு இடங்களில் அறிவிப்புகளாகவும், செய்திகளாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றது. கடலாடி உயர்நிலை அனல் மின் நிலையத் திட்டம். 2016–2017–ல் இருக்கின்றது, 2017–2018–ல் இருக்கின்றது. 2015–ல் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்பாக இருக்கின்றது. தேர்தல் அறிக்கை 2016–ல் இருக்கின்றது. அதுபோல், கடலாடி சோலார் உயர் மின் நிலையத் திட்டம். 2016–2017 நிதிநிலை அறிக்கையில் இருக்கின்றது. 2017–ல் பேரவை விதி 110–ன்கீழ் அறிவிப்பாக இருக்கின்றது. 2016 தேர்தல் வாக்குறுதியிலும் இருக்கின்றது. ஒரே திட்டம் ஐந்து இடங்களில் இடம்பெற்றிருக்கின்றது. இவையெல்லாம் அறிவிப்புகளாக மட்டுமே இருக்கின்றன. செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படவில்லை. அதனால்தான் நம்முடைய

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

முதலமைச்சர் தளபதி அவர்கள் மின்சார வாரியம் மக்களுக்கு மிகச் சிறப்பான சேவைகளைச் செய்திட வேண்டும். மின் தடை இல்லாத சேவைகளை, ஒரு சராசரியான, சமமான மின்சாரத்தை வழங்க வேண்டும் என்று உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். அப்படி அந்த சேவைகளைச் செய்கின்றபோது, கட்டணங்களில் இழப்பு வரக்கூடாது, வாரியத்திற்கு இழப்பு வரக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவுகளை எங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 2–40

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, 19–7–2017 அன்று கொளத்தூர் தொகுதி, கணேசன் நகரில் துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகின்றார்கள்; மீண்டும் 16–6–2018 அன்று சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். 15–9–2020 ஆம் தேதி வினாக்கள்–விடைகள் நேரத்தில் கேட்டிருக்கின்றார்கள். 19–7–2017 ஆம் தேதிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், 'ஒரு மாத காலத்தில் பணிகள் துவங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டது இன்றுவரை அறிவிப்பாகவே இருக்கிறது; பணிகளைத் தொடங்கவில்லை. நம்முடைய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொகுதியில் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று தொடர்ந்து அதிகாரிகளிடத்தில் வலியுறுத்தி இப்போது அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு நாங்கள் முழுமையாகத் தயாராக இருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, வேளச்சேரியில் 3½ ஆண்டுகளுக்கு முன்பாக 25 கிலோ மீட்டர் நீளத்திற்குப் புதைவடப் பாதையாக மாற்றியதில், 300 pillar box போடப்படாமல், புதைவடக் கம்பிகள் வீணடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களிலெல்லாம் குடிநீர் வாரியம் பணிகளைச் செய்கின்றபோது, எந்த இடங்களில் புதைவட கம்பிகளைப் பதித்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு 3½ கிலோ மீட்டர் நீள புதைவடக் கம்பிகள் இப்போது வீணடிக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நிலைகளிலிருந்து வாரியத்தை முழுவதுமாகச் சீரமைக்க வேண்டும்.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

உற்பத்தி நிலையங்களுக்கு வாங்கப்படுகின்ற தளவாடங்களைப் பொறுத்தவரை, 64 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களை இருப்பு வைக்கலாம் என்பது விதி. ஆனால், 31–12–2020–ல் 64 கோடி ரூபாய் மதிப்பில் வைத்திருக்க வேண்டிய தளவாடங்கள் இருப்பு 346 கோடி ரூபாய்க்குக் கொள்முதல் செய்து இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. வெறும் 64 கோடி ரூபாய்க்குத்தான் இருப்பு வைக்க வேண்டும்; ஆனால், 346 கோடி ரூபாய்க்கு இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. மின் விநியோக வட்டங்களுக்கு நிர்ணயித்த தளவாடங்கள் இருப்பு அளவு 982 கோடி ரூபாய். ஆனால், 1–4–2020 ஆம் தேதியன்று 1,405 கோடி ரூபாய் அளவிற்குத் தளவாடங்கள் அங்கே இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரே நிதியாண்டில், ஒரு பொருளை அடுத்தடுத்த கொள்முதலில் வெவ்வேறு விலைக்கு வாங்க சாத்தியம் இருக்கிறதா என்றால், கடந்த ஆட்சியில் அதுவும் நடந்திருக்கின்றது என்பது துறையின்வாயிலாக மற்றுமொரு ஆய்வு செய்யப்பட்டதில், தெரியவந்துள்ளது.

ஒரே பொருள் முதல் நாள் ஒரு விலை, அடுத்த நாள் ஒரு விலை. அதேநாளில் ஒரு மண்டலத்தில் ஒரு விலை; அதேநாளில் மற்றொரு மண்டலத்தில் ஒரு விலை. இதைப் பார்க்கின்றபோது குறிப்பாக ஒரு மண்டலத்தில் 50 இலட்சம் ரூபாய்க்கு ஒரு tender விடலாம் என்றால், அந்த மண்டலத்தில் 77 கோடி ரூபாய்க்கு 50 இலட்சம், 50 இலட்சம் என பிரிக்கப்பட்டு ஒரே ஆண்டில் tender விடப்பட்டிருக்கின்றது. இது ஒரு நிருவாக சீர்கேடு. நான் யாரையும் குறை சொல்லவில்லை. இத்தகைய நிருவாகச் சீர்கேடுகளை நாம் சீரமைக்க வேண்டும். அதைத்தான், கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளை, நிருவாகச் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்று ஆளுநர் உரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஈரோடு மண்டலத்தில் 11 கே.வி. மின்மாற்றிக்கு 217 ரூபாய்க்கு ஒரு material வாங்கியிருக்கிறார்கள். மற்றொரு கொள்முதலில் அதேபொருளை 348 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். 131 ரூபாய் அதிகம். அதேபோல 2016–2017 ஆம் ஆண்டில், கோயம்புத்தூரில் LT Outdoor Type (OT) 65 Pillar box–ஐ 21,475 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். அதே வருடம் சென்னை தெற்கு மண்டலத்தில் 32,248 ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். கூடுதல் விலை 10,773 ரூபாய். இப்படி ஒவ்வொரு பொருளாக, ஏறத்தாழ 12 பொருட்களை சரிபார்த்தபொழுது, 6 கோடி ரூபாய் அளவிற்கு அந்த பொருள்களுடைய விலையில் வித்தியாசங்கள் இருந்தன.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

இப்படி ஒவ்வொன்றாக, எந்த இடங்களில் அந்த இழப்புகளைச் சரி செய்யலாம், நிருவாகத்தைச் சீரமைக்கலாம் என்பதைக் கவனிக்காமல் விட்டதன் விளைவாக இதுபோன்ற இழப்புகளை மின் வாரியம் சந்தித்திருக்கின்றது. அதனால்தான் CAG அறிக்கையிலேயும் இது குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இனிமேல் வரக்கூடிய காலங்களில் மின் வாரியத்தின்மீது, மின்சாரத் துறையின்மீது சிறப்புக் கவனத்தைச் செலுத்தி, பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உத்தரவுகளை வழங்கி வருகின்றார்கள். அதனடிப்படையில் வரக்கூடிய காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறாமல், இதுபோன்ற நிருவாகச் சீர்கேடுகள் இல்லாமல் துறை சீரமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின்தடைகளைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஏதோ மின்தடைகள் இப்போதுதான் ஏற்படுவதைப்போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு கருத்தை இந்த நேரத்திலே சொல்ல வேண்டும். நான் இல்லத்தில் இருந்தபோது, ஆர்.கே. நகரில் மின் தடை ஏற்பட்டுவிட்டது என்று புகார் வந்தது. நான் புகாரின் அடிப்படையில், மின்னகத்திற்குச் சென்றேன். அங்கே அந்த புகார் குறித்து 12 அழைப்புகள் வந்திருந்தன. அங்கிருந்து நேராக Control room–க்கு சென்று check செய்து பார்த்தால், அங்கேயும் புகார் பதிவு செய்யப்பட்டிருந்தது. அங்கிருந்து நேராக SS சென்றோம். அங்கிருந்து திரும்பவும் DT வரை போய் பார்த்தோம். DT–க்கு போகும்போது அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களிடம்கூட சொல்லாமல் நேராக போய்விட்டோம்.

பிற்பகல் 2–45

இரவு நேரம் என்பதால் நாங்கள் நேராகப் போய்விட்டோம். அந்தப் பகுதிக்குச் சென்றபோதுதான் ஒரு தகவல் தெரிந்தது. அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தவர், 'மாலை 6–00 மணி முதல் இரவு 10–00 மணி வரை நான் தெரு விளக்குகளை அணைத்துவிடுவேன்; வீடுகளுக்கு மட்டும் நான் மின்சார இணைப்பைக் கொடுப்பேன்;

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

இரவு 10–00 மணிக்குமேல்தான் என்னால் தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பைக் கொடுக்க முடியும்' என்று சொன்னார். அதற்குக் காரணம் low voltage. இன்னொரு பகுதியில் over load. இவையெல்லாம் கணக்கெடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலைப் பெற்று 234 தொகுதிகளிலும் துறையின் வாரியாக ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வுகளின் அடிப்படையில், எந்தெந்தப் பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் இருக்கிறது; எந்தெந்த இடங்களில் அதிக மின்பளு போன்ற குறைகள் இருக்கின்றன என்பதை நாம் கண்டறிந்து, நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அதிக மின் பளு (over load) இருக்கக்கூடிய 5,205 இடங்களும், குறைந்த மின்னழுத்தம் (low voltage) இருக்கக்கூடிய 3,200 இடங்களும் கண்டறியப்பட்டன.

ரூ.625 கோடியில் 8,905 மின் மாற்றிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். அந்த வகையில் நாம் இங்கே பார்க்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற உன்னத நோக்கத்தோடு நல்லாட்சியைத் தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய அவையில் இருக்கக்கூடிய 234 சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்கும் இந்த 8,905 மின் மாற்றிகள்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான மின் விநியோகம் இருக்க வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணிகளைத் தொடங்கி வைத்திருக்கின்றார்கள். அதன்படிப் பார்த்தால், எடப்பாடியில் 60, போடியில் 35, தொண்டாமுத்தூர் 23, குமாரபாளையம் 40, அரக்கோணம் 74, ஸ்ரீபெரும்புதூர் 28, கிள்ளியூர் 64, பெண்ணாகரம் 108, திருநெல்வேலி 17, காட்டுமன்னார்கோவில் 42, கீழ்வேளூர் 19, தளி 19, வாசுதேவநல்லூர் 2, பாபநாசம் 79, திருச்செங்கோடு 4, பண்ருட்டி 20, கே.வி. குப்பம் 56, இன்னும் சொல்லப்போனால் எதிர்க்கட்சியினரான அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய 66 தொகுதிகளில் 1,966 மின் மாற்றிகளை மாற்றுவதற்குண்டான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அந்தப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், தளபதி அவர்கள். பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

5 தொகுதிகளில் 241 இடங்கள், பா.ஜ.க.–வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் 4 தொகுதிகளில் 70 இடங்கள் என இந்தப் புதிய மின் மாற்றிகள் அமைக்கக்கூடிய பணிகள் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற சிறப்புத் திட்டத்தின் மூலமாக மின்சாரத் துறைக்கு வரப்பெற்றிருக்கின்ற மனுக்கள் 4,694. இதில் தீர்வு காணப்பட்டவை 1,984. ஏறத்தாழ 42 சதவிகிதம் அளவிற்கு இந்த மனுக்கள்மீது வாரியம் தீர்வு கண்டிருக்கிறது. அதேபோன்று, எதனால் மின் விநியோகம் சரிவர வழங்க முடியவில்லை என்பதை நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். அங்கே இருக்கக்கூடிய மண்டலங்கள் முதல் பிரிவு அலுவலகங்கள் வரை, மண்டலங்கள் வாரியாகச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று ஆய்வுக் கூட்டங்களை நாங்கள் நடத்தினோம்.

ஒவ்வொரு மண்டலத்திற்கும் செல்கின்றபோது, துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் மற்றும் C.M.D. ஆகியோருடன் நாம் ஆய்வுக் கூட்டம் நடத்தலாம் என்று சொன்னேன். "E.E. level–ல் இல்லையென்றால்கூட A.E. level–ல் நடத்துங்கள். நாம் எல்லோரையும் பார்க்கலாம். அவர்களுடைய குறைகளையும் கேட்கலாம்" என்று சொன்னேன். அவர்களும் சரியென்று சொன்னார்கள். மண்டலங்கள் வாரியாகச் செல்கின்றபோது, பல்வேறு இடங்களில் அங்கிருக்கக்கூடிய A.E. பேசும்போது இப்போதுதான் 'முதன்முறையாக ஓர் அமைச்சர் நேரில் வருகை தந்து, அந்தந்த மாவட்ட அமைச்சர்களெல்லாம் நேரிலே வருகை தந்திருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களையும் பேச வைத்துள்ளீர்கள்' என்று கூறினார்கள். சென்னையிலே நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நம்முடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், போற்றுதலுக்குரிய அண்ணன் திரு. உதயநிதி அவர்கள் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்கள். திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்கள். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். குறிப்பாக, ஏதோ ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டு, அதிகாரிகளை 'நடத்துங்கள்' என்று சொல்லாமல், குறைந்தபட்சம் நான்கு மணி நேரம் முதல் 5 மணி

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

நேரம் வரை நடைபெற்ற அந்தக் கூட்டங்களில், 400 முதல் 500 பேர் வரை கலந்துகொண்டார்கள். C.E.–யிலிருந்து A.E. வரைக்கும் அனைவருடைய குறைகளையும் கேட்டறிந்து என்ன செய்ய வேண்டும்? எப்படி, இந்த மின் விநியோகத்தை தடையில்லாமல் சீராக மக்களுக்கு எடுத்துச்செல்வது, அனைவருடைய தேவைகள் என்ன என்பதையும் கேட்டறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, பல்வேறு சிறப்புத் திட்டங்களை இப்போது நாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம்.

ஆய்வுக் கூட்டங்களிலே சொல்லப்பட்டதன் அடிப்படையில் பார்க்கின்றபோது, இப்போது இருக்கக்கூடிய 2,858 பிரிவு அலுவலகங்களில், பாபநாசத்திலுள்ள ஒரு பிரிவு அலுவலகத்தில் 678 இணைப்புகள்தான் இருக்கின்றன; இன்னொரு பிரிவு அலுவலகமான மேடவாக்கத்தில், 52,689 இணைப்புகள் இருக்கின்றன. ஒரே section–ல் ஒரு பக்கம் 678; இன்னொரு பக்கம் 52,689; அதேபோல, உபகோட்டத்தில் பார்க்கின்றபோது, பந்தன்கோடு உபகோட்டத்தில் மின் இணைப்புகள் 4,619; மேடவாக்கத்தில் 1,71,562. இதுதான் உபகோட்டங்களில் இருக்கக்கூடிய மின் இணைப்புகளின் நிலை. அதேபோல, கோட்டத்தில் பார்க்கின்றபோது நெல்லிக்குப்பம் கோட்டத்தில் 66,000 மின் இணைப்புகள். தாம்பரம் கோட்டத்தில் 6,54,000 மின் இணைப்புகள். இதுதான் மின் இணைப்புகளைக் கண்காணிக்கின்ற வகையில் பணியாற்றக்கூடிய அந்தக் கோட்டத்தினுடைய நிலை.

பிற்பகல் 2–50

மேற்பார்வைப் பொறியாளர்கள் வட்டத்திலே பார்க்கும்போது பல்லடத்திலே 3 இலட்சத்து 90 ஆயிரம் மின் இணைப்புகள்; திருநெல்வேலியில் 13 இலட்சத்து 63 ஆயிரம் மின் இணைப்புகள்; மண்டலங்களைப் பார்க்கின்றபோது, சென்னை வட்டத்திலே 25 இலட்சம் மின் இணைப்புகள்; அதேபோல், திருச்சியிலே 48 இலட்சம் மின் இணைப்புகள். இப்படி ஒரு விகிதாச்சாரம் இருக்கிறது. அனைவரும் ஒரே விதமான பணிகளைத்தான் செய்கின்றார்கள். ஆனால், அவர்களுக்குண்டான பணிகள் சராசரியாகப் பிரித்து பகிர்ந்தளிக்கப்படவில்லை. இதுபோன்ற நிலைகளைக் கண்டறிந்து அதைச் சீர் செய்வதற்கு, அந்தப் பணிகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு பல ஆண்டுகளாக எந்தவிதமான முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை என்று அந்த ஆய்வுக் கூட்டத்திலே எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று வாரியம் இந்த நிலையிலே

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

இருக்கிறது; இதைச் சீர் செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக தகுந்த உத்தரவிட்டார்கள்.

குறிப்பாக, ஒரே அலுவலகத்தில் இரண்டு வருவாய் மாவட்டங்கள் இணைப்புகளை பெற்றிருக்கக்கூடிய நிலை. ஓர் ஆய்வுக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இந்தப் பகுதியில் இந்த A.E. இருப்பார், அந்தப் பகுதியிலே E.E. இருப்பார் என்ற சூழ்நிலைதான் உள்ளது என்று தெரிவித்தனர். வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கி மின் வாரிய அலுவலகங்கள் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில் இப்போது புதிய அலுவலகங்கள் தொடங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையிலே பெருமையோடு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த ஆய்வுகளைச் செய்கின்றபோது ஒரே A.E. இரண்டு, மூன்று பகுதிகளில் பணியாற்றிக்கொண்டிருந்த நிலை தெரிய வந்தது. அதுதான் நிலைமை. 'என்ன இப்படி இருக்கிறது; ஏன் வேலை நடைபெறவில்லை; ஏன் புகார்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்று கேட்டபோது; 'சார், நானும் எல்லா இடங்களிலும் அலைகின்றேன், என்னால் மூன்று அலுவலகங்களில் வேலை செய்ய முடியவில்லை' என்று ஒரு A.E. சொன்னார். ஏனென்று கேட்டபோது, 'காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை' என்றார். நம்முடைய வாரியத்தில் உள்ள மொத்தப் பணியிடங்கள் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 631. அவற்றில், 56,877 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மொத்த களப் பணியாளர்களின் (Field Assistants) எண்ணிக்கை 31,205. இதில் காலிப் பணியிடங்கள் 25,027 பேர். இப்படித்தான், களத்திலே சென்று சீர்படுத்தி, சீரான மின் விநியோகத்தை எடுத்துச்செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

அதேபோல, கம்பியாளர்கள் (Wiremen) மொத்த பணியிடங்கள் 20,323. அதிலே 8 ஆயிரத்து 582 பணியிடங்கள் இப்போது காலியாக இருக்கின்றன. மதிப்பீட்டாளர்கள், வீட்டிற்குக் கணக்கெடுக்கப் போவதிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஒருநாள் late ஆனாலும், கட்டணம் கூடுதலாக வந்துவிடுகிறது என்று சொல்கிறோம். மொத்தம் 7,538 பணியிடங்கள். அதில், 3,956 பணியிடங்கள் இப்போது காலியாக இருக்கின்றன.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

தற்போது, இருக்கின்றவர்களை வைத்து நிருவாகத்தை நடத்திச் செல்லக்கூடிய சூழல். இந்தச் சூழ்நிலையில், மின்சாரத் துறையில், பல்வேறு நிலைகளில் ஒப்பந்த முறையில் பணியாற்றக்கூடியவர்கள் தங்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். அதேபோல விடுபட்ட gangmen, 'எங்களுக்கு அந்தப் பணியை வழங்க வேண்டும்' என்று கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, வரக்கூடிய காலங்களில் இதுகுறித்து, துறை விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இங்கே பேசுகின்றபோது, 1912 ஒரே புகார் எண்தான் இருந்தது என்று சுட்டிக்காட்டினார்கள். துறையின் மூலமாக மொத்தம் எத்தனைப் புகார் எண்கள் இருக்கின்றன என்று ஆய்வு செய்தோம். மொத்தம் 106 புகார் எண்கள் இருக்கின்றன. Landline–ல் ஆரம்பித்து cell number வரைக்கும், 1912 என்ற எண்ணையும் சேர்த்துப் பார்த்தால் 107 புகார் எண்கள் இருக்கின்றன. ஒருவருக்கு வீடு ஒரு பக்கம், தோட்டம் ஒரு பக்கம், அலுவலகம் ஒரு பக்கம் இருக்கும். மூன்று இடங்களிலிருந்தும் புகார் அளிக்க வேண்டுமென்றால், மூன்று எண்களையும் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். இதுதான் நிலைமை. இவற்றையெல்லாம் ஒருமுகப்படுத்தி, மக்கள் ஒரே எண்ணில் தொடர்புகொள்ள வேண்டும். வரக்கூடிய புகார்கள் எளிதில் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டம்தான் 'மின்னகம்'. அந்த மின்னகத்தைத் தனது பொற்கரங்களால் தொடங்கி வைத்து, மக்களுடைய பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அர்ப்பணித்து வைத்தார்கள். அந்த மின்னகத்தின் மூலமாக வரப்பெற்றிருக்கின்ற புகார்களில் 97 சதவிகித புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவுக்கு மின்னகத்தில் பணிபுரிபவர்கள் பணியாற்றியுள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20–6–2021 அன்று மின்னகத்தைத் தொடங்கி வைத்ததிலிருந்து 6–9–2021 வரையில் 2,98,834 புகார்கள் வரப்பெற்றுள்ளன. அதில், 2,90,652 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. 97.30 சதவிகிதம் புகார்களுக்குத் தீர்வு

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

காணப்பட்டுள்ளது. இதிலே, ஒரு சில இடங்களில், அலுவலர்கள் அல்லது அதிகாரிகளிடம் ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலும்கூட, அதுகுறித்த புகார்களும் மின்னகத்துக்கே வருகின்றன. அதுபோன்று வரக்கூடிய புகார்களை, மீண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கே அனுப்பாமல், துறையில் இருக்கக்கூடிய Vigilance team–க்கு அனுப்பி, அதையும் விசாரிக்கக்கூடிய பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, துறை இப்போது முன்னெடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–55

இறுதியாக— முடிக்கப் போகிறேன்— இறுதியாக நிலக்கரிக்கு வருகிறேன். ஆனால், எல்லோரும் சேர்ந்து சிந்திக்க வேண்டிய பொருள் இது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுங்கள், கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: ஏனென்றால், வடசென்னையில் ஆய்வு செய்தபோது, நிலக்கரி பதிவேட்டுக்கும், இருப்புக்கும் 2 இலட்சத்து 38 ஆயிரம் டன் வித்தியாசம் இருந்தது கண்டறியப்பட்டது. நீங்களும், அதுசம்பந்தமாக என்ன செய்யலாம் என்ற ஆலோசனையைச் சொல்லுங்கள். அன்று மாலையே இத்துறையை நிருவகித்த முன்னாள் அமைச்சர் அவர்கள் பேட்டி கொடுத்திருந்தார். அதாவது, 'நாங்கள் குழு அமைத்திருந்தோம். நாங்கள் கண்டுபிடித்ததைத்தான் அவர் வெளியிடுகிறார்' என்று அந்தப் பேட்டியில் சொல்லியிருந்தார். நான் ஒன்றே ஒன்றைத்தான் திரும்பவும், உங்களிடம் கேட்கிறேன். நீங்கள் எந்தத் தேதியில் குழு அமைத்தீர்கள்? அந்தக் குழு அமைக்கப்பட்ட ஆணையின் நகலை வெளியிடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காலையில், உங்கள் உரையில், 'இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பி நான் ஆய்வு செய்தேன்' என்று சொன்னீர்கள். அந்த இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய ஆய்வு அறிக்கை என்ன சொல்கிறது? இருப்பு குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறதா, இல்லையா? நான் அந்த ஆய்வு அறிக்கையைத் துறையிலே தேடிப் பார்த்தேன். அப்படியொரு அறிக்கையே இல்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2–5–2021 அன்று சட்டமன்றப் பொதுத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

இவர்கள் எந்தத் தேதியில் அந்தக் குழுவை அமைத்திருக்கிறார்கள் என்றால், 28–4–2021 அன்று அமைத்திருக்கிறார்கள். அதுவும் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கு முன்பாக, அந்தக் குழு ஒருநாள்கூட எங்கேயும் சென்று ஆய்வு செய்யவில்லை. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, 2–8–2021 அன்று குழு அமைக்கப்பட்டு, 6–8–2021 அன்று வடசென்னையில் ஆய்வு செய்யப்பட்டு, இந்தக் குறைபாடு கண்டறியப்பட்டது. இது முதல்கட்ட அறிக்கைதான். இன்னும், முழு ஆய்வினை நாம் மேற்கொள்ள வேண்டும். வடசென்னையில் 2 இலட்சத்து 38 ஆயிரத்து 437 மெட்ரிக் டன் அளவுக்கு நிலக்கரி காணவில்லை என்றும், இருப்பிற்கும், பதிவேட்டிற்கும் வித்தியாசம் வருகின்றது என்றும் அறிக்கையில் சொல்லப்பட்டிருகின்றது.

தூத்துக்குடிக்கு ஆய்வுக்குச் சென்றார்கள். தூத்துக்குடியில் 71 ஆயிரத்து 857 டன் நிலக்கரி இருப்புக்கும், பதிவேட்டிற்கும் வித்தியாசம் உள்ளது என்று அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். 71 ஆயிரம் டன் நிலக்கரி தூத்துக்குடியில் இப்பொழுது காணவில்லை. இருப்பு பதிவேட்டில் இருக்கின்றது; ஆனால், கையிருப்பில் இல்லை. எங்கே இந்த தவறுகள் நடக்கின்றன? இனி வரக்கூடிய காலங்களில் இந்தமாதிரி தவறுகள் நடைபெறக்கூடாது. இதுபோன்ற தவறுகள் நிகழாத வண்ணம் நாம் ஆரம்பத்திலேயே பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு வாரப் பத்திரிகையில் 'தங்கமணி வசமாக மாட்டிக்கொண்டார்' என்று நான் சொன்னதாக செய்தி வந்திருந்தது குறித்து இங்கு பேசும்போது அவர் சொன்னார். எந்த இடத்தில் முதல் நாள் பேட்டியை நீங்கள் பார்த்தீர்கள்? நான் யாருடைய பெயரையும் சுட்டிக்காட்டவில்லை. 'யார் தவறு செய்திருந்தாலும், அவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்' என்றுதான் நான் சுட்டிக்காட்டியிருந்தேன். பத்திரிகையில் வருகின்ற பேட்டிகளுக்கு அவர்களாக தலைப்பிடுகின்றபோது அதற்கு நான் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது.

இந்தத் தவறுகள் எங்கிருந்து ஏற்பட்டன? எத்தனை ஆண்டுகளாக இந்தத் தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன? இந்தமாதிரி தவறுகள் நடக்காத வண்ணம் எப்படி சீர்படுத்துவது, செம்மைப்படுத்துவது என்பதை ஆய்வினுடைய இறுதி அறிக்கை வரப்பெற்ற பின்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான வழிகாட்டுதல்களைப் பெற்று நடவடிக்கை

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

மேற்கொள்ளப்படும். வரக்கூடிய காலங்களில் இதுபோன்ற தவறுகள் மின்சார வாரியத்தில் நடக்காத வண்ணம் மின் வாரியத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு, மின் வாரியத்தை மேம்படுத்துவதற்கு துறையின் சார்பாக பல்வேறு நடவடிக்கைகளை வேகப்படுத்தி, விரைவுபடுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, online மூலம் மதுபானம் விற்பனை என்ற கேள்வியை இங்கே வைத்திருந்தார்கள். Online மூலம் மதுபானம் விற்பனை செய்வது குறித்து மேலாண்மை இயக்குநர் அவர்கள் சொன்னதாகச் செய்தி பத்திரிகைகளில் வந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தளபதி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், online மூலம் மதுபானம் விற்பனை செய்யும் எண்ணம் அரசுக்கு அறவே இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் இருக்கக்கூடிய மொத்த கடைகளுடைய எண்ணிக்கை 5,425. அதில் மதுக் கூடங்களின் எண்ணிக்கை 3,002. குறிப்பாக, கொரோனா நோய்த் தொற்று காலத்தில் கர்நாடக மாநிலத்தில் மதுக் கடைகள் மூடப்படவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் மதுக்கடைகளை மூட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

பிற்பகல் 3–00

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தவரையில், கள்ளச்சந்தையில் விற்கக்கூடிய கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தலை ஒழித்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்திய தயாரிப்பு, அயல்நாட்டு மதுபானங்கள் வெளிமாநிலங்களிலிருந்து கடத்திவரப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு பணியினை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலமாக 2021 ஆம் ஆண்டில் 11,822 பெண்கள் உட்பட 1,29,676 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். மேலும், ரூ.2.29 கோடி மதிப்பிலான 5.47 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயம், ரூ.1.27 கோடி மதிப்பிலான 8.47 இலட்சம் லிட்டர் சாராய ஊறல், ரூ.16.78 இலட்சம் மதிப்பிலான 55,923 லிட்டர் கள் என பல்வேறு நிலைகளிலே மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்ற நிலைகளைக் கண்டறிந்து,

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

துறையின் சார்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்து மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் பல்வேறு கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். அதேபோன்று வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களின் அத்துணை வெட்டுத் தீர்மானங்களையும் முழுவதுமாக நான் படித்துப் பார்த்தேன். அவற்றில் பெரும்பான்மையானவை குறித்து, வரக்கூடிய துறையின் அறிவிப்புகளில் நிச்சயம் இடம்பெறும் என்ற உறுதியை உங்களிடத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படி இடம் பெறாதவை குறித்து, வரக்கூடிய காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவற்றைச் செயல்படுத்துவதற்கு நிச்சயம் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று உங்களிடத்திலே பணிவன்போடு கேட்டுக்கொண்டு, அடுத்து அறிவிப்புகளுக்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அறிவிப்புகளை தலைப்புச் செய்தி போன்று சொல்லுங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். நீங்கள் பேச ஆரம்பித்து, சரியாக 50 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: எரிசக்தித் துறை பற்றிய அறிவிப்புகளை படிக்கிறேன்.

அறிவிப்புகள்

எரிசக்தித் துறை

1. துரித நடவடிக்கைமூலம் விவசாயிகளுக்கு 1,00,000 புதிய மின் இணைப்புகள் (Agriculture Service Connections) வழங்குதல் (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் 1,00,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

2. தமிழகம் முழுவதும் 4,000 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் மற்றும் 2,000 மெகா வாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டத்துடன்கூடிய "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகரீதியான சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவப்படும்

தமிழகத்தில் ஆண்டுதோறும் அதிகரித்துவரும் மின் தேவையினைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது தமிழ்நாட்டில் கிடைக்கப்பெறும் அபரிமிதமான சூரிய சக்தியினைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) மாவட்டம்தோறும் (மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகள் நீங்கலாக) நிறுவ உள்ளது.

தனியார் நிறுவனங்களிடம் இருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதைக் குறைத்து, சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து, அவற்றின்மூலம் 10 ஆண்டுகளில் 20,000 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி மற்றும் 10,000 மெகா வாட் மின்கலன் சேமிப்பு செய்து மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதன் முதற்கட்டமாக தமிழகத்தில் சுமார் 4,000 மெகா வாட் திறனுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் 2,000 மெகா வாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3. எண்ணூரில் 2,000 மெகா வாட் அளவிற்கு சிறிய அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகா வாட்) அதிக எண்ணிக்கையிலான எரிவாயு இயந்திர மின் திட்டங்கள் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைத்தல்

சென்னையில் அதிகரித்துவரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், மரபுசாரா எரிசக்தி நிர்வாகத்திற்கும் சிறு அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகா வாட்) அதிக எண்ணிக்கையிலான இயந்திரங்களைக் கொண்டு 2,000 மெகா வாட் அளவிற்கு எரிவாயு இயந்திர மின் திட்டத்தினை சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த எரிவாயு திட்டத்திற்கு எண்ணூரில் அமைந்துள்ள இந்திய எண்ணெய்க் கழகத்தின் (M/s. IOCL) சேமிப்புக்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

கிடங்கிலிருந்து மறுவாயுவாக்கும் திரவநிலை எரிவாயு (R–LNG) உபயோகப்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணூர் மாற்று அனல் மின் நிலையம் நிறுத்தி வைக்கப்பட்டதால் தேவையான நிலம் எண்ணூரில் கிடைக்கப்பெற்றுள்ளது. புதிய எரிவாயு இயந்திர நிலையத்தின் மின் உற்பத்தியானது மின் நுகர்வு தேவைக்கும், மரபு சாரா எரிசக்தி மின்சார நிர்வாகத்திற்கும் பயன்படும். காற்றாலை மின்சாரமும் சூரிய சக்தி மின்சாரமும் கிடைக்கப்பெறாத தருணங்களில் மின் தேவையை சமநிலைப்படுத்த இந்த எரிவாயு இயந்திர மின் நிலையங்கள்மூலம் மின்சாரம் பெறப்படும்.

4. கன்னியாகுமரி மாவட்டம், கோதையாறில் 500 மெகா வாட் நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் அமைத்தல்

தமிழ்நாட்டின் உச்சபட்ச மின் தேவை ஏற்படும் கால நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 Hz முதல் 50.5 Hz வரை) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கோதையாறில் 500 மெகா வாட் நீரேற்று புனல் மின் திட்டம் செயல்படுத்தப்படும்.

5. தேனி மாவட்டம், மணலாற்றில் 500 மெகா வாட் நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டம் அமைத்தல்

தமிழ்நாட்டின் உச்சபட்ச மின் தேவை ஏற்படும் கால நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 Hz முதல் 50.5 Hz வரை) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், தேனி மாவட்டத்தில் உள்ள மணலாற்றில் 500 மெகா வாட் நீரேற்று புனல் மின் திட்டம் செயல்படுத்தப்படும்.

6. பல்வேறு மாவட்டங்களில் 7,500 மெகா வாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட 11 புதிய நீரேற்று திட்டங்கள் சாத்தியக்கூறின் அடிப்படையில் அமைத்தல்

7,500 மெகா வாட் மொத்த நிறுவுதிறன் கொண்ட புதிய நீரேற்று புனல் மின் திட்டங்களை சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவுவதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 11 இடங்கள் அடையாளம் காணப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ஆய்வின் அடிப்படையில் திட்டம், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப அடிப்படையில் விரிவான

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் திட்ட செயலாக்கத்திற்குத் தேவையான அனைத்து ஒப்புதல்களும் பெறுவதற்காக ஆலோசகரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அடையாளம் காணப்பட்டுள்ள இடங்கள்:

- மேல் பவானி நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகா வாட்)/நீலகிரி மாவட்டம்.
- வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/கன்னியாகுமரி மாவட்டம்.
- ஆழியாறு நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகா வாட்)/கோயம்புத்தூர் மாவட்டம்.
- சாண்டிநல்லா நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகா வாட்)/நீலகிரி மாவட்டம்.
- மேட்டூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/சேலம் மாவட்டம்.
- பாலாறு–பொரந்தலாறு நீரேற்று புனல் மின் திட்டம் (1,000 மெகா வாட்)/திண்டுக்கல் மாவட்டம்.
- காரையாறு நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/திருநெல்வேலி மாவட்டம்.
- மஞ்சளாறு நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/தேனி மாவட்டம்.
- சாத்தாறு நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/கன்னியாகுமரி மாவட்டம்.
- சிகூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/நீலகிரி மாவட்டம்.
- ஆத்தூர் நீரேற்று புனல் மின் திட்டம் (500 மெகா வாட்)/திண்டுக்கல் மாவட்டம்.

7. உடன்குடி விரிவாக்கத் திட்டம் நிலை–II (2x660 மெகா வாட்), உடன்குடி விரிவாக்க திட்டம் நிலை–III (2x660 மெகா வாட்) ஆகிய அனல் மின் உற்பத்தித் திட்டங்களைச் செயலாக்கத்திற்குக் கொண்டுவர மறு ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

2007–2008 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு வராத,

I. உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை–II (*2X660* மெகா வாட்)

II. உடன்குடி விரிவாக்க மின் திட்டம் நிலை–III (*2X660* மெகா வாட்) ஆகியவற்றைச் செயலாக்கத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், உப்பூர் அனல் மின் திட்டத்தை உடன்குடிக்கு மாற்றவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தமிழக அரசிடம் விண்ணப்பித்துள்ளது. உப்பூர் அனல் மின் திட்டத்தை உடன்குடிக்கு பதிலாக உப்பூரிலேயே மீண்டும் நிறுவ மறு ஆய்வு செய்யப்படும். மேற்சொன்ன மறு ஆய்வு முடிவின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

8. நீலகிரி மாவட்டம், சில்லஹல்லா புனல் மின் நீரேற்று உற்பத்தி திட்டத்தை நிலை–I & II (2,000 மெகா வாட்) செயலாக்கத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுதல்

தமிழகத்தின் உச்ச மின் தேவையை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நீலகிரி மாவட்டத்தில் *2,000* மெகா வாட் (*4X500* மெகா வாட்) சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தை இரண்டு பகுதிகளாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், முதற்படியாக சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே அமைக்கப்படவுள்ள சில்லஹல்லா நீர்த்தேக்கத்தை மேல் நீர்த்தேக்கமாகவும், குந்தாபாலம் நீர்த்தேக்கத்திற்குக் கீழே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத்தை கீழ் நீர்த்தேக்கமாகவும் உபயோகப்படுத்தி, சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் நிலை–I&II (*2,000* மெகா வாட்) செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்பட்டு, இத்திட்டத்தை விரைவாக முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

9. மகாநதி நிலக்கரி நிறுவனத்தால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படாத நிலக்கரிக்கு ஈடாக பரிமாற்று முறையில் (Tolling of Coal) 1,000 மெகா வாட் வரை மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வழங்கப்பட வேண்டிய மொத்த உள்நாட்டு நிலக்கரி ஆண்டுக்கு 237.63 இலட்சம் டன்கள் ஆகும். அதாவது, நாளொன்றுக்கு 17 ரேக்குகள். இது மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து (MCL) நிலக்கரி எரிபொருள் வழங்கும் ஒப்பந்தம் மூலமாக 195.63 இலட்சம் டன்கள் மற்றும் சிங்கரேணி நிறுவனத்திடமிருந்து (SCCL) புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக 42 இலட்சம் டன்கள் ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் (2016–2021) மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து நிலக்கரி 71 சதவிகிதம் மட்டும்தான் வழங்கப்பட்டுள்ளது. 29 சதவிகிதம் வழங்கப்படவில்லை.

எரிபொருள் விநியோக ஒப்பந்தம்மூலம் வழங்கப்படாத நிலக்கரியின் ஒரு பகுதியை, நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகில் உள்ள தற்சார்பு மின் உற்பத்தி நிலையங்களுக்கு (IPP) வழங்கி, அதற்கு ஈடாக மின் கொள்முதல் செய்துகொள்ளும் திட்டத்தின்படி, மகாநதி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து வழங்கப்படாத நிலக்கரியை அருகில் உள்ள தற்சார்பு மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி அதற்கு ஈடாக 1,000 மெகா வாட் வரை நிலக்கரி பரிமாற்ற முறையில் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. மின் ஏல முறையில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திடமிருந்து எரிவாயுவை கொள்முதல் செய்து, தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி, அதற்கு ஈடாக மின்சாரம் பெறும் திட்டம் (Tolling of Gas) செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்

எரிவாயு பரிமாற்ற முறை என்பது, மின்சாரத்தை வாங்குபவர் மின் உற்பத்தியாளருக்கு எரிவாயுவினை பரிமாற்றி அதற்கு நிகரான மின்சாரத்தை மின் உற்பத்தியாளரிடமிருந்து பெறும் செயல்முறையாகும். உள்நாட்டில் கிடைக்கப்பெறும் எரிவாயுவின் அளவு குறையும் நிலையிலுள்ளது. ஆந்திர மாநிலம் காக்கிநாடாவிலுள்ள இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம், கிருஷ்ணா–கோதாவரி படுகைகளில் கிடைக்கும் 2,00,000 கனமீட்டர் இயற்கை எரிவாயுவை 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்ய, ஒப்பந்தப் புள்ளிகளை மின் ஏல முறையில் கோரியுள்ளது.

இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம் 2024 ஆம் நிதியாண்டில் கிருஷ்ணா–கோதாவரி படுகையில் எரிவாயு

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

உற்பத்தி உச்சநிலையை அடையும் என்று மதிப்பிட்டுள்ளது. கிருஷ்ணா–கோதாவரி படுகையில் கிடைக்கும் எரிவாயுவை இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகத்திடமிருந்து மின் ஏல முறையில் கொள்முதல் செய்து தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கி, இதற்குப் பதிலாக 2,500 மெகா வாட் மின்சாரம் பெறும் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

11. மூன்று வருட காலத்திற்குக் குறைந்த விலையில் நடுத்தர கால ஒப்பந்தம் (Medium Term) மூலம் யூனிட் ஒன்று, ரூபாய் 3.26/–க்கு 1,500 மெகா வாட் மின் கொள்முதல் செய்தல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு சேமிப்பை ஏற்படுத்தும் வகையில் குறைந்த விலையில் நடுத்தர கால ஒப்பந்தம்மூலம் யூனிட் ஒன்று, ரூபாய் 3.26/–க்கு 1,500 மெகா வாட் மின்சார கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தடையில்லா மின்சாரம் வழங்க, மாலைநேர உச்சமின் தேவைக்காகவும் மற்றும் கோடை கால முழுநேர மின் தேவையைப் பூர்த்தி செய்யவும் குறுகிய கால (Short Term) ஒப்பந்தம்மூலம் மின் கொள்முதல் செய்தல்

மின் பற்றாக்குறையைச் சமாளித்து, தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு, 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு மே மாதம் வரை குறுகிய கால ஒப்பந்தம்மூலம் மின்சாரம் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

குறுகிய கால மின் கொள்முதலுக்கு குறைந்தது 85% மின் சுமை காரணி (PLF) அளவிற்குக் கொள்முதல் செய்ய வேண்டிய நிர்பந்தம் உள்ளதால், நிதி இழப்பு ஏற்படாதவண்ணம் கீழ்க்கண்டவாறு குறுகிய கால மின்கொள்முதல் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது:

வ. எண்	மாதம்	நேரம்	மெகா வாட்
1.	அக்டோபர் 2021	மாலை நேரம் மட்டும்	1,200
		நாள் முழுவதும்	500
2.	நவம்பர் 2021	மாலை நேரம் மட்டும்	600

3.	டிசம்பர் 2021	மாலை நேரம் மட்டும்	900
4.	ஜனவரி 2022	மாலை நேரம் மட்டும்	1,100
5.	பிப்ரவரி 2022	மாலை நேரம் மட்டும்	2,400
6.	மார்ச் 2022	மாலை நேரம் மட்டும்	2,400
		நாள் முழுவதும்	1,200
7.	ஏப்ரல் 2022	மாலை நேரம் மட்டும்	2,200
		நாள் முழுவதும்	1,500
8.	மே 2022	மாலை நேரம் மட்டும்	2,200
		நாள் முழுவதும்	900

மேற்கண்ட கொள்முதல் மின்சாரம் போக, பற்றாக்குறை வரும்பட்சத்தில், நடைமுறை சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் வெளிச்சந்தையில் தேவைக்குக் கொள்முதல் செய்யும்வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது.

13. காற்றாலை மின் உற்பத்தி காலங்களில் உபரியாக உள்ள மின்சாரத்தைத் தேவைப்படும் மாநிலங்களுக்கு வழங்கி, கோடைக் காலங்களில் திரும்பப்பெறும் மின் பரிமாற்ற முறையை (Swapping of Power) சீரியமுறையில் செயல்படுத்துதல்

மின் பரிமாற்ற ஏற்பாடு என்பது இரு மாநில அரசு மின் நிறுவனங்களுக்கிடையில் பணப் பரிவர்த்தனைகள் இல்லாமல் மின்சாரப் பரிமாற்றம் மட்டுமே நடைபெறுவதாகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின்மூலம் பருவக்காற்று காலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) காற்றாலைமூலம் பெறப்படும் உபரி மின்சாரத்தைப் பிற மாநில அரசு மின் நிறுவனங்களுக்கு வழங்கி அதனை அடுத்த கோடை காலத்தில் (பிப்ரவரி முதல் மே வரை) திரும்பப்பெறும். கூடுதலாக கோடை மாதங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின்மூலம் பிற மாநில அரசு மின் நிறுவனங்களிடமிருந்து மின்சாரம் பெற்று, அதனை வரும் பருவக்காற்றின் காலத்தில் திரும்ப வழங்கும்.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

தற்சமயம், பருவக்காற்றின் காலத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பரிமாற்ற மின் ஏற்பாடு வாயிலாக உபரி மின்சாரத்தை வழங்குகிறது. தற்போது இந்தப் பரிமாற்ற முறையில் 100 சதவிகிதம் பெறப்படும் மின்சாரத்திற்கு 105 சதவிகிதம் வரை மின்சாரம் திரும்ப அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் சேமிப்பு ஏற்படுத்தும் விதத்திலும், வலுப்படுத்தும் விதத்திலும், 2021 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு காலத்திற்கு 1,000 மெகா வாட் அளவிற்கு இதர மாநில அரசு மின் நிறுவனங்களுடன் கலந்து பேசி, திரும்ப அளிக்கும் மின்சாரத்தை 100 சதவிகிதத்திற்கும் குறைவாக திருப்பிச் செலுத்தும் வகையில் சேமிப்புத் தொகையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் பற்றாக்குறை காலங்களில் குறுகிய கால கொள்முதலைக் குறைக்க முடியும்.

14. மின் தடை மற்றும் மின் வழித்தடங்களில் ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைக் கண்டறியும் நோக்குடன் ரூபாய் 1,270 கோடி மதிப்பீட்டில் மின்மாற்றிகளில் (Transformers) சிறப்பு மின்அளவி (Smart Meter) பொருத்துதல்

தமிழ்நாட்டில் தற்சமயம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினரால் 3,63,200 மின்மாற்றிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதன் திறன் 16 KVA முதல் 500 KVA வரை உள்ளது. இந்த மின்மாற்றிகள் நகரங்களின் நெருக்கடியான தெருக்களில் இருந்து மலைப்பிரதேசம் வரை அனைத்து இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய மின்மாற்றிகள் பழுதாகும் சமயங்களில் மின்தடை ஏற்படுகிறது.

இதனைத் தவிர்க்கும்பொருட்டு, அனைத்து மின்மாற்றிகளிலும் அதி நவீன வசதிகளுடன்கூடிய மின்மாற்றி கண்காணிப்பு அமைப்புடன்கூடிய (Transformer monitory system) மின் அளவி பொருத்தப்பட உள்ளது. இந்த மின்அளவிமூலம், அந்தந்த மின்மாற்றியில் ஏற்படும் மின்னழுத்த ஏற்றத்தாழ்வுகள், வெப்பம், எண்ணெய் அளவு, செல்லும் மின்சாரத்தின் அளவு, அதிர்வெண் மற்றும் மொத்த மின் தடை ஆகியன பதிவு செய்யப்பட்டு, ஸ்கேடா (SCADA) மூலம் அந்தந்தப் பிரிவு அலுவலகக் கணினியுடன் இணைக்கப்படும். இதனால் அந்த மின்மாற்றியின் நிலையினை எந்த நொடியிலும் துறை சார்ந்த அலுவலரால் கண்காணிக்க முடியும். இவ்வாறு ஒவ்வொரு மின்மாற்றியின் சிறப்பு மீட்டரும்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

ஸ்கேடா (SCADA) மூலம் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைக்கப்பட்டு, அனைத்து மின்மாற்றிகளையும் கணினி திரையில் பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படும்.

இந்த அமைப்பானது, மின் வழித்தடங்களில் ஏற்படும் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைத் துல்லியமாகக் கணக்கிடவும், மின் திருட்டு பகுதிகளைக் கண்டறியவும் ஏதுவாக இருக்கும். மேலும், மின்மாற்றியில் ஏற்படும் பழுதுகள் வெகுவாகக் குறைக்கப்படும். இவ்வாறு பழுது குறைவதால், தங்கு தடையில்லா மின்சாரம் பொதுமக்களுக்குக் கிடைக்க ஏதுவாகும். இதன்மூலம் வருவாய் கூடுவதுடன், மின் ஊழியர் சந்திக்கும் மின் விபத்துகளையும் தவிர்க்க இயலும். மின் நுகர்வோருக்கு நாளின் 24 மணிநேரமும் எவ்வித தங்கு தடையின்றி, தடையில்லா மின்சாரம் வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டே இத்திட்டத்தினை அமல்படுத்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் 1,270 கோடி ரூபாயாகும்.

பிற்பகல் 3–05

15. மின் நுகர்வோர்களுக்கு மின் பயன்பாட்டினைக் கண்காணிக்கவும், கணக்கீட்டாளர் இன்றி இணைய வசதி மூலமே மின் நுகர்வைக் கணக்கிடவும், மின் இணைப்புகளில் வினைத்திறன்மிகு மின்அளவி (Smart Meter) பொருத்துதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள அனைத்து தாழ்வழுத்த மின் இணைப்புகளிலும் தற்சமயம் சாதாரண மின் அளவிகளே பொருத்தப்பட்டுள்ளன. மின் நுகர்வோர் நலத்தினைக் கருத்திற் கொண்டும், அவர்களது குறைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் அனைத்து மின் இணைப்புகளிலும் தற்போது உள்ள மின் அளவிகள் வினைத்திறன்மிகு மின்அளவிகளாக மாற்றம் செய்யப்படும்.

இந்த வினைத்திறன்மிகு மின்அளவி பொருத்துவதனால், மின் நுகர்வோர் அனைவரும் தமது மின் பயன்பாட்டினை எந்நேரமும் கண்காணிக்க முடியும். இதனால் மின் நுகர்வோர் (Postpaid & Prepaid) முன்கூட்டியே தமக்கான மின் கட்டணத்தினைச் செலுத்த இயலும். உபயோகித்த மின்சாரம் முழுவதுமே கணக்கிடப்படுவதால், மனித தவறுகளினால் ஏற்படும் வருவாய்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

இழப்பு இந்த வினைத்திறன்மிகு மின்அளவி அமைப்பின்மூலம் தவிர்க்கப்படுவதுடன் கணக்கீடு குறித்த புகார்களும் மின் நுகர்வோரிடம் இருந்து வருவது தவிர்க்கப்படும்.

மின் நுகர்வோர்கள் தாங்கள் உபயோகித்த மின்சாரத்தின் அளவினைத் தங்களது அலைபேசியின் மூலமே எந்நேரமும் பார்க்க இயலும். மேலும், மின் பயனீட்டாளர்கள் தமது மின் கட்டணத்தினை மின் இணைப்பு துண்டிப்பு தேதிக்கு முன்பே மீள்நிரப்பு (Recharge) முறை மூலம் செலுத்திவிட்டால், மின் இணைப்பு துண்டிப்பினை முற்றிலுமாக தவிர்க்கலாம்.

16. ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம்–I–ல் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

வடசென்னை அனல் மின் நிலையம்–I, அலகு–2 மற்றும் அலகு–3 ஆகியவற்றில் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பை (Distributed Control System), ஒவ்வோர் அலகிற்கும், சுமார் 9.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

17. ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் வடசென்னை அனல் மின் நிலையம்–II–ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல்

வடசென்னை அனல் மின் நிலையம்–II–ல் அலகு–1 மற்றும் 2–ல் உலர்ந்த சாம்பல் வெளியேற்றத்தை மேம்படுத்த, உலர் சாம்பலை அழுத்தி எடுத்துச் செல்லும் அமைப்பை (Pressurized Dense Fly–Ash Conveying System), சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

18. ரூபாய் 1,979 கோடி மதிப்பீட்டில் 159 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவுதல் (மேசையைத் தட்டும் ஒலி)

தடையற்ற மின்சாரம் வழங்கும் நோக்குடன் நான்கு 230 கி.வோ. துணை மின் நிலையங்கள், ஐம்பத்து மூன்று 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் நூற்று இரண்டு 33 கி.வோ. துணை மின் நிலையங்கள் என மொத்தம் 159 புதிய துணை மின் நிலையங்கள் ரூபாய் 1,979 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

19. ரூபாய் 125 கோடி மதிப்பீட்டில் 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் தரம் உயர்த்துதல்

தரமான, தடையற்ற மின் சேவையை வழங்கும் நோக்குடன் பன்னிரெண்டு 33 கி.வோ. துணை மின் நிலையங்களை 110 கி.வோ. துணை மின் நிலையங்களாக ரூபாய் 125 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்த துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

20. ரூபாய் 679 கோடி மதிப்பீட்டில் புதிய மின்மாற்றிகள் (Transformers) மற்றும் திறன் மேம்படுத்துதல்

மின்மாற்றிகளின் கூடுதல் மின் சுமையைத் தவிர்ப்பதற்காகவும் மற்றும் கூடுதல் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், கூடுதல் மின்மாற்றிகள் மற்றும் மின் மாற்றிகளின் திறன் மேம்படுத்துதல் ஆகியவை சுமார் 679 கோடி ரூபாய் செலவில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும்.

21. ரூபாய் 5,050 கோடி மதிப்பீட்டில் 900 மின்னூட்டிகளில் (Feeders) உயர் மின்னழுத்த பகிர்மான அமைப்பினை நிறுவுதல்

உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த விகிதாச்சாரங்களைக் குறைத்து, மின்னழுத்தத்தினை மேம்படுத்தி, நம்பகத்தன்மையை ஏற்படுத்திடவும், ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளைக் குறைப்பதற்காகவும், சுமார் 5,050 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 900 மின்னூட்டிகளில் உயரழுத்த மின் பகிர்மான அமைப்பு (HVDS) நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக ஆண்டிற்கு 300 மின்னூட்டிகள் வீதம், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மாநிலம் முழுவதும் படிப்படியாக மாற்றப்படும்.

22. சென்னை மாநகரம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகர பகுதிகளில் மேல்நிலை மின் பாதைகளை புதைவடங்களாக (Underground Cable) மாற்றுதல் (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் மின் பாதைகளை, புதைவடங்களாக மாற்றி செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும்.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

23. மாவட்டங்கள்தோறும் மின் பகிர்மான வட்டம் அமையும்வகையில் 3 புதிய மண்டலங்கள் மற்றும் 3 மின் பகிர்மான வட்டங்களை உருவாக்கும் சீரமைப்பு நடவடிக்கையைத் தொடங்குதல்

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில், மின் பகிர்மானம், 9 மண்டலங்களையும், 44 மின் பகிர்மான வட்டங்களையும், 176 கோட்டங்களையும், 644 உப கோட்டங்களையும் மற்றும் 2,858 பிரிவு அலுவலகங்களையும் உள்ளடக்கி உள்ளது. சில மாவட்டங்கள் பல மின் பகிர்மான வட்டங்களின்கீழ் வருவதால் நிருவாக சிரமத்திற்கு வழிவகுக்கிறது. மேலும், மின் இணைப்புகள் பிரிவு அலுவலகங்களுக்கிடையே சமமாக பிரிக்கப்படவில்லை. அதாவது, குறைந்தபட்ச மின் இணைப்பு 678 முதல் அதிகபட்ச மின் இணைப்பு 51,689 வரை கையாளும் பிரிவுகள் உள்ளன.

நிருவாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும், அன்றாட நடவடிக்கைகளில் வேலையை சமநிலைப்படுத்துவதற்காகவும், பகிர்மான நிருவாக அமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும். இதன்படி, ஒவ்வொரு மாவட்டமும் குறைந்தது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களை முழுமையாகக் கொண்டிருத்தல், அரசு திட்டங்களை எந்தத் தடையும் இல்லாமல் மாவட்டவாரியாகச் செயல்படுத்துவதற்கு சாத்தியமாக்கும்.

மேற்படி மறுசீரமைப்பு ஏற்பாட்டின்படி மண்டலங்களின் எண்ணிக்கை, தற்போதுள்ள 9–லிருந்து 12 ஆகவும், பகிர்மான வட்டங்கள் தற்போதுள்ள 44–லிருந்து 47 ஆகவும், தேவைக்கேற்ப கோட்டங்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

24. தகவல் தொழில்நுட்பம்மூலம் எளிதாக வணிகம் செய்ய புதிய முயற்சிகள்

விண்ணப்பிக்கும் செயல்முறையை எளிதாக்கும்பொருட்டு மற்றும் நுகர்வோரின் நலனுக்காகவும்,

i. விவசாய மின் இணைப்புகளுக்கான விண்ணப்பங்கள் இணையதளவழிமூலம் செயல்முறைப்படுத்தப்படும்.

ii. மின் கட்டண மாற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் இணையதளவழிமூலம் பரிசீலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது, மின் நுகர்வோருக்கு விண்ணப்பிக்கும் செயல்முறையை எளிதாக்கும்.

iii. இரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கான தொகையை வங்கி பரிமாற்றத்தின்மூலம் இணையதள வழியில் திருப்பித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது விண்ணப்பதாரர்கள் கைமுறையாக விண்ணப்பித்து காசோலைமூலம் தொகையைப் பெற வேண்டும். இனிமேல், விண்ணப்பதாரர் எந்த அலுவலகத்திற்கும் செல்லாமல், தானாகவே தனது கணக்கில் தொகையைப் பெறுவார். நுகர்வோருக்கு வலைதள வங்கி பரிவர்த்தனைமூலம் பணம் செலுத்துவதற்காக அனைத்து வங்கிகளுக்கும் ஒற்றை கட்டண நுழைவாயிலைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது 17 வங்கிகள் மட்டுமே வலைதள வங்கி பரிவர்த்தனைமூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. புதிய திட்டத்தின்கீழ், நுகர்வோர் எந்த வங்கியின் மூலமாகவும் வலைதள வங்கி பரிவர்த்தனைமூலம் பணம் செலுத்தலாம்.

25. மின்மாற்றிகளின் எண்ணெய் பரிசோதனை ஆய்வகம் அமைத்தல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளின் ஒரு பகுதியாக, மின்மாற்றிகளின் எண்ணெய் குறித்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, சுமார் 2 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக மின்மாற்றிகளின் எண்ணெய் பரிசோதனை ஆய்வகம் ஒன்றினை அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

26. ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் திருவாரூர், கள்ளக்குறிச்சி மற்றும் பல்லடம் ஆகிய பகுதிகளில் புதிய மின் பகிர்மான அலுவலகக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

அ. திருவாரூர் மின் பகிர்மான மத்திய அலுவலகக் கட்டடம்

திருவாரூர் மின் பகிர்மான வட்டத்திற்கு புதிய மத்திய அலுவலகம் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. கள்ளக்குறிச்சி மின் பகிர்மான மத்திய அலுவலகக் கட்டடம்

கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டத்திற்குப் புதிய மத்திய அலுவலகம் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இ. பல்லடம் மின் பகிர்மான மத்திய அலுவலகக் கட்டடம்

பல்லடம் மின் பகிர்மான வட்டத்திற்குப் புதிய மத்திய அலுவலகம் சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

27. இந்திய கணக்கு தரநிலை விதிகளின்படி (Indian Accounting Standards) கணக்கு அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுத்தல்

தமிழ்நாடு மின் வாரியத்தின் நிறுவனங்களான தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் ஆண்டுக் கணக்கு அறிக்கைகள் நிறுவன சட்டத்தின் விதிகளின்படி, 2017–2018 ஆம் நிதியாண்டு முதல் இந்திய கணக்கு தரநிலை (Indian Accounting Standards) விதிகளின்படி தயாரிக்கப்பட வேண்டும். இதுவரை இவ்வாறு தயாரிக்கப்படாததால், நிதி நிறுவனங்களான ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC) மற்றும் மின் விசை நிதி நிறுவனம் (PFC) மூலம் பெறப்படும் கடன்களுக்கு 0.5% வட்டி விகிதம் உயர்த்தப்பட்டு, ஆண்டொன்றிற்கு ரூ.300 கோடி நட்டம் ஏற்படுகிறது. இந்திய கணக்கு தரநிலை விதிகளின்படி, 2018–2019 ஆம் ஆண்டு முதலான தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் மாற்றி அமைக்கப்பட்டு, 2020–2021 ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

28. 1x800 மெகா வாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டம், நிலை 3–ல் தூசித்திரை அமைத்தல்

காற்றில் பரவும் நிலக்கரி துகள்களினால் வடசென்னை அனல் மின் திட்டம், நிலை–3–ன் அதிநவீன மின் உபகரணங்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கவும் மற்றும் மத்திய அமைச்சகம் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற விதிகளை பின்பற்றியும், வடசென்னை அனல் மின் நிலையம்–1 மற்றும் வடசென்னை அனல் மின் திட்டம் நிலை–3 ஆகியவற்றிக்கு இடையே 1 கி.மீ. தூரத்திற்கு தூசித்திரை சுமார் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

29. அனைத்து அனல் மின் நிலையங்களுக்கும் நிலக்கரி பரிசோதனை செய்யும் தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் நிறுவப்படும்

அனைத்து அனல் மின் நிலையங்களிலும் நிலக்கரியின் தரக் கண்காணிப்புக்காக தானியங்கி ஐசோபெரிபால் பாம் கலோரி மீட்டர் (Automatic Isoperibol Bomb Calorimeters) சுமார் 1.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

30. ரூபாய் 14.54 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு அமைப்பை (Distributed Control System), ஒவ்வோர் அலகிற்கும் ரூபாய் 14.54 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு செய்து அதனுடைய கட்டமைப்பு மேம்படுத்தப்படும்.

31. ரூபாய் 24.75 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அனல்மின் நிலையம்–II–ல் உலர் சாம்பலை வெளியேற்றும் அமைப்பு அமைத்தல்

மேட்டூர் அனல் மின் நிலையம்–II–ல் உலர்ந்த சாம்பல் வெளியேற்றத்தை மேம்படுத்த உலர் சாம்பலை அழுத்தி எடுத்துச் செல்லும் அமைப்பு (Pressurized Dense Fly–Ash Conveying system) ரூ.24.75 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

32. மின் பாதைகளில் ஏற்படும் தடைகளை நீக்க ரூ.140 கோடி மதிப்பீட்டில் காற்றழுத்த திறப்பான்கள் (Sectionalizer) அமைத்தல்

துணை மின் நிலையங்களிலிருந்து செல்லும் உயரழுத்த மின் பாதைகளின் தூரம் அதிகம் உள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்கும்பொருட்டு, நீண்டதூரத்திற்குச் செல்லும் உயரழுத்த மின்பாதைகள் அனைத்திலும் இடையிடையே காற்றழுத்த திறப்பான்கள் அமைக்கப்படும். இதனால் மின்தடை நேரம் வெகுவாகக் குறைக்கப்படும். இதற்காக ரூ.140 கோடி மதிப்பீட்டில், 11 கிலோ வோல்ட் திறப்பான்கள் 25,000 மற்றும் 22 கிலோ வோல்ட் திறப்பான்கள் 7,500 கொள்முதல் செய்யப்படும்.

33. மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானக் கட்டமைப்பை மேம்படுத்த புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல்

மின் தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, 765 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று, 400 கி.வோ. துணை மின் நிலையங்கள் ஆறு, 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் பதினேழு மற்றும் 110 கி.வோ. துணை மின் நிலையங்கள் இருபத்தியொன்று என மொத்தம் 45 துணை மின் நிலையங்களைச் செயலாக்கத்திற்குக் கொண்டுவர துரித நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் துணை மின் நிலையங்களின் விவரம் இணைப்புப் பட்டியல் அறிவிப்புப் புத்தகத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

அறிவிப்பு எண் 18–ன் இணைப்பு துணை மின் நிலையங்கள்–புதியது

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்			
1	திருவள்ளூர்	காஞ்சிபுரம்	கனகவள்ளிபுரம்
2	ஒட்டன்சத்திரம்	திண்டுக்கல்	தும்பலம்பட்டி (பழனி)
3	நெய்வேலி	கடலூர்	கீழக்குப்பம்
4	கிருஷ்ணராயபுரம்	கரூர்	பழைய ஜெயங்கொண்டம்
110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்			
1	ஆவடி	சென்னை தெற்கு–I	பாரிவாக்கம்
2	கும்மிடிப்பூண்டி	சென்னை வடக்கு	மாதரப்பாக்கம்
3	திருப்போரூர்	செங்கல்பட்டு	செம்பாக்கம்
4	பூந்தமல்லி	செங்கல்பட்டு	திருவூர்
5	திருவள்ளூர்	செங்கல்பட்டு	திருவாலங்காடு
6	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	செல்லானந்தல்
7	திருக்கோவிலூர்	கள்ளக்குறிச்சி	செங்கணங்கொல்லை (இளவனசூர் கோட்டை)
8	உளுந்தூர்பேட்டை	கள்ளக்குறிச்சி	பின்னல்வாடி
9	கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி	பெருவாங்கூர்
10	கடலூர்	கடலூர்	திருப்பாதிரிப்புலியூர்
11	தருமபுரி	தருமபுரி	வெள்ளக்கால்
12	பாலக்கோடு	தருமபுரி	புலிக்கரை
13	பெண்ணாகரம்	தருமபுரி	பூச்சூர்
14	தளி	கிருஷ்ணகிரி	அக்கொண்டபள்ளி
15	தளி	கிருஷ்ணகிரி	தொட்டபேளூர்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
16	தளி	கிருஷ்ணகிரி	ஜெக்கேரி
17	ஓசூர்	கிருஷ்ணகிரி	பேகப்பள்ளி
18	ஈரோடு மேற்கு	ஈரோடு	வில்லரசம்பட்டி
19	வேப்பனபள்ளி	கிருஷ்ணகிரி	சாம்பல்பள்ளம்
20	நாமக்கல்	நாமக்கல்	எல்லூர்
21	தொண்டாமுத்தூர்	கோவை–தெற்கு	செல்வபுரம் (புட்டுவிக்கி)
22	திருப்பூர் வடக்கு	திருப்பூர்	தாண்டாகவுண்டன் புதூர்
23	பல்லடம்	திருப்பூர்	உகாயனூர்
24	காங்கேயம்	பல்லடம்	மடவிளாகம்
25	சூலூர்	பல்லடம்	அப்பநாயக்கன்பட்டி
26	குளித்தலை	கரூர்	சின்னப்பனையூர்
27	அரவக்குறிச்சி	கரூர்	பவித்ரம்
28	ஆலங்குடி	புதுக்கோட்டை	வம்பன்
29	திருமயம்	புதுக்கோட்டை	வேந்தன்பட்டி
30	திருமயம்	புதுக்கோட்டை	கடியாப்பட்டி
31	திருவாரூர்	திருவாரூர்	கொரடாச்சேரி
32	மன்னார்குடி	திருவாரூர்	சித்தாம்பூர் @ சவளக்காரன்
33	மன்னார்குடி	திருவாரூர்	கருவாக்குறிச்சி @ முக்குளம்
34	ஒட்டன்சத்திரம்	திண்டுக்கல்	தும்பலம்பட்டி
35	ஒட்டன்சத்திரம்	திண்டுக்கல்	கேதையூரும்பு
36	திண்டுக்கல்	திண்டுக்கல்	நாகல் நகர்
37	பழனி	திண்டுக்கல்	பண்ணைக்காடு

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
38	பழனி	திண்டுக்கல்	நெய்க்காரப்பட்டி
39	பழனி	திண்டுக்கல்	பழனி அடிவாரப்பகுதி
40	திருமங்கலம்	மதுரை	மைகுடி
41	மதுரை கிழக்கு	மதுரை/மெட்ரோ	சூரியா நகர்
42	மதுரை கிழக்கு	மதுரை/மெட்ரோ	பனங்காடி
43	மானாமதுரை	சிவகங்கை	சாந்தனூர்
44	தென்காசி	திருநெல்வேலி	குற்றாலம்
45	தென்காசி	திருநெல்வேலி	மத்தளம்பாறை/ திரவையானகர்
46	பத்மநாபபுரம்	கன்னியாகுமரி	குலசேகரம்
47	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	மைலாடி
48	கிள்ளியூர்	கன்னியாகுமரி	கிள்ளியூர்
49	விளவங்கோடு	கன்னியாகுமரி	இடைக்கோடு
50	பல்லடம்	திருப்பூர்	அலகுமலை
51	காங்கேயம்	பல்லடம்	ஊதியூர்
52	திருமங்கலம்	மதுரை	கப்பலூர்
53	மதுரை மேற்கு	மதுரை மேற்கு	பசுமலை
33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்			
1	தியாகராய நகர்	மத்திய சென்னை	சி.ஐ.டி. நகர்
2	தியாகராய நகர்	மத்திய சென்னை	பெரம்பூர் பேரக்ஸ் ரோடு
3	பெரம்பூர்	சென்னை வடக்கு	எம்.கே.பி. நகர்
4	பொன்னேரி	சென்னை வடக்கு	பெரும் சேரி (பிரைம் லைப்)
5	மாதவரம்	சென்னை வடக்கு	ரேடியன்ஸ்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
6	அம்பத்தூர்	சென்னை மேற்கு	சதர்ன் அவென்யூ
7	அம்பத்தூர்	சென்னை மேற்கு	மண்ணூர்பேட் (அம்பத்தூர் தொழிற்பேட்டை)
8	ஆவடி	சென்னை மேற்கு	பருத்திப்பட்டு (உட்புற)
9	மதுரவாயல்	சென்னை மேற்கு	காளியம்மன் கோவில் (கோயம்பேடு)
10	ஸ்ரீபெரும்புதூர்	சென்னை தெற்கு 1	மாங்காடு ஆல்டிஸ்
11	தாம்பரம்	சென்னை தெற்கு 2	குறிஞ்சி நகர்
12	பல்லாவரம்	சென்னை தெற்கு 2	கீழ்க்கட்டளை
13	திருப்போரூர்	செங்கல்பட்டு	கரும்பாக்கம்
14	உத்திரமேரூர்	காஞ்சிபுரம்	குருவிமலை
15	திருவள்ளூர்	காஞ்சிபுரம்	SIDCO செங்கரை
16	திருத்தணி	காஞ்சிபுரம்	திருத்தணி கோயில்
17	செய்யாறு	திருவண்ணாமலை	பல்லாவரம்
18	கீழ்பெண்ணாத்தூர்	திருவண்ணாமலை	வல்லிவாகை
19	கீழ்பெண்ணாத்தூர்	திருவண்ணாமலை	வெளுக்கனந்தல்
20	கீழ்பெண்ணாத்தூர்	திருவண்ணாமலை	கமலாபுத்தூர்
21	செங்கம்	திருவண்ணாமலை	பெரியகோலபடி
22	செஞ்சி	விழுப்புரம்	எதப்பட்டு
23	செஞ்சி	விழுப்புரம்	அனந்தபுரம்
24	செஞ்சி	விழுப்புரம்	வள்ளம்
25	செஞ்சி	விழுப்புரம்	அனையேறி
26	செய்யாறு	திருவண்ணாமலை	சலுக்கை

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
27	வந்தவாசி	திருவண்ணாமலை	கீழ்வெளியூர்
28	வந்தவாசி	திருவண்ணாமலை	வழூர்
29	வந்தவாசி	திருவண்ணாமலை	கோழிப்புலியூர்
30	வந்தவாசி	திருவண்ணாமலை	கீழ்செம்பாடு
31	காட்டுமன்னார்கோவில்	கடலூர்	சோழத்தரம்
32	அரக்கோணம்	வேலூர்	நாகவேடு
33	கே.வி. குப்பம்	வேலூர்	காலம்பட்டு
34	வேலூர்	வேலூர்	விருப்பாட்சிபுரம்
35	ஆம்பூர்	திருப்பத்தூர்	குமாரமங்கலம்
36	வாணியம்பாடி	திருப்பத்தூர்	வெள்ளக்குட்டை
37	குடியாத்தம்	திருப்பத்தூர்	புகலூர்
38	கே.வி. குப்பம்	திருப்பத்தூர்	வேப்பூர்
39	தருமபுரி	தருமபுரி	நூலஅள்ளி
40	தருமபுரி	தருமபுரி	இண்டூர்
41	பாப்பிரெட்டிப்பட்டி	தருமபுரி	கத்திரிப்புரம்
42	பாப்பிரெட்டிப்பட்டி	தருமபுரி	மொடக்குறிச்சி
43	ஊத்தங்கரை	கிருஷ்ணகிரி	உப்பரப்பட்டி
44	ஓசூர்	கிருஷ்ணகிரி	சேவகணப்பள்ளி
45	தளி	கிருஷ்ணகிரி	காக்கதாசம்
46	வேப்பனஹள்ளி	கிருஷ்ணகிரி	உலகம்
47	வேப்பனஹள்ளி	கிருஷ்ணகிரி	தீர்த்தம்
48	காங்கேயம்	ஈரோடு	கொடுமணல்
49	தொண்டாமுத்தூர்	கோவை வடக்கு	நரசிபுரம்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
50	அவினாசி	கோவை தெற்கு	மங்களம்
51	சூலூர்	கோவை தெற்கு	காமநாயக்கம்பாளையம்
52	திருப்பூர் வடக்கு	திருப்பூர்	கவிலிப்பாளையம்
53	திருப்பூர் வடக்கு	திருப்பூர்	நெருப்பெரிச்சல்
54	திருப்பூர் வடக்கு	திருப்பூர்	கூலிப்பாளையம்
55	காங்கேயம்	பல்லடம்	காத்தான்கன்னி (படியூர்)
56	காங்கேயம்	பல்லடம்	கம்பிளியாம்பட்டி
57	பல்லடம்	திருப்பூர்	அமராவதிபாளையம்
58	கிருஷ்ணராயபுரம்	கரூர்	கடவூர்
59	சீர்காழி	நாகப்பட்டினம்	திட்டை
60	பூம்புகார்	நாகப்பட்டினம்	கொன்னேரி ராஜபுரம்
61	பூம்புகார்	நாகப்பட்டினம்	வடமட்டம்
62	பூம்புகார்	நாகப்பட்டினம்	பூம்புகார்
63	குன்னம்	பெரம்பலூர்	பிள்ளக்குறிச்சி
64	அரியலூர்	பெரம்பலூர்	இலகுறிச்சி
65	ஜெயம்கொண்டம்	பெரம்பலூர்	குமுளியங்குழி
66	ஜெயம்கொண்டம்	பெரம்பலூர்	இளகல்
67	அரியலூர்	பெரம்பலூர்	மல்லூர்
68	அறந்தாங்கி	புதுக்கோட்டை	மதகம்
69	கந்தர்வக்கோட்டை	புதுக்கோட்டை	விசலூர்
70	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	மணமேடை
71	அறந்தாங்கி	புதுக்கோட்டை	காரக்கோட்டை
72	திருவிடைமருதூர்	தஞ்சாவூர்	பந்தநல்லூர்
73	திருவிடைமருதூர்	தஞ்சாவூர்	செம்பியவரம்பல்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
74	நன்னிலம்	தஞ்சாவூர்	ஊத்துக்காடு
75	கும்பகோணம்	தஞ்சாவூர்	மேலனமேடு
76	கும்பகோணம்	தஞ்சாவூர்	கோட்டையூர்
77	திருவையாறு	தஞ்சாவூர்	பேரமூர்
78	திருவையாறு	தஞ்சாவூர்	சோலகம்பட்டி
79	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	மதுக்கூர் வடக்கு
80	திருவாரூர்	திருவாரூர்	கட்சநம்
81	மன்னார்குடி	திருவாரூர்	ஆலங்கோட்டை
82	துறையூர்	திருச்சி மெட்ரோ	ஓ. கிருஷ்ணாபுரம்
83	வேடசந்தூர்	திண்டுக்கல்	பாகநத்தம்
84	வேடசந்தூர்	திண்டுக்கல்	மல்லபுரம்
85	திருமங்கலம்	மதுரை	சிட்கோ
86	மேலூர்	மதுரை	கோட்டநத்தம்பட்டி
87	மதுரை மத்தி	மதுரை/மெட்ரோ	செல்லூர்
88	மதுரை மேற்கு	மதுரை/மெட்ரோ	முத்துப்பட்டி
89	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	அக்காள்மடம்
90	பரமகுடி	இராமநாதபுரம்	நென்மேனி
91	முதுகுளத்தூர்	இராமநாதபுரம்	கோவிலங்குளம்
92	முதுகுளத்தூர்	இராமநாதபுரம்	கீழ ராமநதி என். கரிசல்குளம்
93	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	அக்காள்மடம் (பாம்பன்)
94	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	திருப்புல்லாணி
95	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	உத்திரகோசமங்கை
96	ஆலங்குளம்	திருநெல்வேலி	டி.எஸ். புரம்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
97	வாசுதேவநல்லூர்	திருநெல்வேலி	ராயகிரி
98	ஆலங்குளம்	திருநெல்வேலி	ஐந்தாம்கட்டளை
99	ஆலங்குளம்	திருநெல்வேலி	கடங்கநேரி வெங்கடேஸ்வரபுரம்
100	சங்கரன்கோவில்	திருநெல்வேலி	குருக்கள்பட்டி
101	கோவில்பட்டி & திருச்செந்தூர்	தூத்துக்குடி	கடம்பூர் & செம்மரிக்குளம்
102	திருச்செந்தூர்	தூத்துக்குடி	காயமொழி

அறிவிப்பு எண் 19–ன் இணைப்பு

துணை மின் நிலையங்கள்–தரம் உயர்த்துதல்

வரிசை எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துதல்			
1	பூந்தமல்லி	செங்கல்பட்டு	கீழானூர்
2	கீழ்பெண்ணாத்தூர்	திருவண்ணாமலை	நாயுடுமங்கலம்
3	செங்கம்	திருவண்ணாமலை	கோட்டையூர்
4	செய்யாறு	திருவண்ணாமலை	மதுரைவாக்கடை
5	வந்தவாசி	திருவண்ணாமலை	அனந்தபுரம்
6	வந்தவாசி	திருவண்ணாமலை	தானிபாடி
7	வந்தவாசி	திருவண்ணாமலை	தெள்ளார்
8	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	அதிராம்பட்டினம்
9	திருப்பரங்குன்றம்	மதுரை	வளையாங்குளம்
10	முதுகுளத்தூர்	இராமநாதபுரம்	கடலாடி
11	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	ராமேஸ்வரம்
12	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	ரெகுநாதபுரம்

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

அறிவிப்பு எண் 20–ன் இணைப்பு

துணை மின் நிலையங்களின் மின்மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்			
1	பொன்னேரி	சென்னை வடக்கு	அத்திப்பட்டு
2	பெரம்பூர்	சென்னை வடக்கு	வியாசர்பாடி
3	அண்ணா நகர்	சென்னை மேற்கு	கோயம்பேடு
4	சோழிங்கநல்லூர்	சென்னை தெற்கு–II	கிட்ஸ்பார்க்
5	தாம்பரம்	சென்னை தெற்கு–II	கடப்பேரி து.மி.நி
6	செங்கல்பட்டு	செங்கல்பட்டு	வீராபுரம்
7	ஸ்ரீபெரும்புதூர்	செங்கல்பட்டு	ஒரகடம் து.மி.நி
8	ஸ்ரீபெரும்புதூர்	செங்கல்பட்டு	நோக்கியா
9	கடலூர்	கடலூர்	கடலூர்
10	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
11	ஆம்பூர்	திருப்பத்தூர்	விண்ணமங்கலம்
12	ஓசூர்	கிருஷ்ணகிரி	ஓசூர் து.மி.நி.
13	ஓசூர்	கிருஷ்ணகிரி	ஓசூர் து.மி.நி.
14	திருச்செங்கோடு	நாமக்கல்	ஊஞ்சனை
15	கோயம்புத்தூர் தெற்கு	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
16	அவிநாசி	திருப்பூர்	கருவலூர்
17	காங்கேயம்	பல்லடம்	குறுக்கத்தி
18	குன்னம்	பெரம்பலூர்	ஈச்சங்காடு
19	ஒரத்தநாடு	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
20	ஸ்ரீரங்கம்	திருச்சி	அளுந்தூர்
21	மேலூர்	மதுரை	அழகர்கோவில்
22	திருவாடனை	இராமநாதபுரம்	காவனூர்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
23	காரைக்குடி	சிவகங்கை	காரைக்குடி
110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்			
1	ஆவடி	சென்னை/மேற்கு	சிட்கோ திருமுல்லைவாயல்
2	கும்மிடிப்பூண்டி	சென்னை/வடக்கு	கும்மிடிப்பூண்டி சிப்காட்–III
3	கும்மிடிப்பூண்டி	சென்னை/வடக்கு	கும்மிடிப்பூண்டி சிப்காட்–II
4	திருவொற்றியூர்	சென்னை/வடக்கு	மணலி
5	கும்மிடிப்பூண்டி	சென்னை/வடக்கு	தேர்வாய்கண்டிகை
6	பொன்னேரி	சென்னை/வடக்கு	அத்திப்பட்டு
7	பொன்னேரி	சென்னை/வடக்கு	மேலூர்
8	திருவொற்றியூர்	சென்னை/வடக்கு	எண்ணூர்
9	மாதவரம்	சென்னை/வடக்கு	மாத்தூர்
10	மதுரவாயல்	சென்னை மேற்கு	தொளம்பூர்
11	ஆவடி	சென்னை மேற்கு	பட்டாபிராம்
12	பூவிருந்தவல்லி	சென்னை தெற்கு I	செம்பரம்பாக்கம்
13.	மதுரவாயல்	சென்னை தெற்கு–I	போரூர் 230/110–33 KV & 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்
14.	ஸ்ரீபெரும்புதூர்	சென்னை தெற்கு–I	திருமுடிவாக்கம்
15.	சோழிங்கநல்லூர்	சென்னை தெற்கு–II	டைடல் பார்க்
16.	சோழிங்கநல்லூர்	சென்னை தெற்கு–II	(ஈ.டி.எல்.) ETL
17.	தாம்பரம்	சென்னை தெற்கு–II	மெப்ஸ்
18.	சோழிங்கநல்லூர்	சென்னை தெற்கு–II	சிறுசேரி
19.	திருப்போரூர்	செங்கல்பட்டு	ஓமேகா
20.	திருவள்ளூர்	செங்கல்பட்டு	கடம்பத்தூர்
21.	ஸ்ரீபெரும்புதூர்	செங்கல்பட்டு	ஸ்ரீபெரும்புதூர் சிப்காட்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
22.	ஸ்ரீபெரும்புதூர்	செங்கல்பட்டு	பிள்ளைப்பாக்கம் சிப்காட்
23.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	தாமல்
24.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	தாமல்
25.	கும்மிடிப்பூண்டி	காஞ்சிபுரம்	பெரியபாளையம்
26.	திருவள்ளூர்	காஞ்சிபுரம்	திருவள்ளூர்
27.	ஆரணி	திருவண்ணாமலை	ஆரணி
28.	கலசப்பாக்கம்	திருவண்ணாமலை	ஆதமங்கலம்
29.	கலசப்பாக்கம்	திருவண்ணாமலை	காஞ்சி
30.	கீழ்பெண்ணாத்தூர்	திருவண்ணாமலை	கீழ்பெண்ணாத்தூர்
31.	கீழ்பெண்ணாத்தூர்	திருவண்ணாமலை	மங்கலம்
32.	செங்கம்	திருவண்ணாமலை	தண்டராம்பட்டு
33.	செங்கம்	திருவண்ணாமலை	செங்கம்
34.	செங்கம்	திருவண்ணாமலை	விண்ணவனூர்
35.	செங்கம்	திருவண்ணாமலை	விண்ணவனூர் நிலையம்
36.	செஞ்சி	விழுப்புரம்	தாயனூர்
37.	செஞ்சி	விழுப்புரம்	சிட்டாம்பூண்டி
38.	செஞ்சி	விழுப்புரம்	மரக்காணம்
39.	செய்யாறு	திருவண்ணாமலை	செய்யாறு சிப்காட்
40.	செய்யாறு	திருவண்ணாமலை	மங்கல்
41.	செய்யாறு	திருவண்ணாமலை	மங்கல்
42.	செய்யாறு	திருவண்ணாமலை	சிறுங்காட்டூர்
43.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	போளூர்
44.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	வெம்பாக்கம்
45.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
46.	போளூர்	திருவண்ணாமலை	சந்தவாசல்
47.	போளூர்	திருவண்ணாமலை	சேத்பட்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
48.	வந்தவாசி	திருவண்ணாமலை	வந்தவாசி
49.	திண்டிவனம்	விழுப்புரம்	எலமங்கலம்
50.	திண்டிவனம்	விழுப்புரம்	செந்தூர்
51.	வானூர்	விழுப்புரம்	திருச்சிற்றம்பலம்
52.	விழுப்புரம்	விழுப்புரம்	வளவனூர்
53.	திண்டிவனம்	விழுப்புரம்	திண்டிவனம்
54.	உளுந்தூர்பேட்டை	கள்ளக்குறிச்சி	உளுந்தூர்பேட்டை
55.	கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி	பெத்தசமுத்திரம்
56.	கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி	நாகலூர்
57.	சங்கராபுரம்	கள்ளக்குறிச்சி	சங்கராபுரம்
58	சங்கராபுரம்	கள்ளக்குறிச்சி	எடுத்தவாய்நத்தம்
59.	திருக்கோவிலூர்	கள்ளக்குறிச்சி	காரணைபெரிச்சானூர்
60.	ரிஷிவந்தியம்	கள்ளக்குறிச்சி	புதுப்பட்டு
61.	உளுந்தூர்பேட்டை	கள்ளக்குறிச்சி	திருநாவலூர்
62.	கடலூர்	கடலூர்	செம்மண்டலம்
63.	காட்டுமன்னார்கோவில்	கடலூர்	ஸ்ரீமுஷ்ணம்
64.	குறிஞ்சிப்பாடி	கடலூர்	செம்மண்குப்பம்
65.	திட்டக்குடி	கடலூர்	ஆடாரி
66.	திட்டக்குடி	கடலூர்	தொழுதூர்
67.	திட்டக்குடி	கடலூர்	பெண்ணாடம்
68.	பண்ருட்டி	கடலூர்	சித்தரசூர்
69.	புவனகிரி	கடலூர்	மேலப்பாளையம்
70.	புவனகிரி	கடலூர்	உமங்கலம்
71.	அரக்கோணம்	வேலூர்	பள்ளூர்
72.	ஆற்காடு	வேலூர்	ஆற்காடு
73.	ஆற்காடு	வேலூர்	கீழ்ப்பள்ளிப்பேட்டை
74.	காட்பாடி	வேலூர்	புன்னை
75.	காட்பாடி	வேலூர்	கர்ணம்பட்டு

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
76.	ஆம்பூர்	திருப்பத்தூர்	வடகத்திப்பட்டி
77.	ஆம்பூர்	திருப்பத்தூர்	சின்னவரிகம்
78.	குடியாத்தம்	திருப்பத்தூர்	பரவக்கல்
79.	குடியாத்தம்	திருப்பத்தூர்	பேர்ணாம்பட்டு
80.	குடியாத்தம்	திருப்பத்தூர்	பேர்ணாம்பட்டு
81.	பாலக்கோடு	தருமபுரி	வெள்ளிச்சந்தை
82.	வேப்பனஹள்ளி	கிருஷ்ணகிரி	புதியராயக்கோட்டை
83.	ஓசூர்	கிருஷ்ணகிரி	ஓசூர் 230 கி.வோ.
84.	ஓசூர்	கிருஷ்ணகிரி	சூசூவாடி
85.	ஓசூர்	கிருஷ்ணகிரி	பாகலூர்
86.	ஓசூர்	கிருஷ்ணகிரி	குருபரப்பள்ளி
87.	பர்கூர்	கிருஷ்ணகிரி	போச்சம்பள்ளி
88.	பர்கூர்	கிருஷ்ணகிரி	பர்கூர்
89.	ஈரோடு மேற்கு	ஈரோடு	காசிபாளையம்
90.	ஈரோடு கிழக்கு	ஈரோடு	வெண்டிபாளையம்
91.	பெருந்துறை	ஈரோடு	திங்களூர்
92.	பெருந்துறை	ஈரோடு	காந்திநகர்
93.	கோபிசெட்டிபாளையம்	கோபி	நம்பியூர்
94.	பவானி	கோபி	கவுந்தம்பாடி
95.	அந்தியூர்	கோபி	தூக்கநாயக்கன் பாளையம்
96.	அந்தியூர்	கோபி	அந்தியூர்
97.	பவானி	கோபி	தளவாய்பேட்டை
98.	பவானி	கோபி	ஊராட்சிக்கோட்டை
99.	எடப்பாடி	மேட்டூர்	எட்டிக்குட்டைமேடு
100.	குமாரபாளையம்	மேட்டூர்	வேப்படை
101.	சங்கரி	மேட்டூர்	பள்ளக்காபாளையம்
102.	சங்கரி	மேட்டூர்	ஹைவேலி
103.	மேட்டூர்	மேட்டூர்	மேட்டூர்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
104.	இராசிபுரம்	நாமக்கல்	இராசிபுரம்
105.	பரமத்திவேலூர்	நாமக்கல்	வில்லிபாளையம்
106.	பரமத்திவேலூர்	நாமக்கல்	பி.வேலூர் (மூன்றாவது பகுதி)
107.	ஆத்தூர்	சேலம்	பி.ஜி. பாளையம்
108.	ஆத்தூர்	சேலம்	ஆத்தூர்
109.	ஏற்காடு (தனி)	சேலம்	பேலூர்
110.	சேலம் (மேற்கு)	சேலம்	சேலம்
111.	சேலம் (மேற்கு)	சேலம்	கந்தம்பட்டி
112.	அவிநாசி	கோவை வடக்கு	குப்பிபாளையம்
113.	கவுண்டம்பாளையம்	கோவை வடக்கு	சரவணம்பட்டி
114.	கவுண்டம்பாளையம்	கோவை வடக்கு	சோமையாம்பாளையம்
115.	சூலூர்	கோவை தெற்கு	செல்லப்பபாளையம்
116.	அவிநாசி	கோவை தெற்கு	ஏரிப்பாளையம்
117.	சூலூர்	கோவை தெற்கு	இச்சிப்பட்டி
118.	சூலூர்	கோவை தெற்கு	காடுவெட்டிபாளையம்
119.	அவிநாசி	கோவை தெற்கு	ஏரிப்பாளையம்
120.	பொள்ளாச்சி	கோவை தெற்கு	மில்கோவில்பாளையம்
121.	அவிநாசி	திருப்பூர்	கருவலூர்
122.	பல்லடம்	திருப்பூர்	வீரபாண்டி
123.	திருப்பூர் வடக்கு	திருப்பூர்	பெருமாநல்லூர்
124.	பெருந்துறை	திருப்பூர்	ஊத்துக்குளி
125.	திருப்பூர் தெற்கு	திருப்பூர்	திருப்பூர்
126.	காங்கேயம்	பல்லடம்	பெரியார்நகர்
127.	காங்கேயம்	பல்லடம்	ராசதவலசு
128.	பல்லடம்	பல்லடம்	நரனாபுரம்
129.	பல்லடம்	பல்லடம்	பொங்கலூர்
130.	பல்லடம்	பல்லடம்	பொங்கலூர்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
131.	உடுமலைப்பேட்டை	உடுமலைப்பேட்டை	கோட்டமங்கலம்
132.	தாராபுரம்	உடுமலைப்பேட்டை	செல்லம்பாளையம்
133.	மடத்துக்குளம்	உடுமலைப்பேட்டை	மடத்துக்குளம்
134.	உதகமண்டலம்	நீலகிரி	ஊட்டி
135.	அரவக்குறிச்சி	கரூர்	பள்ளப்பட்டி
136	பூம்புகார்	நாகப்பட்டினம்	பாலையூர்
137	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம்	நரிமணம்
138	மயிலாடுதுறை	நாகப்பட்டினம்	கடலங்குடி
139	குன்னம்	பெரம்பலூர்	கூத்தூர்
140	பெரம்பலூர்	பெரம்பலூர்	அ.மேட்டூர்
141	பெரம்பலூர்	பெரம்பலூர்	பெரம்பலூர்
142	ஆலங்குடி	புதுக்கோட்டை	மலையூர்
143	ஆலங்குடி	புதுக்கோட்டை	வடக்காடு
144	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	கறம்பக்குடி
145	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	சிப்காட்
146	ஓரத்தநாடு	தஞ்சாவூர்	ஊரணிபுரம்
147	ஓரத்தநாடு	தஞ்சாவூர்	ஒக்கநாடு கீழையூர்
148	கும்பகோணம்	தஞ்சாவூர்	சாக்கோட்டை
149	பாபநாசம்	தஞ்சாவூர்	திருப்புறம்பியம்
150	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	மணிமண்டபம்
151	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	தஞ்சாவூர் Grid து.மி.நி.
152	ஓரத்தநாடு	தஞ்சாவூர்	திருக்கானூர்பட்டி
153	பட்டுக்கோட்டை	தஞ்சாவூர்	பட்டுக்கோட்டை நகர்புறம்
154	ஓரத்தநாடு	தஞ்சாவூர்	ஒக்கநாடு கீழையூர்
155	ஓரத்தநாடு	தஞ்சாவூர்	திருக்கானூர்பட்டி
156	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	மாரியம்மன்கோவில்
157	பேராவூரணி	தஞ்சாவூர்	சேதுபாவாசத்திரம்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
158	ஓரத்தநாடு	தஞ்சாவூர்	ஊரணிபுரம்
159	மன்னார்குடி	திருவாரூர்	உள்ளிக்கோட்டை
160	லால்குடி	திருச்சி/மெட்ரோ	வாளாடி
161	திருவெறும்பூர்	திருச்சி/மெட்ரோ	வாழவந்தான்கோட்டை
162	துறையூர்	திருச்சி/மெட்ரோ	கொப்பம்பட்டி
163	துறையூர்	திருச்சி/மெட்ரோ	துறையூர்
164	மருங்காபுரி	திருச்சி/மெட்ரோ	துவரங்குறிச்சி
165	ஸ்ரீரங்கம்	திருச்சி/மெட்ரோ	அம்மாபேட்டை
166	ஆத்தூர்	திண்டுக்கல்	அய்யம்பாளையம்
167	ஆத்தூர்	திண்டுக்கல்	ரெட்டியார்சத்திரம்
168	ஒட்டன்சத்திரம்	திண்டுக்கல்	கள்ளிமந்தையம்
169	திண்டுக்கல்	திண்டுக்கல்	தாமரைபாடி
170	நத்தம்	திண்டுக்கல்	நத்தம்
171	நத்தம்	திண்டுக்கல்	செங்குறிச்சி
172	நிலக்கோட்டை	திண்டுக்கல்	வத்தலகுண்டு
173	நிலக்கோட்டை	திண்டுக்கல்	ராமராஜபுரம்
174	பழனி	திண்டுக்கல்	பாப்பம்பட்டி
175	நிலக்கோட்டை	திண்டுக்கல்	வத்தலகுண்டு
176	வேடசந்தூர்	திண்டுக்கல்	ரெங்கநாதபுரம்
177	வேடசந்தூர்	திண்டுக்கல்	அய்யலூர்
178	உசிலம்பட்டி	மதுரை	சின்னகட்டளை
179	மதுரை கிழக்கு	மதுரை	ஒத்தக்கடை
180	மதுரை கிழக்கு	மதுரை/மெட்ரோ	வண்டியூர்
181	மதுரை கிழக்கு	மதுரை மெட்ரோ	இளந்தைகுளம் ஐ.டி. பார்க்
182	மதுரை மத்திய	மதுரை மெட்ரோ	எல்லீஸ்நகர்
183	மதுரை மேற்கு	மதுரை மெட்ரோ	ஆனையூர்
184	மதுரை வடக்கு	மதுரை மெட்ரோ	தொழிற்பேட்டை

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
185	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	பெருங்குளம்
186	திருவாடனை	இராமநாதபுரம்	ஆர்.எஸ்.மடை
187	பரமக்குடி	இராமநாதபுரம்	பரமக்குடி
188	பரமக்குடி	இராமநாதபுரம்	பரமக்குடி
189	முதுகுளத்தூர்	இராமநாதபுரம்	கமுதி
190	இளையாங்குடி	சிவகங்கை	இளையாங்குடி
191	காரைக்குடி	சிவகங்கை	காரைக்குடி
192	சிவகங்கை	சிவகங்கை	இடையமேலூர்
193	ஆண்டிப்பட்டி	தேனி	கண்டமனூர் விளக்கு
194	ஆண்டிப்பட்டி	தேனி	கடமலைக்குண்டு
195	ஆண்டிப்பட்டி	தேனி	வண்ணாத்திப் பாறை
196	கம்பம்	தேனி	காமாட்சிபுரம்
197	கம்பம்	தேனி	மார்கையங்கோட்டை
198	கம்பம்	தேனி	தேவாரம்
199	கம்பம்	தேனி	கம்பம்
200	பெரியகுளம்	தேனி	பெரியகுளம்
201	பெரியகுளம்	தேனி	வைகை டேம்
202	போடிநாயக்கனூர்	தேனி	போடிநாயக்கனூர்
203	போடிநாயக்கனூர்	தேனி	தேனி
204	சங்கரன்கோவில்	திருநெல்வேலி	சங்கரன்கோவில்
205	சங்கரன்கோவில்	திருநெல்வேலி	வன்னிகோனந்தல்
206	நாங்குநேரி	திருநெல்வேலி	களக்காடு
207	ராதாபுரம்	திருநெல்வேலி	திசையன்விளை
208	வாசுதேவநல்லூர்	திருநெல்வேலி	வீரசிகாமணி
209	வாசுதேவநல்லூர்	திருநெல்வேலி	புளியங்குடி
210	திருச்செந்தூர்	தூத்துக்குடி	ஆறுமுகநேரி
211	தூத்துக்குடி	தூத்துக்குடி	தூத்துக்குடி ஆட்டோ
212	ஸ்ரீவைகுண்டம்	தூத்துக்குடி	சாத்தான்குளம்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
213	அருப்புக்கோட்டை	விருதுநகர்	முத்துராமலிங்கபுரம்
214	சாத்தூர்	விருதுநகர்	வெம்பாகோட்டை
215	சிவகாசி	விருதுநகர்	அனுப்பன்குளம்
216	சிவகாசி	விருதுநகர்	ESI சிவகாசி
217	விருதுநகர்	விருதுநகர்	சூலக்கரை
218	ஸ்ரீவில்லிபுத்தூர்	விருதுநகர்	வாட்ராப்
219	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	எஸ்.ஆர். புதூர்
220	கிள்ளியூர்	கன்னியாகுமரி	கருங்கல்
221	கிள்ளியூர்	கன்னியாகுமரி	நடைகாவு
222	குளச்சல்	கன்னியாகுமரி	சேரமங்கலம்
33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம்			
1	ஆர்.கே. நகர்	சென்னை வடக்கு	தண்டையார்பேட்டை
2	திருவொற்றியூர்	சென்னை வடக்கு	ஏர் லேண்ட்
3	பெரம்பூர்	சென்னை வடக்கு	கொடுங்கையூர்
4	பொன்னேரி	சென்னை வடக்கு	நல்லூர் LT
5	பொன்னேரி	சென்னை வடக்கு	திருவெள்ளவாயல்
6	பொன்னேரி	சென்னை வடக்கு	இருளிப்பட்டு
7	பொன்னேரி	சென்னை வடக்கு	அத்திப்பட்டு
8	மாதவரம்	சென்னை வடக்கு	மாதவரம் எல்.இ.
9	திருவொற்றியூர்	சென்னை வடக்கு	மணலி
10	ஆவடி	சென்னை மேற்கு	மிட்னம்மல்லி
11	அம்பத்தூர்	சென்னை மேற்கு	மேனாம்பேடு
12	மாதவரம்	சென்னை மேற்கு	செங்குன்றம்
13	பூந்தமல்லி	சென்னை தெற்கு–1	பூந்தமல்லி
14	மதுராந்தகம்	செங்கல்பட்டு	ஓரத்தி
15	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	பிள்ளையார்பாளையம்
16	கும்மிடிப்பூண்டி	காஞ்சிபுரம்	பாலவாக்கம்
17	திருவள்ளூர்	காஞ்சிபுரம்	நுங்கம்பாக்கம்

வ. எண்	தொகுதி	வட்டத்தின் பெயர்	துணை மின் நிலையத்தின் பெயர்
18	செஞ்சி	விழுப்புரம்	தாண்டவசமுத்திரம்
19	செஞ்சி	விழுப்புரம்	உண்ணமாந்தல்
20	அரூர்	தருமபுரி	பைரநாயக்கன்பட்டி
21	அரூர்	தருமபுரி	தீர்த்தமலை
22	ஓசூர்	கிருஷ்ணகிரி	நரிகனபுரம்
23	தளி	கிருஷ்ணகிரி	ஜவளகிரி
24	தளி	கிருஷ்ணகிரி	தளி
25	தளி	கிருஷ்ணகிரி	தேன்கனிகோட்டை
26	தளி	கிருஷ்ணகிரி	கெலமங்கலம்
27	வேப்பனஹள்ளி	கிருஷ்ணகிரி	சின்னார்
28	பவானிசாகர்	கோபி	சிமிட்டஅள்ளி
29	பல்லடம்	திருப்பூர்	பளவஞ்சிபாளையம்
30	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம்	திருமருகல்
31	பூம்புகார்	நாகப்பட்டினம்	மேமாத்தூர்
32	வேதாரண்யம்	நாகப்பட்டினம்	ஆயக்காரன்புலம்
33	வேதாரண்யம்	நாகப்பட்டினம்	வேட்டைக்காரன் இருப்பு
34	மணப்பாறை	திருச்சி மெட்ரோ	பனங்கொம்பு
35	உசிலம்பட்டி	மதுரை	தும்மக்குண்டு
36	திருநெல்வேலி	திருநெல்வேலி	தச்சநல்லூர்
37	விளாத்திகுளம்	தூத்துக்குடி	குளத்தூர்
38	விளாத்திகுளம்	தூத்துக்குடி	நாகலாபுரம்
39	ஸ்ரீவைகுண்டம்	தூத்துக்குடி	பழனியப்பாபுரம்
40	சாத்தூர்	விருதுநகர்	வெம்பாகோட்டை
41	சிவகாசி	விருதுநகர்	நாரணபுரம்
42	விருதுநகர்	விருதுநகர்	விருதுநகர்
43	விருதுநகர்	விருதுநகர்	பெரியவள்ளிக்குளம்
44	ஸ்ரீவில்லிப்புத்தூர்	விருதுநகர்	மல்லிபுதூர்

[திரு. V. செந்தில்பாலாஜி] [2021 செப்டம்பர் 7

அறிவிப்பு எண் 33–ன் இணைப்பு

செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படவிருக்கும் துணை மின் நிலையங்களின் பட்டியல்

வ. எண்	தொகுதியின் பெயர்	மின் பகிர்மான வட்டம்	துணை மின் நிலையத்தின் பெயர்
765 கிலோ வோல்ட்			
1	பெருந்துறை	ஈரோடு	கோயம்புத்தூர்
400 கிலோ வோல்ட்			
1.	விருகம்பாக்கம்	சென்னை/மேற்கு	கோயம்பேடு (வளிமகாப்பு)
2.	ராதாபுரம்	திருநெல்வேலி	சமூகரெங்கபுரம்
3.	சீர்காழி	நாகப்பட்டினம்	மணல்மேடு
4.	நெய்வேலி	கடலூர்	நெய்வேலி/கடலூர் (வளிமகாப்பு)
5.	சிவகங்கை	சிவகங்கை	கொந்தகை (வளிமகாப்பு)
6.	சோழவந்தான்	மதுரை	அழகர்கோவில்
230 கிலோ வோல்ட்			
1	விருகம்பாக்கம்	சென்னை/தெற்கு–I	கே.கே. நகர் (வளிமகாப்பு) (GIS)
2.	திருவொற்றியூர்	சென்னை/வடக்கு	எண்ணூர் (வளிமகாப்பு) (UG from 110 KV)
3.	கொளத்தூர்	சென்னை/வடக்கு	கணேஷ்நகர் (வளிமகாப்பு)
4.	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம்	நரிமணம்
5.	பொன்னேரி	சென்னை/வடக்கு	துரைநல்லூர்
6.	உடுமலைப்பேட்டை	உடுமலைப்பேட்டை	பூலவாடி
7.	பாளையங்கோட்டை	திருநெல்வேலி	இராஜகோபாலபுரம் (வளிமகாப்பு)

வ. எண்	தொகுதியின் பெயர்	மின் பகிர்மான வட்டம்	துணை மின் நிலையத்தின் பெயர்
8.	பல்லாவரம்	சென்னை/ தெற்கு–II	பல்லாவரம் (வளிமகாப்பு)
9.	பத்மநாபபுரம்	கன்னியாகுமரி	தக்கலை (வளிமகாப்பு)
10.	மதுரை வடக்கு	மதுரை	கே.புதூர் (வளிமகாப்பு)
11.	கவுண்டம்பாளையம்	கோயம்புத்தூர்	சரவணம்பட்டி (வளிமகாப்பு)
12	கன்னியாகுமரி	திருநெல்வேலி	முப்பந்தல்
13	விருகம்பாக்கம்	சென்னை/தெற்கு	விருகம்பாக்கம் (வளிமகாப்பு)
14	எடப்பாடி	சேலம்	எடப்பாடி
15	சிவகங்கை	சிவகங்கை	அரசனூர்
16	சூலூர்	கோயம்புத்தூர்	இருகூர் (வளிமகாப்பு)
17	மதுரை மேற்கு	மதுரை	திருப்பாலை
		110 கிலோ வோல்ட்	
1.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	பன்னீஸ்வரமடம் (விகிதாச்சார அறிமுகம்)
2.	மேலூர்	மதுரை	தானியமங்கலம்
3.	கரூர்	கரூர்	ஒத்தக்கடை (33 கி.வோ. இருந்து தரம் உயர்த்துதல்)
4.	கும்பகோணம்	தஞ்சாவூர்	திருநாகேஸ்வரம் (33 கி.வோ. இருந்து தரம் உயர்த்துதல்)
5.	மதுரவாயல்	சென்னை/மேற்கு	மதுரவாயல் (வளிமகாப்பு) (33 கி.வோ. இருந்து தரம் உயர்த்துதல்)
6.	எழும்பூர்	சென்னை/மத்திய	எழும்பூர் (வெளிப்புற வளிமகாப்பு து.மி.நி.) (33 கி.வோ. இருந்து தரம் உயர்த்துதல்)
7.	திரு.வி.க. நகர்	சென்னை/மத்திய	பி&சி மில் (வளிமகாப்பு து.மி.நி.) (33 கி.வோ. இருந்து தரம் உயர்த்துதல்)

வ. எண்	தொகுதியின் பெயர்	மின் பகிர்மான வட்டம்	துணை மின் நிலையத்தின் பெயர்
8.	பெரம்பூர்	சென்னை/வடக்கு	ICF (வளிமகாப்பு) து.மி.நி (33 கி.வோ. இருந்து தரம் உயர்த்துதல்)
9.	ஆர்.கே. நகர்	சென்னை/வடக்கு	தண்டையார்பேட்டை CDH (வளிமகாப்பு)
10.	செங்கல்பட்டு	செங்கல்பட்டு	மாம்பாக்கம் SBIOA காலனி
11.	சோழிங்கநல்லூர்	சென்னை/தெற்கு	பூர்வாங்கரா (உள்ளரங்கம்)
12	தளி	கிருஷ்ணகிரி	பேலூர்
13	ராசிபுரம்	சேலம்	மங்களாபுரம்
14	உதகமண்டலம்	நீலகிரி	மலர்பெட்டு
15	ஓட்டப்பிடாரம்	தூத்துக்குடி	மறவன்மடம்
16	முதுகுளத்தூர்	இராமநாதபுரம்	பெரியகையாகம் தேரிருவேலி
17	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	சின்னையா சத்திரம்
18	அரியலூர்	பெரம்பலூர்	திருமழப்பாடி
19	பண்ருட்டி	கடலூர்	நெல்லித்தோப்பு பாலப்பட்டு
20	கிருஷ்ணராயபுரம்	கரூர்	தென்னிலை
21	மாதவரம்	சென்னை/மேற்கு	மூரை

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய சார்பாகக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அந்தந்த உறுப்பினர்களின் சட்டமன்றத் தொகுதிகளில் என்னென்ன பணிகளை மின்சாரத் துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு கொடுக்கப்பட்ட கடிதங்கள் அவை. பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பகுதிகளில் எந்தெந்த இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று கடிதம் கொடுத்திருந்தார்கள். அந்த அடிப்படையிலும், துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டும், எந்தெந்தப் பகுதிகளுக்கு துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடும் இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் 100 சதவிகிதம் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளும் இடம் பெற்றிருக்கும் என்று நம்புகிறேன்.

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

ஏதேனும் ஒன்றிரண்டு விடுபட்டிருந்தால் வரக்கூடிய காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதையும் மின்சாரத் துறை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை உங்களிடத்தில் பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

வரக்கூடிய காலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், ஏழை எளிய அடித்தட்டு மக்களுக்குத் தடையில்லாத மின்சாரத்தை வழங்கக்கூடிய பணியை சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்பட்டு, மக்களுக்கு சிறப்பான சேவைகளை முன்னெடுக்கும் என்ற உறுதியை உங்கள் அனைவருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொண்டு, இந்த சிறப்பான மானியக் கோரிக்கைக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயலாளர் அவர்களுக்கும், எரிசக்தித் துறைச் செயலாளர் அவர்களுக்கும், உள் துறைச் செயலாளர் அவர்களுக்கும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கின்றேன்.

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்

தமிழ்நாட்டில், கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலுமாகக் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய

[திரு. V. செந்தில்பாலாஜி] [*2021 செப்டம்பர் 7*

மதுவிலக்குக் குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

2. மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

மது அருந்துதலுக்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனும், மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துடன், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் இணைந்து மேற்கொள்ள ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. மின் ஆளுமை நடவடிக்கைகளின்கீழ் 74 சேவைகளை இணையவழிமூலம் வழங்குதல்

உரிமங்கள் வழங்குதலில் வெளிப்படைத் தன்மையினை உருவாக்கவும், உரிமங்களைப் புதுப்பித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான அனுமதி ஆணைகள் வழங்குவதற்குரிய கால அவகாசத்தினை வெகுவாகக் குறைக்கும் வகையிலும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் மேலும் 74 சேவைகளை இணையவழி மூலமாக வழங்கும் வகையிலும் மின் ஆளுமை நடவடிக்கைகள் மற்றும் கணினிமயமாக்குவதற்கு இந்த நிதியாண்டில் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 6,761 மேற்பார்வையாளர்கள், 15,090 விற்பனையாளர்கள் மற்றும் 3,158 உதவி விற்பனையாளர்கள், ஆக மொத்தம் 25,009 சில்லறை

2021 செப்டம்பர் 7] [திரு. V. செந்தில்பாலாஜி]

விற்பனைப் பணியாளர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள். மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியம் ரூ.500/– கூடுதலாக எப்ரல், 2021 முதல் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.15.01 கோடி நிதி கூடுதல் செலவாகும்.

5. தேனி மாவட்டத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்குக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பணியிடம் உருவாக்குதல்

தேனி மாவட்டத்தில், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் இல்லாத நிலையில், மதுவிலக்குத் தொடர்பான பணிகள் எவ்வித தொய்வுமின்றி நடைபெறும்பொருட்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு புதியதாகக் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பணியிடம் தோராயமாக ரூ.0.27 கோடி செலவினத்தில் தோற்றுவிக்கப்படும்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் மின்சாரத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் சார்பாக மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்து, பதிலுரை அளித்து பல்வேறு திட்டங்களை அறிவிக்கக்கூடிய வாய்ப்பை வழங்கிய, எந்நாளும் வணங்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களைப் பணிவன்போடு சமர்ப்பித்து, இதற்கு உறுதுணையாக இருந்த சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்கும் போற்றுதலுக்கும் உரிய அண்ணன் திரு. உதயநிதி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, அனைத்து அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *58 நிமிடங்கள் அருமையாக பதில் சொல்லியிருக்கிறீர்கள். நன்றி. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரம் அவர்கள் பேசுகின்றபோது (குறுக்கீடு) முன்னாள் ஆளுங்கட்சி உறுப்பினர், (சிரிப்பு) நண்பர் திரு. தளவாய் சுந்தரம் என்று*

[திரு. துரைமுருகன்] [2021 செப்டம்பர் 7

சொன்னால், பிரச்சினையே இல்லை. நீங்கள் அமர்ந்திருக்கக்கூடிய Chair ஆனது இந்தியாவிலே 4 இடங்களில்தான் உள்ளது. President's House, Lok Sabha, Rajya Sabha மற்றும் இங்கு. இந்த Chair–ல் நீங்கள் அமர்ந்திருப்பது எங்களுக்கெல்லாம் பெரிய மகிழ்ச்சி. South side–லிருந்து முன்னாள் Speaker திரு. செல்லப்பாண்டியன், முன்னாள் Speaker திரு. பி.எச். பாண்டியன் மற்றும் திரு. ஆவுடையப்பன் ஆகியோருக்குப் பிறகு நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், ஒரு நாளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அந்த Chair–ன் பக்கம் வர மாட்டோம் என்று கூறினார்; பாராட்டுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லிவிட்டேனே!

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதற்கு மேலே இருக்கிறது பாருங்கள். Touch பண்ணமாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, அதற்கு அவ்வளவு மரியாதை கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: ** என்றால் உங்கள் ** touch பண்ண மாட்டோம், உங்கள் ** என்றால் சபாநாயகருடைய ** என்று சொல்வது அவையை மீறியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று அவர், அதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால், I will bring a Privilege Motion against him. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ந. தளவாய் சுந்தரம்: நான், இதுபோன்ற நிகழ்வு நடந்தது. இனிமேல் நடக்காது என்றுதான் சொன்னேன், அவ்வளவுதான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *இனிமேல் நடக்காது அது வேறு. ஆனால், ** அவர் ** அதற்கு அர்த்தம். (குறுக்கீடு) இல்லை, உங்கள் ** என்றால், ** என்று சொல்லியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) ஆனால், ** அப்படியென்றால் என்ன அர்த்தம். (குறுக்கீடுகள்) சபாநாயகர் ** என்றுதானே அர்த்தம். It is implied. (குறுக்கீடுகள்) நான் தவறாக எடுக்கவில்லை. நீங்கள் தவறாகப் பேசியிருந்தால், தவறு என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *அந்த இடத்திற்கே வர மாட்டோம் என்று சொன்னீர்களே, நீங்கள் வர முடியாது என்று சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *நீங்கள் சொல்வதைக் கேளுங்கள். இரண்டு விஷயங்கள். முதலில், சபாநாயகர் இடத்திற்கு நீங்கள் என்றைக்கும் வரமாட்டீர்கள். அது ஒன்று. இனிமேல், தி.மு.க. தான் அங்கு permanent. மனதில் வைத்துக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது, ** என்று சபாநாயகரை நோக்கி சொல்லப்பட்ட ஓர் அவதூறான சொல். (குறுக்கீடு) No, no, no Sir. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Withdraw *பண்ணலாம். 'வாபஸ் வாங்குங்கள்' என்று சொல்லச் சொல்கிறீர்களா! இல்லை, 'I am sorry' என்று சொல்லச் சொல்லுங்கள். நான் விட்டுவிடுகிறேன். (குறுக்கீடுகள்) மைக் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மைக் கொடுங்கள். அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள் என்று சொன்னால், அதோடு நிறுத்திக்கொள்ளலாம்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *ஒரு நிமிடம். திரு. தளவாய் சுந்தரம், அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள் என்று சொல்லுங்கள், விட்டுவிடுகிறோம்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2021 செப்டம்பர் 7*

திரு. ந. தளவாய் சுந்தரம்: ** *என்ற அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தையை எடுத்துவிடுகிறேன். நன்றி, நன்றி. அந்த வார்த்தை எடுத்தாகிவிட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்போது. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து உட்கார்ந்து கொண்டு பேசவேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பேசுகிறார்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள், PAP பாசனத் திட்டத்தினை நிறைவேற்ற முக்கியக் காரணமாக இருந்த திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு, ஆழியாறு அணைப் பூங்காவில் நினைவு மண்டபம் மற்றும் மார்பளவு சிலை அமைக்கும் பணி ஏற்கெனவே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களால் அறிவிக்கப்பட்டு, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள், அவர்களின் குடும்பமெல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த சிலை அங்கே நிறுவப்பட்டு, நினைவு மண்டபம் அமைக்கும் பணி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

பிற்பகல் 3–15

அந்தப் பெயரை தயவுசெய்து மாற்ற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் உயிர்நீத்தவர்களுடைய நினைவு மண்டபம் மாற்றியமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதற்குப் பக்கத்தில் ஒரு மண்டபம் கட்டுங்கள்.

அதேபோல, அம்மா அவர்களே சட்டமன்றத்தில் பாராட்டு நடத்தினார்கள். அங்கே ஆன்மிக செம்மல் 'பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படும்' என்று அறிவித்திருக்கிறீர்கள். அதேபோல, முன்னாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு அங்கே நினைவு மண்டபம்

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ்.பி. வேலுமணி]

அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கிறீர்கள். இது பொள்ளாச்சியில் இருக்கிறது. இவற்றைத் தனித்தனியாக அமைத்தால், அவர்களுடைய பிறந்த நாளில் மரியாதை செலுத்துவதை அனைவரும் விரும்புவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்டிப்பாக, வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுடைய நினைவு மண்டபத்தை மாற்றாமல், அங்கேயே மண்டபம் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுகுறித்து என்னிடத்திலே ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் இதுகுறித்துப் பேசினேன். ஆனால், நேற்றைக்கு அவர் படித்து record–ல் பதிவாகிவிட்டது. Record–ல் இருப்பதை நான் எடுக்க முடியாது. நாளை காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, அவருடைய ஆணைப்படி, அவர் என்ன சொல்கிறாரோ, அதை நான் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக தமிழினத்தின் ஒப்பற்ற ஒரு தலைவர்; ஓய்வறியா சூரியன்போல் தமிழருக்கு உழைத்த அஞ்சுகத் தாயின் புதல்வர்; வாழும் வரை திராவிடத்தின் வரலாறாய் ஒளிர்ந்த உத்தமர்; ஐந்து முறை தமிழகத்தை ஆண்ட அரசியல் சாணக்கியர்; பஞ்சமரை, பாமரரை பாரில் உயர்த்த வந்த பகுத்தறிவின் காவலர்; ஐயன் கலைஞர் ஆட்சி செய்த மன்றத்தில் அவரைப் போற்றுவது, 'தாயைப் போற்றுவது, தமிழைப் போற்றுவது' போலாகும். அவர் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நூறாசிரியர் சேர்ந்தாலும், எங்கள் பேராசிரியருக்கு இணையாகுமா என எங்கள் தலைவர் கலைஞரின் அரசியல் இணையாய் வாழ்ந்த, பேராசிரியரால் 'எனக்கும் ஸ்டாலின்தான்

[திரு. எஸ். ரகுபதி] [*2021 செப்டம்பர் 7*

வாரிசு' என பேராசிரியர் வாழும்போதே வாழ்த்துப் பெற்ற வாரிசுப் பத்திரம் எங்கள் தளபதியே, சாதனைகள் பல செய்ய வந்தவரே, சோதனைகள் பல வென்றவரே, 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' என வாழ்த்துப் பெற்றவரே, மணிமேகலை அட்சயப் பாத்திரத்தை உம்மிடத்தில் தந்துவிட்டுச் சென்றுவிட்டாளோ என எண்ணத் தோன்றும் வகையிலே, இன்றைய தமிழக மக்களுக்கு வள்ளலாய், அள்ளித் தரும் வள்ளலே, அறிவுடைய மேதைகளை அரவணைத்து, அவர்களுக்கு உன் ஆட்சியில் இடமளித்து மக்கள் சேவையாற்றும் சாணக்கியரே, எதிர்வரிசைக்காரர்களையும் உன் வசப்படுத்தும் ஆற்றல் மிக்கவரே, உங்களுக்கு சட்டத்தின் தனி வணக்கம்.

புகழ் நிழலில் வாழ்ந்தவருக்கு பிறர் வலியறிய வழியேது என்றவருக்கெல்லாம், 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்போது, கலைஞர் வழிப்பேரன் மட்டும் சும்மாவா' என்று பிறர் வியக்கச் செயல்படும் இளைய சூரியனே! எங்கள் இதய சூரியன், உதயாவே! (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற வரலாற்றின் பொன்விழா கண்ட புன்னகைக்குச் சொந்தக்காரர் எங்களின் அவை முன்னவரே, பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, நான் இங்கே வருவதற்குக் காரணமாக இருந்த திருமயம் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களே, நான் என்றைக்கும் நேசிக்கும் புதுக்கோட்டை மாவட்ட மக்களே உங்கள் அனைவருக்கும் முதலில் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, என் உரையைத் துவக்குகிறேன்.

சட்டமும், அரசும் ஒன்றொடொன்று தொடர்புடையவை. அரசு சட்டத்தை உருவாக்கி, அதனைச் செயல்படுத்துகிறது. அதேநேரத்தில், அரசின் செயல்நிலையைக் கட்டுப்படுத்துவது சட்டமாகும். அனைவரும் சட்டத்தின்முன் சமமானவர்கள்; சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். வளர்ந்துவரும் சமுதாய வளர்ச்சிக்கேற்ப, புதிய புதிய சட்டங்களை உருவாக்க வேண்டியது அவசியமாகும். சட்டமன்றத்தினுடைய தலையாய பணி, சட்டங்களை இயற்றுவதாகும். சட்டத் துறையினுடைய அடுத்த பணி சட்டக் கல்வியாகும். பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, பல புதிய நீதிமன்றங்களை உருவாக்க வேண்டியது அவசியமாகும். அதைப்போல பல்வேறு புதுவகையான குற்றங்களும்கூட இன்றைக்கு அதிகரித்துக் கொண்டு வருகின்றன. குற்றங்களைத்

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

தடுப்பதற்காக இன்றைக்கு சட்டக் கல்வி பயன்படுகிறது. சட்ட அறிவு பயன்படுகிறது. ஆனால், சட்டக் கல்வியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் என்று சொன்னால், அது நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், பல்லாண்டுகாலமாக சென்னையிலே மட்டும் இயங்கி வந்த சட்டக் கல்லூரியை முதன்முதலாக அடுத்த கட்டமாக மதுரைக்கு எடுத்துச் சென்றவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆவார்கள்.

பிற்பகல் 3–20

இந்த மாமன்றத்திலே, 2019 ஆம் ஆண்டு பேசிய அன்றைய சட்டத் துறை அமைச்சர், தன்னுடைய பதிலுரையிலே "சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வர வேண்டுமென்ற கோரிக்கை உச்ச நீதிமன்றத்தின் அமர்வு முன் நிச்சயமாக வைக்கப்படும் என்று ஒன்றிய அரசால் உறுதி தரப்பட்டிருக்கிறது. எனவே, விரைவிலே கூடவிருக்கின்ற உச்ச நீதிமன்ற அமர்விலே நம்முடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேறும். உச்ச நீதிமன்றமும் அனுமதியைத் தரும்" என்று தெரிவிக்கின்றார். 2020 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில், '11–10–2012 ஆம் ஆண்டு நடைபெற்ற உச்ச நீதிமன்றக் கூட்டத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வரவேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை. எனவே, அன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கையை ஒன்றிய அரசாங்கத்திடம் மீண்டும் மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11–10–2012 ஆம் தேதி அன்று தமிழ் வழக்காடு மொழியாக வர வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை என்பது முழுக்க, முழுக்க தெரிந்தபின்னரும், 2019–ல் இந்த அவையிலே அந்தக் கோரிக்கை நிறைவேறும் என்று சொல்லி, மக்களை நம்ப வைக்கின்ற, உண்மைக்குப் புறம்பான நடவடிக்கைகளை கடந்த ஆட்சி செய்திருக்கிறது. முதலிலே ஒன்றைச் சொல்வது, அதற்குப் பின், சொல்வதை முழுவதுமாக மாற்றிச் சொல்வது, அது அவர்களுக்குக் கை வந்த கலை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் சொன்னதைச் செய்பவர்கள், செய்வதைச் சொல்பவர்கள். தலைவர் கலைஞரின் தம்பிமார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தளபதியின் வழிவந்தவர்கள். தளபதியை நம்புகின்றவர்கள். எனவே, ஒன்றை

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

மட்டும் சொல்கின்றோம். நீங்களாக இருந்தாலும், நாங்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக தமிழ் வர வேண்டும் என்பதுதான் தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாய மக்களுடைய விருப்பமாகும்.

உத்தரப்பிரதேசமாக இருக்கட்டும், மத்தியப்பிரதேசமாக இருக்கட்டும், பீகாராக இருக்கட்டும் அல்லது ராஜஸ்தான் மாநிலமாக இருக்கட்டும். அந்த மாநிலங்களில் எல்லாம் இன்றைக்கு இந்தி, உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக இருக்கிறது. அந்த நான்கு மாநிலங்களிலே இந்தி வழக்காடு மொழியாக இருக்கின்றபோது, நம்முடைய செம்மொழியாக இருக்கக்கூடிய தமிழ்மொழி, தமிழகத்தின் வழக்காடு மொழியாக ஏன் இருக்கக்கூடாது என்பதுதான் இங்கே இருக்கக்கூடிய ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தினுடைய உணர்வு, கேள்வியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஒன்றை மட்டும் சொல்கின்றோம், நிச்சயமாக, உச்ச நீதிமன்றத்தையும் திரும்பத் திரும்ப வலியுறுத்துவோம். ஒன்றிய அரசையும் வலியுறுத்துவோம். நிச்சயமாக தமிழை வழக்காடு மொழியாகக் கொண்டுவருவதற்கு அத்துணைபேரும் ஒன்றிணைந்து தமிழ் உணர்வோடு போராடுவோம் என்பதை இந்த நேரத்தில் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு சைபர் குற்றங்களும்–cyber crimes, அதைப்போல பொருளாதாரக் குற்றங்களும் economical offences, பெருகிவரும் இந்தச் சூழ்நிலையிலே, அதற்கு ஏற்றவாறு சட்டத் துறையை நவீனப்படுத்துவது அவசியமான ஒன்றாக இருக்கிறது. ஏனென்று சொன்னால், அந்தக் குற்றங்கள் பெருகி வருகின்றபோது அதற்கு ஏற்றாற்போல், அதை எதிர்கொள்வதற்குத் தகுந்தாற்போல, சட்டத் துறையை நாம் வலிமைப்படுத்தியாக வேண்டும். சைபர் சட்டம் மற்றும் பொருளாதாரக் குற்றங்களுக்கான சட்டங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு அரசின் கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகவும், சட்டத்தின் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதாகவும் இருக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகள் இன்று இதை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றன. புதிய பிரிவுகள் தொடங்கப்பட்டு அதிலே பல்வேறு மாணவர்கள் இன்றைக்கு சேர்க்கப்பட்டு, அந்தப் புதிய பிரிவுகள் மூலமாக, புதிய பாடத் திட்டங்களிலே இன்று தங்களை இணைத்துக்கொண்டு புதிய சட்டங்களைப் படிப்பதற்கு சட்டக் கல்லூரிகள் இன்றைக்கு

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

அவர்களுக்கு உதவியாக இருக்கின்றன என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதை உருவாக்கித் தந்தவரும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆவார்.

பிற்பகல் 3–25

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை–நமை
மாற்ற நினைக்கும் சிறைச்சாலை!'

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ஆனால், நம்முடைய தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இன்றைக்கு 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாற்ற நினைக்கும் சிறைச்சாலை' என்ற வகையில் சிறைச்சாலைகளை மாற்றியுள்ளார்கள். சிறைச்சாலை என்பது நம்மை மாற்ற நினைக்கக்கூடிய இடமாக இருக்க வேண்டும்; இன்றைக்கு சிறைக்குச் செல்கின்ற ஒருவன் அங்கே சென்றுவிட்டு வருகிறபோது, திருந்தியவனாக வரவேண்டும் என்ற அந்த உணர்வை அவனுக்கு உருவாக்கக்கூடிய இடமாக சிறைச்சாலை இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்படுவதுதான், சிறைத் துறை.

தவறு செய்த ஒரு மனிதனைத் தண்டிக்கின்ற ஓர் இடமாக மட்டுமல்லாமல், தனது தவறை உணர்ந்து திருந்தி மறுபடியும் தனது வாழ்க்கையை வாழக்கூடிய ஒரு பாடசாலையாகச் சிறைச்சாலை அமைய வேண்டும் என்பதே மாண்புமிகு தலைவர் தளபதி அவர்களுடைய அரசின் தலையாய நோக்கமாகும். எனவே, சிறைச்சாலை என்பது, ஒரு பாடசாலையாக இருந்து, ஒரு மனிதனைத் திருத்துகின்ற இடமாக இருக்கவேண்டும். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையானது சிறைக்கு வரும் குற்றவாளிகளையெல்லாம் சீர்திருத்தி வெளியே அனுப்புகிற துறையாக உருவெடுத்திருக்கிறது. இத்துறையின் வளர்ச்சியிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கொரோனா பேரிடர் காலத்திலே, சிறைக்குச் செல்கின்றபொழுது, பலர் அஞ்சுவார்கள். ஏனென்றால், ஒருவரோடு ஒருவர் பழகுகிறபோது, கொரோனா தொற்று ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுவார்கள். ஆனால், கொரோனா பேரிடர் காலக்கட்டத்திலே ஆட்சிக்கு வந்தவுடனேயே, "சிறைகளிலே இருக்கிற கைதிகளுக்கெல்லாம் உடனடியாக RT–PCR சோதனை செய்ய வேண்டும். அவர்களிலே யாருக்காவது கொரோனா தொற்று

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

இருந்தால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். அதற்குப் பிறகு அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி மருத்துவம் பார்க்க வேண்டும். அதேபோல, அவர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட வேண்டும். விசாரணைக் கைதிகளுக்கும் இதேமாதிரியான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். விசாரணைக் கைதிகளாக வருகின்றவர்களைப் பரிசோதனை செய்து, கொரோனா தொற்று இல்லை என்று உறுதிசெய்யப்பட்டால்தான் அவர்கள் உள்ளே அடைக்கப்பட வேண்டும்" என்று கட்டளையிட்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கொரோனா தொற்று இன்றைக்கு சிறைகளில் இல்லை என்னும் அளவிற்கு, சிறைக் கைதிகளைப் பாதுகாப்போடு நம்மாலே வைத்திருக்க முடிந்திருக்கிறது. ஏறக்குறைய 100 சதவிகிதம் சிறைக் கைதிகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கிற ஒரே மாநிலம், நம்முடைய தமிழ்நாடு மாநிலம் என்பதை நாங்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவுக்கு சிறைவாசிகளுடைய நலனில் அக்கறைகொண்ட அரசாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சிறைவாசிகளுடைய உணவிலும் அக்கறைகொண்டிருக்கிற அரசு, நம்முடைய அரசு. ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குச் சொன்னது என்னவென்றால், 'சிறைச்சாலைகளுக்கு நீங்கள் சென்று பார்க்கிறபோது, கைதிகளோடு பேசுகிறபோது, உணவினுடைய தரம் எப்படி இருக்கிறது என்று அவர்களிடத்தில் கேளுங்கள். பக்கத்திலே அதிகாரிகளை வைத்துக்கொண்டு கேட்காதீர்கள். அவர்களுக்குப் பயந்துகொண்டு உண்மையைச் சொல்லமாட்டார்கள். தனியாகக் கேளுங்கள்' என்று சொன்னார்கள். அப்படி கேட்கின்றபோது அவர்கள் 'இப்பொழுது உணவு நன்றாக இருக்கிறது; நாங்கள் சிறையிலே இருக்கின்ற canteen–க்கு செல்வது கிடையாது. காசு கொடுத்து canteen–ல் பொருளை வாங்குவது கிடையாது.' என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3–30 மணியாகிறது. Jail–ல் யாருக்கும் கொரோனா வராமல் பார்த்துக்கொள்கிறோம் என்று ஒரே வரியில் சொன்னால், முடிந்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஏன் இவ்வளவு நேரம்? சீக்கிரம், முடியுங்கள் சார். (குறுக்கீடு)

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: நீங்கள் அனுமதித்தால், நான் இன்னும் 5 நிமிடங்களில் வேகமாகப் பேசி உரையை முடித்துவிடுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வேகமாகத்தான் உரையாற்றுகிறார்கள். உரையைச் சீக்கிரம் முடித்துவிடுகிறேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: நான் maximum 15, 20 நிமிடங்களுக்குமேல் நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன். நன்றாகத் தெரியும். இன்றைக்கு சிறைகளிலே இருக்கக்கூடிய சிறைவாசிகள் மகிழ்ச்சியாக உண்ணுகின்றவண்ணம், சிறை canteen–ஐ நாடிச் செல்லாமல் சிறைகளிலேயே தயாரிக்கப்படுகிற உணவை உண்ணுகிறவண்ணம் சிறப்பான, நேர்த்தியான நல்ல உணவு அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

நீதி நிருவாகம். அடுத்த மானியக் கோரிக்கைக்கு வந்துவிட்டேன். சங்க காலங்களிலும், மன்னராட்சிக் காலங்களிலும், நீதிச் செங்கோல் வளையாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதை உயர்த்திப் பிடித்து, நிமிர்ந்து நிற்கச் செய்வதுதான் இந்தத் துறையினுடைய உயர்ந்த நோக்கமாகும். புறாவுக்காக தன் தசையைத் தந்தான் மன்னன் சிபிச் சக்கரவர்த்தி. பசுவுக்காக மணியோசை கேட்டு, நீதி காக்க தன் மகனையே தேர்க்காலில் தந்தான் மனுநீதிச் சோழன். இத்தனைக்கும் சிறப்பாக பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன், தான் நீதி தவறியதை உணர்ந்தவுடன், 'யானோ அரசன்! யானே கள்வன்' என்று சொல்லி தன்னுயிரை மாய்த்துக் கொண்டு நீதியை நிலைநாட்டினான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவிற்கு அன்று முதல் இன்று வரை, நீதி பரிபாலனம் என்பது, நீதி நிருவாகம் என்பது, ஒருதலைப்பட்சமின்றி, நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறதென்பது புலனாகும். நாம் தவறு செய்யாமல் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். தவறு செய்துவிட்டு, சட்டம் என்னைத் தண்டிக்கிறது என்று சொன்னால், வருத்தப்படுவதில் எந்தப் பயனும் கிடையாது. குற்றம் என்ற புற்றுக்குள் கையை வைத்தால், சட்டம் என்கின்ற பாம்பு கடிக்கத்தானே செய்யும்? (மேசையைத் தட்டும் ஒலி) பாம்பின் புற்றுக்குள் கையை விட்டது யாருடைய தவறு? எனவே, குற்றம் என்கின்ற புற்றுக்குள் கையை வைத்தால், சட்டம் என்கின்ற பாம்பு கடிக்கத்தான் செய்யும். அதுதான் இன்றைய பழக்கம். எனவே, நாம் நம்மைக் காப்பாற்றிக்

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

கொள்ள வேண்டும். நாம் தவறு செய்யாமல் இருக்க வேண்டும். தவறு செய்தால், தண்டனை உண்டு என்கின்ற உணர்வு இருந்தால், சட்டம் நம்மைத் தண்டிக்கும் என்கிற உணர்வு இருந்தால், நிச்சயமாக யாரும் தவறு செய்ய மாட்டோம். இங்கே சட்டத்தை நான் பாம்பு என்று சொன்னது, குற்றத்தை பாம்பு புற்று என்று சொன்னதால்தான்.

பிற்பகல் 3–30

இந்திய அரசமைப்பில் சட்டம் என்பது, நம்முடைய மனித சுதந்திரத்திற்காகக் கிடைத்திருக்கிற மிகப் பெரிய வரமாகும். இந்திய அரசமைப்பு மனிதனைப் பாதுகாத்துக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. அடிப்படை உரிமைகளை, சுதந்திரத்தை நமக்கு சட்டமாகத் தந்திருக்கிறது. எனவே, சட்டம் என்பது, நம்மைப் பாதுகாக்கின்ற அரணாக அமைந்துள்ளது. மற்றொன்று சொல்ல வேண்டுமென்றால், சட்டம் என்பது கத்தியைப் போன்றது. அந்தக் கத்தியைப் பயன்படுத்துவதில்தான் வேறுபாடு. ஒரு மருத்துவர் கையிலும் கத்தி இருக்கும். அந்த மருத்துவர் அந்த கத்தியைப் பயன்படுத்துவது ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்காக. ஒரு கொலைகாரனுடைய கையிலும் கத்தி இருக்கும். அது ஓர் உயிரை எடுப்பதற்காக. ஒரே கத்திதான் மனிதனிடத்தில் இருக்கிறது. ஒரு மனிதன், அந்தக் கத்தியை உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பயன்படுத்துகிறான்; இன்னொரு மனிதன், ஒரு கொலைகாரன், ஓர் உயிரை எடுப்பதற்காகக் கத்தியைப் பயன்படுத்துகிறான். அதேபோலத்தான் சட்டமும். மனிதன் தவறு செய்யும்பட்சத்தில், அவனைத் தண்டிக்கவும், அதே மனிதன் பாதிக்கப்படும்போது, அவனைக் காப்பாற்றும் கேடயமாகவும் விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தவறு செய்கின்றபோது தண்டிக்கவும், அவன் தவறு செய்யாதபோது, அவனைக் காப்பாற்றுகின்ற கேடயமாகவும் சட்டம் விளங்குகிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். எனவே, தவறு செய்பவர்கள், நாம் தண்டிக்கப்படுவோம் என்று உணர்ந்தால், நிச்சயமாக தவறு செய்ய மாட்டார்கள்.

இந்திய ஒன்றியம், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தலைமையில் தயாரிக்கப்பட்ட அரசமைப்புச் சட்டம் குடியரசு நாளன்று அமைக்கப்பட்ட ஒன்றாகும். எனவே, இங்கு சட்டத்தின் ஆட்சி, நிலைநிறுத்தப்படுகிறது. 'நீரின்றி அமையாது உலகு' என்பார்கள். அதுபோல் ஒரு நல்ல நீதி நிருவாகம் இன்றி, ஒரு நாடு இருக்க முடியாது. மதச்சார்பற்ற இந்திய ஒன்றியத்தின்

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

இறையாண்மையைப் போற்றிப் பாதுகாக்கத் துணையாக இருப்பது, நீதி நிருவாகம்தான். நீதி சரிந்தால், நாடு சரிந்துவிடும். நம் நாட்டின் நீதி நிருவாகம் பலவகையான கட்டமைப்புகளைக் கொண்டவையாக இருப்பினும், அதனை உயர்த்தும் இடம், சட்டத்தை இயற்றும் இடமாக இருக்கக்கூடிய பாராளுமன்றமும், சட்டமன்றமும் ஆகும். அந்த சட்டத்தைப் பாதுகாத்துத் தருகின்ற இடம், இன்றைக்கு உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், இப்படி அடுக்கிக்கொண்டே செல்லலாம். ஆனால், இன்றைக்குப் பேசிய நண்பர்கள், 1,280–க்கு மேற்பட்ட நீதிமன்றங்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால், அந்த நீதிமன்றங்கள் போதாது என்று சொல்வதற்குக் காரணம், அங்கு தேங்கியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை சுமார் 15,33,175 ஆகும். ஆனால், இன்றைக்கு இந்த அரசு, கடுமையான நிதி நெருக்கடிக்கிடையேயும், புதிய நீதிமன்றங்களை உருவாக்க வேண்டும் என்பதில் தனி அக்கறை எடுத்துக்கொண்டு செயல்படுகிறது. கடந்த ஆட்சியில், மாவட்ட நீதிமன்றங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், இருக்கையில் இருந்தால் நல்லது. அனைவரும் அவரவர் இருக்கைகளில் அமருங்கள், அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், யாரும் அதனை காதுகொடுத்துக் கேட்பதுபோல் எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) செவிகளுக்கு நல்ல இனிய கருத்துகள் வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களை உருவாக்கினார்கள். அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் வந்தன. காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகங்கள் வந்தன. பல அலுவலகங்கள் வந்தன. இரண்டு முறை ஆட்சியில் இருந்தார்கள். எங்கேயாவது மாவட்ட நீதிமன்றம் வந்ததா என்றால், இல்லை.

"நாங்கள் நிறைய நீதிமன்றங்களைத் தொடங்கினோம்" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வதில் என்ன இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தேவைப்படுவது மாவட்ட நீதிமன்றம்.

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

அதைக் கொண்டுவரத் தவறிவிட்டார்கள். நாங்கள் 3 புதிய மாவட்ட நீதிமன்றங்களை அறிவிக்க இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே 2 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அடுத்த ஆண்டு இன்னும் 3 நீதிமன்றங்கள் உயர் நீதிமன்றத்தின் ஒப்புதலோடு அறிவிக்கப்பட இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நீதிபதிகளினுடைய எண்ணிக்கையிலே 280 இடங்கள் காலியாக உள்ளன. அதேபோல APP I, II–ல் 103 இடங்கள் காலியாக உள்ளன. அவற்றையெல்லாம் தேர்வாணையத்தின் மூலமாக நிரப்பிட உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "சட்டம் ஓர் இருட்டறை! அதில் வக்கீலின் வாதம் ஓர் விளக்கு! அந்த பிரகாசமான விளக்கு ஏழைகளுக்குக் கிடைப்பதில்லை" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர் வழியிலே நியாயத் தராசு பிடித்த, கலைஞரின் சொல்லோவியங்களைச் செயல்படுத்துகின்ற நம்முடைய தளபதி அவர்கள் "இலவச சட்ட உதவி மையங்களை" ஏற்படுத்தி, அந்த மையங்கள் மூலமாக அந்த பிரகாசமான விளக்கு ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார். எனவே, ஏழைகள் எந்த வழக்கறிஞர் தங்களுக்கு வேண்டுமென்று இலவச சட்ட உதவி மைய முகாமிலே கோருகிறார்களோ, அந்த வழக்கறிஞரை நியமித்து ஏழைக்கும் அந்த பிரகாசமான வெளிச்சம் கிடைத்து நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நிரபராதிகூட தண்டிக்கப்படக் கூடாது என்று நம்முடைய சட்டம் சொல்கின்ற காரணத்தினால், அதற்குரிய சட்ட உதவிகளை வழங்குகின்ற இடமாக நம்முடைய தமிழகமும், இலவச சட்ட உதவி மையமும் இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொன்மையும், பழமையும்வாய்ந்த நீதிமன்றக் கட்டடங்களை, அதன் பழமைத்தன்மை மாறாமல் பாதுகாப்பதிலே இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. தமிழகத்திலே 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்த நீதிமன்றங்கள் அதன் பழமைத்தன்மை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையிலே, சமீபத்திலே புதுக்கோட்டைக்கு உயர் நீதிமன்றத்தினுடைய மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் வந்தார்கள். அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம், பாரம்பரியக்

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

கட்டடம் என்கின்ற அடிப்படையிலே அதனை முற்றிலும் புதுப்பிப்பதற்கு, உரிய நிதியை அதன் மதிப்பீடு பெற்று, இந்த அரசு ஒதுக்கீடு செய்யும்.

இந்த ஆண்டு, விருதுநகரிலே காரியாப்பட்டி, தூத்துக்குடியிலே எட்டயபுரம், திருவாரூர் மாவட்டத்திலே திருக்குவளை, புதுக்கோட்டையிலே பொன்னமராவதி, கறம்பக்குடி ஆகிய ஐந்து இடங்களிலே உயர் நீதிமன்ற அனுமதியுடன் நீதித் துறை நடுவர் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அமைக்க நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இங்கே பேசிய நண்பர்கள் பல்வேறு கருத்துகளையெல்லாம் சொன்னார்கள். அதைப்போல பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றுக்கெல்லாம் உரிய பதில் இருக்கிறது. எல்லாமே புதிய நீதிமன்றங்கள் வேண்டும் என்கின்ற கோரிக்கைதான். எங்களால் இயன்ற அளவிற்கு இந்த ஆண்டிலே புதிய நீதிமன்றங்கள் கொண்டுவருவோம். நிச்சயமாக அடுத்த ஆண்டிலே இன்னும் அதிகமான நிதியை ஒதுக்கி, எங்கெங்கெல்லாம் நீதிமன்றங்கள் அவசியமோ, அங்கெல்லாம் நீதிமன்றங்கள் கொண்டுவரப்படும்.

அதேபோல சிறைச்சாலைகள் வேண்டுமென்று நிறையபேர் கேட்டிருக்கிறார்கள். இது ஓர் ஆச்சரியமான கேள்வி. ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்களாக இருந்தாலும் சரி, மற்றவர்கள் யாராக இருந்தாலும் சரி, எல்லோருமே அவர்களுடைய தொகுதியில் சிறைச்சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், திருவண்ணாமலையில் மாவட்ட சிறைச்சாலையே வேண்டுமென்று கேட்கின்றார். அதற்காக நிதி ஒப்புதலுக்குக் கேட்டிருக்கின்றோம். இந்த ஆண்டிலே இல்லையென்று சொன்னாலும், நிச்சயமாக அடுத்த ஆண்டிலே அமைக்கப்படும். அங்கே என்ன சொல்கிறார்கள் என்றால், "வேலூரிலேயே இன்றைக்கு கைதிகளின் எண்ணிக்கை பாதியாகத்தான் இருக்கிறது, அப்படியிருக்கும்போது எப்படி அங்கே புதிய சிறைச்சாலை கொண்டு வரமுடியும்" என்று கேட்கிறார்கள். (குறுக்கீடு) (சிரிப்பு) மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொல்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், '*5* ஏக்கர் நிலம் வைத்திருக்கிறேன்' என்று சொல்கிறார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கே இருக்கக்கூடிய கைதிகளின்

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

எண்ணிக்கையின் அடிப்படையில், அடுத்த ஆண்டிலே நிச்சயமாக அங்கே சிறைச்சாலை கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் நாமக்கல் சட்டக் கல்லூரி தொடர்பாக ஏன் சந்தேகப்பட்டார் என்று தெரியவில்லை. 24–7–2019 அன்றே சட்டக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எந்தக் கல்லூரியையும் நிறுத்துகின்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. அது வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. இடப் பிரச்சினைதான். இப்போது இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, ஆரம்பிக்கப்பட்ட எந்தக் கல்லூரியையும் நிறுத்த மாட்டோம். அனைத்து மாவட்டங்களிலும் சட்டக் கல்லூரி கொண்டு வர வேண்டுமென்பதுதான் அரசினுடைய கொள்கை. நிச்சயமாக இந்த ஐந்தாண்டு காலத்தில் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு சட்டக் கல்லூரிகளை எல்லா மாவட்டங்களுக்கும் கொண்டு வருவோம் என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3–40

மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாதுரை அவர்கள் பட்டுக்கோட்டையில் உள்ள மருத்துவமனையை விரிவாக்கம் செய்வதற்கு சிறையினுடைய இடத்தைக் கேட்டிருக்கிறார்கள். அது பாழடைந்த சிறையாகும். நிச்சயமாக புதுப்பிக்கப்பட வேண்டிய சிறை. புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு வேறோர் இடத்தைக் கொடுத்தார்கள் என்றால், அந்த இடத்தில், புதிதாக நவீன முறையில் கட்டடம் கட்ட முடியும். மருத்துவத் துறை மூலமாக அவர்கள் அணுகினால், அந்த இடத்தை ஒப்படைத்துவிட்டு, வருவாய்த் துறை மூலமாக எங்களுக்கு வேறு இடம் கிடைக்குமேயானால், நிச்சயமாக அந்த இடத்திலே நாங்கள் புதிய சிறைச்சாலையை அமைத்துக்கொள்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, நீங்கள்தான் அதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாங்கள் அதற்கு ஒத்துழைப்புத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்கள் பேசுகிறபோது, Bar Council of Tamil Nadu அளித்த நிறைய கோரிக்கைகளை எங்களிடம் கொடுத்தார்கள். அந்தக் கோரிக்கைகளில் ஒன்றைக்கூட இப்போது எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுசம்பந்தமாகத்தான் அவர்

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

அதிகம் கோரிக்கை வைத்தார். அந்தக் கோரிக்கைகள் எங்கள் நினைவில் உள்ளன. அடுத்த நிதியாண்டில் வருகிற நிதிநிலை அறிக்கையில், நிச்சயமாக அந்தக் கோரிக்கைளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்படும்.

வழக்கறிஞர்களுக்கு வீடு வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்துக்கொள்ளுங்கள் என அவர்களிடம் சொன்னோம். கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் என அமைத்து, இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சர் இருக்கிறார், முடிந்த வரையில் நாங்கள் நிதியை வாங்கித் தருகிறோம். நீங்கள் இடத்தை select செய்து கொள்ளலாம். 'வக்கீல்கள் நகர்' என பெயர் வைத்துக்கொண்டு ஓர் இடத்தில் நீங்கள் இருக்க முடியும். அதை அமைப்பதற்கு நீங்கள் முன் வாருங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா வழக்கறிஞர் சங்கங்களுக்கும் இதைத்தான் நாங்கள் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்கெல்லாம் வக்கீல்கள் ஒன்றாகச் சேர்ந்து வசிக்க விரும்புகிறீர்களோ, அங்கு ஒரு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தை அமைத்து அதன்மூலம் அணுகினீர்களேயானால், நிச்சயமாக அரசு உங்களுக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் எல்லோரும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அறிவிப்புகளை மிகச் சுருக்கமாக சொல்கிறேன்.

அறிவிப்புகள்

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

1. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் தற்போது இயங்கிவரும் மாவட்ட நீதிமன்றம் எண் II–ஐ முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைத்தல் (Conversion of the existing District Court No.II, Kancheepuram as a Principal District and Sessions Court at Kancheepuram, in Kancheepuram District)

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் தற்போது இயங்கிவரும் மாவட்ட நீதிமன்றம் எண் II முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எஸ். ரகுபதி] [*2021 செப்டம்பர் 7*

மாண்புமிகு உறுப்பினர் திரு. எழிலரசன் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார்.

2. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் தற்போது இயங்கி வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைத்தல். (Conversion of the existing Additional District Court, Mayiladuthurai as a District and Sessions Court at Mayiladuthurai in Mayiladurai District)

மயிலாடுதுறை மாவட்டம். மயிலாடுதுறையில் தற்போது இயங்கிவரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும்.

3. திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் தற்போது இயங்கிவரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை, மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைத்தல் (Conversion of the existing Additional District Court, Tirupattur as a District and Sessions Court at Tirupattur in Tirupattur District)

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் தற்போது இயங்கிவரும் கூடுதல் மாவட்ட நீதிமன்ற மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும்.

4. விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைத்தல் (Constitution of an Additional District Court at Aruppukkotai in Virudhunagar District)

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

5. கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Chief Judicial Magistrate Court at Kallakurichi in Kallakurichi District)

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

6. தென்காசி மாவட்டம், தென்காசியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Chief Judicial

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

Magistrate Court at Tenkasi in Tenkasi District)

தென்காசி மாவட்டம், தென்காசியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

7. ராணிப்பேட்டை மாவட்டம், ராணிப்பேட்டையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Chief Judicial Magistrate Court at Ranipet in Ranipet District)

ராணிப்பேட்டை மாவட்டம், ராணிப்பேட்டையிலே ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

8. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Chief Judicial Magistrate Court at Kancheepuram in Kancheepuram District)

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரத்தில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

9. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்படும் (Constitution of a Chief Judicial Magistrate Court at Mayiladuthurai in Mayiladuthurai District)

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறையில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

10. திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Chief Judicial Magistrate Court at Tirupattur in Tirupattur District)

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

11. புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Sub Court at Tirumayam in Pudukottai District)

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

12. திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Sub Court at Thiruthuraipoondi in Tiruvarur District)

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

13. திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல் (Constitution of a Sub Court at Polur in Tiruvannamalai District)

திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

14. சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாகக் கட்டடம் ரூ.4.28 கோடி செலவில் கட்டுதல் (Construction of Additional Law Officers' Block in the Madurai Bench of Madras High Court, Madurai at a cost of Rs.4.28 crore)

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாகக் கட்டடம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.4.28 கோடி செலவில் கட்டப்படும்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

1. சென்னையிலுள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்திற்கு, 40 கணினிகள் மற்றும் 10 நகலெடுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் (Purchase of 40 Computers and 10 Xerox Machines for the office of the Department of Prisons and Correctional Services, Head Quarters, Chennai)

சென்னையிலுள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்திற்கு, 40 கணினிகள் மற்றும்

2021 செப்டம்பர் 7] *[திரு. எஸ். ரகுபதி]*

10 நகலெடுக்கும் இயந்திரங்கள் ரூ.44.00 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

2. அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் (புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை) மற்றும் மாவட்டச் சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிற்கு 15 கனரக சலவை இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் (Purchase of 15 Industrial Laundry Machines for all Central Prisons, Special Prisons for women (Puzhal, Vellore, Trichy, Coimbatore, Madurai) and District Jail & Borstal School, Pudukottai)

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் (புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை) மற்றும் மாவட்டச் சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிற்கு 15 கனரக சலவை இயந்திரங்கள், ரூ.60.00 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

3. அனைத்து மத்திய சிறைகளுக்கும் 9 ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பழைய இயந்திரங்களுக்கு மாற்றீடாக கொள்முதல் செய்தல் (Purchase of 9 X–Ray Baggage Scanner Machines at all Central Prisons in replacement of Old Machines)

அனைத்து மத்திய சிறைகளுக்கும் 9 ஊடுகதிர் அலகிடல் கருவிகள், பழைய இயந்திரங்களுக்கு மாற்றீடாக, ரூ.180.00 இலட்சம் தொடரா செலவினத்தில் கொள்முதல் செய்யப்படும்.

4. அனைத்து மத்திய சிறைகளில் உள்ள பணியாளர் குடியிருப்புகளில், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சவ்வூடு பரவல் முறை குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் நிறுவுதல் (Installation of 500 litres capacity Reverse Osmosis Plant in all Central Prisons staff quarters)

அனைத்து மத்திய சிறைகளில் உள்ள பணியாளர் குடியிருப்புகளில், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சவ்வூடு பரவல் முறை குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் ரூ.18.90 இலட்சம் தொடரா செலவினத்தில் நிறுவப்படும்.

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

5. சிறைகளைச் சீர்திருத்த மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் (Action to be taken to change the Prisons into Reform Centres)

சிறைகளைச் சீர்திருத்த மையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறைவாசிகளின் சிறை தண்டனை முடிந்ததும், அவர்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 3–45

சட்டத் துறை

1. சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதிய அரசு சட்டக் கல்லூரி துவக்குதல்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதிய அரசு சட்டக் கல்லூரியானது ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சட்டப் படிப்பில் முதலாமாண்டில் தலா 80 மாணவர்களுடன் 2022–2023 ஆம் கல்வியாண்டில் தொடங்கப்படும்.

இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே முன்னாள் மத்திய நிதி அமைச்சரும், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினரும், நமது மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்களும் கொடுத்த கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

2. அரசு சட்டக் கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன்கூடிய கம்பியில்லா மின்மண்டலம் நிறுவுதல்

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன்கூடிய கம்பியில்லா மின் மண்டலம் (Wi–Fi Zone) ரூபாய் 30 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

3. அரசு சட்டக் கல்லூரிகளில் சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்துதல்

தமிழ்நாட்டிலுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச பயிற்சிப் பட்டறைகள் (Workshops), கருத்தரங்குகள் (Seminars) மற்றும்

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

சட்ட மாநாடுகள் (Conferences) நடத்துவதற்கு ஆண்டுதோறும் ரூபாய் 28 இலட்சம் வழங்கப்படும்.

4. அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

தமிழ்நாட்டிலுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும்.

5. அரசு சட்டக் கல்லூரி உதவிப் பேராசிரியர்களுக்கு ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்

அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள் சிறந்த முறையில் கல்வி கற்பித்திட ஏதுவாக ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் (Faculty Development Programme) மற்றும் புத்தாக்கப் பயிற்சி (Refresher Course) காலமுறையில் வழங்கப்படும். இச்செலவுகளுக்காக ரூபாய் 14 இலட்சம் வழங்கப்படும்.

6. அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுதல்

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவப்படும்.

7. சீர்மிகு சட்டப் பள்ளி வளாகத்தில் 240 கிலோ வாட் (KW) திறனில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவுதல்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டுவரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் 240 கிலோ வாட் (KW) திறன் கொண்ட சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்படும்.

8. சீர்மிகு சட்டப் பள்ளி வளாகத்தில் செவியுணர் காணொளி ஊடக மையம் நிறுவுதல்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டுவரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் செவியுணர் காணொளி ஊடக மையம் (Audio and Visual Media Centre) நிறுவப்படும்.

[திரு. எஸ். ரகுபதி] [2021 செப்டம்பர் 7

9. இளங்கலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத் திட்டம் அறிமுகப்படுத்துதல்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் இளங்கலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத் திட்டம் (NCC) அறிமுகப்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் புதிய பாடப் பிரிவில் முதுகலை சட்டப் படிப்பு அறிமுகப்படுத்துதல்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இணையவெளி, சட்டம் மற்றும் நீதி (Cyber space. Law and Justice) என்ற புதிய பாடப் பிரிவில் முதுகலை சட்டப் படிப்பு (எல்.எல்.எம்.) ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

11. சட்ட ஆராய்ச்சித் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் துவக்குதல்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டுவரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 15 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

12. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுதல்

திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் (Centre for Law and Agriculture) மற்றும் முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் (Centre for Investment Laws) ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் (Legal Research Centres) ரூபாய் 20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் திரும்பத் திரும்ப பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நான் மிகவும் speed ஆக முடித்திருக்கிறேன். இதைவிட fast ஆக மூன்று துறைகளையும் முடிக்க முடியாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முப்பத்து மூன்று நிமிடங்களில் முடித்திருக்கிறீர்கள். மிக்க நன்றி. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(எ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,089,50,38,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஏ) கோரிக்கை எண் 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 24–சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 7

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.385,40,72,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,81,57,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஐ) கோரிக்கை எண் 33–சட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.73,59,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

2021 செப்டம்பர் 7] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஒ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை.வெட்டுத்தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எரிசக்தித் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,509,82,04,000/–, மூலதனக் கணக்கில் ரூ.500,84,41,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,266,03,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஒ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 7

மற்றும் ஆயத்தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.163,54,56,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 3–50

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2021), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2021 செப்டம்பர் 7] [திரு. எஸ். ரகுபதி]

"*2021* ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *26/2021*)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 1-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 7

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2021), மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

2021 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 இல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 28-8-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 7

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்பு

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிவழிப் பயிற்சி 7-9-2021 மற்றும் 9-9-2021 ஆகிய நாட்களில் நடைபெறுதல் மற்றும் சிம் கார்டு வாங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்று 7–9–2021 மாலை 5.30 மணிக்கும், 9–9–2021 அன்று மாலை 5.30 மணிக்கும், இதே அரங்கத்தில் கணினிப் பயிற்சி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கையடக்கக் கணினியை

2021 ஆகஸ்ட் 25] *[பேரவைத் தலைவர்]*

(Tab) எடுத்து வருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு sim card வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8–9–2021) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

25. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடப்பாடு) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 24–7–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./புகொத/19–5–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 16–7–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மின்.வவி.தொ./7–43–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 18–9–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./T.R/5/2–12–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின்

[*2021 செப்டம்பர் 7*

பகிர்மான விதித்தொகுப்பு ஆகியவற்றுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 9–6–2020 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./வவி/7–41 மற்றும் எண் த.மி.ஒ.ஆ./பவி/8–26–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.*]

29. (i) *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (ஒன்பதாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 31–7–2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 120–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும்* (ii) *13–4–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–III, பிரிவு 1(a)–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் SRO A–17(b)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத்திருத்தம் வெளியிட்டது குறித்து 31–7–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 122–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [*2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.*]

30. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இந்திய அரசின் "அலுவல் ரீதியிலான நிலை வழங்கப்பட்ட இந்திய வானூர்தி நிறுவனங்களாக" அட்டவணையிடப்பட்ட (i) *கிங்ஃபிஷர் வானூர்தி நிறுவனம்* (ii) *ஸ்பைஸ் ஜெட் வானூர்தி நிறுவனம்* (iii) *திருவாளர்கள் ஆர்யன் கார்கோ எக்ஸ்பிரஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம்* (iv) *டெக்கான் 360* (*டெக்கான் கார்கோ மற்றும் எக்ஸ்ப்ரெஸ் லாஜிஸ்டிக்ஸ் தனியார் நிறுவனம்*) *வானூர்தி நிறுவனம்* (v) *திருவாளர்கள் இண்டர் க்ளோப் ஏவியேஷன் லிமிடெட் நிறுவனம் மற்றும்* (vi) *இந்திய வானூர்தி நிறுவனம் ஆகியவற்றிற்கு பன்னாட்டு வானூர்தி சேவைகள் நோக்கத்திற்காக தாரை எரிபொருள்* (jet fuel) *உட்பட வானூர்தி விசையாழி எரிபொருள் விற்பனை செய்தது குறித்து 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) இரண்டாவது விவர அட்டவணையில், விளக்கம் III–ல் வரையறுக்கப்பட்டவாறான எண்ணெய் நிறுவனங்களுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து 9–11–2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B2) துறையின் அரசாணை (நிலை) எண் 168–ல் வெளியிடப்பட்ட*

2021 செப்டம்பர் 7]

அறிவிக்கைகள். [*2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.*]

31. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (பதிமூன்றாவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 16-11-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 170-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

32. 13-4-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232(h-5)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 9-3-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 59-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

87. மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

88. மானியக் கோரிக்கை எண் 24-சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

89. மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

90. மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

91. மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

[*2021 செப்டம்பர் 7*

பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

92. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் 'தலைநிமிரும் தமிழகம்' என்கிற சிறுநூல். (தமிழ்)

93. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) *மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022.* (தமிழ்)

94. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) *மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆகியோர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022.* (தமிழ்)

95. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) *மற்றும் முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு* (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) *ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2021–2022.* (தமிழ்)

———

2021 செப்டம்பர் 7]

இணைப்பு I

(100 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முன்னுரை

அனைத்து குடிமக்களுக்கும் விரைவான நீதி கிடைக்கப்பெற வேண்டும் என்பது நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதன்மையான குறிக்கோள்களில் ஒன்றாகும். இதனை அடைவதற்கு, நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் நீதித் துறையினை கணினிமயமாக்கல் போன்றவற்றை வழங்குவதற்கு இந்த அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக புதுதில்லியிலுள்ள இந்திய உச்ச நீதிமன்றம் உள்ளது. மாநிலங்களிலுள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. மாநிலத்திலுள்ள நீதித் துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

3. உயர் நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரை கிளை

3.1. மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு சென்னை உயர் நீதிமன்றம் ஆகும். உயர் நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை *75.* அவற்றுள், *61* நீதிபதிகளைக் கொண்டு தற்போது செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, சென்னை உயர் நீதிமன்றத்தில் *45* நீதிபதிகளைக் கொண்டும் மற்றும் அதன் மதுரை கிளையின் *16* நீதிபதிகளைக் கொண்டும் இயங்கி வருகிறது. உயர் நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும் மற்றும் சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப் பேராணை) விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. இந்நீதிமன்றம், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல்முறையீட்டினை

[*2021 செப்டம்பர் 7*

விசாரணை செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. உரிமையியல் தொடர்பான அசல் வழக்குகளை பொறுத்தமட்டில் சென்னை மாந்கரத்துக்குள் எழும் ரூ.1.00 கோடிக்கு அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் அதிகார எல்லையானது மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய 13 மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத் தவிர, சென்னை உயர் நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

3.2. சென்னை உயர் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் புதுச்சேரி யூனியன் பகுதி நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன் பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவினம் முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

3.3. நீதி பரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.

4. செலவினங்களின் வகைப்பாடு

சென்னை உயர் நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினம்" எனவும். நீதி நிருவாகம் குறித்த பிற செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினம்" எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

5. நீதிமன்றங்களின் எண்ணிக்கை

தற்போது, இம்மாநிலத்தில் சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து மொத்தம் 1,280 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 144 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1,136 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை விவரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் முறையே பிற்சேர்க்கை-2 மற்றும் 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 7]

6. உரிமையியல் நீதிமன்றங்கள்

6.1. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது சென்னை மாநகர் எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. சென்னை அமர்வு பிரிவிற்கு, இந்நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதி ரூ.10.00 இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதி ரூ.10.00 இலட்சத்திற்குமேல் ரூ.1.00 கோடிக்கு மிகாமலும் விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர்.

6.2. சிறு வழக்கு நீதிமன்றங்கள், சென்னை

1882 ஆம் ஆண்டின் மாகாண சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்க, சிறு வழக்கு நீதிமன்றங்கள் அதிகாரங்களை பெற்றுள்ளன. 1988 ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் பிரத்யேக தீர்ப்பாயங்களாகவும், ஐந்தாவது மற்றும் ஆறாவது சிறு வழக்கு நீதிமன்றங்களாகவும் செயல்படுகின்றன. தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், சென்னை மாநகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், தலைமை நீதிபதி மற்றும் ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள் வாடகைக் கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

6.3. மாவட்ட நீதிமன்றங்கள்/கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்

மாநிலத்தில் 91 மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்கெனவே விரைவு நீதிமன்றங்களாக இருந்த 49 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்) 31 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்கள் தொடர்பான சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும்

[*2021 செப்டம்பர் 7*

உள்ளனர். இவர்கள் தத்தம் பகுதியில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். மேலும், தத்தம் ஆளுகைக்குட்பட்ட சார்நிலை நீதிமன்றங்களையும் ஆய்வு செய்கின்றனர். வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.10.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் உச்சவரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர்.

6.4. சார்பு நீதிமன்றங்கள்

சார்பு நீதிமன்றங்கள் முதுநிலை உரிமையியல் நீதிபதிகளின் தலைமையின்கீழ் இயங்குகிறது. சார்பு நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சத்திற்கு மேலும், ஆனால் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் பணமதிப்பு கொண்ட அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. மேலும், தத்தம் எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்ற முடிவிற்கெதிராக தொடரப்படும் ரூ.1.00 இலட்சம் வரையிலான மதிப்புக்குட்பட்ட மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் இந்நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுத் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன.

6.5. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்

உரிமையியல் நீதிபதிகளின் தலைமையின்கீழ் இயங்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரித்து வருகின்றன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையைக் கொண்டுள்ளன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ரூ.20,000/- வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர்.

6.6. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில் உள்ள சில பகுதிகளில் உள்ள வழக்கு தொடுக்கும் பொதுமக்கள் தங்களது பகுதிகளில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாததால், தங்களது பகுதிக்கு அப்பாற்பட்ட வேறு பகுதிகளில்

2021 செப்டம்பர் 7]

உள்ள உரிமையியல் நீதிமன்றங்களில் தங்களது உரிமையியல் வழக்கு தொடர்பாக தீர்வுகாண்பதில் மிகுந்த இன்னலுக்கு ஆளாகிறார்கள். இவற்றினைக் களையும்பொருட்டு இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன.

7. குற்றவியல் நீதிமன்றங்கள்

7.1. பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் சென்னை மாநகரில் தத்தம் அதிகார வரம்புக்குட்பட்டு குறிப்பிட்ட காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கின்றன. சென்னையில் உள்ள 37 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் 2 மாவட்ட நீதிபதிகள் தரத்திலும், 27 முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்திலும் மற்றும் 8 உரிமையியல் நீதிபதி தரத்திலும் தற்போது இயங்கிவருகின்றன.

7.2. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

மாநிலத்தில், 32 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர், தங்கள் மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆய்வினை மேற்கொள்வார்.

7.3. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இந்த நீதிமன்றங்கள் ஏறக்குறைய இம்மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இயங்கி வருகின்றன. இந்நடுவர் நீதிமன்றத்தில், மூன்றாண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூ.10,000/—ற்கு மிகையில்லாத அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன.

8. சிறப்பு நீதிமன்றங்கள்

8.1. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் தொழிலாளர் தொடர்பான சர்ச்சைகள் மற்றும் இழப்பீட்டு கோரிக்கை

[*2021 செப்டம்பர் 7*

மனுக்களை விசாரித்து, தீர்ப்பு அளிக்கின்றன. இம்மாநிலத்தில், 17 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் ஒரு தொழில் வழக்கு தீர்ப்பாயம் செயல்பட்டு வருகின்றன. மேலும், தொழிலாளர் நல நீதிமன்றங்கள், அரசு அனுப்பிவைக்கும் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும், விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன.

8.2. மாவட்ட நீதிபதி பதவி நிலையில், நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், *1955*—ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க செயல்படுகின்றன. அவையாவன:—

1. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-I, திருச்சிராப்பள்ளி
2. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-I, தஞ்சாவூர்
3. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-II, திருநெல்வேலி
4. கூடுதல் அமர்வு நீதிமன்றம்-III, மதுரை

மேலும், பதின்மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், *1989*—ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்க்காணும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:—

1. விழுப்புரம்
2. சிவகங்கை
3. திண்டுக்கல்
4. இராமநாதபுரம்
5. ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர் மாவட்டம்)
6. புதுக்கோட்டை

2021 செப்டம்பர் 7]

7. கடலூர்

8. நாமக்கல்

9. தேனி

10. திருவண்ணாமலை

11. பெரம்பலூர்

12. தூத்துக்குடி

13. வேலூர்

இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்திலுள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின்கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின்மீது விசாரணை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

8.3. சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்களும், மதுரையில் ஒரு சிறப்பு நீதிமன்றமும், மொத்தம் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் மையச் சட்டங்களை மீறுவதனால் பதிவு செய்யப்படும் பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கின்றன.

8.4. திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும், குடும்ப நல நீதிமன்றங்கள் சட்டம், 1984-ன்கீழ் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில், 31 குடும்ப நல நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், சென்னையில் 7 கூடுதல் குடும்ப நல நீதிமன்றங்களும், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றமும், மாவட்ட நீதிபதி தரத்தில் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, சென்னையில் 4 விடுமுறை கால நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன.

8.5. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997-ன்கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.

8.6. சென்னையில் ஆறு சிறப்பு நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒன்று வீதம், மொத்தம் எட்டு சிறப்பு

[*2021 செப்டம்பர் 7*

நீதிமன்றங்கள், மத்திய குற்றப் புலனாய்வுத் துறையினால் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி முறைகேடு வழக்குகளை விசாரணை செய்வதற்கு சென்னையில் இயங்கிவரும் ஒரு சிறப்பு நீதிமன்றமும் அடங்கும்.

8.7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம், எட்டு சிறப்பு நீதிமன்றங்கள் ஊழல் தடுப்புச் சட்டம், *1988 (*மையச் சட்டம் *49/1988*)-ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகின்றன.

8.8. சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு வீதம் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றமும் போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், *1985*-ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளைப் பிரத்யேகமாக விசாரிப்பதற்காக செயல்படுகின்றன.

8.9. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம், மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி பதவி நிலையில் மொத்தம் ஆறு சிறப்பு நீதிமன்றங்கள் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், *1955*-ன்கீழ் பதிவாகும் வழக்குகளைப் பிரத்யேகமாக விசாரிக்க செயல்பட்டு வருகின்றன.

8.10. திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

8.11. ஒன்பது இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும், எழும்பூர் மற்றும் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும் இந்திய இரயில்வே சட்டம், *1989*-ன்கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரணை செய்வதற்கு செயல்பட்டு வருகின்றன.

8.12. சென்னையில் இரண்டும், காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம்,

2021 செப்டம்பர் 7]

ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம், 12 நடமாடும் நீதிமன்றங்கள் மோட்டார் வாகனச் சட்டம், 1988 (மையச் சட்டம் 59/1988)-ன்கீழ் பதிவு செய்யப்படும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரிப்பதற்கு இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

8.13. சென்னையில் 2 தனி நீதிமன்றங்கள் பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது)-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.

8.14. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம் பொடா சட்டம், 2002 (மையச் சட்டம் 15/2002)-ன்கீழ்வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

8.15. மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம், தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகிறது.

8.16. சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றமும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

8.17. சென்னையில் போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

8.18. சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடைச்) சட்டம், 1978-ன்கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்கு எண் 3876/2009-ஐ விசாரிப்பதற்கென செயல்பட்டு வருகிறது.

[*2021 செப்டம்பர் 7*

8.19. இம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென, 32 மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் 29 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.20. சென்னை, கோயம்புத்தூர், கடலூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்), நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்), மதுரை, நாகப்பட்டினம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர் மாவட்டம்) ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம், 16 சிறப்பு நீதிமன்றங்கள் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012-ன்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென இயங்கி வருகின்றன. மேலும் திண்டுக்கல், தருமபுரி, தேனி மற்றும் திருவள்ளூர் ஆகிய 4 நான்கு மாவட்டங்களில் நீதிமன்றங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

8.21. சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மத்திய குற்றப் பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாந்கர வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டு உள்ளது.

8.22. இம்மாநிலத்தில், 51 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

8.23. இம்மாநிலத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென, 36 சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென கூடுதலாக 8 நீதிமன்றங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

8.24. சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 26 சிறப்பு நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதன் விவரம் பிற்சேர்க்கை 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

8.25. இம்மாநிலத்தில் 10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், நான்கு நீதிமன்றங்கள்

2021 செப்டம்பர் 7]

சென்னை உயர் நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்திலும் உள்ளன. வழக்காடும் நபர்களை அழைப்பாணைமூலம் நீதிமன்றத்தில் முன்னிலை செய்யும் நடைமுறை மற்றும் வழக்கின் சாட்சியங்களை மட்டும் பதிவு செய்யும் பணி நிறைவடையும் வரையில் விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றங்கள் செயல்படுகின்றன.

8.26. அறக்கட்டளைகளின் சொத்துகளுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துகளுக்கும் பொறுப்பு வகிப்பதற்காக சென்னையில் மாவட்ட நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் இருக்கின்றார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார்.

9. தமிழ் வழியிலான சட்ட இதழ்

வழக்குரைஞர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்காக சென்னை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளை வெளிக்கொணரும் வகையில், 'தீர்ப்பு திரட்டு' என்ற பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், மாதமிருமுறை வெளியிடப்பட்டு வருகிறது.

10. நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம்

சென்னை உயர் நீதிமன்ற முதன்மை ஆயம், மதுரையிலுள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளை மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தொடுக்கப்பட்டுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், முடிவடைந்த மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த விவரம் முறையே பிற்சேர்க்கை-5, 6 மற்றும் 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

11. ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு, நீதிமன்றங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தினை ஒன்றிய

[*2021 செப்டம்பர் 7*

அரசின் நீதித் துறையானது, மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளைக் கட்டுவதன்மூலம் விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும் நிதி உதவி 2015—2016 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளது. ஒன்றிய அரசு 2021-2022 ஆம் நிதியாண்டிற்கு தமது பங்களிப்பு தொகை தோராயமாக ரூ.35.66 கோடியினை ஒதுக்கியுள்ளது.

12. நீதிமன்ற மேலாளர்கள்

35 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் சென்னை உயர் நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு 13-வது நிதிக் குழுவின் பிரிவுகளின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்தின் வேண்டுகோளிற்கிணங்க, 35 மேலாளர் பணியிடங்கள் மற்றும் 23 உதவிப் பணியாளர் பணியிடங்கள் ஆகியவற்றிற்கு மாநில நிதியிலிருந்து பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

13. நீதித் துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்

13.1. நாட்டில் உள்ள உயர் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட/சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டங்களில் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம், மடிக்கணினிகள், லேசர் அச்சுப்பொறிகள், நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான பயிற்சி, நீதிபதிகளுக்கான இணையதள வசதிகள், நீதிமன்ற வளாகங்களுக்கான இணையதள இணைப்புகள், காணொலி ஒளிக்காட்சி கலந்துரையாடல் வசதி, இடம் தேர்வு, வன்பொருள், இணைய கட்டமைப்பு மற்றும் மென்பொருள் பயன்பாடு, தொழில்நுட்ப மனிதவளம், தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலை தொடர்புகளை தரம் உயர்த்துதல் ஆகிய முக்கிய அம்சங்களை கொண்டதாகும். இத்திட்டத்தின் குறிக்கோள்களாவன:-

- நீதிமன்றங்களில் தினந்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக முறைப்படுத்த உதவுதல்.

2021 செப்டம்பர் 7]

- ❖ *நிலுவையிலுள்ள வழக்குகளைக் குறைக்கும்பொருட்டு நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்.*
- ❖ *வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல் அளித்தல்.*
- ❖ *நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித் துறை சார்ந்த தகவல்களைப் பெற வழிவகை செய்தல்.*

நீதித் துறையினை கணினிமயமாக்கல்

13.2. நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் பற்றிய தகவல்களை வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் ஆகியோர் பெறுவதற்கு உயர் நீதிமன்ற வலைதளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

13.3. குடிமக்கள் சார்ந்த சேவையாக HCMDRS *(*hcmad.auth, courts-madurai.sms, courts-tn.sms*) என்ற அனுப்புனர் குறியீடு மூலமாக சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளை மற்றும் சார்நிலை நீதிமன்றங்களின் பதிவு செய்யப்பட்ட செல்லிடப்பேசி பயனாளிகளுக்கு வழக்கு விவரப்பட்டியல் மற்றும் வழக்கு தொடர்பான தகவல்கள் குறுந்தகவலாக அனுப்பப்பட்டு வருகின்றன.*

13.4. சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் பல்வேறு இடங்களில் தொடுதிரைகள் பொருத்தப்பட்டு உள்ளன.

13.5. 42 மாவட்ட நீதிமன்ற வளாகங்களுக்கு லீஸ்டு லைன் இணைப்பு மற்றும் அனைத்து நீதித் துறை அலுவலர்களுக்கும் தனியான அடையாள எண் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்கும் தொழில்நுட்ப பணியாளர்கள் வழங்கப்பட்டுள்ளது.

14. உரிமையியல் நீதிபதிகள் நியமனம்

2018-2020 ஆம் ஆண்டிற்கான 176 உரிமையியல் நீதிபதி பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முக தேர்வு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் மேற்கொள்ளப்பட்டு அதில் 58 நபர்கள் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது குறித்த தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[*2021 செப்டம்பர் 7*

15. நீதித் துறை பயிற்சிக் கழகம்

நீதிபதிகள் மற்றும் நீதித் துறை பணியாளர்களுக்கு திறன்மிகு பயிற்சியளிப்பது மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகளின் பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக அறிமுகப் பயிற்சி வழங்குவது போன்றவை இப்பயிற்சிக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும். சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில நீதித் துறை பயிற்சிக் கழகம் மற்றும் மதுரை, கோயம்புத்தூரில் உள்ள பயிற்சிக் கழக மண்டல மையங்கள் ஆகியவை சென்னை உயர் நீதிமன்றத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

16. உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியைப் பயன்படுத்துதல்

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கை 11-10-2012 அன்று நடந்த உச்ச நீதிமன்ற முழு நீதிமன்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், இது இம்மாநிலத்தின் நீண்டநாள் கோரிக்கை மற்றும் விருப்பமாக இருப்பதால், இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு ஒன்றிய அரசிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

17. நீதித் துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்

நீதி சார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையானது முதற்கட்டமாக சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து முதன்மை மாவட்ட நீதிமன்றங்களிலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நீதி சார்ந்த மின்னணு முத்திரையை பொதுமக்கள் தாங்களாகவே இணையம்மூலம் உருவாக்கிப் பயன்படுத்தலாம். இத்திட்டத்தைச் செயல்படுத்த, திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பொது மக்கள் நீதிசாரா மின்னணு முத்திரைத் தாள்களையும் விற்பனை செய்வதற்கு திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு அரசு அனுமதியளிக்கப்பட்டு உள்ளது.

18. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள்/நியமனதாரர்கள் ஆகியோருக்கு தற்பொழுது

2021 செப்டம்பர் 7]

ரூ.7.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிக்கு ஆண்டுதோறும் ரூ.8.00 கோடி மானியம் வழங்கப்படுகிறது.

19. இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

புதியதாக பதிவு செய்யப்பட்ட இளம் வழக்குரைஞர்களுக்கு மாதம் தோறும் ரூ.3,000- இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

20. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி

பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நலனை கருத்திற்கொண்டு, அவர்களின் நியமனதாரர்கள்/சார்ந்தவர்களுக்கு, தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

21. நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள்

தற்போது 990 நீதிமன்றங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 109 நீதிமன்றங்கள் அரசு கட்டடங்களிலும் மற்றும் 87 நீதிமன்றங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு கோரும்போதெல்லாம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு

22.1. சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களைச் சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும்,

[*2021 செப்டம்பர் 7*

சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும், 1987-ம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம் (1994 ஆம் ஆண்டின் சட்டப்படி திருத்தி அமைக்கப்பட்டது) இயற்றப்பட்டது. அந்தச் சட்டத்தில் மேலே குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்துவதற்காக மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள், வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் மற்றும் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழு அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் மற்றும் மாநிலம் முழுவதும் எங்கெல்லாம் நீதிமன்றங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவால் அமைக்கப்பட்டுள்ளன. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவினை அமைத்து அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டது. தற்போது, 2 உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் குழுக்கள், 32 மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் மற்றும் 150 வட்ட சட்டப் பணிகள் குழுக்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

சட்ட உதவி பெற தகுதியுடையோர்

22.2. சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம், 1987, பிரிவு 12-ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்கள் வழக்கு தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:-

(i) ஆதி திராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப் பிரிவு 23-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனிதர்களை விற்பது, வாங்குவது, வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர் (அல்லது) பிச்சை எடுப்பவர்கள்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்றுத் திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

2021 செப்டம்பர் 7]

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம், மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள்

(viii) சட்டப் பணிகள் ஆணைக் குழு சட்டம், 1987, பிரிவு 12 (எச்)-ல் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்கு உட்பட்டவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,00,000- ஆகும்.

ஆலோசனை மற்றும் சமரச மையம்

22.3. பிரச்சினைகளை அடிப்படையிலேயே தீர்த்துவைக்கும் ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாக, வழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு எட்டுவதற்கு உதவும் ஒரு கருவியாக ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் இயங்கி வருகின்றன.

சட்டம் சார்ந்த உதவிகள்

22.4. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசு வழங்கும் நலத் திட்ட உதவிகளை பெறுவதற்கு சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் உதவுகின்றன.

மக்கள் நீதிமன்றம்

22.5. மக்கள் நீதிமன்றங்கள், நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற எந்த பொருள் பற்றியோ அதில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு இடையே ஒரு தீர்வு எட்டுவதற்கு நடத்தப்பட்டு வருகின்றன. நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் சட்டப் பணி ஆணைக் குழு சட்டம், 1987, பிரிவு 22பி-ன்படி, 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தேசிய மக்கள் நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. இவை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகின்றன.

[*2021 செப்டம்பர் 7*

மத்திய சிறைச்சாலைகளில் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றம்

22.6. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச் சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம் இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. சிறைச்சாலை சட்ட உதவி மையங்களில் சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு, அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்

22.7. காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும், மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும், காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கும் மற்றும் பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கும், தேவையான சட்ட உதவிகளை அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்கு அழைத்து வரப்படும் நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கு, சட்ட உதவி வழக்குரைஞர்கள் உதவி புரிகின்றனர்.

மாற்றுத் தீர்வு மையங்கள்

22.8. மாற்று முறை தீர்வு மையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், அமைக்கப்பட்டு, சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கு இணைப்பு பாலமாக செயல்படுகின்றன.

பாதிக்கப்பட்டவருக்கான இழப்பீடு திட்டம்-2013

22.9. ஒரு குற்றத்தின் விளைவாக காயம் மற்றும் பொருள் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புனர்வாழ்வு

2021 செப்டம்பர் 7]

தேவைப்படுவோர் அல்லது அவரைச் சார்ந்தோருக்கு இழப்பீடு வழங்க குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (சட்டம் 2/1974) பிரிவு 357ஏ-ன்படி அரசால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் திட்டம், 2013 வகுக்கப்பட்டுள்ளது. காவல் துறை தலைமை இயக்குநரால் இத்திட்டத்தின்கீழ் நிதி வழங்கப்படுகிறது.

பாலியல் குற்றங்கள் மற்றும் இதர குற்றங்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தமிழ்நாடு இழப்பீட்டு திட்டம்-2018

22.10. ஒரு குற்றத்தின் விளைவாக காயம் மற்றும் பொருள் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட மற்றும் புனர்வாழ்வு தேவைப்படும் பெண்கள் அல்லது அவரைச் சார்ந்தோருக்கு இழப்பீடு வழங்க தமிழக அரசால் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவால் நிதி வழங்கப்படுகிறது.

தொலைபேசி வழி சட்ட உதவி

22.11. சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும்பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு, சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும். அனைத்து வேலை நாட்களிலும், வழக்குரைஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டு, பொது மக்களின் சட்டம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் 044-25342441 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்புகொள்ள ஏதுவாக, இலவச எண் 1800-4252-441 பயன்பாட்டில் உள்ளது.

23. அரசு வழக்காடும் துறை, உயர் நீதிமன்றம், சென்னை

அரசு வழக்காடும் துறை, மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இரண்டு கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர்கள் உச்ச நீதிமன்றத்தில் மாநில அரசின் சார்பாக வழக்குகளில் வாதாடுவதற்கு நியமிக்கப்பட்டு உள்ளனர்.

[*2021 செப்டம்பர் 7*

24. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்

24.1. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் மாநிலத்திலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நீதித் துறை நடுவர் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள குற்ற வழக்குகளை திறம்பட நடத்துதல் மற்றும் இந்நீதிமன்றங்களின் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்களின் பணித்திறனைக் கண்காணித்தல் போன்றவற்றின்மீது முழுக் கட்டுப்பாடு செலுத்தும் இயக்ககமாக உள்ளது. இவை தவிர, அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்கள் விழிப்புப் பணி, காவல் துறை, சிறைத் துறை, பொது சுகாதாரம், விவசாயத் துறை, மருந்துக் கட்டுப்பாடு மற்றும் விதைச்சான்று இயக்குநரகம் போன்ற துறைகளில் அயற்பணியில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

24.2. உச்ச நீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள், தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழில் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்த பெரும் உதவியாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும், மண்டல மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் சட்ட நூல்கள் அடங்கிய நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

25. முடிவுரை

வழக்காடும் பொது மக்களுக்கு, விரைவாக நீதி பெறுதலை உறுதிசெய்யும்வண்ணம் நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு தொடர்ந்து வழங்கும்.

பிற்சேர்க்கை - 1

(பத்தி 2 – ஐக் காண்க)

தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்ற கிளை

உரிமையியல் நீதிமன்றங்கள்			***குற்றவியல் நீதிமன்றங்கள்***	
சென்னை மாநகர்	**வெளியூர்**		சென்னை மாநகர்	**வெளியூர்**
மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சிறுவழக்குகள் நீதிமன்றங்கள்	மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் சார்பு நீதிமன்றங்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள்		பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்	மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

பிற்சேர்க்கை - 2

(பத்தி 5 – ஐக் காண்க)

சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

வ. எண்	நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர்	மாவட்ட நீதிபதி		முதுநிலை உரிமையியல் நீதிபதி		உரிமையியல் நீதிபதி
		மாவட்ட நீதிமன்றங்கள்	மத்திய குற்ற புலனாய்வு வழக்கு தனி நீதிமன்றங்கள்	பெருநகர் குற்றவியல் நடுவர்	இதர வகை பிரிவு	
1.	மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள்	18	6	--	28	1
2.	சிறு வழக்குகள் நீதிமன்றங்கள்	1	--	--	8	8
3.	பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்	2	--	1	26@	8*
4.	தொழிலாளர் நல நீதிமன்றங்கள்	4	--	--	--	--
5.	தொழில் தீர்ப்பாயம்	1	--	--	--	--
6.	விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	1	--	--	1	--
7.	அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	1	--	--	--	--
8.	இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம்	1	--	--	--	--
9.	தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர்	1	--	--	--	--
10.	துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர்	--	--	--	--	1
11.	குடும்ப நல நீதிமன்றங்கள்	8	--	--	--	--
12.	மகளிர் நீதிமன்றம்	1	--	--	--	--
13.	தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம்	1	--	--	--	--
14.	போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள்	2	--	--	--	--
15.	குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம்	1	--	--	--	--
16.	சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	1	--	--	--	--
17.	உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை	1	--	--	--	--
18.	துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு	--	--	--	1	--
19.	செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை	--	--	--	1	--
20.	ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம்	--	--	--	1	--
21.	மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் - சிறப்பு நீதிமன்றங்கள்	--	--	--	2	--
22.	நிரந்தர மக்கள் நீதிமன்றம்	1	--	--	--	--
23.	தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம்	1	--	--	--	--
24.	அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளைவிசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்	2	--	--	1	--
25.	பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO)-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்	1	--	--	--	--
	மொத்தம்	**50**	**6**	**1**	**69**	**18**

மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 144

(மாவட்ட நீதிபதிகள் -56, முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் -70, உரிமையியல் நீதிபதிகள்-18)

@ 2 நடமாடும் நீதிமன்றங்கள் உட்பட

* குற்றவியல் நடுவர் தரத்தில் 5 விரைவு நீதிமன்றங்கள், 2 நிலஅபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட

2021 செப்டம்பர் 7]

பிற்சேர்க்கை–3

(பத்தி 5 – ஐக் காண்க)

மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

வரிசை எண்	மாவட்டங்கள்	மாவட்ட நீதித்துறை										முதன்மை உரிமையியல் நீதித்துறை												உரிமையியல் நீதித்துறை											
		மாவட்ட நீதிபதிகள் நீதிமன்றம்	ஒருங்கிணைந்த நீதிமன்றம்	தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்/சார்நிலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	குடும்ப நீதிமன்றம்	தொழிலாளர் நீதிமன்றம்	வணிக நீதிமன்றம்	வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம்	மாவட்ட நீதிபதி நீதிமன்றம்	கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றம்	சார்நிலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	குடும்ப நீதிமன்றம்	தொழிலாளர் நீதிமன்றம்	வணிக நீதிமன்றம்	வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம்	மாவட்ட நீதிபதி நீதிமன்றம்	கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றம்	சார்நிலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்/சார்நிலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	குடும்ப நீதிமன்றம்	தொழிலாளர் நீதிமன்றம்	வணிக நீதிமன்றம்	வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம்	மாவட்ட நீதிபதி நீதிமன்றம்	கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றம்	சார்நிலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்/சார்நிலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்	குடும்ப நீதிமன்றம்	தொழிலாளர் நீதிமன்றம்	வணிக நீதிமன்றம்	வணிக மேல்முறையீட்டு நீதிமன்றம்
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26
1.	அரியலூர்	2	---	---	---	---	---	1	1	–	1	–	1	3	---	2	---	1	---	3	5	---	---	---	1
2.	கோயம்புத்தூர்	5	---	1	2	1*	2##	2	1	–	1	1	1	7	1	---	1	1	2	10	13	3#	1	1	2
3.	கடலூர்	4	1	---	1	---	---	1	1	1	1	–	1	4	1	1	–	1	---	10	10	1#	1	1	4
4.	தருமபுரி	2	---	---	---	---	---	1	1	–	1	–	1	4	1	---	---	1	---	4	5	2#	1	–	1
5.	திண்டுக்கல்	2	1	---	---	---	---	2###	1	–	1	–	1	5	1	---	---	1	---	6	6	2#	–	1	4
6.	ஈரோடு	5	---	---	---	---	---	1	1	1	1	–	1	7	1	---	---	1	1	8	9	3#	1	1	1
7.	காஞ்சிபுரம்	3	---	---	1	---	---	2###	1	–	1	1	1	7	–	---	---	1	---	8	11	3#	–	1	3
8.	கன்னியாகுமரி	3	---	---	---	---	---	2###	1	–	1	1	1	7	–	---	---	1	---	9	8	3#	–	–	1
9.	கரூர்	1	---	---	---	---	---	1	1	–	1	–	1	3	–	---	---	1	---	3	4	2#	1	–	2
10.	கிருஷ்ணகிரி	3	---	---	1	---	---	1	1	1	1	–	1	6	1	---	---	1	---	3	4	2#	1	–	3
11.	மதுரை	6	1#	1 **	1	3*	2##	1	1	1	1	1	2	8	1	---	1	1	2	7	11	3#	1	1	2
12.	நாகப்பட்டினம்	2	---	---	---	---	---	1	1	–	1	1	1	3	–	---	---	1	---	4	5	3#	–	–	2

பிற்சேர்க்கை-3 ன் தொடர்ச்சி

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26
13.	நாமக்கல்	2	1	--	--	--	--	1	1	–	1	–	1	5	–	--	--	1	--	6	7	2#	1	1	–
14.	நீலகிரி	1	--	--	1	--	--	1	1	–	1	–	--	3	–	--	--	1	--	3	3	2#	1	–	2
15.	பெரம்பலூர்	1	1	--	--	--	--	1	1	–	1	–	1	1	–	--	--	1	--	2	2	1#	1	–	2
16.	புதுக்கோட்டை	2	1	--	--	1*	--	--	1	–	1	–	1	3	–	--	--	1	--	3	4	1#	–	–	4
17.	இராமநாதபுரம்	2	1	--	--	--	--	2###	1	–	1	–	1	3	–	--	--	1	--	3	4	1#	1	–	4
18.	சேலம்	4	--	--	1	1*	--	2###	1	1	1	1	1	7	2	--	1	1	1	10	13	3#	1	1	2
19.	சிவகங்கை	2	1	--	--	--	--	1	1	–	1	1	1	3	–	--	1	1	--	4	3	2#	–	–	6
20.	தஞ்சாவூர்	4	1*#	--	1	1*	--	2###	1	1	1	1	2	5	1	--	--	1	--	5	7	3#	1	–	3
21.	தேனி	2	1	--	--	--	--	2###	1	–	1	–	1	3	–	--	--	1	--	5	5	3#	1	–	–
22.	தூத்துக்குடி	3	1	--	--	--	--	1	1	–	1	1	1	3	–	--	--	1	1	6	9	2	1	–	1
23.	திருச்சி	3	1*#	--	1	--	--	1	1	1	1	–	1	8	1	--	1	1	1	10	10	1#	1	1	1
24.	திருநெல்வேலி	4	1*#	--	1	--	--	2###	1	–	1	1	1	8	1	--	1	1	1	13	12	1#	1	1	4
25.	திருப்பூர்	4	–	–	–	–	–	1	1	1	1	–	1	7	–	–	–	1	1	7	10	2#	1	–	2
26.	திருவள்ளூர்	5	--	--	--	--	--	1	1	1	1	–	1	5	1	1	--	1	--	8	9	3	1	–	4
27.	திருவண்ணாமலை	2	1	--	--	--	--	2###	1	–	1	1	1	5	1	--	--	1	--	8	7	2#	–	–	2
28.	திருவாரூர்	1	–	--	--	--	--	1	1	–	1	–	1	2	–	--	--	1	--	3	4	2#	–	–	3
29.	வேலூர்	4	1	--	2	--	--	2###	1	–	1	1	1	7	1**	2	--	1	1	10	15	2#	–	–	4
30.	விழுப்புரம்	4	1	--	--	1	--	2###	1	1	1	1	1	9	3	--	1	1	--	15	11	2#	1	1	2
31.	விருதுநகர்	3	1	--	--	--	--	1	1	–	1	1	1	6	–	--	--	1	--	5	8	2#	1	–	2
	மொத்தம்	91	17	2	13	8	4	42	31	10	31	15	32	162	18	6	7	31	11	201	234	64	21	10	75
		மாவட்ட நீதிபதி -264											முதுநிலை உரிமையியல் நீதிபதி- 267							உரிமையியல் நீதிபதி - 605					
		மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 1136																							

* இன்றியமையா பொருட்கள் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு தனி நீதிமன்றம் உட்பட

\# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)

** இனக் கலவர வழக்கு தொடர்பான நீதிமன்றம்

\## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட

*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்

###\# மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட

*# குடியுரிமை பாதுகாப்பு சட்ட தனி நீதிமன்றம்

பிற்சேர்க்கை-4

(பத்தி 8.24 -ஐக் காண்க.)

நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

வ எண்	மாவட்டத்தின் பெயர்	இடம்	நீதிமன்றங்களின் எண்ணிக்கை
1.	சென்னை	சென்னை மாநகரம்	2
2.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	1
3.	கடலூர்	கடலூர்	1
4.	தருமபுரி	தருமபுரி	1
5.	ஈரோடு	ஈரோடு	1
6.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம், செங்கல்பட்டு	2
7.	கரூர்	கரூர்	1
8.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி	1
9.	மதுரை	மதுரை மாநகரம்	1
10.	நாமக்கல்	நாமக்கல்	1
11.	பெரம்பலூர்	பெரம்பலூர்	1
12.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை	1
13.	இராமநாதபுரம்	இராமநாதபுரம்	1

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	இடம்	நீதிமன்றங்களின் எண்ணிக்கை
14.	சேலம்	சேலம் மாநகரம்	1
15.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	1
16.	நீலகிரி	உதகமண்டலம்	1
17.	தேனி	தேனி	1
18.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி மாநகரம்	1
19.	தூத்துக்குடி	தூத்துக்குடி	1
20.	திருநெல்வேலி	திருநெல்வேலி மாநகரம்	1
21.	திருப்பூர்	திருப்பூர்	1
22.	திருவள்ளூர்	திருவள்ளூர்	1
23.	விழுப்புரம்	விழுப்புரம்	1
24.	விருதுநகர்	விருதுநகர்	1
		மொத்தம்	**26**

பிற்சேர்க்கை-5

(பத்தி 10-ஐக் காண்க)

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயத்தில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

வ. எண்	ஆண்டு	*உரிமையியல் வழக்குகள்*				*குற்றவியல் வழக்குகள்*				நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள்
		ஆரம்ப இருப்பு	புது வழக்குகள்	தீர்க்கப் பட்டவை	நிலுவை	ஆரம்ப இருப்பு	புது வழக்குகள்	தீர்க்கப் பட்டவை	நிலுவை	
1.	2016 #	175664	63598	54922	**184309**	20282	33145	32984	**20454**	204763
2.	2017 #	184309	53860	53066	**188262**	20454	34776	34108	**21122**	209384
3.	2018	188262	55540	60699	**183103**	21122	36154	36366	**20910**	204013
4.	2019	183103	59714	72648	**170169**	20910	40470	41061	**20319**	190488
5.	2020	170169	32204	38806	**163567**	20319	25613	26537	**19395**	182962

சரிபார்த்ததற்கு பின்

பிற்சேர்க்கை - 6

(பத்தி 10- ஐக் காண்க)

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

வ. எண்	ஆண்டு	*உரிமையியல் வழக்குகள்*				*குற்றவியல் வழக்குகள்*				நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள்
		ஆரம்ப இருப்பு	புது வழக்குகள்	தீர்க்கப் பட்டவை	நிலுவை	ஆரம்ப இருப்பு	புது வழக்குகள்	தீர்க்கப் பட்டவை	நிலுவை	
1.	2016	74469	34124	30317	**78276**	14013	27346	26783	**14576**	92852
2.	2017	78276	33596	33835	**78037**	14576	21554	21075	**15055**	93092
3.	2018	78037	34622	34465	**78194**	15055	26293	30551	**10797**	88991
4.	2019	78194	35972	39347	**74819**	10797	22706	26088	**7415**	82234
5.	2020	74819	25860	22058	**78621**	7415	18604	18185	**7834**	86455

பிற்சேர்க்கை -7

(பத்தி 10– ஐக் காண்க)

மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள், தீர்க்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் குறித்த அட்டவணை

வ எண்	ஆண்டு	*உரிமையியல் வழக்குகள்*				*குற்றவியல் வழக்குகள்*				நிலுவையில் உள்ள மொத்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள்
		ஆரம்ப இருப்பு	புது வழக்குகள்	தீர்க்கப் பட்டவை	நிலுவை	ஆரம்ப இருப்பு	புது வழக்குகள்	தீர்க்கப் பட்டவை	நிலுவை	
1.	2016 #	651697	305192	333912	**620808**	431096	704008	683199	**450558**	1071366
2.	2017 #	621039	327844	338994	**609947**	451033	681227	676328	**455931**	1065878
3.	2018 #	609947	340021	332950	**616179**	455931	585706	573234	**468107**	1084286
4.	2019 #	616179	356201	323026	**648084**	468107	547719	526214	**489600**	1137684
5.	2020 #	647805	219318	148649	**717710**	489527	338029	281118	**546048**	1263758

சரிபார்த்ததற்கு பின்

****

2021 செப்டம்பர் 7]

இணைப்பு-II

(100 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 24-சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

I. முன்னுரை

மாநில அரசின்கீழ் இயங்கிவரும் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை, குற்றவியல் நீதியமைப்பு முறையின் முக்கிய கூறாக விளங்குவதுடன், பொறுப்பான, அமைதியான, பாதுகாப்பான சமுதாயத்தை பராமரிக்கும் பணியையும் மற்றும் பாதுகாக்கும் மிகக் கடுமையான பணியையும், நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டனைகளை செயல்படுத்துவது, சிறைவாசிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், சிறைவாசிகளை தனிமனித கண்ணியத்துடன் நடத்துவதன்மூலம் அவர்களின் சமூகப் பொறுப்புணர்வை மேம்படுத்துவதன் மூலமும் செயல்படுத்துகிறது.

குற்றவாளிகள் தண்டனையை அனுபவிப்பது, அவர்களின் சீர்திருத்தம், மறுவாழ்வு, மீண்டும் குற்றம் செய்வதை தடுத்தல், குற்றவாளிகளைக் கண்காணித்தல் மற்றும் அவர்களைப் பொறுப்பான குடிமகன்களாக சமுதாயத்திற்குள் மறுபடியும் இணைந்திட வழிவகை செய்வது ஆகிய நோக்கங்களை உள்ளடக்கியது சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறையாகும். மேலும் சிறைவாச காலத்தில் அவர்கள் சட்டத்தை மதிப்பது மட்டுமல்லாமல் விடுதலைக்கு பின்னர் தன்னிறைவை அடையவும் உதவுகிறது.

சிறைவாசிகளுக்கு புதுமையான மறுவாழ்வுத் திட்டங்கள், சிறைதொழிற்கூடங்களில் பல்வேறு வகையான திறன்சார் பயிற்சிகள் அளிப்பது ஆகியவற்றின்மூலம் அவர்கள் விடுதலைக்குப் பின்னர், மனித சமுதாயத்தில், சுதந்திரமாகவும், கண்ணியமாகவும், தன்னிறைவு பெற்று வாழ வழிவகை செய்கிறது.

சீர்திருத்த நிருவாக அமைப்பு, அதன் தற்போதைய தேவை, பாதுகாப்பு, ஒழுங்கு மற்றும் சிறைத் துறையில் தற்போதுநடைபெறும்

[*2021 செப்டம்பர் 7*

சீர்திருத்தம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

II. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின்கீழ் 142 சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றுள் மத்திய சிறைச்சாலைகள் 9, பெண்களுக்கான தனிச் சிறைகள் 5, மாவட்டச் சிறைகள் 14, ஆண்களுக்கான கிளைச் சிறைகள் 89, பெண்களுக்கான கிளைச் சிறைகள் 7, ஆண்களுக்கான தனிக் கிளைச் சிறை 1, பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் 2, கிளைச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள் 12 மற்றும் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் 3 ஆகியவை அடங்கும்.

காவல் துறை இயக்குநர்/தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை இயக்குநரின் தரத்தில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி ஒருவரின் தலைமையில், உள்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இத்துறை இயங்குகிறது. இவருக்கு உதவியாக சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஐந்து சரகங்கள் ஒவ்வொன்றிலும் சிறைத் துறை துணைத் தலைவர்களும், தலைமை அலுவலகத்தில் சிறைத் துறை துணைத் தலைவர் அவர்களும் உள்ளனர். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிருவாக கட்டமைப்பு பிற்சேர்க்கை-I-ல் வழங்கப்பட்டுள்ளது.

சிறைக் கண்காணிப்பாளர்களின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் மத்திய சிறைகளும், அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. புழல், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச் சிறைகள் பெண் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பெண்கள் தனிச் சிறைகள் பெண் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. மாவட்ட சிறைக் கண்காணிப்பாளராக பணிபுரியும் கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்

2021 செப்டம்பர் 7]

ஆகியவற்றை சிறைக் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிட உதவி புரிகின்றனர்.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் சிறை அலுவலர்/துணை சிறை அலுவலர்/உதவி சிறை அலுவலர்/முதல் தலைமை சிறைக் காவலர்/முதல் நிலை சிறைக் காவலர்/இரண்டாம் நிலைக் சிறைக் காவலர்/ தொழில்நுட்பப் பணியாளர்கள்/ தொழில்நுட்பமல்லாத பணியாளர்கள்/சீர்திருத்தப் பணியாளர்கள்/ மருத்துவ மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர்.

31-3-2021 அன்று சிறைத் துறை பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை *5,452* ஆகும்.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து சிறைகளின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி *23,592* ஆகும். சிறை வாரியான அங்கீகரிக்கப்பட்ட இடவசதி பிற்சேர்க்கை-II-ல் வழங்கப்பட்டுள்ளது.

III. சிறைகளின் வகைப்பாடு

மத்திய சிறையில் உள்ள வெவ்வேறு பகுதிகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் மூன்று மாதங்களுக்குமேல் தண்டனை பெற்றவர்கள், பெருங்குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள்,கொடுங்குற்றவாளிகள்,தொடர்ந்துகுற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் அதிக ஊறு விளைவிக்கக் கூடியவர்கள், கடன் பெற்று செலுத்த இயலாமல் சிறைப்படும் சிறைவாசிகள், தடுப்புக் காவல் மற்றும் நீதிமன்ற காவல்/விசாரணை சிறைவாசிகள் என முறைப்படி வகைப்படுத்தப்பட்டு, அந்த வகைப்பாட்டின்படி சிறைவாசிகள் தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். வெளிநாட்டைச் சார்ந்த நீதிமன்ற காவல்/விசாரணை சிறைவாசிகள் சென்னை புழல் மத்திய சிறை வளாகத்தில் வைக்கப்படுகின்றனர். மாவட்ட நீதிமன்றங்களால் மூன்று மாத காலத்திற்கும் குறைவான தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மற்றும் விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் மட்டுமே அந்தந்த மாவட்டச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சிறு குற்றங்கள் புரிந்த விசாரணை சிறைவாசிகள் மட்டும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர்.

பெண்களுக்கான தனிச் சிறைகளில் பெண் சிறைவாசிகள் மட்டுமே அடைக்கப்படுகின்றனர். கடுங்குற்றங்கள் புரிந்த பெண் சிறைவாசிகள் மாநிலத்தில் உள்ள ஐந்து பெண்கள் தனிச் சிறைகளில்

[*2021 செப்டம்பர் 7*

வைக்கப்படுகின்றனர். சாதாரண குற்றங்கள் புரிந்த நீதிமன்ற காவல் மற்றும் விசாரணை பெண் சிறைவாசிகள் பெண்களுக்கான தனிச் கிளைச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் வைக்கப்பட்டு, பெண் பணியாளர்களால் மட்டும் பாதுகாக்கப்படுகின்றனர்.

18 முதல் 21 வயதுக்குட்பட்ட, தண்டனைப் பெற்ற வளரிளம் குற்றவாளிகள், புதுக்கோட்டையில் உள்ள மாவட்டச் சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். இதர விசாரணை/காவல் வளரிளம் குற்றவாளிகள் எனைய 11 இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் வைக்கப்படுகின்றனர்.

IV. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் இயங்கிவரும் பிரிவுகள்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில், கீழ்க்காணும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

i) நன்னடத்தைப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் தலைமையின்கீழ் 64 நன்னடத்தை அலுவலர்களையும், 12 மண்டல நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டு செயல்படுகிறது. நன்னடத்தை அலுவலர்கள் நீதிமன்றத்திற்காக குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்கள் வாழ்க்கை நிலைகள் குறித்து விசாரணை செய்கிறார்கள். அவர்கள் நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளைக் கண்காணித்து அவர்களின் மறுவாழ்வையும் கவனிக்கின்றனர். மேலும், முதன்முறையாக குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளித்து, சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக சில நிபந்தனைகளின் அடிப்படையில் நன்னடத்தையின் பேரில் அவர்களை விடுவிப்பது அவர்களுடைய முக்கியமான பணியாகும். நன்னடத்தை அலுவலர்கள் சிறைவாசிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து செயல்பட்டு வருகின்றனர். காவல் நிலைய சிறைவைப்பு அறைகளில் மனித உரிமை மீறல் எதும் இல்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு அவற்றைப் பார்வையிடுமாறும் நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

ii) நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணி பிரிவு

நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணி பிரிவு, சிறைவாசிகள் மற்றும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறைப் பணியாளர்களின்

2021 செப்டம்பர் 7]

நடவடிக்கைகளைக் கண்காணித்து சிறை நிருவாகத்தினை திறம்படச் செயல்படுத்த முக்கிய மற்றும் கூர்வுணர்வுடைய தகவல்களை சேகரித்தளிப்பதுடன், நுண்ணறிவுத் தகவல்களை இதர புலனாய்வு அமைப்புகளுடன் பரிமாற்றமும் செய்ய உருவாக்கப்பட்டது. காவல் துறையிலிருந்து மாற்றுப் பணியின்மூலம் பணியமர்த்தப்பட்ட 20 அதிகாரிகளையும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையைச் சேர்ந்த 13 அதிகாரிகளையும் உள்ளடக்கிய நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணி பிரிவு ஒன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ளது.

iii) சட்ட ஆலோசனைப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை அலுவலகத்தில் சட்ட ஆலோனைகளை வழங்கிடவும், நீதிமன்ற வழக்குகளை நிருவகிப்பதில் உதவிடவும், குற்ற வழக்குகள் தொடர்புடைய சட்ட ஆலோசகரின் தலைமையில் "சட்ட ஆலோசனைப் பிரிவு" தோற்றுவிக்கப்பட்டு, அரசு உதவி வழக்கு நடத்துநர் (தரம்-I) என்ற நிலையில் உள்ள வழக்குரைஞர், குற்ற வழக்கு தொடர்பு துறை இயக்குநர் அலுவலகத்தின்மூலம் நிரப்பப்பட்டு இயங்கி வருகிறது.

iv) தொழில்நுட்பப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள நவீன தொழில்நுட்பக் கருவிகளை சிறந்த முறையில் பராமரித்திட "தொழில்நுட்பப் பிரிவு" தோற்றுவிக்கப்பட்டு அப்பிரிவு ஓர் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) மற்றும் 10 சார்பு ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) உள்ளடக்கிய பணியாளர்களைக் கொண்டு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் தலைமையிடம் மற்றும் அனைத்து மத்திய சிறைகளிலும் செயல்பட்டு வருகிறது.

v) மோட்டார் வாகனப் பிரிவு

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள வாகனங்களைப் பராமரிப்பதற்காகவும், வாகன ஓட்டுநர்களின் பணிகளை மேற்பார்வையிடுவதற்காகவும், "மோட்டார் வாகனப் பிரிவு" தோற்றுவிக்கப்பட்டு, காப்பு காவல் ஆய்வாளர் (வகை-2) தலைமையில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது.

[2021 செப்டம்பர் 7

V. மனிதவள மேம்பாடு

பணியாளர் தேர்வு

இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் 2020 ஆம் ஆண்டிற்கு 119 (112 ஆண்கள், 7 பெண்கள்) இரண்டாம் நிலை சிறைக் காவலர் நியமனத்திற்கு எழுத்து தேர்வு நடத்தப்பட்டுள்ளது, தகுதியான நபர்களுக்கான காவல் துறை அறிக்கை மற்றும் மருத்துவ பரிசோதனை அறிக்கை பெறப்பட்ட பின்னர், இரண்டாம் நிலை சிறைக் காவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு, திருச்சி சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் அடிப்படை பயிற்சி வழங்கப்படும்.

சிறை அலுவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பதவிக்கு நேரடி நியமன முறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். தற்போது ஒரு சிறை அலுவலர் பதவியில், ஒரு பணியிடம் நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உதவி சிறை அலுவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) பதவிக்கு நேரடி நியமன முறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

பயிற்சி

i) சிறைக் காவலர் பயிற்சி

வேலூர், மத்திய சிறைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளியில், 130 சிறைக் காவலர்களுக்கு ஒரே நேரத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கும் வசதிகள் கொண்ட காவலர் பயிற்சிப் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இப்பள்ளி தேவையான பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டுள்ளது.

தேர்வுசெய்யப்படும்காவலர்களுக்குஉடற்பயிற்சி,ஒழுங்குமுறை, மேலாண்மை மற்றும் சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் ஆறு

2021 செப்டம்பர் 7]

மாதகால அடிப்படைப் பயிற்சிகள், நவீன ஆயுதங்கள் மற்றும் சாதனங்களைப் பேணி கையாள்வதற்கான பயிற்சிகளும், பணியின் தன்மையினை அறிந்து கொள்வதற்காக, மத்திய சிறைகளில் ஒரு மாத காலம் நேரடி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், சிறைவாசிகளுக்கான மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு பயிற்சியும் கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை, மருதம் காவல் துறை அதிரடிப்படை பயிற்சிப் பள்ளியில் வழங்கப்படும், ஆயுதமின்றி தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றை செயலிழக்கச் செய்தல், அதிரடிப் படைக்கான பயிற்சி மற்றும் இதர பயிற்சிகள் ஆகியவை சிறைக் காவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மேலும், சிறைக்காவலர்களுக்கு குத்துச் சண்டை, ஜுடோ மற்றும் மல்யுத்தம் ஆகியவற்றின் நுணுக்கங்களை ஒருங்கேகொண்ட "க்ரவ் மேகா" என்ற ஆயுதமின்றி தனித்துப் போரிடும் தற்காப்பு முறைப் பயிற்சியும் வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் அளிக்கப்படுகிறது. இத்தகைய பயிற்சித் திட்டங்கள் சிறைக் காவலர்களின் மனஉறுதியை மேம்படுத்துவதுடன் அவசரகால சூழ்நிலைகளை அவர்கள் திறம்பட சமாளிக்கவும் எதுவாக அமைகின்றன.

மேலும், புதிதாக தேர்வு செய்யப்பட்டு, நியமனம் செய்யப்பட உள்ள 119 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு (112 ஆண்கள் மற்றும் 7 பெண்கள்) திருச்சி சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் 2021 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்படும்.

உதவி சிறை அலுவலர்கள் மற்றும் துணை சிறை அலுவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவேளியில் புத்தாக்கப் பயிற்சிகள் வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி பள்ளியில் அளிக்கப்பட்டு வருகின்றன.

ii) சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA), வேலூர்

சிறை மற்றும் சீர்திருத்த நிருவாகப் பயிற்சியகம் (APCA) என்ற ஐந்து தென்னக மாநிலங்களின் கூட்டுப் பயிற்சி மையம் வேலூரில் தொடங்கப்பட்டது. இந்த மாநில கூட்டுப் பயிற்சி மையத்தில் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய ஐந்து தென் மாநிலங்களைச் சார்ந்த

[*2021 செப்டம்பர் 7*

சிறைத் துறை அலுவலர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் சீர்திருத்தும் முறைகள் மற்றும் சிறை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுகிறது வருகிறது. இப்பயிற்சியகத்தின் நடைமுறை செலவினத்தை ஐந்து தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன.

தற்போது வேலூரில் உள்ள இந்தப் பயிற்சி மையத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 2020 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 24 உதவி சிறை அலுவலர்களில், 18 உதவி சிறை அலுவலர்கள் 9.5 மாதகால பயிற்சியினை முடித்துள்ளனர். மீதமுள்ள 6 உதவி சிறை அலுவலர்கள் 9 மாதகால பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சியகத்தில் 15-4-2021 வரை தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 1,683 சிறைத் துறை அலுவலர்கள் வெற்றிகரமாக பயிற்சி பெற்றுள்ளனர்.

iii) பிற பயிற்சிகள்

புதுடில்லியில் உள்ள காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் தேசிய குற்றவியல் மற்றும் தடயவியல் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் மற்றும் பிற மாநிலங்களில் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை குறித்து நடத்தப்படும் தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கு துறை சார்ந்த அலுவலர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனர். இந்நிறுவனங்களில் 2020-2021 ஆம் ஆண்டில், 67 அலுவலர்கள் பல்வேறு தேசிய அளவிலான பயிற்சித் திட்டங்களில் இணைய வழியில் பயிற்சி பெற்றுள்ளனர்.

VI. சிறைப் பாதுகாப்பு

i) மறைகாணி (CCTV Camera)

257 மறைகாணிகள் (CCTV) அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள், இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் சிறைவாசிகள் மற்றும் பார்வையாளர் நடமாட்டத்தை கண்காணிக்கும் வகையில் முக்கிய இடங்களில் மறைகாணிகள் (CCTV) நிறுவப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 7]

மேலும் கூடுதலாக 100 கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் ஐபி கேமராக்கள் (Internet Protocol Cameras) மற்றும் சிறைவாசிகளின் அனைத்து விவரங்கள் உள்ளடக்கிய மின்னணு அட்டை வழங்கப்பட்டு, அதனை 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டையில் சிறை மேலாண்மை திட்டத்துடன் ஒருங்கிணைத்து, எல்காட் நிறுவனம்மூலம் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதற்கான ஒப்பந்த பணிகள் நடைபெற்று வருகிறது.

ii) வாக்கி டாக்கி கருவிகள்

அனைத்து மத்திய சிறைகள், மாவட்ட சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் பெண்கள் தனிச் சிறை, புழல், வேலூர், திருச்சி ஆகியவற்றில் உபரி மின்கலத்துடன்கூடிய 380 புதிய வாக்கி டாக்கி கருவிகள் வாங்கப்பட்டு, அவை நன்றாக இயங்கி வருகின்றன.

மத்திய சிறைகள் புழல்—I, II, திருச்சி மற்றும் கோயம்புத்தூரில் 4 ரிப்பிட்டர் செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன.

iii) செல்லிடத்து தொலை பேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள்

சிறைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கத்துடன், மாநிலத்தில் 9 மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் பாதுகாப்பு தொகுதிகளில் செல்லிடத்துத் தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் உயர்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், புழல் I மற்றும் II, பாளையங்கோட்டை, மதுரை, திருச்சி ஆகிய மத்திய சிறைகளிலும் புழல், வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், மற்றும் மதுரையில் உள்ள 5 பெண்கள் தனிச் சிறைகளிலும் கூடுதலாக 12 கருவிகள் ரூ.10.10 கோடி செலவில் அமைத்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திட ஒன்றிய அரசின் அமைச்சரவை செயலகத்தின் ஒப்புதல் பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

iv) அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் அமைப்பினை நிறுவுதல் (Security Poles)

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின்கீழ் சிறைகளின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில், 5 மத்திய சிறைகள் மற்றும்

[2021 செப்டம்பர் 7

3 பெண்கள் தனிச் சிறைகளில் 12 அலைபேசி மற்றும் இரும்பு உலோகம் கண்டறியும் பாதுகாப்புக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

v) உயர் பாதுகாப்பு தொகுதிகள்

உயர் பாதுகாப்பு தொகுதிகளில், முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளில் தொடர்புடைய கடுங்குற்றங்கள் புரிந்த சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். இச்சிறைவாசிகள் அனைவரும் தினசரி மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்களும் முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அனைத்து மத்திய சிறைகளிலும் உயர் பாதுகாப்பு தொகுதிகள் கட்டப்பட்டு உள்ளன. சிறைவாசிகளின் உரிமைக்கும் கண்ணியத்திற்கும் குறைவு ஏற்படாத வண்ணம் சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் சிறையிலிருந்து தப்பிப்பதைத் தடுப்பதற்கு சிறை நிருவாகத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்த உயர் பாதுகாப்பு தொகுதிகள் சிறைக் காவலர்களால் நன்கு கண்காணிக்கப்படுகின்றன. கடலூர் மத்திய சிறை தவிர, அனைத்து மத்திய சிறைகளின் வெளிப்புற பாதுகாப்பு காவல் துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தச் சிறைகளில் எந்த அசம்பாவித நிகழ்வும் ஏற்படாமல் தடுக்கும்பொருட்டு, நாச வேலைகளைத் தடுத்தல் குறித்த பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்திட, இத்துறையில் மோப்ப நாய் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

vi) ஊடுகதிர் அலகிடல் கருவிகள்

போதைப் பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட பொருட்கள் சிறையினுள் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டு 9 மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மதுரை, கோயம்புத்தூர், புழல், வேலூர், திருச்சி மற்றும் மாவட்ட சிறை (ம) இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் ஊடுகதிர் அலகிடல் கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

vii) காணொளி கலந்துரையாடல் வசதிகள்

வழிக்காவலின்போது சிறைவாசிகள் தப்பித்தல் மற்றும் சிறைவாசிகள் மீதான தாக்குதல்கள் போன்ற அசம்பாவித நிகழ்வுகள்

2021 செப்டம்பர் 7]

ஏற்படாமல் தடுக்கவும், வழிக்காவலுக்கும் போக்குவரத்திற்கும் ஆகும் செலவைக் குறைக்கவும், சிறைவாசிகளை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல், நீதிமன்றக் காவல் காணொளி கலந்துரையாடல்மூலம் நீட்டிக்கப்பதற்காக, சிறைகளையும் நீதிமன்ற வளாகங்களையும் இணைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது, இத்திட்டம் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறை வளாகங்களை உள்ளடக்கிய 50 இடங்களிலும், 42 சிறைகளிலும், 403 நீதிமன்றங்களை உள்ளடக்கிய 180 நீதிமன்ற வளாகங்களிலும் செயல்பாட்டில் உள்ளது. எனவே, தற்போது விசாரணை சிறைவாசிகளின் நீதிமன்றக் காவல், காணொளிக் காட்சிகளின்மூலம் நீட்டிக்கப்படுகின்றன.

VII. பணியாளர் நலன்

i) காவல் துறை சிறப்பு அங்காடிகளில் மானிய விலையில் பொருட்கள் பெறுதல்

காவல் துறை சிறப்பு அங்காடிகளில் (Police Canteens) மானிய விலையில் வழங்கப்படும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சலுகை, காவல் துறையைச் சார்ந்த சீருடை/அமைச்சுப் பணியாளர்களைப் போன்று,சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணிபுரியும்/ஓய்வு பெற்ற/காலஞ்சென்ற சீருடை/ அமைச்சு மற்றும் இதர பணியாளர்களின் குடும்பங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ii) இடர் படி, உணவுக் கட்டணம், தையற் கட்டணம் மற்றும் சலவைப் படி

காவல் துறையினருக்கு இணையாக, வழங்கப்படும் இடர் படி இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு மாதம் ரூ.800/-ம், சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு மாதம் ரூ.900/-ம், வழங்கப்பட்டு வருகிறது.

சிறை வளாகத்தில் அவசர காலத்தில் பாதுகாப்பு மற்றும் கூட்டாக கைது செய்யப்படும் சிறைவாசிகளை சோதனை செய்யும் பணிகளில் ஈடுபடும் மத்திய சிறை மற்றும் மாவட்ட சிறைகளில் பணிபுரியும் இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணைச் சிறை

[2021 செப்டம்பர் 7

அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு சென்னை நகரத்தில் பத்து நாட்களுக்கு தலா ஒருவருக்கு ரூ.300/— வீதமும் இதர மாவட்டங்களில் ஆறு நாட்களுக்கு தலா ஒருவருக்கு ரூ.250/- வீதமும் உணவுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் உள்ள இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக்கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு இரண்டு சீருடை தைப்பதற்கு தையற் கட்டணமாக ஒருவருக்கு ஆண்டுதோறும் ரூ.1000/- (ஒன்றுக்கு ரூ.500/- வீதம்) வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு சலவைப் படி மாதம் ரூ.500/- வழங்கப்பட்டு வருகிறது.

iii) இரவு உணவுப் படி

சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் இரண்டாம். நிலை சிறைக் காவலர்கள் தொடங்கி முதல் தலைமை சிறைக் காவலர்கள் வரையிலான நிலையில் உள்ள சிறை பணியாளர்களுக்கு இரவு உணவுப் படியாக ஒரு நாளைக்கு ரூ.100/- வழங்கப்பட்டு வருகிறது.

iv) மிகை நேரப் பணி ஊதியம்

வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மிகை நேரப் பணி ஊதியமாக ரூ.200/- வழங்கப்படுகிறது.

v) மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைப் பணியாளர்களுக்கு நியாய விலைக் கடைகளின்மூலம் விலையில்லா அரிசியும், விற்பனை விலையில் 50 சதவிகித சலுகை விலையில் கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு ஆகியவை வழங்கப்படுகின்றன.

vi) குழுக் காப்பீட்டுத் திட்டம்

பணியில் இருக்கும்போது அல்லது விபத்தின் காரணமாக இறக்க நேரிடும் பணியாளர்களுக்கு சிறைகள் மற்றும் சீர்திருத்தத்

2021 செப்டம்பர் 7]

பணிகள் துறையினருக்கான குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காப்பீட்டுத் தொகையாக ரூ.2.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் சிறைத் துறை துணைத் தலைவர் முதல் இரண்டாம் நிலை சிறைக் காவலர் வரையிலான நிலையில் உள்ள சிறைகள் மற்றும் சீர்திருத்தத் பணிகள் துறை களப் பணியாளர்கள் பயன்பெறுவர்.

vii) தமிழ்நாடு சிறை சேம நல நிதிக்கு வழங்கப்படும் மானியத் தொகை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் பணியாற்றும் அரசிதழ் பதிவுறா பணியாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் தமிழ்நாடு சிறை நல நிதியின்கீழ் நிதி வழங்கப்பட்டு வருகிறது. ஆந்நல நிதியிலிருந்து அத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு கல்லூரிக் கல்வி, நெடுநாட்பட்ட கடுமையான நோய்கள் விபத்து காயங்கள் போன்றவற்றிற்கான மருத்துவ சிகிச்சை ஆகிய இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும் பணியாளர்கள் அவரது தகுதியான குடும்ப உறுப்பினரோ இறந்துவிட்டாலும் இத்திட்டத்திலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள நிதிக்கு இணை மானியமாக அரசால் ரூ.10.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

viii) கருணைத் தொகை வழங்குதல்

சிறைப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால், அவர் இறுதியாக பெற்ற ஊதியம் அவர் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வவூதியமாக அவருடைய சட்டபடியான வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர், தகுதியான குடும்ப ஓய்வூதியம் மட்டும் வழங்கப்படுகிறது.

மேலும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கூடுதலாக கருணைத் தொகை ரூ.2 இலட்சம் வழங்கப்படுகிறது. மரணம் போன்ற நேர்வுகள் தவிர, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு, அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகை, கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது:-

1.	நிரந்தர ஊனம்	ரூ.50,000/-
2.	படுகாயம்	ரூ.10,000/-
3.	சாதாரண காயம்	ரூ.5,000/-

[*2021 செப்டம்பர் 7*

ix) சிறைக் களப் பணியாளர்களுக்கு மழை மேலங்கிகள் (Rain coats) மற்றும் கொசு வலைகள் வழங்குதல்

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி மற்றும் திறந்தவெளிச் சிறைகள் ஆகியவற்றில் பணிபுரியும்களப் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 3 வருடத்திற்கு ஒரு முறை மழை மேலங்கிகளும் மற்றும் கொசு வலைகளும் வழங்கப்படுகின்றன.

x) பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல்

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் சிறைப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு வருடமும் 100 பணியாளர் குடியிருப்புகள் அரசால் கட்டித் தரப்பட்டு வருகிறது.

மத்திய சிறை, பாளையங்கோட்டை மற்றும் மதுரையில் பணிபுரிந்துவரும் சிறை அலுவலர்களுக்கு 4 குடியிருப்புகளை கட்ட ரூ.120.00 இலட்சம் செலவில் அரசால் ஆணையிடப்பட்டு, இப்பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி வாரிய கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

xi) பதக்கங்கள்

பணிக் காலத்தில் வீரதீரத்துடனும், போற்றத்தக்க வகையிலும் சிறந்த பணிப் பதிவுருவைப் பேணும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சீருடைப் பணியாளர்களின் திறமையை அங்கீகரித்து, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:-

தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைச் சேவைக்கான பதக்கம்-அண்ணா பதக்கம்

ஒவ்வோராண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் 10 சீருடைப் பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசு தொகையும் வழங்கப்படுகிறது:-

2021 செப்டம்பர் 7]

1.	*சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் ரூ.15,000/— வரை*	*ரூ.15,000/-*
2.	*உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர்*	*ரூ.10,000/-*
3.	*இரண்டாம் நிலை சிறைக் காவலர் முதல் தலைமை சிறைக் காவலர் வரை*	*ரூ.5,000/-*

தமிழ்நாடு முதலமைச்சரின் சிறை நற்பணிப் பதக்கம்-பொங்கல் பதக்கம்

ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 60 முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக அப்பதக்கமும், இதனைப் பெறுவோருக்கு மாதந்தோறும் ரூ.400/- பதக்கப் படியாக அரசால் பெற்று வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறுவோருக்கு இத்திட்டத்தின்கீழ் முறைமாதாந்திரப் படியாக வழங்கப்பட்டு வந்த ரூ.300/-க்கு பதிலாக, தற்போது, இப்பதக்கம் பெறுவோருக்கு, அவர்கள் எந்தப்பதவியிலிருந்தாலும், ரொக்கப் பரிசு ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்

ஆண்டுதோறும் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினரின் அப்பழுக்கற்ற பணியினைப் பாராட்டி, இப்பதக்கம் வழங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று 2 சிறைத் துறை பணியாளர்களும் மற்றும் 2021 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று 4 சிறைத் துறை பணியாளர்களும், இப்பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

xii) பணியாளர்களின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள கீழ்க்கண்ட மூத்த அலுவலர்களால் குறை தீர்ப்பு நாள் கூட்டங்கள் திட்டமிட்டபடி கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டு, சிறைப் பணியாளர்களின் குறைகள் களையப்படுகின்றன:-

1	காவல் துறை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர்	காலாண்டிற்கு ஒரு முறை
2.	சாக சிறைத் துறை துணை தலைவர்	மாதம் ஒருமுறை
3.	சிறை கண்காணிப்பாளர்கள்	வாரம் ஒருமுறை

குறை தீர்ப்பு கூட்டங்களின் போது பணியாளர்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் களைவதற்கு துரித நடவடிக்கைகள் மமேற்கொள்ளப்படுகிறது. இதைத் தவிர, காவல் துறை இயக்குநர்/ சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநர் சிறைகளில் ஆய்வு மேற்கொள்ளும்போதும், சிறைகளைப் பார்வையிடும் போதும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமையகத்திலும் பணியாளர்களால் அளிக்கப்படும் குறை தீர்ப்பு மனுக்களைப் பெற்றுக்கொள்கிறார்.

VIII. சிறைவாசிகளின் மறுவாழ்வு

I) உணவு மற்றும் உடை

அசைவ உணவு சாப்பிடும் அனைத்து சிறைவாசிகளுக்கும் வாரம் ஒரு முறை 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு, வாரம் ஒரு முறை உருளைக்கிழங்கு பொரியல், கேசரி மற்றும் ஒரு வாழைப்பழம் ஆகியனவும் வழங்கப்பட்டு வருகிறது. சமையலறையில் எவர்சில்வர் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல எவர்சில்வர் தள்ளுவண்டிகளும் பயன்படுத்தப்படுவதோடு, சிறைவாசிகளுக்கு உணவு வகைகள் எவர்சில்வர் தட்டுகளிலும் குவளைகளிலும் பரிமாறப்படுகின்றன.

நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவுகளாக பால், ரொட்டி, முட்டை மற்றும் கோழி இறைச்சி ஆகியன மருத்துவ அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகிறது.

மேற்படி உணவு முறை, தமிழ்நாடு சிறை விதிகள், 1983—ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி சத்தான மற்றும் சமச்சீரான உணவு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது.

சிறைவாசிகளுக்கு ரூ.50/— மதிப்பில் பொங்கல் பண்டிகை, குடியரசு தினம், சுதந்திர தினம் மற்றும் மகாத்மா காந்தி பிறந்த நாள் போன்ற நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 7]

நீண்டகாலமாக சிறைவாசிகளுக்கான உணவினை சமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த நிலக்கடலை எண்ணெய் கூடுதல் கொழுப்பைக் கொண்டுள்ளது என்பதால், இதனைத் தொடர்ந்து பயன்படுத்தினால் சிறைவாசிகளுக்கு பல்வேறு வகையான உடல்நலக் கேடுகள் ஏற்படலாம் என்பதால், அவர்களுக்கான உணவினைத் தயாரிக்க, வாரத்தில் திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெயையும், ஞாயிற்றுக்கிழமை நல்லெண்ணெயையும் உபயோகப்படுத்திட, அரசால் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் ஆடைகளும், படுக்கைகளும் தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் வரையறுக்கப்பட்டவாறு வழங்கப்படுகின்றன. சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள தண்டனை சிறைவாசிகளுக்கு ஒரேமாதிரியான டெரிகாட்டன் முழுக்கால் சட்டைகளும், அரைக்கை மேல்சட்டைகளும் பெரிய அளவிலான போர்வைகளும் வழங்கப்படுகின்றன.

விசாரணை சிறைவாசிகள் தமக்குத் தேவையான ஆடைகளை அவர்களே கொண்டுவர அனுமதிக்கப்படுகின்றனர். போதிய ஆடைகள் இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு மட்டும் அரசு செலவில் போதுமான ஆடைகள் வழங்கப்படுகின்றன.

ii) சிறைவாசிகளின் மருத்துவப் பாதுகாப்பு

சிறைவாசிகளுக்குப் போதுமான மருத்துவ வசதி அளிக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக சிறைவாசிகள் சிறையில் தண்டனையைக் கழிப்பது அவர்களின் மன ஒறுக்கத்தினை அதிகப்படுத்தி, அவர்களிடம் வன்முறை செயல்பாடு, மன அழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்களாக வெளிப்படுகின்றன. எனவே, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் மன இயல் நிபுணர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களது பணி, மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கும், வன்முறை செயலினை வெப்பபடுத்தும் குணமுடைய சிறைவாசிகளுக்கும், ஆலோசனை வழங்கி சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படுகிறது. மனநல ஆலோசனையானது, மன அழுத்தத்தால் அவதியுறும் சிறைவாசிகளின் மனதில் நம்பிக்கையை விளைவிப்பதால், தன்னம்பிக்கைமூலம் தற்கொலை

[*2021 செப்டம்பர் 7*

எண்ணம் அகற்றப்படுகிறது. மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளுக்கு, சென்னை அரசு மனநல காப்பகத்திலும், அரசு மருத்துவமனைகளில் உள்ள மனஇயல் நிபுணர்களைக் கொண்டும் தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மனதளவில் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளின் மனநலனை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு ஆற்றுப்படுத்துநர்களும் (Counsellors), ஒவ்வொரு பெண்கள் தனிச் சிறை மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றிக்கு தலா ஒரு ஆற்றுப்படுத்துநரும் (Counsellor) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனை வழங்குவதுடன், உடற்பயிற்சி, யோகா, தியானம், உள் மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 21 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அனைத்து சிறைகளிலும் செயல்பட்டு வரும் நூலகங்களிலிருந்து சிறைவாசிகள் புத்தகங்களைப் பெற்று, பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதிகள் பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் சிறைவாசிகளின் மன நலம் மேம்படவும் உதவுகின்றன.

iii) சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி

அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை வழங்கிட போதிய துணை மருத்துவ பணியாளர்கள் உதவியுடன்கூடிய அனுபவமிக்க மருத்துவர்களைக் கொண்ட சிறை மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன. தொடர் சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் சிறை மருத்துவமனைகளில் உள் நோயளியாக அனுமதிக்கப்படுகின்றனர்.

சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளை, வெளி மருத்துவமனைகளுக்கு கொண்டுச் செல்வதற்காக, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறைகள், பெண்கள் தனிக் கிளைச் சிறைகள் மற்றும் பெண்கள் கிளைச் சிறைகள் ஆகிய சிறைகளுக்கு அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 7]

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை, பெண்கள் தனிச் கிளைச் சிறை மற்றும் பெண்கள் கிளைச் சிறை, சிறை மருத்துவமனைகளிலும் மற்றும் 35 அவசர கால ஊர்திகளிலும் 21 வகையான உயிர் காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சிறைவாசிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதற்காக, மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள் (E.C.G.) இரத்தத்தை அஆய்வுசெய்யும் தானியங்கி கருவிகள், கண்பார்வை பரிசோதனை செய்யும் கருவிகள் (Opthalmoscope), இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கண்டறியும் கருவிகள் (Glucometer) மற்றும் எளிதில் எடுத்துச் செல்லச்கூடிய ஊடுகதிர் படமெடுக்கும் கருவிகள் (Portable X-Ray equipments) ஆகியன மத்திய சிறைகளுக்கு வழங்கப்பட் டுள்ளன. குறிப்பிட்ட உடல் உபாதை தொடர்பாக அனைத்து சிறைவாசிகளையும் பரிசோதிக்க எதுவாக குறித்த கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

சிறைவாசிகளுக்கு எய்ட்ஸ் நோய் தாக்கத்தினை கண்டறிய பரிசோதனை செய்வதற்காக அனைத்து மத்திய சிறைகளிலும் ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையம் (ICTC) நிறுவப்பட்டுள்ளது. உரிய கலந்தாய்வுக்குப் பின்னர், அனைத்து சிறைவாசிகளும் எச்.ஐ.வி (H.I.V.) பரிசோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர். நல வாழ்வு நடவடிக்கையாக சிறைகளில் புகை பிடித்தல் மற்றும் புகையிலை உபயோகித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு ரூ.43.68 இலட்சம் செலவில், சிறைவாசிகளிடையே ஒட்டுநோய் பரவுவதைத் தடுப்பதற்காக, கத்திமூலம் முகச்சவரம் செய்யும் முறை ஒழிக்கப்பட்டு, ஒருமுறை பயன்படுத்திய பின்னர் தூக்கி எறியக்கூடிய சவர ரேசர்கள் ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றிற்கு இரண்டு வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய நடவடிக்கைகள் மட்டுமின்றி சிறைவாசிகளைத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக தற்போதுள்ள சுகாதார வசதிகள் ரூ.3.60 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் 9 மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறை, புழல் மற்றும் திருச்சியில் ரூ.1.240.01 இலட்சம் செலவில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 7

பூவிருந்தவல்லி, கிளைச் சிறையில் ரூ.30.59 இலட்சம் செலவில் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

iv) குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் சிறைவாசிகள் நேர்காணல்

தமிழ்நாடு சிறை விதிகள், 1983-ல் குறிப்பிட்டுள்ள நடைமுறையினைப் பின்பற்றி சிறைவாசிகள் அவர்களது நெருங்கிய குடும்ப உறவினர்களுடன் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நேர்காணல் செய்திட விண்ணப்பிக்க விலையில்லா விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படுகின்றன,மேலும்இவ்விண்ணப்பப்படிவங்களை சிறைகள் மற்றும் சீர்திருத்தத் பணிகள் துறையின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வெகுதூரத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் எவ்வித இடையூறுமின்றி எளிதாக நேர்காணலுக்கு விண்ணப்பிக்க இந்த வசதி உதவுகிறது. சிறைவாசிகளை நேர்காணல் செய்வதற்கு தொலைபேசியின் வாயிலாகவும் முன் அனுமதி பெறலாம்.

v) மனித உரிமை

சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு அனைத்து சிறைகளிலும் அடிப்படை வசதிகளும், தேவைகளும் செய்து தரப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதில் அதிக முக்கியத்துவத்தினை உணர்த்திட, இப்பொருள் குறித்து சிறை அலுவலர்களுக்கு போதுமான கூர்ந்துணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கு அளிக்கப்படும் அனைத்துப் பயிற்சிகளிலும், புத்தாக்கப் பயிற்சிகளிலும்,சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களிலும் பக்குவப்படுத்தப்படுகின்றனர்.

சிறை நிருவாகம் மற்றும் சிறைவாசிகள் நடத்தப்படும் முறை குறித்து ஆய்வு செய்வதற்கு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் குறித்த கால இடைடுவளியில் சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவர்கள் நடத்தப்படும் விதத்தையும் அறிய மனித உரிமை ஆணையங்களின் உறுப்பினர்களும், மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதிகளும், தமிழகத்தின் முக்கியப் பிரமுகர்களும் சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிருவாகத்தை

2021 செப்டம்பர் 7]

பாராட்டியுள்ளனர். இவை தவிர, சிறைகளை திடீர் பார்வையிட்டு அங்கு மனித உரிமை மீறல்கள் ஏதேனும் உள்ளனவா என்று சோதனை செய்திட பொதுமக்களில் 62 நபர்கள் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளுக்கு வருகை புரிந்துள்ள தேசிய மற்றும் மாநில் மனித உரிமைகள் ஆணையங்களின் உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு நீதிபதிகளும் இம்மாநிலத்தின் சிறை நிருவாகத்தை பாராட்டி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

vi) பெண் சிறைவாசிகளின் நலன்

பெண் சிறைவாசிகள் பெண் உதவி மருத்துவரால் பரிசோதனை செய்யப்பட்டு, பரிசோதனைக் குறிப்புகள் மருத்துவ அறிக்கையில் பதிவு செய்யப்படுகின்றன. சிறையினுள் அனுமதிக்கப்படும்போதும் அதன் பின்னரும், கர்ப்பிணிப் பெண் சிறைவாசிகளின் அன்றாடத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பேறுகாலத்திற்கு முன்னரும் பின்னரும் ஒவ்வொருவருக்கும் தேவையான கவனம் செலுத்தப்படு கிறது. சிறைக்கு வெளியே பிரசவிக்க எதுவாக கர்ப்பிணி பெண் சிறைவாசிகளுக்கு அவசரகால விடுப்பு வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.

நடைமுறையில் உள்ள சிறை விதிகளின்படி, பெண் சிறைவாசிகளின் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் உறவினர்களிடம் ஒப்படைக்க இயலாத, தகுந்த அக்கறை செலுத்துவோர் எவரும் இல்லாத நிலையில் தாயுடன் ஒருக்க அனுமதிக்கப்படுகின்றனர். சிறையில் பிறந்து, கவனிப்போர் எவரும் இல்லாத நிலையில் உள்ள குழந்தைகள், 6 வயது வரை தாயுடன் சிறையில் இருப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

பெண் சிறைவாசிகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காக பெண்கள் தனிச் சிறைகளில் காப்பகம் மற்றும் வளர்ப்பிடம் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

பாலூட்டும் பெண் சிறைவாசிகள்மீது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு அரை லிட்டர் பால் வழங்கப்படுகிறது. வளரும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஊட்டச்சத்து அகியவற்றை கருத்தில்கொண்டு, பெண்

[*2021 செப்டம்பர் 7*

சிறைவாசிகளுடன் உள்ள ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், சத்தான குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

vii) சிறப்பு நேர்காணல்

பள்ளி, கல்லூரிக்கு செல்லும் சிறைவாசிகளின் குழந்தைகள் மற்றும் வேலைக்கு செல்லும் சிறைவாசிகளின் கணவன் அல்லது மனைவியின் வசதிக்காக ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு நேர்காணல் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற அனைத்து நாட்களிலும், சிறைவாசிகளை வழக்குரைஞர்கள் நேர்காணல் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சனிக்கிழமையன்று வழக்குரைஞர்களுக்காக பிற்பகல் 1.00 மணிவரை சிறப்பு நேர்காணல் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

viii) சிறை தொழிற்கூடங்களில் பணிபுரியும் சிறைவாசிகளின் ஊதியம்

தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கிடையே உழைப்பின் அவசியத்தை மனதில் ஆழப் பதிய வைக்க ஏதுவாக சிறை தொழிற்கூடப் பணிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டு, அத்தகைய பணியில் அவர்கள் பெற்ற திறனின் அடிப்படையில் செயற்திறன் பெற்றோர், ஓரளவு செயற்திறன் பெற்றோர், செயற்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டு நாளொன்றுக்கு முறையே ரூ.200/-, ரூ.180/- மற்றும் ரூ.160/- ஊதியமாக வழங்கப்படுகிறது.

ix) கல்வி மற்றும் தொழிற்கல்வி

மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள்

தமிழ்நாடு அரசின் கல்வித் துறையும் ஒன்றிய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், ஒருங்கிணைந்து இதற்கென திட்டம் ஒன்றைத் தொடங்கி, சிறைவாசிகள் 100 சதவிகித கல்வி அறிவை அடையும் பொருட்டு, செயல்பட்டு வருகின்றன. இந்திரா

2021 செப்டம்பர் 7]

காந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழகமும் சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பிரிவுகளை நடத்தி வருகிறது.

சிறைவாசிகள் ஏற்கெனவே பெற்றுள்ள கல்வி அறிவின் அடிப்படையில் (i) ஆரம்பக் கல்வி, (ii) தொடக்கக்கல்வி, (iii) மேல்நிலைக் கல்வி, (iv) திறந்தவைளி பல்கலைக்கழகங்கள் மூலமாக பட்டப்படிப்பும் முதுநிலைப் பட்டப் படிப்பும் (v) சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு என வகைப்படுத்தப்படுகிறது. தகுதிபெற்ற சிறைவாசிகளைக் கொண்டு சிறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைகளிலும் உள்ள எழுதப்படிக்க தெரியாத சிறைவாசிகளுக்கு சிறப்பு கல்வியறிவு பணி திட்டத்தின் மூலமாக அடிப்படை கல்வியறிவு தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் மூலமாகவழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 1,623 எழுதப்படிக்கத் தெரியாத சிறைவாசிகளுக்கு அடிப்படை கல்வியறிவு வழங்க அரசால் ரூ.14.60 லட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக சிறைவாசிகள் அடையாளம் காணப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள சிறை ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறையினரால் மத்திய சிறை, புழல்-I வளாகத்தில் இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்த பயிற்சி வழங்கப்பட்டு, இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள், அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில்செயல்பட்டு வருகின்றன. சிறைவாசிகளுக்கு அஞ்சல்வழிக் கல்வி வசதி அரசு செலவில் வழங்கப்படுகிறது.

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மற்றும் மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக் கல்லூரிகள் நிறுவப்பட்டு உள்ளன. விடுதலைக்குப் பின்னர், சிறைவாசிகள் இலாபகரமான பணிகளில் ஈடுபடும் வண்ணம் அவர்களை தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

[2021 செப்டம்பர் 7

2020-2021 ஆம் ஆண்டில் 68 சிறைவாசிகள் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். 71 சிறைவாசிகள் 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். 152 சிறைவாசிகள் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதுகின்றனர். 231 சிறைவாசிகள் 8 ஆம் வகுப்பு தேர்வு எழுதுகின்றனர்.

2020-2021 ஆம் ஆண்டில் மொத்தம் 10,307 சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு பாடப் பிரிவுகளைத் தொடர்ந்து பயின்று வந்துள்ளனர்:-

பாடப் பிரிவு	சிறைவாசிகளின் எண்ணிக்கை
பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் அடிப்படை எழுத்தறிவு கல்வித் திட்டம்	1623
அடிப்படைக் கல்வி (7 ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு	4233
எழுத்தறிவு திட்டக் கல்வி (மாநில ஆதார மையம் வழியாக)	3324
கணினி முதுகலை பட்டப் படிப்பு	3
கலை/அறிவியில் முதுகலை பட்டப் படிப்பு	17
கலை/அறிவியில்/வணிகவியல்/இலக்கியம் இளங்கலை பட்டப் படிப்பு	164
வணிக மேலாண்மை முதுகலை பட்டப் படிப்பு	57
வணிக மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பு	129
8, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு 231+152+71+68=522	522
பட்டயப் படிப்பு/சான்றிதம் படிப்பு	235
மொத்தம்	10,307

ஒரு புதிய முயற்சியாக, திருச்சி மத்திய சிறையில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் 70 சிறைவாசிகள் பல்வேறு வகையான, கீழ்க்காணும் தொழிற்கல்விகளை பயின்று வருகின்றனர்:-

2021 செப்டம்பர் 7]

வ. எண்	தொழிற்பயிற்சியின் பெயர்	காலம்	சிறைவாசிகளின் எண்ணிக்கை		
			முதலாம் ஆண்டு	இரண்டாம் ஆண்டு	மொத்தம்
1.	பிட்டர்	2 வருடம்	4	4	8
2.	மின் கம்பியாளர்	2 வருடம்	12	8	20
3.	கணினி இயக்குநர் மற்றும் மென் பொருள் உதவியாளர்	1 வருடம்	9	-	9
4.	வெட்டுதல் மற்றும் வருடம் தைத்தல்	1 வருடம்	23	-	23
5.	வெல்டர் (வாயு வருடம் மற்றும் மின்சாரம்)	1 வருடம்	10	-	10
மொத்தம்			58	12	70

x) சிறைத் தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சித் திறன் பெறுதல் மற்றும் தொழில் உற்பத்தியில் பங்கு பெறுதல்

தண்டனைக் காலத்தில் சிறைவாசிகள் உழைப்பின் அவசியத்தை உணரவும், புதுத்திறன்களைக் கற்பிக்கவும், முத்திரை அரக்கு தொழிற்கூடம், நெசவுத் தொழிற்கூடம், காலணி தொழிற்கூடம், புத்தகம் கட்டுதல், கோர்பான்கள் உற்பத்தி, சலவை சோப்பு தயாரிக்கும் தொழிற்கூடம், தையற்கூடம், தச்சுக் கூடம், காலணி பாலீஷ் தொழிற்கூடம், அடுமனை தொழிற்கூடம், கைமுறை காகிதக்கூடம், நிலக்கரி சாம்பல் தொழிற்கூடம் மற்றும் பயிற்சிக்கூடம் ஆகியவை சிறைச் சாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர், மீண்டும் குற்றச் செயல்களில் அவர்கள் ஈடுபடாமல் இருப்பதற்காகவும், நல்ல வேலைவாய்ப்புப் பெற எதுவாகவும், அவர்களது வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் திறன் மற்றும் உற்பத்தித் திறனில் செய்முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும்தோட்டக்கலை மேம்பாடு, விவசாய உற்பத்தி இயற்கை உர உற்பத்தி போன்ற பல்வேறு நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களான, சீருடைத் துணி, பெல்ட், தொப்பி, சீருடைக் காலணிகள், காலணி பாலீஷ்,

[*2021 செப்டம்பர் 7*

மழை மேலங்கி (Rain coat), கொசு வலை போன்றவை காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளுக்கும், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு அட்டை, தபால் உறை, கட்டு மற்றும் காரத்துணி, சலவை சோப்பு மற்றும் பிற துணிவகைகள், தீ வாளிகள், இரும்பு கட்டில்கள், சலைன் ஸ்டேண்ட், தடுப்பான்கள், தள்ளுவண்டிகள் மற்றும் மருந்துப் பெட்டகங்கள் (Bed—side Lockers) போன்றவை சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை 'சேவைத் துறை'என்கிற வகையில், பல்வேறு அரசுத் துறைகளுக்கு பொருட்கள் வழங்குவதில் சிறப்புரிமை பெற்று வழங்கி வருகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் சிறைத் தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.5,910.45 இலட்சம் ஆகும்.

xi) விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பு கோரும், விடுதலைப் பெற்ற சிறைவாசிகளை பணியமர்த்துவதற்காக, சிறைவாசிகள் பெற்றுள்ள திறன், சிறைவாசி விடுதலையாகும் நாள், சிறைவாசியின் இருப்பிடத்திற்கு அருகில் சிறைவாசி பெற்றுள்ள திறன் தொடர்புடைய தொழிற்கூடங்கள் உள்ளனவா போன்ற விவரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்படுவதன்மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன.

xii) விசாரணை சிறைவாசிகள் சீர்திருத்த திட்டம்-(PATTAM)

சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்புத் திட்டங்களை செயல்படுத்திட சிறைகள் மற்றும்சீர்திருத்தப் பணிகள் துறை சிறைவாசிகளுக்காக பல்வேறு சீர்திருத்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவ்வாறான ஒரு தொலை நோக்கு திட்டம் தான் 'பட்டம்' (PATTAM) இச்சொல் Personality & Attitude Transformation through Therapeutic Assistance and Management என்ற ஆங்கில சொற்றொடரின் சுருக்கமாகும். சிறைவாசிகளுக்கான ஒரு முழுமையான சீர்திருத்த திட்டத்தை அதற்கேற்ற சூழலுடன் நடைமுறைப்படுத்துவதே அத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் காவல் துறை, நீதித் துறை, சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஒருங்கிணைந்த முயற்சியாகும்.

2021 செப்டம்பர் 7]

பட்டம் திட்டமானது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணைகளுக்கிணங்க சிறு குற்ற செயல்களில் ஈடுபட்டு முதல் முறையாக சிறைபடும் 18-ல் இருந்து 24 வயதிற்கு உட்பட்ட இளம் குற்றவாளிகளுக்காக குறிப்பாக வடிவமைக்கப்பட்டதாகும். இத்திட்டம் முதலில் சைதாப்பேட்டை கிளைச் சிறையில் துவங்கப்பட்டு, புழல்-I, மத்திய சிறைக்கு நீட்டிக்கப்பட்டது.

xiii) சிறைவாசிகளின் குறை தீர்க்கும் செயலாக்க முறை

சிறைவாசிகளின் குறைகளைத் தீர்வுசெய்வது, முன்னுரிமை அளிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறைவாசிகள் தங்கள் குறைகளை தெரிவிக்கும்பொருட்டு அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும்அமர்வு நீதிபதியால் இந்தப் புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார் மனுக்கள் உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதைத் தவிர, அமர்வு நீதிபதிகள் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளை ஆய்வு செய்வதுடன், அவர்களின் குறைகளையும் கேட்டறிகின்றனர்.

காவல் துறை இயக்குநர்/சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் தலைமை இயக்குநரும், சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும், சிறைகளில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்ளும்போது, ஒவ்வொரு சிறைவாசியின் குறைகளையும் கேட்டறிந்து. அவற்றைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். அனைத்து சிறைவாசிகள் ஆய்வு அணி வகுப்பினை ஒவ்வொரு வாரமும் சிறைக் கண்காணிப்பாளர்கள் நடத்துகின்றனர். அப்போது சிறைவாசிகளது குறைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்கின்றனர்.

xiv) பார்வையாளர் மேலாண்மைத் திட்டம்

ரூ.1.30 கோடி செலவில், அனைத்து மத்திய சிறைகள், மூன்று பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளைக் காண வரும் பார்வையாளர் குறித்த விவரங்களைச் சேசகரிக்கவும், நேர்காணல் முறையைச் சீரமைக்கவும்

[2021 செப்டம்பர் 7

எளிய வழிமுறைகளைக் கொண்ட பார்வையாளர் மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

xv) இலவச சட்ட உதவி

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்க ஏதுவாகவும், சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காகவும், இலவச சட்ட உதவி மையத்தை தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக் குழு, அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் அமைத்துள்ளது.

xvi) சிறை நீதிமன்றங்கள்

அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் சிறை நீதிமன்றங்களை ஏற்படுத்தி, சிறு வழக்குகளுக்கு விரைவில் தீர்வுகாணும் வகையிலும், சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கவும், நீதித் துறை நடுவர்கள் இந்தச் சிறை நீதிமன்றங்களுக்கு வருகை புரிந்து குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சிறைவாசிகளது வழக்குகளைத் தீர்வு செய்கின்றனர். மேலும், 19-12-2018 அன்று மாவட்ட இலவச சட்ட உதவிக் குழு தலைவர் மற்றும் வட்டார இலவச சட்ட உதவிக் குழு துலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சிறை நீதிமன்றங்களில் அந்தந்த மாவட்ட மற்றும் வட்டாரத்திற்குட்பட்ட 252 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் 1-1-2016 முதல் 31-7-2021 வரை 3964 வழக்குகள் சிறை நீதிமன்றங்களின்மூலம் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

xvii) வானொலிப் பெட்டி வசதி

வானொலிப் பெட்டியின்மூலம் ஒலிபரப்பப்படும் இசை மற்றும் இதரநிகழ்ச்சிகள், சிறைவாசிகளின் மன இறுக்கத்தை பெருமளவில் குறைக்கின்றன. சிறைவாசிகளது தனிமை மற்றும் அச்ச உணர்வினை குறைப்பதற்காக அலைபெருக்கியுடன்கூடிய 96 பண்பலை வானொலிப் பெட்டிகள் மற்றும் 384 ஒலிப்பெருக்கிகள் ரூ.14.55 இலட்சம் செலவில் அனைத்து கிளைச் சிறைகளுக்கும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

xviii) சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக சிறைகளில் தொலைபேசி வசதி அறிமுகப்படுத்துதல்

சிறைவாசிகள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வழக்குரைஞர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடுவதன்

2021 செப்டம்பர் 7]

மூலம் மன அழுத்தம் குறைகிறது. 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள், மாவட்டச் சிறை மற்றும் இளம் குற்றவாளிகள் சீர்த்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை, 5 மாவட்ட சிறைகள் மற்றும் 2 திறந்த வெளிச் சிறைகள் ஆகியவற்றில் ரூ.300.29 இலட்சம் செலவில் 65 தொலைபேசி கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த வசதியின்மூலம், அவர்களின் மன அழுத்தம் வெகுவாகக் குறைகிறது.

சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ள தொலைபேசி வசதியை உபயோகிக்கும் எண்ணிக்கையை ஒவ்வொரு சிறைவாசிக்கும் மாதம் ஒன்றுக்கு 4 ஞாயிற்றுக்கிழமைகள் உட்பட 5 முறையிலிருந்து 8 முறையாகவும், பேசும் நேரத்தை 45 நிமிடங்களிலிருந்து 56 நிமிடங்களாகவும் அதிகரிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. 31-7-2021 அன்றுள்ளவாறு, சிறைவாசிகளால் இவ்வசதியானது 12,33,724 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

xix) சீர்திருத்தப் பணிகள்

சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறு ஒருங்கிணைப்பு

சிறைவாசிகளின் மறுவாழ்விற்காகவும், விடுதலைக்கு பின்னர் சமுதாயத்தில் அவர்கள் மீண்டும் இணைந்து வாழ உதவும் வகையிலும் தமிழகச் சிறைகளில் பல்வேறு புதுமையான சீர்திருத்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி, தொழிற்கல்வி மற்றும் சிறைத் தொழிற்கூடங்களில் செய்முறை அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த திட்டங்கள், சிறைவாசிகள் விடுதலைக்குப் பின்னர் வேலைவாய்ப்பு பெறவோ அல்லது சொந்தமாக தொழில் அமைத்துக் கொள்ளவோ ஏதுவாக இருந்து வருகின்றன.

xx) சவ்வூடு பரவல்மூலம் குடிநீர் சுத்திகரிப்பு சாதனம் நிறுவுதல்

9 மத்திய சிறைகளில் ஒரு மணி நேரத்திற்கு 1.000 லிட்டர் கொள்ளளவிலும், புழல், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 3 பெண்கள் தனிச் சிறைகளில் ஒரு மணி நேரத்திற்கு 500 லிட்டர் கொள்ளளவிலும் சவ்வூடு பரவல்மூலம் குடிநீர் சுத்திகரிப்புச் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன.

xxi) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல்

மத்திய சிறை, வேலூர் மற்றும் பாளையங்கோட்டையில் ரூ.493.70 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்பட்டது.

[*2021 செப்டம்பர் 7*

மேலும், மத்திய சிறை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய சிறைகளில் ரூ.380.27 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட ஆணையிடப்பட்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் இப்பணிகள் முடிவடைந்துள்ளன. மத்திய சிறை, கோவை, சேலம் மற்றும் கடலூர் ஆகிய சிறைகளில் தண்ணீர் சேகரிப்பு மற்றும் சோதித்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

xxii) தண்டனைக் குறைப்பு முறையினை ஒழுங்குபடுத்துதல்

சிறைவாசிகள் தங்களது நடத்தையை மாற்றிக்கொள்ள ஏதுவாக அவர்களிடத்தில் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் செயல்நோக்கக் காரணிகளில் தண்டனைக் குறைப்பும் ஒன்றாகும். எனவே தண்டனைக் குறைப்பு முறையினை மேலும் சீரிய முறையில் செயலாக்கம் செய்திட 9 அலுவலகக் கண்காணிப்பாளர் பணியிடங்கள் அனைத்து மத்திய சிறைகளிலும் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

IX. சிறைகளில் கோவிட்-19 மேலாண்மை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினால் கோவிட்-19 முதல் மற்றும் இரண்டாம் அலைப் பரவலில் சிறைவாசிகள் மற்றும் பணியாளர்களுக்கு தொற்று பரவுவதைத் தடுக்க மற்றும் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான விவரம்:

i. அனைத்து சிறைவாசிகளுக்கும் அவ்வப்போது கோவிட்—19 தொற்று அறிகுறிகள் உள்ளதா என பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காய்ச்சல், சளி, இருமல், மூச்சுவிடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் உள்ள சிறைவாசிகள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு கோவிட்—19 பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. கோவிட் தொற்று ஆஒருப்பது உறுதி செய்யப்பட்ட சிறைவாசிகளுக்கு, மாவட்ட அரசு மருத்துவமனைகளில் உரிய மேல்சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

ii. சிறையில் அனுமதிக்கப்படும் சிறைவாசிகள் மற்றும் சிறை வளாகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு முறையான பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே சிறையினுள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

2021 செப்டம்பர் 7]

iii. சிறையினுள் போதுமான அளவு சோப்பு மற்றும் கிருமிநாசினி பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகள் அவ்வப்போது அவற்றைப் பயன்படுத்துவது உறுதிசெய்யப்பட்டும் வருகிறது. பெட்ரோல் பங்குகளில் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

iv. சிறையினுள் பார்வையாளர்கள் வருகை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிருவாக காரணங்களைத் தவிர, ஏனைய காரணங்களுக்காக சிறைவாசிகள் சிறைமாற்றம் செய்யப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

v. சிறைவாசிகள் ஒரே நேரத்தில் கூட்டமாக கூடுவதற்கு அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. சிறைவாசிகளை நேர்காணல் செய்யவரும் பார்வையாளர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் 72 மணி நேரத்திற்குள் கோவிட்-19 பரிசோதனை மேற்கொண்டு, 'தொற்று இல்லை' என்ற சான்றையோ அல்லது இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தி கொண்டதற்கான சான்றையோ சமர்ப்பித்த பின்னரே சிறையினுள் அனுமதிக்கப்படுகின்றனர். வழக்குரைஞர்கள் மற்றும் உறவினர்களைத் தொடர்புகொள்ள தொலைபேசி வசதியுடன் செல்பேசிமூலம் காணொலி அழைப்பு (Viedo Call) செய்யவும் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

vi. சிறையின் பொது இடங்களான கழிவறைகள், மருத்துவமனை வளாகம் மற்றும் தொலைபேசி அறை அவ்வப்போது கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்படுகின்றன.

vii. மேலும் உச்ச நீதிமன்ற ஆணை எண் 14WP (Civil) No.1/2020, நாள் 23-3-2020-ன்படி சிறைகளில் இடநெருக்கடியைக் குறைப்பதற்கு, தகுதியான சிறைவாசிகளைப் பிணையில் விடுவிப்பது தொடர்பாக, மாநில சட்ட பணிகள் குழுத் தலைவர் தலைமையில், உயர் மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. 31-8-2021 வரை 52,180 விசாரணை சிறைவாசிகள் சொந்த பிணையிலும் (Personal Bond Covid Bail), 76,381 சிறைவாசிகள் வழக்கமான பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

viii. சிறையினுள் புதிதாக அனுமதிக்கப்படும் சிறைவாசிகளுக்கென 108 சிறைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

[2021 செப்டம்பர் 7

கொரோனா பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில். சிறைவாசிகள் சிறையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

ix. வயதான சிறைவாசிகள், கர்ப்பிணி சிறைவாசிகள், இதர நோய் உள்ள சிறைவாசிகள் மற்றும் பெண் சிறைவாசியுடன் தங்கியிருக்கும் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியோர் நலனில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

x. அரசாணை நிலை எண் 790 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள், 23-12-2020 மற்றும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் Proc. No. O.C-1/563/2020 dated 26-12-2020-ன்படி கொரோனா கால பேரிடர் நிவாரண நிதியாக ரூ.175.17,000/- இத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் Disinfectant Sanitizer மற்றும் இதர அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு இத்தொகை செலவு செய்யப்பட்டது.

xi. 31-8-2021 அன்றைய நிலவரப்படி, 120 தண்டனை சிறைவாசிகள், 1,719 விசாரணை சிறைவாசிகள் கோவிட்—19 தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். 1 தண்டனை சிறைவாசி, 2 விசாரணை சிறைவாசிகள் கோவிட்-19 தொற்று காரணமாக ஆறந்தனர். தற்போது, 7 விசாரணை சிறைவாசிகள் சிகிச்சையில் உள்ளனர். 983 பணியாளர்கள் இதுவரை கோவிட்—19 தொற்றால் பாதிக்கப்பட்டனர், 15 பணியாளர்கள் இறந்தனர். தற்போது, 6 பணியாளர்கள் சிகிச்சையில் உள்ளனர்.

xii. 31-8-2021 அன்றைய நிலவரப்படி, 4,147 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 12,969 விசாரணை சிறைவாசிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. 4,256 பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

X. புதிய செயல்பாடுகள்

i) பறக்கும் வசதியுடன்கூடிய வண்ண புகைப்படக் கருவிகள் வழங்குதல்

9 மத்திய சிறைகளுக்கு பறக்கும் வசதியுடன்கூடிய வண்ணப் புகைப்படக் கருவி ரூ.21.85 இலட்சம் செலவில் கொள்முதல்

2021 செப்டம்பர் 7]

செய்திட ஆணையிடப்பட்டது. ஒப்பந்தம் மூலமாக கொள்முதல் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ii) சூரியஒளிமூலம் மின் உற்பத்தி செய்தல்

புழல் மத்திய சிறை வளாகத்தில் சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனம் ரூ.2.41 கோடி செலவில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டுக் குழுமம்மூலம் நிறுவப்பட்டு, நல்ல முறையில் இயங்கிவரும் நிலையில், இதர மத்திய சிறைகளில் சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி செய்யும் சாதனத்தை பொருத்திட, ரூ.2132.83 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் கோரியபடி, அனைத்து சிறைகளிலிருந்து ஸ்திரத்தன்மை சான்றிதழ் பெறப்பட்டு மேம்பாட்டு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டது. இதன் அடிப்படையில் சாதனத்தின் திறன் மாற்றப்பட்டு, திருத்திய திட்ட மதிப்பீடு, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

iii) சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அலுவலர்களின் நிதி அதிகார வரம்பினை உயர்த்துதல்

துறை தலைவருக்கு மருந்துகள் உள்ளூரில் கொள்முதல் செய்ய அதிகாரிகளின் செலவின அதிகாரத்தினை ஏற்கெனவே வழங்கப்பட்ட செலவின் தொகை ரூ.5,000/—லிருந்து ரூ.10,000/- ஆகவும், ரூ.3,000/-லிருந்து ரூ.6,000/- ஆகவும் மற்றும் ரூ.2,000/- லிருந்து ரூ.4,000 ஆகவும் உயர்த்தி வழங்கிட நிதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

iv) மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பு முறை

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின்கீழ், மின்னணு திறப்பான் மேலாண்மை அமைப்பினை (Electronic Key Management System) ரூ.82.32 இலட்சம் செலவில் முதற்கட்டமாக புழல் சிறை வளாகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, மத்திய சிறை-1, 2 புழல் மற்றும் பெண்கள் தனிச் சிறை புழலில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

v) புதிய சிறைகள் கட்டுதல்

மத்திய சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்க புதிய மாவட்டச் சிறைகள் துவங்கிடவும், சில கிளைச்

[2021 செப்டம்பர் 7

சிறைகளை மாவட்டச் சிறைகளாக தரம் உயர்த்தவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட தேனி, மாவட்ட சிறையின் உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்திட, முறையே ரூ.34.90 இலட்சம் செலவில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

புழல் மத்திய சிறை-2-ல் அடைக்கப்பட்டுள்ள சிறைவாசிகளின் இட நெருக்கடியை கருத்தில்கொண்டு, கூடுதலாக 500 சிறைவாசிகளை அடைத்திடும் வகையில் ரூ.1505.84 இலட்சம் செலவில் கூடுதல் தொகுதிகள் கட்டுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மாவட்டச் சிறை, செங்கல்பட்டில் கூடுதலாக 100 சிறைவாசிகளை அடைத்திடும் வகையில், ரூ.106.03 இலட்சம் செலவில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட அனுமதிக்கப்பட்டுள்ள பணிகள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

vi) புழல் மத்திய சிறை வளாகத்தில் சென்னை சரக சிறைத் துறைத் துணைத் தலைவருக்கு நிர்வாக அலுவலகம் அமைத்தல்

புழல் மத்திய சிறை வளாகத்தில் சென்னை சரக சிறைத் துறைத் துணைத் தலைவருக்கான நிர்வாக அலுவலகம், ரூ.59.45 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 30.08.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது.

vii) பாதுகாப்பு பெட்டக வசதியுடன்கூடிய உணவு அருந்தும் அறை அமைத்தல்

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் பணியாளர்களுக்கு பாதுகாப்பு பெட்டக வசதியுடன்கூடிய உணவு அருந்தும் அறை ரூ.251.72 இலட்சம் செலவில் அமைத்திடும் பணிகள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரிய கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7]

viii) புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல்

9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச் சிறைகள் புழல், திருச்சி மற்றும் வேலூர் (2 பணியிடங்கள்) மற்றும் மாவட்ட சிறை (ம)இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை (2 பணியிடங்கள்) ஆகியவற்றிற்கு கூடுதலாக 15 உதவி மருத்துவ அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பெண்கள் தனிச் சிறை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மனநிலை பாதிக்கப்பட்டுள்ள பெண் சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும்பொருட்டு, தலா ஒரு மனஇயல் நிபுணர் பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தனிச் சிறை, புழல், திருச்சி, வேலூர், கோயம்புத்தூர். மதுரை மற்றும் மாவட்ட சிறை (ம) இளம்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி புதுக்கோட்டை ஆகியவற்றில் உள்ள சிறைவாசிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்குவதற்கு ஏதுவாக தலா ஒரு மனநல ஆலோசகரை மாதம் ரூ.15,000/- மதிப்பூதியத்தின் அடிப்படையில் நியமனம் செய்துகொள்ள சிறைக் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சிறை-I, புழலில் ஓர் அலுவலக கண்காணிப்பாளர் பணியிடம், கணக்குப் பிரிவில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ix) அடையாள அணிவகுப்பு அறை கட்டுதல்

அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் மாவட்ட சிறை (ம) பார்ஸ்டல் பள்ளி புதுக்கோட்டையில் அடையாள அணிவகுப்பு அறை ரூ.202.97 இலட்சம் செலவில் கட்டடப் பணிகள் முடிவுற்று, இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

x) திண்டிவனம் கிளைச் சிறையை புதிய நீதிமன்ற வளாகம் அமைந்துள்ள இடத்திற்கு மாற்றுதல்

திண்டிவனம் கிளைச் சிறையை புதியதாக கட்டப்பட்டுள்ள நீதிமன்ற வளாகத்திற்கு ரூ.839.22 இலட்சம் செலவில் மாற்றிட அரசால் ஆணையிடப்பட்டு, பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு, முதல் தளத்திற்கான மேற்கூரை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

[2021 செப்டம்பர் 7

xi) ஆண்டு பராமரிப்பு நிதி

சிறை கட்டடங்கள் மற்றும் பணியாளர்களின் குடியிருப்புகளில் அவ்வப்போது ஏற்படும் பராமரிப்பு பணிகளை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தால் மேற்கொள்ள ஆண்டொன்றுக்கு தொடர் செலவினமாக ரூ.500 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

xii) சிறை தொழிற்கூடங்கள்

சிறைத் தொழிற்கூடங்களின் உட்கட்டமைப்பினை, விரிவாக்கம் செய்திட, புதிய இயந்திரங்கள் வாங்குதல் மற்றும் எற்கெனவே இயங்கிவரும் இயந்திரங்களை பராமரித்திட ரூ.200.00 இலட்சம் நிதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அடுமனைக் கூடத்தில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் அலகினை மத்திய சிறைகள் வேலூர், கடலூர், சேலம், கோவை, திருச்சி, மதுரை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய சிறைகளில் நிறுவிட ரூ.210 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு, அடுமனைகள் செயல்பட்டு வருகின்றன.

வேலூர் மத்திய சிறையில் பெண்களுக்காக மட்டுமே தயாரிக்கும் இலகுரக காலணி தொழிற்கூட அலகினை நிறுவிட ரூ.126.00 இலட்சம் செலவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின்கீழ் ரூ.48.00 இலட்சம் செலவில் பாளையங்கோட்டை மத்திய சிறையில் மணலுக்கு பதிலாக (செப்பு கழிவுப் பொருட்களை உபயோகப்படுத்தி உற்பத்தி செய்யப்படும் நடைபாதை ஓடுகளின் விரிவாக்க அலகினை நிறுவிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கோவை மத்திய சிறையின் நெசவுக்கூடத்தில் எற்கெனவே உள்ள அளவிடல் இயந்திரங்களை ரூ.9.87 இலட்சம் செலவில் மேம்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சிறை தொழிற்கூடத்தின் பழைய இயந்திரங்களை மேம்படுத்தி பராமரிப்பதுடன், புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்திடவும், சிறை செய்பொருட்கள் தங்கு தடையின்றி பிற துறைகளுக்கு வழங்கும்பொருட்டும் ரூ.500 இலட்சம் செலவில் தொழிற்கூடங்கள் அமைத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

xiii) மத்திய சிறை வளாகங்களில் பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைத்தல்

முதற்கட்டமாக மத்திய சிறைகள் புழல்-I வேலூர், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை மற்றும் மாவட்ட சிறை (ம)

2021 செப்டம்பர் 7]

இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறை வளாகங்களில் திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து "முன்னோடி திட்டமாக" (Pilot Project) பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும், சிறைவாசிகளின் மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வுக்கு ஏற்ற வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது, இரண்டாம் கட்டமாக (அம்பத்தூர் சாலை புழல்-I, சேலம், விமானநிலைய சாலை திருச்சி, காந்தி சந்தை திருச்சி, மதுரை மற்றும் பாரதியார் சாலை கோயம்புத்தூர்) ஆகிய 6 இடங்களில் துவங்கிட அரசின் பரிசீலனையில் உள்ளது.

xiv) சிறை அங்காடிகள்

சிறைவாசிகளது சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்விற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அவர்களது மனித சக்தியை ஆக்கப்பூர்வமான வழியில் பயன்படுத்திட, மத்திய சிறை வளாகங்களின் எல்லைகளுக்குள் "சிறை அங்காடிகள்" அனைத்து மத்திய சிறைகள், சில மாவட்டச் சிறைகள் மற்றும் கிளைச் சிறை வளாகங்களில் சிறை அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அங்காடிகளின் வளர்ச்சிக்காக ரூ.10.00 இலட்சம் கொண்ட ஒரு தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அங்காடிகளில் சிறைவாசிகளால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களான அடுமனைப் பொருட்கள், தோல் காலணிகள், பணப்பை, தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்பு, மெழுகுவர்த்தி, கொசு வலை, மழை மேலங்கி (Raincoat) ஷூ பாலீஷ், ஆயத்த ஆடைகள், தேன், மசாலாத் தூள், கைவினைப் பொருட்கள், காகித உறைகள், நோட்டுப் புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், குளிர் அழுத்தப்பட்ட எண்ணெய் (Cold Pressed Edible Oil) மண்புழு உரம், பஞ்ச கவ்யம், ஓவியங்கள் போன்ற இதர பொருட்கள் 'ஃப்ரீடம்' என்ற பதிவு செய்யப்பட்ட அடையாள பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இச்சிறை அங்காடிகளில் உணவகம் போன்ற இதர சில்லறை வணிக நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

[*2021 செப்டம்பர் 7*

XI) முடிவுரை

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் சீரிய நிர்வாகத்திற்கு அரசு உரிய முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைக் கைதிகளின் நலன், சிறைப் பணியாளர்களின் நலன், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், சிறைகளின் பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் மனித உரிமைகளைப் பேணுதல் ஆகியவற்றை மேம்படுத்தி, ஒருங்கிணைந்த தேவைகள் எப்போதும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. சிறைவாசிகளுக்கென மிகச் சிறந்த சுத்தம் மற்றும் சுகாதார வசதிகளும், மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவையும் விரிவான ஆற்றுப்படுத்துதல் மற்றும் தியான வகுப்புகளும் தரமான தொழிற்கல்வி மற்றும் தொழிற்கூடப் பயிற்சியும் அளிப்பதுடன், உளவியல் ஆலோசனைகளையும் குடும்பத்திற்கான ஆதரவினையும் வழங்குவதன்மூலம் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் சீர்திருத்த கொள்கைக்கான தளம் நிச்சயமாக வலுப்பெற்றுள்ளது எனலாம். சிறைப் பணியாளர்களுக்கு இடைவிடாது பயிற்சி அளிப்பதுடன், அவர்களுடைய அலுவல்களின் தன்மை குறித்து கூருணர்வுபடுத்தப்பட்டுள்ளனர். இம்முயற்சிகள் அனைத்தும் வரும் ஆண்டுகளிலும் தொடரும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை – I

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு



குறிப்பு: மத்திய சிறைக் கண்காணிப்பாளர்களின் (புழல் மத்திய சிறை–2 தவிர) அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், திறந்த வெளிச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளி மற்றும் கிளைச் சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.

[2021 செப்டம்பர் 7

பிற்சேர்க்கை - II

அனைத்து சிறைகளில் உள்ள அடைப்பு எண்ணிக்கையின் விவரம்

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	சென்னை மாவட்டம்	
1	மத்தியசிறை.I, புழல்	1250
2	மத்தியசிறை. II, புழல்	1250
3	பெண்கள் தனிச்சிறை, புழல்	500
4	பார்ஸ்டல் பள்ளி, புழல்	100
5	கிளைச்சிறை, சைதாப்பேட்டை	175
	காஞ்சிபுரம் மாவட்டம்	
6	கிளைச்சிறை, காஞ்சிபுரம்	34
	செங்கல்பட்டு மாவட்டம்	
7	மாவட்டச்சிறை, செங்கல்பட்டு	200
8	கிளைச்சிறை, மதுராந்தகம்	62
	திருவள்ளூர் மாவட்டம்	
9	கிளைச்சிறை, திருவள்ளூர்	36
10	கிளைச்சிறை, பொன்னேரி	42
11	கிளைச்சிறை, திருத்தணி	36
12	தனிக்கிளைச்சிறை, பூந்தமல்லி	152

2021 செப்டம்பர் 7]

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	வேலூர் மாவட்டம்	
13	மத்தியசிறை, வேலூர்	*2130*
14	பெண்கள் தனிச்சிறை, வேலூர்	*469*
15	பார்ஸ்டல் பள்ளி, வேலூர் (இணைப்பு)	*54*
16	கிளைச்சிறை, குடியாத்தம்	*54*
	திருப்பத்தூர் மாவட்டம்	
17	கிளைச்சிறை, ஆம்பூர்	*20*
18	கிளைச்சிறை, திருப்பத்தூர்	*74*
19	கிளைச்சிறை, வாணியம்பாடி	*30*
20	கிளைச்சிறை, அரக்கோணம்	*36*
21	கிளைச்சிறை, வாலாஜா	*19*
	திருவண்ணாமலை மாவட்டம்	
22	கிளைச்சிறை, செய்யாறு (வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது)	*48*
23	கிளைச்சிறை, திருவண்ணாமலை	*49*
24	கிளைச்சிறை, ஆரணி (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	*17*
25	கிளைச்சிறை, செங்கம்	*9*
26	கிளைச்சிறை, போளூர்	*36*
27	கிளைச்சிறை, வந்தவாசி	*19*

[2021 செப்டம்பர் 7

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	கடலூர் மாவட்டம்	
28	மத்தியசிறை, கடலூர்	723
29	கிளைச்சிறை, கடலூர் (பெண்கள்)	100
30	கிளைச்சிறை, கடலூர்	143
31	கிளைச்சிறை, விருத்தாச்சலம்	30
32	கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை	24
33	பார்ஸ்டல் பள்ளி, பண்ருட்டி	15
34	கிளைச்சிறை, சிதம்பரம்	28
	விழுப்புரம் மாவட்டம்	
35	மாவட்டச்சிறை, விழுப்புரம்	200
36	கிளைச்சிறை, விழுப்புரம்	42
37	கிளைச்சிறை, திண்டிவனம்	29
38	பார்ஸ்டல் பள்ளி, செஞ்சி	80
	கள்ளக்குறிச்சி மாவட்டம்	
39	கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி	18
40	கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை	24
41	கிளைச்சிறை, திருக்கோவிலூர்	24
	சேலம் மாவட்டம்	
42	மத்தியசிறை, சேலம்	1431
43	மாவட்டச்சிறை, ஆத்தூர்	200

2021 செப்டம்பர் 7]

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
44	திறந்தவெளிச்சிறை சேலம்	10
45	தனிக்கிளைச்சிறை, சேலம் (பெண்கள்)	110
46	பார்ஸ்டல் பள்ளி, சங்ககிரி	27
47	கிளைச்சிறை, ஓமலூர்	48
	நாமக்கல் மாவட்டம்	
48	கிளைச்சிறை, நாமக்கல்	34
49	பார்ஸ்டல் பள்ளி, பரமத்தி	16
50	கிளைச்சிறை, ராசிபுரம்	24
51	கிளைச்சிறை, திருச்செங்கோடு	19
	தருமபுரி மாவட்டம்	
52	மாவட்ட சிறை, தருமபுரி	200
53	கிளைச்சிறை, தருமபுரி	36
54	கிளைச்சிறை, அரூர்	48
	கிருஷ்ணகிரி மாவட்டம்	
55	கிளைச்சிறை, கிருஷ்ணகிரி (பெண்கள்)	73
56	கிளைச்சிறை, ஊத்தங்கரை	16
57	கிளைச்சிறை, ஓசூர்	44
	கோயம்புத்துர் மாவட்டம்	
58	மத்தியசிறை, கோயம்புத்தூர்	2124
59	பெண்கள் தனிச்சிறை, கோயம்புத்தூர்	187

[2021 செப்டம்பர் 7

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
60	திறந்தவெளிச்சிறை, சிங்காநல்லூர்	100
61	கிளைச்சிறை, மேட்டுப்பாளையம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	36
62	பார்ஸ்டல் பள்ளி, பொள்ளாச்சி	97
	ஈரோடு மாவட்டம்	
63	மாவட்டச்சிறை, கோபிசெட்டிபாளையம்	200
64	கிளைச்சிறை, ஈரோடு	35
65	கிளைச்சிறை, சத்தியமங்கலம்	16
66	கிளைச்சிறை, பவானி	24
67	கிளைச்சிறை, பெருந்துறை	8
	நீலகிரி மாவட்டம்	
68	கிளைச்சிறை, உதகமண்டலம்	35
69	கிளைச்சிறை, குன்னூர்	32
70	கிளைச்சிறை, கூடலூர்	28
	திருப்பூர் மாவட்டம்	
71	மாவட்டச்சிறை, திருப்பூர்	200
72	கிளைச்சிறை, அவினாசி	70
73	கிளைச்சிறை, திருப்பூர்	90
74	கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை	25

2021 செப்டம்பர் 7]

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
75	*கிளைச்சிறை, தாராபுரம்*	*26*
76	*கிளைச்சிறை, பல்லடம் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)*	*24*
	திருச்சி மாவட்டம்	
77	*மத்தியசிறை, திருச்சி*	*2517*
78	*பெண்கள் தனிச்சிறை, திருச்சி*	*600*
79	*கிளைச்சிறை, மணப்பாறை*	*14*
80	*கிளைச்சிறை, முசிறி*	*17*
81	*கிளைச்சிறை, துறையூர்*	*17*
82	*கிளைச்சிறை, லால்குடி*	*23*
	அரியலூர் மாவட்டம்	
83	*பார்ஸ்டல் பள்ளி, அரியலூர்*	*21*
84	*கிளைச்சிறை, ஜெயங்கொண்டம்*	*19*
	பெரம்பலூர் மாவட்டம்	
85	*கிளைச்சிறை, பெரம்பலூர்*	*18*
	கரூர் மாவட்டம்	
86	*கிளைச்சிறை, கரூர்*	*36*
87	*கிளைச்சிறை, குளித்தலை*	*26*
	புதுக்கோட்டை மாவட்டம்	
88	*மாவட்டச்சிறை, புதுக்கோட்டை*	*200*
89	*பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை*	*245*

[2021 செப்டம்பர் 7

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
90	கிளைச்சிறை, அறந்தாங்கி	28
91	கிளைச்சிறை, திருமயம்	14
92	கிளைச்சிறை, கீரனூர் (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	8
	தஞ்சாவூர் மாவட்டம்	
93	கிளைச்சிறை, திருவிடைமருதூர்	51
94	பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர்	87
95	கிளைச்சிறை, பாபநாசம்	46
96	கிளைச்சிறை, பட்டுக்கோட்டை	38
97	கிளைச்சிறை, கும்பகோணம்	44
	நாகப்பட்டினம் மாவட்டம்	
98	மாவட்டச்சிறை, நாகப்பட்டினம்	200
99	கிளைச்சிறை, சீர்காழி	28
100	கிளைச்சிறை, மயிலாடுதுறை	24
101	கிளைச்சிறை, தரங்கம்பாடி	12
	திருவாரூர் மாவட்டம்	
102	கிளைச்சிறை, திருவாரூர் (பெண்கள்)	20
103	கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி	28
104	கிளைச்சிறை, நன்னிலம்	24
105	கிளைச்சிறை, மன்னார்குடி	19

2021 செப்டம்பர் 7]

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	மதுரை மாவட்டம்	
106	*மத்தியசிறை, மதுரை*	*1252*
107	*பெண்கள் தனிச்சிறை, மதுரை*	*262*
108	*பார்ஸ்டல் பள்ளி, மேலூர்*	*48*
109	*கிளைச்சிறை, உசிலம்பட்டி*	*18*
110	*கிளைச்சிறை, திருமங்கலம்*	*25*
	திண்டுக்கல் மாவட்டம்	
111	*மாவட்டச்சிறை, திண்டுக்கல்*	*200*
112	*கிளைச்சிறை, வேடசந்தூர்*	*16*
113	*கிளைச்சிறை, பழனி*	*43*
114	*கிளைச்சிறை, கொடைக்கானல்*	*9*
115	*கிளைச்சிறை, நிலக்கோட்டை (பெண்கள்)*	*36*
	தேனி மாவட்டம்	
116	*மாவட்டச்சிறை, தேனி*	*200*
117	*கிளைச்சிறை, உத்தமபாளையம்*	*21*
118	*கிளைச்சிறை, பெரியகுளம்*	*39*
	சிவகங்கை மாவட்டம்	
119	*கிளைச்சிறை, சிவகங்கை*	*20*
120	*கிளைச்சிறை, திருப்பத்தூர்*	*22*
121	*திறந்த வெளிச்சிறை, புரசடை உடைப்பு*	*150*

[2021 செப்டம்பர் 7

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	இராமநாதபுரம் மாவட்டம்	
122	மாவட்டச்சிறை, இராமநாதபுரம்	200
123	கிளைச்சிறை, பரமக்குடி (பெண்கள்)	18
124	மாவட்டச்சிறை, முதுகுளத்தூர்	21
125	கிளைச்சிறை, திருவாடனை	12
	விருதுநகர் மாவட்டம்	
126	மாவட்டச்சிறை, விருதுநகர்	200
127	கிளைச்சிறை, அருப்புக்கோட்டை	13
128	கிளைச்சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்	24
129	கிளைச்சிறை, சாத்தூர் (பெண்கள்) (தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது)	29
	திருநெல்வேலி மாவட்டம்	
130	மத்தியசிறை, பாளையங்கோட்டை	1332
131	தனிக்கிளைச்சிறை கொக்கிரகுளம் (பெண்கள்)	84
132	கிளைச்சிறை, அம்பாசமுத்திரம்	16
133	பார்ஸ்டல் பள்ளி, நாங்குநேரி	107

2021 செப்டம்பர் 7]

வ. எண்.	சிறைகள்	அடைப்பு எண்ணிக்கை
	தென்காசி மாவட்டம்	
134	கிளைச்சிறை, தென்காசி	*44*
135	கிளைச்சிறை, சங்கரன்கோவில்	*12*
	தூத்துக்குடி மாவட்டம்	
136	மாவட்டச்சிறை, பேரூரணி	*200*
137	கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம்	*72*
138	கிளைச்சிறை, கோவில்பட்டி	*42*
139	கிளைச்சிறை, திருச்செந்தூர்	*37*
	கன்னியாகுமரி மாவட்டம்	
140	மாவட்டச்சிறை, நாகர்கோவில்	*230*
141	கிளைச்சிறை, தக்கலை (பெண்கள்)	*24*
142	கிளைச்சிறை, குழித்துறை	*16*
	மொத்தம்	*23,592*

இணைப்பு-III

(100 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முன்னுரை

சட்டம் என்பது, நீதி வழுவா நெறிமுறையை நிலைநிறுத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டு, பயன்படுத்திவரும் கோட்பாடுகளின் தொகுப்பாகும். சட்டம் என்பது அரசின் அதிகாரத்தினைச் செலுத்துவதற்கான கருவியாக மட்டும் அமைவதில்லை, அது மக்களை விதிகளுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக செயல்படுபவர்களிடமிருந்து பாதுகாக்கும் வழிமுறையாகவும் இருப்பதாகும். சட்டமும், அரசும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. அரசு சட்டத்தை உருவாக்கி அதனைச் செயல்திறப்படுத்துகிறது. அரசின் செயல்நிலையைக் கட்டுப்படுத்துவதும் சட்டமாகும். சட்டத்தை உருவாக்குபவர்கள் உள்ளடங்கலாக குடிமக்கள் ஒவ்வொருவரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர். சட்டமானது சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்பட வேண்டுமானால், அது சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மேம்படுத்திக்கொள்வதுடன், அதன் வேகத்துடன் இணைந்து செல்லவும் வேண்டும். அண்மைக் காலங்களில் நிகழ்ந்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சிகள், சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கான முதன்மையான எடுத்துக்காட்டுகள் ஆகும். அவை புதிய சட்டங்களுக்கான தேவையை ஏற்படுத்துகின்றன.

சட்டத்தை உருவாக்கும் மூலங்களில் சட்டம் இயற்றல் என்பது, ஒரு முக்கியமான மூல ஆதாரம் ஆகும். 'Legislation' என்னும் ஆங்கிலச் சொல் 'legislatio' என்னும் இலத்தீன் மொழிச்சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு சட்டத்தைக் கொண்டுவருதல் அல்லது முன்மொழிதல் என்பதாகும். சட்டமன்றத்தின் முதன்மையான பணியானது சட்டங்கள் இயற்றுவதாகும். சட்டத் துறையானது அரசு, சட்டங்களை இயற்றுவதற்கு உரிய வகையில் துணையாக நிற்கிறது.

2021 செப்டம்பர் 7]

இந்திய அரசமைப்பு நமது நாட்டின் உயர்ந்த சட்டமாக திகழ்கிறது. மாநில சட்டமன்றம், அரசமைப்பின் ஏழாம் இணைப்புப் பட்டியலில் உள்ள மாநிலப் பட்டியலிலும், ஒருங்கியல் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பொருள் எதனையும் குறித்து சட்டமியற்றுகிறது. ஆனால், ஒருங்கியல் பட்டியலின் கீழ்வரும் பொருளைப் பொறுத்தவரை, மாநில சட்டமன்றத்தினால் இயற்றப்படும் சட்டமானது பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட எத்தகைய சட்டத்திற்கும் அல்லது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கும் முரணாக இருக்குமேயானால், அது குடியரசுத் தலைவரால் இசைவளிக்கப்பட்ட பின்பு சட்டமாகிறது. சட்டமன்றத்தினால் நேரடியாக இயற்றப்படும் சட்டமானது, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முக்கிய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. சட்டத்தின் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப விவரங்களும், நெறிமுறைகளும் அடங்கிய நடவடிக்கைகளை குறித்துரைக்க நிருவாக அதிகார அமைப்புகளுக்கு ஒப்படைவு செய்யப்படுகிறது. இவை அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் வகுக்கப்படும் விதிகள் என்று வழங்கப்படும். அவ்வாறு வகுக்கப்படும் விதிகள் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் இயற்றப்பட்டு, சட்டத் துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றன. விதிகள் வகுக்கப்படுகையில், சட்டமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகள், ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்களை மீறாதிருக்கின்றனவா என்பதை உறுதிசெய்யும் பொருட்டு, சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளின்படி வெளியிடப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் அனைத்தும் சட்டமன்றத்தின் விதிகள் ஆய்வுக் குழுவினால் ஆய்வு செய்யப்படுகின்றது.

அரசின் கொள்கை முடிவைச் சட்டமாக்க வேண்டும் என்று முடிவு செய்யும்பட்சத்தில், சட்டத் துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கை முடிவுகளுக்கு சட்ட வடிவமளித்து, சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவிற்கு ஒப்புதல் அளித்த பின்பு, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில், சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும், சட்டமியற்றுவதற்கான அவசரத் தேவை ஏற்படுகிறவிடத்து, அரசமைப்பின் 213 ஆம் உறுப்பின்படி அவசரச் சட்டம் வெளியிடப்படுகிறது. சட்டத் துறையின் பணி, அவசரச்

[2021 செப்டம்பர் 7

சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப உருவாக்கி, அதனை பிரகடனப்படுத்தி வெளியிடும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத் துறையின் முக்கியப் பணியானது, சட்டப் பேரவைச் செயலகம் உள்ளடங்கலான தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன. இவை தவிர, மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள ஆவணங்கள் அனைத்தையும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:-

- சட்டக் கல்வி
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம்
- மாநில சட்ட ஆணையம்
- மாநில சட்ட (ஆட்சிமொழி) ஆணையம்
- சான்றுறுதி அலுவலர்கள்

சட்டக் கல்வி

சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953 ஆம் ஆண்டு சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை உருவாக்கப்பட்டதிலிருந்து, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-1980 ஆம்

2021 செப்டம்பர் 7]

கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996—1997 ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஓர் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர் 2006-ல் அறிவிக்கப்பட்டது. 2008-2009 ஆம் கல்வியாண்டில், வேலூரில் ஓர் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

நீதியரசர் திரு. ப. சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, உயர் நீதிமன்ற வளாகத்திலிருந்து, செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள வளாகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் 5 ஆண்டு சட்டப் படிப்பும், திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூரில் கட்டப்பட்டுள்ள வளாகத்தில் 3 ஆண்டு சட்டப் படிப்பு மற்றும் எல்.எல்.எம் படிப்புகளும் 2018-2019 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படுகிறது. தற்போது, மாநிலத்தில் பதினான்கு அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

2021-2022 ஆவது கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மாணவர் இடங்களின் எண்ணிக்கை 13,526. இவற்றில், கல்லூரி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:-

வ. எண்	சட்டக் கல்லூரியின் பெயர்	மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை
1.	*சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (3 ஆண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)*	*1123*
2.	*சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம். (5 ஆண்டு இளங்கலை சட்டப் படிப்பு மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)*	*1245*
3.	*அரசு சட்டக் கல்லூரி, மதுரை. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)*	*1478*

[2021 செப்டம்பர் 7

வ. எண்	சட்டக் கல்லூரியின் பெயர்	மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை
4.	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1480
5.	அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1480
6.	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1440
7.	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	1080
8.	அரசு சட்டக் கல்லூரி, வேலூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	680
9.	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	720
10.	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலைசட்டப் படிப்புகள்)	680
11.	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை மற்றும் முதுகலை சட்டப் படிப்புகள்)	680
12.	அரசு சட்டக் கல்லூரி, சேலம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை சட்டப் படிப்பு)	480
13.	அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை சட்டப் படிப்பு)	480
14.	அரசு சட்டக் கல்லூரி, தேனி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளங்கலை சட்டப் படிப்பு)	480
மொத்தம்		13526

புதிதாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தவிர்த்து, ஏனைய அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம், சேலம் மற்றும் தேனி அரசு சட்டக் கல்லூரிகளுக்கான சொந்தக்

2021 செப்டம்பர் 7]

கட்டடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. தேனி அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன்கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.89.01 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன்கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.96.54 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் போதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன், கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளை மேற்கொள்வதற்கென ரூ.10.89 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெரும்பாலான அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் விடுதி வசதி உள்ளது. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூரிலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர் விடுதி மட்டும் உள்ளது. மேற்சொன்ன கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கென உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு சட்டக் கல்லூரிகளில் நியமித்திட, 186 உதவிப் பேராசிரியர்களை தெரிவு செய்திடுமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதுவரை 109 உதவிப் பேராசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு, அரசு சட்டக் கல்லூரிகளில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு சட்டக் கல்லூரிகளில் பணியாற்றி வந்த பத்து இணைப் பேராசிரியர்களுக்கு 2020-2021 ஆம் கல்வியாண்டில் முதல்வர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, அரசு சட்டக் கல்லூரிகளில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

[*2021 செப்டம்பர் 7*

தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகளில் 40 மாணவர் எண்ணிக்கையுடன்கூடிய பாடப் பிரிவுகளாக பல்வேறு பாடப் பிரிவுகளின்கீழ் முதுகலை சட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுகலை சட்டப் படிப்புகள் (2020–2021)

வ. எண்	கல்லூரியின் பெயர்	எல்.எல்.எம்., பாடப் பிரிவு
1.	*சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர்*	*(1) வணிகச் சட்டம்.* *(2) குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம்.* *(3) சொத்துரிமைச் சட்டம்.* *(4) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.*
2.	*சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம்.*	*சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றச் சட்டங்கள்*
3.	*அரசு சட்டக் கல்லூரி, மதுரை.*	*(1) சொத்துரிமைச் சட்டம்.* *(2) சர்வதேச சட்டம் மற்றும் நீதி.*
4.	*அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*	*(1) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.* *(2) அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள்.*
5.	*அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர்.*	*(1) வணிகச் சட்டம்.* *(2) வரிச் சட்டங்கள்.*
6.	*அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி.*	*அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைகள்.*
7.	*அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு.*	*குற்றவியல் மற்றும் இணைய குற்றச் சட்டம்.*
8.	*அரசு சட்டக் கல்லூரி, வேலூர்.*	*அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.*

2021 செப்டம்பர் 7]

வ. எண்	கல்லூரியின் பெயர்	எல்.எல்.எம்., பாடப் பிரிவு
9.	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம்.	(1) தகவல் தொழில்நுட்ப சட்டம் மற்றும் இணைய பாதுகாப்பு சட்டங்கள். (2) குடும்பச் சட்டங்கள்.
10.	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி.	பெரு நிறுவன நிருவாகச் சட்டங்கள் மற்றும் நிதி.
11.	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம்.	அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.

அரசு சட்டக் கல்லூரிகளில் இளங்கலை சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளில் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் கலந்துகொள்ள, மாணவர்களைத் தெரிவு செய்திட மொத்தமுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்துவதற்கென ஆண்டுதோறும் ரூ.70 இலட்சம் ஒப்பளிப்பு செய்திட நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலுள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளிலும் தமிழ்வழியில் சட்டப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ்மொழி வாயிலாக சட்டப் படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.400/- வீதம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கித் திட்டம் உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக, சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டிகள் நிறைந்த

[*2021 செப்டம்பர் 7*

உலகில் வேரூன்றி நிற்பதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மாநிலச் சட்டத்தின்மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி இப்புப்பாதை நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில், ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்கப் பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டக் கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப் பள்ளி வாயிலாக துவக்கி, மூன்றாண்டு எல்.எல்.பி. (ஹானர்ஸ்) சட்டப் படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ.,எல்.எல்.பி. (ஹானர்ஸ்), பி.காம்., எல்.எல்.பி. (ஹானர்ஸ்), பி.பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்) ஆகிய இளங்கலை சட்டப் படிப்புகளில் மொத்தம் 3,479 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மேலும், இப்பல்கலைக்கழகம் முதுகலை சட்டப் படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது. தொலைதாரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பல்வேறு முதுகலைப் பட்டயப் படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

2010-2011 ஆம் கல்வியாண்டு முதல் சீர்மிகு சட்டப் பள்ளியில் இளங்கலை சட்டப் படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன் சீர்மிகு சட்டப் பள்ளிமூலம் இதுவரை 91 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 34 மாணவர்கள் முழு நேர

2021 செப்டம்பர் 7]

அடிப்படையிலும், 122 மாணவர்கள் பகுதிநேர அடிப்படையிலும் முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஏற்படுத்துவதற்காக, போதுமான உட்கட்டமைப்புடன்கூடிய சட்ட அறிவு செயல் முறை மையம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. குற்றவியல் சட்டப் பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்வண்ணம், தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆய்வு செய்வதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது.

(1) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், அவுரங்காபாத்;

(2) தி சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிட்டெட், மும்பை;

(3) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், மும்பை;

(4) டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சைன்சஸ், மும்பை;

(5) ஏ.ஐ.ஆர். லாவா அகாடமி & ரிசர்ச் சென்டர், நாக்பூர் (ஏ.எல்.ஏ.ஆர்.சி);

(6) டிரான்ஸ்கிரிப்ட்ஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட், ஐஜடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், தரமணி, சென்னை; மற்றும்

(7) கன்சோர்டியம் பார் எஜூகேசனல் கம்யூனிகேசன், புது டெல்லி.

[*2021 செப்டம்பர் 7*

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பெருங்குடி வளாகத்தில் "அனைத்திந்திய செய்தியாளர் (AIR) சட்டக் கல்வி உதவித் தொகுதி" என்ற திட்டத்தை நிறுவியுள்ளது. சட்ட மாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இப்பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றுள்ள சட்டக் கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் தங்களது தொழில் தரத்தில் மேன்மை பெற, மாற்றுப் பூசல் தீர்வு முறையை மேம்படுத்த, சட்டம் சார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் பிற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அரசு சட்டக் கல்லூரிகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளி மற்றும் தனியார் சுயநிதி சட்டக் கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள், கலந்தாய்வு உட்பட அனைத்தும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால், இணைய வழியாக, http://www.tndalu.ac.in எனும் வலைதளம்மூலம் 2021-2022 ஆம் கல்வியாண்டு முதல் நடைபெறுகிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாட்டில், தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும்பொருட்டு, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியை மாநிலச் சட்டம்மூலம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர்குட்டப்பட்டு கிராமத்தில் 25 எக்கர் வளாகத்தில், 79.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் உலகளாவிய காட்சியில் ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, சட்டம் பற்றிய அறிவு மற்றும் கற்றல், சட்ட செயல்முறைகள், பரிந்து பேசுதல் (வக்காலத்து) மற்றும் நீதி நிருவாகத் திறன் ஆகியவற்றை பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் ஐந்தாண்டு பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்), ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி.

2021 செப்டம்பர் 7]

(ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.எம். மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட 138 இடங்களுடன் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர்கள் சேர்க்கையானது பொதுவான சட்டப் படிப்பு நுழைவுத் தேர்வு (Common Law Admission Test - CLAT) மூலம் நடைபெறுகிறது.

2020-2021 ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப் படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

வ. எண்	படிப்பு	சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை	
(1)	பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	25
		அகில இந்திய அடிப்படையில்	37
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	62
(2)	பி.காம்., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	35
		அகில இந்திய அடிப்படையில்	19
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	54
(3)	எல்.எல்.எம்.	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	07
		அகில இந்திய அடிப்படையில்	08
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	15
		மாணவர்களின் மொத்த எண்ணிக்கை	131

இப்பல்கலைக்கழகத்தில், தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இடங்கள், தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்படுகின்றன.

[*2021 செப்டம்பர் 7*

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் சட்ட வரலாற்று அருங்காட்சியகத்தினை விரிவாக்கம் செய்திடும் பொருட்டு, தாமிரப் பட்டயங்கள் மற்றும் மாதிரிகள் (Copper reliefs and Models) வாங்குதல் மற்றும் ஆவணங்களை எண்மப்படுத்துதல் (Digitalization), அதனைப் பதிவுசெய்தல் (Registration), காப்பீடு செய்தல் (Insurance) அவற்றினைப் பாதுகாத்திடும் பணிகளுக்கென ரூ.20 இலட்சங்கள் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

மேலும் இப்பல்கலைக்கழகத்தில், மகளிர் நலச் சட்ட மையம் மற்றும் தென்னிந்திய சட்ட வரலாற்று மையம் ஆகியவற்றைப் புதிதாக நிறுவுவதற்கென ரூ.11.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது:-

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புது டெல்லி;

(2) இந்திய பல்கலைக்கழக தேசிய சட்டப் பள்ளி, பெங்களூரு;

(3) இன்ஸ்டிடியூட் ஆப் இந்திய கம்பெனி செகரட்டரீஸ் அமைப்பு, புது டெல்லி;

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புது டெல்லி; மற்றும்

(5) தேசிய தொழில்நுட்ப அமைப்பு, திருச்சிராப்பள்ளி.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது:—

(1) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு, புது டெல்லி;

(2) இந்திய சமூக அறிவியல் கழகம், அலகாபாத்;

(3) சாஸ்திரி இந்தோ-கனடியன் அமைப்பு, புது டெல்லி;

(4) ஆசிய சட்ட அமைப்பு, சிங்கப்பூர்; மற்றும்

(5) நூலக மேம்பாட்டு இணைவமைவு (DELNET), புது டெல்லி.

2021 செப்டம்பர் 7]

மாநில சட்ட ஆணையம்

மாநில சட்ட ஆணையம், உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில் 15-6-2017 அன்று மீள அமைக்கப்பட்டது. அவ்வாறு மீள அமைக்கப்பட்ட மாநிலச் சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் அதன் தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து, 3 ஆண்டுகள் ஆகும். மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர், 19-6-2017 அன்று பதவியேற்றார். மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர் பதவிக் காலமானது 18-6-2020 அன்றுடன் நிறைவுற்ற நிலையில், அரசானது மேற்சொன்ன சட்ட ஆணையத்தின் பதவிக் காலத்தினை 19-6-2020-லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

மாநிலச் சட்ட ஆணையத்தின் செயற்பணிகளானது ஆங்கிலேய ஆட்சியின்போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதாகும் மற்றும் ஆணையத்தால் ஆய்வு செய்யப்பட்ட அந்த சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் தனது கருத்தினை அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை அரசுக்கு வழங்கும்.

உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் சட்ட ஆணையம் ஆய்வு செய்து மற்றும் அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும். மேலும்,

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

(இ) மாநிலங்களுக்கிடையேயான உறவுகளை மற்றும் மைய-மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

[2021 செப்டம்பர் 7

(ஈ) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கும் மற்றும் பரிந்துரைகளைச் செய்யும்; மற்றும்

(உ) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமில்லாமல் இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்.

மேலும், 10-7-2017 அன்று நடைபெற்ற தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாட்டில், சிறந்த நிர்வாகத்திற்கு, நிதி ஆயோக் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வரசால், "தமிழ்நாட்டில் உள்ள சட்டங்களை பகுத்தல்" என்ற பொருளை மாநிலச் சட்ட ஆணையத்திற்கு குறிப்பிட்டு, ஆணையத்தின் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறு 21-9-2017 ஆம் நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளது.

அதற்கேற்ப, தற்போதைய ஆணையம் இதுவரை 42 அறிக்கைகளை (13-வது அறிக்கை முதல் 54—வது அறிக்கை வரை) அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கைகளில், ஆணையமானது-

(i) 157 முதன்மைச் சட்டங்கள் மற்றும் 1,138 திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்யவும்;

(ii) 13 சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்யவும்; மற்றும்

(iii) 2 புதிய சட்டங்களை இயற்றவும் பரிந்துரை செய்துள்ளது.

மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் இதுவரை 243 சட்டங்களை மாநில அரசு நீக்கறவு செய்துள்ளது.

மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்

மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையம் சென்னை உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. பொன். கலையரசன் அவர்கள் தலைமையில் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பதவிக் காலம் அதன் தலைவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகும். மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் தலைவர் 2018 டிசம்பர் திங்கள் 7 ஆம் நாள் அன்று பதவியேற்றுக் கொண்டார்.

2021 செப்டம்பர் 7]

மாநிலச் (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பணிகளானது:-

(i) *தமிழில், சட்ட சொற்களுக்கான ஒரு சட்ட சொற்களஞ்சியம் (*Law Lexicon*) தயாரித்து அச்சிடுவது;*

(ii) *மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் அதன் கீழ்வகுக்கப்பட்ட விதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்;*

(iii) *மத்திய அரசின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், அதன் கீழ்வகுக்கப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் பிற அறிக்கைகளை மொழிபெயர்த்தல்;*

(iv) *மாநில அரசால் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு அவ்வப்போது அளிக்கப்படும் பிற பணிகளைச் செய்தல்.*

*மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம் இதுவரை 41 மத்திய சட்டங்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளது. மேலும் இவ்வாணையமானது சட்ட சொற்களஞ்சியம் (*Law Lexicon*) தயார் செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. ஆங்கில அகரவரிசை 'K' வரை 12,000-ற்கும் மேற்பட்ட சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மேற்படி ஆணையமானது, இந்திய அரசமைப்பின் 2021 ஜனவரி 31 ஆம் தேதி வரையிலான திருத்தங்களை உள்ளடக்கிய திருத்தப்பட்ட (நான்காவது) மறுபதிப்பினை இருமொழி (ஆங்கிலம் மற்றும் தமிழ்) வடிவத்தில் வெளியிட்டுள்ளது.*

சான்றுறுதி அலுவலர்கள்

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையச் சட்ட எண் 53/1952) பொதுவான வணிக நடைமுறையில் முறையாவணங்களைக் குறித்தல் மற்றும் சான்றிடுதல் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 29-1-2021 அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை 2,485 ஆகும்.

சான்றுறுதி அலுவலரின் நியமனம், தொழிற் சான்றிதழ் புதுப்பித்தல், தொழிலாற்றும் இடத்தின் விரிவாக்கம், தொழிற் சான்றிதழுக்கான நகல் வழங்குவதற்கான விண்ணப்பத்தினையும்

[*2021 செப்டம்பர் 7*

மற்றும் ஆண்டு விவர அறிக்கையினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக "tnnotary.tn.gov.in" என்ற இணையதள முகவரி 23—2—2021 அன்று தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்கு

நீடித்த வளர்ச்சி என்பது எதிர்கால தலைமுறையினரின் சொந்த தேவைகளை மேற்கொள்வதற்கான திறன்களை பாதிக்காதவண்ணம் தற்போதுள்ள தலைமுறையினரின் தேவைகளை மேற்கொள்ளும் வளர்ச்சியாகும். 17 இலக்குகளையும், 169 குறிக்கோள்களையும் கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கானது, ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழியப்பட்டு, 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்துறையின்கீழ் இயங்கிவரும் கல்வி நிறுவனங்களில் சட்டம் தொடர்பான கல்வியை வழங்குவதன் வாயிலாக நீடித்த வளர்ச்சி இலக்கு 16-ன் (அமைதி, நீதி மற்றும் வலுவான அரசு நிறுவனங்கள்) செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது.

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாக உள்ள இத்துறை, நீடித்த வளர்ச்சி இலக்கில், பிற துறைகளால் உருவாக்கப்படும் வளர்ச்சிக் கொள்கைகள், அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசமைப்பின் கூறுகளுக்கு இணங்கி உருவாக்கப்படுவதை உறுதி செய்கிறது. மேலும், இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதை உறுதி செய்வதில் பிற துறைகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது.

சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 7]

இணைப்பு-IV

(100 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

தொலைநோக்குப் பார்வை

மாநிலத்திலுள்ள அனைத்து மின் நுகர்வோருக்கும் தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகமும் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இவ்விரு கழகங்களின் நிதிநிலை மற்றும் நிர்வாக கட்டமைப்பு குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதன் மூலமும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், மின் உற்பத்தித் திறன் உயர்த்தப்படும். நவீன தொழில்நுட்பங்களையும், நுண் மின் கட்டமைப்புகளையும் பயன்படுத்தி, மின் சேமிப்பை உயர்த்துதல் மற்றும் விநியோகத்தில் மின் இழப்புகளைக் குறைத்தல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சந்திக்கும் பெரும் நிதி இழப்புகள் முற்றிலும் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துகின்றன. ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழித்தடம் மின் துறை முதலீட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய நிறுவனங்களின் நிதி மறுசீரமைப்பிற்காக விரிவாக ஆய்வு செய்யப்படும். அந்த அறிக்கையின்மீது அரசு விரைந்து செயல்பட்டு மின் வாரியத்தின் கழக நிறுவனங்கள் நொடிந்து போவதிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் தற்போது நிறுவப்பட்டுள்ள, சொந்த அனல் மின் உற்பத்தி நிறுவுதிறன் 4,320 மெகாவாட் மட்டுமே. அவற்றில் 2,520 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற 12 அலகுகள் 25 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை

[*2021 செப்டம்பர் 7*

என்பதால் விரைவில் அவை மாற்றப்பட வேண்டும். இந்த அரசு, தமிழ்நாட்டிற்குப் போதிய மின்சாரம் வழங்குவதற்கு உத்தரவாதம் அளிப்பது மட்டுமின்றி, தமிழ்நாடு நெடுங்காலம் வரையில் யாதொரு மின் பற்றாக்குறையும் அற்ற மாநிலமாக இருப்பதை உறுதி செய்யும் வகையில், தற்போது நிறுவப்பட்டுள்ள மின் உற்பத்தித் திறனை சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் முறையாக உயர்த்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

மாநிலத்தில் 24 மணி நேரமும் நம்பகமான மின் விநியோகத்தை பராமரிக்க அனைத்துவகை முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தரமான மின்சாரம் வழங்குவதுடன் நுகர்வோருக்கு சேவை வழங்கும் நோக்குடன் மின் துறை தொடர்பான அனைத்து புகார்களையும் தெரிவிக்க சேவை மையமான மின்னகம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 19.06.2021 முதல் 28.06.2021 வரை கூடிய 10 நாட்களில் தமிழகத்தில் சில பகுதிகளில் அடிக்கடி ஏற்பட்ட மின்தடையை நீக்கும் நோக்குடன் இடையூறாக இருந்த மரக்கிளைகளை அகற்றுதல், பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றுதல், சாய்ந்த மின் கம்பங்களைச் சரி செய்தல், தாழ்வாக செல்லும் மின் கம்பிகளை சரி செய்வதற்காக கூடுதல் மின் கம்பங்களை நிறுவுதல், பழுதடைந்த மின் பெட்டிகளை மாற்றுதல் மற்றும் துணை மின் நிலையங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அரசானது, அனைத்து வகை மின் நுகர்வோர்களுக்கும் நிலையான, தரமான மற்றும் நியாயமான விலையில் மின்சாரத்தை வழங்கும் இலட்சியப் பார்வையுடன் எரிசக்தி தொலைநோக்குத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. தற்பொழுது பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் அனல் மின் உற்பத்தித் திட்ட பணிகளை முடிக்க போர்க்கால அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு மின் உற்பத்தியை அதிகரிப்பதுடன், சூரிய மின்சக்தி மற்றும் காற்று போன்ற மாசுபடாத ஆற்றல் மூலங்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது. கால நிலை மாற்ற நிகழ்ச்சி நிரலின் (agenda) குறிக்கோளின்படி, மொத்த எரிசக்தி உற்பத்தித் திறனில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கினை அதிகரிக்கும் நோக்குடன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியினை மின் கட்டமைப்பில் ஒருங்கிணைக்க எதிர்கொள்ளும் சவால்களை முழுமையாக களைய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

2021 செப்டம்பர் 7]

எரிசக்தித் துறை

மின்சாரம் என்பது நம் வாழ்வின் அனைத்து அம்சங்களுக்கும் இன்றியமையாத தேவையாகும். மேலும் இது பொருளாதார வளர்ச்சிக்கான மிக முக்கியமான உள்ளீடாக இருப்பதுடன், வறுமை ஒழிப்பிற்கான முக்கிய உந்துசக்திகளில் ஒன்றாகும். அதிகரித்துவரும் மின் தேவையை பூர்த்தி செய்ய மின் உற்பத்தித் திறனை உயர்த்துவதுடன் மின் தொடரமைப்பு மற்றும் விநியோக-கட்டமைப்பை விரிவுப்படுத்துதல் அவசியமாகிறது.

மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தரமான மின்சாரம் வழங்குவதற்காக, தற்போதுள்ள அனல் மின் நிலையங்களின் செயல்திறனை மேம்படுத்துவதுடன், மின் தொடரமைப்பு மற்றும் விநியோகத்தின் செயல்திறனை மேம்படுத்தவும், புதிய மின் திட்டங்களை கட்டமைப்பில் சேர்ப்பதற்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

எரிசக்தித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில், கீழ்க்கண்ட அமைப்புகள் செயல்படுகின்றன:

I. தமிழ்நாடு மின்சார வாரியமானது தற்போது, தநாமிவா நிறுவனம் (TNEB Ltd - உடைமை நிறுவனம்) மற்றும் கீழ்க்கண்ட இரண்டு துணை நிறுவனங்களாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
   i) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) மற்றும்
   ii) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் (TANTRANSCO)
II. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (TEDA)
III. அரசு மின் ஆய்வுத் துறை (CEIG)
IV. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TNPFC)

தநாமிவா நிறுவனம்

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. (512)

பொருள் வரும் வழிகளைக் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.

[2021 செப்டம்பர் 7

1.1 முன்னுரை:

1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின்கீழ் (1948-ன் ஒன்றிய சட்டம் 54) நிறுவப்பட்ட தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார சட்டம், 2003-ன் (2003-ன் ஒன்றிய சட்டம் 36)-ன்படி 01.11.2010 முதல் தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனம் (உடைமை நிறுவனம்) மற்றும் இரண்டு துணை நிறுவனங்களான, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் என சீரமைக்கப்பட்டது. மின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் ஆகியவற்றை சீரிய முறையில் மேற்கொண்டு மின் பயனீட்டாளர்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்குவதே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் முதன்மையான குறிக்கோள்களாகும்.

தமிழ்நாட்டின் சராசரி மின் தேவை, ஏறக்குறைய 15,000 மெகாவாட் மற்றும் கோடை உச்ச மின் தேவை சுமார் 17,000 மெகாவாட் ஆகும். மாநிலத்தின் அதிகபட்ச மின் தேவையான 16,846 மெகாவாட்டை 10-04-2021 அன்று பூர்த்தி செய்துள்ளது. 2020-21 ஆம் ஆண்டில், மாநிலத்தின் தினசரி சராசரி மின் நுகர்வு, 290-300 மில்லியன் யூனிட் ஆகும். மேலும், 372.702 மில்லியன் யூனிட் உச்சகட்ட மின் நுகர்வை 09-04-2021 அன்று எட்டியுள்ளது.

1.2 மின் உற்பத்தி

1.2.1 – மின் நிறுவுதிறன்–01.04.2021 அன்றுள்ளபடி

வ. எண்	உற்பத்தி வகை	நிறுவு திறன் (மெகாவாட்டில்)	நிறுவு திறன் மொத்த சதவிகிதத்தில்
	மரபுசார் எரிசக்தி ஆதாரங்கள்		
1	அனல் மின் நிலையங்கள்	4,320.00	13
2	எரி வாயு மின் நிலையங்கள்	516.08	2
தமிழக அரசின் அனல் மற்றும் எரி வாயு மொத்தம்		4,836.08	
3	ஒன்றிய அரசின் மின் நிலையங்கள்	6,558.00	20
4	தனியார் உற்பத்தி		
	தற்சார்பு மின் திட்டங்கள் (IPP)	633.30	2

2021 செப்டம்பர் 7]

வ. எண்	உற்பத்தி வகை	நிறுவு திறன் (மெகாவாட்டில்)	நிறுவு திறன் மொத்த சதவிகிதத்தில்
	நீண்டகால மின் கொள்முதல்	2,830.00	9
	நடுத்தர கால மின் கொள்முதல்	550.00	2
	மொத்த தனியார் மின் உற்பத்தி	4,013.30	
5	தன் பயன் மின் திட்டங்கள் *	812.09	2
மொத்த மரபுசார் எரி சக்தி ஆதாரங்கள் மற்றும் மின் கொள்முதல்		16,219.47	50
	மரபுசாரா எரி சக்தி ஆதாரங்கள்		
1	அரசுக்கு சொந்தமான நீர் மின் நிலையங்கள்		
	நீர் பாசனம் அல்லாத புனல் மின் நிலையங்கள்	1,030.65	
	நீரேற்று தேக்க மின் நிலையம்	400.00	
	நீர் பாசன அடிப்படையிலான புனல் மின் நிலையங்கள்	891.25	
தமிழக அரசின் நீர் மின் நிலையங்கள் மொத்தம்		2,321.90	7
2	காற்றாலை **	8,565.90	26
3	சூரிய ஒளி	4,511.30	14
4	தாவரக்கழிவு	265.59	1
5	இணை மின் உற்பத்தி நிலையங்கள்	710.90	2
மரபுசாரா எரி சக்தி ஆதாரங்களின் மொத்தம்		16,375.59	50
	அனைத்து மொத்தம்	32,595.06	100

* புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான தன்பயன்/மூன்றாம் தரப்பு வகையின மின் உற்பத்தியாளர்களுக்கு, திறந்த நுழைவுரிமையின் வாயிலாக, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின், (TANTRANSCO–வின்) மின் தொடரமைப்பு மூலம், TANGEDCO வின் மிக உயர்மின் அழுத்த/ உயர் மின் அழுத்த நுகர்வோருக்கு மின்சாரம் கடத்த அனுமதிக்கப்பட்ட அளவு.

** மத்திய மின் தொடரமைப்புடன் (CTU) இணைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் (WEGs) நீங்கலாக. 01.04.2021 அன்றுள்ளபடி 1019.11 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் (WEGs) மத்திய மின் தொடரமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 7

1.2.2 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான மின் நிலையங்கள்:

அ) அனல் மின் நிலையங்கள்

அனல் மின் நிலையத்தில், நிலக்கரி முக்கிய எரிபொருளாகவும், எண்ணெய் இரண்டாம் நிலை எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தற்போது மேட்டூர் அனல் மின் நிலையம்-I, வடசென்னை அனல் மின் நிலையம்-I, தூத்துக்குடி அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம்-II மற்றும் வடசென்னை அனல் மின் நிலையம்-II ஆகிய 5 அனல் மின் நிலையங்களைக் கொண்ட 4,320 மெகாவாட் மொத்த மின் உற்பத்தித் திறனை கொண்டுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையம்-I, வடசென்னை அனல் மின் நிலையம்-I மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உள்ள 210 மெகாவாட் அலகுகள் 25 முதல் 40 ஆண்டுகளுக்கு மேலாக இயக்கத்தில் உள்ளதால் அவற்றைப் புதுப்பித்தல் மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான அனல் மின் நிலையங்களின் செயலிழப்பு நேரத்தை குறைப்பதன்மூலம் முழுத் திறனுடன் இயங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

வடசென்னை அனல் மின் நிலையம்-1 (3x210 மெகாவாட்)

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 210 மெகாவாட் உற்பத்தி திறனுடன் 3 அலகுகளை கொண்ட வடசென்னை அனல் மின் நிலையம்—1ன் மொத்த நிறுவு திறன் 630 மெகாவாட் ஆகும். இதன் உற்பத்தித் திறனானது தொடர்ந்து குறைந்து வருகிறது.

2006-07 முதல் 2020-21 வரை சராசரி சுமை காரணி

வருடம்	2006-2011 ஆண்டு சராசரி %	2011-2016 ஆண்டு சராசரி %	2016-2021 ஆண்டு சராசரி %
நிலைய சுமை காரணி	85.75%	81.68%	65.58%

வடசென்னை அனல் மின் நிலையம் - II (2 x 600 மெகாவாட்)

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 600 மெகாவாட் உற்பத்தி திறனுடன் 2 அலகுகளை கொண்ட வடசென்னை அனல்

2021 செப்டம்பர் 7]

மின் நிலையம் நிலை—IIன் மொத்த நிறுவு திறன் 1200 மெகாவாட் ஆகும்.

கடந்த 7 வருடங்களில் நிலைய சுமை காரணி முறையே 2014-15 முதல் 2020-21

வருடம்	2014-2016 ஆண்டு சராசரி %	2016-2021 ஆண்டு சராசரி %
நிலைய சுமை காரணி	58%	54%

மேட்டூர் அனல் மின் நிலையம்-I (4x 210 மெகாவாட்):

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் அமைந்துள்ள 210 மெகாவாட் உற்பத்தி திறனுடன் 4 அலகுகளைக் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையம்-Iன் மொத்த நிறுவு திறன் 840 மெகாவாட் ஆகும்.

2006-07 முதல் 2020-21 வரை சராசரி சுமை காரணி

ஆண்டு	2006-2011 ஆண்டு சராசரி %	2011-2016 ஆண்டு சராசரி %	2016-2021 ஆண்டு சராசரி %
நிலைய சுமை காரணி	86%	86%	67%

மேட்டூர் அனல் மின் நிலையம் – II (1 X 600 மெகா வாட்):

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் அமைந்துள்ள மேட்டூர் அனல் மின் நிலையம் – II, 600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒற்றை அலகு ஆகும்.

கடந்த 7 வருடங்களில் நிலைய சுமை காரணி முறையே 2014-15 முதல் 2020-21

வருடம்	2014-2016 ஆண்டு சராசரி %	2016-2021 ஆண்டு சராசரி %
நிலைய சுமை காரணி	66%	50%

தூத்துக்குடி அனல் மின் நிலையம் (5 x 210 மெகாவாட்)

தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள 210 மெகாவாட் உற்பத்தி திறனுடன் 5 அலகுகளைக் கொண்ட தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மொத்த நிறுவு திறன் 1,050 மெகாவாட் ஆகும்.

[*2021 செப்டம்பர் 7*

2006-07 முதல் 2020-21 வரை சராசரி சுமை காரணி

வருடம்	2006-2011 ஆண்டு சராசரி %	2011-2016 ஆண்டு சராசரி %	2016-2021 ஆண்டு சராசரி %
நிலைய சுமை காரணி	82.99%	84.32%	57.67%

நிலைய சுமை காரணியானது மின் நிலைய உற்பத்தித் திறனின் சுமை சதவீதத்தை குறிக்கிறது, உற்பத்தி நிலையங்கள் இயக்கபடவில்லையானால் பற்றாகுறை மின்சாரத்தை, மின் பரிமாற்றத்தில் இருந்தும் விலை உயர்ந்த பிற ஆதாரங்களில் இருந்தும் மின் கொள்முதல் செய்வதன்மூலம் ஈடுசெய்யப்படுகிறது.

அனல் மின் நிலைய மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

திருத்தப்பட்ட சுற்றுச்சூழல் விதிமுறைகளுக்கு இணங்க மற்றும் சல்பர் ஆக்சைடுகளின் (Sulphur oxides (Sox)) உமிழ்வைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், மேட்டூர் அனல் மின் நிலையம் II மற்றும் வடசென்னை அனல் மின் நிலையம் II ஆகிய இரண்டு அனல் மின் நிலையங்களிலும் புகை போக்கி வளிமக் கந்தக நீக்கி (Flue Gas De-sulphurisation (FGD)) நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ) புனல் மின் நிலையங்கள்:

புனல் மின்சாரம் நீரிலிருந்து பெறப்படும் எரிசக்தி ஆகும். இது மாசு இல்லாத மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு குறைந்த உற்பத்தி செலவு வழிமுறைகளில் ஒன்றாகும் மற்றும் உச்சகட்ட மின் தேவையைச் சமாளிக்க நெகிழ்வான ஆற்றல் முறையாகும். மேலும், இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களை மின் கட்டமைப்புடன் திறம்பட ஒருங்கிணைக்க ஏதுவாக இருக்கும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமாக 47 புனல் மின் உற்பத்தி நிலையங்கள் (2321.90 மெகாவாட் மின் நிறுவுதிறன் கொண்ட 107 இயந்திரங்கள்) ஈரோடு, காடம்பாறை, குந்தா மற்றும் திருநெல்வேலி புனல் மின் உற்பத்தி வட்டங்களில் செயல்பட்டு வருகிறது. நீர் சேமிப்பு மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் புனல் மின் நிலையங்கள் விவரம் பின்வருமாறு:

2021 செப்டம்பர் 7]

அ.	நீர்ப்பாசனத்திற்கான நீர்த்தேக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட புனல் மின் நிலையங்கள் (29)	:	891. 25 மெகாவாட்
ஆ.	நீர்ப்பாசனத்திற்கு அல்லாத நீர்த்தேக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட புனல் மின் நிலையங்கள் (17)	:	1030. 65 மெகாவாட்
இ.	நீரேற்று புனல் மின் நிலையங்கள் (1)	:	400 மெகாவாட்

புனல் மின் நிலையங்களின் செயல்பாடு வருடாந்திர மழை, நீர்த்தேக்க சேமிப்புத் திறன், நீர்ப்பாசன தேவை மற்றும் உச்ச மின் தேவை ஆகியவற்றைப் பொருத்தே இயக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும், மத்திய மின்சார ஆணையம் (Central Electricity Authority - CEA) நீர்மின் உற்பத்திக்கான இலக்கை நிர்ணயிக்கிறது. 2021-22 ஆம் ஆண்டில் மத்திய மின்சார ஆணையம் நிர்ணயித்த நீர் மின் உற்பத்தி இலக்கு 3,853.74 மில்லியன் யூனிட் ஆகும், இதில் ஜூலை 2021 வரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் புனல் மின் நிலையங்களின் உற்பத்தி 1,475.80 மில்லியன் யூனிட் ஆகும்.

கடந்த 15 வருடங்களின் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நீர்மின் நிலையங்களின் செயல்திறன் சுருக்கம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

ஆண்டு	மத்திய மின்சார ஆணையத்தின் இலக்கு (மில்லியன் யூனிட்டில்)	மின் உற்பத்தி (மில்லியன் யூனிட்டில்)	நிலைய சுமை காரணி %	நிலைய இருப்பு காரணி %	மின் உற்பத்திக்கான செலவு (பைசாவில்)
2006-07	4250	6290.61	33	91.32	54.60
2007-08	4491	6455.16	34	91.68	60.22
2008-09	4600	5385.8	34	90.14	71.30
2009-10	4700	5640.33	29	89.76	76.95
2010-11	4935	5105.09	27	87.25	78.30
2011-12	4695	5350.69	28.98	90.80	28.42
2012-13	5061	2896.32	22.78	85.26	47.27
2013-14	4656	5098.68	25.02	85.84	29.98
2014-15	5061	5187.59	25.86	88.32	36.21

2015-16	4940	4641.15	24.35	83.29	43.18
2016-17	4901	2505.23	19.85	89.14	97.48
2017-18	4415	2674.53	21.03	89.45	88.01
2018-19	3561	5257.57	28.68	80.56	54.78
2019-20	3890	4780.37	24.72	79.84	68.16
2020-21	4040	5141.78	25.73	77.09	54.49

2007-2008-ம் வருடத்தில் அதிகபட்சமாக 6,455.16 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டது. 2016-17 மற்றும் 2017-2018 ஆம் வருடத்தில் குறைந்த மின் உற்பத்தியாக முறையே 2505.23 மில்லியன் யூனிட்டுகள் மற்றும் 2.674.53 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

நீரேற்று புனல் மின் நிலையம்

நீரேற்று புனல் மின் நிலையங்களில் நீரின் பாதையை எதிர்ப்புறமாகத் திருப்பத்தக்க வசதிகள் உள்ளன, இதன்மூலம் நீரை மீண்டும் நீர்த் தேக்கத்திற்கே ஏற்ற இயலும். மலையிலிருந்து கீழ்நோக்கிக் செல்லும் நீரின் சக்தியானது பின்னர் வழக்கமாக இயங்கும் நீர்மின் நிலையங்களைப் போலவே மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இந்த மின் நிலையங்களின்மூலம் மின்சாரத்தை சேமித்து வைக்க இயலுவதால் காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தியின் நிலையற்ற தன்மையை சமன் செய்ய ஏதுவாகிறது.

நீரேற்று மின் நிலையங்கள் மின்னாற்றல் சேமிப்பிற்கு அதிகம் பயன்படுத்தப்படுவதுடன் மின்சுமையை சமநிலைப்படுத்துவதற்கும் மிகவும் அவசியமானது. மின் தேவை அதிகம் இல்லாத நேரங்களில் (அதிர்வெண் வரம்பு 50 HZ to 50.5 HZ) உள்ள உபரியான மின் சக்தியை, கீழ் நீர்த் தேக்கத்திலிருந்து நீரை மேல் நீர்த்தேக்கத்திற்கு ஏற்றுவதற்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

காடம்பாறை நீரேற்று புனல் மின் நிலையம் (4x100 மெகா வாட்)

காடம்பாறை புனல் மின் நிலையம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி தாலுகாவிலுள்ள ஆனைமலையில் நிறுவப்பட்டுள்ளது. இந்த, மின் நிலையம் காடம்பாறை அணையை மேல் நீர்த்தேக்கமாகவும், மேல் ஆழியாறு அணையை கீழ் நீர்த்தேக்கமாகவும் கொண்டு செயல்படுகிறது. இந்த புனல் மின் நிலையமானது, முந்தைய தமிழ்நாடு மின்சார வாரியத்தால்

2021 செப்டம்பர் 7]

நிலமட்டத்திற்கு கீழே இந்தியாவிலேயே முதன் முதலில் அமைக்கப்பட்ட அதிக நீர் சேமிப்பு கொண்ட நீரேற்று மின் நிலையமாகும். இந்த மின் நிலையம், நீரேற்று புனல் மின் நிலையமாக வடிவமைக்கப்பட்டதால் மிகவும் அவசியமான உச்ச மின் தேவை ஏற்படும் காலங்களில் தமிழ்நாட்டின் மின் கட்டமைப்பில் கூடுதல் உற்பத்தியாக இணைக்கப்படும்.

உச்ச மின் தேவையின்போது மின் உற்பத்திக்கு தேவையான நீர், காடம்பாறை அணையிலிருந்து மேல் ஆழியாறு அணைக்கு வெளியேற்றப்படுகிறது. உச்ச மின் தேவை இல்லாத காலங்களில், இருவழி மின் சுழலியின் மூலமாக நீர், மேல் ஆழியாறு அணையிலிருந்து காடம்பாறை அணைக்கு ஏற்றப்படுகிறது.

காடம்பாறை மின் நிலையமானது 100 மெகாவாட் மின் திறன் கொண்ட நான்கு அலகுகள் கொண்டதாகும். காடம்பாறை மின் நிலையத்தின் அலகு 1 மற்றும் 2 முறையே 25-08-2020 மற்றும் 08-02-2021 அன்றும் அலகு 3 மற்றும் அலகு 4 ஏப்ரல் 2021-ல் செயலிழந்தது. பழுதுகள் சரி செய்யப்பட்டபின் அலகு 1, அலகு 2 மற்றும் அலகு 3 முறையே 03-08-2021, 13.07.2021 மற்றும் 15-07-2021-ல் சரிசெய்யப்பட்டு, மீண்டும் உற்பத்தியைத் துவங்கியுள்ளது.

புனல் மின் நிலையங்களை புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் செயல்திறன் உயர்த்தும் பணிகள்:

*அனைத்து புனல் மின் நிலையங்களும் மிகவும் பழமையானவை; மேலும் செயல்பாட்டிற்கு வந்து ஆண்டுகள் பல ஆனதாலும் மற்ற பிற இயந்திர கோளாறுகள் மற்றும் குறைந்த நீர் சேமிப்பு போன்ற பிரச்சினைகள் காரணமாக பெரும்பான்மை நிலையங்களில் முழு உற்பத்தி சுமை திறனை அடைய இயலவில்லை. இதனை, சீர்செய்யும் நோக்குடன், புனல் மின் நிலையங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் செயல்திறன் உயர்த்தும் பணிகள் (*Renovation, Modernization and Up-rating RMU*) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, மோயாறு மற்றும் கோதையாறு புனல் மின் நிலையங்களில் புதுப்பித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் செயல்திறன் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

(Dam Rehabilitation and Improvement Project DRIP)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் சுமார் 76 பெரிய மற்றும் சிறிய அணைகள், தடுப்பணைகள் மற்றும்

[*2021 செப்டம்பர் 7*

தடுப்புசுவர் உடைய நீர்நிலைக் கட்டமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டு மின் உற்பத்திக்காக இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த நீர்நிலைக் கட்டமைப்புகள் தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, மதுரை, ஈரோடு, தேனி, நாமக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைந்துள்ளன.

அணைகளில் பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு செயல்திறனை மேம்படுத்தி அதன்மூலம் நீடித்த, மற்றும் நம்பகமான நீர்மின் சக்தியை உற்பத்தி செய்யும்பொருட்டு தேர்ந்தெடுக்கப்பபட்ட அணைகளுக்கு, அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டமானது (DRIP) உலக வங்கி நிதி உதவியுடன் மத்திய நீர் வள ஆணையம் மூலமாக மாநில அரசு பங்கேற்புடன், அடுத்த 5 ஆண்டுகளில் 27 அணைகளுக்கான புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான 27 அணைகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்ட பணிகளுக்காக, ரூ.461/- கோடி செலவில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 11 அணைகளில் ரூ.60 கோடி மதிப்பிற்கு பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அணைகளில் பணிகள் தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்டு அடுத்த 5 ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும்.

(இ) எரிவாயு சுழலி மின் நிலையங்கள்:

எரிவாயு சுழலி மின் நிலையங்களில், இயற்கை எரிவாயுவை (எல்என்ஜி) முக்கிய எரிபொருளாகவும், எண்ணெயை இரண்டாம் நிலை எரிபொருளாகவும் கொண்டு தேவையான வெப்பநிலையிலும், அழுத்தத்திலும் எரிவாயுவை உற்பத்தி செய்து, எரிவாயு சுழலிகளால் இயக்கப்படும் மின்ஆக்கிகள் மூலம் மின்சாரமானது உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான எரிவாயு சுழலி மின் நிலையங்களில், இந்திய எரிவாயு கழகத்தால் (M/s. GAIL) வழங்கப்படும் இயற்கை எரிவாயுவின் அளவிற்கு ஏற்பத்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம்

மின் உற்பத்தியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இது ஒரு மைல்கல்லாகும், மேலும், மத்திய மின்சார

2021 செப்டம்பர் 7]

*ஆணையம் (*Central Electricity Authority*) நிர்ணயித்த இலக்கைவிட அதிகமாக மின் உற்பத்தி சாதனையை செய்ததுடன் அனல் மின் நிலையங்களின் உற்பத்தி செலவுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவாகவும் உள்ளது.*

வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம் அலகு–I

*95 மெகாவாட் மின் நிறுவுதிறனுடன் இந்நிலையம் இயக்கி வைக்கப்பட்டு, அதிகபட்சமாக 87 சதவிகித நிலைய சுமை காரணி (*Plant Load Factor*) எட்டியுள்ளது. பழுது காரணமாகவும், பராமரிப்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாகவும் நிலைய சுமை காரணி (*PLF*) ஆண்டுதோறும் குறைந்து கொண்டு வருகிறது. மேலும், 23.11.2020 முதல் இந்த அலகில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டு மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரபட்டுள்ளது.*

வழுதூர் எரிவாயு சுழலி மின் நிலையம் அலகு–II

92.2 மெகாவாட் மின் நிறுவுதிறனுடன் 2008 ஆம் ஆண்டில் இந்நிலையம் இயக்கிவைக்கப்பட்டது. நிலைய சுமை காரணி 75%-35% இடையே ஏற்ற இறக்கத்துடன் இருந்தது. இந்த ஆண்டின் இறுதியில் இரண்டாவது அலகின் முழு ஆய்வு பராமரிப்புப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளது. மின் உபகரண உற்பத்தியாளருடன் கலந்தாலோசித்து அலகு பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையம்

*101 மெகாவாட் மின் நிறுவுதிறனுடன் இந்நிலையம் இயக்கிவைக்கப்பட்டது. இந்திய எரிவாயு கழகம், (*M/s.GAIL*) குறைந்த அளவு எரிவாயு ஒதுக்கியது காரணமாக நிலைய சுமை காரணி 43% என்ற அளவிற்கு குறைந்தது. ஒப்புக்கொள்ளப்பட்ட எரிவாயுவின் அளவான 4,50,000 கன மீட்டருக்கு பதிலாக 2,03,000 கன மீட்டர் அளவே வழங்கப்பட்டது. குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையத்திற்கு, எண்ணெய் இயற்கை எரிவாயு கழகத்தின் மதனம் எரிவாயு கிணற்றிலிருந்து (*M/s. Oil Natural Gas Corporation's Madanam gas field*) கூடுதல் அளவு இயற்கை எரிவாயுவை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கப்பெறும் அளவு படிப்படியாக அதிகரித்து 04.08.2021 அன்று 2,44,688 கன மீட்டர் என்ற அளவை அடைந்தது. இது மின்*

[2021 செப்டம்பர் 7

உற்பத்தியை மேம்படுத்துவதுடன் மாறுபடும் செலவை (variable cost) எதிர்காலத்தில் குறைக்கும்.

திருமாக்கோட்டை எரிவாயு சுழலி மின் நிலையம்

107.88 மொகாவாட் மின் நிறுவுதிறனுடன் 2001 ஆம் ஆண்டில் இயக்கி வைக்கப்பட்டது. ஒப்புக்கொள்ளப்பட்ட அளவான நாளொன்றுக்கு 4,50,000 கன மீட்டர் என்ற அளவிற்குப் பதிலாக நாளொன்றுக்கு 1,49,101 கன மீட்டர் எரிவாயு அளவே திருமாக்கோட்டை எரிவாயு சுழலி மின் நிலையத்திற்கு இந்திய எரிவாயு கழகத்தால் வழங்கப்படுவதால் நிலைய சுமை காரணி படிப்படியாக 22% என்று குறைந்துள்ளது.

இந்திய எண்ணெய் கழகம் (M/s.IOCL) எண்ணூரிலிருந்து தூத்துக்குடி வரை திரவநிலை எரிவாயு கொண்டு செல்லும் குழாய்களை அமைத்து வருகிறது. திருமாக்கோட்டை எரிவாயு சுழலி மின் நிலையத்தில் எரிவாயு குறைவை ஈடுசெய்ய, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், இந்திய எண்ணெய் கழகத்தை (M/s.IOCL) திரவநிலை எரிவாயுவை (R-LNG) மின் உற்பத்தி செலவின் அடிப்படையில் வழங்குவதற்கு அணுகவுள்ளது.

பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் நிலையம்

120 மெகாவாட் (4X30 மெகாவாட்) மின் நிறுவுதிறனுடன் இயக்கி வைக்கப்பட்டது. இந்நிலையத்தில் உபயோகப்படுத்தும் எரிபொருளின் விலை மிகவும் அதிகமாக உள்ளதால் மின் உற்பத்தியின் விலை ஒரு கிலோவாட்டிற்கு ரூ.15.72 ஆகும். ஆகையால் அவசர காலங்களில் மட்டும் இந்த மின் நிலையம் இயக்கப்படுகிறது. பேசின் பாலம் மின் நிலையத்தை குறைந்த மாறுதல் விலை கொண்ட (variable cost) மின் நிலையமாக மாற்ற நாப்தா எரிபொருளுக்கு பதிலாக திரவநிலை எரிவாயு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1.2.3 ஒன்றிய அரசின் மின் நிலையத்தில் இருந்து கிடைக்கும் மின்சாரம்

மின் தேவையைப் பூர்த்தி செய்யவும் மற்றும் நம்பகமான விநியோகத்தைப் பராமரிக்கவும், ஒன்றிய அரசு மின் அமைச்சகத்தின் பங்குகளை ஒன்றிய அரசு மின் உற்பத்தி நிலையங்கள் ஒதுக்கியதன் அடிப்படையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்

2021 செப்டம்பர் 7]

பகிர்மான கழகத்தால் நீண்டகால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

வ. எண்	மத்திய மின் நிலையங்கள்	பங்கு (மெகாவாட்)
1	*ராமகுண்டம் திட்டம் 1 &2*	*524*
2	*ராமகுண்டம் திட்டம் 3*	*131*
3	*தால்ச்சர் திட்டம் 2*	*496*
4	*சிம்மாத்ரி திட்டம் 2*	*224*
5	*குட்கி அலகு 1, 2 & 3*	*346*
6	*தமிழ்நாடு மின்சார வாரியம் - தேசிய அனல் மின் கழகம் கூட்டு முயற்சி மின் திட்டம் - வல்லூர்*	*1064*
7	*நெய்வேலி திட்டம் 2 நிலை 1*	*188*
8	*நெய்வேலி திட்டம் 2 நிலை 2*	*281*
9	*நெய்வேலி திட்டம் 1 விரிவாக்கம்*	*226*
10	*நெய்வேலி திட்டம் 2 விரிவாக்கம்*	*270*
11	*புது நெய்வேலி அனல் மின் திட்டம்*	*655*
12	*தமிழ்நாடு மின்சார வாரியம் - நெய்வேலி அனல் மின் நிலையம் கூட்டு முயற்சி மின் திட்டம் - தூத்துக்குடி*	*411*
13	*கல்பாக்கம் அணு மின் நிலையம்*	*331*
14	*கைகா அணு மின் நிலையம் அலகு 1 & 2*	*119*
15	*கைகா அணு மின் நிலையம் அலகு 3 & 4*	*105*
16	*கூடங்குளம் அணு மின் நிலையம் அலகு 1*	*589*
17	*கூடங்குளம் அணு மின் நிலையம் அலகு 2*	*563*
18	*கிழக்கு மண்டல உதவி*	*35*
	மொத்தம்	**6,558**

1.2.4 தனியார் உற்பத்தியாளர்கள் மற்றும் மின் பரிமாற்ற வர்த்தகத்திடமிருந்து மின் கொள்முதல்

மரபுசார் எரிசக்தி ஆதாரங்களின் உற்பத்தியானது நிலக்கரி, நீர், எரிவாயு ஆதாரங்களின் இருப்பு குறைவதாலும், பல்வேறு தொழில்நுட்ப சிக்கல்களால் ஏற்படும் எதிர்பாராத மின் உற்பத்தித் தடையாலும் நிகழ்நேர மின் உற்பத்தியானது குறைகின்றது.

[*2021 செப்டம்பர் 7*

வானிலையில் ஏற்படும் திடீர் மாறுபாடு காரணமாக முந்தைய நாள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி கணிப்பிலும் மற்றும் மின்தேவைக் கணிப்பிலும் செயல் திட்டத்திற்கு மாறாக சில நேரங்களில் விலகலுக்கு உட்படுகிறது. எனவே, நிகழ்நேர செயல்பாட்டில் உற்பத்தி மற்றும் தேவைக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்க தனியார் உற்பத்தியாளர்கள் மற்றும் மின் பரிமாற்ற வர்த்தகத்திடமிருந்து மின் கொள்முதல் செய்யப்படுகிறது.

மத்திய மின்சக்தி ஒழுங்குமுறை ஆணையம் (CERC) மத்திய மின்கட்டமைப்பில் இருந்து எடுக்கப்படும் மின்சக்திக்கு திட்டமிட்ட (Schedule Quantum) விலக்கு வரம்பை நிர்ணயித்துள்ளது. இந்த வரம்பைத் தாண்டிய எந்தவொரு விலகலுக்கும் அபராதம் விதிக்கப்படும். தமிழ்நாடு மின்கட்டமைப்பில் அதிக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளதால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மின்சக்தியில் திடீர் மாறுபாடு ஏற்படுவதால் மத்திய கட்டமைப்பிலிருந்து விலகல் வரம்பிற்கு அதிகமாக அல்லது குறைவாக இருக்கும்போது அபராதம் செலுத்த வேண்டி உள்ளது.

நிகழ்நேர செயல்பாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியில் திடீர் உயர்வு அல்லது வீழ்ச்சி மற்றும் உச்ச நேரங்களில் மின்கட்டமைப்பை நிர்வகிப்பதற்காகவும் நீரேற்று புனல் மின் உற்பத்தி திட்டம், இயந்திர எரிவாயு மின் நிலையங்கள் போன்ற பல சமநிலை ஆதாரங்களை நிறுவ தேவை ஏற்படுகிறது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இதுபோன்ற பல சமநிலை ஆதாரங்களை நிறுவ நடவடிக்கை எடுத்துவருகிறது.

கட்டமைப்பு ஒழுக்கத்திற்கான உள்-மாநில மின் கணிப்பு விலகல் தீர்வு முறை (Deviation Settlement Mechanism)

தடையற்ற மின் விநியோக இலக்கை நோக்கி மின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அனைத்து மின் உற்பத்தியாளர்களும் மார்ச் 2019 இல் மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வகுக்கப்பட்ட, மின்கணிப்பு விலகல் தீர்வு முறை மற்றும் அதன் சம்பந்தமான ஒழுங்குமுறைகளின் தொகுப்பின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த விதிமுறைகளின்படி, அனைத்து மின் உற்பத்தியாளர்களும் (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியாளர்கள் உட்பட

2021 செப்டம்பர் 7]

அரசுக்கு சொந்தமான மற்றும் தனியார் மின் உற்பத்தியாளர்கள்) கட்டமைப்பு செயல்பாட்டிற்கு பயனுள்ள வகையில் மின் திட்டமிடலுக்கான அடிப்படையில், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை திட்டமிட்டு, முன் அறிவிப்பு செய்ய வேண்டும். திட்டமிட்டதிலிருந்து ஏதேனும் விலகல் ஏற்பட்டால், விலகல் தீர்வு முறை (Deviation Settlement Mechanism) செயல்படுத்தப்பட்டு, அந்தந்த மின் உற்பத்தியாளர்களால் மாநில பொது விலகல் தீர்வு முறை கணக்கில் செலுத்தப்பட வேண்டிய விலகல் தீர்வு முறை கட்டணங்கள் சுட்டிக்காட்டப்படும். உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் முன் அறிவிப்பை விட அதிகமாக இருந்தால், அதற்குண்டான விலை மாநில பொது விலகல் தீர்வு முறை கணக்கில் இருந்து மின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும். மாநில பொது விலகல் தீர்வு முறை கணக்கு மாநில மின் சுமை பகிர்மான மையத்தால் (State Load Dispatch Center) பராமரிக்கப்படும்.

மரபு சார்ந்த மின் உற்பத்தியாளர்களுக்கு இந்த விதிமுறைகளின் செயல்பாட்டின் சோதனை முறை நடப்பில் உள்ளது. புதுப்பிக்கத்தக்க சக்தி மின் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரை இது விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இந்த செயல்முறையின் முழு செயலாக்க செயல்முறை ஒன்றிய அரசின் மத்திய எரிசக்தி அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட திட்டமிடல், கணக்கில் அளவீட்டு மற்றும் மின்சார பரிவர்த்தனை தீர்வு (Scheduling Accounting Metering and Settlement of Transaction in Electricity - SAMAST) என்ற மென்பொருள் பொறிமுறைமூலம் மேற்கொள்ளப்படும்.

(அ) தற்சார்பு மின் திட்டங்கள் (Independent Power Projects):

தற்சார்பு மின் திட்டங்கள் என்பது புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம் மின் துறையில் தனியார் மின் பங்கேற்புக்கு வழி வகுத்தது. தற்சார்பு மின் திட்டங்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் முழு மின்சாரத்தையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விற்கிறார்கள், அதற்காக மின் கொள்முதல் ஒப்பந்தத்தின்படி கட்டணம் பெறுகிறார்கள். தற்போது நடைமுறையில் உள்ள மூன்று மின் திட்டங்களின் மின் கொள்முதல் ஒப்பந்தங்கள், பின்வருமாறு:

[*2021 செப்டம்பர் 7*

i) TAQA நெய்வேலி பவர் கம்பெனி (P) லிமிடெட் (முன்பு ST-CMS பவர் நிறுவனம்):

M/s ST-CMS *நிறுவனம், 250 மெகாவாட் திறனுள்ள பழுப்பு நிலக்கரியில் இயங்கக்கூடிய அனல் மின் நிலையம் அமைக்க 31.08.1992 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் 20.11.1996 அன்று 30 வருடங்களுக்கான மின் கொள்முதல் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டது மற்றும் 15-12-2002 அன்று வணிக ரீதியிலான மின் உற்பத்தியைத் தொடங்கியது. பின்னர் 2013 இல்,* ST-CMS *நிறுவனம், அபுதாபி அரசாங்கத்திற்கு சொந்தமான* M/s.TAQA-*நெய்வேலி மின் நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டது. ஒன்றிய அரசின் புதிய சுற்றுச்சூழல் நெறிமுறைகளுக்கு இணங்க நிலைய வெளியேற்ற வாயுவிலிருந்து கந்தகத்தை நீக்கும் உபகரணத்தை (*Flue Gas Desuphurisation*) அமைக்க மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் உள்ள சட்ட விதிகளின் மாற்றத்தின் அடிப்படையில் கொள்கைரீதியாக ஒப்புதல் அளிக்க மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.*

ii) பிள்ளைபெருமாள்நல்லூர் மின் நிறுவனம்

பிள்ளைபெருமாள்நல்லூர் மின் நிறுவனம், 330.50 மெகாவாட் திறனுள்ள எரிவாயு மற்றும் நாப்தாவினால் இயங்கக்கூடிய ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையம் அமைக்க 09.12.1992 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இயற்கை எரிவாயு பற்றாக்குறையால், மின் நிலையம் 2016 வரை 100% நாப்தாவுடன் இயங்கியது. நாப்தா வழங்குவதற்கான எரிபொருள் விநியோக ஒப்பந்தம் 25.04.2021 அன்று காலாவதியானது.

iii) SEPC மின் நிறுவனம் (உற்பத்திக்கான சோதனை கட்டத்தில் உள்ளது)

தமிழ்நாடு பெட்ரோ தயாரிப்புகள் நிறுவனம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய பல்வேறு ஆணைகள் மற்றும் 02-09-2020 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் துணை ஒப்பந்தம் #3 கையெழுத்தானது. மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் துணை ஒப்பந்தம் #3 மற்றும் திருத்தப்பட்ட நிலக்கரி வழங்கல் மற்றும் போக்குவரத்து ஒப்பந்தம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை

2021 செப்டம்பர் 7]

ஆணைய ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. மின் உற்பத்தி நிலையம் உற்பத்திக்கான சோதனை கட்டத்தில் உள்ளது.

(ஆ) நீண்டகால மின் கொள்முதல்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் 2,830 மெகாவாட் (24 மணி நேர அளவில்) மின் கொள்முதல் செய்வதற்கான 11 நீண்டகால மின் கொள்முதல், 2028 இல் காலாவதியாகிறது. இதில், மாநிலங்களுக்கு இடையேயான மின் உற்பத்தியாளார்களிடமிருந்து 1658 மெகாவாட் மின் சக்தி மற்றும் உள் மாநில மின் உற்பத்தியாளர்களிடமிருந்து 1172 மெகாவாட் மின்சாரம் பெறப்படுகிறது. தற்சமயம் நீண்ட கால மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் முன்மொழிவதற்கான வாய்ப்புகள் இல்லை.

வ. எண்	விற்பனையாளரின் பெயர்	மின் திறன் மெகா வாட்
1.	தாரிவால் இன்பிராஸ்ரக்சர், மகாராஷ்டிரா	100
2.	பால்கோ - I, சத்தீஸ்கர்	100
3.	பால்கோ - II, சத்தீஸ்கர்	100
4.	பிடிசி இந்தியா லிமிடெட், ஜார்கன்ட்	100
5.	ஜிண்டால் பவர் லிமிடெட், சத்தீஸ்கர்	400
6.	கே. எஸ். கே மகாநதி கம்பெனி பிரைவேட் லிமிடெட், சத்தீஸ்கர்	500
7.	டிபி பவர் லிமிடெட், சத்தீஸ்கர்	208
8.	ஜிஎம் ஆர் எனர்ஜி டிரேடிங் லிமிடெட், மகாராஷ்டிரா	150
9.	ஐ. எல் & எப். எஸ் தமிழ் நாடு பவர் கம்பெனி லிமிடெட், கடலூர்	540
10.	கோஸ்டல் ஏனெர்ஜன் பிரைவேட் லிமிடெட், தூத்துக்குடி	558
11.	ஒபிஜி பவர் ஜெனெரேஷன் பிரைவேட் லிமிடெட், கும்மிடிப்பூண்டி	74
	மொத்தம்	**2,830**

(இ) நடுத்தரக்கால மின் கொள்முதல்

நடுத்தரக்கால மின் கொள்முதல் என்பது ஒரு ஆண்டிற்கு மேல் ஏழு ஆண்டிற்குள்ளான ஒப்பந்தமாகும்.

[2021 செப்டம்பர் 7

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் முன் மாதிரி I-ன்கீழ், PTC இந்தியா நிறுவனத்துடன் 26.10.2018 அன்று யூனிட் ஒன்றுக்கு ரூ.4.24 என்ற வீதத்தில் 550 மெகாவாட் (24 மணி நேர அளவில்) மின்சாரம் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. மின் கொள்முதலானது 01-04-2019 முதல் தொடங்கப்பட்டு 31.03.2022 அன்று காலாவதியாகிறது.

1.2.5 மின்பரிமாற்ற ஏற்பாடு

மின் பரிமாற்ற ஏற்பாடு என்பது இரு மாநில மின் நிறுவனங்களிடையில் பணப் பரிவர்த்தனைகள் இல்லாமல் மின்சாரப் பரிமாற்றம் மட்டுமே நடைபெறுவதாகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் பரிமாற்ற ஏற்பாட்டின் மூலம் பருவக்காற்றின் காலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) உபரி மின்சாரத்தை பிற மாநில மின் நிறுவனங்களுக்கு வழங்கி அதனை அடுத்த கோடை காலத்தில் (பிப்ரவரி முதல் மே) திரும்பப் பெறப்படும்.

தற்சமயம், பருவக்காற்றின் காலத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் BSES யமுனா மின்திறன் நிறுவனத்துடன் (BSES Yamuna Power Ltd) பரிமாற்ற மின் ஏற்பாடு வாயிலாக உபரி மின்சாரத்தை வழங்குகிறது. இதனை வரும் கோடை மாதங்களில் திரும்ப பெற்று வருகிறது.

1.2.6 புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

அ) கற்றாலை மின்சக்தி

காற்று மற்றும் சூரியசக்தி இரண்டும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதுவரையில் 8569.90 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. 2021-22 ஆம் ஆண்டில் 30-06-2021 வரை 3,939 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஒரே நாளில் உச்சபட்சமாக 5129 மெகாவாட் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஒரே நாளில் 100 மில்லியன் யூனிட்டுகளுக்கும் அதிகமாக பல முறை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமாக, 17.465 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள் உள்ளன. அவை ஆயுட்காலம் முடிந்தவையாக

2021 செப்டம்பர் 7]

இருப்பதால் அவற்றை புதிய காற்றாலை இயங்திரங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தம் 9,799 காற்றாலை மின் உற்பத்தியாளர்களின் 8,569.90 மெகாவாட் நிறுவு திறனில், 6,173.39 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 7,176 காற்றாலை மின் இணைப்புகள் சொந்த பயன்பாட்டிற்கும், 2,145.67 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 2,397 காற்றாலை மின் இணைப்புகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விற்பனைக்காகவும் மற்றும் 250.835 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 226 காற்றாலை மின் இனைப்புகள் மூன்றாம் நபர் விற்பனை பயன்பாட்டிற்கும் உள்ளன.

ஆ) சூரிய மின்சக்தி

தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க சூரிய சக்தி நிறுவுதிறன் உள்ளது. இதன் மொத்த நிறுவுதிறன் 4,511.30 மெகாவாட் ஆகும், இதில் 4,177.761 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் நிலையங்கள் தரையில் நிறுவப்பட்ட பிரிவின் கீழும் மற்றும் 333.539 மெகாவாட் சூரிய மின் நிலையங்கள் கூரை மேல் பிரிவின் கீழும் அமைக்கப்பட்டுள்ளன.

இது வரையிலும், உச்சபட்சமாக 3152.2 மெகாவாட் சூரிய மின்சாரம் ஒரே நாளில் பதிவாகியுள்ளது, மேலும் அதிகபட்சமாக ஒரே நாளில் 22.80 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தியானது.

கடந்த 2020-2021-ம் ஆண்டு வரை மொத்தமாக 20,252 மில்லியன் யூனிட்டுகளும், 2021-22 ஆம் ஆண்டில், 30-06-2021 வரை 1,783 மில்லியன் யூனிட்டுகளும் சூரிய மின்சக்தி உற்பத்தியானது.

சூரிய மின் நிலையங்கள் தரையில் நிறுவப்பட்ட பிரிவின்கீழ் 4,177.761 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 356 சூரிய மின் உற்பத்தி நிலையங்களில், 565.3 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 185 சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் சொந்த பயன்பாட்டிற்கும், 3,449.852 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 115 சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் மற்றும் 162.609 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 56 உற்பத்தி நிலையங்கள் மூன்றாம் நபர் விற்பனை பயன்பாட்டிற்கும் உள்ளன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் நிலையற்ற தன்மை காரணமாக, தமிழ்நாடு மின் கட்டமைப்பு சில சிக்கல்களை

[2021 செப்டம்பர் 7

எதிர்கொள்கிறது. காற்றின் வேகம் மற்றும் மேகங்களின் அமைப்பு போன்றவற்றினால் ஏற்படும் திடீர் காலநிலை மாறுபாடுகளின் காரணமாக காற்றாலை மற்றும் சூரிய மின் உற்பத்தி முறையே பாதிக்கப்பட்டு திடீர் வீழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. போதுமான அளவு எரிவாயு, மின்கலன் சேமிப்புத் திட்டம் மற்றும் நீரேற்று மின் உற்பத்தி நிலையம் கூடுதலாக அமைக்க இருப்பதால் இந்த சிக்கல்களை எளிதாக சமாளிக்க முடியும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சக்தியை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதற்காக நீரேற்று புனல் மின் நிலையத்தின் மின்சேமிப்புத் திறனை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

மின்கலன் சேமிப்புத் திட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள காரியாப்பட்டி துணை மின் நிலையத்தில் ஒரு மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையத்துடன் இணைந்த 3 மெகாவாட் மின்கலன் சேமிப்பு நிலையம் அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை வருங்காலங்களில் துரிதமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

துணை மின் நிலையங்களில் மின் அளவி பொருத்துதல்

சூரிய மின்சக்தி நிலையங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவினை கணக்கிடுவதற்காக உற்பத்தி நிலையங்களில் மின் அளவி பொருத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக மின்பாதை இழப்பினைக் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஏற்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக உற்பத்தி நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த மின் அளவிகளை துணை மின் நிலையங்களில் பொருத்தும் பணியினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் துவங்கியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க கட்டாய மின் கொள்முதல்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், சூரிய மின்சக்தி மற்றும் சூரிய மின்சக்தி அல்லாத மின் உற்பத்தியில் தலா 10.5 விழுக்காட்டை புதுப்பிக்கத்தக்க கட்டாய மின் கொள்முதல் கொள்கையாக இலக்கு நிர்ணயித்துள்ளது. சூரிய மின்சக்தியில் புதுப்பிக்கத்தக்க கட்டாய மின்சக்தி கொள்முதல் கொள்கை மூலம் நிர்ணயித்த இலக்கான 10.5 விழுக்காட்டை அடைவதற்கு தேவைப்படும் 7,126 மெகாவாட்டில் இது வரை 4,558 மெகாவாட்

2021 செப்டம்பர் 7]

கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழகத்தில் சூரிய சக்தியின் மின் உற்பத்தியை மேலும் அதிகரிக்க திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன.

பிரதமரின் விவசாயி ஆற்றல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம் (PM KUSUM) குசும் திட்டம்:

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் பெறப்படும் மின்சக்தியின் பங்கினை மின் நிறுவுதிறனில் அதிகரிக்கவும் விவசாயிகளின் நலனுக்காக முன்மாதிரி திட்டமாக (Pilot Project) விழுப்புரம் மண்டலத்தில் சூரிய ஒளி மின்மயமாக்கும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளது, அதற்காக 22 துணை மின் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் 5 துணை மின் நிலையங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இந்தத் துணை மின் நிலையங்களில் 50 மெகாவாட் திறனுடைய சூரிய மின்சக்தி நிறுவ இந்திய சூரிய எரிசக்தி (SECI) நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்படும்.

இ) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தித் திட்டங்கள்

தமிழ்நாடு உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், ஆக மொத்தம் 12 இணை மின் உற்பத்தித் திட்டங்களை, சர்க்கரை ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ.1,241.15 கோடி ஆகும். இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் மொத்தம் 183 மெகாவாட் திறனில் 120.11 மெகாவாட் திறனை தமிழ்நாடு மின் கட்டமைப்பில் இணைக்க இயலும்.

2008-ல் 12 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன. 2010—ல் 12 திட்டங்கள் தொடங்கப்பட்டன. மொத்த திட்ட மதிப்பான ரூ.1241.15 கோடியில் (கட்டுமானத்தின்போது வட்டி தவிர), இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ.1161.89 கோடி ஆகும்.

விவரம்	மொத்தம் (எண்ணிக்கையில்)	மின் நிறுவுதிறன் (மெகா வாட்டில்)
இணை மின் உற்பத்தி திட்டங்கள்	12	183 மெகாவாட்
முடிக்கப்பட்ட திட்டங்கள்	5	81 மெகா வாட் நிறுவப்பட்டுள்ளது

[2021 செப்டம்பர் 7

விவரம்	மொத்தம் (எண்ணிக்கையில்)	மின் நிறுவுதிறன் (மெகா வாட்டில்)
காலதாமதமான திட்டங்கள்	7	102 மெகா வாட் நிறுவப்பட வேண்டும்
எதிர்பார்க்கப்படும் பணி நிறைவு தேதி		
தருமபுரி இணை மின் உற்பத்தி திட்டம்	செப்டம்பர் 2021	12 மெகா வாட்
கள்ளக்குறிச்சி – II இணை மின் உற்பத்தி திட்டம்	டிசம்பர் 2021	15 மெகாவாட்

12 இணை மின் உற்பத்தித் திட்டங்களில் 102 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட 7 இணை மின் உற்பத்தித் திட்டங்கள் வருங்காலங்களில் இயக்கி வைக்கப்பட உள்ளன.

1.2.6 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையம்

(Renewable Energy Management Centre)

தமிழ்நாடு வளமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை கொண்ட மாநிலமாகும். காற்றாலை மின்சக்தி நிறுவுதிறன் 8,565.90 மெகாவாட் ஆகும். சூரிய மின்சக்தி நிறுவுதிறன் 4,177.761 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் நிலையங்கள் தரையில் நிறுவப்பட்ட பிரிவின் கீழும் மற்றும் 333.539 மெகாவாட் சூரிய மின் நிலையங்கள் கூரை மேல் பிரிவின் கீழும் ஆகும். மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மின் கட்டமைப்பில் திறம்பட ஒருங்கிணைக்கும் பொருட்டு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேலாண்மை மையம் (REMC) மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் (SLDC) அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் காற்று மற்றும் சூரிய சக்தி உற்பத்தி முன்கணிப்பு செய்யப்படுகிறது. இங்கு, ஒரு நாள் முன்னதாகவும் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்திக்கான முன்கணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காற்றாலை துணை மின் நிலையம் மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள மின் அளவுகளிலிருந்து பெறப்பட்டு வரும் தரவுகள் தற்போது முன்கணிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உற்பத்தி மற்றும் முன்கணிப்பிற்கு இடையே

2021 செப்டம்பர் 7]

உள்ள வேறுபாடு சுமார் 10 சதவித அளவிற்கு ஒவ்வொரு நாளும் மாறுபடுகிறது. தகவல் தொடர்பு நெட்வொர்க்கை மேம்படுத்துவதன்மூலம் முன்கணிப்பை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன, இதன் விளைவாக புதுப்பிக்கத்தக்க சக்தியை அதிகமாக பயன்பாட்டிற்குக் கொண்டு வர இயலும்.

1.2.7 நிலக்கரி மற்றும் தளவாடங்கள்:

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தனது 4,320 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை மகாநதி நிலக்கரி நிறுவனம் (MCL) மற்றும் சிங்கரேனி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து (SCCL) பெறுகிறது. மகாநதி நிலக்கரி நிறுவனம் (MCL) /தால்ச்சர், ஐபி (IB) பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களுக்கு நிலக்கரி இரயில்வே ரேக்குகள்மூலம் கொண்டு செல்லப்படுகிறது. நிலக்கரி கப்பல்களில் ஏற்றப்பட்டு காமராஜர் துறைமுகம் (எண்ணூர்), காரைக்கால் மற்றும் வ.உ. சிதம்பரனார் துறைமுகங்களுக்கு (தூத்துக்குடி) கடல் வழியாக கொண்டு செல்லப்படுகிறது.

எண்ணூர் வெளியேற்ற துறைமுகத்தில் நிலக்கரி கப்பல்களில் இருந்து இறக்கப்பட்டு, வட சென்னை அனல் மின் நிலையம் I & II க்கு நிலக்கரி அனுப்பும் அமைப்பு மூலம் கொண்டு செல்லப்படுகிறது. மேலும் மேட்டூர் அனல் மின் நிலையம் I & II-க்கு தேவையான நிலக்கரி வட சென்னை அனல் மின் நிலையம் I-ல் இருந்து வேகன்களின் மூலமாக மேட்டூருக்கு கொண்டு செல்லப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து நிலக்கரி தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி அனுப்பும் அமைப்பு மூலம் கொண்டு செல்லப்படுகிறது.

மேலும், மேட்டூர் அனல் மின் நிலையம் I & II-க்கு தேவையான நிலக்கரி சிங்கரேனி நிலக்கரி நிறுவனங்களிலிருந்து (SCCL) நேரடியாக இரயில்வே வேகன்கள் மூலமாகவும் கொண்டு செல்லப்படுகின்றன.

நிலக்கரி விநியோகத்தில் பற்றாக்குறையைத் தீர்க்க செயல் திட்டம்

இந்திய நிலக்கரி நிறுவனங்களிடமிருந்து தொடர்ச்சியாக குறைவான நிலக்கரியே வழங்கப்படுவதால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் அனல் மின் நிலையங்களில்

[*2021 செப்டம்பர் 7*

தடையில்லா மின் உற்பத்தி செய்ய வேண்டி இந்திய நிலக்கரி நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தத்தின்படி நிலக்கரியினை தொடர்ந்து வழங்கிட அறிவுறுத்தும்படி மத்திய நிலக்கரி அமைச்சகம் மற்றும் மின் அமைச்சகத்திடம் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் ஆண்டு ஒன்றிற்கு 25 இலட்சம் டன்கள் நிலக்கரி கூடுதலாக பெறும் வகையில் சிங்கரேனி நிலக்கரி நிறுவனத்துடன் எரிபொருள் வழங்கும் ஒப்பந்தம் (FSAs) செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

இறக்குமதி நிலக்கரி

மத்திய மின் அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், 2004-2005 ஆண்டு முதல், MMTC (Minerals and Metals Trading Corporation) போன்ற பொதுத் துறை நிறுவனங்களின்மூலம் இறக்குமதி நிலக்கரியை கொள்முதல் செய்து வருகிறது. இறக்குமதி நிலக்கரி கொள்முதல் உலகளாவிய ஒப்பந்தங்கள் கோருவதன் மூலம் நடந்து வந்தது. 2016-17 ஆண்டில் ஒன்றிய அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இறக்குமதி நிலக்கரி கொள்முதல் செய்வதற்கான எந்த ஒரு கொள்முதல் ஆணையையும் வழங்கவில்லை. எனினும், உள்நாட்டு நிலக்கரி கொள்முதலில் ஏற்பட்ட பற்றாக்குறையால், 2017-18 ஆம் ஆண்டு முதல் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது மூலம் மின்னனு ஒப்பந்தப்புள்ளி முறை மற்றும் மின்னனு மறு ஏல முறையில் இறக்குமதி நிலக்கரி கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு இறக்குமதி நிலக்கரியின் பயன்பாட்டை குறைப்பதற்கான வழிகாட்டுதல்களை 2020 ஆம் ஆண்டில் வெளியிட்டது. இதன்படி இந்திய நிலக்கரி நிறுவனங்களில் சுமார் 750 லட்சம் டன் உள்நாட்டு நிலக்கரி போதுமான இருப்பு உள்ளதாகவும், இறக்குமதி நிலக்கரி தேவையை ஈடு செய்வதற்கு இந்திய நிலக்கரி நிறுவனங்களிலிருந்து உள்நாட்டு நிலக்கரியினை கொள்முதல் செய்யும்படியும் அறிவுறுத்தியது.

தூத்துக்குடியில் அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி கையாளுதல்

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட

2021 செப்டம்பர் 7]

நிலக்கரி இறக்குதளம்-1 மற்றும் நிலக்கரி இறக்குதளம்-2 ஆகியவற்றிலிருந்து நிலக்கரியை இறக்குவதன்மூலம் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் நிலக்கரி தேவை பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டு இறக்கும் தளங்களிலும், அவற்றின் ஆழம் காரணமாக சுமார் 55,000 டன் நிலக்கரியைக் கொண்டு செல்லும் கப்பல்களை மட்டும் நிறுத்த முடியும். நிலக்கரி இறக்குதளம்-1 இன் திறனை மேம்படுத்துதல்மூலம் அதிக கொள்ளளவு கொண்ட கப்பல்களை நிறுத்துவதற்காக, கப்பல் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, வ.உ. சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் இறக்குதளம்-1-ல் புதிய நிலக்கரி கையாளும் இயந்திரம் மற்றும் பிற கன்வேயர் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஒரு வருட காலத்திற்குள் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய நிலக்கரி இறக்குதளம்-1 செயல்படத் தொடங்கிய பிறகு, 70,000 டன் சுமந்து செல்லும் அதிக திறன் கொண்ட கப்பல்களை கையாள முடியும். இதன் காரணமாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு கப்பல்கள் மூலம் ஓர் ஆண்டிற்கு 50,40,000 டன் நிலக்கரியினை கொண்டு செல்ல இயலும்.

கடல் பாதை வழியாக நிலக்கரி அனுப்புதல்

நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களான பாரதீப் மற்றும் விசாகப்பட்டினத்திலிருந்து எண்ணூர், காரைக்கால் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள துறைமுகங்களுக்கு நிலக்கரி கடல் வழியாக அனுப்பப்படுகிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் 1985-லிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பாக கப்பல்களை சார்ட்டர் (பணியமர்த்தல்) செய்து கொண்டிருந்தது.

நிலக்கரியைக் கொண்டு செல்வதற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் உடனான ஒப்பந்தம் 31.03.2021 அன்று காலாவதியாகிவிட்டது. எனவே, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தனது அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியின் கடலோர நகர்வுக்காக 7 பிரத்யேக கப்பல்களைக் வாடகைக்கு அமர்த்தியது.

கப்பல்களை நேரடியாக வாடகைக்கு எடுத்துக் கொண்டதன் மூலம், நிர்வாகக் கட்டணங்கள், ஜி.எஸ்.டி மற்றும் கப்பல்

[2021 செப்டம்பர் 7

உரிமையாளர்களுக்கு நேரடியாக பணம் செலுத்துவதன் விளைவாக வாடகை கட்டணங்கள் ஆகியவை குறைந்துள்ளன. இதனால் சுமார் ரூ. 157 கோடி மொத்த சேமிப்பு அடையப்பட்டது.

1.2.8 சந்திரபிலா நிலக்கரி தொகுதி

ஒடிசா மாநிலத்தில் சந்திரபிலா நிலக்கரி தொகுதியை ஒன்றிய நிலக்கரி அமைச்சகம் 24.02.2016 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், ஒன்றிய நிலக்கரி அமைச்சகத்துடன் 30.03.2016 அன்று நிலக்கரி தொகுதி மேம்பாடு மற்றும் உற்பத்தி ஒப்பந்தம் (CBDPA) செய்துள்ளது. 9.32 சதுர கி.மீ. மொத்த சுரங்கப் பகுதியில், 3.64 சதுர கி.மீ. வனப் பகுதியின்கீழ் வருகிறது. இது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டபோது வனசாரா பகுதிகளில் 73 இடங்களில் ஆழ்துளைகளிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வனப் பகுதியில் 16 ஆழ்துளையிட்டு ஆய்வு செய்ய ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்திடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தின்படி, 66 மாதங்களுக்குள் அதாவது 30-09-2021—க்குள் இத்தொகுதி மேம்படுத்தப்பட்டு நிலக்கரி எடுக்கப்படவேண்டும். ஆனால், 2018-ம் ஆண்டு ஒடிசா மாநில அரசால் அனுமதி வழங்கிடப் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் தற்போது வரை அதற்கான அனுமதி வழங்காததால் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை.

இத்தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், இதன் மேம்பாடு மற்றும் இயக்கத்தினை செயல்படுத்தத் தகுதியான ஒப்பந்ததாரரை நியமிக்கத் தேவையானவற்றைச் செய்வதற்கு ஆலோசனை வழங்கிட நாக்பூரைச் சேர்ந்த அக்சினோ கேப்பிடல் சர்வீசஸ் லிமிடெட் என்ற நிறுவனம் நியமிக்கப்பட்டது. அந்நிறுவனம் வழங்கிய ஆலோசனைப்படி சுரங்க மேற்படிவுகளைக் கொட்ட கூடுதலாக நிலம் ஒதுக்கீடு செய்யும்படி ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகத்திடம் கோரப்பட்டது. ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகம் ஒரு குழுவை அமைத்து, ஆய்வுசெய்து, அக்குழுவின் பரிந்துரையின் பேரில் சுரங்க மேற்படிவுகளைக் கொட்ட கூடுதலாக நிலப்பரப்பை வழங்கியது. அதன்படி கூடுதலாக வழங்கப்பட்ட

2021 செப்டம்பர் 7]

நிலப்பரப்பின் அளவு திருத்தப்பட்ட வரை படத்தின்படி 2.05 சதுர கி.மீ. ஆகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சந்திரபிலா நிலக்கரி தொகுதியினை மேம்படுத்தி 376 மில்லியன் டன்கள் நிலக்கரியை ஆண்டொன்றுக்கு 10 மில்லியன் டன்கள் வீதம் எடுத்து வழங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை 29-11-2019 அன்று வெளியிட்டது. இதற்கு ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தது. அந்நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் வணிக நெறிமுறைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி 2020-ம் ஆண்டு மே மாதம் திறக்கப்பட்டது. பின்னர், போட்டி இல்லாத காரணத்தால், மீண்டும் போட்டியை அதிகரிக்கும் நோக்கில் சிறு மாற்றங்களுடன் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு 30.12.2020 அன்று வெளியிடப்பட்டது. இருப்பினும், ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளின்படி சமர்ப்பிக்க வேண்டிய தேதி நீட்டிக்கப்பட்ட போதிலும், இன்று வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகம் மேலும் சில நிலக்கரித் தொகுதிகளை ஏல முறையில் ஒதுக்கீடு செய்ய முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது. எனவே, சந்திரபிலா நிலக்கரி தொகுதியை மேம்பாடு செய்யவும் மற்றும் இதர இடத்திலுள்ள நிலக்கரி தொகுப்பிற்கும் ஏல முறையில் விடப்படும் நிலக்கரித் தொகுதியை மேம்படுத்த ஆகும் செலவு மற்றும் பலன் குறித்த ஆய்வு செய்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இது தொடர்பாக ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகத்திடம் அனுமதி வழங்க கோரி வருகிறது. ஒன்றிய நிலக்கரி துறை அமைச்சகமும் இவ்வமைச்சகத்திடம் அனுமதி வழங்கிட வேண்டுகோள் விடுத்துள்ளது. ஒன்றிய சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் புவனேஸ்வரில் உள்ள பிராந்திய அலுவலகத்திடம் இதுகுறித்த பரிந்துரை வழங்கிடக் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளது.

நீண்டகால நிலக்கரி இணைப்பு (Long Term Coal Linkage) மற்றும் தற்காலிக நிலக்கரி இணைப்பு (Bridge Coal Linkage)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், வடசென்னை அனல் மின் திட்டம் நிலை 3 (1 X 800 மெகாவாட்) மற்றும் உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டத்திற்கு (2 X 800

[2021 செப்டம்பர் 7

மெகாவாட்) நீண்டகால நிலக்கரி இணைப்பை கோரியது. ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகத்தின் நிலக்கரி இணைப்புக்கான நிலைக் குழு (Standing Linkage Committee), ஆண்டொன்றுக்கு 5.913 மில்லியன் டன் நிலக்கரியை சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்திலிருந்து (SCCL) வழங்கிட பரிந்துரை செய்துள்ளது. சிங்கரேணி நிலக்கரி நிறுவனம் அனுப்பிய வரைவு நிலக்கரி விநியோக ஒப்பந்தம் ஆய்வு செய்யப்பட்டு சில மாற்றங்கள் முன் மொழியப்பட்டு அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இருதரப்பு ஒப்புதலுடன் ஒப்பந்தம் விரைவில் செயல்படுத்தப்படும்.

சந்திரபிலா நிலக்கரி தொகுதியின் போதுமான நிலக்கரி உற்பத்தி தொடங்கும் வரை, எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2 X 660 மெகவாட்), எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1X660 மெகவாட்), உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–I (2 X 660 மெகவாட்) ஆகிய அனல் மின் திட்டங்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்கிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கோரியது. ஒன்றிய நிலக்கரித் துறை அமைச்சகத்தின் நிலக்கரி இணைப்புக்கான நிலைக் குழு, தற்காலிக இணைப்பை சிங்கரேணி நிலக்கரி நிறுவனத்திலிருந்து வழங்கிட பரிந்துரை செய்துள்ளது.

நிலக்கரி இறக்குமதிக்கான தேவை

தற்பொழுது கட்டுமானத்தில் உள்ள மிக உய்ய அனல் மின் திட்டங்களின் கொதிகலன்கள் குறைந்த சாம்பல் அளவு அதிகபட்சமாக 26.5% கொண்ட நிலக்கரியை உபயோகப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே குறைந்த சாம்பல் அளவு கொண்ட நிலக்கரியை இறக்குமதி செய்து, உள்நாட்டு நிலக்கரியுடன் கலந்து பயன்படுத்த வேண்டியுள்ளது. வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–3-க்கு ஆண்டொன்றுக்கு சுமார் 1 மில்லியன் டன் நிலக்கரியை நீண்ட கால கொள்முதல் மூலம் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

1.3 மின் உற்பத்தித் திட்டங்கள்

மின் தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் பொருட்டு, மாநிலத் துறையின் மூலம் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7]

வ. எண்	மின் உற்பத்தி திட்டங்கள் திறன் மெகாவாட் மற்றும் அறிவிக்கப்பட்ட தேதி	மொத்த மதிப்பீடு ரூ. கோடி	பணி மதிப்பீடு கோடி,	இதுவரை ஆன செலவு ரூ. கோடி	திட்டமிடப்பட்ட பணி நிறைவு தேதி	எதிர் பார்க்கப்படும் பணி நிறைவு தேதி
1	*வடசென்னை அனல் மின் திட்டம் நிலை - III 1 X 800 மெகாவாட் 26-10-2010*	*8,723*	*6,317.29*	*5,163.32*	*ஜூலை 2019*	*2022-23*
2	*எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் 2 X 660 மெகாவாட் 11-8-2010*	*9,800*	*7,814*	*5,448.59*	*மே 2019*	*2023-24*
3	*உடன்குடி அனல் மின் திட்டம் நிலை-I- 2 X 660 மெகாவாட் 15-10-2007*	*13,077*	*9,752*	*3,154.14*	*ஜூன் 2021*	*2023-24*
4	*எண்ணூர் விரிவாக்கம் IX660 மெகாவாட் 30-03-2012*	*6,380*	*5,421*	*792.926*	*ஜூன் 2018*	*2026-27*
5	*உப்பூர் அனல் மின் திட்டம் 2 X 800 மெகாவாட் 24-10-2011*	*12,778*	*10,566*	*3,125*	*ஜூன் 2021*	*2026-27*

வ. எண்	மின் உற்பத்தி திட்டங்கள் திறன் மெகாவாட் மற்றும் அறிவிக்கப்பட்ட தேதி	மொத்த மதிப்பீடு ரூ. கோடி	பணி மதிப்பீடு கோடி,	இதுவரை ஆன செலவு ரூ. கோடி	திட்டமிடப்பட்ட பணி நிறைவு தேதி	எதிர் பார்க்கப்படும் பணி நிறைவு தேதி
6	குந்தா நீரேற்று மின்திட்டம் 4 X 125 மெகாவாட் 28-06-2007	1,831	2,424.09	370.855	மே 2023	2023-24
7	கொல்லிமலை புனல் மின் திட்டம் 1 X20 மெகாவாட், 04-09-1995	339	307.19	136.48	ஏப்ரல் 2021	2023-24

நடைபெற்றுவரும் அனல் மின் திட்டங்கள்:

I. வட சென்னை அனல் மின் திட்டம் (நிலை-III) 1x800 மெகாவாட்

இந்த திட்டம் 26.10.2010 அன்று அறிவிக்கப்பட்டு, மூன்று தொகுப்பு ஒப்பந்தங்களாக, கொதிகலன், சுழலி, மின்னாக்கி ஒப்பந்தம் பாரத மிகு மின் நிறுவனத்திற்கும், திட்டத்தின் இதர பகுதிகளுக்கான ஒப்பந்தம் பி.ஜி.ஆர்.இ.எஸ்.எல் நிறுவனத்திற்கும், புகை போக்கி வளிமக் கந்தக நீக்கி (Flue Gas De-sulphurisation (FGD)) ஒப்பந்தம் பாரத மிகு மின் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் உத்தேச மதிப்பீடு கட்டுமான காலத்திற்கான வட்டி உட்பட ரூ.8,723 கோடி ஆகும்.

II. எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2 x 660 மெகாவாட்)

இந்தத் திட்டம் 11.08.2010 அன்று அறிவிக்கப்பட்டு, பொறியியல், கொள்முதல், கட்டுமான பணி மற்றும் கடன் நிதியாக்கம் அடிப்படையில் (இ.பி.சி. கம் டெப்ட் பைனான்ஸ்) பாரத மிகு மின் நிறுவனத்திற்கு ரூ.7,814 கோடிக்கு கட்டுமான காலத்திற்கான வட்டி உட்பட பணி ஆணை வழங்கப்பட்டது. வெளிப்புற நிலக்கரி கையாளும் பிரிவிற்கு கப்பலில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்யும்

2021 செப்டம்பர் 7]

பகுதிக்கான பணி ஆணை சென்னை ராதா இன்ஜினியரிங் ஓர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் எப்.எல். சுமித் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

III. உடன்குடிஅனல் மின் திட்டம் நிலை-I (2 x 660 மெகாவாட்)

இந்த திட்டம் 15-10-2007 அன்று அறிவிக்கப்பட்டது. இதன் மதிப்பிடப்பட்ட திட்ட செலவு, கட்டுமான காலத்திற்கான வட்டி உட்பட ரூ.13,077 கோடி ஆகும். இந்த திட்டம் இரண்டு தொகுப்புகளில் கொதிகலன், சுழலி மற்றும் மின்னாக்கி (BTG) மற்றும் இதர பகுதிகளுக்கான (BOP) பாரத மிகு மின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த உத்தரவுடன் கொதிகலன் உள் மாற்றத்திற்கான மற்றும் வளிமகாப்பு சுவிட்ச்யார்டில் உள்ள இரு 400 கி.வோ. மின்னூட்டிகள் அமைப்பதற்கான கூடுதல் ஆணை பாரத மிகு மின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கப்பலில் இருந்து ஆலை எல்லை வரை நிலக்கரியை இறக்குவதற்கான சுய சார்பு கரி கையாளும் தடத்திற்கான பணி ஆணை ஐ.டி.டி.சிமெண்டேசன் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

IV. உப்பூர் அனல் மின் திட்டம் (2 x 800 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான மதிப்பீடு கட்டுமான கால வட்டி உட்பட ரூபாய் 12,778 கோடியாகும். திட்டத்திற்கான ஒப்பந்தங்கள் மூன்று தொகுப்புகளாக பிரித்து வழங்கப்பட்ட அடிப்படையில் மொத்த மதிப்பீடு ரூ.10566 கோடி ஆகும்.

கொதிகலன், சுழலி, மின்னாக்கி (பி.டி.ஜி) தொகுப்பு ஒப்பந்தம் பாரத மிகு மின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. மின் நிலையத்தின் இதர பாகங்களுக்கான (பி.ஓ.பி) தொகுப்பு ஒப்பந்தம் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ரிலையன்ஸ் கோரிய கூடுதல் விலை உயர்வு காரணமாக குறுகிய காலத்தில் ஒப்பந்தம் முடக்கப்பட்டது. கடல் நீர் உட்கொள்ளல் மற்றும் வெளியேறும் அமைப்பு தொகுப்பு எல் & டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்திற்கு ரூபாய் 3,125 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) பொது நல வழக்கு ஒன்றில் 17-03-2021 அன்று வழங்கிய தீர்ப்பில் 6 மாத காலத்திற்கு வேலையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் 18-03-2021 முதல் திட்டப் பணிகள் நிறுத்த உத்தரவிடப்பட்டது.

[*2021 செப்டம்பர் 7*

தேசிய பசுமை தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலும், நில வழக்குகள் முடிவடையாத நிலை இருந்ததனாலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஏற்கெனவே உள்ள 2X800 மெகாவாட் உப்பூர் அனல் மின் திட்டத்தை உடன்குடி தளத்திற்கு 2X800 மெகாவாட் உடன்குடி நிலை II என மாற்றவும் அனைத்து சட்ட சிக்கல்களும் நீக்கப்பட்டவுடன் உப்பூரை ஒரு புதிய திட்டமாக கருத 29-04-2021 அன்று ஒப்புதல் அளித்தது.

இதற்கிடையில், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவை 01-07-2021 அன்று உச்ச நீதிமன்றம் தடை செய்துள்ளது. எனவே, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் உள்ளூர் கிளர்ச்சி தொடர்பான பிரச்சினைகளை கையாள்வதன் மூலம் திட்டத்தை உடன்குடிக்கு மாற்றுவதை மறுபரிசீலனை செய்ய ஆராயப்படுகிறது.

V. எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் (1 x 660 மெகாவாட்)

இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட மொத்த மதிப்பீடு கட்டுமான கால வட்டியுடன் (IDC) ரூபாய் 6,380 கோடியாகும். பொறியியல்-கொள்முதல்-கட்டுமானம் (EPC) அடிப்படையில் லேன்கோ இன்பராடெக் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ.3,921.55 கோடிக்கு பணி ஆணை (LOI) வழங்கப்பட்டது. திட்டப் பணிகளில் ஒப்பந்ததாரரின் செயல்திறன் குறைபாடு மற்றும் ஒப்பந்ததாரர்மீது பெரு நிறுவன நொடிப்பு தீர்மான செயல்முறை, ஐடிபிஐ (IDBI) வங்கியால் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் /ஹைதராபாத்தில், திவால் மற்றும் நொடிப்பு வங்கி குறியீடு (IBC)2016-ன் படி தொடரப்பட்டதால், லேன்கோ இன்பராடெக் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் முடிக்கப்பட வேண்டிய மீதமுள்ள பணிகளை 'as is where is basis' *அடிப்படையில் பி.ஜி.ஆர்.இ.எஸ். எல், சென்னை, நிறுவனத்திற்கு ரூ.4,442.75 கோடிக்கு* LOA *வழங்கப்பட்டது.*

இந்த திட்டத்திற்காக இதுவரை மொத்தம் ரூ.792.926 கோடி செலவு செய்யப்பட்டு உள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இந்த திட்டத்தை கைவிட முடிவு செய்தது.

2021 செப்டம்பர் 7]

எனவே, எதிர்கால மின் தேவையின் பொருட்டு, இந்தத் திட்டத்தின் தேவையை வாரியம் மறுஆய்வு செய்கிறது.

நடைபெற்றுவரும் புனல் மின் திட்டங்கள்:

I. குந்தா நீரேற்று புனல் மின் திட்டம் (4x125 மெகாவாட்)/ நீலகிரி மாவட்டம்

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்திலுள்ள குந்தா நீரேற்று புனல் மின் திட்டமானது (4X125 மெகாவாட்), மின்கட்டமைப்பின் உச்ச மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் மற்றும் புதுப்பிக்கதக்க ஆற்றல்களை மாநில மின்கட்டமைப்புடன் ஒருங்கிணைப்பதில் உள்ள சவால்களை சமாளிக்கவும் 28.06.2007 அன்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 'போர்த்திமண்டு' மற்றும் 'அவலாஞ்சி-எமரால்டு' நீர்த்தேக்கங்கள், இத்திட்டத்தில் மேல் மற்றும் கீழ் நீர்த்தேக்கங்களாக உபயோகிக்கப்படவுள்ளன. பூமிக்கடியில் அமையவுள்ள மின் நிலையம் 125 மெகாவாட் நிறுவுதிறன் உடைய நான்கு அலகுகள் கொண்டு அமைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டம் மூன்று கட்டங்களாக உருவாக்கப்படுகிறது. திட்ட மதிப்பீடு ரூ. 1,831.29 கோடி (கட்டுமான காலத்திற்கான வட்டி உட்பட) ஆகும். மேலும் இது தோராயமாக ரூ.3,000 கோடி அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டத்தின் ஒப்பந்தங்களின் அடிப்படையில் (5 தொகுப்புகள் அடங்கிய) மதிப்பீடு ரூ.2,424.09 கோடி ஆகும். பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான பணி தொகுப்பு-I&II / பகுதி I (சீரியல் மற்றும் இயந்திரவியல்)-ற்கான பணி ஆணை ஒப்பந்ததாரர் பட்டேல் இன்ஜினியரிங், மும்பை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மின் மற்றும் இயந்திரவியல் பணிக்கான ஆணை பகுதி I / தொகுப்பு III, பகுதி II மற்றும் பகுதி III மெகா இன்ஜினியரிங் (ம) இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

II. கொல்லிமலை புனல் மின் திட்டம் 1 x 20 மெகாவாட்

கொல்லிமலை நீர் மின் திட்டம் 1 X 20 மெகாவாட் ரூ.338.79 கோடி செலவில் நிறுவ 04.09.1995-ல் திட்டமிடப்பட்டது. கொல்லிமலை தொடர்களில் ஐந்து எண்ணிக்கையிலான

[*2021 செப்டம்பர் 7*

முகப்பு சிறு அணை / திசை திருப்புதல் சிறு அணை, சுரங்கம் நிர்மாணிப்பதற்கும், நாமக்கல் மாவட்டத்தின் புளியன்சோலை கிராமத்தில் 1X20 மெகாவாட் திறன் கொண்ட நீர் மின் நிலையம் நிறுவுவதற்கும் இந்தத் திட்டம் திட்டமிடப்பட்டு, பணிகளை M/s. K. Rajagopalan & Co, (Leader of Consortium) – SSIPL – GMW-HUNAN ALLONWARD Consortium, அவர்களுக்கு ரூ.307.19 கோடிக்கு (ஜிஎஸ்டி உட்பட) வழங்கப்பட்டது. திட்டம் செயல்படுத்துவதற்கான தளம் 30.10.2016 அன்று கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கால அளவு 54 மாதங்கள் ஆகும். எனவே, திட்டம் முடிந்திருக்க வேண்டிய தேதி 29.04.2021 ஆகும்.

இத்திட்டத்தின் பணி மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 29.42% மற்றும் 25.58% ஆகும். இந்நிலையில், 25 மாதத்திற்கான கால நீட்டிப்பு அனுமதி பெற செயலாக்கம் நடைபெற்று வருகிறது.

இத்திட்டம் விரைவாக முடிந்து உற்பத்தியை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

I. எண்ணூர் அனல் மின் நிலைய மாற்று அனல் மின் திட்டம் (1 x 660 மெகாவாட்)

31-03-2017 அன்று செயல்பாடு நிறுத்தப்பட்ட எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு பதிலாக மாற்று திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றப்பட்ட எரிசக்தி சூழ்நிலை காரணமாக, இப்போது எரிவாயு இயந்திர மின் திட்டத்தை (Gas Engine Power Station) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

1.4 மின் தொடரமைப்பு

மாநிலத்தின் அதிகரித்துவரும் மின் தேவைக்கு ஏற்றவாறு புதிய மற்றும் இயங்கிக் கொண்டிருக்கும் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை திறம்பட வெளியேற்றுவதற்காக தொடரமைப்புப் பணிகள் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் விரிவாக்கப்பட்டு வருகிறது. மேலும் மாநிலத்தில் தற்போது உள்ள மின் தொடரமைப்பானது பலபடுத்தப்பட்டும் மற்றும் தரம் உயர்த்தப்பட்டும் மின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

போதுமான அளவு புதிய 110 கி.வோ, 230 கி.வோ மற்றும் 400 கி.வோ துணை மின் நிலையங்கள் அமைத்தல், இயக்கத்திலுள்ள

2021 செப்டம்பர் 7]

33 கி.வோ மற்றும் 110 கி.வோ துணை மின் நிலையங்களை 110 கி.வோ மற்றும் 230 கி.வோ துணை மின் நிலையங்களாக தரம் உயர்த்துதல் மின்னணு (Digital) துணை மின் நிலையங்கள் மற்றும் வளிமகாப்பு துணை மின் நிலையங்கள் ஆகியவற்றை, அமைப்பதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள மின் தொடர் கட்டமைப்பானது விரிவாக்கப்படும். மேற்கூறிய பணிகள் நகர்புர மற்றும் கிராமப்புறங்களில் அதிகரித்துவரும் மின்சுமையை கருத்தில் கொண்டும், நேரியல் (Linear) மின்சுமை மற்றும் மாறுபடும் (Non Linear) மின்சுமை கொண்ட மின் நுகர்வுத்தொகுப்பு மற்றும் மின் கட்டமைப்பில் இணைக்கப்படும் புதுப்பிக்கத்தக்க முறையில் பெறப்படும் எரிசக்தி (Renewable Energy) ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும்.

765 கி.வோ மின் கட்டமைப்பு

உயர்திறன் கொண்ட மின்தொடர் அமைப்பானது குறைந்த மின் இழப்பு மற்றும் குறைந்த அளவிலான மின்பாதை தொகுப்பு மூலம் மிக அதிக அளவிலான மின் சக்தியை மின் சுமை மையங்களுக்கு கொண்டு செல்ல வழிவகுக்கிறது. மேலும் இதனால் மின்தொடரமைப்பு அமைப்பின் செயல்திறன் மேம்படுகிறது. 765 கி.வோ மின் தொடர் வளர்ச்சியின் மூலம் தமிழ்நாட்டின் மின்தொகுப்பின் நம்பகத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த செயல்பாடு மேம்படுகிறது.

தமிழ்நாட்டில் வட சென்னை, அரியலூர், விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு 765 கி.வோ துணை மின் நிலையங்கள் அமைத்து செயல்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

400 கி.வோ. மின் கட்டமைப்பு

சென்னை பெருநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 6 எண்ணிக்கை 400 கி.வோ துணை மின் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. கும்மிடிப்பூண்டி மற்றும் வடசென்னையில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்ற தேர்வாய் கண்டிகையில் 400 கி.வோ துணை மின் நிலையம் மற்றும் புளியந்தோப்பில் 400 கி.வோ (GIS) வளிமகாப்பு துணை மின் நிலையம் ஆகியவை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

[*2021 செப்டம்பர் 7*

சென்னை மாநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 400 கி.வோ (GIS) வளிமகாப்பு துணை மின் நிலையங்கள் கிண்டி, கொரட்டூர் மற்றும் தரமணி ஆகிய இடங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், கோயம்பேட்டில் ஒரு 400 கி.வோ வளிமகாப்பு துணை மின் நிலையம் அமைப்பதற்கு தேவையான நிலம் வாங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய 6 எண்ணிக்கை 400 கி.வோ துணை மின் நிலையங்கள் செயல்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மின் தொடர் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காகவும், மாநிலம் முழுவதும் உள்ள உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை வெளியேற்றவும், வெள்ளாள விடுதி, இடையர்பாளையம், ஒட்டப்பிடாரம், சமூகரெங்கபுரம் மற்றும் பரளி ஆகிய 5 இடங்களில் 400 கி.வோ துணை மின் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. சமூகரெங்கபுரம் 400 கி.வோ துணை மின் நிலையப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன.

மேற்கண்ட 5 எண்ணிக்கை 400 கி.வோ துணை மின் நிலையங்கள் செயல்பாட்டிற்கு கொண்டுவர துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளன.

230 கி.வோ. மின் கட்டமைப்பு

சென்னை மாநகரின் மின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமையகம் (GIS), மாம்பலம் (GIS), திருவான்மியூர் (GIS), எண்ணூர் (GIS), கணேஷ் நகர் (GIS), பஞ்செட்டி (GIS), ஆவடி, மறைமலை நகர், கே.கே.நகர் (GIS), பல்லாவரம் (GIS) மற்றும் மாம்பாக்கம் ஆகிய பதினோரு இடங்களில் 230 கி.வோ துணை மின் நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்த 11 எண்ணிக்கை 230 கி.வோ துணை மின் நிலையங்களைச் செயல்பாட்டிற்கு கொண்டுவர துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளன.

சென்னை பெருநகரில் அமைக்கப்படவிருக்கும் துணை மின் நிலையங்களை தவிர, மாநிலத்தின் பிற பகுதிகளில் மின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காகவும் எளிய முறை இயக்கத்திற்காகவும் (Flexibility of operation) 17 இடங்களில் 230 கி.வோ துணை மின் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7]

மேற்கண்ட 17 எண்ணிக்கை 230 கி.வோ துணை மின் நிலையங்களைச் செயல்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

வெளி நிதி நிறுவனங்களில் இருந்து நிதியுதவி பெறும் திட்டங்கள்

ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன நிதியுதவி பெறும் திட்டங்கள்

*ஐந்து 400 கி.வோ. துணை மின் நிலையங்கள், பன்னிரெண்டு 230 கி.வோ. துணை மின் நிலையங்கள் மற்றும் இதற்கான மின் பாதைகள் ரூபாய் 5,000 கோடி முதலீட்டில் அமைப்பதற்காக திட்டமிடப்பட்டு, ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து ரூபாய் 3,572.93 கோடி அதிகாரபூர்வ மேம்பாட்டு நிதியுதவி (*Official Development Assistance Loan*) பெறப்பட்டுள்ளது.*

ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன நிதியுதவி பெறும் பணிகள் 35 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ரூ.1,078.26 கோடி மதிப்பீட்டிலான 11 தொகுப்புகள், ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன நிதியுதவி பெறும் திட்ட தொகுப்புகளில் இருந்து விலக்கப்பட்டு உள்ளது. அந்த நிதியை வேறு திட்டங்களுக்கு பயன்பெறும் வகையில் ரூ.1,168.30 கோடி மதிப்பீட்டிலான 30 கூடுதல் தொகுப்புகளுக்கு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) நிறுவன நிதியுதவி பெறும் திட்டங்கள்:

*ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை (*MNRE*), மின் தொடரமைப்புக் கட்டமைப்பின் ஒரு பகுதியை அமைக்க ரூபாய் 1,462.69 கோடிக்கு நிதி உதவி செய்வதற்கு ஒன்றிய அரசின் நிதித் துறைக்கு பரிந்துரை செய்துள்ளது.* GST *அமலாக்கத்திற்கு பின் இத்திட்டங்களுக்கான செலவு ரூபாய் 2,049.392 கோடியாக திருத்தப்பட்டுள்ளது.*

*இத்திட்டங்கள், ரூபாய் 538.91 கோடிக்கு தேசிய மாசற்ற எரிசக்தி நிதியின் (*NCEF*) கீழ் மானியமாகவும், 76 மில்லியன் யூரோ இந்தோ ஜெர்மன் இருதரப்பு ஒத்துழைப்பின்கீழ்* KfW *நிதியுதவியின்மூலம்*

[*2021 செப்டம்பர் 7*

மிதவட்டிக் கடனாகவும், இதர நிதி, மின் தொடரமைப்புக் கழக பங்கு மூலதனத் தொகையாகவும் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை-கன்னியாகுமரி தொழில் வழித்தடத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியின் (Asian Development Bank) நிதி உதவி பெறும் திட்டங்கள்:

தென் மாவட்டங்களிலுள்ள புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உள்ளிட்ட புதிய மின் திட்டங்களின் மின் உற்பத்தியை மின் தொகுப்பில் இணைக்கவும் மற்றும் சென்னை - கன்னியாகுமரி தொழில் வழித்தடத்தின் வடக்கு மற்றும் தெற்கு முனையங்களுக்கிடையே 765 கி.வோ மற்றும் 400 கி.வோ மின் தொடரமைப்பை வலுப்படுத்தவும் ஆசிய வளர்ச்சி வங்கியின் (Asian Development Bank) நிதி உதவியுடன் விருதுநகரில் 765 கி.வோ. துணை மின் நிலையம், ஒட்டப்பிடாரத்தில் 400 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் அதன் தொடர்பான மின்பாதைகளை ரூபாய் 4,332.57 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டதிற்காக ADB நிறுவனம் 451 மில்லியன் யு.எஸ். டாலர் நிதியுதவி வழங்குகிறது. இத்திட்டங்களுக்கு தமிழக அரசு ரூபாய் 1,000 கோடி நிதி ஆதரவு அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

பசுமைவழித்தடம் - இரண்டாவது நிலையின்கீழ் அமைக்கப்படவுள்ள திட்டங்கள்

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மானியத்தின்கீழ் பசுமை வழித்தடத்தின் இரண்டாவது நிலையாக திருநெல்வேலி மாவட்டம் சமுகரெங்கபுரத்தில் ஒரு 400 கி.வோ. துணை மின் நிலையம், கன்னியாகுமரி மாவட்டம் முப்பந்தல், திருப்பூர் மாவட்டம் பூலவாடி மற்றும் கொங்கல் நகரம் ஆகிய இடங்களில் மூன்று 230 கி.வோ. துணை மின் நிலையங்கள், 400 கி.வோ. கமுதி - தப்பக்குண்டு இருவழி சுற்று மின்பாதை ஆகிய திட்டங்களை ரூபாய் 1,609 கோடி செலவில் அமைக்க விரிவான திட்ட அறிக்கை ஒன்றிய மின்சார ஆணையம் (CEA) மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை (MNRE)-க்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒன்றிய மின்சார ஆணையம் (CEA)–ல் ரூபாய் 1,355.14 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பொருளாதார விவகாரங்கள் துறை–பொருளாதார விவகாரங்களின் அமைச்சரவைக் குழுவிலிருந்து (Cabinet Committee of Economic Affairs/ DEA) ஒப்புதல் பெறவேண்டியுள்ளது.

2021 செப்டம்பர் 7]

முக்கிய சவால்கள்:

நிலம் கையகப்படுத்துவதில் ஏற்படும் தாமதங்களினால் மிக உயர் மின்அழுத்த துணை மின் நிலையங்கள் அமைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. மிக உயர் மின்அழுத்த பாதைகள் அமைக்க தாமதம் ஏற்படுவதற்கு, மின் பாதை அமைப்பதில் உள்ள வழி உரிமை சார்ந்த சிக்கல்கள், நில உரிமையாளர்களின் எதிர்ப்பு மற்றும் நீதிமன்ற தடையாணைகள், இரயில்வே துறை, தேசிய நெடுஞ்சாலை, வனத் துறை போன்ற துறைகளில் சட்டபூர்வ அனுமதி பெறுவதில் தாமதம் ஆகியவை முதன்மைக் காரணிகளாக உள்ளன.

ஒன்றிய மின்சார கட்டுப்பாட்டு ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மின்பாதைகளுக்கான உயர்மட்ட மற்றும் கிடைமட்ட இடைவெளி தேவைகளுக்கு ஏற்ப நீக்கப்படும் பயிர்கள் மற்றும் மரங்களுக்கான இழப்பீட்டுத் தொகை வருவாய் துறையினரால் நிர்ணயிக்கப்பட்டு தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. 30.10.2019 நாளிட்ட அரசாணை எண் 86-ன்படி மின் கோபுர அடிதளத்திற்கு 100 சதவீதமும், மின்பாதை கீழ்பகுதிக்கு 20 சதவீதம் நில வழிகாட்டி மதிப்பீட்டின் அடிப்படையில் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் வழி உரிமை சிக்கல்களை எதிர்கொள்கிறது, எனினும் தேவையான அனுமதிகளைப் பெற்று மிக விரைவாக மின்பாதைகளை நிறுவ தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவசர கால மீட்புத் திட்டம்

வெள்ளம் மற்றும் புயல் போன்ற இயற்கை சீற்றங்களால், மின் தொடரமைப்பு கட்டமைப்பானது மிகவும் சேதமடைவதன் விளைவாகமுக்கியதொடரமைப்புஇணைப்புகள் மற்றும்துணை மின் நிலையங்கள் பரவலாக பாதிக்கப்படுவதால், மின்தொடரமைப்புக் கட்டமைப்பை உடனடியாகவும் தற்காலிகமாகவும் மீட்பதற்கு 765 கி.வோ வரையிலான கட்டமைப்பிற்கு ஏற்ற இரண்டு தொகுப்பு "அவசர மீட்பு அமைப்பு" (Emergency Restoration System) கொள்முதல் செய்யப்படவுள்ளது.

நம்பகமான தகவல் தொடர்புத் திட்டம்

தற்போதுள்ள ஒளியியல் இழை தகவல் தொடர்பு கட்டமைப்பு: (ஃபைபர் ஆப்டிக் நெட்வொர்க்)

தற்போது தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் சுமார் 5,000 கி.மீ. அளவிற்கு மாநிலத்தின் பல வழித்தடங்களில் 12/24

[2021 செப்டம்பர் 7

கோர் ஃபைபர் கொண்ட ஒளியியல் இழை தகவல் தொடர்பு கட்டமைப்பு செயலில் உள்ளது.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து துணை மின் நிலையங்களிலிருந்தும் தகவல்களைப் பெற இந்தக் கட்டமைப்பு போதுமானதாக இல்லை. தற்போதுள்ள ஒளியியல் இழைகளில் 50% நிறுவி 10 ஆண்டுகளுக்கு மேல் முடிந்து விட்டதால், அடிக்கடி சேதம்/குறைபாடு ஏற்படுகிறது. மாநிலம் முழுவதும் உள்ள பெரும்பாலான முக்கிய துணை மின் நிலையங்களுக்கிடையே இணைப்பை ஏற்படுத்த, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் பரஸ்பர பகிர்வு அடிப்படையில் இந்திய மின் தொடர் கட்டமைப்புக் கழகம் (PGCIL) மற்றும் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட்டின் (BSNL) இழைகளைப் பயன்படுத்துகிறது. பெரும்பாலான ஒளியியல் இழை இணைப்புகளுக்கு மாற்றுப் பாதைகள் தற்போது இல்லை.

மேற்கண்ட பற்றாக்குறையைச் சரிசெய்ய, ஒளியியல் இழை தொழில்நுட்பத்தின் பல்வேறு நன்மைகளான விரைவான தகவல் பரிமாற்றம், தகவல் நம்பகத்தன்மை மற்றும் மொத்த தகவல் பரிமாற்றத்திற்கான வசதி ஆகியவற்றை பெற, நம்பகமான தகவல் தொடர்பு திட்டம் நிறுவப்படுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1.5 பகிர்மானம்

மின் விநியோகம் என்பது உயரழுத்த கட்டமைப்பு மற்றும் தாழ்வழுத்த மின் பாதைகளைக் கொண்டு அனைத்து வகை நுகர்வோரையும் நேரடியாக இணைக்கும் அமைப்பாகும். மின் விநியோகத்தின் அன்றாட செயல்பாட்டில் விநியோக பிரிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. மின் விநியோக கட்டமைப்பு என்பது 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள், 11 கி.வோ. மின்னூட்டிகள், விநியோக மின்மாற்றிகள், தாழ்வழுத்த மின்பாதைகள் மற்றும் புதைவடங்களைக் கொண்டுள்ளதாகும்.

33 கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்லும், 33 கி.வோ உயர் அழுத்த மின் பாதைகள் 1,029 கி.மீ. அளவிற்கு புதை வடங்களையும் மற்றும் 7,691 கி.மீ. அளவிற்கு மேலே செல்லும் கம்பிகளையும் கொண்டுள்ளது. 33 கி.வோ துணை மின் நிலையங்களில் உயர் மின்னழுத்த விகிதத்தில் இருந்து குறைந்த மின்னழுத்த விகிதமாக மாற்றப்பட்டு, 4,082 கி.மீ.

2021 செப்டம்பர் 7]

அளவிற்கு புதை வடங்கள் மற்றும் 1,73,183 கி.மீ. அளவிற்கு மேலே செல்லும் மின்கம்பிகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

01.04.2021 அன்று நிலவரப்படி வகைப்படுத்தப்பட்ட (Category wise) மின் பயனீட்டாளர்களின் விவரம்

வகையினம் (Category)	மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்)	விழுக்காடு	மின் நுகர்வு (மில்லியன் யூனிட்டில்) 2020–2021	விழுக்காடு
உயர் அழுத்தமின் பயனீட்டாளர்கள்	*0.1 (10,030 எண்ணிக்கை)*	*0.03*	*27,917*	*29.91*
தாழ்வழுத்த மின் பயனீட்டாளர்கள்				
வீடுகள்	*227.53*	*71.92*	*32,714*	*35.05*
வணிகம்	*35.37*	*11.18*	*6,738*	*7.22*
தொழிற்சாலைகள்	*7.38*	*2.33*	*8,384*	*8.98*
விவசாயம்	*21.81*	*6.89*	*13,956**	*14.95*
குடிசைகள்	*9.89*	*3.13*	*393**	*0.42*
இதர இனம்	*14.30*	*4.52*	*3,242*	*3.5*
மொத்தம்	**316.38**		**93,344**	

* -தற்காலிகமாக

ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் (IPDS)

ஒன்றிய மின் துறை அமைச்சகம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டத்தில் (IPDS) அனைத்து மின் நுகர்வோர்க்கும் 24 மணி நேரமும் மின்சாரம், ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பீட்டை (AT&C) கணிசமாகக் குறைக்க மற்றும் அனைத்து நகர்ப்புற குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்குவது ஆகிய நோக்கங்களுடன் புதிய 33/11 கி.வோ துணை மின் நிலையங்களை நிறுவுதல், இயக்கத்திலுள்ள 33/11 கி.வோ துணை மின் நிலையங்களை மேம்படுத்துதல், விநியோக மின்மாற்றி, உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மின்கம்பிகள் அமைத்தல், மின் புதைவடங்கள் அமைத்தல் மற்றும் மின்தேக்கிகள் நிறுவுதல் ஆகியவை 521 நகரங்களில், 37 வட்டங்களில் ரூ.1,695.86 கோடி செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 7

இத்திட்டத்தில் சென்னையில் தானியங்கி 33/11 கே.வி. துணை மின் நிலையங்களை 7 இடங்களில் முறையே தாமோதரன் தெரு, கண்ணம்மாபேட்டை, மில்லர்ஸ் சாலை, கார்ப்பரேஷன் காலனி, கோடம்பாக்கம், வடபழனி மற்றும் அனகாபுத்தூர் ஆகிய இடங்களில் நிறுவ மொத்தம் ரூ.188.59 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடந்து வருகின்றன.

மேல்நிலை மின்கம்பி பாதைகளைப் புதைவடங்களாக மாற்றுதல்

உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த மேலே செல்லும் மின்பாதைகளைப் புதைவடங்களாக மாற்றுவதால் மின்கம்பிகள் அறுந்து விழுவதால் மற்றும் மின்கம்பங்கள் விழுவதால் ஏற்படும் விபத்துகள், போக்குவரத்து இடையூறு, கட்டடங்களுக்கு அருகாமையில் செல்லுதலைத் தவிர்த்தல் மற்றும் மின் திருட்டு ஆகியவற்றைத் தடுப்பதற்கு ஏதுவாகிறது.

சென்னை

தமிழகத்தின் தலைநகரமான சென்னையில், உச்ச மின் தேவை 3,738 மெகாவாட் ஆகும். விபத்துகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவும் பாதுகாப்பான மின் கட்டமைப்பை அமைப்பதற்காவும், சென்னை மாநகரம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட சென்னை மாநகரப் பகுதிகளில் உள்ள பெரம்பூர், தாம்பரம், ஆவடி, அடையாறு மற்றும் ஐடி காரிடர் ஆகிய ஐந்து கோட்டங்களில் 3,506.53 கி.மீ புதைவடங்கள் மற்றும் 39,766 மின் பெட்டிகள் உள்ளடக்கி ரூ.993.32 கோடி மதிப்பீட்டில், மின் நிதி நிறுவனத்தின் (பி.எப்.சி) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆவடி, அடையாறு மற்றும் ஐடி காரிடர் கோட்டங்களில் இப்பணி விரைவில் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டெல்டா மாவட்டங்கள்:

டெல்டா மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், கடலூர், விழுப்புரம் மற்றும் கடலோர இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவை அடிக்கடி சூறாவளி, புயல் மற்றும் பலத்த மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பெரும் பேரழிவுகளை சந்திக்க நேரிடுகின்றன. இவ்வாறான இயற்கைச் சீற்றங்களின் போது, மின்கம்பங்கள் மற்றும் உயர் மின் கோபுரங்கள் சாய்ந்தும், மின்கம்பிகள் அறுந்து விழுந்தும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் கட்டமைப்புகள் முழுவதுமாக சேதமடைகிறது.

2021 செப்டம்பர் 7]

இவ்வாறாக கடலோர பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின்கட்டமைப்பு சேதங்களை தவிர்க்க, புயலால் சேதமடையாத மின்கட்டமைப்பை உருவாக்குவதற்காக மேலே செல்லும் *33* கி.வோ. உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, *219* கி.மீ. அளவிற்கு *15* மின்னூட்டிகளை உள்ளடக்கி *33* கி.வோ. துணை மின் நிலையங்களுக்கு மின் விநியோகம் வழங்கும் *33* கி.வோ. மேலே செல்லும் உயரழுத்த மின் கம்பிகளை ரூ.*210* கோடி செலவில் *33* கி.வோ. புதைவடங்களாக மாற்ற ஊரக மின்மயமாக்கல் கழகத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள விநியோக மின்மாற்றிகளை வளையச் சுற்றுத்தர அமைப்புகளாக (Ring Main Unit) மாற்றி அமைத்தல்

தற்போது வழக்கத்திலுள்ள மின்மாற்றி கட்டமைப்புகளில் பீங்கான் (Insuator) வெடித்தல், இணைப்பு கம்பி அறுந்து போகுதல் (Jumper cut), மின்னூற்றுகளில் பழுது (Bus fault), காற்றுத் திறப்பான்களில் (AB switch) பழுது போன்ற காரணங்களால் அதிகநேர மின்தடைகள் ஏற்படுகின்றன. இந்த மின்மாற்றி கட்டமைப்புகளில் அவ்வப்போது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான நேரத்தை திட்டமிட்டு, மின்னியக்கத்தை நிறுத்தி அப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், மின்நுகர்வோருக்கு மின்தடை ஏற்பட்டு சிரமத்தை சந்திக்க வேண்டியுள்ளது.

பராமரிப்பு இல்லா உயரழுத்த மின்கட்டமைப்புகள் மற்றும் நுகர்வோருக்கு ஏற்படும் மின்தடையை சீர்செய்யும் நேரத்தைக் குறைக்க, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் தற்போதுள்ள மின்மாற்றி கட்டமைப்புகளுக்கு பதிலாக வளையச் சுற்றுத்தர அமைப்புகளாக ரூ.*1819* கோடி செலவில் மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக *5,692* மின்மாற்றி கட்டமைப்புகளை வளையச் சுற்றத்தர அமைப்புகளாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மின் விநியோகத்தை மேம்படுத்த கட்டமைப்பை வலுப்படுத்துதல்

இதை தவிர, மின் பகிர்மான மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்பை உருவாக்கவும், தரமான, தடையில்லா

[*2021 செப்டம்பர் 7*

மின் விநியோகம் முழு மின் கட்டமைப்பிற்கு வழங்கவும், ஒட்டு மொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளின் மதிப்பீட்டைக் குறைக்கவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், 59 எண்ணிக்கை 33/ 11 கி.வோ புதிய துணை மின் நிலையங்கள், 44 எண்ணிக்கை ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள 33/11 கி.வோ துணை மின் நிலையங்களின் திறன் உயர்த்துதல் மற்றும் கூடுதலாக்குதல் ஆகிய திட்டங்களை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றும் திட்டம்

இத்திட்டத்தின் மூலம், ரூபாய் 268 கோடி மதிப்பீட்டில் 33 கி.வோ துணை மின் நிலையங்களுக்கு மின்சாரம் கொண்டு செல்லும் மின்பாதையில் சுமார் 253 கிலோ மீட்டர் அளவிலான 33 கி.வோ மின்கம்பிகளைப் புதைவடங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், சூறாவளி மற்றும் புயல் காலங்களில் கட்டமைப்பில் பெரும் சேதம் ஏற்படாமல் தடுக்க முடியும்.

இத்திட்டத்தில் 70% ஆனது ஆசிய வளர்ச்சி வங்கி கடன் உதவியுடனும், மீதமுள்ள 30% தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக நிதியின் மூலம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாய மின் இணைப்புகள்

விவசாய மின் இணைப்புகள் விவரம்

வருடம்		வழங்கப்பட்ட மின் இணைப்புகள்		
வ. எண்	திட்டம்	2006-11	2011-16	2016-21
1	சாதாரண வரிசை	1,05,857	34,499	40,935
2	தட்கல் சுயநிதித் திட்டம்	-	-	80,888
3	ரூ.10,000/- திருத்தப்பட்ட சுயநிதித் திட்டம்	12,705	1,564	920

2021 செப்டம்பர் 7]

வருடம்		வழங்கப்பட்ட மின் இணைப்புகள்		
வ. எண்	**திட்டம்**	**2006-11**	**2011-16**	**2016-21**
4	*ரூ.25,000/- திருத்தப்பட்ட சுயநிதித் திட்டம்*	*52,986*	*11,465*	*4,.069*
5	*ரூ.50,000/- திருத்தப்பட்ட சுயநிதித் திட்டம்*	*34,189*	*18,596*	*6,397*
6	*அரசு திட்டம் மற்றும் THADCO*	*573*	*79*	*5,365*
7	*ஜீவன் தாரா SC/ST*	*1,403*	*258*	*9*
8	*ஜீவன் தாரா non-SC/ ST*	*2,197*	*131*	*9*
9	*2 இலட்சம்*		*16,395*	
	மொத்தம்	**2,09,910**	*82,987*	*1,38,592*

விவசாய மின் இணைப்புகளில் மின் அளவி பொறுத்தப்படாததால் விவசாய இணைப்புகளின் மின் கட்டணம் மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த தொகையான ஒரு குதிரைத்திறனுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.2,875 என்ற அடிப்படையில் அனைத்து விவசாய மின் இணைப்புகளுக்கும் அரசு மானியமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கி வருகிறது.

விவசாய மின் இணைப்புகளுக்காக 2020—2021 ஆம் ஆண்டில் வழங்கிய மானியத் தொகை ரூ.4,275.86 கோடி ஆகும்.

விவசாய மின் இணைப்புகள் பல்வேறு பிரிவுகளில் பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பிரிவுகளின் விவரங்கள் கீழ்வருமாறு: —

- **சாதாரண வரிசை** – *இலவச திட்டம்*
- **அரசு திட்டம் –** *கீழ்வருமாறு*

i. *தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு கட்டணத்துடன் கூடிய திட்டம்*

[2021 செப்டம்பர் 7

ii. பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புத் திட்டம் – ஒருமுறை மட்டும்.

iii. இராணுவத்தினர், முன்னாள் இராணுவத்தினர், துணை இராணுவத்தினர், முன்னாள் துணை இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், கலப்பு திருமணம் செய்தோர், விதவை மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு 350 எண்ணிக்கை சிறப்பு முன்னுரிமையில் விவசாய மின் இணைப்பு வழங்குதல்.

iv. அரசு புதிதாக அறிமுகப்படுத்தும் திட்டங்கள்

➢ **திருத்தப்பட்ட சுயநிதித் திட்டங்கள்**

அ) ரூ.10,000/- திருத்தப்பட்ட சுயநிதித் திட்டம் – பணம் செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் சாதாரண வரிசையில் பதிவு செய்யப்பட்ட விருப்பப்படும் விவசாயிகளின் விவசாய விண்ணப்பங்கள் மூப்பு அடிப்படையில் திட்டம் அறிவிக்கப்பட்டவுடன் கீழ் வரிசைக்கிரமமாக விடுவிக்கப்படுகின்றன. திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/-க்குள் இருந்தால் ரூ.10,000/-மும், திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/-க்கு மேல் இருந்தால் மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையும் இத்திட்டத்தின்கீழ் செலுத்த வேண்டியிருக்கும்.

ஆ) ரூ.25,000/- திருத்தப்பட்ட சுயநிதித் திட்டம் – பணம் செலுத்த வேண்டும் - சாதாரண வரிசையில் பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் தொடக்க மதிப்பீட்டுத் தொகையாக ரூ.500/- செலுத்தி தங்களின் விருப்பநிலையை பதிவு செய்யவேண்டும். மூப்பு அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பதாரரின் முறை வரும்போது, திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/-க்குள் இருந்தால் ரூ.25,000/-மும், திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/-க்கு மேல் இருந்தால் மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையும் இத்திட்டத்தின்கீழ் செலுத்த வேண்டியிருக்கும்.

இ) ரூ.50,000/- திருத்தப்பட்ட சுயநிதித் திட்டம் – பணம் செலுத்த வேண்டும்-சாதாரண வரிசையில் பதிவு செய்த விண்ணப்பதாரர்கள்தொடக்க மதிப்பீட்டுத் தொகையாக

2021 செப்டம்பர் 7]

ரூ.500/- செலுத்தி தங்களின் விருப்பநிலையை பதிவு செய்யவேண்டும். மூப்பு அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பதாரரின் முறை வரும்போது, திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/-க்குள் இருந்தால் ரூ.50,000/-மும், திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/-க்கு மேல் இருந்தால் மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையும் இத்திட்டத்தின்கீழ் செலுத்த வேண்டியிருக்கும்.

ஈ) மேற்கண்ட மூன்று திட்டங்களுக்கும் தனித்தனியான முன்னுரிமை உள்ளது.

உ) விண்ணப்பதாரர்கள் மேற்கண்ட திட்டங்களிலிருந்து விலகினால் அவர்களின் விண்ணப்பங்கள் சாதாரண வரிசையில் பரிசீலிக்கப்படும்.

31-03-2021 அன்று பல்வேறு பிரிவுகளில் நிலுவையில் உள்ள விவசாய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4,52,777 ஆகும்.

தகவல் தொழில்நுட்ப புதிய முனைப்புகள்

i. *மதிப்பீட்டாளர்களுக்கான மீட்டர் தரவு பதிவிறக்கம் மற்றும் தானியங்கி கைபேசி செயலி – திட்டம் ஆப்டிகல் ரீடர் கேபிள் மூலம் மின் அளவியை விரைந்து கணக்கெடுக்க ஒரு புதிய செயலி உருவாக்கப்பட்டு வருகிறது. இது மதிப்பீட்டை எளிதாக்கி ஆட்களின் தலையீட்டால் ஏற்படும் பிழைகளை நீக்குவதன் மூலம் அதிக கட்டணத்தை தவிர்க்க இயலும்.*

ii. *கட்டணம், புகார்கள் மற்றும் சுய மதிப்பீட்டிற்கான ஒற்றை கைபேசி செயலி – திட்டம்*

தற்போது பணம் செலுத்துவதற்கான கைபேசி செயலி நுகர்வோரின் பயன்பாட்டில் உள்ளது. நுகர்வோரின் அனைத்து புகார்களை பதிவு செய்யவும், சுய மதிப்பீட்டிற்காகவும் தற்போது கைபேசி செயலியை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நுகர்வோரின் அனைத்து பிரச்சினைகளும் ஒரே செயலியின்கீழ் கொண்டுவரப்படுவதால் இது முழுமையாக திருப்தி அளிக்கும். மின்சாரம் துண்டிப்பு, மின்அழுத்த ஏற்ற இறக்கங்கள், மின் கணக்கீடு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் புதிய சேவை தொடர்பான பிரச்சினைகள் உட்பட எந்த வகையான புகாரையும்

[*2021 செப்டம்பர் 7*

நுகர்வோர் எழுப்பலாம். இந்த செயலியின் மூலம் நுகர்வோர் தங்கள் புகார்களின் நிகழ்நிலையைக் கண்காணிக்க முடியும்.

மேலும் இந்த செயலி மூலம் நுகர்வோர் தங்கள் மின் அளவியை ஸ்கேன் செய்து மின் அளவியில் உள்ள மின் கணக்கை தானாகவே கணக்கீட்டு சேவைக்கு அனுப்புவதன் மூலம் மதிப்பீட்டாளரின் கையேடு மின் கணக்கை தவிர்த்து, நுகர்வோர் தனது சொந்த ரீடிங்கை எடுத்து கொண்டதால் எவ்வித சந்தேகமும் இல்லாமல் முற்றிலும் திருப்தி அடைவர். மேலும், அவ்வாறு அனுப்பியவுடன், கணக்கீடு உடனடியாக செய்யப்படும் மற்றும் நுகர்வோர் அதே கைபேசி செயலியை பயன்படுத்தி ஆன்லைனில் பணம் செலுத்தலாம்.

iii. செயற்கை நுண்ணறிவு கொண்ட மென்பொருள் மூலம் மின் தேவையை முன்கூட்டியே கணித்தல்

i. தற்பொழுது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் முன்கணிப்பு தொழில்நுட்பம் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையத்தில் (State Load Despatch Centre, Chennai) நடைமுறையிலுள்ளது. முன்கணிப்பு மையத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய காரணி வானிலை முன்கணிப்பு ஆகும். பல்வேறு மண்டலங்களில் பதிவு செய்யப்பட்ட வானிலை முன்கணிப்பு தேவை முன்னறிவிப்பை செயல்படுத்துவதற்காக எடுக்கப்பட்டது. உண்மையாக தேவை மற்றும் முன்கணிப்பு தேவையின் துல்லியம் மாறுபடும். துல்லியத்திலுள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும்.

ii. உண்மையான தேவைக்கும் முன்கணிக்கப்பட்ட தேவைக்கும் இடையே அதிகபட்ச துல்லியத்தை அடைய, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேவை முன்கணிப்பு மாதிரி கொண்ட ஒரு மென்பொருள் தொகுப்பு உருவாக்கப்படுகிறது.

iii. மேற்கூறிய புதிய கருவியின் உதவியுடன் முன்னறிவிப்புக்கும் உண்மையான தேவைக்கும் இடையிலான மாறுபாட்டுக் காரணியைக் குறைப்பதற்காக, தற்போதுள்ள கோரிக்கை முன்னறிவிப்பு முறையை மேம்படுத்த முன்மொழியப்பட்டது.

மறுசீரமைக்கப்பட்ட மின் விநியோகத் திட்டம்

ஒன்றிய மின் துறை அமைச்சகத்தின் மறுசீரமைப்பு அடிப்படையிலான முடிவுகளுடன் இணைக்கப்பட்ட

2021 செப்டம்பர் 7]

மின் விநியோகத் திட்டம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. நிதி ரீதியாக நிலையான மற்றும் செயல்பாட்டு ரீதியாக திறமையான விநியோகத் துறை மூலம் நுகர்வோருக்கு தரமான, நம்பகத்தன்மையுடன் கூடிய ஏற்கத்தக்க மின்சாரம் வழங்குவதை மேம்படுத்துதல்

2. ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை (AT&C) 12—15% என்ற அளவில் குறைத்தல்.

3. சராசரி மின் விற்பனை விலை மற்றும் சராசரி மின் அடக்க விலை இடையே உள்ள இடைவெளியை (ACS-ARR) இடைவெளியை பூஜ்ஜியமாகக் குறைக்க வேண்டும்.

செயல் திறனை மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்திற்கு மாநில அமைச்சரவையின் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். நுகர்வோர் மற்றும் கட்டமைப்பு மின்அளவீடு பொருத்துதல், மின்இழப்புகளைக் குறைப்பதற்காகவும் மற்றும் நவீனப்படுத்துவதற்காகவும் பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்துதல், மற்றும் மறு சீரமைப்பு முனைப்புகள் ஆகியவை இதில் அடங்கும்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்காக பின்வரும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

- அனைத்து 11 கி.வோ. / 22 கி.வோ. மின்னூட்டிகள் பொருத்தப்பட்டுள்ள (Feeder Meters) மின் அளவிகளில் தகவல் பரிமாறக்கூடிய வசதியை செயல்படுத்துதல் மற்றும் அதனை AMI அமைப்புடன் ஒருங்கிணைத்தல்.

- பகிர்மானத்தை மேம்படுத்தும் பணிகளான புதிய 33/11 கி.வோ. மற்றும் 110/22 கி.வோ. துணை மின்நிலையங்கள் அமைத்தல், 33/11 கி.வோ. மற்றும் 110/22 கி.வோ. மின் நிலையங்களின் திறன் மேம்படுத்துதல்

- பழைய/சிதைந்த வழித்தட மின்கம்பிகளை மாற்றுதல்

- அதிக பளுவுள்ள உயர் அழுத்த மின்னூட்டிகளைப் பிரித்தல்

- விவசாய மின் இணைப்புகள் அதிகம் உள்ள

[*2021 செப்டம்பர் 7*

மின்பாதைகளைப் பிரித்து விவசாய மின்பாதைகளை தனியாக அமைத்து சூரியமயமாக்கல் (Bifurcation and Solarisation).

- மின்பளு அதிகம் உள்ள மின்னூட்டிகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் உள்ள பகுதிகளில் புதிய கூடுதல் மின்மாற்றிகளை நிறுவுதல்.
- அடர்ந்த தாவரப் பகுதிகளில் உள்ள இடங்களில் காப்பிடப்பட்ட வடங்களாக (Aerially Bunched Cable) மாற்றி அமைத்தல்.

தேசிய அளவில் திட்டத்தின் மொத்த செலவு ரூ.3,03,758 கோடி. இத்திட்டத்தின்கீழ் நுகர்வோர் வினைத்திறன் மிகு மின் அளவிக்கு 15 % (ரூ.900/மின் அளவி) மானியமும், விநியோகத்தை வலுப்படுத்தும் பணிகளுக்கு 60% மானியமும் உள்ளது. தற்போது, அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் மானியங்களைப் பெறுவதற்கு மின்வாரிய அமைச்சகத்திடம் சமர்ப்பிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தயாரிக்கிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் எடுக்கப்பட்டு வரும் மின் சேமிப்பு மற்றும் மின் தேவை தரப்பு மேலாண்மை குறித்த நடவடிக்கைகள்

I) மின் தேவை தரப்பு மேலாண்மை செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட, நகர மின்னூட்டிகளில் உள்ள 4.2 இலட்சம் விவசாய மின் இணைப்புகளில் மின்தேக்கிகளை நிறுவுவதற்கான திட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக கட்டடங்களில் சூரிய ஒளி மேற்கூரை மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுதல், உன்னத் ஜோதி திட்டத்தின்கீழ் ஒளி உமிழ் இருமுனைய விளக்குகள் மற்றும் ஐந்து நட்சத்திர குறியீடு கொண்ட மின் விசிறிகள் விற்பனை ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

II) மின்சார வாகனத் திட்டம்:

மின்சார வாகனங்களுக்கான பொது மின்னூட்ட நிலையங்களின் உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான மாநில

2021 செப்டம்பர் 7]

முதன்மை முகமையாக (State Nodal Agency) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

III) மாநில நியமிக்கப்பட்ட முகமையாக (State Designated Agency) செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO), கீழ்க்காணும் பணிகளை செய்து வருகிறது.

- *இரண்டு மாதிரி கிராமங்கள், 127 அரசுப் பள்ளிகள் மற்றும் 5 மருத்துவமனைகளில் உள்ள திறனற்ற மின் சாதனங்களை மறுசீரமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *தமிழ் நாட்டின் எரிசக்தி சேமிப்பு கட்டட குறியீட்டு சட்டங்கள்/விதிகள் தயார் செய்து அதன் இறுதி வரைவு தமிழக அரசின் அரசாணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*
- *செயல்படுத்து இலக்கினை அடை மற்றும் வர்த்தகம் செய் திட்டம் (PAT) : மத்திய எரிசக்தி திறனூக்கச் செயலகம் (BEE) 89 நிறுவனங்கள் பல்வேறு சுழற்சி முறையால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.*
- *ஆற்றல் திறன் குறித்த ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல், மின் சேமிப்பு பற்றிய திறன் மேம்பாடு/ கருத்தரங்கு / பயிற்சி, பள்ளிகளில் மின் சக்தி திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *தமிழகத்தில் மத்திய திறனூக்கச் செயலகத்தின்கீழ் செயல்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள், நியமிக்கப்பட்ட ஆய்வு அலுவலர்களால் ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன.*
- *திறனற்ற மின் சாதனங்களை மின் திறன் கொண்ட மின் சாதனங்களாக மாற்றியமைக்க மாநில மின்சேமிப்பு நிதியினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அண்ணா பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.*

[*2021 செப்டம்பர் 7*

தடையற்ற மின்சாரம் வழங்க மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த மின் பராமரிப்புத் திட்டம்

ஆகஸ்ட் 2020 முதல் 9 மாதங்களாக பல்வேறு காரணங்களால் வழக்கமாக மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு பணிகள் நடைபெறாததால், சமீபகாலத்தில் தமிழகத்தில் சில பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டது. மரக்கிளைகள் ஒன்றோடு ஒன்று உரசுதல், பறவைகளால், மின்கம்பிகள் காற்றில் அசையும்போது ஒன்றோடொன்று உரசுதல், சாய்ந்த/ பழுதடைந்த மின்கம்பங்களால் மின்கம்பிகள் தாழ்வாக செல்லுதல், பலவீனமான சேதமடைந்த பீங்கான்கள் மற்றும் மின்பெட்டிகள் ஆகியவற்றால் மின்தடையினை சந்திக்க நேர்ந்தது. இவற்றுடன் சேர்ந்து ஏப்ரல் மாதம் முதல் கோடைக்காலம் தொடங்கியதால் குளிர் பதனி (AC) உள்ளிட்ட மின் உபகரணங்களின் பயன்பாடு அதிகரித்து மின்மாற்றிகளில் அதிக மின்பளு ஏற்பட்டது.

மேற்கண்ட பிரச்சினைகளை தவிர்க்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் ஒருங்கிணைந்த மின்பராமரிப்புத் திட்டம், தமிழகம் முழுவதும் 10 நாட்கள் 19.06.2021 முதல் 28-06-2021 வரை நாளொன்றுக்கு 2 முதல் 3 மணி நேர கால அவகாசத்திற்குள் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது.

அதில் கீழ்க்கண்ட அவசியமான பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டன:

வ. எண்	பராமரிப்புப் பணிகளின் விவரம்	மொத்த எண்ணிக்கை
1	*அகற்றப்பட்ட மரக்கிளைகள்*	*2,37,150*
2	*மாற்றப்பட்ட பழுதடைந்த மின்கம்பங்கள்*	*4,411*
3	*சரிசெய்யப்பட்ட சாய்ந்த மின்கம்பங்கள்*	*6,895*
4	*தாழ்வாக செல்லும் மின்கம்பிகளை சரிசெய்வதற்காக நிறுவப்பட்ட கூடுதல் மின்கம்பங்கள்*	*3,165*
5	*சரிசெய்யப்பட்ட மின்கம்ப தாங்கு கம்பிகள்*	*6,574*
6	*புதுப்பிக்கப்பட்ட பலவீனமான/உடைந்த பீங்கான்கள்*	*12,449*

2021 செப்டம்பர் 7]

வ. எண்	பராமரிப்புப் பணிகளின் விவரம்	மொத்த எண்ணிக்கை
7	*மாற்றப்பட்ட பழுதடைந்த மின்பெட்டிகள்*	*1,351*
8	*பராமரிக்கப்பட்ட துணை மின் நிலையங்கள்*	*917*
	மொத்தம்	**2,72,912**

இதன் தொடர்ச்சியாக அவ்வப்போது ஏற்பட்ட மின்தடை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தொடர்ச்சியான மின்வெட்டுகள் ஏற்படுவதில்லை.

இத்திட்டத்தினைத் தொடர்ந்து, மழை மற்றும் பருவ மாற்றத்தின் காரணமாக ஏற்படும் மின்தடைகளும் சீரிய முயற்சிகள் மேற்கொண்டு தவிர்க்கப்படுகின்றன. துணை மின் நிலையங்கள் மற்றும் மின்பாதைகளில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகளின்போது மட்டும் மின்நிறுத்தம் செய்து பொதுமக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டு பராமரிப்புப் பணிகள் முடிந்தவுடன் உடனடியாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

புதிய மின்மாற்றிகளை நிறுவி குறைந்த மின்னழுத்தத்தை சரி செய்வதற்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

வீட்டு மின் இணைப்புதாரர்கள் மற்றும் வணிக மின்நுகர்வோர்கள் தமது மின் இணைப்புகளில் தாமாகவே கூடுதலான மின்பளுக்களை இணைப்பதால் மின்மாற்றியில் இணைக்கப்பட்ட மின்பளு சில பகுதிகளில் மிகவும் அதிகரிக்கிறது. மேலும், காலை மாலை உச்ச பயன்பாட்டு நேரங்களில் அனைத்து நுகர்வோர்களும் மின் உபகரணங்கள் மற்றும் மின்சாதனங்களை பயன்படுத்தும்போது சில பகுதிகளில் மின்மாற்றியில் மின்சுமை அதிகரித்து அது பழுதடைவதால் மின் விநியோகத்தில் தடை ஏற்படுகிறது.

சில இடங்களில் மின்பாதைகளின் நீளம் அதிகமாக உள்ளதாலும் பெருமளவு நுகர்வோர்களுக்கு அந்த மின்பாதையில் இருந்து மின்விநியோகம் வழங்கப்படுவதாலும் கடைமுனை மின்நுகர்வோருக்கு மின்பாதையில் குறைந்த மின்னழுத்த குறைபாடு ஏற்படுகிறது. மேலும், மின்கட்டமைப்புகளில் எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்வுகளாலும் குறைந்த மின்னழுத்த குறைபாடு ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் குறைந்த மின்னழுத்த

[2021 செப்டம்பர் 7

குறைபாட்டின் காரணமாக நுகர்வோர் தம் வீட்டு உபகரணங்கள் மற்றும் மின்சாதனங்களை பயன்படுத்தும் போது மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

மேற்கண்ட குறைகளை களையும் பொருட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட மின்பராமரிப்பு திட்டத்தின்கீழ் 19.06.2021 முதல் 28-06-2021 வரையில் தமிழகம் முழுவதும் மின் பராமரிப்பு பணிகள் நடைபெற்றபோது, முதற்கட்டமாக எந்தெந்தப் பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் கூடுதல் மின்சுமையுடன் உள்ளன என்றும், எந்தெந்த பகுதிகளில் குறைந்த அழுத்த குறைபாடு நிலவுகிறது எனவும் கணக்கிடப்பட்டது.

அதிக மின்சுமையுள்ள மின்மாற்றிகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் உள்ள பகுதிகளில் ஏற்படும் சிரமங்களை நிவர்த்தி செய்ய 5,705 கூடுதல் மின்மாற்றிகளை நிறுவி மின்பளுவை குறைப்பதற்கும் 3,200 கூடுதல் மின்மாற்றிகளை நிறுவி குறைந்த மின்னழுத்தத்தை சரிசெய்யவும், மொத்தம் 8905 மின்மாற்றிகளை ரூ.625 கோடி மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டு நான்கு மாதங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மின்னகம் – மின் நுகர்வோர் சேவை மையம்:

புதிய, மாநில அளவிலான மையப்படுத்தப்பட்ட நுகர்வோர் சேவை மையமான "மின்னகம்", மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 20.06.2021 அன்று திறக்கப்பட்டது. மின்னகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் நுகர்வோர் சேவையில் ஒரு மைல்கல் ஆகும். இந்த மின்னகம், மின் துறை தொடர்பான அனைத்து புகார்களையும் தெரிவிக்க ஏதுவாக தொடர்ந்து 24 மணி நேரமும் 365 நாட்களும் இயங்கும் ஒரு தனித்துவமான மையம் ஆகும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 94987 94987 என்ற எண்ணில் மின்னிணைப்புதாரர்களின் மின்கட்டணம் தொடர்பான சந்தேகங்கள், புதிய மின்னிணைப்பு தகவல்கள், பழுதடைந்த மின்அளவி மாற்றம், உடைந்த மின்கம்பங்கள், தாழ்வாக செல்லும் மின்கம்பிகள், பழுதடைந்த மின் பெட்டிகள், ஆபத்தான நிலையில் உள்ள மின்மாற்றிகள், மின்தடை, குறைந்த மின்னழுத்தம், உயர் மின்னழுத்தம், அறுந்த மின்கம்பி மற்றும் தீப்பொறி பற்றிய புகார்களை மின் பயனீட்டாளர்கள் பதிவு செய்யலாம். அனைத்து புகார்களும் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7]

நுகர்வோர் இந்த அலைபேசி எண் மூலம் எங்கிருந்தும் புகார்களை அளிக்கலாம், இந்த புகார்கள் அந்தந்த பகுதிகளுக்கு மாற்றப்பட்டு, நடவடிக்கை எடுத்து முடிக்கும் வரை கண்காணிக்கப்படுகின்றன.

இந்த நுகர்வோர் சேவை மையத்தில், *2,00,177* புகார்கள் பெறப்பட்டுள்ளன. இதில் *1,86,219* புகார்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மீதமுள்ள *13,958* புகார்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெறப்பட்ட புகார்களில் *93.03* % புகார்கள் உடனடி தீர்வு காணப்பட்டுள்ளன.

1.6 மனிதவள மேலாண்மை

விநியோகங்களின் மறுசீரமைத்தல்

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள பிரிவு அலுவலகங்களில் ஒன்றிற்கு ஒன்றில் உள்ள நிர்வாக வேறுபாடுகளை நிவர்த்தி செய்யவும், பிரிவு அலுவலகங்களில் உள்ள அன்றாட பணிகளை சமன் செய்யவும் ஒரு மண்டலம் என்பது மூன்று அல்லது நான்கு மாவட்டங்களை உள்ளடக்கியதாகவும், மின்வட்டம் முழுவதும் ஒரே மாவட்டத்திற்குள் வருமாறும், கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்கள் சீரமைக்கப்படும்.

1.7 நீடித்த வளர்ச்சி இலட்சியங்கள்

நீடித்த வளர்ச்சி இலட்சியங்கள் (SDG கள்) கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட முக்கிய வளர்ச்சித் துறைகளில் இயற்கையான வினையூக்கத்தை (Catalysis) ஊக்குவித்து உறுதிப்பாட்டை அடைவதற்கு காலவரையறை இலக்குகளை நிர்ணயிக்கின்றன.

2021 ஆம் ஆண்டு, நீடித்த வளர்ச்சி இலட்சியங்கள் ஐ.நா. பொதுச் சபையில் *193* உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து இது ஆறாவது வருடம் ஆகும். நீடித்த வளர்ச்சி இலட்சியங்களானது, முன் எப்பொழுதும் இல்லாத வகையில் கலந்தாய்வு செயல்முறை மூலம் *17* இலட்சியங்களையும் அதன் தொடர்புடைய *169* இலக்குகளையும் *2030*-ல் அடையும் நோக்கில் வரையறுக்கப்பட்டுள்ளது.

துறையின் செயல்திறனை கண்காணிக்கும்பொருட்டு தமிழக திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் அரசால் ஒரு Dashboard (tnsdg@tn.gov.in) வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 7

1.8 நிதி

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

அ) பத்து வருடங்களின் வருவாய் கணக்கின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடிகளில்)

நிதியாண்டுகள்	வருவாய் இன வரவு	வருவாய் இன செலவு	வருவாய் பற்றாக்குறை
2011 - 12	22,898.38	36,219.72	-13,321.34
2012 - 13	31,467.59	43,146.66	-11,679.07
2013 - 14	34,912.76	48,897.79	-13,985.03
2014 - 15	42,507.09	55,263.69	-12,756.60
2015 - 16	49,705.39	55,492.20	-5,786.81
2016 - 17	56,012.12	60,360.88	-4,348.76
2017 - 18	59,132.83	66,893.61	-7,760.78
2018 - 19	61,666.73	74,290.15	-12,623.42
2019 - 20	65,177.10	77,142.03	-11,964.93
2020 - 21 (தற்காலிகம்)	65,239.13	77,924.98	-12,685.85

ஆ) உதய் திட்டத்தின் மூலம் தமிழக அரசால் கடன் ரூ.22,815 கோடி ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், 31.3.2021 அன்றின்படி நிலுவை கடன் தொகை ரூ.1,34,119.94 கோடி ஆகும்.

இ) சராசரி மின் விற்பனை விலை மற்றும் சராசரி மின் அடக்க விலைக்கும் உண்டான இடைவெளி அதிகமாக காணப்படுகிறது. அதன் விவரம் பின் வருமாறு.

(ரூபாய் யூனிட் ஒன்றுக்கு)

வருடங்கள்	சராசரி மின் விற்பனை விலை	சராசரி மின் அடக்க விலை	வருவாய் இடைவெளி
2011 - 12	3.38	5.83	-2.45

2021 செப்டம்பர் 7]

வருடங்கள்	சராசரி மின் விற்பனை விலை	சராசரி மின் அடக்க விலை	வருவாய் இடைவெளி
2012 - 13	*4.87*	*7.07*	*-2.20*
2013 - 14	*4.57*	*6.86*	*-2.30*
2014 - 15	*5.12*	*7.18*	*-2.06*
2015 - 16	*5.90*	*6.88*	*-0.99*
2016 - 17	*6.35*	*7.28*	*-0.93*
2017 - 18	*6.23*	*8.01*	*-1.78*
2018 - 19	*6.04*	*8.29*	*-2.26*
2019 - 20	*6.35*	*8.49*	*-2.14*
2020 - 21	*6.69*	*9.06*	*-2.35*

ஈ) தமிழ்நாடு மின் வாரியத்தில் அதிகரித்துள்ள எரிபொருள் செலவு, அதிக விலையில் தனியாரிடமிருந்து வாங்கும் மின்கொள்முதல் செலவு, கடனுக்கான வட்டி செலவு, ஊழியர்களுக்கான சம்பளம் போன்றவற்றின் காரணமாக தொடர்ச்சியாக இழப்புகளைச் சந்தித்துள்ளது. இந்த இழப்பின் காரணமாக மின் உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை ரூ.15,000/- கோடி அளவிற்கு செலுத்தப்படாமல் உள்ளது.

உ) மின் வாரிய நிதிநிலைமையை மேம்படுத்தும்பொருட்டு உயர்திறன் வாய்ந்த மின் அளவிகளை மாற்றுதல், விலை உயர்ந்த கொள்முதலை கட்டுப்படுத்துதல் கடனுக்கான வட்டி செலவினை சேமித்தல் போன்ற வருவாய் அதிகரிக்கும் மற்றும் செலவை குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

ஊ) மின் கட்டணம் கணக்கீட்டு திறன் மற்றும் வசூலிக்கும் திறனை அதிக அளவில் மேம்படுத்த பழுதடைந்த மின்னளவிகளை மாற்றுதல், 100 சதவீதம் மின் கணக்கீட்டை உறுதி செய்தல் (Smart Metering & Smart Grid), மின் கட்டணத்தை செலுத்தாத இணைப்புகளை துண்டித்தல், முறையற்ற மின் நுகர்வை கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2021 செப்டம்பர் 7

எ) நிதி நிறுவனங்கள் – ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC), மின் விசை நிதி நிறுவனம் (PFC) மற்றும் தமிழ்நாடு மின் விசை நிதி நிறுவனம் (TNPFC) மூலம் மற்றும் வணிக வங்கிகள் மூலம் பெறப்பட்டுள்ள, கடன் நிலுவைத் தொகை, கூடுதல் கடன் மற்றும் புதிதாக பெறப்படும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை 9 சதவீதமாக குறைக்க பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போதுள்ள கடன் நிலுவைத் தொகைக்குண்டான வட்டி விகிதத்தில் 100 புள்ளிகளை(BPS) குறைத்தால், மின் வாரியத்திற்கு வட்டிச் சேமிப்பு ரூ. 1,127 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் கடந்த 10 வருடங்களில் 7 ஆண்டுகள் நஷ்டத்தை சந்தித்துள்ளது, இதன் காரணமாக திரட்டப்பட்ட இழப்புகள் 31.3.2021 நிலவரப்படி ரூ.6,782.35 கோடியாக அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண்டு 2021-22ல் மதிப்பிடப்பட்டுள்ள வருவாய் இழப்புகள் ரூ.1,778.17 கோடி ஆகும்.

அ) கடந்த 10 ஆண்டுகளுக்கான வருடாந்திர வருவாய் கணக்கு பின்வருமாறு:

(ரூ. கோடிகளில்)

நிதி ஆண்டு	வருவாய் ரசீதுகள்	வருவாய் செலவு	வருவாய் இடைவெளி
2011 - 12	1,744.85	1,744.85	0
2012 - 13	2,414.95	2,178.51	236.44
2013 - 14	2,877.11	1,569.07	1,308.04
2014 - 15	1,936.21	2,049.15	-112.94
2015 - 16	2,507.08	2,770.48	-263.40
2016 - 17	2,578,07	2,853.02	-274.94
2017 - 18	2,781.85	7,447.98	-4,666.14
2018 - 19	3,224.63	3,859.54	-634.91

2021 செப்டம்பர் 7]

2019 - 20	3,366.01	4,440.70	-1,074.48
2020 - 21 (தற்காலிகம்)	3,223.01	4,523.00	-1,299.99

ஆ) 31-3-2021 அன்று நிலுவையில் உள்ள கடன் ரூ.25,568.73 கோடி

இ) மூலதனத்தின் திருப்பிச் செலுத்தும் வட்டி அதிகரிப்பினாலும், மற்றும் கட்டணத் திருத்தம் இல்லாத நிலையில் வருவாய் செலவுகளைச் சந்திப்பதால் ஏற்பட்ட இழப்புகளாலும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் மொத்த இழப்புகள் அதிகரித்துள்ளன.

ஈ) மூலதனச் செலவுகள் மற்றும் வருவாய் செலவினங்களுக்காக பெறப்பட்ட கடனுக்கான வட்டியின் காரணமாக தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் இழப்புகளைச் சந்தித்துள்ளது. இந்த அதிகரித்த செலவை, 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட கட்டணத்தால் நிர்வகிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே இழப்பு மற்றும் பணப்புழக்க குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பல்வேறு ஒப்பந்ததாரர்களுக்கும் ரூ.400 கோடி அளவிற்கு பட்டியல்கள் நிலுவையில் உள்ளன. நிலுவையில் உள்ள தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

உ) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் நிதிநிலை முன்னேற்றத்திற்காக நிலுவையில் உள்ள கடன்களுக்கான வட்டி விகிதத்தைக் குறைப்பது மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய சில செலவினங்களைக் குறைப்பது என திட்டமிடப்பட்டுள்ளது.

ஊ) தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், தற்போது நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் புதிதாக பெறக்கூடிய கடன்களுக்கான வட்டி விகிதத்தைக் குறைப்பதற்காக, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (HUDCO), ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (REC), மின் விசை நிதி நிறுவனம் (PFC) ஆகிய நிதி நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி வருகிறது. நிலுவையில் உள்ள கடன்களுக்கு 150 அடிப்படை புள்ளிகளைக் குறைத்தால் கூட தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்திற்கு ஆண்டிற்கு சுமார் ரூ.265 கோடி சேமிப்பு ஏற்படும் என்று ஊகிக்கப்படுகிறது.

[2021 செப்டம்பர் 7

2. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

2.1 முன்னுரை

காலநிலை மாற்ற விளைவுகளை தணிப்பதற்காக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (RE) உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு உகந்த கொள்கைகளை கொண்டு வருவதற்கு தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது.

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும், எரிசக்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு 1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையை (TEDA) உருவாக்கியது.

மேற்கூறிய கடமைகளைத் தவிர, மாநில மின்சார கட்டமைப்பின் ஒட்டுமொத்த ஆற்றல் கலவையில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பங்களிப்பை மேம்படுத்துவதோடு, புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் சாத்தியக்கூறுகள் மற்றும் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்கும் பொறுப்பையும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வோர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பாளர்களுக்கு இடையேயான பாலமாகவும் செயல்படுகிறது.

ஒன்றிய அரசின், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) மாநில நோடல் ஏஜென்சியாக செயல்பட்டு, நுகர்வோர் குடியிருப்பில் 29 மெகாவாட் கூரை சூரிய பிவி அமைப்பும், 63 மெகாவாட் நடுத்தர மற்றும் சிறிய அளவிலான திட்டங்கள் மற்றும் 17 மெகாவாட் செயல் விளக்க காற்றாலை திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளது.

2.2 காலநிலை மாற்ற அட்டவணை மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சக்தி வளர்ச்சி (Climate Change Agenda and RE Power Growth)

குறைந்த தனிநபர் CO_2 உமிழ்வு இருந்தபோதிலும், மூன்றாவது பெரிய உலக உமிழ்ப்பாளராக இந்தியா உள்ளது. குறிப்பாக, இந்தியாவின் மின் துறையின் கார்பன் செறிவு உலக சராசரியை விட அதிகமாகவே உள்ளது. பாதுகாப்பான மற்றும் நிலையான எரிசக்தி எதிர்காலத்தைக் கொண்டுவருவதை நோக்கமாகக்

2021 செப்டம்பர் 7]

கொண்ட பரந்த அளவிலான கொள்கைகளை இந்தியா கொண்டுள்ளது.

காலநிலை மாற்ற அட்டவணையை நிவர்த்தி செய்வதற்காக, இந்திய அரசு மொத்த ஆற்றல் கலவையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பெரும் பகுதியை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு பெரிய உந்துதலை வழங்குகிறது. அதன்படி, 2023 ஆம் ஆண்டிற்குள் 175 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மின்சாரம் மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் 450 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 12.08.2021 நிலவரப்படி, 100 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனை இந்தியா அடைந்தது.

2.3 தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் நிலை (Renewable Energy Scenario in Tamil Nadu)

இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை (RE) நோக்கிய மாற்றத்தில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. காற்றாலை ஆற்றலில் தமிழ்நாடு நீண்ட காலமாக முன்னணியில் உள்ளது. இது இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட காற்று திறனில் 25% ஆகும். மேலும், தற்போது தமிழ்நாட்டின் மொத்த நிறுவப்பட்ட திறன் 37,715 மெகாவாட்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து 15,250 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.

தமிழகம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களால் நிறைந்துள்ளது. சுற்றுச்சூழலுக்கு உகந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் இயற்கையில் வற்றாதவையாக தமிழகத்தில் கிடைக்கின்றன. இவை அனைத்தும் பரவலாக்கப்பட்ட பயன்பாடுகளுக்கு மிகவும் ஏற்றது.

2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து சுமார் 20,000 மெகாவாட் மின் திறனைச் சேர்க்க தமிழக அரசு அறிவித்துள்ளது. மேற்கண்ட இலக்கை அடைய, அனைத்து வகையான கட்டடங்களுக்கு சூரிய கூரை அமைப்பும் மற்றும் வேளாண் மின் இறைப்பான்களுக்கு நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின் நிலையமும் நிறுவ தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக பெரிய அளவில் மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்படும். எரிசக்தியை நுகர்வோருக்கு கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்காக மாநிலத்தின் கட்டணக் கொள்கைகளும் சரிசெய்யப்படும்.

மின்சார வாகனங்களுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அடிப்படையிலான சார்ஜிங் உள்கட்டமைப்பை நிறுவுதல் மூலம்,

[*2021 செப்டம்பர் 7*

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிப்பதில் மற்றொரு பெரிய வாய்ப்பு கிடைக்கும்

சூரிய மற்றும் காற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், மாறுபாடு மற்றும் இடைப்பட்ட தன்மை கொண்டிருப்பதால் இரவு நேரத் தேவையை பராமரிப்பதில் பெரும் சவாலாக உள்ளது.

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை சிறப்பாக கணிப்பது, அனல் மின் நிலையங்களை சூப்பர் க்ரிடிகல் (*Super Critical*) வகைக்கு மேம்படுத்துதல், உந்தப்பட்ட நீர் மின் நிலையம் நிறுவுதல், பரவலாக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி மற்றும் மைக்ரோ கிரிட்களை திட்டமிடுவதன் மூலம் மட்டுமே இந்த சவால்களை எதிர்கொள்ள முடியும்.*

தற்போது உருவாக்கப்படும் மொத்த ஆற்றலில் 17% ஆக உள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கணிசமாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால், பேட்டரி அடிப்படையிலான எரிசக்தி சேமிப்பு உள்கட்டமைப்பை உருவாக்குவதிலும் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

*கார்பன் உமிழ்வு அளவைக் குறைப்பதற்கும், மின் நுகர்வோருக்கு மலிவு மற்றும் அதே நேரத்தில் தடையற்ற தரமான மின்சாரத்திற்கு சரியான விலை நிர்ணயிப்பதற்கும் மாநிலத்தின் குறிக்கோளின் படி சரியான ஆற்றல் கலவைக்கு (*energy mix*) முன்னுரிமை அளிக்க ஒரு விரிவான ஆற்றல் கொள்கை தேவைப்படுகிறது.*

2.4 நடைமுறையில் உள்ள முக்கிய திட்டங்கள்

2.4.1 PM-KUSUM (கூறு C) திட்டத்தின்கீழ் சூரிய ஆற்றல் உற்பத்தி செய்யும் விவசாயிகள்

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் 20,000 எண்ணிக்கையிலான மின் கட்டமைப்புடன்கூடிய சூரிய எரிசக்தியினால் இயங்கும் விவசாய நீர் இரைப்பான்கள் PM-KUSUM (கூறு C) திட்டத்தின்கீழ் தனிநபர் விவசாயிகளுக்கு பொருத்தப்பட்டு, அதன்மூலம் விவசாயம் செய்வதற்கான வழிமுறைகள் செய்து தரப்படும்.

இந்தத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதத்தில் சோலார் பேனல்கள் மூலம் அவர் உற்பத்தி செய்யும் முழு அலகுகளிலிருந்து

2021 செப்டம்பர் 7]

வருவாயை பெறும் வகையில் விவசாயி RESCO உற்பத்தியாளராக கருதப்படுவார். மேலும், தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில், அவர் சுய நுகர்வு கழித்து கட்டமைப்பிற்கு ஏற்றுமதி செய்த நிகர ஆற்றலுக்காக (net exported energy) ஊக்கத்தொகையை விவசாயி பெறுவார். இத்திட்டத்தின்கீழ், மூலதன செலவு அல்லது MNRE அறிவித்த அளவுகோள் செலவு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அதில் 30% ஒன்றிய அரசின் நிதி உதவியும், 30% தமிழக அரசின் நிதி உதவியும் போக மீதமுள்ள 40% விரும்பும் விவசாயிகளால் பங்களிக்கப்படும். இந்த வசதி 11 kW திறன் வரை கிடைக்கும்.

2.4.2 சூரிய மின் சக்தி கிராமம்

விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுகாவில் உள்ள இரும்பை கிராமத்தில், நிலையான ஆற்றல் மற்றும் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வுடன் பாதுகாப்பான கிராமப்புற வாழ்வாதாரத்தை ஏற்படுத்த சோலார் கிராம திட்டத்தை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. சூரிய சக்தி மூலம் இக்கிராமத்தின் மொத்த மின்சார தேவையை ஈடுசெய்ய 170 கிலோவாட் சூரிய ஒளி மின்னழுத்த நிலையம் நிறுவப்படும். இந்தத் திட்டம் Tamil Nadu Innovation and Initiatives (TANII) நிதி உதவி மூலம் ரூ.2.00 கோடி திட்ட செலவில் செயல்படுத்தப்படுகிறது.

2.4.3 தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பூங்கா (பி) லிமிடெட் (TREP)

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி மற்றும் ஒருங்கிணைப்பு வணிகத்தை கூட்டு முயற்சியின் மூலம் (joint venture model) மேற்கொள்ள, தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்கா (பி) லிமிடெட், (TREP) 19-03-2021 அன்று தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் துணை நிறுவனமாக தொடங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்டின் (CMRL) பகுதி ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 20 மெகாவாட் காற்றாலை-சூரிய கலப்பின தொழிற்சாலையை பேட்டரி எரிசக்தி சேமிப்பு அமைப்புடன் (BESS) நிறுவ தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பூங்கா (பி) லிமிடெட் (TREP) தற்போது இந்திய சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் (SECI) மற்றும் சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் உடன் கூட்டு முயற்சியில் இறங்கியுள்ளது.

[*2021 செப்டம்பர் 7*

சுமார் 75 ஏக்கர் அளவுக்கு தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்குச் சொந்தமான நிலத்தை அதன் பங்குதாரரின் பங்களிப்பாக வழங்கும். அதே சமயம் சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் மற்றும் இந்திய சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆகியவை கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் தங்கள் பங்கிற்கு ஏற்ப திட்டத்தின் முழு செலவிற்கும் பங்களிப்பு செய்யும். இந்தத் திட்டத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், கூட்டமைப்பு பங்குதார்களிடையே பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட விலைக்கு சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்க்கு விற்கப்படும். இந்தத் திட்டத்தில் இருந்து பெறப்படும் இலாபம் கூட்டு முயற்சியில் உள்ள ஒவ்வொரு பங்குதாரரின் பங்களிப்பிற்கு ஏற்ப விநியோகிக்கப்படும். கூட்டு முயற்சியின் சமபங்கு முறை பின்வருமாறு.

1. தமிழ்நாடு புதுப்பிக்கதக்க ஆற்றல் பூங்கா – 2% (தோராயமாக)
2. சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் – 26% (தோராயமாக)
3. இந்திய சோலார் எனர்ஜி கார்ப்பரேசன் –72% (தோராயமாக)

2.4.4 குடியிருப்பு நுகர்வோருக்கான சூரிய மேற்கூரை திட்டம் (GCRTS Phase-II)

புதிய மற்றும் புதுப்பிக்கதக்க ஆற்றல் அமைச்சகத்தின் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய மேற்கூரை திட்டத்தின் திட்டம்-2-ஐ (GCRTS Phase-II) செயல்படுத்துவதற்கான நிறுவனமாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் குடியிருப்பு நுகர்வோர் தங்கள் இணைக்கப்பட்ட திறன் வரை மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய ஒளி மின்னழுத்த அமைப்பை நிறுவ முடியும். இந்தத் திட்டத்தின்கீழ் குடியிருப்பு நுகர்வோர் 40% வரை ஒன்றிய அரசின் நிதி உதவி பெற முடியும்.

2.4.5 குறு, சிறு, நடுத்தர நிறுவனத்திற்கான ஆற்றல் திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க அமைப்புகளை ஊக்குவித்தல் (PEERS)

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் இணைந்து ஆற்றல் தணிக்கை செய்வதன்மூலம் குறு, சிறு நடுத்தர நிறுவனத் துறையில் படிவ எரிபொருள் பயன்பாடு மற்றும் வழக்கமான ஆற்றல் நுகர்வு ஆகியவற்றைக் குறைக்க குறு, சிறு நடுத்தர நிறுவனத் துறைக்கான நிலையான ஆற்றலை மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த

2021 செப்டம்பர் 7]

திட்டத்தை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஊக்குவித்து செயல்படுத்தும்.

3. மின் ஆய்வுத் துறை

3.1 முன்னுரை

மின்சார சட்டங்கள் மற்றும் இந்திய தர நிலைகள் பணியகத்தால் தோற்றுவிக்கப்பட்ட தர நிர்ணயங்கள், மக்கள் மற்றும் அவர்களது உடைமைகளை மின்சாரம் வழங்கும் போதும் பயன்படுத்தும் போதும் ஏற்படும் அபாயங்களிலிருந்து பாதுகாக்கிறது. மின் ஆய்வுத் துறை மின் பாதுகாப்பு சட்டங்களை தெளிவுற உணர்ந்து, மின்னமைப்புகளிலுள்ள ஆபத்துகளை மதிப்பீடு செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம் மின்னமைப்புகளின் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. பழமையான அரசு துறைகளில் மின் ஆய்வுத் துறையும் ஒன்றாகும். மின்சாரச் சட்டம் உருவாக்கப்பட்ட 1910 ஆம் ஆண்டு முதல் பொது மக்களுக்கு இத்துறை சேவை புரிந்து வருகிறது.

மேலும், மின் ஆய்வுத் துறையானது மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் தொடர்பான சட்ட விதிகளை நிர்வகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்ற பணிகளுடன், திரையரங்குகளின் மின் பாதுகாப்பு, மின் வரி வசூலித்தல் போன்ற பணிகளையும் மாநில சட்ட விதிகளின்கீழ் மேற்கொள்கிறது.

3.2 மின் ஆய்வுத் துறையின் சேவைகள்



[*2021 செப்டம்பர் 7*

3.3 மின் ஆய்வுத் துறையின் சட்டரீதியான செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்

3.3.1 மின்னமைப்புகள்

தேசிய அளவிலான 2010 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஆணைய (பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள்) ஒழுங்குமுறை விதிகள் மின்னமைப்புகளுக்கான வடிவமைப்பு, நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தலின்போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்த மின்சாரம் வழங்குபவர் மற்றும் நுகர்வோர், மின்சாரம் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் மின் ஆய்வுத் துறை ஆகியோரின் பொறுப்புகளைப் பரிந்துரைக்கிறது.

மேற்கண்ட ஒழுங்குமுறை விதிகளின்படி மின் ஆய்வுத் துறை அதி உயர்/உயர் மின்னமைப்புகள், மின் உற்பத்தி நிலையங்கள், மின்னாக்கிகள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்களை ஆய்வு செய்து அனுமதி வழங்குவதுடன் வருடாந்திர ஆய்வும் மேற்கொள்கிறது.

மேலும், மின் ஆய்வுத் துறை மின் விபத்துகளை புலனாய்வு செய்து, எதிர்காலத்தில் மின் விபத்துகளைத் தவிர்க்க தடுப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கிறது.

மிக மிக முக்கிய பிரமுகர்களாகிய மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்திய துணை குடியரசு தலைவர், மாண்புமிகு பிரதம மந்திரி, மாண்புமிகு ஆளுநர் மற்றும் மாண்புமிகு மாநில முதலமைச்சர் அவர்களின் வருகையை முன்னிட்டு அந்தந்த இடங்களில் நிறுவப்படும் தற்காலிக மின்னமைப்புகளையும், மிக அதிகளவில் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் நிறுவப்படும் தற்காலிக மின்னமைப்புகளையும் சோதனை மற்றும் ஆய்வு செய்து மின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

3.3.2 திரையரங்க மின்னமைப்புகள்

மேற்கண்ட ஒழுங்குமுறைகள் அல்லாமல், 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டு விதிகள் மூலம் திரையரங்குகளின் மின் பாதுகாப்பு மற்றும் தீ விபத்து தடுப்பு நடவடிக்கைகள் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விதிகளின்கீழ் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு திரைப்படம் காண்போரின் பாதுகாப்பினை மின் ஆய்வுத் துறை உறுதி செய்கிறது.

2021 செப்டம்பர் 7]

அ. திரையரங்க மின்னமைப்புகளுக்கு வரைபட ஒப்புதல் வழங்குதல்.

ஆ. திரையரங்குகளை ஆய்வு செய்து, மின் சான்று வழங்குதல்.

இ. திரையரங்குகளில் வருடாந்திர ஆய்வு மேற்கொள்ளுதல்.

3.3.3 மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்

மின் தூக்கிகள் (Lift) நிறுவுவதற்கும், பராமரிப்பதற்கும் மற்றும் பாதுகாப்பான முறையில் இயக்குவதற்கும் தமிழ்நாடு அரசு மின் தூக்கிச் சட்டம் 1997 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. மேலும், 2017 ஆம் ஆண்டில் இது தொடர்பான திருத்தப்பட்ட சட்டம் வெளியிடப்பட்டு, அதில் இயங்கும் படிக்கட்டுகளுக்குரிய (Escalator) ஆய்வுகள் மற்றும் உரிமம் வழங்குவது குறித்த விதிகள் சேர்க்கப்பட்டது.

இச்சட்ட விதிகளின்கீழ் மின் ஆய்வுத் துறையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுகின்றன:

அ. மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் நிறுவுவதற்கான அனுமதி வழங்குதல்

ஆ. மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகளை ஆய்வு செய்து அவைகள் இயங்கிட உரிமம் வழங்குதல்.

இ. மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் அமைப்பின் காலமுறை ஆய்வுகள்.

ஈ. மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் நிறுவுதல், பராமரித்தல் மற்றும் சோதனை செய்யும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்.

3.3.4 மின் வரி

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் தீர்வை சட்டம் மற்றும் 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் மீதான வரி) சட்டம் ஆகியவற்றை நீக்கம் செய்து 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 12, 2003) இயற்றப்பட்டது. இச்சட்டம் 16 ஜூன் 2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

[*2021 செப்டம்பர் 7*

3.3.4. அ) மின் நுகர்வு மற்றும் விற்பனைக்கான மின் வரி விகிதம் கீழ்க்கண்டவாறு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது:-

வகை	மின் வரி விழுக்காடு	வசூலிப்பவர்
நுகர்வோருக்கு உரிமதாரரால் (TANGEDCO/ Independent Power Plant/ Trader) விற்கப்படும் மின்சாரம்	விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நுகர்வு கட்டணத்தில் 5 விழுக்காடு	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நுகர்வோருக்கு மின் நிலையங்களால் (Captive Generating Plants) விற்கப்படும் மின்சாரம்	விற்பனை செய்யப்படும் மின்சாரத்திற்கான நுகர்வு கட்டணத்தில் 5 விழுக்காடு	மின் ஆய்வுத் துறை
சொந்த பயன்பாட்டிற்கு மின் நிலையங்களில் (CPP including standby DG) உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம்	நுகரும் ஓர் அலகு மின்சாரத்திற்கு 10 காசு வீதம்	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

3.3.4 ஆ) மின் வரி விதிப்பிலிருந்து கீழ்க்கண்டவற்றிற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது:

1. அரசாங்கம், உள்ளூர் நிர்வாகம் மற்றும் இரயில்வேக்கு விற்கப்படும் மின்சாரம்
2. விவசாயம் மற்றும் குடிசை மின் இணைப்புகளுக்கு வழங்கப்படும் மின்சாரம்.
3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் வீட்டு மின் இணைப்புகளுக்கு (Domestic consumers) வழங்கப்படும் மின்சாரம்.
4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விற்கப்படும் மின்சாரம்.
5. சிறப்பு பொருளாதார மண்டலம் கொள்கை (SEZ), தொழில் துறை கொள்கை, சூரிய எரிசக்தி கொள்கை மற்றும் மின்சார வாகன கொள்கைகளின்கீழ் வழங்கப்படும் வரி விலக்குகள்.

3.3.5 அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடம்:

அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடமானது தேசிய அளவில் பழமையான மற்றும் மதிப்புமிக்க ஆய்வகமாகும். மின்

2021 செப்டம்பர் 7]

கருவிகள், மின் அளவிகள் மற்றும் மின் சாதனங்களை சோதனை செய்ய ஏதுவாக, மின் ஆய்வுத் துறையின் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள அரசு மின்னியல் தர நிர்ணய ஆய்வுக் கூடத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தில் பல்வேறு மின் பகிர்மானம் மற்றும் உற்பத்தி கழகங்களின் மின் அளவிகள் மற்றும் மின் சாதனங்களின் சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

அரசு தர நிர்ணய ஆய்வுக் கூடத்திலுள்ள சோதனைக் கருவிகளின் தரத்தினை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்ப சோதனைக் கருவிகள் கொள்முதல் செய்ய 2020-2021 ஆம் ஆண்டு ரூ. 1.42 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அனைத்து கருவிகளும் கொள்முதல் செய்யப்பட்டு, நிறுவப்பட்டு முழுப்பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுக்கூடத்திற்கு NABL அங்கீகாரம் பெற ரூபாய் 10 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தப் பணி செயல்பாட்டில் உள்ளது.

3.3.6 மின் உரிமம் வழங்கும் வாரியம்:

2010 ஆம் ஆண்டு மத்திய மின்சார ஆணைய (பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகள்) ஒழுங்குமுறை விதிகளில், விதி எண் 29-ன்படி மின்னமைப்புகள் தொடர்பான பணிகள், மின் ஒப்பந்ததாரர்கள் மற்றும் மின் பணியாளர்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும். மின் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமம் வழங்கவும், மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கவும் இவ்வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உயர் மின்னழுத்த அமைப்புகளில் மேற்கொள்ளும் வேலையின் தகுதியினைப் பொறுத்து மின் ஒப்பந்ததாரர்களின் உரிமங்கள் இ.எஸ்.ஏ., இ.ஏ., இ.எஸ்.பி., மற்றும் இ.பி., என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

3.4 மின் ஆய்வுத் துறையின் செயலாக்கம்:

3.4.1 இத்துறையின் 2020-21-ம் வருட செயலாக்கம்

தொ. எண்	இத்துறையால் வழங்கப்பட்ட சேவைகள்	எண்ணிக்கை
அ)	மின் தூக்கி	
	(i) புதிய மின் தூக்கி உரிமம் வழங்கப்பட்டது	1,938
	(ii) மின் தூக்கி உரிமம் புதுப்பிக்கப்பட்டது	3,171

தொ. எண்	இத்துறையால் வழங்கப்பட்ட சேவைகள்	எண்ணிக்கை
ஆ)	ஒழுங்குமுறை விதி 43-ன்கீழ் மின் அமைப்புகள் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது	1,703
இ)	ஒழுங்குமுறை விதி 30-ன்கீழ் உயர் மின்னழுத்த நிறுவனங்களின் காலமுறை ஆய்வுகள்	4,178
ஈ)	புதிய/கூடுதல் மற்றும் மாறுதல் மின் அமைப்புகளுக்கான வரைபடங்களைக் கூர்ந்தாய்வு செய்தல்	1,918
உ)	ஒழுங்குமுறை விதி 32-ன்கீழ் மின்னாக்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது	934
ஊ)	ஒழுங்குமுறை விதி 36-ன்கீழ் அடுக்குமாடி கட்டடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது	86
எ)	திரையரங்கம்:	
	(i) இயக்கத்திலுள்ள மொத்த திரையரங்குகள்	1,102
	(ii) மின் சான்றிதழ் வழங்கப்பட்ட புதிய திரையரங்குகள்	16
	(iii) மின் சான்றிதழ் புதுப்பிக்கப்பட்ட திரையரங்குகள்	320
ஏ)	மின் அளவிகளை சோதனை மற்றும் அளவுத் திருத்தம் செய்தல்	3,649

3.4.2 மே 2021 வரையிலான காலத்திற்கு மின் ஒப்பந்ததாரர் உரிமம்/மின் தகுதிச் சான்று வழங்கிய விவரங்கள்

1.	மின் ஒப்பந்ததாரர்கள் உரிமங்கள்	27,242
2.	மின் மேற்பார்வையாளர்கள் மற்றும் மின் கம்பியாளர் போன்றவர்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள்.	2,32,774

3.4.3 செயல்திறன் – விளக்கப்படம்

2021 செப்டம்பர் 7]

3.4.4 வருவாய்

I. மின் ஆய்வுத் துறையால் வசூலிக்கப்பட்ட வரி:

மின் ஆய்வுத் துறையால் வசூலிக்கப்பட்ட வரி	2018-2019 (ரூபாய் கோடியில்)	2019-2020 (ரூபாய் கோடியில்)	2020-2021 (ரூபாய் கோடியில்)
மின்னாக்கி பதிவு	*0.1695*	*0.18*	*0.18*
மின் நுகர்வு வரி	*66.68*	*56.25*	*55.57*
விற்பனை வரி	*9.89*	*4.89*	*6.63*
தாமத வட்டி	*1.22*	*1.61*	*1.39*
மொத்தம்	**77.97**	**62.93**	**63.76**

II.தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் வசூலிக்கப்பட்ட மின் வரி:

த. மி. உ. ப. கழகத்தால் வசூலிக்கப்பட்ட மின் வரி	வசூலிக்கப்பட்ட மொத்த வரி (ரூபாய் கோடியில்)	அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)	நிலுவைத் தொகை (ரூபாய் கோடியில்)
2018-2019	*1279.29*	*441.54*	*837.75*
2019-2020	*1266.04*	*372.00*	*894.04*
2020-2021	*1102.09*	*400.00*	*702.09*

கோவிட்-19 ஊரடங்கு காரணமாக பொருளாதார செயல்பாடுகள் குறைந்ததால் 2019-20 மற்றும் 2020-21 ஆகிய ஆண்டுகளில் வரி வசூல் குறைந்துள்ளது.



[*2021 செப்டம்பர் 7*

3.4.5 2020-21 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மின் விபத்துகளின் பகுத்தாய்வுகள்

மின் விபத்து காரணங்கள்



2021 செப்டம்பர் 7]



3.5 மின் ஆளுகை

மின் ஆய்வுத் துறை வலைதளம் https://www.tnei.tn.gov.in ஆகும். இவ்வலைதளம் அவ்வப்போது மேம்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலைதளத்தில் நுகர்வோருக்கு தேவைப்படும் அனைத்து தகவல்களும் உள்ளன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மின் ஆய்வுத் துறையின் அனைத்து விவரங்களும் இவ்வலைதளத்தில் தானாக முன்வந்து வழங்கப்பட்டுள்ளது. இத்துறையின் அனைத்து அலுவலகங்களிலும் இணைய இணைப்பு மற்றும் அதற்கு தேவையான உள்கட்டமைப்புகள் வழங்கப்பட்டு இணைய வழி சேவைகள் சிறந்த முறையில் தடையின்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2017 முதல் இணையதளம் வழியாக மின் தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகளுக்கு உரிமம் இத்துறையின் வலைதளம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மின் தூக்கி/ இயங்கும் படிக்கட்டுகள் பயன்படுத்துவோர் இணையதளம் வழியாக விண்ணப்பிக்க முடிகிறது. மேலும் விண்ணப்பத்தின் நிலைபாட்டினை இணையதளம் மூலம் அறிந்து உரிமம் பெறவும் முடிகிறது.

[2021 செப்டம்பர் 7

ஆகஸ்ட் 2017 முதல் இணையதளத்தின் மூலமாக வழங்கப்படும் சேவைகள்	எண்ணிக்கைகள்
1. புதிய மின்தூக்கிகளுக்கு உரிமம் வழங்குதல்	7323
2. மின்தூக்கிகளுக்கு உரிமம் புதுப்பித்தல்	25587
3. புதிய இயங்கும் படிக்கட்டுகளுக்கு உரிமம் வழங்குதல்	95

மின் வரி செலுத்துதல் தொடர்பான அறிக்கைகளை நிகழ்நிலை முறையில் தாக்கல் செய்தல் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 2017 முதல் இணையதளத்தின் மூலமாக வழங்கப்படும் சேவைகள்	எண்ணிக்கைகள்
1. புதிய மின்னாக்கிகளுக்கு பதிவு மேற்கொள்ள பெற்ற விண்ணப்பங்கள்	5129
2. மின்னாக்கி மறுபதிவிற்கு பெறப்பட்ட விண்ணப்பங்கள்	199
3. நுகர்வோரால் மின்வரி தாக்கல் செய்தல்	7384

3.6 எளிதாக தொழில் தொடங்குதல் மற்றும் வணிக சீர்திருத்த நடவடிக்கை திட்டம்

தமிழ்நாட்டில் எளிமையாக தொழில் தொடங்க ஏற்படுத்தப்பட்ட வணிக சீர்திருத்தங்களின்படி, முதற்கட்டமாக இத்துறையின் மூன்று சேவைகளான 1) வரைபட ஒப்புதல் 2) நன்னிலைச் சான்று வழங்குதல் 3) மின்னாக்கி பதிவு ஆகியவை ஒற்றைச் சாளர வலைதளத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டமாக 1) மின்தூக்கி நிறுவ அனுமதி,(2 மின்தூக்கி இயங்க உரிமம் வழங்குதல் மற்றும் 3) மின்தூக்கிக்கான உரிமம் புதுப்பித்தல் ஒற்றைச்சாளர வலைதளத்திலும் விரைவில் வழங்கப்படும்.

2020 ஆம் ஆண்டிற்கான வணிக செயல் திட்டத்தின்கீழ் தொன்மையான சட்டங்களை அடையாளம் காணுதல், படிவங்களை எளிமைப்படுத்துதல், இணையதள கட்டணச் சேவைகள், ஆய்வுகளின் காலத்தை அதிகரித்தல், இத்துறையின் அனைத்து சேவைகளையும் இணையதளத்தில் வழங்க அடையாளம் கண்டு படிப்படியாக செயல்படுத்தப்படும்.

2021 செப்டம்பர் 7]

3.7 எதிர்கால திட்ட நடவடிக்கைகள்

அரசால் கொண்டுவரப்படும் முற்போக்கான மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளின்படி இத்துறையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீடு செய்யப்படும். பயனுள்ள வெளிப்படையான சேவைகளை உருவாக்கி காலக்கெடுவுக்குள் பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் இத்துறையால் செயல்படுத்தப்படும்.

4. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

4.1 முன்னுரை

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தமிழக அரசின் முழு மூலதனத்துடன் 1991 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. மேலும், இந்நிறுவனம் வங்கிசாரா நிதி நிறுவனமாக (வைப்பீடுகளை ஏற்றுக் கொள்வதற்கு), இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தால் 31.3.2021 வரை செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.3,767 கோடியாகும். இந்நிறுவனம், பல உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு தேவையான நிதியை பொதுமக்களிடமிருந்து வைப்பீடுகளாக பெற்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு வழங்கி வருகிறது. 31.3.2021 அன்று உள்ளபடி, இந்நிறுவனத்தின் கடன் நிலுவைத் தொகை ரூ.39,984.78 கோடியாக உள்ளது.

4.2 நிதி செயலாக்கம்

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் வலுவான நிதிநிலைமை மற்றும் தொழில்முறை மேலாண்மையாலும் தொடங்கப்பட்ட நாள்முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. 2020-2021 ஆம் நிதியாண்டின் மொத்த வருவாய் ரூ.3,876.11 கோடியாகும் (தற்காலிகமாக). இந்த நிறுவனம், 2020-2021ஆம் ஆண்டில் நிகர இலாபமாக ரூ.720.93 கோடி ஈட்டியுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் வங்கிசாரா நிதி நிறுவனத்திற்கான வழிகாட்டுதலின்படி மூலதன போதுமான விகிதத்தை நேர் செய்ய (CRAR), 2019-2020 மற்றும் 2020-2021 ஆண்டிற்கான அரசுக்கு செலுத்த வேண்டிய ஈவுத்தொகை வழங்கப்படவில்லை.

4.3 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிதியுதவி

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடங்கிய நாள்முதல் திரட்டும் நிதியை, தமிழ்நாடு மின் உற்பத்தி கழக உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நீண்டகால மற்றும் குறுகியகால கடனாக 31.3.2021 வரை ரூ.1,56,290.30 கோடி வழங்கியுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நிகர கடன் நிலுவைத் தொகை 31.3.2021 வரை, ரூ.39,984.79 கோடியாக உள்ளது.

4.4 நிலையான வைப்பீடுகள்

இந்த நிறுவனம், வைப்பீடுகளை பொதுமக்கள், அரசுத் துறை, அரசுத் துறை நிறுவனங்கள், இதர தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நலத் திட்டங்களான, பள்ளி இடைநிற்றலைத் தவிர்க்க ஊக்குவிப்புத் தொகை, வருவாய் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ மாணவியருக்கு நிதியுதவி, முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், ஒருகால பூஜை திட்டம் மற்றும் கோவிட் 19 திட்டங்களின் மூலம் திரட்டி வருகிறது. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அளிக்கும் வட்டி விகிதம் பொதுத் துறை வங்கிகள் அளிக்கும் வட்டி விகிதத்திலிருந்து 200 அடிப்படை புள்ளிகள் அதிகமாகும். பேரிடர் காலத்திலும், இந்நிறுவனத்தின்

2021 செப்டம்பர் 7]

மையப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் கவர்ச்சிகரமான வட்டி விகிதத்தாலும் தொடர் ஏறுமுகமாக வைப்பீடுகள் பெறப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் செலுத்தப்படும் வைப்பீடுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதமாக ஓராண்டிற்கு 7%, 2 ஆண்டுகளுக்கு 7.25%, 3 மற்றும் 4 ஆண்டுகளுக்கு 7.75% மற்றும் 5 ஆண்டுகளுக்கு 8% வரை வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் 58 வயது மற்றும் அதற்கு மேல் உள்ள மூத்த குடிமக்களுக்கு 12 மற்றும் 24 மாதங்களுக்கு செய்யும் வைப்பீடுகளுக்கு 0.25%, 36, 48 மற்றும் 60 மாதங்களுக்கு செய்யும் வைப்பீடுகளுக்கு 0.50%, கூடுதல் வட்டியாக வழங்குகிறது.

4.5 மென்பொருள் நிலை உயர்த்துதல்:

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், 2020-2021 நிதியாண்டு முதல் 24X7 பரிவர்த்தனையை மேம்படுத்தப்பட்ட வலைதளம் மற்றும் கைபேசி செயலி மூலமாக வைப்பீட்டாளர்களுக்கு சேவை அளித்து வருகிறது. இம்மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தால் இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி தகவல் தொழில்நுட்பக் கொள்கை செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்.புதிய தொழில்நுட்ப சாதனமான குறுந்தகவல், மின்அஞ்சல், அரட்டைபோட், புலனம் மற்றும் வாடிக்கையாளர் சேவை மூலமாக நிகழ்நிலை வழியாக விண்ணப்பம் சமர்ப்பித்தல், வாடிக்கையாளர்களின் விவரங்களை ஏற்றுதல், வாரிசுதாரர்களை நியமித்தல், தொடர்பு தகவல்கள் மற்றும் புதுப்பித்தல் முதலியன செயல்படுத்தப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

இணைப்பு-V

(100 .ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பிரிவானது, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றது. இத்துறையில் கீழ்க்கண்ட மூன்று அமைப்புகளும் ஒரு பொதுத் துறை நிறுவனமும் செயல்பட்டு வருகின்றன:

i. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் (Commissionerate of Prohibition and Excise)

ii. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு (Prohibition Enforcement Wing)

iii. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (Narcotic Intelligence Bureau CID)

iv. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (Tamil Nadu State Marketing Corporation Limited)

2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

2.1 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937) மற்றும் இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை பின்வரும் பரந்த குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்படுத்தும் பொறுப்புடைய அலுவலர் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் ஆவார்:

2021 செப்டம்பர் 7]

- *1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937) மற்றும் இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டுள்ள பல்வேறு விதிகளை நடைமுறைப்படுத்துதல்.*
- *எவ்வித விடுபாடுமின்றி அரசுக்கு அதிகபட்ச வருவாய் கிடைத்தலை உறுதி செய்தல்.*
- *மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.*
- *கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ளச்சாராயம் விற்பனை செய்வதைத் தடுத்தல் மற்றும் மாநில எல்லை வழியாக போலி மதுபானம் வருவதைத் தடுக்க சோதனைகள் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் துணைகொண்டு மேற்கொள்ளுதல்.*

2.2 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கையை நடைமுறைப்படுத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் 2 இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித் துறை) நிலையில் 1 நிதிக் கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் 5 உதவி ஆணையர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மாவட்ட அளவில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக துணை/உதவி ஆணையர்கள் (கலால்) பணிபுரிந்து வருகின்றனர்.

2.3 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் சாராவி/இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்/பீர்/ஒயின் உற்பத்தியினைக் கட்டுப்படுத்துதல், அவற்றைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதித்தலை கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்காணும் பணிகளை இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் மேற்கொள்ளும்பொருட்டு வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

[2021 செப்டம்பர் 7

கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)

2.4 சர்க்கரை தயாரிப்பின்போது துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses), சாராவி உற்பத்தி (Spirit Production) செய்வதற்கான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், தெளிந்த சாராவி (Rectified Spirit), சுத்திகரிக்கப்பட்ட சாராவி (Extra Neutral Alcohol), கால்நடைத் தீவனம் (Cattle feed) முதலியவற்றைத் தயாரிக்கத் தேவையான கருப்பஞ்சாற்றுக் கசண்டை (Molasses), இருப்பு மற்றும் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்ய அதிகாரமுடையவர் ஆவார். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், பயன்படுத்துதல், விற்பனை மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவற்றிற்கான உரிமம் மற்றும் அனுமதி ஆணைகள் உரிய அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன.

வடிப்பாலைகள் மற்றும் சாராவி உற்பத்தி (Distilleries and Spirit Production)

2.5 மது உற்பத்தி செய்ய மூலப்பொருளான சாராவியைத் தயாரிக்க 18 வடிப்பாலைகள் (Distilleries) தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றில் 16 வடிப்பாலைகள் (Distilleries) தனியார் துறையிலும், 2 கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (GENA)

2.6 தமிழ்நாட்டில் தானியங்களை அடிப்படையாகக் கொண்டு சாராவி உற்பத்தி செய்யும் வடிப்பாலைகள் இல்லாத நிலையில், தமிழ்நாட்டிலுள்ள இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், உயர்தர மதுபான வகைகளைத் தயாரிக்க, தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவியினை இறக்குமதி செய்வதற்கு அரசின் முன் அனுமதியைப் பெற்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி வழங்கப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டில், 5.71 கோடி லிட்டர் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி வெளிமாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 7]

எத்தனால்

*2.7 கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து பெறப்படும் எத்தனால் ஒரு புதுப்பிக்கத்தக்க உயிரி எரிபொருள் ஆகும். இதன் மாசற்ற தன்மையால் இதனைப் பெட்ரோலுடன் எளிதாகக் கலக்க இயலும். இந்திய அரசின் தேசிய உயிரி எரிபொருள் செயல்முறைத் திட்டத்தில் எத்தனால் பெட்ரோலுடன் கலப்பது ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 18 வடிப்பாலைகளில் (*Distilleries*), 12 வடிப்பாலைகளில் (*Distilleries*) எத்தனால் உற்பத்தி செய்யப்படுகிறது.*

இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்

2.8 தமிழ்நாட்டில் 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களும், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனமும் இயங்கி வருகின்றன.

பீர் ஏற்றுமதி

2.9 தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பீரினை ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி

*2.10 அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு, 1981 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின்படி உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. அயல்நாட்டு மதுபானங்களின் இறக்குமதியை எளிதாக்கும் வகையில் 02.03.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் முகமை நிறுவனமாக (*Nodal Agency*) நியமிக்கப்பட்டு, எப்.எல்.2 உரிமதாரர்கள் (மனமகிழ் மன்றங்கள்) மற்றும் எப்.எல்.3 உரிமதாரர்கள் (மூன்று நட்சத்திர மற்றும் அவற்றிற்கு குறைவான நட்சத்திரத் தகுதி பெற்ற உணவு விடுதிகள் மற்றும் நட்சத்திரத் தகுதி பெறாத உணவு விடுதிகள்), எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்கள் அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்ய ஏதுவாக சிறப்புக் கட்டணத் தொகையில் 3 விழுக்காடு சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.*

[*2021 செப்டம்பர் 7*

2.11 எப்.எல்.3 உரிமதாரர்கள் (நான்கு நட்சத்திர மற்றும் அவற்றிற்கு அதிகமான நட்சத்திரத் தகுதி பெற்ற உணவு விடுதிகள்) பிற மாநிலங்களில் அமைந்துள்ள அயல்நாட்டு மதுபானங்களை விநியோகிப்பவர்களின் ஆயத்தீர்வை பிணைமுறி கிடங்குகளில் (Excise Bonded Warehouses) இருந்து இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானங்களைத் தொடர்ந்து நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.

2.12 அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ததன் மூலமாக 2020–2021 ஆம் ஆண்டில் சிறப்புக் கட்டணமாக அரசுக்கு ரூ.23.98 கோடியும் மற்றும் சேவைக் கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.2.14 இலட்சமும் வருவாய் கிடைத்துள்ளது.

நீரா

2.13 நீரா என்பது தென்னை மரத்தின் பூம்பாளையிலிருந்து வரும் சாற்றிலிருந்து நொதிப்பு எதிர்ப்பு தொழில்நுட்பத்தினை (Anti Fermentation Technology) பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆல்கஹால் இல்லாத ஊட்டச்சத்து பானம் ஆகும். "தமிழ்நாடு நீரா விதிகள்" என்ற விதிகளை இயற்றி, தென்னை மரங்களிலிருந்து நீரா சேகரிப்பதற்கும், நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிக்கவும் அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2.14 2013 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் (Companies Act, 2013) பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே நீராவினை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள் பெறத் தகுதி பெற்றவை ஆகும். உரிமம் கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தென்னை வளர்ச்சி வாரியத்திலும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். உரிமங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.

பதநீர்

2.15 பதநீர் என்பது பனை மரம், ஈச்ச மரம் மற்றும் அவை போன்ற மரங்களின் பூம்பாளையிலிருந்து, நொதிக்க விடாமல் சேகரிக்கப்படும் பிரபலமான ஊட்டச்சத்து பானமாகும். பதநீரை

2021 செப்டம்பர் 7]

சேகரிக்கவும், இருப்பு வைத்துக் கொள்ளவும், கொண்டுசெல்லவும், விற்பனை செய்யவும், விநியோகம் செய்யவும் மற்றும் பதநீரிலிருந்து பொருட்களைத் தயாரிக்கவும் உரிமம் வழங்க ஏதுவாக, ஏற்கெனவே இருந்த 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நீரா அல்லது பதநீர் விதிகளை மாற்றி அமைத்து, "தமிழ்நாடு பதநீர் விதிகள்" என்ற விதிகளை இயற்றி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மானில ஆய வில்லைகள்

2.16 போலி மதுபான விற்பனையை ஒழிக்கவும், பிற மானிலங்களிலிருந்து மதுபானக் கடத்தலை கட்டுப்படுத்தவும், மதுபானத் தயாரிப்பு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள்/பீர் மற்றும் ஒயின் பாட்டில்களுக்கு செலுத்தப்படும் ஆயத்தீர்வையினை உறுதிசெய்யவும், காகித ஆய வில்லைகளுக்கு பதிலாக நகலெடுக்க முடியாத செயற்கை இழை ஒளிரும் ஆயவில்லைகளை ஒட்டும் நடைமுறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறையில் உள்ளது. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களும் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது, மாதமொன்றுக்கு சராசரியாக 27 கோடி ஆயவில்லைகள் தேவைப்படுகின்றன. 2020-2021 ஆம் ஆண்டில் ஆயவில்லைகளின் விற்பனை மூலம் அரசு ஈட்டியுள்ள நிகர வருவாய் ரூ.21.13 கோடியாகும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம்

2.17 ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின்கீழ் இயங்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம், வடிப்பகம் மற்றும் வடிப்பகம் அல்லாத மதுபானங்களுக்கென தர நிர்ணயம் செய்யும் வகையில், 2018 ஆம் ஆண்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் (மதுபானங்களின் தரங்கள்) ஒழுங்குமுறைகளை, 01.04.2019 முதல் செயல்படுத்தும் வகையில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

மின் ஆளுமை நடவடிக்கைகள்

2.18 உரிமங்கள் வழங்குதலில் வெளிப்படைத் தன்மையினை உருவாக்கவும், உரிமங்களைப் புதுப்பித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான அனுமதி ஆணைகள் வழங்குவதற்குரிய கால அவகாசத்தினை வெகுவாகக் குறைக்கும் வகையிலும் இணையதள செயலிகள் மூலமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

அ)	எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமதாரர்களுக்கு அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ய அனுமதி ஆணை வழங்குதல்.
ஆ)	வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பீரினை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆணை வழங்குதல்.
இ)	எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3ஏஏ உரிமங்களைப் புதுப்பித்தல்.

மனந்திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி

2.19 முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளின் சமூக மற்றும் பொருளாதார மறுவாழ்விற்காக அரசால் நிதியுதவி கடனாக வழங்கப்பட்டது. தற்போது இந்நிதியுதவியானது ரூ.5.00 கோடியாக உயர்த்தப்பட்டு, கடனாக இல்லாமல் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2.20 ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கிய மறுவாழ்வுக் குழு அமைக்கப்பட்டு, இந்தத் திட்டத்தின்கீழ் தகுதியான பயனாளிகளைத் தெரிவுசெய்து அவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காக மானியம் வழங்கப்படுகிறது:

1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்
2.	மாவட்ட காவல் கண்காணிப்பாளர்	உறுப்பினர்
3.	முதுநிலை மண்டல மேலாளர் (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்)	உறுப்பினர்
4.	துணைஆணையர் (கலால்) / உதவி ஆணையர் (கலால்)	உறுப்பினர்

2.21 அடையாளம் கண்டறியப்பட்ட ஒவ்வொரு பயனாளிக்கும், நிரந்தர வருவாய் ஈட்டும் பொருட்டு, ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, சலவை சோப்பு, சலவைத் தூள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொள்ள மானியமாக அதிகபட்சமாக ரூ.30,000/- வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 7]

2.22 இத்திட்டத்தினைச் செயல்படுத்த நடப்பாண்டில் ரூ.*5.00* கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு

2.23 மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மாவட்டங்களில் மேற்கொள்ளும் வகையில் ரூ.*3.50* கோடி நிதியானது அரசால் ஒப்பளிக்கப்பட்டது. அதில் ரூ.*3.25* கோடி தொகையானது அனைத்து மாவட்டங்களுக்கும், காவல் துறையின் அமலாக்கப் பிரிவிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

எஞ்சிய தொகையான ரூ.*25.00* இலட்சம் போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ள காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2.24 ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், கீழ்க்கண்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது:

1.	மாவட்ட ஆட்சியர்	தலைவர்
2.	மண்டல காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்)	உறுப்பினர்
3.	மாவட்ட காவல் கண்காணிப்பாளர்	உறுப்பினர்
4.	முதன்மைக் கல்வி அலுவலர்	உறுப்பினர்
5.	துணை ஆணையர் (கலால்) / உதவி ஆணையர் (கலால்)	உறுப்பினர்—அமைப்பாளர்
6.	மக்கள் தொடர்பு அலுவலர்	உறுப்பினர்

2.25 அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வுப் பேரணி, முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொது

[*2021 செப்டம்பர் 7*

இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலிப் பேரணி போன்றவைமூலம் மாணவ மாணவிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் துணை கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துவதால் பாதிக்கப்படக்கூடிய மக்களை உள்ளடக்கிய வாழ்விடங்களை இலக்காகக் கொண்டு, மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பள்ளி/ கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, குழுக் கலந்துரையாடல், சுவரொட்டி தயாரித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஆகியவை பள்ளி மற்றும் கல்லூரிகளில் இணைய வழி வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, பொதுமக்களுக்கு டி-சர்ட், பயணப் பை மற்றும் நாட்காட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் தெரு நாடகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், மாவட்ட வாரியாக பெரிய அளவிலான விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டு, பேரணியின்போது, மது அருந்துவதற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், விழிப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துக் கழகங்களுக்கு மதுவிலக்கு விழிப்புணர்வு குறித்த ஒட்டும்வில்லைகள் அளிக்கப்பட்டு, பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன. மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

போதை மீட்பு மையங்கள்

2.26 மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் போதை மீட்பு மையங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் *19* போதை மீட்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

3.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், பதுக்கி வைத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழித்தல், போலி மற்றும்

2021 செப்டம்பர் 7]

ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுத்தல் ஆகியவை மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் முக்கியப் பணிகள் ஆகும்.

3.2 காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) இப்பிரிவின் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக சென்னையில் காவல் கண்காணிப்பாளரின்கீழ் ஒரு மத்திய புலனாய்வுப் பிரிவும், சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) கீழ் தலா ஒரு பிரிவும் இயங்கி வருகின்றன. சென்னையில் உள்ள மத்திய புலனாய்வுப் பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும். 1 தலைமைக் காவலரும் மற்றும் 1 இரண்டாம் நிலைக் காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

3.3 தமிழ்நாட்டில் 96 அமலாக்கப் பிரிவுகள் இயங்குகின்றன. காவல் ஆய்வாளர்களின் தலைமையில் இயங்கும் இந்தப் பிரிவுகள் அனைத்தும் 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்துவதற்காக காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டங்கள்/நகரங்களில் உள்ள காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் காவல் கூடுதல் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் முதன்மைப் பொறுப்புடைய அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின்கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

3.4 இவை தவிர, தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உறைகள் ஆகியவை அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதைக் கண்காணித்து தடுக்கும் வகையில், தமிழ்நாட்டில் மொத்தம் 45 நிரந்தர சோதனைச் சாவடிகளும், 7 நடமாடும் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன. தேவையின் அடிப்படையில் தற்காலிக சோதனைச்

[*2021 செப்டம்பர் 7*

சாவடிகள் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3.5 அண்டை மாநிலங்களிலிருந்து போலி மதுபானம் மற்றும் எரிசாராயம் கடத்துவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:-

(i) *பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் மற்றும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் (*CDR Analysis*) ஆகியவற்றின் உதவியுடன் எரிசாராய கடத்தல், போலி மதுபானக் கடத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தல் ஆகிய குற்றங்களைத் தடுப்பதுடன், இக்குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கண்டறிந்து கைது செய்ய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

(ii) *எரிசாராயம் மற்றும் போலி மதுபானக் கடத்தலைக் கண்காணிக்கவும், மதுவிலக்கு அமலாக்கம் தொடர்பான குற்றங்கள் குறித்து திறம்பட விசாரணை மேற்கொள்ளவும் அலைபேசி அழைப்புத் தகவல்கள் மென்பொருள் (*CDR Analysis Software*) வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

(iii) *அமலாக்க வழக்குகளில் கைப்பற்றப்பட்டு, ஏலம் விடப்பட்ட வாகனங்கள் மீண்டும் அதே குற்றங்களுக்காக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, வாகனங்கள் ஏலம் விடப்படுவதை நிறுத்தி, அவற்றை அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கு உட்படுத்தவோ அல்லது விதிகளின்படி அழிக்கவோ அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.*

2021 செப்டம்பர் 7]

(iv) தெளிந்த சாராவி என்பது செறிவு மிகுந்த ஆல்கஹால் ஆகும். இது போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பதற்காகக் கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராய விற்பனையால் சோக நிகழ்வுகளும் (இறப்புகள்) நிகழ்கின்றன. தமிழ்நாடு முழுவதும் மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளின் ஆளிநர்களால் சேகரிக்கப்படும் நுண்ணறிவுத் தகவல்களின் அடிப்படையில் திடீர் வாகனத் தணிக்கைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 2020—2021 ஆம் ஆண்டில் திடீர் வாகனத் தணிக்கைகள்மூலம் 1,65,544 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 9 லாரிகள், 3 ஈப்புகள், 75 வேன்கள், 255 கார்கள், 120 ஆட்டோக்கள் மற்றும் 3,759 இருசக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 4,224 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதிகள்

3.6 எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து மதுபானம் கடத்துதல் தொடர்பாக தகவல்கள் தரும் இரகசிய தகவலாளர்களுக்கு பண வெகுமதி வழங்கும் வகையில் ஆண்டுதோறும் ரூ.15.00 இலட்சம் சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2020-2021 ஆம் ஆண்டிற்கான பண வெகுமதி வழங்க அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்

3.7 2020-2021 ஆம் ஆண்டில் 2,95,941 லிட்டர் கள்ளச்சாராயம், 75,720 லிட்டர் எரிசாராயம், பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 17,53,694 மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. மதுவிலக்குக் குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 4,224 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

[2021 செப்டம்பர் 7

கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

3.8 கள்ளச்சாராயத்தில் முக்கியமாக "மெத்தனால்" என்ற இரசாயனப் பொருளின் பயன்பாட்டால் உயிரிழப்புகள் நிகழ்ந்தன. ஆதலால் "மெத்தனால்" எளிதாகக் கிடைப்பதைத் தடுக்கும் பொருட்டு அதனை, 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் வரம்புக்குள் அரசு கொண்டு வந்தது. மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், கொண்டு செல்லுதல், வெளியிடங்களில் இருந்து பெறுதல், விற்பனை செய்தல் போன்றவற்றைக் கவனமாகக் கட்டுப்படுத்திட, 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டன.

மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளை வைத்திருக்க மற்றும் பயன்படுத்த உரிமம் பெற்ற நிறுவனங்கள் முதலியவற்றை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து மாநிலம் தழுவிய விழிப்புணர்வு முகாம்

3.9 கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மாவட்ட அளவில் விழிப்புணர்வுப் பேரணி, கலைநிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், தெருமுனைப் பிரச்சாரம், துண்டுப் பிரசுரம் விநியோகித்தல் போன்றவை மூலமாக தமிழ்நாடு முழுவதும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. மேலும், மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், கட்டுரை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மதுவிலக்கு உதவி மையம்-10581

3.10 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம், கள்ளச்சாராய விற்பனை ஆகிய மதுவிலக்குக் குற்றங்கள் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் தகவலாளர்கள் இலவசமாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண் 10581 ஒன்று ஏற்படுத்தப்பட்டு, இந்த

2021 செப்டம்பர் 7]

உதவி எண் 24 மணி நேரமும் காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகக் கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகிறது.

காந்தியடிகள் காவலர் பதக்கம்

3.11 கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் திறம்பட செயல்படும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு "காந்தியடிகள் காவலர் பதக்கம்" ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு

4.1 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முக்கிய பணிகளாகக் கொண்ட போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வுத் துறை) சென்னையில் 17.12.1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய 15 இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் இயங்கி வருகின்றன.

நிர்வாக அமைப்பு

4.2 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது, காவல் துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) அவர்களின் தலைமையிலும், காவல் துறை தலைவர் (குற்றம்) (போதைப் பொருள் தடுப்புப் படை) அவர்களின் மேற்பார்வையிலும், 1 காவல் கண்காணிப்பாளர், 1 காவல் கூடுதல் கண்காணிப்பாளர், 12 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 126 இதர நிலைக் காவலர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

தமிழ்நாடு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்:

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையின் புள்ளி விவரங்கள்

4.3 2020-2021 ஆம் ஆண்டில், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது 579 வழக்குகளைக் கண்டறிந்து, 670

[2021 செப்டம்பர் 7

குற்றவாளிகளைக் கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து 4,690 கிலோ உலர் கஞ்சா, 1.818 கிலோ ஹெராயின், 300 கிராம் எம்.டி.எம்.ஏ., 86.772 கிலோ மெத்தாம்பிடாமின், 8.09 கிலோ ஆம்பிட்டமைன், 200 கிராம் ஹாஷிஷ், 300 கிராம் கொகெயின், 8 கிராம் எல்.எஸ்.டி. வில்லைகள், 2.051 கிலோ ஓப்பியம், 26.02 கிலோ சாரஸ் மற்றும் 4.4 கிலோ மெத்தாகுலோன் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.10.71 கோடி ஆகும்.

4.4 2021-2022 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை விவரங்கள்

1. போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை சிறப்பாக அமலாக்கம் செய்வது குறித்து, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினருக்கு பயிற்சி அளித்தல்.
2. அண்டை மாநிலங்களிலிருந்து வரும் அதிகப்படியான போதைப் பொருட்களைத் தடுக்க தீவிர சோதனைகள் மேற்கொள்ளுதல்.
3. மலைப் பிரதேசங்களில் கஞ்சா செடி வளர்ப்பைத் தடுக்க தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளுதல்.
4. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவதைத் தடுக்க வனத் துறையினருடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
5. போதைப் பொருள் கடத்தும் குற்றவாளிகள் மீது தடுப்புக் காவல் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
6. மனுக்கள்மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணுதல்.
7. குற்றப்பிரிவில் உள்ள குற்ற ஆவணக் காப்பகத்தின்மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஒப்பிட்டு, போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை சிறப்பாக செயல்படுத்துதல்.
8. வழக்கமான போதைப் பொருள் குற்றவாளிகளைக் கண்டறிந்து கண்காணித்தல்.
9. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகளை சிறப்பாக மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

2021 செப்டம்பர் 7]

10. கொடுங்குற்ற வழக்குகளை கலந்தாய்வு கூட்டத்தில் ஆய்வு செய்து நமூனாக்கள்மூலம் அறிவுறுத்துதல்.

11. விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் வெவ்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க சிறப்பாக மேற்பார்வையிடுதல்.

12. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினர்மூலம் பொது இடங்களில், குறிப்பாக கல்வி நிறுவனங்களின் அருகில் சோதனை செய்து, அங்கு போதைப் பொருள் விற்பனையைத் தடுத்தல்.

13. தனியார் தூதஞ்சல் (Courier) நிறுவனங்களைப் பற்றிய நுண்ணறிவுத் தகவலை சேகரித்து சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்துதல்.

14. 1985 ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்படி போதைப் பொருள் தடுப்புப் பிரிவுகளுடன் இணைந்து சோதனைகள் மேற்கொள்ளுதல்.

15. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு காவல் துறையினர் மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்துக் கடைகளை சோதனை செய்தல்.

1988 ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (PITNDPS Act – 1988)

4.5 ஒன்றிய அரசால் இயற்றப்பட்ட 1988 ஆம் ஆண்டின் சட்டவிரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988), 1988 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஓர் ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும் இச்சட்டத்தின்கீழ் குற்றவாளிகளைத் தடுப்புக் காவலில் வைக்கலாம்.

[*2021 செப்டம்பர் 7*

சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள் அனுசரித்தல்

4.6 போதைப் பொருட்கள் பயன்படுத்துதலைத் தடுக்கவும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைக் கடத்துவதைத் தடுக்கவும், பொதுமக்கள் மத்தியில் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் திங்கள் *26* ஆம் நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக சமூக ஊடகங்களான முகநூல் மற்றும் யூ-டியூப் சேனல்களில் விழிப்புணர்வு காணொளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டதுடன், பிரபல செய்தி தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டன. மேலும், பண்பலை வானொலிகளிலும் விழிப்புணர்வு செய்திகள் ஒலிபரப்பு செய்யப்பட்டன.

போதைப் பொருள் குற்றவாளிகளைத் தடுப்புக் காவலில் வைத்தல்

4.7 2020-2021 ஆம் ஆண்டில், *16* போதைப் பொருள் குற்றவாளிகள், *1982* ஆம் ஆண்டின் தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினி வெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், (தமிழ்நாடு சட்டம் *14/1982*) சிறையில் அடைக்கப்பட்டனர்.

கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் போதைப் பொருட்கள் நடமாட்டத்தைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள தீவிர தடுப்பு நடவடிக்கைகள்

4.8 பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் அருகில் போதைப் பொருட்களின் விற்பனையைத் தடுக்க தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

2021 செப்டம்பர் 7]

பிற மாநிலங்கள்/நாடுகளிலிருந்து போதைப் பொருள் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்

4.9 போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் என்ற ஒன்றிய அரசின் சட்டம், 1985 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு, ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள போதைப்பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து பணியாற்றுகிறது. தமிழ்நாடு போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில், இப்பிரிவைச் சார்ந்த அதிகாரிகளுக்கு போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் குறித்த சிறப்புப் பயிற்சிகள் போதைப்பொருள் தடுப்புப் பிரிவால் அளிக்கப்படுகிறது. போதைப்பொருள் கடத்தல் சம்பந்தமான முக்கியமான தகவல்கள் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் பல்வேறு அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

*5.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) 23.05.1983 அன்று, 1956 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் (*Companies Act, *1956) கீழ் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும்.*

5.2 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு முழுவதும் மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை, 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17-C(1-A)(a)-இன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 23.05.1983 முதல் மதுபான மொத்த விற்பனையை செய்து வருகிறது. மேலும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை 1937 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17-C(1-B)(a)-இன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 29.11.2003 முதல் மதுபான சில்லறை விற்பனையை செய்து வருகிறது. இவை தவிர, இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் இந்நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

[2021 செப்டம்பர் 7

இயக்குநர் குழுமம்

5.3 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இயக்குநர் குழுமம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, அரசு செயலாளர், வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

பங்கு மூலதனம்

5.4 இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.15.00 கோடி ஆகும். மொத்த பங்கு மூலதனமும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பதிவு அலுவலகம்

5.5 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, பொது மேலாளர் (நிதி), மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்), நிறுவனச் செயலர், சட்ட அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

மண்டல அலுவலகங்கள்

5.6 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையில் 5 மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்வலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

சிறப்பு பறக்கும் படை

5.7 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மதுக்கூடங்கள் முறையாக செயல்படுகின்றனவா

2021 செப்டம்பர் 7]

என்பதை ஆய்வு செய்யும்பொருட்டு 5 சிறப்பு பறக்கும் படைகள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மண்டல தலைமை அலுவலகங்களில் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்களின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்

5.8 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, 31.07.2021 அன்றுள்ளவாறு, 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், 43 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், 5,402 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் இக்கடைகளுடன் இணைந்த 2,808 மதுக்கூடங்களும் உள்ளன.

5.9 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திடம் உள்ள 43 மதுபானக் கிடங்குகளில் 31 மதுபானக் கிடங்குகள் இந்நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

சில்லறை விற்பனைப் பணியாளர்கள்

5.10 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 31.07.2021 அன்றுள்ளவாறு, 6,761 கடை மேற்பார்வையாளர்களும், 15,090 விற்பனையாளர்களும் மற்றும் 3,158 உதவி விற்பனையாளர்களும் ஒப்பந்த/ தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் இப்பணியாளர்களுக்கான தொகுப்பூதியமானது உயர்த்தி வழங்கப்படுகிறது.

சில்லறை விற்பனைப் பணியாளர் நலத் திட்டங்கள்

5.11 சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியத்துடன் ஒவ்வோர் ஆண்டும் போனஸ் மற்றும் கருணைத் தொகையானது அரசின் உத்தரவிற்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், பணிக்கொடை, குடும்ப சேமநல நிதித் திட்டம், ஆண்டு கூடுதல் ஊக்கத் தொகை ஆகிய திட்டங்கள் சில்லறை விற்பனைப் பணியாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[*2021 செப்டம்பர் 7*

சில்லறை விற்பனைக் கடைகளின் அமைவிடம்

5.12 2003 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்களில்) விதிகளில், விதி 8-ல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின்படி, மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை எந்த இடத்தில் நிறுவ வேண்டும் என்பது தொடர்பாக மாண்பமை உச்ச நீதிமன்ற ஆணைக்கிணங்க, மதுபான சில்லறை விற்பனைக் கடைகளை அமைப்பதற்கு விரிவான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது.

மதுபான வகைகள் கொள்முதல்

5.13 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளைக் கொள்முதல் செய்து வருகிறது.

இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கடைகள்மூலம் விற்பனை செய்தல்

5.14 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், *482* வகையான வெளிநாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளை *234* எப்.எல்.*11* உரிமம் பெற்ற சில்லறை விற்பனைக் கடைகள்மூலம் விற்பனை செய்கிறது.

சில்லறை விற்பனைக் கடைகளில் குளிர்சாதனப் பெட்டி வசதிகள்

5.15 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் அதன் சில்லறை விற்பனைக் கடைகளில், *400* லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட *1,375* குளிர்சாதனப் பெட்டிகளையும், *100* லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட *375* குளிர்சாதனப் பெட்டிகளையும் ரூ.*4.50* கோடி செலவில் கொள்முதல் செய்து நிறுவியுள்ளது.

கண்காணிப்பு கேமராக்கள், எச்சரிக்கை ஒலி சாதனங்கள் மற்றும் தீயணைப்புக் கருவிகள் நிறுவுதல்

5.16 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் திருட்டு நடப்பதைத் தடுப்பதற்காகவும் அவற்றின் பாதுகாப்பை

2021 செப்டம்பர் 7]

மேம்படுத்தவும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் *38* மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் *40* மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் எச்சரிக்கை ஒலி சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், மாநிலத்தில் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில், அதிகமாக பாதிக்கப்படக்கூடிய *3,000* கடைகளில் இரவுப் பார்வை கொண்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் கண்காணிப்பு கேமராக்கள் திருட்டுகளைக் குறைப்பதற்கு மட்டுமல்லாமல் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபடக்கூடிய தனிநபர்களைக் கண்டுபிடிக்கவும் மதுபானக் கடைகளின் அருகில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் ஏதேனும் நடந்தால் அவற்றை அடையாளம் காணவும் வழிவகை செய்கிறது. இந்தக் கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து மதுபானக் கிடங்குகளிலும் மற்றும் அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் தீயணைப்புக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணைய உரிமம்

5.17 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும் மற்றும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் *2006* ஆம் ஆண்டின் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் வழங்கியுள்ள உரிமம் உரிய காலத்திற்குள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

பணப் பாதுகாப்பு பெட்டகம் நிறுவுதல்

5.18 நகர மற்றும் கிராம பஞ்சாயத்துப் பகுதிகளில் செயல்படும் மதுபானக் கடைகளுள், திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள *2,825* மதுபானக் கடைகளில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் ஒவ்வொன்றும் *300* கிலோவிற்கு மேல் எடை கொண்டவை மற்றும் பிற கருவிகளால் பழுது ஏற்படுத்த இயலாதவை ஆகும். பணப்

[*2021 செப்டம்பர் 7*

பாதுகாப்பு பெட்டகங்கள் மதுபானக் கடைகளின் தரையில் பதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பின்புறமும், மேல் பகுதியிலும், வலது மற்றும் இடது என இரண்டு பக்கங்களிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளன. கடைப் பணியாளர்கள் விற்பனை செய்த தொகையினை விற்பனை நேரம் முடிந்த பிறகு பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இந்த பணப் பாதுகாப்பு பெட்டகம் உதவுகிறது.

மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவுதல்

5.19 பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் பொருட்டு, மின்னணு தொழில்நுட்பம் வாயிலாக விற்பனைத் தொகையை செலுத்துவதற்கு ஏதுவாக, அனைத்து சில்லறை விற்பனைக் கடைகளிலும் மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள்

5.20 கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவுவதைத் தடுக்க தமிழ்நாடு அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளுக்கு இணங்க, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், மதுபானக் கிடங்குகள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் அரசின் நிலையான இயக்க நடைமுறைகளுக்கு ஏற்ப தேவையான தடுப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன.

மதுவிற்பனை இல்லாத நாட்கள்

5.21 தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர் நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகிய 8 நாட்கள் மது விற்பனை இல்லாத நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

அரசு வருவாய்

5.22 அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

2021 செப்டம்பர் 7]

வரிசை எண்	ஆண்டு	(ரூபாய் கோடியில்)		
		ஆயத்தீர்வை வருவாய்	மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி)	மொத்தம்
1	2003-04	1657.10	1982.83	3639.93
2	2004-05	2549.00	2323.03	4872.03
3	2005-06	3176.65	2854.12	6030.77
4	2006-07	3986.41	3487.20	7473.61
5	2007-08	4764.05	4057.11	8821.16
6	2008-09	5755.42	4846.08	10601.50
7	2009-10	6740.59	5757.63	12498.22
8	2010-11	8115.90	6849.52	14965.42
9	2011-12	9956.06	8125.10	18081.16
10	2012-13	12125.31	9555.36	21680.67
11	2013-14	5034.82	16640.07	21674.89
12	2014-15	5731.18	18433.77	24164.95
13	2015-16	5836.01	20009.57	25845.58
14	2016-17	6248.17	20747.08	26995.25
15	2017-18	6009.25	20788.71	26797.96
16	2018-19	6863.11	24294.72	31157.83
17	2019-20	7205.97	25927.27	33133.24
18	2020-21	7821.69	25989.46	33811.14
19	2021-22 (*) (31-07-2021 வரை)	1975.24	5932.37	7907.61

(*) ஒத்திசைவுக்கு உட்பட்டது.

6. முடிவுரை

மனித உயிரிழப்புகளைத் தடுப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, கள்ளச்சாராயம், போலியான, தரமற்ற மதுவகைகளை ஒழித்திடும் வகையிலும் மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மதுவகைகளின் விற்பனையைத் தடுத்திடும் வகையிலும், இந்த அரசு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைக் கொள்கையினை சீரிய முறையில் செயல்படுத்தும்.

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.